
தமிழரசு
ஜூலை 1-15, 1997 ரூ.3

தமிழரசு

ஜூலை to செப்டம்பர்

~~1998~~ 1997

JL
VIIIm 170TA
N97
216441



## இந்த இதழில்...


☆ 'நமக்கு நாமே' - திட்டம் தொடக்கம் ... 2

☆ கால்நடைப் பராமரிப்பு ... 9
- டாக்டர் டி.எபிநேசர், இயக்குநர்,
கால்நடைப் பராமரிப்புத்துறை.

☆ கிராமிய இயக்கத்தால் வளரும் தமிழ் ... 17
- முனைவர் கே.ஏ. குணசேகரன்

☆ சிப்பாய் சின்னத்தம்பி - மாணவர் பக்கம் ... 27
- சாமகோடாங்கி சங்கரலிங்கம்

☆ நேசம் - கவிதை ... 31

☆ கோழை! ... 33
- கவிஞர் கண்ணதாசன்

☆ எங்கள் ஊர் பிரச்சினை ... 37

☆ அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ... 42



தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2028
மலர் : 28 இதழ் : 1
ஜூலை 1-15, 1997
விலை ரூ.3

உருவாகும். பிறகு நகரம் வளம் பெறும். நாடு வாழும்.

இங்கே நடக்கின்ற இந்தக் கூட்டத்தில் பல்லாயிரக் கணக்கில் குழுமியிருக்கின்றீர்கள். இது இந்த மாவட்டத்தில் நான் தொடங்கி வைக்கின்ற 'நமக்கு நாமே' திட்டமாகும். இதைத் தொடர்ந்து இந்த மாவட்டத்தில் நம்முடைய அமைச்சர்கள், அமைச்சர்கள் வர இயலாத நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவர்கள் வர இயலாத நேரத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர், மாவட்ட ஊராட்சிக் கவுன்சிலர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், இவர்கள் எல்லாம் கூட, ஒவ்வொரு ஊரிலும் இருக்கின்ற வாக்காளப் பெருமக்கள் கூடியதுதான் இந்தச் சபை.

**'காப்பி'யடித்த முறையல்ல!**

தம்பி மாறன் குடவோலை முறை பற்றிப் பேசும்போது, இதையெல்லாம் நாம் யாரையோ பார்த்துக் காப்பி அடித்திருப்பதாக - யாரோ எழுதியிருப்பதாகத் தெரிவித்தார். அவரே சொன்னதைப் போல, இந்த சபை 1200 ஆண்டுகளுக்கு முன்பே நம்முடைய தமிழகத்திலே கூடிய சபைதான். யாரும் காப்பி அடிக்க வில்லை. காப்பி அடித்தால், தமிழனுடைய முறையைத் தமிழன் காப்பி அடித்திருக்கிறான் என்பதைத் தவிர - வேறு எவனுடைய முறையையும் நான் காப்பியடித்து விடவில்லை.

உத்திரமேரூர் கல்வெட்டைப் பற்றி மாறன் இங்கே சொன்னார். அந்த உத்திரமேரூர் கல்வெட்டின் சிறப்பு நம்முடைய தமிழகத்தின் மக்களாட்சி மாண்பினை எடுத்துக்காட்டுகிற சிறப்பாகும். அதிலே எப்படி வாக்குகளைப் போடுகிறார்கள் என்றுகூட சொன்னார்.

ஒருவர் தேர்ந்தெடுக்கப் படவேண்டும் என்றால், அவர்கள் என்னென்ன குணம் உடையவர்களாக இருக்க வேண்டும்? என்னென்ன குணம் இல்லாதவர்களாக இருக்க வேண்டும்? - என்றெல்லாம் பார்த்து; இவர்கள் நாணயமானவர்களா? நேர்மையானவர்களா? நிர்வாகத்தை நடத்தக்கூடிய ஆற்றல் படைத்தவர்களா? என்றெல்லாம் பார்த்துத்தான் தேர்ந்தெடுப்பார்கள். இவர்கள்



கையூட்டு - கையூட்டு என்றால் லஞ்சம் பெற்றவர்களா? அல்லது பெறக் கூடியவர்களா? இவர்கள் பெறாவிட்டால் இவர்களின் உறவினர்கள் அப்படிப் பட்டவர்களா என்றெல்லாம் பார்த்துத்தான் அன்றைக்குத் தேர்தலிலே வாக்களித்தார்கள். என்றைக்கு? 1200 ஆண்டுகளுக்கு முன்பு!

அப்பொழுதே நம்முடைய தமிழர்கள், அவ்வளவு நேர்மையிலே, நாணயத்திலே அக்கறை கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். பனை ஓலையிலே பெயரை எழுதிப்போடுவார்கள். அதை இலக்கியம் எல்லாம் சொல்வதாக மாறன் குறிப்பிட்டார். அதை எப்படி இலக்கியம் குறிப்பிடுகிறது தெரியுமா?

**இலக்கியக் காட்சி**

ஒரு போர்க்களத்தைக் கடந்து ஒரு புலவன் போகிறான். அந்தப் போர்க்களத்தில் பல பேர் மாண்டு கிடக்கிறார்கள். சண்டை முடிந்த பிறகு, மாண்டு கிடக்கின்ற அந்தப் பிணங்களைக் கழுகுகள் கொத்திக் கொண்டிருக்கின்றன. அதிலே ஒரு கழுகு மாண்டு கிடக்கிற ஒரு வீரனின் குடலைப் பிடுங்கி, அந்தக் குடலை உருவித் தின்று கொண்டிருக்கிறது.

அதைப் பார்க்கின்ற அந்தப் புலவன், என்ன சொல்லிப் பாடுகிறான் தெரியுமா? இந்தக் கழுகு களத்திலே செத்துக் கிடக்கிற இந்த வீரனின் குடலைப் பிடுங்கிச் சாப்பிடுவது எப்படி இருக்கிறது என்றால், ஊராட்சித் தேர்தலில், குடத்திலே போடப்பட்ட வாக்குச் சீட்டுகளாக இருக்கிற பனை ஓலைகளை - ஒவ்வொன்றாக உருவி எடுத்து எண்ணிப் பார்ப்பதைப்போல





இந்தக் குடலை அந்தக் கழுகு உருவுவது இருக்கிறது என்று உவமை கூறிப் பாடுகிறான்.

இதிலிருந்தே சங்ககாலம் - ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம்; அந்தக் காலத்திலேயே நம்முடைய ஊராட்சிகளில் நமக்குத் தேவையான தலைவர்களை, நம்முடைய பிரதிநிதிகளை நாம் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.

அப்படிப்பட்டவர்கள் அன்றைக்குக் கூடி, தங்கள் ஊர்த் தேவைகளைப் பற்றி எல்லாம் எடுத்துச் சொல்லி - அதை அவர்களாகவே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் - அரசின் துணையோடு! இன்றைக்கு நாங்கள் இங்கே வந்திருப்பதும் "நாங்கள் உங்களுக்குத் துணை நிற்கத் தயாராக வந்திருக்கிறோம். நீங்கள் உங்களுடைய ஒத்துழைப்பைத் தாருங்கள்'' என்பதற்காகத்தான். நிதி வேண்டுமா? அரசு தரத் தயாராக இருக்கிறது. ஒரு கட்டடம் கட்ட சிமெண்ட் வேண்டுமா? செங்கல் வேண்டுமா? இங்கே எடுத்துச் சொன்னார்கள். ''செங்கல் வேண்டும்; சிமெண்ட் வேண்டும்'' என்று. அதையும் தரத் தயாராக இருக்கிறோம்.

ஆனால் இவைகள் எல்லாம் இன்னொரு கூலியாளை விட்டு அது ஒழுங்காக இருக்கிறதா என்று பார்ப்பதைவிட நாமே அந்தச் செங்கல்லை அடுக்கி, நாமே அந்தக் கட்டடத்தைக் கட்டி - நாம் ஒழுங்காகத் தான் கட்டினோம் என்று நெஞ்சை நிமிர்த்தி நீங்கள் காட்டுவீர்களேயானால் - அது உங்களுக்கும் பெருமை, ஊருக்கும் பெருமை, இதை எடுத்து உங்களுக்குச் சொன்ன எனக்கும் பெருமை. எனவே அந்தப் பெருமையை நான் பெற வேண்டும். இதற்குப் பெயர்தான் 'நமக்கு நாமே' திட்டமாகும்.

**அன்போடும் ஆதரவோடும்...**

என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதற்கு இங்கே நீங்கள் இங்கே எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள்; ஏற்கெனவே இந்த விண்ண மங்கலம் ஏரி பற்றி நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகன் என்னிடம் குறிப்பிட்டார்; இதைத் தூர் வாருகிற பணி தொடங்கப்பட்டு நடை பெற்றிருக்கிறது. இதிலே - வரத்துக் கால்வாயிலே தூர் வார வேண்டிய வேலை தொடர்ந்து நடக்க வேண்டியிருக்கிறது. அந்தப் பணியை நான் இன்றைக்கு உங்களின் அன்போடும் ஆதரவோடும் செய்ய இருக்கின்றேன் - தொடங்கி வைக்க இருக்கின்றேன்.

இப்படி சீரமைக்கும் பணியை இலவசமாகச் செய்து கொடுப்போம் என்று ஊர்ப் பொது மக்கள் கூறியிருக்கிறார்கள். வீடுகளுக்கு ஒரு மரக்கன்று கொடுத்தால், நாங்கள் குழிவெட்டி நட்டு வளர்த்துக் கொள்வோம். டி.வி.ரும் கட்டிக் கொடுத்தால் - மணிவேல் 5000 கல் உதவி செய்கிறார். வின்ஸ்டர் கிரிக்கெட் குழுவின் சார்பாக 5000 கல் தருகிறோம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல, பொதுக் கழிப்பிடம் கட்ட அரசு முன் வந்தால் இளைஞர் நற்பணி மன்றத்தார் இலவசமாகப் பணியாற்றுவதாகக் கூறி இருக்கிறார்கள்.

அப்படிப் பணியாற்றுவதாகச் சொன்ன அந்த இளைஞர்களை எல்லாம் இப்பொழுதே நான் அவர்கள் முதுகிலே தட்டிக் கொடுக்கிறேன் - அவர்கள் உச்சிமோந்து பாராட்டுகிறேன் - வாழ்த்துகின்றேன். இளைஞர்கள் இப்படித்தான் வளர வேண்டும். இதை விட்டுவிட்டு "ராக் அண்டு ரோல்'' ஆடிக் கொண்டிருக்கக் கூடாது. அதிலே தங்களின் கவனத்தைச் செலுத்தக் கூடாது.

*நமக்கு நாமே திட்டத்தினுடைய நோக்கம் - ஊராட்சி சாலைகள், ஏரி, குளம் தூர் வாருதல், சுகாதார நிலையம், பள்ளிக்கூடம், மயான வசதி, இணைப்புச் சாலைகள் போன்ற அடிப்படை வசதிகளை ஒவ்வொரு கிராமமும், அரசு அளிக்கும் நிதியைக் கொண்டு, அந்தந்தக் கிராம மக்கள் தங்கள் ஒத்துழைப்புடன் குறிப்பிட்ட திட்டத்தைச் செம்மையுற நிறைவேற்றுவதேயாகும்.*

## அரசு அளிக்கும் நிதியுதவியோடு
## கிராம மக்கள் ஒத்துழைப்போடு

# 'நமக்கு நாமே' திட்டம்!

### விண்ணமங்கலம் தென்னந்தோப்பில்
### முதல்வர் கலைஞர் தொடங்கிவைத்தார்!

விண்ணமங்கலத்தில் 'நமக்கு நாமே' திட்டத்தைத் தொடங்கிவைத்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

இங்கே இந்த நிகழ்ச்சியைப் பார்க்கும் பொழுது மகாகவி பாரதி பாடிய பாட்டு ஞாபகத்திற்கு வருகிறது. "காணி நிலம் வேண்டும்; பராசக்தி காணி நிலம் வேண்டும்; அங்கு பத்துப் பனிரெண்டு தென்னை மரம் வேண்டும். அங்கே கத்தும் குயில் ஓசை கேட்க வேண்டும்" என்று பாரதி பாடினார்.

அந்தக் காட்சி உங்களை எல்லாம் பார்க்கும்பொழுது, இந்தத் தென்னை மரங்களை எல்லாம் பார்க்கும்பொழுது என் கண்முன்னால் நிற்கிறது. அங்கே குயிலின் ஓசை கேட்க வேண்டும் என்று அவர் சொன்னார். இங்கே கோரிக்கை ஓசை தான் கேட்டுக் கொண்டிருக்கிறது.

**அன்பும் பாசமும்**

நான் கிராமத்திலே பிறந்தவன். தஞ்சை மாவட்டத்தில் – திருக்குவளை என்ற கிராமத்தில் பிறந்தவன். அதைப் போல இங்கே பேசிய தம்பி முரசொலிமாறன் கிராமத்திலே பிறந்தவர் - அதே திருக்குவளையில்!

இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்றிருக்கின்ற உள்ளாட்சித்துறை அமைச்சர் கோ.சி.மணி அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் மேக்கிரிமங்கலம் என்ற கிராமத்தில் பிறந்தவர். அதைப்போல நம்முடைய ஆர்க்காடு வீராசாமி அவர்கள் குப்படிச்சாத்தம் என்ற கிராமத்திலே பிறந்தவர். நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் துரைமுருகன் 'மேல் மாயில்' என்ற கிராமத்தில் பிறந்திருக்க வேண்டியவர் - பக்கத்தில் அவருடைய மாமனார் வீட்டில் இன்னொரு கிராமத்தில் பிறந்தவர்.

எனவே நாங்கள் எல்லாம் எந்த அளவிற்குக் கிராம மக்களிடத்திலே அன்பும் பாசமும் கொண்டிருப்போம் என்பதை எங்களுடைய பிறப்பிலிருந்தே - எங்கே பிறந்தோம் என்பதில் இருந்தே நீங்களெல்லாம் தெரிந்து கொள்ளலாம்.

எனக்குள்ள ஆசை எல்லாம் நாம் கிராமத்திலே பிறந்தோம். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து அரசியலிலே பங்கேற்று கிராமப் புறத்திலே இருந்து நகர்ப் புறத்திலே உள்ள கல்விக் கூடத்திலே படித்து படிப்பை முடித்துவிட்டு நகரவாசியாகிவிட்டோம்.

**கிராமங்களை நகரங்களாக்க வேண்டும்**



2/6441.



கிராமங்களிலே கோடிக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் நகரத்துக்கு வந்தால் நகரவாசியாகவா ஆக முடியும்? முடியாது. எனவே கிராமங்களை எல்லாம் நகரங்களாக ஆக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய திட்டம்.

அதற்காகவே, இன்று காலையிலே- தமிழகத்திலே, முதன்முதலாக அறிஞர் அண்ணா அவர்களின் பெயரால், ''அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமம்'' என்ற அந்தத் திட்டத்தை இந்த மாவட்டத்தில் பொன்னை என்ற ஊரில் தொடங்கியிருக்கிறோம்.

**திட்டத்தின் குறிக்கோள்**

இங்கே துவங்கப்படும் இந்தத் திட்டத்திற்குப் பெயர் "நமக்கு நாமே" திட்டம். நமக்கு நாமே திட்டத்தின் நோக்கம் ஊராட்சி சா்லைகளைச் செப்பனிடுதல், ஏரி, குளம் தூர் வாருதல், சுகாதார நிலையம், பள்ளிக்கூடம், மயான வசதி, இணைப்புச் சாலைகள் போன்ற அடிப்படை வசதிகளை ஒவ்வொரு கிராமமும் அரசு அளிக்கும் நிதியைக் கொண்டு அந்தந்தக் கிராம மக்களுடைய ஒத்துழைப்போடு நிறைவேற்றுவது தான் "நமக்கு நாமே" திட்டம் ஆகும்.

பொதுவாக - குழந்தையாக இருக்கும்பொழுது தான் தாய் தன் குழந்தையைக் குளிப்பாட்டி சட்டை அணிவித்து தலைவாரிப் பூச்சூடி "பாடசாலைக்குப் போ" என்று சொல்கிறாள் அன்னை என்பது நமக்குத் தெரியும். அதுவரையில் தாயின் தயவு வேண்டியிருக்கிறது. ஒரு குழந்தை குளிக்க, சாப்பிட, பள்ளிக்கு அனுப்பப்பட தாயின் தயவு வேண்டியிருக்கிறது. பிறகு அந்தக் குழந்தை தாயாகவோ அல்லது தந்தையாகவோ மாறிவிட்ட நிலையில் அதனுடைய பணிகளை அதுவேதான் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தலைசீவிக் கொள்கிறோம். இன்னொருவர் வந்தா சீவி விடுகிறார்கள்? சில நேரங்களில் காதலர்கள் வேண்டுமானால் ஒருவருக் கொருவர் தலை சீவிக் கொள்ளலாம். ஆனால் பொதுவாக அவரவர்கள் வேலையை அவரவர்கள்தான் பார்த்துக் கொள்கிறோம். நாம், நம்முடைய வேட்டியை நாமேதான் கட்டிக் கொள்கிறோம். இன்னொருவர் வந்து கட்டி விடுவதில்லை. நம்முடைய புடவையை நாமே தான் கட்டிக்கொள்கிறோம். இன்னொருவர் வந்து கட்டி விடுவதில்லை.



**எனக்கு நானே அல்ல; 'நமக்கு நாமே!'**

அதைப் போல மனிதர்கள் அவரவர்கள் வேலையை அவரவர்கள் செய்து கொள்வதைப்போல - ஒரு மனிதர் தன் வேலையை எப்படி தானே கவனித்துக் கொள்கிறாரோ, அதைப்போலப் பல மனிதர்கள் வாழ்கின்ற ஒரு பகுதியில் - அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் அனைவரும் அந்தப் பகுதிகளின் பணிகளில் பங்கேற்று அந்தப் பணியை நிறைவேற்றிக் கொள்ளவேண்டும். அதுதான் 'நமக்கு நாமே'.

ஒருவர் மாத்திரம் செய்து கொண்டால் அது 'எனக்கு நானே', இது 'நமக்கு நாமே'. நாமெல்லாம் செய்து கொள்கின்ற பணிக்குப் பெயர்தான் 'நமக்கு நாமே'.

எனவே 'எனக்கு நானே' என்பதற்குப் பதிலாக 'நமக்கு நாமே' - நாமே நம்முடைய காரியங்களை, வேலைகளை, அலுவல்களை எல்லாம் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இங்கே நாம் குழுமியிருக்கின்றோம்.

கிராமங்களில் முன்னேற்றம் இருந்தால்தான் நகரம்

அதைப் பொழுதுபோக்காக என்றைக்காவது பார்க்கலாம்.

எதைப் பார்த்தாலும் எதைக் கண்டாலும் நாம் இந்தச் சமுதாயத்திற்காக என்ன பணியாற்றினோம் என்பதை ஒவ்வொரு இளைஞனும் தனக்குத் தானே கேட்டுக்கொண்டு ஊராரோடு கூடி அரசின் உதவியைப் பெற்று இதுபோன்ற சமுதாயப் பணிகளை நிறைவேற்ற வேண்டும் என்று நான் அவர்களை எல்லாம் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த ஒரு கிராமம் மாத்திரமல்ல; 12,600 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. இந்த 12,600 பஞ்சாயத்துக்களிலும் இன்று போல கூட்டங்கள் நடைபெற வேண்டும்.

இன்னும் மூன்று மாதத்திற்குப் பிறகு நீங்கள் கூட வேண்டும். நானே வரவேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. இவ்வளவு பெரிய தென்னந்தோப்பில் கூட வேண்டும் என்றில்லை; சாவடியில் கூடலாம். ஒரு மரத்தின் நிழலிலேகூட சுமார் 100 பேர், 200 பேர் கூடலாம். கூடி, உங்கள் கோரிக்கைகளை எல்லாம், பஞ்சாயத்து யூனியன் தலைவரோடு, ஊராட்சிமன்றத் தலைவரோடு, உள்ளாட்சி மன்றத் தலைவர்களோடு, அதிகாரிகளோடு தேவைப் படுகிற நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரோ டெல்லாம் நீங்கள் கலந்து பேசி உங்களின் தேவைகளை எடுத்துச் சொல்லி அவ்வப்பொழுது அந்தப் பணியை நிறை வேற்றிக் கொள்ள வேண்டும்.

இது இங்கு மாத்திரமல்ல; தமிழ்நாட்டில் உள்ள 12,600 பஞ்சாயத்துக்களிலும் இந்த



ஊர்ப் பொதுச் சபை, ஊர் மன்றம், ஊர் மக்களின் மன்றம் உங்கள் தேவைகளை எடுத்துச் சொல்ல அவைகள் கவனிக்கப்பட இருக்கின்றன. இது தமிழ்நாட்டின் பொற்காலம் தொடங்குகிறது என்பதற்குச் சான்று. ஏற்கெனவே தொடங்கி விட்டது.

பொற்காலமும் கற்காலமும்

1967ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் முதலமைச்சரான போதே பொற்காலம் தொடங்கியது. இடையிலேயே கற்காலமும் வந்து போனது. இருந்தாலும்கூட இப்பொழுது மீண்டும் அந்தப் பொற்காலம் உங்களால் உருவாக்கப் பட்டிருக்கிறது.

ஜனநாயகத்திலே நம்முடைய மக்களுடைய - கிராமப்புறத்து மக்களுடைய - ஏன், நகர்ப்புறத்து மக்களாக இருந்தாலும் எந்த மக்களாக இருந்தாலும் அவர்களுடைய அடிப்படை வசதிகள்தான் இன்றைக்கு முக்கியம். ஒவ்வொரு குடிமகனுக்கும் தேவை அடிப்படை வசதி, சுகாதாரம், கல்வி, குடிதண்ணீர் வசதி, நல்ல சாலை - இங்கே கேட்டார்களே போக்குவரத்து வசதி; அவைகள் எல்லாம் முக்கியமானவை.

"நான்கு பஸ் ஓடுகிறது. பத்து பஸ் வேண்டும்'' என்று சொன்னார்கள். இருந்த பஸ் எல்லாம் எங்கே போனது என்று உங்களுக்குத் தெரியும். மிச்சமிருக்கிற சில பஸ்களையும் சில வன்முறையாளர்கள் கொளுத்தி கும்மாளம் போட்டுவிடுகிறார்கள். இதை எல்லாம் மீறி பஸ்கள் ஓட வேண்டியிருக்கிறது. "ஒரு 5000 பஸ் இப்பொழுது வாங்குவதற்கு இந்த அரசு திட்டமிட்டு அதிலே கிட்டத்தட்ட 2000 பஸ் வரை வாங்கப்பட்டாகி விட்டது. மிச்சமுள்ள 3000 பஸ்கள் வாங்குகிற நேரத்தில் இங்கே



வைக்கப்பட்ட கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும் என்ற உறுதியை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

டி.வி. ரூம் கட்டிக் கொடுக்க நீங்களே முன்வருவதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். நன்றி கூறிக் கொள்கின்றேன். அதற்குக் கல்லும் தருவதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். நன்றி கூறிக் கொள்கின்றேன். அதைப்போலவே மயானத்திற்கு நிலம் மற்றும் பாதை இவைகளைச் சீர் செய்யவும் - இவைகளை உருவாக்கவும் நீங்கள் உங்களின் ஒத்துழைப்பை, உழைப்பை நல்குவதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். அதையும் நான் பாராட்டுகின்றேன். இன்னும் அடிக்கடி நடைபெறுகின்ற இந்தக் கூட்டங்களில் எல்லாம் உங்களுடைய தேவைகளை எடுத்து வைக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

நான் ஒரு கிராமவாசி என்கிற முறையில் - இன்றைக்கு நகரவாசியாக இருந்தாலும்கூட, நான் எல்லோருக்கும் இன்றைக்குப் பொதுவானவன். நகரத்திலே உள்ளவர்களுக்கும், கிராமத்திலே உள்ளவர்களுக்கும் பொதுவானவன். இந்த நிலைமை இன்றைக்கு ஏன் ஏற்பட்டிருக்கிறது? இன்னொன்று: அறுபது ஆண்டுகளுக்கு முன்பு தந்தை பெரியார் அவர்கள் அப்பொழுது நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றினார். என்ன தீர்மானம் தெரியுமா? இப்பொழுது யாரும் கொண்டு வந்து விடவில்லை. எல்லோரும் நம்மைப் பார்த்துத்தான் காப்பி அடிக்கிறார்கள்.

சட்டம் போட்டேன்

பெரியார் அன்றைக்குச் செங்கற்பட்டில் சுயமரியாதை மாநாட்டில் 1929ஆம் ஆண்டில் "பெண்களுக்கும் ஆண்களைப் போல் சொத்தில் சம உரிமை வேண்டும்" என்று தீர்மானம் கொண்டு வந்தார். இந்த அறுபது ஆண்டுக் காலத்தில் யாராவது நிறைவேற்றினார்களா? இல்லை. 1989ஆம் ஆண்டு, நான் முதலமைச்சராக இருந்தபொழுது, சட்டப்பேரவையில் அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, பெண்களுக்கும் அவர்களுடைய குடும்பச் சொத்திலே ஆண்களைப் போலப் பாதி உரிமை உண்டு என்கின்ற தீர்மானத்தை, சட்டத்தை நிறைவேற்றிவிட்டு அன்றைக்குச் சொன்னேன்; "அய்யா பெரியார் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் நிறைவேற்றிய தீர்மானத்தை இன்றைக்குச் சட்டமாக, ஆக்கியிருக்கிறேன்" என்று.

அது மாத்திரமல்ல; அதன் தொடர்ச்சியாக, இந்த உள்ளாட்சிமன்றத் தேர்தலில் 33 சதவிகிதம் பெண்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டது.

ஒரு பழமொழி சொல்வார்கள்; "முகமது மலைக்கு வரவேண்டும்; இல்லா விட்டால் மலை முகமதுவிடம் வரும்" என்று சொல்வார்கள். அதுதான் இன்றைக்கு நடக்கின்றது. அதிகாரிகள் உங்களைத் தேடி வருவார்கள்.

இதைத்தான் மனுநீதித் திட்டமாக நான் ஆரம்பித்தேன். 1969-இல் அண்ணா மறைந்த பிறகு, நான் பொறுப்பேற்ற நேரத்தில், மனுக்களை உங்களிடத்திலே பெற அதிகாரிகள் வருவது "Spot Decision" - அந்த இடத்திலேயே முடிவெடுப்பது. எதுஎது முடியும், எதுஎது முடியாது என்று சொல்வது, இதுதான் மனுநீதித் திட்டம். மனுநீதிச் சோழன் திட்டம் அல்ல; மனுவை வாங்கி நீதி வழங்குகின்ற திட்டம் - மனு நீதித் திட்டம். அந்த மனுநீதித் திட்டத்தை அன்றைக்குத் தொடங்கி, அதிகாரிகளை உங்களிடம் அனுப்பி உங்களின் கோரிக்கைகளைத் தெரிவிக்கச் சொன்ன ஆட்சிதான் இந்த ஆட்சி.

கட்டளையிடுங்கள்

எனவே நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்; கிறித்துவத்திலே "தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும்" என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால் இந்த ஆட்சியில் தட்டாமலே திறக்கப்படும். கேட்காமலே கொடுக்கப்படும் என்று இருந்தாலும் கூட, உங்கள் மனதிலே என்ன இருக்கிறது என்று தெரிந்து கொள்வதற்காகத் தான் கேட்கிறோம்; இருப்பதை அடிக்கடி சொல்லுங்கள் மூன்று மாதத்திற்கு ஒருமுறை கூடி சொல்லுங்கள்.

எங்களுடைய ஆட்சியின் அதிகாரிகள், பிரதிநிதிகள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊராட்சித் தலைவர்கள், உள்ளாட்சியில் உள்ள - பிரதிநிதிகள் அனைவரும் அதைச் செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

நீங்கள் காலால் கட்டளை யிடுங்கள். நாங்கள் தலையால் செய்து முடிக்கிறோம்.

- இவ்வாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார். ❑

# மக்கள் குறையை மக்களே தீர்க்கும் 'நமக்கு நாமே' திட்டத் தொடக்க விழா



வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதியில் உள்ள மாதனூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த விண்ணமங்கலத்தில் 26.6.97 அன்று மாலை "நமக்கு நாமே" திட்டத்தினை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் துவக்கிவைத்தார்.

இந்தத் திட்டத்தின் துவக்க விழா, வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில், சென்னை-பெங்களூர் சாலையின் வலது புறம் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஒரு பெரிய தென்னந்தோப்பில், விண்ணமங்கலம் மற்றும் வட்டார கிராம மக்களின் முன்னிலையில் நடைபெற்றது. மஞ்சள் வெயில் மாலையிலே நடைபெற்ற இந்தக் கூட்டத்திற்கு மேடையோ, பந்தலோ எதுவும் அமைக்கப்படவில்லை. மிக எளிமையாக தென்னந் தோப்பில் நடைபெற்றது.

**முதல்வர் கலைஞர் அவர்கள் அந்த ஒரு பெரும் கூட்டத்தில் மக்களோடு மக்களாக அமர்ந்து, மக்களின் குறைகளை நேரிலேயே கேட்டறிந்தார்.**

**அக்கூட்டத்தில் அமர்ந்திருந்த பொதுமக்களிடமே தங்களின் குறைகளைக் கூறுமாறு முதல்வர் கலைஞர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.**

அதன்படி குடிநீர் வசதி, தொகுப்பு வீடுகள், ஏரிகள் தூர்வாரல், சமுதாயக் கிணறு, பால் உற்பத்தியாளர் சங்கம், தொலைக்காட்சி அறை, பள்ளிக்கு வெள்ளை அடித்தல், மயான வசதி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் மணி, ஊர்ப் பிரமுகர் மூர்த்தி, ஆதிதிராவிட கிராமப் பஞ்சாயத்துத் தலைவர், சி.ராமலிங்கம் மற்றும் பொதுமக்களில் பலர் பேசினார்கள்.

இதையடுத்து ஊர் மக்கள் அந்தக் கோரிக்கைகளைச் செயல்படுத்த முன்வந்து, பள்ளிக்கூடத்திற்கு வெள்ளையடிக்க அரசு சுண்ணாம்பு வாங்கிக் கொடுத்தால் போதும்; வெள்ளையடிக்கும் பணிகளை நாங்களே செய்துகொள்கிறோம் என்றும் கூறினர்.

அதேபோல் ஏரிகளைத் தூர்வாரும் பணியில் கிரிக்கெட் கிளப்பைச்சேர்ந்த இளைஞர்கள் தினசரி 50 பேர் ஈடுபட்டிருக்கிறோம் என்றும் அந்தக் கூட்டத்தில் அறிவித்தனர்.

தொலைக்காட்சி அறை கட்டுவதற்கு 5 ஆயிரம் செங்கற்களைப் பொதுமக்களே தர முன்வந்தனர். இதேபோல் அந்த ஊர் மக்கள் தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளத் தாங்களே முன்வருவது குறித்தும் கூட்டத்தில் அறிவித்தனர்.

நிறைவாக உரையாற்றிய முதல்வர் கலைஞர் அவர்கள் பொதுமக்களின் கோரிக்கைகளைப் பெற்றுக் கொண்டு, பொதுமக்களின் ஒத்துழைப்புக்கு நன்றி கூறினார்.

இதைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், ஏரியில் தூர்வாரும் பணியினை - தலைப்பாகை கட்டிக்கொண்டு கடப்பாரையால் இடித்து மண்வெட்டியால் மண்வாரித் தந்து துவக்கி வைத்தார். தென்னங்கன்று நட்டார். கிராம மக்களுக்குத் தென்னங்கன்றுகள் - செடிகள் வழங்கினார்.

**சத்துணவுக்கூடத்திற்கு வெள்ளையடிக்கும் பணியினையும் முதல்வர் கலைஞர் அவர்கள் தம் துணைவியாருடன் துவக்கி வைத்தார்.**

இந்த விழாவில், ஊராட்சித் தலைவர் திரு.சம்பத் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி.மணி அவர்கள் தலைமை வகித்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ப.வி.ச.டேவிதார் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி.மணி அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு மத்தியத் தொழில் அமைச்சர் திரு.முரசொலிமாறன், வாணியம்பாடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.ஏ.லத்தீப் ஆகியோர் பேசினர்.

நிறைவாக - தம் குடும்பத்தாருடன் இவ்விழாவிற்கு வருகை தந்திருந்த முதல்வர் கலைஞர் அவர்கள், பொது மக்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு திட்டங்களைச் செயல்படுத்த உத்தரவிட்டதோடு, திட்டங்களைச் செயல்படுத்த ஒத்துழைத்த பொதுமக்களுக்கு நன்றியையும் தெரிவித்து உரையாற்றினார்.

வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் நடைபெற்ற இவ்விழாக்கள் இரண்டினுக்கும் - மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு.கே.பிச்சாண்டி அவர்களும், மாவட்ட நாடாளுமன்ற - சட்டமன்ற - உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்களும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களும் வருகைதந்து சிறப்பித்தார்கள். ★





# கால்நடைப் பராமரிப்பு

**டாக்டர் டி. எபிநேசர்**
இயக்குநர்
கால்நடைப் பராமரிப்புத்துறை

கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு -குறிப்பாக ஏழை மக்களுக்குக் கால்நடை வளர்ப்பு அவர்களின் முன்னேற்றத்திற்கு ஒரு உபதொழிலாக அமைகிறது; அத்துடன் வேலைவாய்ப்பும், வருவாயும் கிட்ட ஏதுவாகிறது. குடும்ப உணவின் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், மீதமுள்ளவைகள் விற்பனையாக்கப்படுகிறது. அநேகமாகக் கிராமத்தில் ஒவ்வொரு வீட்டிலும் கால்நடைகளையோ, கோழிகளையோ வளர்த்துவருகின்றனர்.

நல்ல உயரினதரம் வாய்ந்த வம்சாவழிக் கால்நடைகளின் பெருக்கம், சீரிய முறையிலான மேலாண்மை, சத்து மிகுந்த தீவன உற்பத்தி, உடல்நலம் பேணுதல், நோய்க் கட்டுப்பாடு மற்றும் நோய்களைப் பற்றிய தீவிர கண்காணிப்பு ஆகிய பணிகளைக் கால்நடை பராமரிப்புத்துறை முறையாகக் கையாண்டதால், தனி மாட்டின் பால் உற்பத்தி திறன் கோழிகளின் முட்டையிடும் திறன், இறைச்சி உற்பத்தி ஆகியவை அதிகரித்துள்ளன.

கலப்பினக் கன்றுகள் உற்பத்தி மற்றும் அதற்குத் தேவையான மற்ற அபிவிருத்திப் பணிகளினாலும் மாநிலத்தில் தொடர்ந்து பால் உற்பத்தி அதிகரித்துள்ளது.

கால்நடைகளின் வாயிலாகக் கிடைக்கும் உணவுப்பொருட்களின் அளவு அதிகரித்துள்ளதால், தனி நபருக்கு ஒரு நாளைக்குக் கிடைக்கும் பாலின் அளவும் கணிசமாக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 893 கால்நடை மருத்துவ நிலையங்கள் மற்றும் 2,126 கிளை நிலையங்கள் மூலமாகக் கால்நடைகளின் உடல்நலம் பாதுகாக்கப் படுகிறது. நோய் நீக்கப்பணி மற்றும் தடுப்பூசிப்பணி மேற்கொள்ளுவதால், கால்நடைகளின் உடல்நலத்தைக் காப்பதுடன் கால்நடைகளின் இனவிருத்தி தொடர்பான பணிகள் இந்நிலையங்களில் கவனிக்கப்படுகின்றன.

<u>கால்நடை மருத்துவ நிலையங்களின் விவரம்:</u>

| | | |
|---|---|---|
| ★ | பன்முக மருத்துவமனைகள் | 3 |
| ★ | பெரும் மருத்துவமனைகள் | 21 |

| | | |
|---|---|---|
| ★ | கால்நடை மருத்துவமனைகள் | 104 |
| ★ | கால்நடை மருந்தகங்கள் | 765 |
| | மொத்தம் | 893 |

சென்னை சைதாப்பேட்டை, மதுரை-தல்லாகுளம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 3 பன்முக மருத்துவமனைகளில் கால்நடைகளுக்குச் சிகிச்சை வசதி 24 மணிநேரமும் செய்யப்பட்டிருக்கிறது. உள்நோயாளிகள் பிரிவு வசதி கொண்ட பன்முக மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம் மருத்துவமனையில் பெரிய அறுவை சிகிச்சையும் மேற்கொள்ளப்படுகிறது. இது தவிர சேலம், மதுரை, ஈரோடு, பொள்ளாச்சி, சைதாப்பேட்டை (சென்னை) வேலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நிலையங்களில் எக்ஸ்ரே வசதிகளும் உள்ளன.

இத்துறையானது கால்நடை வளர்ச்சிக்காகவும், ஏழை மக்கள் மற்றும் பழங்குடியினர் நலன் கருதியும் கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது.

## கறவை மாடுகள் பராமரிப்புத் திட்டங்கள்:

### ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் கால்நடை பராமரிப்புத் துறையினரால் 1976ஆம் ஆண்டு முதல் சேலம், தருமபுரி, திருவண்ணாமலை சம்புவராயர், வடார்க்காடு அம்பேத்கர், திருச்சி பெரும்பிடுகு, விழுப்புரம் இராமசாமி படையாட்சியர் ஆகிய மாவட்டங்களில் வாழும் பழங்குடியினரின் நலன் கருதி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டமானது சேலம் மாவட்டத்தில் மலைப்பகுதிகளான ஏர்க்காடு, கொல்லிமலை, கல்வராயன்மலை, பச்சைமலை, அருநூத்துமலை ஆகிய மலைப்பகுதிகள், தருமபுரி மாவட்டத்தில் சித்தேரி, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் ஜவ்வாது மலைப்பகுதி, வடார்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தின் ஏலகிரி மற்றும் திருச்சி மாவட்டத்தில் பச்சைமலை ஆகிய மலைப்பகுதிகளில் வாழும் மலைவாழ் பழங்குடியினரின் பயனாளிகளுக்கு 50 விழுக்காடு மானியத்துடனும், விழுப்புரம் இராமசாமி படையாட்சியர் மாவட்டத்திலுள்ள கல்வராயன் மலை பழங்குடியினர் பயனாளிகளுக்கு 75% மானியத்துடன் கறவை மாடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டமானது நிலமற்ற மற்றும் சிறு விவசாயிகள், தங்களது வறுமைக்கோட்டிலிருந்து மேம்பட்டு வாழவும், கால்நடை வளர்ப்பின் மூலம் உபரி வருமானத்தை ஈட்டவும் வழிவகை செய்து வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 300 அலகுகள் (ஒரு அலகுக்கு 2 மாடுகள் வீதம்) கறவைப் பசுக்கள் பழங்குடியினர் பயனாளிகளுக்கு 1996-97ஆம் ஆண்டில் வழங்க ரூ.23.92 இலட்சம் அரசு நிதி இசைவாணை வழங்கியுள்ளது. ஒரு அலகுக்கு ரூ.12,000 மதிப்பில் இரு கறவைமாடுகள் 6 மாத இடைவெளியில் வழங்கப்படுகிறது. இத்தொகை பழங்குடியினப் பயனாளிகளுக்கு மான்யம் வழங்கவும், 5 விழுக்காடு காப்பீட்டுத்தொகை வழங்கவும், தடுப்பூசி செலவினத்திற்காகவும் பயன்படுத்தப்படும்.

### பொருளாதாரம்

கறவைமாடு வளர்ப்பில் பயிற்சி அளிக்க ரூ.100 உதவித் தொகை ஒவ்வொரு பயனீட்டாளருக்கும் அளிக்கப்படுகிறது. தொகையைத் திருப்பிச் செலுத்த வேண்டிய காலம்-5 முதல் 8 ஆண்டுகள் வரை. இத்திட்டத்தில் வழங்கப்படும் கறவைப் பசுக்கள், வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி வரையறுத்துள்ள விலைக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும்.

இத்திட்டம் தவிர, உலக வங்கி உதவியுடன் கூடிய கால்நடை மேம்பாட்டுத்திட்டம் 1991-92ஆம் ஆண்டு முதல் ரூ.46.62 கோடி செலவில் ஏழு ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் உள்நாட்டுக் கால்நடைகளின் தரத்தினை உயர்த்தவும், கலப்பினக் கன்று உற்பத்தியைப் பெருக்கவும்



தமிழ்நாட்டில் நான்கு இடங்களில் உறைவிந்து உற்பத்தி நிலையங்களும் 12 இடங்களில் உறைவிந்து வங்கிகளும் அமைக்கப்பட்டு, மாநிலத்திலுள்ள 3,510 செயற்கை முறை கருவூட்டல் நிலையங்களுக்கு உறைவிந்து குச்சிகள் மற்றும் திரவ நைட்ரஜன் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இத்திட்டம் கால்நடைப்பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தித் திட்டத்துடன் இணைந்து செயலாக்கப்படுகின்றது. அதிக அளவு பால் உற்பத்தி செய்யக்கூடிய கால்நடை இனங்களின் விந்துக்களை அரசாங்கக் கால்நடைப் பண்ணைகளிலிருந்து பெற்று பொதுமக்களுக்கு இலவசமாக விநியோகம் செய்கிறது. இத்திட்டத்தின் மூலம் பசுந்தீவன உற்பத்திக்குத் தேவையான இடுபொருட்கள் இலவசமாகப் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

இதன்படி ஒரு பசு வளர்ப்பதன் மூலம் ஒரு ஆண்டிற்கு இலாபம் ரூ.11,585 ஆகும்.

திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ.980.

நிகர இலாபம் ரூ.10,605. ஆண்டிற்கு, நிகர இலாபம் மாதத்திற்கு ரூ.884.

### கன்று வளர்ப்புத் திட்டம்

1983ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வரும் சிறப்பு மத்திய நிதியுதவித் திட்டத்தின்கீழ் இந்து ஆதிதிராவிடர் சமூகத்தினருக்குக் கலப்பினக் கிடேரிக் கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன. கிராமப்புறங்களில் வாழும் ஏழை ஆதி திராவிட சமூக மக்களின் வருவாயினைக் கால்நடை வளர்ப்பின் மூலம் பெருக்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த இத்திட்டம் பெரிதும் உதவுகின்றது.

இத்திட்டங்களின் உதவியானது நபார்டு நிர்ணயம் செய்துள்ள விலை மதிப்பில் 50% மான்யமும், 50% தேசிய மயமாக்கப்பட்ட வங்கிக் கடன் மூலமாகவும் ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்படுகின்றது. இத்திட்டம் சென்னை, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகிறது. 1995-96ஆம் ஆண்டில் மொத்தம் 10,000 பயனாளிகளுக்கு கிடேரிக் கன்றுகள் 100% மான்யத்துடன் வழங்கப்பட்டுள்ளன. ஒரு அலகுக்கு ஒரு கிடேரிக்கன்று வீதம் ( நான்கு மாதம் வயது ) ரூ.1500 செலவில் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட ஆதி திராவிட பெண் பயனீட்டாளர்களுக்கு ரூ.150 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், ஏழை மக்களுக்குக் கறவைப் பசுக்களை வளர்க்க மான்யத்துடன் கூடிய நிதி உதவி அளிக்கப்படுகிறது. பயனாளிகளுக்குக் கறவைப் பசு பராமரிப்பு பற்றி, பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிக் காலத்திற்கு உதவித்தொகை அளிக்கப்படுகிறது; இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பசுக்களுக்கு ஆயுள் காப்பீடு வசதியும் செய்து தரப்படுகிறது.

கிடேரியை சினையாகவோ அல்லது கன்று ஈன்ற உடனோ ரூ.10,000க்கு விற்று இலாபம் பெறலாம்.

### செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு வளர்ப்புத் திட்டங்கள்

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டம் போன்ற நலத்திட்டங்கள் மூலம் தமிழ் நாட்டிலுள்ள ஏழை விவசாய மக்கள் செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பின் வழியாகப் பயனடைந்து வருகிறார்கள்.



### ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டம்

இத்திட்டம் கால்நடை பராமரிப்புத் துறையினரால் 1976ஆம் ஆண்டு முதல் சேலம், தருமபுரி, திருவண்ணாமலை சம்புவராயர் வடார்க்காடு அம்பேத்கர், திருச்சி பெரும்பிடுகு, விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் ஆகிய மாவட்டங்களில் வாழும் பழங்குடியினரின் நலன் கருதி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டமானது சேலம் மாவட்டத்தில் உள்ள மலைப்பகுதிகள்ான ஏர்க்காடு கொல்லிமலை, கல்வராயன்மலை, பச்சைமலை, அருநூத்துமலை ஆகிய மலைப்பகுதிகள் - தர்மபுரி மாவட்டத்தின் சித்தேரி - திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தின் ஜவ்வாது மலைப்பகுதி, வடார்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தின் ஏலகிரி, திருச்சி மாவட்டத்தின் பச்சைமலை ஆகிய மலைப்பகுதிகளில் வாழும் மலைவாழ் பழங்குடியினரின் பயனாளிகளுக்கு 50 விழுக்காடு மானியத்துடனும் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்திலுள்ள கல்வராயன் மலை பழங்குடியினர் பயனாளிகளுக்கு 75% மானியத்துடனும் செம்மறி ஆடு அலகுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

1996-97ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட 10 மலைப்பகுதிகளில் 600 செம்மறி ஆடு அலகுகள், வழங்கப்பட்டுள்ளன. 20 பெட்டையும் ஒரு கிடாவும் கொண்ட ஒரு அலகிற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.18,000 ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் பழங்குடியினப் பயனாளிகளுக்கு 50% மான்யம் வழங்கவும், காப்பீட்டுத் தொகை வழங்கவும், போக்குவரத்துச் செலவினங்களை ஏற்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஆடுகளை வளர்க்கவும், இனவிருத்தி செய்யும் முறை கற்பித்தும் பயிற்சி அளிக்கப்படும். ஒவ்வொரு பயனாளிக்கும் ஆடுகளைப் பராமரிக்கப் பட்டி அமைப்பதற்கு ரூ.300 மான்யமாக அளிக்கப்படும்.

### சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டம்

ஒவ்வொரு ஆண்டும் கிராமப்புறங்களில் வாழும் ஏழை இந்து ஆதிதிராவிட சமூகத்தினருக்குச் செம்மறி மற்றும் வெள்ளாடு அலகுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் உதவியானது நபார்டு நிர்ணயம் செய்துள்ள விலை மதிப்பில் 50% மான்யமும் 50% தேசியமயமாக்கப்பட்ட வங்கிக் கடன் மூலமாகவும் ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்படுகிறது. செம்மறி ஆடு வளர்ப்புத் திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகள் ஆடு வளர்ப்புக் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக இருக்கவேண்டும். இத்திட்டம் சென்னை, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் (10+1) கொண்ட செம்மறி ஆடு அலகும், (3+1) கொண்ட வெள்ளாடு அலகுகளும் அளிக்கப்படுகின்றன.

### ஐரோப்பியப் பொருளாதார ஆடு வளர்ப்புத் திட்டம்

ஐரோப்பியப் பொருளாதார சமூக நிதியுதவியுடன் ஆடு வளர்ப்புத் திட்டம் 1989ஆம் ஆண்டு முதல் செங்கை எம்.ஜி.ஆர்., வடார்க்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை சம்புவராயர், தென்னார்க்காடு வள்ளலார், சேலம், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது.

இப்பகுதியிலுள்ள ஆடுகளுக்குக் குடற்புழு நீக்கப்பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. இதனால், ஆடு வளர்ப்போர் மிகவும் பயனடைகின்றனர். அவர்களுடைய ஆடுகளின் எடை அதிகரிக்கின்றது. இனப்பெருக்க சதவிகிதம் அதிகரித்தும் ஆட்டுக் குட்டிகளின் இறப்பு விகிதம் குறைந்தும் உள்ளது. மேலும் இறைச்சியின் எடையும் அதிகரிக்கின்றது. அவர்களின் வருமானமும் இதனால் கணிசமாக உயர்கிறது.

### செம்மறி ஆடுகளுக்குத் தீவிர மருத்துவ நலப்பணி

செம்மறியாடுகளைப் பெருமளவில் பாதிக்கும் குடற்புழுக்களால் ஏற்படும் எடை இழப்பு மற்றும் இறப்பினைத் தடுக்கும் வகையில் ஏழை விவசாயிகள் பராமரிக்கும் செம்மறி ஆடுகளுக்குக் குடற்புழு நீக்கம் முறையாகச் செய்யப்படுகிறது.

சென்னை, நீலகிரி, கன்னியாகுமரி மற்றும் நாகை காவிரித் தெற்கு மாவட்டங்கள் தவிர ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் 1982-83 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1996-97ஆம் ஆண்டில் 31.1.97 முடிய உள்ள காலத்தில் 17 இலட்சம் செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

### பன்றி வளர்ப்பு

தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் இயங்கிவரும் அபிஷேகப்பட்டி, ஒசூர், புதுக்கோட்டை மற்றும் செட்டிநாடு மாவட்ட கால்நடைப் பண்ணைகளிலும், சென்னை-சைதை கால்நடை பெரு மருத்துவமனை வளாகத்தில் உள்ள பன்றிப் பிரிவிலும், மத்திய அரசின் 100 சதவீத மான்ய நிதி உதவியுடன் வெளிநாட்டு இன வெண்பன்றிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இப்பன்றிகள் மூலம் இனவிருத்தி செய்யப்படும் ஆண் மற்றும் பெண் பன்றிக்குட்டிகள் இனவிருத்திக்காக விவசாயிகளுக்கும், ஏனையோருக்கும் அரசு நிர்ணயிக்கும் விலையில் விநியோகம் செய்யப்படுகிறது.

மேலும் சென்னை, சைதாப்பேட்டையிலுள்ள பன்றி வளர்ப்பு பிரிவு மூலம் கிடைக்கும் உபரியான பன்றிகள் மற்றும் பன்றி வளர்ப்புக் கூட்டுறவு சங்கத்தின் மூலம் பெறப்படும் பன்றிகள் சுகாதார முறையில் அறுக்கப்பட்டு ஏழை எளிய மக்களுக்கு நியாயமான விலையில் தரமான புரதம் மற்றும் கொழுப்புச்சத்து நிறைந்த இறைச்சியை வழங்க மாநில அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.







மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் வளர்க்கப்படும் உயரின வெளிநாட்டுப் பன்றிகளின் குட்டிகள் இனவிருத்திக்காக மாநிலம் முழுவதிலும் தேவைப்படும் விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் அரசு நிர்ணயிக்கும் நியாயமான விலையில் விநியோகம் செய்யப்படுகிறது.

### கோழி வளர்ப்புத் திட்டங்கள்

கோழி வளர்ப்பின் மூலம் தமிழக மக்கள் உபரி வருமானம் பெறுவதுடன், தங்கள் குடும்பத்திற்குத் தேவையான போதுமான புரதச் சக்தியினையும் கோழி இறைச்சி மூலம் பெறுகின்றனர்.

புறக்கடை கோழி வளர்ப்பானது கலப்புப் பண்ணை முறையில் வரவேற்கத்தக்கது. கால்நடைப் பராமரிப்புத் துறையானது பல்வேறு நலத் திட்டங்கள் மூலம் ஏழை விவசாயிகளுக்குக் கோழி அலகுகளும், வாத்து அலகுகளும் வழங்கிவருகிறது.

### சிறப்பு மத்திய உதவித் திட்டம்

சென்னை நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் இந்து ஆதிதிராவிடப் பெண் பயனீட்டாளருக்கு 50% மான்யத்துடன் கோழி மற்றும் வாத்து அலகுகள் வழங்கப்படுகின்றன. 1995-96ஆம் ஆண்டில் அசில் கோழியினங்கள் (12 வார வயது) ஒரு அலகிற்கு 5 பெட்டை + 1 சேவல் என்ற விகிதத்தில் ஒன்று இருபது ரூபாய் மதிப்பில் 10,000 பெண் பயனீட்டாளர்களுக்கு 100% மான்யத்துடன் வழங்கப்பட்டது. இதன் மொத்த மதிப்பு ரூ.12.00 இலட்சம்.

கிரிராஜா கோழிக் குஞ்சுகள் 100% மான்யத்துடன் ஒரு அளவிற்கு 10 குஞ்சுகள் (ஒரு குஞ்சு ரூ.12) வீதம் 6 முறை வழங்கப்படுகிறது. 1995-96ஆம் ஆண்டு ரூ.72.00 இலட்சம் செலவில் 10,000 பயனீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### புறக்கடை கோழி வளர்ப்புத் திட்ட அலகுகள்

| | | |
|---|---|---|
| கோழி அலகு (10 + 1) மதிப்பு | : ரூ. | 550.00 |
| கோழி வீடு கட்டணம் | ரூ. | 100.00 |
| குடற்புழு நீக்கம் | ரூ. | 10.00 |
| மொத்தம் | ரூ. | 660.00 |
| வாத்து அலகு (50+5) மதிப்பு | ரூ. | 3300.00 |
| மான்யம் 50% | ரூ. | 1750.00 |
| வாத்து வீடு கட்டணம் | ரூ. | 200.00 |
| மொத்தம் | ரூ. | 1950.00 |

இத்திட்டங்கள் தவிர, கோழிகளுக்கு ஏற்படும் நோய்களைக் கண்டறிந்து, குறித்த காலத்தில் தடுப்பூசிப் பணிகளை மேற்கொள்ள உதவும் வகையில் கோழிப் பண்ணைகள் மிகுதியாகக் காணப்படும் சேலம் மாவட்டத்திலுள்ள ஆண்டலூர்கேட் மற்றும் பெரியார் மாவட்டத்தில் ஈரோட்டிலும் கோழி நோய் ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் கோழித் தீவனத்தின் தரத்தைப் பரிசோதித்து, தகுந்த அறிவுரையும் வழங்கப்படுகிறது.

வேளாண் பெருமக்களுக்கு மதுரை

நிலவளவங்கி மூலம், பல

சலுகைகளைச் செய்து வருகிறது. நில வள வங்கி

வழங்கும் உதவிகளைப் பெற்று

வங்கியில் உறுப்பினராகி

உயர்வடைய வேண்டுகிறோம்.



அன்புள்ள

**இ. சண்முகம்**
தலைவர்
நிலவள வங்கி
தளபதி ஸ்டாலின் மாளிகை
சாத்தமங்கலம் சாலை
மதுரை - 625 010.



**டேனிடா உதவியுடன்
கால்நடை வளர்ப்புத்திட்டம்**

டேனிடா உதவியுடன் தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டுத்திட்டம் ரூ.4.4 கோடி செலவில் முதல் கட்டமாக 1989ஆம் ஆண்டு முதல் 1997 பிப்ரவரி வரை 7 ஆண்டுகள் புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்பட்டு வந்தது. இதில் முதல் நிலையாக 154 தொடர்புப் பணியாளர் தம்பதிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்குக் கால்நடை பராமரிப்பு குறித்து 20 நாட்களுக்கு அடிப்படை பயிற்சியும் பின்னர் 5 நாட்களுக்குப் புத்தாக்கப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. பயிற்சியின்போது ஒரு நாளைக்கு 50 ரூபாய் உதவித் தொகையும், ரூபாய் இரண்டாயிரம் செலவில் மிதிவண்டியும் வழங்கப்பட்டது.

இவர்களுக்கு ரூ.400 மதிப்பூதியமும், இவர்களின் சிறந்த பயிற்சியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.5000மும் வழங்கப்பட்டது. இத்திட்டத்தில் இரண்டாம் நிலையாகப் பயிற்சி பெற்ற 154 தம்பதியரும் முறையே 45 திட்ட தொடர்பு விவசாயிகளுக்கு 2 நாள் அடிப்படைப் பயிற்சியும், ஒருநாள் புத்தாக்கப் பயிற்சியும் அளித்துள்ளனர். இந்தப் பயிற்சியின்போது, திட்டத் தொடர்பு விவசாயிகளுக்கு ஒரு நாளைக்கு ரூ.30 உதவித்தொகையும் வழங்கப்பட்டது. இரண்டாம் நிலை பயிற்சி பெற்ற 45 திட்டத்தொடர்பு விவசாயிகளில் சிறந்த விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு ரூ.1000 மதிப்பில் முல்லை மேய்ச்சல் நிலம் அமைக்கவும், ரூ.200 மதிப்பில் கல்தீவனத் தொட்டியும் ரூ.200 மதிப்பில் தட்டை வெட்டும் கருவியும் வழங்கப்பட்டுள்ளது.



இவை தவிர, ஊட்டமேற்றிய வைக்கோல் தயாரித்தலுக்கு ரூ.50-ம், செம்மறி மற்றும் வெள்ளாட்டுப் பொலி கிடா வாங்குவதற்கு ரூ.500-ம் வழங்கப்பட்டது. இவை தவிர ரூ.4 இலட்சம் மதிப்புள்ள பசுந்தீவன விதைகளுக்கு விதைக் கன்றுகளும் வழங்கப்பட்டுள்ளன.

டேனிடா உதவியுடன் தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டுத் திட்டம் இரண்டாவது கட்டமாக புதுக்கோட்டை, காமராஜர், இராமநாதபுரம், சிதம்பரனார் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்களில் ரூ.27 கோடி செலவில் செயல்படுத்தப்படவுள்ளது.

இதனால் தன்னிச்சையாகக் கால்நடை தொழில்களான சிறியகோழிப்பண்ணை வைத்தல், ஆடுவளர்ப்பு போன்ற தொழில்களை மேற்கொண்டு விவசாயிகள் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள வாய்ப்புப் பெறுகின்றனர்.

**மேற்குத் தொடர்ச்சி மலை
மேம்பாட்டுத் திட்டம்**

கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் ஐந்தாவது ஐந்தாண்டுத்திட்டக் காலம் முதல் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டங்களில் நடமாடும் கால்நடை மருந்தகங்கள், கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு உழவர் பயிற்சி நிலையம் போன்றவை அமைக்கப்பட்டு ஏழை விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்பட்டுவருகிறது. ★

216441

# தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம்

(இந்திய அரசு மற்றும் தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்)
4, டி.பி. ரோடு, மதுரை-625 010.
தொலைபேசி : 602388, 602476
ஃபேக்ஸ் : 602455

**தென் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு எங்களின் தொண்டு**

| | | |
|---|---|---|
| பாரதப் பிரதமர் சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டத்தின் கீழ் மொத்தம் பயன் பெற்றவர்கள் இதுவரை | ... | 14,000 பேர் |
| எங்களது மையத்தின் மூலம் பயன்பெற்ற பெண்கள் சுமார் | ... | 6,000 பேர் |
| பெண்களுக்கு பல்வேறு சிறப்பு பயிற்சிகள்- தற்போது கம்ப்யூட்டர் பயிற்சியில் பயன்பெறும் பெண்கள் | ... | 60 பேர் |
| எங்களது மையம் இதுவரை சமர்ப்பித்த தொழில் ஆலோசனை ஆய்வு அறிக்கைகள் | ... | 12 |
| எங்களது மையம் இதுவரை மாவட்ட தலைநகரை மையமாகக் கொண்டு பணியாற்றும் இணை மையங்கள் | ... | 12 |




## கிராமியக்கலை இயக்கத்தால்

# வளரும் தமிழ்...

முனைவர் கே.ஏ. குணசேகரன்

குறிப்பிட்ட இனத்தாரின் செல்வாக்கு உயர்ந்தோங்கிய காலத்தில் அரசியல் மற்றும் பொருளாதார வாழ்வு, வர்க்க முரண்பாடுகள், சாதி வேறுபாடுகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட சமூகம் உற்பத்தி உறவுகளுடன் விளங்குவது இயல்பு. உற்பத்தி உறவுகளுடனும் வர்க்கங்களுடனும் சாதி உருவாக்கப்படும் சம காலத்திலேயே அவற்றால் சாதியமும் வளர்க்கப்படுகிறது. சாதீயம் வளர்ச்சி பெற்ற இந்தியாவில் கிராம மக்களின் மொழி, கலை, இலக்கியம், கலாச்சாரம், போன்றவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

நீண்ட காலமாகக் கிராமிய மக்களின் கலை இயக்கம் சாதீய ரீதியில் ஒடுக்கப்பட்டு இருந்தது. இந்த மண்ணில் ஒடுக்கு முறையின் பயனாய்க் கிராமியக்கலை இயக்கம் என்பது வளர வாய்ப்பில்லை. எனினும் ஆங்காங்கே பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், மலையின மக்கள் ஆகியோர் குடும்பம் மற்றும் குடியிருப்புக்கள் எனும் அளவில் சிதறிய நிலையில் இயக்கங்கள் வளரத் தலைப்பட்டுள்ளன. மேலாதிக்கச் சாதியினரின் சடங்குகளை நிறைவேற்றும் பொருட்டு அதை ஒட்டிய இரசனைத் தேவைக்காய் அறிந்தோ அறியாமலோ, ஆங்காங்கு மேற்சொன்ன அளவில் அமைதியாய் கிராமியக் கலை இயக்கம் தனித்த நிலைகளில் வளர வாய்ப்பேற்பட்டுள்ளது.

தவத்திரு சங்கரதாஸ் சுவாமி பெயரில் விளங்கும் நாடகக் கலைச் சங்கங்கள் மதுரை, புதுக்கோட்டை, மணப்பாறை என உள்ளன. தென்தமிழ் நாட்டின் கிராமங்களில் இந்நாடகக் கலைச் சங்கத்தார் வழியே பேச்சு வழக்குச் சொற்கள், தமிழ் இலக்கியம் மற்றும் கலைச்சொற்கள் அறிமுகமாவதோடு தமிழ்த் திரைப்படங்களின் கதையாடல்களும், சொல்லாடல்களும், பாடல்களும் அறிமுகமாகி வருகின்றன.

தேவராட்டக் கலைக்குழுக்கள், மதுரை, தூத்துக்குடி, விளாத்திக்குளம் ஆகிய பகுதிகளில் இன்று பரிணமித்து வரக் காண்கிறோம். மேலும் இராமாயணம், மகாபாரதக் கதைகள் பாடி ஆடும் ஒயிலாட்டக்கலைக் குழுக்கள் இன்று ஆங்காங்கு முளைத்தெழும் சூழல் ஏற்பட்டுள்ளன.

“சீதையக் காணாமின்னு ராமரிடம் சேதி ஒரைக்கலாமா ?” என்பதான வட்டார மொழி நடையிலேயே ஒயிலாட்டக்கலைக் குழுக்கள் பாடி வருகின்றன.

தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் நையாண்டிமேளம் மற்றும் கரகம்,



குறவன் குறத்தி ஆட்டம், ராஜாராணி ஆட்டம் ஆகிய கிராமிய ஆட்டக்கலைஞர்கள் சங்கங்கள் உள்ளன. உளுந்தூர்பேட்டை, காஞ்சிபுரம், புரிசை போன்ற பகுதிகளில் தெருக்கூத்துக் கலைஞர்கள் சங்கங்கள் ஏற்பட்டுள்ளன. நெல்லை, குமரி மாவட்டப் பகுதிகளில் வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் சங்கங்களும், கணியான்கூத்து (மகுடாட்டம்) கலைஞர்கள் ஒருங்கிணைப்புக்களும் ஆங்காங்கு ஏற்பட்டுள்ளன.

**பெரியபட்டி தொடக்க வேளாண்மைக்**

**கூட்டுறவு வங்கி**

**வேளாண் பெருமக்களுக்குப் பெரிதும் உதவி**

**செய்து வருகிறது.**

***வங்கியின் சிறப்போடு 'தமிழரசு' ம் சிறக்க***

***வாழ்த்துகிறோம்.***

அன்புள்ள

**பி. மூர்த்தி**, பி.ஏ.,
*தலைவர்*

# தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி

**பெரியபட்டி, மதுரை மாவட்டம்.**





நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சி வழி தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக, கணிசமான தாக்கத்தை செவ்வியல் கலை இலக்கிய மொழியாளர் மத்தியில் செய்து வருகின்றனர். அவர்கள் தொடக்கி வைத்த மக்கள் பிரச்சினைகளைக் கொண்ட நாட்டுப்புற ஆடல், பாடல் கலைநிகழ்ச்சிப் பயணத்தில் இன்று கொல்லங்குடி கருப்பாயி அம்மாள், கோட்டைச்சாமி குழு, சிங்கம்புணரி தங்கராசு குழு, விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணன் கலைக்குழு, பரவை முனியம்மாள் கலைக்குழு, புஸ்பவனம் குப்புசாமி கலைக்குழு எனப்பல கிராமியக் கலைக்குழுக்கள் தோன்றி வருகின்றன.

கிராமியக் கலைக்குழுக்களிடையே ஒருங்கிணைந்த இயக்கம் தமிழகத்தில் இன்று இல்லை. எனினும் அந்தந்த வட்டாரம், கலைகள் இடையே சங்கங்கள் தோன்றி வருவது நம்பிக்கை தருவதாய் உள்ளன. எனினும் மேற்சொன்ன இயக்கங்களின் தாக்கங்கள், திரைப்படம் வரை உள்வாங்கப்பட்டு மக்களிடையே பெரிதான பாதிப்பை கலாச்சாரம் மற்றும் மொழி ரீதியில் ஏற்படுத்தியுள்ளன.

சங்க இலக்கியம் தொட்டு பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், இன்றைய நாவல், சிறுகதை, சினிமா, நவீன நாடகம் என அத்தனையிலும் கிராமியக் கலைக்கூறுகளின் தாக்கம் நிறைந்துள்ளன என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அத்தனைக்கும் எடுத்துக்காட்டுக்கள் தந்து விளக்கும் வாய்ப்பு இக்கட்டுரையில் இல்லை எனினும் சுதந்திரத்திற்குப் பின் - குறிப்பாக வெகுசன ஊடகங்களின் பயனாய் இன்றைய தமிழ் வளர்ச்சி பெற்றமைக்குக் கிராமியக்கலை இயக்கத்தின் பங்களிப்பு ஏராளம் உண்டு.

திராவிடர் இயக்கம் தமிழ் மொழி உணர்வை அடித்தளமாகக்கொண்டது. மணிப்பிரவாள நடை, தூய தமிழ்நடை எனத் தமிழ் மொழி வளர்ச்சியில் நாம் காண நேரிடினும் ஒடுக்கப்பட்ட மக்களின் பேச்சு மொழிநடை கவனிப்பாரற்றுக் கிடந்தது.

எல்லா நிலைகளிலும் ஒடுக்கப்பட்ட மக்களின் மொழி நடையான பேச்சு மொழி என்பது மொழிபெயர்ப்புப் படைப்புக்களானாலும் சரி, மேலை நாட்டுப் படைப்புக்களைத் தழுவிப் படைக்கப்பட்டவைகளானாலும் சரி, சாமானியப்பட்ட மக்களின் மொழிநடை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஒடுக்கப்பட்ட மக்கள் பெரும்பான்மை பலத்தை எட்டியிருப்பினும் சிறுபான்மை மக்களின் கலாச்சாரத் தாக்குதலே அறிவுத்தளத்திலும் சரி அனைத்துத் தளத்திலும் சரி, பெரும்பான்மை பலத்தை எட்டியிருக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் (தாழ்த்தப்பட்ட மக்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள்) கலாச்சாரத்தை அடிமைப் படுத்தியது. அதன் ஒரு அங்கமாகவே பேச்சு மொழியைக் கொச்சைமொழி என்றும், கொடுந்தமிழ் என்றும் இழிவுபடுத்திய மோசடியை நாம் உணர்ந்துள்ளோம். மேலாதிக்கச் சாதி மக்களின் கலாச்சாரத்தளத்தில் ஏட்டுத்தமிழ் என்றும் செந்தமிழ் என்றும் தீந்தமிழ் என்றும் கொண்டாடும் நிலையினை நாம் அறிகிறோம்.

இன்று, தகவல் தொடர்புச் சாதனங்கள் எண்ணிறந்துள்ள சமூகமாக உள்ளது. இன்று சிலர் வெள்ளாளர் சாதி மக்களின் நாகரிகக் கொடையில்தான் தமிழ் அடையாளத்தைக் காணமுடியும் என்று வாதிடுகின்றனர். மேலாதிக்கச் சாதியினர் தீண்டாமைக் கொள்கையினை மொழி நடையிலும் கூட முக்கியமாகக் கைக்கொண்டனர்.

புனிதத்தன்மையினைத் தமிழ் நடைக்குப் புனைந்துரைத்தனர். முருகனோடும், சிவனோடும், அகத்திய முனிவரோடும் இப்புனைவுகள் இட்டுக்கட்டப்பட்டன. இப்படித்தான் ஆதிக்கச் சாதீய ரீதியில் தமிழ் மொழி சாமானியப்பட்ட மக்களிடமிருந்து அன்னியப்படுத்தப்பட்டது. அந்தப் புனைவுகளும், புனிதங்களும் இன்று ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சியால் கேள்விக்குள்ளாக்கப்பட்டுச் சிதைக்கப்பட்டுப் பேச்சுத்தமிழ் வெகுசன ஊடகங்களின் உதவியுடன் எங்கும் ஊடுருவியுள்ளது. இவை போன்ற சொற்களும் நாட்டுப்புற இசை வடிவங்களான தெம்மாங்கு; சிந்து இசை வகை, கண்ணி, நையாண்டி இசை வகை போன்றவை இளையராஜா வருகைக்குப்பின் விதவிதமாய்த் திரைப்பாடல்கள் வழியே அறிமுகப்படுத்தப்பட்டன.

கரிமேட்டுக் கருவாயத்தேவன் கதை; மலையூர் மம்பட்டியான் கதை, தீச்சட்டி கோவிந்தன் கதை போன்ற நாட்டுப்புறக் கதை வீரர்களைக்கொண்ட திரைப்படங்களின் வருகையினால் உடை, ஒப்பனை

பிறக்க முக்தி திருவாரூர்,
இருக்க முக்தி திரு காஞ்சி,
காண முக்தி திரு தில்லை,
இறக்க முக்தி திரு காசி,
நினைக்க முக்தி திரு அண்ணாமலை,
சுவைக்க சக்தி "ஆகாஷ்"-

ஆகாஷ்
ஹோட்டல்ஸ் A/c.
போர்டிங் &
லாட்ஜிங்
9-H, போளூர் ரோடு
திரு வண்ணாமலை
போன் : 22151, 22152, 22751

முறைமைகளுடன் இயல்பான பேச்சு மொழிநடைகள் வெளிப்பட்டன.

*'சிஞ்சின்னாக்கடி*
*டாங்குனக்கடி*
*ஜிம்சிக்கா*
*தைத்தக்கா*
*ஏலேலம்படி*
*ஏலேலோ*
*அய்லய்லா*
*ஓாஓஓாய்...'(குலவை இடுதல்)*

வாய் ஒலி (விசில் அடித்தல்) எழுப்புதல் எனும்படியான நாட்டுப்புற இசைமொழிச் சொற்கள் இன்று திரைப்படங்களின் வழியே வெகுசன மக்களிடம் அறிமுகம் பெற்றுள்ளன.

இன்று திரைப்படங்களின் வழியே பல பகுதி மக்கள் அறியும் வகையில் இனமொழி நடைகள் பரவலாக்கப்பட்டுள்ளன. தேவர்மகன், மறவன் என்னும் திரைப்படங்களின் வழியே

*'சும்மா கெடங்கோய்'*
*'அவிங்க அவிங்க பண்ணுறாங்கெ'*
*'பேயாமக் கெடக் கணும்'*

- என்பதான கள்ளர் இனத்தவர், குறிப்பாக மதுரை மாவட்டப் பகுதியினர் பேசும் பேச்சுமொழி நடை மக்களிடம் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

*'ஏனுங்க பாத்துப்புட்டுச் சும்மா போறீங்க'*
*'என்றன் பேருக்கு மாத்திப் போடணுமுங்க'*
*'உன்றன் மகளக்கட்டிக்கிறனுமுங்க'*

என்பதான . சொல்லாட்சிகள் கொங்கு நாட்டுக்கவுண்டர் இனமொழி நடை, "சின்னக்கவுண்டர்", ''கவுண்டர் பொண்ணா கொக்கா'' என்பதான திரைப்படங்கள் வழியே எல்லாப்பகுதி இன மக்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

நகர்சார் நாட்டுப்புற (Slum people) மக்கள் வாழும் நகரச் சேரி மக்களின்-

*'தம்மாத்துண்டு'*
*'தா-முஞ்சியப்பாரு'*
*'மொகரைப் பேத்திடுவேன்'*
*'வாயப்பயம்'*

என்பதான பேச்சுமொழி நடைகள் இன்று அனைத்து மக்களுக்கும் புரிய வைக்கப்பட்டுள்ளன.

*கண்டாங்கிச் சேலை*
*கருப்பண சாமி*
*கரிசக்காடு*





# மதுரை கிழக்கு வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம்

கருப்பாயூரணி, மதுரை.

எங்கள் மையத்தின் மூலம், அரசு சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு 4½ இஞ்சு, 6 இஞ்சு அளவுள்ள ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், இரும்புக் கதவுகள், கிராதிகள், ரோலிங் ஷட்டர், வேளாண்மை கருவிகள், மரத்தளவாடச் சாமான்கள் மற்றும் இரும்பு சம்பந்தப்பட்ட அனைத்துக் கருவிகளும், தரமான முறையில் தயார் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்புள்ள

க. பாலுச்சாமி
தலைவர்

எம். சி. முத்து
முதுநிலை மேலாளர்

*மம்பட்டி*
*மடை தொறந்து*
*எட்டு வச்சவாடா*
*அப்படிப்போடு அதிவான...*

*முந்தானை*
*எம்புட்டுத் தொலை*
*ஏவேய் யாருலே*
*பாவிமக்கா*
*சண்டாளப்பாவி*
*தாம்பெத்த மக்கா...*



*ஏப்பு*
*அந்துவாளக்காடு*
*ஒன்னுக்குள்ள ஒன்னு*
*ஒன்னா மன்னா*
*எடுவட்டபயகா*
*கம்மனாட்டி*
*மன்னாங்கட்டி*
*கோணப்பயலே*
*வெத்துவேட்டு*
*பொத்திவச்ச*
*பொக்கவாயி*
*சம்சாரி*
*வதக்காத்து*
*தெக்கத்தி...*

- என்பன போன்ற வார்த்தைகள், தொடர்கள் இன்று அந்தந்த வட்டாரத்தைத் தாண்டி வெகுசன ஊடகங்களின் வழியே அறிமுகமாக்கப்பட்டு அனைத்து மக்களிடையேயும் செல்வாக்குப் பெற்றுள்ளன. இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள சொற்கள் தூய தமிழ்ப் பண்டிதர்களால் முன்பு தீண்டாமைக்குட்படுத்தப்பட்டவை என்பதை நாம் அறிந்துள்ளோம்.

ஒரு மொழி புதியவளம் பெற்று வளர வேண்டும். இப்புதிய வளத்துக்கு அம்மக்களின் வாழ்க்கை நிலைகளின் மாற்றம் அடித்தளமாக அமையும். கிராமியக்கலை இலக்கியத் தாக்கம் வெகுசன ஊடகங்களில்-குறிப்பாகத் திரைப்படங்களில், ஒலி நாடாக்களில், தொலைக்காட்சிகளில் எண்ணிறைந்த தாக்கத்தை வெகுசன மக்களிடம் ஏற்படுத்தியுள்ளன.

தூய தமிழ்நடையின் வீச்சினைவிட பேச்சுத்தமிழ் நடையின் வீச்சு என்பது பல நிலைகளில் கூடுதல் தன்மை பெற்றுள்ளது. எடுத்துக்காட்டாக –

"இவ்னிக் காணுப்பய என்னைய அடிச்சுப்புட்டான்"

எனும் ஒரு தொடர் 'இவ்வளவு-காணும்-பையன் என்னை அடித்து விட்டான்' என்பதாகும். இவ்வளவு என்பது சிறு பையன் எனக்காட்ட வந்துள்ளது. என்னைவிட வயதில், வளர்த்தியில் மிகவும் சிறியவன் என்னை அடித்துவிட்டான் - எனப்பொருள் கொண்ட இத்தொடரில் என்னைவிடச் சாதியில், பொருளாதாரத்தில், செல்வாக்கில் வர்க்கத்தில், கூடுதலாக அச்சிறுவன் இருந்ததால் வயதிலும், வளர்த்தியிலும் மட்டுமே குறைந்திருந்த அவன் இன்னபிறவற்றில் கூடுதல் தகுதியைப் பெற்றிருப்பதாகச் சமூகம் கற்பித்திருப்பதால் மிகவும் சின்னப்பயலாக அவன் இருந்தும் என்னை அடித்து விட்டான் எனப்பொருள் இருக்கிறது.

நிறைய எழுதிப் பொருள் விளங்க வைக்கக் கூடிய ஒரு தொடரை அல்லது ஒரு சொல்லை பேச்சு வழக்கில் பரந்த அளவில், ஆழமான அளவில் இலகுவாக படக்கென சொல்பவருக்கும் கேட்பவருக்கும் இடையே இடைவெளிப்பாடு இன்றி இருவரும் அறிய ஏதுவாகிறது. புரிதல், பயன்பாடு உடனடியானதும், எளிமையானதும் ஆக உள்ளது. தூயதமிழ் எழுத்துமொழி என்பதில் அவரவர் வாசிப்பின் ஆழம் எனும் அளவிலேயே புரிதல் இடைவெளிப்பாட்டுடன் அமைகிறது என்பதனை இங்கு எண்ணிப்பார்த்தல் நலம். பேச்சுமொழியின் கூடுதல் சக்தி மொழிப் பயன்பாட்டில் கூடுதல் பயன்பாட்டினைத் தருகிறது என்று முடிவு செய்ய நேர்கிறது.

நீண்டகாலமாகத் தீண்டாமைக் கொள்கையினைக் கடைப்பிடித்து வந்த தமிழ்ப் பண்டிதர்களை மீறி நாம் ஏற்கெனவே கூறியதுபோல் வெகுசன ஊடகங்களின் வழியே குறிப்பாக திரைப்படம் வழியே சாதிவாரி மொழிநடை, வட்டார மொழி நடை என்றெல்லாம் எல்லை குறைக்கப்பட்டிருந்த பேச்சுமொழிநடை இன்று அனைத்துப் பகுதி மக்கள் மத்தியிலும் புரிதல் மற்றும் பழக்கம் எனும் நிலைகளில் உள்வாங்கப்பட்டுள்ளன.

*'சிங்கார ரூபனே'*
*'பிருந்தாவனமும் நந்தகுமாரனும்'*
*'பிரேமையினாலே'*

# தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி

கருப்பாயூரணி, மதுரை மாவட்டம்.

தமிழ்மணம் பரப்பி
தலைநிமிரச் செய்திடும்
'தமிழரசு' க்கு
எங்களுடைய
வாழ்த்துக்கள்!

கருப்பாயூரணி தொடக்க
வேளாண்மை கூட்டுறவு வங்கி
வேளாண் பெருமக்களுக்கு
பெரிதும் உதவி செய்து வருகிறது.

அன்புள்ள
இ. தங்கராஜ்
தலைவர்






-என்பதான சொற்பதங்களைத் திரைப்படத்திலிருந்து விரட்டியடிக்கச் செய்து பாமர மக்களின் சொற்பதங்களான

*'காடுவெளஞ்சென்ன மச்சான்*
*கையும் காலுந்தானே மிச்சம்'*
*'குட்டிஆடு தப்பி வந்தா குள்ளநரிக்குக்*
*கொண்டாட்டம்'*
*'மாடா ஒழச்சவன் மம்பட்டியாத் தேயுறான்!'*

என்பது போன்ற பேச்சு நடைமொழி பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் வருகையால் ஏற்பட்டது. வெகுசன மக்கள் மேடைகளில் பட்டி தொட்டியெங்கும் சென்று தம் சகோதரர்களின் பங்களிப்போடு பாடல் பாடி வசனம் பேசிக் கலை நிகழ்ச்சி செய்த பாவலர் வரதராசன் சகோதரர்களின் வருகையால் ஒப்பாரி, தாலாட்டு, தெம்மாங்கு போன்ற இசை வடிவங்களின் வழியேயும் திரைப்பாடல் மெட்டுக்கள் வழியேயும்

*'ஒத்தருவா தாறேன் நான்*
*ஒன்னப்புத்தட்டும் தாறேன்'*

*'போடா போடா பொக்கே*
*என்னுக் காட்டுக்குத் தெக்கே'*

-என்பதான சொல்லாட்சிகளும், பேச்சுமொழி நடைகளும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ளன. மக்கள் தமிழை மகிமைப்படுத்தியப் பெருமை திரைத்துறையில்; மேடைகளில் பட்டுக்கோட்டையார் மற்றும் பாவலர் சகோதரர்கள் ஆகியோருக்குக் கணிசமான பங்குண்டு.

வாரத்துக்கு ஒரு தடவை மட்டுமே குறிப்பாகக் கால்மணி நேரத்திற்கும் குறைவான நிகழ்ச்சிதான் கிராமியக்கலை எனும் தலைப்பில் தொலைக்காட்சியில் காட்டக் காண்கிறோம். தொலைக்காட்சியினர் காட்டும் நேரம் அதிகமாக்கப்படவேண்டும். நறுக்குத் தெறிச்சாப்பிலே சொல்லனும்னா மண்வாசனை கொண்ட கிராமியக் கலாச்சாரக் கூறுகள் இல்லைனா பெரிசாச் சொல்லுற கலை இலக்கியம் செத்துப்போய் புதைந்துவிடும் என்பது மட்டும் உறுதி.

கிராமியக் கலாச்சாரக் கூறுகள், வட்டார மொழி நடை, பாத்திரங்களின் குணநலன்கள் அல்லது சித்திரிப்பு முறைமை, கதை கூற்று பாணி(narrative) உவமை, உருவகம் போன்றவற்றைப் பயன்படுத்தும் முறைமை, சொலவடை, ஒவகதை (உபகதை) போன்ற கூறுகள் வழியே வெகுசன ஊடகங்களில் குறிப்பாகப் படைப்புக்களில் பயன்படுத்தி இன்றைய தமிழ் பாய்ச்சல் வேகத்தில் வளர்ச்சி பெற்று வருகிறது. கிராமியக்கலை இலக்கிய இயக்கங்கள் இங்கு ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டு ஒரணியாகும் போது தமிழ் அறிவியல் யுகத்தில் பன்முக வளர்ச்சி பெறும், அப்போது தமிழ்ப்பண்டிதர்கள் கைகளிலிருந்து சாமான்யப்பட்ட மக்களிடம் மொழி தட்டிப்பறிக்கப்படும்.

கிராமியக்கலாச்சாரத் தாக்கம் பெற்றே நமது சங்க இலக்கியம் முதல் நவீன கலை இலக்கியங்கள் வரை உருப்பெற்றுள்ளன. இன்றும் இந்நிலையே தொடர்கிறது. கிராமியக் கலாச்சாரத் தாக்கம் இல்லாது ஒரு படைப்பு கலை இலக்கியத்துறையில் இல்லை. இருக்க முடியாது. கிராமியக்கலாச்சாரம் இல்லை எனில் கலை இலக்கியப்படைப்புக்கள் செத்துவிட்டன என்றே முடிவு கொள்ளலாம்.








# சிப்பாய் சின்னத்தம்பி



சாமகோடாங்கி சங்கரலிங்கம்

சிப்பாய் சிங்காரம் புதுவீடு கட்டியிருந்தான். வீடு சின்ன அரண்மனை போல் இருந்தது. வீட்டின் உள்ளும் புறமும் பல வண்ணங்களில் கண்ணைப் பறித்தது.

புதுவீட்டில் குடிபுகும் விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தான் சிங்காரம். அரண்மனையிலிருந்து தளபதியும் முக்கியப் பிரமுகர்களும் வந்திருந்தனர்.

விருந்து தடபுடலாக நடந்தது. அரண்மனை விருந்துபோல் இருப்பதாக எல்லோரும் சிங்காரத்தைப் பாராட்டினார்கள்.

சிங்காரம், அவன் பிள்ளைகள் அனைவரும் பட்டாடைகள் அணிந்து பகட்டாகக் காட்சியளித்தனர். சிங்காரத்தின் மனைவி ராஜாத்தி அங்குமிங்குமாக ஓடி ஓடி வந்தவர்களை உபசரித்தாள். அவளைப் பார்த்து "நகைக் கடையே நடந்து போகுது" என்றனர் சிலர்.

சிப்பாய் சின்னத்தம்பியின் மனைவி கமலம் ராஜாத்தியை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். இவள் கணவன் சின்னத்தம்பியும் சிங்காரமும் ஒரே நாளில்தான் அரண்மனையில் சிப்பாயாகச் சேர்ந்தனர்.

சிங்காரம் வீடு, வாசல், நிலம் நீச்சு என்று வாங்கிக் குவித்து விட்டான். ஆனால் சின்னத்தம்பி எதற்கும் லாயக்கில்லை. இன்னும் வாடகை வீட்டை விட்டால் வழியில்லை. ஒரு நல்ல சாப்பாடு இல்லை. நல்ல துணிமணிகள் இல்லை. தன் தாய் வீட்டில் தனக்குப் போட்ட நகைகள் கூட வட்டிக்கடையில்.

கமலம் இதுபற்றி தன் கணவனிடம் பேசாத நாளில்லை. எதைச் சொன்னாலும், "நேர்மை... புடலங்காய்" என்று பேசிக்கொண்டிருந்தான். கமலத்திற்குக் கண்களில் கண்ணீர் முட்டியது.

தன் புடவையில் இருந்த கிழிசல் தெரியாமல் அதை மறைத்துக் கட்டுவதற்குள் போதும்போதும் என்று ஆகிவிட்டது.

"அவனும் சிப்பாய்தான். எல்லாவற்றிற்கும் கொடுத்து வைத்திருக்கவேண்டும்..." என்று பக்கத்துவீட்டுப் பத்மா இவளைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினாள். இவளுக்கு எரியும் நெருப்பில் எண்ணெய் விட்டது போலிருந்தது.

நல்ல துணிமணி இல்லாததால் தன் குழந்தைகளைக்கூட தங்களுடன் அழைத்து வரவில்லை சின்னத்தம்பி இதைப்பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. எல்லோரிடமும் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தான். இவளுக்குக் கோபம் பற்றிக்கொண்டு வந்தது. அவனிடம் சொல்லிக்கொள்ளாமலேயே வீட்டிற்குத் திரும்பினாள் கமலம்.

சின்னதம்பி வீட்டிற்குத் திரும்பினான். கோபத்துடன் இருந்த கமலத்தைச் சமாதானப்படுத்தினான். கமலம் எதற்கும் சமாதானம் ஆகவில்லை. "சிங்காரம் நேர்மை இல்லாத வழியில் சம்பாதிக்கிறான். அது போன்ற சம்பாதனை நமக்கு வேண்டுமா?" என்று கேட்டான்.

"இப்படி நீங்கள் நியாயம் நேர்மை என்று பேசிக்கொண்டிருந்தால் நான் இப்படி கிழிந்த புடவையைத்தான் கட்டிக்கொண்டிருக்க வேண்டும்" என்றாள் கமலம்.

"நேர்மையான வழியில் சம்பாதித்த பொருள் நிலைத்து இருக்கும். நியாயமற்ற முறையில் வந்த பொருள் வந்தவழியே போய்விடும்" என்று எடுத்துக் கூறினான். சின்னத்தம்பி சொன்னது எதுவும் அவள் காதுகளில் ஏறவில்லை. செவிடன் காதில் ஊதிய சங்கு போல் ஆயிற்று.

"இதுதான் உங்கள் முடிவா?.."என்றாள் கமலம்.

"ஆமாம்..."என்று உறுதியாகச் சொன்னான் சின்னத்தம்பி. சின்னத்தம்பி சொன்னதைக்கேட்டு கமலத்திற்கு ஆத்திரமும் அழுகையும் பொத்துக்கொண்டு வந்தது.

அடுத்த நிமிடமே கமலம் கோபித்துக்கொண்டு தன் பெற்றோர் வீட்டிற்குக் கிளம்பினாள். சின்னத்தம்பி எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை.

"இனிமேல் என்னால் உங்களோடு குடும்பம் நடத்த முடியாது" என்று சொல்லிவிட்டுத் தனது அம்மா வீட்டிற்குச் சென்றுவிட்டாள்.

நாட்கள் கடந்து மாதங்களாயின. எப்படியும் கமலம் திரும்பி வந்து விடுவாள் என்று சின்னத்தம்பி நம்பினான்.

தமிழ்நாடு அரசு

'தமிழரசு'

- இரண்டினுக்கும்

எங்கள்

இதய வாழ்த்து!

அன்புடன்

பி.எஸ். ஜான்

தலைவர்



மதுரை - ராமநாதபுரம்

கேண்டில்ஸ் தயாரிப்பாளர்கள் சங்கம்

27, தேசிய விநாயகர் கோவில் தெரு,

கே. புதூர்,

மதுரை - 625 007.

ஆனால் அவள் வரவில்லை.

கமலத்திற்கு இன்னும் கோபம் தணியவில்லை. அதனால் திரும்பிப் போவது பற்றி அவள் யோசனையும் செய்யவில்லை. ஆயினும் குழந்தைகளை நினைத்து உருகினாள்.

சின்னத்தம்பி ஒருநாள் வந்து அவளை வீட்டிற்கு வருமாறு அழைத்தான். அப்படியும் அவள் அழைப்பிற்குச் செவி சாய்க்கவில்லை. அவன் ஏமாற்றத்தோடு திரும்பிச் சென்றான்.

ஒருநாள் அவள் வீட்டிற்கு அருகாமையில் இருந்த வீதியில் சிப்பாய்கள் நடந்து சென்றவண்ணம் இருந்தனர். அரண்மனைக்கு வெகுதூரத்தில் இருந்த இந்த ஊருக்குச் சிப்பாய்கள் என்ன காரணத்திற்காக வந்திருக்கிறார்கள் என்று அவளால் யூகிக்க முடியவில்லை.

சற்று நேரத்தில் யாரோ கதவைத் தட்டினார்கள். கதவைத் திறந்தாள். அங்கு, கையில் நீளமான ஈட்டிகளை ஏந்திய வண்ணம் ஐந்தாறு சிப்பாய்கள் நின்றிருந்தனர்.

"நீங்கள் எங்கள் தளபதிக்குத் தர வேண்டிய கடனைத் தராததால் உங்களை அழைத்து வரச் சொன்னார்" என்றான் ஒரு சிப்பாய்.

"நான் யாரிடமும் கடன் வாங்கவில்லை" என்றாள்



கமலம்.

"அதை அங்கு வந்து அவரிடம் சொல்லுங்கள்" என்றான் அந்த முரட்டுச்சிப்பாய்.

"நான் வரவில்லை என்றால் என்ன செய்வீர்கள்?"

"உங்களைக் கைது செய்து கொண்டுசெல்ல வேண்டிவரும்" என்றான் அவன்.

கமலத்தின் பெற்றோர்கள் சிப்பாய்களின் காலில் விழுந்து தன் மகளை விட்டுவிடுமாறு கெஞ்சினார்கள். கமலம் தன் பெற்றோர்களைச் சமாதானப்படுத்தினாள். தனக்கு எந்த ஆபத்தும் வராது. பயப்படவேண்டாம் என்று சொல்லிவிட்டு வீட்டினுள் சென்று அப்பாவின் குறுவாளை இடுப்பில் சொருகிக்கொண்டு புறப்பட்டாள்.

"வாருங்கள்" என்று சிப்பாய்களின் முன்னாள் நடந்தாள் கமலம். "நீங்கள் பல்லக்கில் வரலாம்" என்று சொன்னான் ஒரு சிப்பாய். கமலம் பல்லக்கில் ஏறிக்கொண்டாள்.

ஊருக்கு வெளியில் அலங்காரமாக அமைக்கப்பட்டிருந்த கூடாரத்திற்கு எதிரில் பல்லக்கை இறக்கினார்கள்.

அந்தப் பெரிய கூடாரத்தை அடுத்து நிறைய சின்னச் சின்னக் கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

கமலத்திற்கு மனசு 'திடுக்', 'திடுக்' என்று அடித்துக்கொண்டது. தனக்கு ஏதாவது அவமானம் நேரிட்டால் தன்னைத்தானே மாய்த்துக் கொள்ள குறுவாள் தயாராக இருக்கிறதா என்று ஒருமுறை இடுப்பைத் தடவிப் பார்த்தாள்.



"தளபதியின் மனங்கோணாமல் நடந்து கொண்டால் உங்களுக்கு நல்ல வாழ்க்கையும் வசதியும் கிடைக்கும்" என்றான் ஒருவன்.

அவனைத் திரும்பி ஒரு முறை முறைத்துவிட்டுத் திரும்பினாள். தன்னைச் சூழந்திருக்கும் ஆபத்து அவளுக்குத் தெளிவாகப் புரிந்தது.

கூடாரத்தின் உள்ளே நுழைந்தாள். சற்று தூரம் நடந்த அவள் திரும்பிப் பார்த்தாள். உடன் வந்த சிப்பாய்கள் ஒருவரையும் காணவில்லை.

சற்றுத்தொலைவில் தளபதி கம்பீரமாக அமர்ந்திருந்தான். அவன் முதுகுப்புறம் மட்டும்தான் தெரிந்தது.

இதுதான் சரியான சமயம். தனது இடுப்பில் இருந்த உடைவாளை உருவினாள்.

தளபதி இடி இடியெனச் சிரித்தான்.

"இந்தக் குறுவாளைக் கொண்டு தளபதியைக் கொல்ல முடியுமா?" மீண்டும் சிரித்தான்.

"பெண்ணே, என் கடனைக் கொடுத்துவிட்டு நீ செல்லலாம். ஆனால் என் கடனைக் கொடுக்காமல் நீ தப்பிக்க முடியாது..." என்றான்.

"நான் உனக்குக் கடன் கொடுக்க வேண்டுமா?...என்ன உளறுகிறாய்?"/ கோபமாகக் கேட்டாள் கமலம்.

"பெண்ணே, இந்த நாட்டின் தளபதியிடம் பேசுகிறாய் நீ, மரியாதையாகப் பேசு..." என்றான்.

"நீ யாராயிருந்தாலும் எனக்குக் கவலையில்லை" எனக் உரக்கக் கத்தியபடி தனது குறுவாளுடன் அவன் மீது பாய்ந்தாள்.

சட்டென்று அவள் கைகளை இறுக்கிப் பிடித்தான். முதன் முதலாகக் கூர்ந்து அவன் முகத்தைப்பார்த்தாள். எங்கோ பார்த்த முகம். அவள் திகைத்து நின்றாள்.

தளபதி உடைக்குள் தன் கணவன் சின்னத்தம்பி. அவளுக்குச் சந்தோஷம் உடம்பெல்லாம் பரவியது. அப்படி என்றால் தன் கணவன் தளபதி!

சிங்காரமும் முன்னாள் தளபதி ரகுபதியும் சேர்ந்து செய்த தேசத்துரோகத்தைத் தான் கண்டுபிடித்தது பற்றியும், தன்னை அரசன் தளபதியாக நியமித்தது பற்றியும் கூறினான். சிப்பாய் சிங்காரமும், தளபதி ரகுபதியும் குடும்பத்துடன் நாடுகடத்தப்பட்ட செய்தியையும் கூறினான்.

கமலம் என்ன சொல்வதென்று புரியாமல் தடுமாறினாள்.

"தவறான வழி சிங்காரத்திற்கு என்ன பரிசு கொடுத்தது? நேர்மையான வழி எனக்குக் கொடுத்த பரிசு என்ன? இப்போதாவது உனக்குப் புரிகிறதா?" என்று கேட்டான் சின்னத்தம்பி.

கமலம் தன்னை மன்னிக்குமாறு வேண்டினாள். அவள் கண்களில் சந்தோஷத்தில் கண்ணீர் வழிந்தது.

"அதோ பார்" என்றான் சின்னத்தம்பி. அவன் காட்டிய திசையில் அவள் குழந்தைகள் இரண்டும் அவளை நோக்கி "அம்மா" என்று ஓடி வந்தன.

*- "காற்று சிரித்தது" சிறுவர்களுக்கான மதிப்புணர்வுக் கதைகள் தொகுப்பிலிருந்து...*

*வெளியீடு : சிடா அறக்கட்டளை*
*98ஏ, கூட்டுறவு நகர், திண்டுக்கல்-624 004.*


# தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மையம்

நவஜீவன் மேன்ஷன், எஸ்.எஸ்.காலனி, மதுரை-10.
பதிவு எண்.145/92

**வாழ்த்து**

தங்கத் தமிழகத்தின் அங்கமெனத் திகழும்
சங்கத் தமிழ் வளர்த்த மதுரை மாநகரில்
மங்காப் புகழோடும் மத்திய மாநில
அரசுகளின் ஆதரவோடும் பொதுமக்களின்
குறைகளைத் தொண்டுள்ளம் கொண்டு தீர்த்துவரும்
தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மையம்!

சரித்திரம் படைத்துவரும் முதல்வர் கலைஞரின்
எண்ணப் பூங்காவில் இலக்கிய மணத்தோடு
பூத்துக் குலுங்கும் 'தமிழரசு'
சிறந்தோங்க வாழ்த்துகிறோம்.

இவண்
**எஸ். லோககுரு,**
தலைவர், தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மையம்,
உறுப்பினர், அரசு மாவட்ட நுகர்வோர் குழு,
உறுப்பினர், அரசு மாவட்ட மாசுக் கட்டுப்பாடு வாரியம்,
உறுப்பினர், இரயில்வே பயணிகள் ஆலோசனைக் குழு.




# நேசம்



எங்களோடு கூடவே
வாழ்ந்தது -
இதற்கு முன்னும் நெடுநாள்
இருந்திருக்கவேண்டும் -
முகட்டு வளையைத் தாண்டி
கீழே இறங்கி வந்து
ஒருநாளும் பார்த்ததில்லை -
உணவுக்காக அங்குமிங்கும்
அலையத் தெரியாத
சோம்பேறிப் பல்லி -
அது அழகானது -
ஒட்டடை அடிக்கும்போது
அம்மா எச்சரிக்கையாய்க்
காவல் காப்பாள்
குலதெய்வம் போல -
அப்பாவிற்கும் எனக்கும்
அடிக்கடி நடக்கும்
சண்டையைக் கண்டு
வருந்துவது போல
வால்மட்டும் துடியாய்த்துடிக்கும் -
தாத்தா செத்த அதிகாலை
ஊரேகூடி அழுதபோது
அதன் கண்களிலும்
கலக்கம் தெரிந்தது -
சொந்த வீட்டிற்குக்
குடிபோன போது எல்லோர்க்கும்
சற்றே அழுகை வந்தது:
"வருகிறவர்கள்
அதன்
நேசம் தெரிந்தவர்களாய்
இருக்கவேண்டும்"

-நா. விச்வநாதன்

# வேளாண்மைப் பொறியியல் பணி கூட்டுறவுச் சங்கம்

மேலூர், மதுரை மாவட்டம்.

வேளாண் பெருமக்கள், வேளாண் பொறியியல் பணி கூட்டுறவுச் சங்கத்தில் இணைந்து வளர்ச்சியடைய வேண்டுகிறோம்.

எங்களது மையத்தின் மூலம் அரசு சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு 4 இஞ்சு, 6 இஞ்சு அளவுள்ள ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், இரும்புக் கதவுகள், கிராதிகள், ரோலிங் சட்டர், வேளாண்மைக் கருவிகள், மரத் தளவாட சாமான்கள் மற்றும் இரும்பு சம்பந்தப்பட்ட அனைத்து வேலைகளும் தரமான முறையில் தயார் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'தமிழரசு' சிறக்க வாழ்த்துகிறோம்.



அன்புடன்

**அ.துரைராஜன்,**
தலைவர்.


# கோழை!

கவிஞர் கண்ணதாசன்

*"வேலையில்லாக் கொடுமையால் தற்கொலை"*
*"கடன் தொல்லை தாளாமல் தற்கொலை"*
*"தாளாத வறுமையால் ஒரு குடும்பமே தற்கொலை"*
*"பரீட்சையில் தேறாததால் மாணவன் தற்கொலை"*

- தற்கொலை! தற்கொலை! மனிதனின் கோழை மனசு சாவைச் செயற்கையாக்கிவிட்டது. நாளுக்குநாள் தற்கொலைகள் அதிகரிக்கின்றன. ஊர்ந்து செல்லும் வாழ்க்கையில் ஒரு தடை ஏற்பட்டாலும் மனம் நேரே தற்கொலையைத்தான் சந்திக்கிறது. சிலருக்கு 'இந்த வாழ்வுக்கு சாவு மேல்' என்ற பல்லவி ஈனக் குரலில் வெளிவருகிறது. தலை சுற்றுகிறது; மயக்கம் வருவது போல் தோன்றுகிறது. உடலும் வியர்க்கிறது. உணர்ச்சியின் பல்வேறு நாடி நரம்புகள் ஒய்ந்து போகின்றன. ஒரே சிந்தனை! தற்கொலை!

உலகத்திலேயே 'மகத்தான கோழை' எவனென்றால், தற்கொலை செய்து கொள்ள நினைப்பவன் தான்! அவன் உலகத்து வாழ்வுக்கே ஒருவழிதான் இருப்பதாக நினைக்கிறான். அதனால் அந்த வழி அடைபட்டுவிட்டது போல் தோன்றியதும் தற்கொலைக்குத் துணிகிறான். மறுநாளே உலகம் இருண்டிருப்பதாகவும் தான் வாழ்வதால் துயர்தான் அதிகமென்றும் முடிந்த முடிவாகத் தனக்குத்தானே ஒரு கணக்குப் போட்டுக் கொள்வதால்தான், மனிதனது கோழைத்தனம் தற்கொலை வரை வியாபிக்கிறது. 'அடுத்து வருவது அதுபோன்றே இருப்பதில்லை' என்பதை அவன் உணருவதில்லை.

சொல்லப் போனால் தொல்லைப்படுகிற ஒவ்வொருவனும் தான் மட்டுமே அந்தத் தொல்லையை அனுபவிப்பதாக நினைக்கிறான். அதனால்தான் 'இருந்தென்ன போயென்ன' மனோபாவம் ஏற்படுகிறது.

உலகம் தொல்லைகளின் கூடாரம்.

மனிதனுக்கு அதிலிருந்து தப்பவேண்டிய கடமை இருக்கிறது.

எல்லா மனிதனுக்கும் வரும். அது யாரையும் விடுவதில்லை. ஆரம்ப முதலே தொல்லைகள் ஏற்படாமல் ஒதுங்கிக் கொண்டு வாழ்க்கையைச் செப்பனிட்டுக் கொள்பவர்கள்தான் கவலையற்ற மனிதர்களாக வாழ்கிறார்கள். பின்பு வரும் தொல்லைகளைத் திட மனதுகொண்டு சமாளிக்க வேண்டும். முக்கியமாக, எதையும் சாதாரணமாகக் கருதும் மனப்பக்குவம் வேண்டும்.

'மனசுதான் காரணம்' என்பார்கள் கிராமங்களில்; எதற்குமே மனம்தான் காரணம். தொல்லைகளின் அளவையும் நிலையையும் மனம் தான் கணக்கிடுகிறது. சிறியவற்றைப் பெரிதாக்குவதே மனம் என்னும் பூதக்கண்ணாடிதான். மனதைத் திருப்பிப் பிடித்தால் பெரியன யாவும் சிறியனவாகத் தோன்றுகின்றன.

நாம் கொடுக்கும் முக்கியத்துவத்தில்தான் ஒன்றின் பரிமாணம் அடங்கிக் கிடக்கிறது. நாம் 'ஐயோ!' என்றால், ஐயோதான்! நாம் 'கிடக்கிறது!' என்றால் கிடக்கிறதுதான்! பஞ்சு பாரமாவதும், பாரம் பஞ்சாவதும் நெஞ்சத்தின் அளவில்தான். ஞானிகளைக் 'கடந்தவர்கள்' என்று சொல்வது இதனால்தான். அவர்கள் இதயங்கடந்தவர்கள். எண்ணங்கள், தங்களை அடக்கியாளவிடாமல், தாங்கள் எண்ணங்களை அடக்கியாள்பவர்கள்! (நான் சொல்வது உண்மை ஞானிகள்!)

மனக்குரங்கு மனிதனைப் பிய்த்துப் போடவிடக் கூடாது. தோல்வியில் அதிர்ச்சி ஏற்படக்கூடாது. தலை பாரமாகத் தோன்றும்படி சிந்திக்கக்கூடாது. சிந்தித்தால் நெஞ்சு வெடித்துவிடும் போல் தோன்றும் சில காரியங்களை வாழ்க்கைக் கோட்டிலிருந்து வெகு தூரத்திற்கு அப்புறப்படுத்திவிட வேண்டும்.

'போனால் மயிர்போச்சு, போ!' என்றானே இரட்டையரில் ஒருவன். அவனது துணிவு வேண்டும். முதல் தேதி காரியம், இரண்டாந்தேதிக் கடமையைத் தடைப் படுத்தும்படி விடக்கூடாது.

'சென்றதினி மீளாது' என்று முடிவு கட்டி, 'சென்றதையே சிந்தை செய்து கொன்றழிக்கும் குழியில் வீழ்ந்து' குமையாமல், இன்று புதிதாய்ப் பிறந்தோம் என எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு தின்று விளையாடி இன்புறுதல் வேண்டும்.

அச்சமும் பயங்கரமான எதிரி: அதுதான் தற்கொலையின் தாய். சாவைத் துச்சமாக மதிக்கும் துணிவு கொண்டால், வாழ்க்கை இனிக்கும்.

'காலா உனைச்சிறு புல்லென மிதிக்கிறேன், என் காலருகே வாடா! சற்றே மிதிக்கிறேன்!' என்றான் பாரதி: எல்லோரையும் தன் வசப்படுத்தி சாவினை காலால் மிதிக்கப் பார்க்கிறான். தன்னை அறிந்ததால் கவிஞனுக்குத் திமிர்! சாவு, அவனுக்குத் துச்சம்!

---

கவிஞர் கண்ணதாசன் பிறந்த நாள் 24.6.1997.
அதன் நினைவாக அவரெழுதிய இந்தக் கட்டுரை வெளியிடப்படுகிறது.

வந்தாரை வாழவைக்கும் தமிழகத்தில்
வர்த்தகங்களின் கேந்திரமான
ஈரோடு மாநகரில்

நான்காயிரம் சதுர அடி பரப்பளவில்
மிக பிரமாண்டமான

ஸ்ரீ வேலன்ஸ்
டிபார்ட்மெண்டல் ஸ்டோர்

உரிமையாளர் : தாமரை மெகா ஸ்டோர்ஸ் (பி) லிட்.
கால்நடை மருத்துவமனை ரோடு,
15, சென்ட்ரல் தியேட்டர் பில்டிங்,
ஈரோடு-1. தொலைபேசி : 252701, 257913

வீட்டு உபயோகப் பொருட்கள், மளிகை பொருட்கள் மற்றும்
கலை பொருட்கள் என எண்ணிலடங்கா உங்கள் தேவைக்கு
இன்றே வருகை தாருங்கள்!

தொல்லை அவனுக்குத் தூசு! 'ப்பூ! இதுதானே!' என்ற எக்காளம்! 'சனியனைத் தள்ளு!' என்ற அலட்சியம்! கால்கள் துடித்து நடக்கின்றன. நெஞ்சம் துள்ளுகிறது! முகத்திலே வெற்றியின் வெளிச்சம்; கூனிய உடலிலும் குறையாத அழகு! ஏன்? அவன் உலகத்தைப் பந்தாக நினைத்துவிட்டான். காலால் உதைக்கிறான். கையால் பிடித்து எறிகிறான்.

''பாரடா அந்தப் பாவி மகனை!' நேற்று முதல் முகத்தை 'உம்'மென்று வைத்துக் கொண்டிருக்கிறான். மடப்பயல்! முகஞ் சுருங்கினால் பிரச்சினைத் தீருமா? பட்டினி கிடப்பதால் மன பாரங் குறையுமா? டேய் ராசா! நிமிர்ந்து நடடா! ஏண்டா, 'நப் போல் வளைகிறாய்?" இப்படிப் பாரதி பேசுகிறான். அவன் முழுசாகச் சிரிக்கிறான். உண்மையில் அதுதான் சிரிப்பு. வேண்டாதவர்களை வரவேற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்போது மனிதன் சிரிக்கிறானே, அது சிரிப்பல்ல; பிணத்தின் கோணிய இதழிலே தோன்றும் 'சிரிப்பு மாதிரி!'



மனந்திறந்து பேசு; சிரி: பயப்படாதே!

'நான்!' அனுபவமும் அறிவுமில்லாதவர்களுக்கு இந்த வார்த்தை அகங்காரம். பாரதி போன்ற கவிஞர்களுக்கு, இது தன்னை உணர்த்தும் சொல் - எல்லோர்க்கும் இந்த வார்த்தை பயத்தைப் போக்கும்!

*'புவியனைத்தும் போற்றிட வான்புகழ்*
*படைத்துத்*
*தமிழ் மொழியைப் புகழில் ஏற்றும்*
*கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லை*
*என்னும்*
*வசை என்னால் கழிந்ததன்றே!'*

- என்றான் பாரதி 'கவியரசர் தமிழ்நாட்டுக்கு இல்லை என்றார்கள்; இதோ! நான் வந்துவிட்டேன்!' என்று மார் தட்டுகிறான்.

இது தலைக்கனமல்ல. அகங்காரமல்ல; தன்னம்பிக்கை - இதுவே நன்னம்பிக்கை!

நம்பிக்கையில் வாழ முடியும்; சாவு ஓடும் - தற்கொலை நினைவு வராது.

' தற்கொலை வரை துணியும் கோழைகள் தொலையட்டும். தினசரி சாகும் கோழைகள் நிறைய இருக்கிறார்கள். அவர்கள், பூபாளத்தில் முகாரியை இழைய விட்டுக்கொண்டே படுக்கையை விட்டு எழுகிறார்கள். அவர்கள் வாழ்வு பூராவும் முகாரியும், சகானாவும், நாதநாமக்கிரியையும் தான் பின்னணி இசை. எதிலும் பயம். எதிலும் ஐயம்! மனித நடமாட்டமே இல்லாத இடத்தில் ஓடிப்போய் வாழமாட்டோமா என்ற ஏக்கம். அடிவானத்துக்கு அப்பாலே சிந்தனை. பூனையைக் கண்டால் விலகி நடப்போர் புலியைக் கண்டால் என்ன ஆவார்கள்!

*'சிப்பாயைக் கண்டஞ்சுவார் - ஊர்ச்*
*சேவகன் வருதல்கண்டு பதை பதைப்பார்*
*அப்பால் எவனோ செல்வான் - அவன்*
*ஆடையைக் கண்டுபயந் தெழுந்து நிற்பார்!'*

- இவர்கள் ஏன் பிறந்தார்கள்? பிறந்த உயிரெலாம் அவர்கள் போலிருந்தால், வெற்றி எங்ஙனம் கிட்டும், உலகுக்கு?

*'மனதி லுறுதி வேண்டும்*
*வாக்கினிலே இனிமை வேண்டும்.'*

இதுவும் பாரதி சொன்னது!

அது வேண்டும்; இது வேண்டும்; ஆசைப்படு! அதை அடைய முயற்சி செய்! ஆசையை நீக்குவது பேதமை; அதனிலும் அதை அடையக் குறுக்கு வழி செல்வது பெரும் பேதமை - ஆசைப்படு! நேர்வழியில் அதைப் பெற்றுவிடு. கிடைக்கவில்லையேல் தளராதே! மீண்டும் ஏறு. முன்னேறு!

தளராதே! தளராதே! தளராதே!

அயோக்கியனெல்லாம், முதலாளியாக மாடிமேல் மாடி கட்டி மஞ்சத்திலிருந்து கொஞ்சிக் குலவுகிறான். நீ ஏன் நடுங்குகிறாய்? கால் கைகளை உதறி விட்டுக் கொண்டு நட!

பாரதி இதைத்தான் சொல்கிறான்.

புரட்சிக் கவிஞர் அதைத்தான் வலியுறுத்துகிறார்!

*'எடுத்த காரியம் யாவினும்*
*வெற்றி!'*
*எண்ணும் எண்ணங்கள் யாவும்*
*வெற்றி!'*

என எக்காளமிடும் நிலைக்கு வா!

உலகத்திலிருப்பவர்கள் எல்லாம் அசகாயசூரர்கள் மாதிரியும், நீ மட்டும் கையாலாகாதவன் மாதிரியும் ஏன் நினைத்துக் கொள்கிறாய்?

தவறே புரியாத மனிதர்கள்தான் உலகில் வாழ்வது போலவும், நீயே தவறு புரிந்துவிட்டதாகவும் ஏன் சஞ்சலப்படுகிறாய்?

*'தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை*
*அம்மா பெரிதென் றகமகிழ்க!*
*பின் தொடர்க! வலிமை பெறுக!'*

தற்கொலைக்கு முயன்ற கிளைவ் மடிந்தே போயிருந்தானென்றால் இந்தியக் கண்டத்தில் இருநூறு ஆண்டுகள் ஆங்கிலேயன் வாழ்ந்திருக்க முடியுமா? எண்ணிப்பார்!

இதுதான் இன்பப் பாதை அமைத்துத் தரும் வாழ்வு. சும்மா, இஞ்சி தின்ற குரங்கு மாதிரி முகஞ் சுளிப்பதில் பயனில்லை. ஒன்று நடந்துதான் தீருமென்னும் நிலையில் அதை நடக்கவிட்டு வேடிக்கைப் பார்ப்பதுதான் பக்குவப்பட்ட மனதுக்கு அடையாளம்.

மானம் - இது ஒன்றைத்தவிர, பாக்கி எதற்கும் பயப்படுவது பேதமை! தற்கொலை முழு மடைமை!

*- 'கவிஞர் கண்ணதாசன் கட்டுரைகள்' தொகுப்பிலிருந்து.*
*வெளியீடு : கண்ணதாசன் பதிப்பகம், 12, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை 17.*

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
மனம் வாடினார் வள்ளலார்!
குளிரால் வாடிய மயிலுக்குப்
போர்வை ஈந்தான் பேகன்!
முல்லைக்குத் தேர் ஈந்தான் பாரி!
இன்று -



கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் சேர்ந்து
பயனடைய வேண்டுகிறேன்.
எங்கள் சங்கத்தில் ரூ.9,300 வரை கடன் பெற்றவர்கள், வட்டியுடன்
அசலில் பாதி மட்டும் கட்டினால், மீதமுள்ள 50% கடன் தள்ளுபடி
செய்யப்படும்!

இச்சலுகை 30.6.97 வரை மட்டுமே சங்க உறுப்பினர்கள் இந்த அரிய
வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுகிறேன்.



அன்புள்ள,

அ. பழனிச்சாமி, எம்.ஏ.,பி.எல்.,
தலைவர்
மதுரை வடக்கு வட்ட கூட்டுறவு
வீட்டு வசதி சங்கம்
206, கே.கே. நகர்,
மதுரை-625 020.




# எங்கள் ஊர் பிரச்சினை

**பிரச்சினை:**

பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம் வேப்பந்தட்டை கிராமத்தில் அரசு கிளை நூலகம் 1964 முதல் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இப்போது நூலகம் ஒரு மாடியில் செயல்பட்டு வருகின்றது. இது ஓட்டுக் கட்டிடம். நூலகத்தின் கீழ் ஒரு ஓட்டல் உள்ளது. நூலகத்தில் அமர்ந்து படிக்க முடியவில்லை. மேல் வெப்பம் தாக்குகின்றது. நூலகத்தின் கீழ் ஒரே புகை மண்டலம். நூலகத்தில் 1 மணி நேரம் கூட அமர்ந்து படிக்க முடியவில்லை. நூலகத்தில் பணிபுரியும் நூலகர் நூலகத்திற்கு 10 செண்ட் காலிமனை நிலம் வேண்டும் என ஊராட்சி ஒன்றியத் தலைவர் மற்றும் ஒன்றியக் குழு தலைவர் அவர்களிடமும், ஊர் பொது மக்களிடமும் விண்ணப்பம் வைத்துள்ளார். ஆனால் இன்று வரை எந்தவித நடவடிக்கையும் அவர்கள் எடுக்கவில்லை. எங்கள் ஊரில் நூலகம் இருந்தும் எங்களால் முழுமையாகப் பயன்படுத்த முடியவில்லை. இந்த இடப் பிரச்சினையை அரசு தீர்த்து வைக்கமுடியுமா?

- வாசகர்கள் கூட்டம்
வேப்பந்தட்டை.

**தீர்வு:**

பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம், வேப்பந்தட்டை கிராமத்தில் உள்ள கிளை நூலகத்திற்குக் கட்டடம் கட்ட, காலிமனை பெற திருச்சிராப்பள்ளி மாவட்ட நூலக அலுவலரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- இரா.கண்ணன், எம்.ஏ.,பி.எட்.,
பொது நூலக இயக்குநர்
சென்னை.

**பிரச்சினை:**

பசும்பொன் மாவட்டம் நெற்குப்பை புதுஊரணிக் கரையில் நான்கு பிரிவுச்சாலை உள்ளது. இதை அடுத்து நல்லூரணிக் கரையில் உள்ள மெயின் ரோட்டில் மூன்று பிரிவுச்சாலை உள்ளது. இந்த இரு இடத்திலும் அடிக்கடி விபத்து நடப்பதால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனே கவனித்து வேகத்தடை போட ஏற்பாடு செய்யவேண்டும்.

கி. மனோகரன்
நெற்குப்பை.

**தீர்வு:**

இருசாலைகளிலும் போக்குவரத்து குறைவாக உள்ளதாலும் வாகனங்கள் மெதுவாகச் செல்வதாலும் பிரிவுச் சாலைகள் அருகில் பேருந்து நிறுத்தங்கள் இருப்பதாலும் காவல்துறை விசாரணையில் விபத்துக்கள் நடந்ததாகத் தெரியவில்லை. எனவே மனுதாரர் தெரிவித்துள்ள இடங்களில் வேகத் தடைகள் தேவையற்றது என அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

- திருமதி எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்
பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம்

**பிரச்சினை:**

நான் காரைக்குடி நகராட்சி அலுவலகத்தில், கடந்த 8 ஆண்டுகளுக்கு மேலாக வேலை பார்த்து வருகிறேன். மேலும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் என் பெறப்பெற்று அப்போதைய நகர்மன்றத் தலைவர் திரு.சிதம்பரம் அவர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இன்று வரை நிரந்தரம் செய்யாமல் உள்ளோம். மேலும் வேலைவாய்ப்பு அலுவலகம் வேறு வேலைக்கு என் அனுப்ப மறுக்கிறது. அதனால் நாங்கள் தமிழகத்தில் 104 நகராட்சி அலுவலகங்களிலும் உள்ள தினக்கூலி பணியாளர்களும், எங்களுடைய குடும்பமும்



இதையே நம்பி உள்ளோம். ஆகவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அரசு ஊழியர்களுக்கு எல்லா உதவியும் செய்துள்ளார். எங்களுடைய நியாயமான கோரிக்கை ஏற்று நிரந்தரப் பணியாளர்களாக ஆக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பெ. திருமூர்த்தி
காரைக்குடி.

**தீர்வு:**

தற்பொழுதுள்ள அரசாணையின்படி 1.10.1979-க்கு முன்னர் நியமனம் செய்யப்பட்ட தற்காலிக (NMR) பணியாளர்களை நிரந்தரம் செய்துகொள்ளலாம். ஆனால் அதற்குப் பின்னர் எடுத்துக்கொள்ளப்பட்ட தற்காலிக (NMR) பணியாளர்கள் குறித்து அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- சான்வத் ராம், இ.ஆ.ப.,
நகராட்சி நிர்வாக இயக்குநர்
சேப்பாக்கம், சென்னை.

**பிரச்சினை:**

**1. பென்சன் பட்டுவாடா**

அந்தந்தச் சமயங்களில் அனுமதிக்கப்படும் பென்சன்-பென்சனுடனான அலவன்சுகள் மிகவும் தாமதமாகப் பல மாதங்களுக்குப் பிறகு பட்டுவாடா செய்யப்படுகிறது. பென்சனர்கள் ஏரம் கட்டப்படுகிறார்கள். அரசு அறிக்கை வெளியானதும் சர்வீஸில் உள்ளவர்கட்குக் கிடைக்கும் போது மைய-மாநிலப் பென்சனர்களுக்கும் கிடைக்க வகை செய்யப்படவேண்டும்.

2. மைய-மாநில அரசுப் பணிகளில் மறுவேலை வாய்ப்பளிக்கப்பட்ட முன்னாள் படையினர்களின் பென்சனுடனான அகவிலைப்படி பிடித்தம் செய்யப்படுகிறது. மாநில அரசுப்பணிகளில் உள்ளவர்களின் பென்சனுடனான அகவிலைப் படியைப் பிடித்தம் செய்வதைத் தவிர்த்து பென்சனுடனான அகவிலைப்படி அங்கீகரிக்க வேண்டும்.

3. மாநில அரசுப்பணியில் மறுவேலை வாய்ப்பளிக்கப்பட்ட முன்னாள் படையினர்கள் அதே பணியிலிருந்து ரிட்டயரானபின் பென்சன் பெற்று வருகிறார்கள். இம்மாதிரியான பென்சனர்கட்கு மாநில அரசின் குடும்பப் பென்சன் கிடைக்க வகை செய்யவேண்டும். அதாவது இரண்டாவது சர்வீசுக்கும் குடும்பப் பென்சன் கிடைப்பதுதான் சரியான முறையாகும். இது தற்சமயம் நடைமுறையில் இல்லை.

**4. இரண்டாவது உலக மகா யுத்தத்தில் கலந்துகொண்டவர்களின் உதவித்தொகை**

இரண்டாவது உலக மகா யுத்தத்தில் பங்கு கொண்டவர்கட்குத் தற்சமயம் உதவித்தொகையாக வழங்கப்படும் ரூ.150. பாகுபாடின்றி எல்லாருக்கும் வழங்க வகை செய்யப்பட வேண்டும். தற்சமயம் 5



வருட சர்வீஸ் பூர்த்தியானவர்கட்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. யுத்தம் நடந்துகொண்டிருந்த காலத்தில் பணிபுரிந்த அனைவருக்குமே கிடைப்பதுதான் முறை, கர்நாடகத்தில் ரூ.500 வழங்கப்படுகிறது. இங்குக் கொடுக்கப்படுவது ரூ.150 தான், இந்தக் குறைந்த தொகையிலும் பாகுபாடு நீக்கப்பட வகை செய்யப்படவேண்டும்.

**WAR MEMORIAL**

இங்கு சங்கரன்கோவிலில் கிளைக்கருவூல அலுவலக முன்பு புறம்போக்கு இடத்தில், முதலாவது, இரண்டாவது உலக மகாயுத்தத்தில் மற்றும் தேசம் சுதந்திரம் கிடைத்த பின்பும் நடந்த யுத்தங்களில் உயிர்த்தியாகம் செய்த படையினர்களின் ஞாபகார்த்தமாக WAR MEMORIAL அமைக்க சங்கரன் கோவில் பஞ்சாயத்து யூனியனால் அனுமதிக்கப்பட்ட ஒரு செண்டு இடம் பலவருடங்களாகியும் இதுவரை தமிழக அரசு (ஒரு செண்டு) இடத்திற்கு பட்டா வழங்கவில்லை. அதிகாரிகள் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. ஒரு செண்டு இடம் ஒதுக்கீடு செய்யவும் அரசு செலவில் யுத்த ஞாபகச் சின்னம் அமைத்துத்தரவும் தமிழக அரசை இச்சங்கம் பணிவுடன் கேட்டுக்கொள்கிறது.

மேற்கண்ட கோரிக்கைகள் கடந்த பல வருடங்களாக நிலுவையில் உள்ளது. ஆகவே மேற்கண்டவாறுள்ள கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து ஆவன செய்யப் பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

- முன்னாள் இராணுவத்தினர் பென்சனர் சங்கம்
சங்கரன்கோவில்.

**தீர்வு:**

1. பணியில் இருப்பவர்களுக்கு அரசு ஆணை வெளியிடப்படும்போதே ஓய்வூதியம் பெறுவோருக்கும் வெளியிடப்படுகிறது. கருவூலம், அரசுடைமை யாக்கப்பட்ட வங்கி, பாதுகாப்புத்துறை ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், அஞ்சல் அலுவலகம், சம்பளக் கணக்கு அலுவலகம் மூலமாக ஓரளவு தாமதமின்றிப் பட்டுவாடா செய்யப்படுகிறது.

2. புதுடில்லி கேந்திரிய சைனிக் போர்டு, பாதுகாப்புத்துறை அமைச்சகக் கடித எண்.2(2) பென்சன் கே.எஸ்.பி.எ நாள் 26.7.96 நாளிட்ட கடிதத்துடன் பெறப்பட்ட சுப்ரீம் கோர்ட் தீர்ப்பாணை பகுதியில், மைய மாநில அரசுப்பணிகளில் மறுவேலை வாய்ப்பளிக்கப்பட்ட முன்னாள் படைவீரர்களின் பென்சனுடனான அகவிலைப்படி பிடித்தம் செய்வது சரியானதே எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.



3. முன்னாள் படைவீரர் நலத்துறை பொறுப்பு வகித்த மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 28.9.95 அன்று நடைபெற்ற தமிழ்நாடு முப்படை வீரர் வாரியக் கூட்டத்தில் இப்பொருள் தொடர்பாக மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதற்கிணங்க முன்னாள் படைவீரர்கள் பணியாற்றிய இராணுவப்பணிக் காலத்திற்கும், மறுவேலை வாய்ப்பில் பணியாற்றிய காலத்திற்கும் தனித்தனியே இரண்டு குடும்ப ஓய்வூதியங்கள் முன்னாள் படைவீரர்களின் விதவையர்க்கு வழங்க மத்திய அரசின் அனுமதி பெற புதுடில்லி மத்திய முப்படை வீரர் வாரிய இயக்குநர் அவர்களுக்கு இவ்வலுவலக கடித எண்.[illegible], நாள்:27.3.97 மூலமாக உரிய கருத்துரு அனுப்பப் பட்டுள்ளது.

4. தமிழ்நாடு முழுவதும் இரண்டாம் உலகப்போரில் பணியாற்றிய ஓய்வில் சென்ற முன்னாள் படைவீரர் மற்றும் அவர்தம் விதவையர் மொத்தம் 23,372 பேர் உள்ளனர் என்று கணக்கெடுப்பு தெரிவிக்கிறது. இவர்களில் அநேகர் வறிய நிலையில் உள்ளதைக் கருத்தில் கொண்டு, இதர மாநிலங்களில் வழங்கப்படுவதைப் போன்று அவர்கட்டும் மாதந்தோறும் ரூ.300 வீதம் வழங்கும் பொருட்டு உரிய கருத்துரு அரசுக்கு இத்துறை மூலம் சமர்ப்பிக்கப் பட்டது. ஆனால் அரசு தனது கடித எண்.44152/ஏ/93-15 பொது (முன்னாள் படைவீரர்) துறை நாள்:11.1.95 மூலம் மேற்படி கருத்துரு நிதி நிலை காரணமாக உரிய காலத்தில் பரிசீலிக்கப்படும் எனத் தள்ளி வைக்கப்பட்டதாக (deferred for better times) தெரிவித்துள்ளார். ஆயினும், உலகப்போரில் குறைந்தது 5 ஆண்டுப் பணியாற்றி மறுவேலைவாய்ப்பு மூலம் ஓய்வூதியத் தகுதி பெறாத, தற்போது மாத வருமானம் ரூ.500க்கு குறைவாக உள்ள 5,906 பேருக்கு ரூ.1.13 கோடி செலவில் மாதம் ரூ.150 வீதம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கிட அரசு ஒப்புதல் அளித்து அது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சங்கரன் கோவில் போரில் உயிரிழந்த படைவீரர் ஒருவர் மட்டுமே. எனவே அங்கு போர் நினைவுச் சின்னம் எழுப்பத் தேவையில்லை என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

- சி. [illegible]
[illegible]
முன்னாள் படைவீரர் நல இயக்ககம், [illegible].

**பிரச்சினை:**

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தாலுகா அரிமளம் ஊராட்சி ஒன்றியம் கே.புதுப்பட்டிக்கும், கீழாநிலை கோட்டைக்கும் மத்தியில் அறந்தாங்கி [illegible] செல்லும் [illegible] சாலையில் பாம்பாற்றின் குறுக்கே [illegible] ஆட்சியில் கட்டப்பட்ட மிக [illegible] பாலம் பழுதடைந்து மிக மோசமான [illegible] உள்ளது. தற்போது மேற்கண்ட பாலம் [illegible] வருடம் பழுது நீக்கம் செய்து [illegible], பஸ் போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

பாலம் மிகப் பழுதடைந்த நிலையில் [illegible], ஓட்டுநர்கள் மற்றும் பயணிகள் [illegible] பயணம் செய்ய வேண்டியுள்ளது. [illegible] அப்பாலத்தில் மாதம் ஒரு [illegible] வருகிறது. எனவே தமிழக அரசு [illegible] புதுக்கோட்டை அருகாமை [illegible] வெள்ளாறு பாலம் [illegible] செய்ய வேணுமாய்க் [illegible].

[illegible]
முன்னாள் [illegible] ஊராட்சி [illegible]
[illegible]
[illegible]
புதுக்கோட்டை [illegible]

**தீர்வு:**

கே.புதுப்பட்டி-கீழாநிலை கோட்டைக்கு இடைப்பட்ட சாலைப்பகுதியில் கி.மீ.30/10ல் (புதுப்பட்டி-நெடுங்குடி சாலை) அமைந்துள்ள பாலம் உடனடி சீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்தப் பாலம் நல்ல நிலைக்கு [illegible]

செய்வதற்கு 97-98 ஆண்டு "நபார்டு" மூன்றாம் கட்ட திட்டத்தில் மேம்பாடு செய்வதற்குப் பிரேரணை தலைமைப்பொறியாளர் (நெ.ஊ.ப) சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- ஜே.கிறிஸ்டோபால்,
கோட்டப்பொறியாளர் (நெசிப;
புதுக்கோட்டை.

**பிரச்சினை:**

திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டத்தில், நிலக்கோட்டை வட்டத்தில் மாணவ மாணவிகளுக்கு படிக்க ஒரு கல்லூரி கிடையாது. கடந்த முப்பது ஆண்டுக் காலமாக, பிற்பட்ட மக்கள் வாழும் இப்பகுதி மக்கள் வெளியூர்களுக்குச் சென்றுதான் கல்லூரி படிப்பைத் தொடர வேண்டியுள்ளது. வசதி இல்லாதவர்கள் வெளியூர் சென்று படிக்க இயலாததால் இங்கு கல்லூரி படித்தவர்கள் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. எங்கள் ஊரிலும் ஒரு கல்லூரி ஒன்று அமைத்து மாணவர்கள் படிக்க உதவும்படி கேட்டுக்கொள்கிறேன்.

- சேவை ந. சிவசங்கரன்
நிலக்கோட்டை, திண்டுக்கல்.

**தீர்வு:**

நிலக்கோட்டையில் கல்லூரி அமைக்கும் செயல்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

அரசின் நிதி நிலையின் காரணமாக, பொதுவாக, புதியதாக அரசு கலைக்கல்லூரிகள் (மகளிர் கல்லூரிகள் உள்பட) ஏதும் துவக்கப்படுவதில்லை. எனினும், அரசு நிதி உதவி பெறாத தனியார் கல்லூரிகள் சுயநிதி அடிப்படையில் துவங்க சில நிபந்தனைகளுடன் அரசு அனுமதிக்கின்றது. அவ்வாறான கருத்துரு ஏதும் அப்பகுதி கல்வி முகமையிடமிருந்து பெறப்படின் அது அரசு விதிகளின்படி பரிசீலிக்கப்பட்டு, அரசிற்குப் பரிந்துரைக்கப்படும் என்த் தெரிவித்துக் கொள்கிறேன்.

- க. இராமலிங்கம், இ.ஆ.ப.,
கல்லூரிக் கல்வி இயக்குநர்
சென்னை-6.

**பிரச்சினை:**

கோவை மாவட்டம், காங்கேயம் பேருந்து நிலையத்தில் திருச்சி-கோவை வண்டிகள் நிற்கின்றன. பயணிகள் விடுதிகளில் அருந்தி சற்று இளைப்பாறி, செல்கிறார்கள். அந்நேரங்களில் பயணிகளில் பேருந்து நிலையத்தின் உள்ளேயே சிறுநீர் கழித்து, அதனைச் சிறுநீர் நாற்றத்தின் மன்றமாக ஆக்கிவிடுகிறார்கள். பயணிகளைத் தூரத்தே சென்று சிறுநீர் கழிக்கும்படி நினைவூட்ட (மிரட்ட) ஓர் ஆளை இரவும் பகலுமாகப் போட்டிருந்தனர். இந்நாட்களில் அவ்வாளையும் காணோம். எனவே காங்கேயம் பேருந்துநிலையம் பயணிகளின் சிறுநீற்று வெள்ளத்தில் மிதந்து, அங்குச் செல்வோர்களின் மூக்கைத் துளைத்துக் கொண்டிருக்கிறது. இதனால் பலநோய்கள் பயணிகளிடமும், நாட்டின் பலவிடங்களிலும் பரவ வாய்ப்புண்டு. காங்கேயம் பேரூராட்சி ஓர் சிறிய இலவச சிறுநீர் கழிப்பகத்தைப் பேருந்து நிலையத்தில் கட்டிவைத்தால், அங்கு ஏற்பட்டு வரும் சுகாதார பாதகத்தை தடுத்து நிறுத்த முடியும். ஆவன செய்ய வேண்டுகிறேன்.'

- ச.இ.அருள்சாமி
நல்ல... ன் கிறித்துவக் கல்லூரி
மைலேறி-பாளையம்
கோயமுத்தூர்.



**தீர்வு:**

காங்கேயம் பேரூராட்சியின் பேருந்து நிலையத்தில் கட்டண நவீன கழிப்பிடம் தண்ணீர் வசதியுடன் ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கடன் பெற்று அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் நவீன கழிப்பறையைப் பயன்படுத்தாமல் திறந்தவெளி இடங்களில் இரவு நேரங்களில் சிறுநீர் கழிக்கப் பயன்படுத்திவிடுகிறார்கள்.

பொதுமக்களின் நலன்கருதி பேருந்து நிலையத்தில் ஒரு சிறுநீர் கழிப்பிடம் அமைக்க தொகை ரூ.30,000க்கு மதிப்பீடு பெறப்பட்டு பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டி அனுப்பப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு விரைவில் இலவச சிறுநீர் கழிப்பிடம் அமைக்கப்படவுள்ளது என்ற விவரத்தையும் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

க. குமாரசாமி
செயல் அலுவலர்
காங்கேயம் (தேர்வுநிலை பேரூராட்சி).




# பூம்புகார் துணியகம்

LEADING SHOP
LATEST VARIETIES

## POOMPUKAR TEXTILE

55, Car Street,
Thiruvannamalai.
☎: 22520

## SHABNAM READYMADE

55, Car Street,
Thiruvannamalai.
*Upstairs* : Best Ready Made Show Room



*'தொகுதிக்கு ஒரு நவீன கிராமம்' என்ற அடிப்படையில், தமிழ்நாடு அரசால் துவக்கப்பட்டுள்ளதே 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்'. இணையற்ற இத்திட்டத் தினுடைய நோக்கம் . சமுதாயத்தில் உள்ள எல்லாப் பிரிவினர்களுக்கும் அடிப்படை வசதிகள் மற்றும், அடிப்படை கட்டுமான வசதிகள் ஆகியவற்றைப் பல்வேறு திட்டங்களில் இருந்து ஒருங்கிணைத்து, தேர்வு செய்யப்பட்ட குக்கிராமங்களில் செயல்படுத்தி, ஒவ்வொரு கிராமமும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குமாறு அமைத்திட வேண்டும் என்பதேயாகும்.*

## தொகுதிக்கு ஒரு நவீன கிராமம்

# 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்'

தொகுதிக்கு ஒரு நவீன கிராமத்தை உருவாக்கும் 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் - முதன்முதலாக - வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் உள்ள, இராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த பொன்னை கிராமத்தில், தொடங்கி வைக்கப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 26.6.97 அன்று துவக்கிவைத்த இத்திட்டத்திற்கான சீர்மிகு விழாவில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. டி.வி.ச. டேவிதார் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

இராணிப்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.காந்தி, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஏ.எம்.வேலு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் - ஓராண்டு செயல் திட்டம்' என்ற கையேடு ஒன்றை வெளியிட்டு முதல்வர் கலைஞர் அவர்களிடம் வழங்கிவிட்டு, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் தலைமையுரை ஆற்றினார்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு நா. வீராசாமி ஆகியோர் முன்னிலை உரைக்குப் பின், மாண்புமிகு மத்திய அரசின் தொழில்துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' பற்றி சிறப்புரையாற்றினார்.

### முதல்வர் பேருரை

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு உட்பட்ட பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டித் துவக்கி வைத்து, 1047 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் விழாப் பேருரையாற்றினார்.

கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களிடையே அவர் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு:

இந்தியாவிலேயே முதல் தடவையாக ஒரு புதிய திட்டத்தை தமிழகத்திலே 'அண்ணா மறுமலர்ச்சி திட்ட கிராமம்' என்ற பெயரால் இன்று நாம் தொடங்குகிறோம்.

இது பொன்னையில் தொடங்கப்படுகிறது என்றாலும், இதைச் சுற்றியுள்ள 22 குக்கிராமங்களும் பயன்படுகிற வகையில் தொடங்கப்படுகிற திட்டமாகும். '22 குக்கிராமங்கள் குழந்தைகளைப் போலவும், அந்தக் குழந்தைகளுக்கெல்லாம் பொன்னை அன்னையைப் போலவும் விளங்குவதை நான் அறிவேன், நீங்களும் அறிவீர்கள். அந்த அன்னை ஆரோக்கியமான உணவை உண்டால் அந்தத் தாய்ப்பாலின் மூலம் குழந்தைகளும் வலிவு பெறும் என்பதற்கு ஒப்ப, பொன்னையில் இந்தத் திட்டத்தைத் தொடங்கிவைத்து இதைச் சுற்றியிருக்கிற இருபத்தி இரண்டு குக்கிராமங்களும் பயன்பெறும் வகையில், அங்கே வாழ்கிற மக்கள் அடிப்படை வசதிகள் அனைத்தையும் முழுமையாகப் பெறும் வகையில், இந்த கிராமப் பகுதியை எல்லா வசதிகளும் நிறைந்த ஒரு பகுதியாக உருவாக்குகின்ற இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டிருக்கின்றது.



குடிநீர், நல்ல தெரு, இணைப்புச் சாலை, விளக்கு வசதி, சுகாதார மருத்துவ வசதி ஆகிய இத்தனை அடிப்படை வசதிகளையும் ஒன்றுவிடாமல், ஒன்றிரண்டு விட்டுப் போயிருந்தால் அதையும் செய்து முடிக்கின்ற வகையில் இந்தத் திட்டம் பயன்தர வேண்டும் என்பது தான் என்னுடைய ஆசை.

அதனால்தான் நிதிநிலை அறிக்கையில்-ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருந்த வாக்குறுதிகளில் ஒன்றான ஒரு தொகுதிக்கு ஒரு கிராமத்தைத் தத்தெடுத்துக் கொண்டு, அதை நவீன மயமாக்கி, அந்தத் திட்டத்தை "அண்ணா மறுமலர்ச்சி` கிராமத்திட்டம்" என்ற நிலைமையிலே உருவாக்குவது என்பதைத் தமிழகத்திலே முதன்முதலாக - இந்தியத் திருநாட்டிலேயே முதன்முதலாகத் தொடங்கி வைக்கும் வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன்.

### இந்தியாவின் முதுகெலும்பு

நாங்களெல்லாம் கிராமத்திலே பிறந்தவர்கள்தான். கிராம மக்களுடைய வாழ்வு வளமாக இருந்தால்தான் நகரங்கள் வாழமுடியும். கிராமங்கள்தான் இந்தியா வினுடைய முதுகெலும்பு. அந்த முதுகெலும்பு வளைந்தால், ஒடிந்தால் எப்படி மனிதன் நிமிர்ந்து நடக்கமுடியாதோ எப்படி வாழவே முடியாதோ, அப்படிப்பட்ட நிலை நாட்டிற்கு ஏற்பட்டுவிடும். எனவேதான் அந்த முதுகெலும்பு வலுவாக இருக்கவேண்டும்- வளமாக இருக்கவேண்டும், ஆரோக்கியமாக இருக்கவேண்டும்-என்ற அந்த அடிப்படையில்தான் இந்தத் திட்டத்தை நாங்கள் தொடங்கியிருக்கிறோம்.

ஒரு மரத்தை எடுத்துக் கொண்டால்கூட-அந்த மரமோ, செடியோ, கொடியோ அது வளர்வதாக இருந்தால், வேரில் தண்ணீர் ஊற்றவேண்டும். வேரில் ஊற்றுகின்ற தண்ணீர், அந்த வேர் மாத்திரம் அருந்துவதற்காக மட்டும் அல்ல; அந்த வேர் மாத்திரம் வளர்வதற்காக அல்ல. தண்ணீர் ஊற்ற, ஊற்ற, வேரும் வளர்ந்து அந்த வேர் வழியாக அந்தத் தண்ணீரின் சத்தும், நாம் இடுகின்ற உரத்தின் சத்தும், மரத்தின் அடிப்பாகத்திற்கும், கிளைகளுக்கும், கொப்புகளுக்கும், இலைகளுக்கும் செல்வதைப்போல-கிராமங்கள் என்கின்ற வேர்களுக்கு விடப்படுகின்ற தண்ணீராக, இடப்படுகிற உரமாக, எருவாகத்தான் கிராமப்புறங்களை முன்னேற்ற வேண்டும் என்ற அக்கறையோடு இந்த ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### கேள்விக்கு இடமில்லை

இன்றைக்கு இந்த பொன்னையையும், பொன்னையைச் சுற்றியுள்ள குக்கிராமங்களையும் சேர்த்து ஏறத்தாழ ஒரு கோடியே இருபத்தியொரு லட்ச ரூபாய்க்கான திட்டங்கள் தீட்டப்பட்டு, ஆரம்பமாக இருக்கின்றன.

ஏதோ அடிக்கல்லை நாட்டிவிட்டுப் போய்விடுவார்கள்; பிறகு இங்கே அந்தத் திட்டம் உருவாகுமா? உருவாகாதா? என்ற கேள்விக் குறிக்கு இடமேயில்லை. இன்று அடிக்கல்லை நாட்டிவிட்டுச் செல்கிற நான் சென்னை சென்றதும், வந்திருக்கிற அமைச்சர் களையெல்லாம் "அந்தத் திட்டங்கள் பொன்னையில் தொடங்கப்பட்டுவிட்டனவா?" என்று கேட்பேன். அமைச்சர்களிடமிருந்து பதில் வந்தாலும் கூட, நேரடியாகத் தொலைபேசி மூலமாக மாவட்ட ஆட்சித்தலைவரைத் தொடர்பு கொள்வேன். "அந்த அடிக்கல் நாட்டப்பட்ட திட்டங்கள் என்ன ஆயிற்று? அடிக்கல் அடிக்கல்லாக இருக்கிறதா? திட்டங்கள் ஆரம்பமாகி விட்டதா?" என்று அப்படி நேரடியாகக் கேட்கக் கூடிய முதலமைச்சரைத்தான் நீங்கள் இன்று பெற்றிருக்கிறீர்கள்.

இதைத்தவிர, ஆயிரத்து நாற்பத்து ஏழு பேர் பயனாளிகளாக அரசின் நல்வாழ்வுத் திட்டங்கள் பலவற்றை இன்றைக்குப் பெறுகின்றார்கள். அடையாளமாக ஒரு இருபத்தைந்து பேருக்கு நான் அதை வழங்கியிருக்கிறேன்.

தொட்டில் முதல் இடுகாடு வரையில் தமிழகத்திலே பிறக்கின்ற ஒரு குழந்தை வாழ்ந்து கடைசியாக, கண்மூடிச் செல்கிற வரை-கல்லறைக்குச்செல்கிற வரை-கல்லறைக்குச் சென்றாலும்கூட அந்தக் குடும்பத்திற்கு வேறு ஆதரவு இல்லாவிட்டால், அந்தக் குடும்பத்திற்கும் நிதி உதவி செய்கிற ஒரே அரசாகத் தமிழக அரசு இருக்கிறது.

இவைகளெல்லாம் போதுமான நிம்மதியை எனக்கு அளிக்கவில்லை. இன்னும் மேலும் மேலும் உங்களுக்குச் செய்ய வேண்டும் என்ற ஆசை, ஆர்வம், அந்தத் துடிப்பு என் இதயத்தில் என்றும் இருக்கிறது.

### இந்தக் கண்கள்!

எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது-என் கண்ணால் கண்ட காட்சி. என்னுடைய தந்தை முத்துவேலர், என்னுடைய தாய் அஞ்சுகத்தம்மையார் இருவரும், என் வீட்டைச் சுற்றியிருக்கிற கோயில்

*நாங்களெல்லாம் கிராமங்களிலே பிறந்தவர்கள்தான்; எனவே, கிராம மக்களிடத்திலே எந்த அளவிற்கு அன்பும் பாசமும் கொண்டிருப்போம் என்பதை நீங்களெல்லாம் தெரிந்து கொள்ளலாம். கிராமங்களையெல்லாம் நகரங்களாக்க வேண்டும் என்பதுதான் எமது திட்டம். இன்றைக்கு நான் நகரவாசியாக இருந்தாலும்கூட எல்லோருக்கும் பொதுவானவன்.*



குத்தகை நிலத்தில் - வயல் வெளியில், உழுததை, நடவு நட்டதை, மற்ற விவசாயத் தொழிலாளர்களோடு சேர்ந்து அறுவடை செய்ததைக் கண்ட கண்கள்தான் என்னுடைய இந்தக் கண்கள்.

எனவேதான், என்னுடைய தந்தையும், தாயும் எப்படி உழைத்தார்களோ அப்படித்தான் தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புறத்து மக்கள் உழைக்கிறார்கள். அதனால்தான் நகர்ப்புறங்கள் வாழ்கின்றன. கிராமங்கள் உழைத்து நகரங்கள் வாழ்ந்து நாடும் வளம் பெறுவதற்கு அடிப்படை கிராமப்புற மக்கள்தான்.

எனவே, அந்த கிராமத்து மக்களுக்கு நன்றி காட்ட வேண்டியது-அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்வது என்னுடைய கடமை. இந்த ஆட்சியின் கடமை என்பதை உணர்ந்துதான் இன்றைக்கு இந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறோம்.

### ஒரு கோடியே 21 இலட்சம் ரூபாய்

முதலில் கூறியபடி, ஒரு கோடியே இருபத்தியொரு லட்சத்து எண்பதாயிரம் ரூபாய்க்கான திட்டங்கள் இங்கே நிறைவேற்றப்படவிருக்கின்றன. பொன்னை கிராமத்திற்குத் தடையில்லாமல் இருபத்து நான்கு மணி நேரமும் குடிநீர் வசதி கிடைத்திட ஆறு லட்சம் ரூபாய் செலவில் தனிக் குழாய்ப்பாதை அமைக்கப்பட உள்ளது. ஒட்டனேரி, எஸ்.என்.பாளையம் ஆகியவற்றிற்கு உள்ள குடிநீர்க் குழாய்களுக்குக் கூடுதல் இணைப்பு வழங்கிட பதினைந்து லட்சம் ரூபாய் செலவில் ஒரு கூடுதல் மேல்நிலை தண்ணீர்த்தொட்டி கட்டப்பட உள்ளது.

தற்போது உள்ள குடிநீர்க் குழாய்கள் மூன்று லட்சத்து அறுபதாயிரம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட உள்ளன. பி.என்.பாளையத்திற்கு மேல்நிலை குடிநீர்த் தொட்டியிலிருந்து எட்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் புதிய இணைப்பு வழங்கப்பட உள்ளது. எஸ்.என்.பாளையம், ஒட்டர் காலனி ஆகியவைகளுக்குப் புதிதாகக் குடிநீர் வசதி, ஐந்து லட்சத்து எண்பதாயிரம் ரூபாய் செலவில் செய்து தரப்பட இருக்கிறது. முத்தியால் பள்ளி பகுதிக்கு ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவில், குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட உள்ளது.

கொண்டாரெட்டிப் பள்ளி பகுதிக்கு ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் குடிநீர் வசதி செய்து தரப்படவிருக்கிறது. தேவகன்னிகாபுரம் பகுதிக்கு ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் குடிநீர் வசதி செய்து தரப்பட உள்ளது. பொன்னை கிராமத்தில் உள்ள உயர்நிலைப்பள்ளிக்கு மூன்று லட்சம் ரூபாய் செலவில் கட்டிடம் கட்டப்பட இருக்கிறது. அங்குள்ள தொடக்கப் பள்ளிக்கு மூன்று லட்ச ரூபாய் செலவில், கூடுதல் கட்டிட வசதி ஏற்படுத்தப்பட உள்ளது.

### பள்ளிகளுக்குக் குடிநீர்

பொன்னை கிராமத்தில் உள்ள மூன்று தொடக்கப் பள்ளிகளுக்கு ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் வசதி செய்து தரப்பட உள்ளது. பள்ளிக்கு ஒன்று வீதம் மூன்று பள்ளிகளுக்கும் முப்பதாயிரம் ரூபாய் செலவில் மூன்று கழிப்பிடங்கள் கட்டித்தரப்படவுள்ளன. மொத்தம் இருபத்து எட்டு லட்சத்து அறுபதாயிரம் ரூபாய் செலவில் புதிதாகக் கட்டப்படவிருக்கும் தொகுப்பு வீடுகள் அறுபது. இந்த அறுபது வீடுகளில் ஒட்டநேரியில் இருபது வீடுகளும், பி.என்.பாளையத்தில் இருபது வீடுகளும், பொன்னைபுதூரில் இருபது வீடுகளும் கட்டப்படும்.

**முதன் முதலாக 1976-ஆம் ஆண்டுக்கு முன்பு நான் முதல்வராக வந்தபோது, இந்தியாவிலேயே முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட திட்டம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவசமாக காங்கிரீட் வீடுகள் கட்டித்தரும் திட்டம்.**

**இதைப் பார்த்து, பிறகு மத்தியில் உள்ளவர்கள் இந்தத் திட்டத்தை இந்தியா முழுதும் ஆரம்பிக்க வேண்டும்**



> ‘தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்று சொல்லுவதுண்டு; ஆனால் இந்த ஆட்சியில் தட்டாமலே திறக்கப்படும்; கேட்காமலே கொடுக்கப்படும். இருந்தாலும்கூட உங்கள் மனதிலே இருப்பதை சொல்லுங்கள். அரசு அதிகாரிகள், பிரதிநிதிகள், சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊராட்சித் தலைவர்கள், உள்ளாட்சியில் உள்ள பிரதிநிதிகள் அனைவரும் அதைச் செய்யத் தயாராக இருக்கிறோம்!’

**என்று ஆரம்பித்து, அந்தத் திட்டத்திற்கு இந்திரா காந்தி அவர்கள் பெயரை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அது கருணாநிதி ஆரம்பித்த திட்டமானாலும் இன்றைக்கு இந்திராகாந்தி பெயரால் அந்தத் திட்டம் தமிழகத்திலும் இந்தியாவில் பல மாநிலங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.**

அந்தத் திட்டத்தின்படி ஒட்டனேரியில் இருபது வீடுகள் பி.என்.பாளையத்தில் இருபது வீடுகள், பொன்னப்புதூரில் இருபது வீடுகள், இஃதன்னியில் புதுப்பித்துக் கட்டப்பட உள்ள வீடுகள் நாற்பது. இந்த நாற்பது வீடுகளில் பொன்னை காலனியில் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்வதற்காக இருபது வீடுகள் குறவர் காலனியில் அவர்கள் வாழ இருபது வீடுகளும் புதுப்பித்துத்தரப்படும். மேலும் இருபது வீடுகள் பழுது பார்க்கப்பட இருக்கின்றன.

ஒட்டனேரியில் நியாய விலைக்கடைக்கு கட்டிடம் ஒரு லட்சத்து முப்பதாயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட உள்ளது. பேருந்து நிலையம் ஒன்று ஐந்து லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட உள்ளது.

### நியாயவிலைக் கடை

வடார்க்காடு அம்பேத்கர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்று புதிதாகத் தொடங்கப்படுகிறது. முழுநேர நியாய விலைக்கடை ஒன்று பொன்னை பெரிய கோயில் தெருவில் புதிதாகத் தொடங்கப்படுகிறது.

ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சர்வோதய சங்கத்தின் உதவியுடன் மகளிர் குழுவிற்கு நூல் நூற்கும் கருவிகள் வழங்கப்படுகின்றன. இது தவிர, ஒவ்வொரு வீட்டிற்கும் இரண்டு தென்னங்கன்றுகளும், இரண்டு பப்பாளி கன்றுகளும், ஒரு முருங்கைக் கன்றும், ஒரு கொய்யாக் கன்றும் வழங்கப்படுகின்றன. இதுபோல் மொத்தம் ஆயிரம் வீடுகளுக்கு இந்தக் கன்றுகள் வழங்கப் படுகின்றன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் கீழ் ஐம்பத்தியொரு பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட உள்ளன.

ட்ரைசம் திட்டத்தின் கீழ் இருபது பயனாளிகள் உதவி பெறுகிறார்கள். நிலமற்ற ஏழைகளுக்கு 2.45 ஏக்கர் நிலம் வழங்கப்படுகிறது. இவைகளெல்லாம் ஒரு முழுமையான, நவீனமயமான அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தை அமைப்பதற்கு-உருவாக்குவதற்கு இந்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளாகும்.

### இரத்த நாளங்கள்

இவைகளையெல்லாம் நிறைவேற்றினால்கூட, மேலும் சில தேவைகள் உங்களுக்கு இருக்கும். அந்தத் தேவைகளை உங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் நண்பர் தம்பி காந்தி வழியாகவோ, நாடாளுமன்ற உறுப்பினர் அருமை நண்பர் வேலு அவர்கள் மூலமாகவோ, இந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் பெருமக்கள் வீராசாமி, தம்பி துரைமுருகன் இவர்கள் மூலமாகவோ - இயலாவிட்டால் நேரடியாக என்னிடமோ அவைகளைச் சொல்லி அவைகளையெல்லாம் நீங்கள் நிறைவு செய்து கொள்ள முடியும் என்ற உறுதியையும் இந்த மாபெரும் விழாவில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கிராமங்கள் தான் இந்தியாவின் முதுகெலும்பு என்றார் உத்தமர் காந்தியடிகள். நான் சொல்கிறேன்-கிராமங்கள் தான் தமிழ்நாட்டின் இரத்த நாளங்கள். எனவே, அந்த ரத்தநாளங்கள் சுத்தமாக இருக்கவேண்டும். இரத்த நாளங்களில் இரத்த ஓட்டம் ஒழுங்காக இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் இதயம் வேலை செய்யும் தமிழகம் வாழும். அப்படி தமிழகத்தை வாழவைக்கும் அனைவரும் எனக்கு ஆதரவு தாருங்கள் - இந்த அரசுக்கு ஆதரவு தாருங்கள் என்று கேட்டு - அண்ணா மறுமலர்ச்சி திட்ட கிராமத்தைத் தொடங்கி வைக்கின்றேன்.”**

-இவ்வாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

விழா முடிவில்-மாவட்டக் கூடுதல் ஆட்சியர் திரு.ரவிதியாகு நன்றி கூறினார். □

ஆசிரியரும் வெளியிடுபவரும் : வெ. இறையன்பு, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 568926, 568927

## அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

# "சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்!"

வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் பொன்னை கிராமத்தில், 26.6.97இல், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொகுதிக்கு ஒரு நவீன கிராமம் காணும் 'அண்ணா மறுமலர்ச்சித் திட்ட' த்தைத் துவக்கிவைத்தார். அவ்விழாவில் பங்கேற்ற ஏனையோர் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து...

★ "அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம், இந்த ஓராண்டில்-இந்த பொன்னை கிராமத்தில் - உள்ளாட்சித்துறை, பொதுப்பணித்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, காவல்துறை, சமூக நலத்துறை, போக்குவரத்துத்துறை, மின்துறை போன்ற இருபத்திரண்டு துறைகள் முழுமூச்சோடு ஈடுபட்டு, பல நலத்திட்டங்களை நிறைவேற்றவிருக்கிறது. தமிழகத்திலேயே முதன்முதல் இதற்காக இக்கிராமத்தைத் தேர்ந்தெடுத்ததற்காக, மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்கிறேன்".

- திரு. ப.வி.ச.டேவிதார்
மாவட்ட ஆட்சித்தலைவர்

★ "இந்த அரசு மலர்ந்த பின்புதான், இந்த பொன்னை கிராமத்திற்கும் மற்ற கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகளே போடப்பட்டன. வேறுயாருமே இந்தக் கிராமத்தைத் திரும்பிப் பார்த்ததில்லை; இத்திட்டம் நிறைவேற்றப்பட இது மிகவும் பொருத்தமான கிராமம் - இங்கே இத்திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் - பொன்னை கிராமத்தை மட்டுமல்ல; என்னுடைய இந்தத் தொகுதியையே நவீனமயமாக்கிவிடும் தமிழக அரசு என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு!"

- திரு. ஆர்.காந்தி, எம்.எல்.ஏ.,

★ "தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதிகளில், எங்களுடைய தொகுதியில் உள்ள பொன்னை கிராமத்தைத் தேர்ந்தெடுத்து 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை' துவக்கிவைக்கும் அரசுக்கு, இப்பகுதி மக்கள் சார்பிலும், எங்கள் கட்சி சார்பிலும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம், இதைச்சுற்றியுள்ள கிராமங்கள்-கிராம மக்களெல்லாம் பெரிதும் பலன் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கலாம்!"

- திரு. ஏ.எம்.வேலு எம்.பி.,

"மூன்று குடிநீர்த் தொட்டிகள் மட்டுமே இருந்த இந்தக் கிராமத்தில், மக்கள் நலன் கருதி பதின்மூன்று குடிநீர்த் தொட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில், இந்த நான்காண்டுகளில் குடிநீர் வசதியில்லாத கிராமமே இருக்கக்கூடாது என்று முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்; அதை முழுமூச்சோடு நின்று செயல்படுத்துவோம். இதேபோல் தமிழ்நாட்டில் இன்னும் 233 கிராமங்கள் இந்த "அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் பலன் பெறவிருக்கின்றன".

- திரு. கோ.சி.மணி
(உள்ளாட்சித்துறை அமைச்சர்)

"எந்த ஒரு திட்டமானாலும் அதன்பலன் கிராம மக்களுக்குப் போய்ச்சேர வேண்டும் என்று கருதுபவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். 'முடியாததையெல்லாம் முடியும்' என்று காட்டிவரும் அவர்மூலம்-அந்த அடிப்படையில் தீட்டப்பட்ட திட்டம்தான் 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்'. ஆந்திர மாநில எல்லையிலே உள்ள பொன்னை கிராமத்தில் 1972இல், ஆற்றுப்பாலம் கட்ட அடிக்கல் நாட்டியவர் நமது முதல்வர்தான். இதை எடுத்துக்காட்டுக் கிராமம் ஆக்க முன்வந்துள்ள நமது முதல்வர் அவர்கள்-விரைவில் இந்த மாநிலத்தையே மாதிரி மாநிலமாக ஆக்கிக் காட்டுவார்!"

- திரு. துரைமுருகன்
(பொதுப்பணித்துறை அமைச்சர்)

"இந்த வட்டார மக்களெல்லாம் நலம் பெறவேண்டி, மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் பலவற்றைச் செயல்படுத்த ஆணையிட்டிருக்கிறார் நமது முதல்வர் அவர்கள்; அதுமட்டுமல்ல-இன்னும் பல மக்கள் நலத்திட்டங்கள் மூலம் பொன்னை கிராமத்தைச் சுற்றிலுமுள்ள 22 கிராமங்கள் இந்த ஆண்டுக்குள்ளேயே எல்லா வகையிலும் வளர்ச்சி பெறவிருக்கின்றன. அதுதான் இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் அடிப்படை நோக்கம்".

-திரு. ஆர்க்காடு நா. வீராசாமி
(மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்)

"இந்தியாவிலேயே முதன்முதலாகக் குடிசை மாற்று வாரியத்தை அமைத்ததும், கைரிக்ஷாவை மாற்றி முதன்முதல் சைக்கிள் ரிக்ஷா வழங்கியதும், அரசுப் பணியில் இருப்போர் இறந்தால் அரசு மூலம் தரப்படும் தொகையை முதன்முதல் ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கியதும், ஆதிதிராவிடப் பெருமக்களுக்கு முதன்முதல் வீடு கட்டித்தந்ததும், முதன்முதல் பிச்சைக்காரர் மறுவாழ்வுத்திட்டத்தை அமல்படுத்தியதும், முதன்முதல் மனுநீதித்திட்டத்தைக் கொண்டுவந்ததும், முதல்முதல் சீரணித்திட்டத்தை அறிமுகப் படுத்தியதும் - நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள்தான். அதேபோல், இந்தியாவிலேயே முதன்முதலாக அண்ணா மறுமலர்ச்சித் திட்டமும் துவக்கி வைக்கப்படுகிறது; கிராமங்களின் நிலையை நகரங்களின் நிலைக்கு உயர்த்தவேண்டும் என்பதே இத்திட்டம். 'சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்' என்ற வகையில் இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படும்"

- திரு. முரசொலி மாறன்
(மத்திய தொழில்துறை அமைச்சர்)

(தொகுப்பு : பி.எல்.ஆர்.)



J.B.A & CO
T.V.MALAI

**Dealers in Broken Glasses**

**J.BASHEER AHAMED & CO.,**

M.E.JAMALUDEEN
MANAGING PARTNER
56-D Mogalpura Street,
Tiruvannamalai-606 601.
Ph.22450 - 22350 - 22556
Res.22791 Fax.04175-23350



◆
தூய
பட்டு

தூய
சரிகை
◆



◆
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.
◆




## இந்த இதழில்...


- சட்டப் பேரவை பவள விழா ... 2
- தலைவர்கள் பெயரில் அறக்கட்டளை ... 9
- புதிய குடும்ப அட்டை வழங்கல் ... 12
- மேதைகளின் வாழ்விலே ... 14
- மொழிவளர்ச்சி இன்றைய நிலையும் எதிர்காலத் தேவைகளும் ... 17
  - முனைவர் ம. இராசேந்திரன்
- கற்க கசடற ... 19
  - ம.ப. விசயகுமார், இ.ஆ.ப, இயக்குநர், சமூக நலத்துறை
- சுடுமண் சிலைகள் ... 21
  - சா. கந்தசாமி
- நதி ... ... 24
  - கவிஞர் எழில்வேந்தன்
- குதிரைச் சவாரி ... 25
  - ஜெயசிம்ஹன்
- குழந்தைத் தொழிலாளர்– எழுத்தாளர் முகாம் ... 28
- எங்கள் ஊர் பிரச்சினை ... 33
- கண்கள் (மருத்துவம்) ... 41
  - டாக்டர் பி. குமாரவேல்
  - டாக்டர் எஸ். கணேசன்
- ஆசிரியர் மடல் ... 48



**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2028

மலர் : 28 இதழ் : 2

ஜூலை 15 - 31, 1997

விலை ரூ.3


தமிழரசு
ஜூலை 16-31 1997 ரூ.3



## பேரவையும் கலைஞர் பெருமையும்

தமிழ்நாடு சட்டப்பேரவையில், அதிக காலம் உறுப்பினராக இருந்த பெருமை நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கே உண்டு.

1957 குளித்தலை

1962 தஞ்சாவூர்

1967 சைதாப்பேட்டை (சென்னை)

1971 மீண்டும் சைதாப்பேட்டை

1977 அண்ணாநகர் (சென்னை)

1980 மீண்டும் அண்ணாநகர்

1989 சென்னை துறைமுகம்

1991 மீண்டும் சென்னை துறைமுகம்

1996 சேப்பாக்கம் (சென்னை)

- எனப் போட்டியிட்ட 9 தொகுதிகளிலும் வெற்றிவாகை சூடிய தனிப் பெருமையாளர் முதல்வர் கலைஞர் அவர்கள்.

இவைதவிர - ஒருமுறை (1986) சட்டமன்ற மேலவையில் உறுப்பினராக இருந்த சிறப்பும் அவருக்கு உண்டு!

பவள விழாக் காணும் சட்டப் பேரவையில் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக 4வது முறையாகப் பொறுப்பேற்கும் தனிச் சிறப்பும் பெற்றவர் கலைஞர் அவர்கள் ஒருவரேயாவார்!







# சட்டமன்றப் பவள விழா பேரவை வைர விழா

தமிழ்நாடு சட்டமன்றப் பவள விழாவும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வைர விழாவும் சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

14.7.1997 அன்று நடைபெற்ற இவ்விழாவிற்கு, மேதகு தமிழக ஆளுநர் செல்வி எம். பாத்திமா பீவி அவர்கள் தலைமை தாங்கினார்.

சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. மன்மோகன் சிங் லிபெர்ஹன் துவக்கவுரை யாற்றியபின் முன்னாள் இந்நாள் மூத்த சபை உறுப்பினர் 1200 பேர்களையும் மேடைக்கு அழைத்து விருதுகள் வழங்கி, விழா மலரை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வெளியிட்டார். முதல் மலரை, முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் - சட்டப்பேரவை முன்னவர் பேராசிரியர் க. அன்பழகன், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன், கேரள மாநில முன்னாள் ஆளுநர் திரு. பா. இராமச்சந்திரன், மராத்திய மாநில முன்னாள் ஆளுநர் திரு. சி. சுப்பிரமணியம், முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

### முதல்வருக்குப் பொன்னாடை

இவ்விழாவில் 1957ஆம் ஆண்டிலிருந்து பேரவை உறுப்பினராக இருந்து வருகின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, மேதகு ஆளுநர் அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

"தனது அரசியல் எதிரிகளையும் வெற்றி கொள்ளும் அறிஞர் அண்ணாவின் பாதையில் நடைபோடுகிறார் தமிழக முதல்வர் கலைஞர்" என்று அப்போது பேசுகையில் அவர் தனிப்படக் குறிப்பிட்டார்.

### மூத்த உறுப்பினர்களுக்குச் சிறப்பு

7 முறை பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. க. அன்பழகன் , த.மா.கா. உறுப்பினர்கள் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், திரு. ஆண்டி அம்பலம், ஆறுமுறை பேரவை உறுப்பினர்களாக இருந்த திரு. பண்ருட்டி எஸ். இராமச்சந்திரன், திரு.எஸ். திருநாவுக்கரசு - 5 முறை சட்டப் பேரவை உறுப்பினர்களாக இருந்த திரு. ப.உ.சண்முகம், திரு. ஆர்க்காடு நா.வீராசாமி, திரு. வீரபாண்டி ஆறுமுகம், திரு. துரைமுருகன், திரு. ரகுமான்கான், திரு. அழகர்சாமி, திரு. அரங்கநாயகம், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்., இராமச்சந்திரன் ஆகியோருக்கெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்களே பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசு வழங்கினார்.

85 வயதுக்கு மேற்பட்ட சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்களான திரு. ஆர். வெங்கட்ராமன், திரு. சி. சுப்பிரமணியம், திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி, திரு. நல்லசாமி, திரு. டி. அருணாசலம், திருமதி ஹூர்தம்மாள் சைமன் ஆகியோரும் இந்த விழாவில் கவுரவிக்கப் பட்டார்கள்.

திருமதி ஹூர்தம்மாள் சைமன் அவர்கள், மேடைக்கு ஏறிவர முடியாத நிலையில் இருந்ததால் - மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களே மேடையினின்றும் கீழே இறங்கிவந்து அவருக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

### மேடை அமைப்பு

சட்டமன்றப் பவளவிழா, சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில்தான் நடைபெற்றது என்றாலும், இவ்விழாவில் ஒரு புதுமை செய்யப் பட்டிருந்தது.

அரசு தலைமைச் செயலகத்தின் முன்புறத் தோற்றம் போலவே, மேடை அலங்கரித்து அழகு படுத்தப் பட்டிருந்தது.

தேர்தல்கள் மூலம் சட்டம் இயற்றும் அமைப்பு ஒன்று தொடங்கப்பட்டு, 75 ஆண்டுகாலம் ஆகிறது; அதற்கான பவள விழாவும் தமிழகச் சட்டமன்றத்தின் பேரவை தொடங்கப்பட்டு அந்தப் பேரவையின் அறுபதாண்டுகள் நிறைவடையும் வைர விழாவும்தான் இவ்வாறு சிறப்புறக் கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், விழா நிறைவுச் சிறப்புரையாற்றினார்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் அவர்கள் வரவேற் புரையுடன் தொடங்கிய இவ்விழாவில் - மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் நன்றியுரையாற்றினார்.

அந்தப் பேரவையும், அமைச்சர் பெருமக்களும், மக்கள் பிரதிநிதிகளான சட்டமன்ற உறுப்பினர்களும், கூடும் இடம்தான் பேரவை மண்டபம் ஆகும். அந்த மண்டபத்தின் வரலாறு இங்கே தரப்படுகிறது:





பேரவை மண்டபம்

முதன்முதல் 1920இல் 92 உறுப்பினர்களும், பிறகு 1937இல் 215 பேரும், இப்போது 234 பேரும் உறுப்பினர்களாக உள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபம் மிகப் பழமை வாய்ந்ததும், வரலாற்றுச் சிறப்பு மிக்கதுமாகும்.

இந்தியாவிலுள்ள மிகப் பழமையான சட்ட மன்றங்களில் ஒன்றான இதற்கெனத் தனியான வரலாறு உண்டு.

தமிழகத்தின் சட்டமன்றம் 1861ஆம் ஆண்டு இந்தியன் கவுன்சில்ஸ் சட்டம் நிறைவேற்றப்பட்டதிலிருந்து அமைக்கப்பட்டதாகவே நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

1909ஆம் ஆண்டு இந்திய அரசின் சட்டப்படி, அன்றைய சென்னையின் மேதகு ஆளுநராக இருந்த சர். ஆர்தர் லாலி என்பவரது ஆணைப்படி, சட்டமன்றப் பேரவை மண்டபம் 1910 -11ல் கட்டப்பட்டது. இக்கட்டிடம், மேதகு லார்டு வில்லிங்டன் ஆப் ராட்டன் காலத்தில், 1919 இந்திய அரசுச் சட்டத்தின்படி மாற்றியமைக்கப்பட்ட சட்டமன்றத்திற்கு (Legislative Council) இட வசதியளிக்கும் பொருட்டு 1920ல் விரிவாக்கப்பட்டது.

1921ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 10ஆம் நாள் இளவரசர் கன்னாட் கோமகனால் இம்மண்டபம் திறந்துவைக்கப்பட்டது. இச்சட்டமன்ற முகப்பில் 20 கருப்புச் சலவைக் கல் தூண்கள் பொருத்தப்பட்டுள்ளன.

ஜோசப் சார்னாக் என்பவரது பெயராலேயே "சார்னாக்கைட்" என அழைக்கப்படும் பல்லாவரம் படிக வகையைச் சார்ந்த கருப்புச் சலவைக்கல் தூண்கள், கல்கத்தாவிலும், வில்லியம் கோட்டையிலும் இவரால் தேர்வு செய்யப்பட்டு - அதேபோல் 1732ஆம் ஆண்டில் இவற்றில் சிறந்த 32 தூண்களும் கோட்டை சதுக்கத்திலின்று (தற்போது அணிவகுப்புத் திடல்) கடற்கதவு வரை (தற்போது இரும்புக் கதவுகள் போடப்பட்டுள்ள முதன்மை வாயில்கள் வரை) சீர்வரிசைப்படி (காலனேட்) அமைக்கப்பட்டன.

1746ஆம் ஆண்டில் பிரெஞ்சுக்காரர்கள் சென்னையைக் கைப்பற்றினர். அப்போது இத்தூண்கள் அனைத்தும் பாண்டிச்சேரிக்குக் கொண்டு செல்லப்பட்டன. 1761ஆம் ஆண்டில் அத்தூண்கள் திரும்பச் சென்னைக்குக் கொண்டுவரப்பட்டு, மீண்டும் பழைய இடத்திலேயே பொருத்தப்பட்டன. அப்போது சென்னையின் ஆளுநராக இருந்த சர்.ஆர்தர் லாலி அவர்களது ஆணைப்படி 1910-11ல் கட்டிட மறு சீரமைப்பு பணியின்போது இவற்றில் 20-தூண்கள் சட்டமன்ற மண்டபத்தோடு இணைக்கப்பட்டு, தற்போதுள்ள கட்டட அமைப்பு உருவாக்கப்பட்டது.

1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்கீழ் 1937ல் இரு அவைகள் கொண்ட சட்டமன்ற முறை அமலாக்கப்பட்டது. அப்போதும்கூட சட்டமன்ற மேலவை 1939 ஆகஸ்ட் திங்கள் வரை இம் மண்டபத்திலேயே தொடர்ந்து நடைபெற்று வந்தது. சட்டமன்றப் பேரவை 1937ஆம் ஆண்டு முதன்முதலாகக் கூடிய நேர்வில் சேப்பாக்கத்திலுள்ள பல்கலைக் கழக ஆட்சிக் குழு மண்டபத்தில் செயல்பட்டு வந்தது.

பின்னர் 1939ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல், பேரவை அரசு தலைமைச் செயலகத்தில் இப்போதுள்ள மண்டபத்தில் செயல்பட்டது. 1952 மே திங்களில் சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள புதிய சட்டமன்றப் பேரவை மண்டபத்திற்கு மாற்றப்பட்டது. அதன்பின் கோட்டையிலுள்ள இம் மண்டபத்தில், சட்டமன்ற மேலவை செயல்பட்டு வந்தது. 1957ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலுக்குப் பின்னர் சட்டமன்றப் பேரவை, மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள இம்மண்டபத்தில் செயல்பட ஆரம்பித்தது.

முதல் தலைவர்

இச் சட்டமன்ற மண்டபத்திலுள்ள மர வேலைப்பாடுகளும் கருநிற வெண்ணிறச் சலவை கற்களில் செய்யப்பட்ட வேலைப்பாடுகளும் இதன் அழகை மேம்படுத்திக் காட்டுகின்றன.

1931ல் அமைக்கப்பட்ட சென்னை சட்டமன்ற முதல் தலைவராகிய மாண்புமிகு சி. இராஜகோபாலாச்சாரியார்



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பேரவைத் தலைவர்கள்

| வ.எண். | பெயர் | ஆண்டு | வ.எண். | பெயர் | காலம் |
|---|---|---|---|---|---|
| 1. | திரு. புலுசு சாம்பமூர்த்தி | 1937 | 9. | புலவர் கா. கோவிந்தன் | 1973 |
| 2. | திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை | 1946 | 10. | திரு. முனுஆதி | 1977 |
| 3. | திரு. என். கோபால மேனன் | 1955 | 11. | திரு. க. ராசாராம் | 1980 |
| 4. | டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் | 1957 | 12. | திரு. பி.எச். பாண்டியன் | 1985 |
| 5. | திரு. எஸ். செல்லபாண்டியன் | 1962 | 13. | டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்குடிமகன் | 1989 |
| 6. | திரு. சி.பா. ஆதித்தனார் | 1967 | 14. | சேடபட்டி திரு. முத்தையா | 1991 |
| 7. | புலவர் கா. கோவிந்தன் | 1969 | 15. | திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் | 1996 |
| 8. | திரு. கே.ஏ. மதியழகன் | 1971 | | | |

அவர்கள், 1924 -25ல் சட்டமன்ற மேலவைத் தலைவராகப் பதவி வகித்த மாண்புமிகு திவான் பகதூர் டி. சாமிக்கண்ணு ஆகியோரின் திருவுருவச் சிலைகளும் இருக்கின்றன. புகுமுக மண்டபத்தையொட்டியுள்ள தாழ்வாரத்தில் விக்டோரியா மகாராணி அரசில் பிரதமர்களாகப் பதவி வகித்த திருவாளர்கள் பெஞ்சமின் டிஸ்ரேலி (1804- 1881), வைகவுண்ட் பார்ஸ்டன் (1784-1865), வில்லியம் வரார்ட் கிளாட்ஸ்டன் (1809- 1868) லார்டு (மார்க்குவெஸ்) சாலிஸ்பெரி (1803- 1903) ஆகியோரின் திருவுருவப் படங்கள் உள்ளன.

திருவள்ளுவர், பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், காயிதே மில்லத், டாக்டர் அம்பேத்கர், மகாத்மா காந்தி, தந்தை பெரியார் ஈ.வெ.ரா. மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகியோரது முழு உருவ வண்ணப் படங்களும் இப்பேரவை மண்டபத்தை அலங்கரிக்கின்றன.

பேரவை மண்டபத்தின் மேல் விதானத்திலிருந்து தொன்மைக் காலச் சிறப்பை எடுத்துக் காட்டும் வகையில் அழகிய வேலைப்பாடுகள் மிக்க 'சாண்ட்லியர்' எனும் கண்ணாடிச் சர விளக்கு மத்தியப் பகுதியில் தொங்கவிடப்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கான பல்புகள் அதில் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த மின் விளக்கானது எப்போதும் எரியாது; சபாநாயகர் அல்லது துணைச் சபாநாயகர் - அதாவது சபையை நடத்தக் கூடியவர்கள் அவைக்குள் நுழைந்தால்தான் எரியும்.

பேரவைத் தலைவரின் இருக்கை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பொலிவுக்கு அணி செய்யும் "பேரவைத் தலைவரின் இருக்கை" இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் உள்ள பேரவைத் தலைவரின் இருக்கையின் வடிவமைப்புப் போன்றது.

இங்கிலாந்துப் பாராளுமன்ற அவைத் தலைவராக இருந்தவர் ஸ்பீக்கர் பிராண்ட். அவருடைய பேரனான லார்டு வெலிங்டன், சென்னை மாகாண கவர்னராக இருந்தார். அவரும், அவரது மனைவியாரும் சட்டமன்றப் பேரவைக்கு அளித்த அன்புப் பரிசே, பீடுமிக்க இந்த இருக்கையாகும். 1922ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அவ்வாறு பரிசளிக்கப்பட்ட அழகான கலை நுணுக்கம் மிகுந்த இருக்கைதான் "பேரவைத் தலைவரின் இருக்கை" ஆகும்.

அந்த இருக்கையும், அவை உறுப்பினர்கள் இருக்கைகளும் தேக்கு மரத்தால் ஆனவை.

## தமிழ்நாடு சட்டப்பேரவை வரலாற்றில்...

- ★ இந்திய சட்டமன்றங்களின் சட்டம் இயற்றப்பட்டது ........ 1861
- ★ முப்பதாண்டுகளின்பின், சில திருத்தங்களுடன் அச்சட்டம் புதுப்பிக்கப்பட்டது. அதன்படி, சென்னையில் அமைக்கப்பட்ட ஒரே சபையான சட்டமன்றம் (Legislative Council) கூடியது (புதன்கிழமை மாலை 3 மணி). செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் கூடிய இந்த முதல் கூட்டத்தில்தான் - முதலாவது வினா, வி.பாஷ்யம் ஐயங்கார் என்பாரின் சார்பில், சி. சங்கரன் நாயரால் எழுப்பப்பட்டது. ........ 17.1.1893
- ★ கவர்னரால், முதலாவது நிதிநிலை அறிக்கை (1893-94) சமர்ப்பிக்கப்பட்டது. ........ 3.5.1893
- ★ மின்டோ -மார்லி சீர்திருத்தப்படி, வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை நடைமுறைப்படுத்துவதாக இந்திய சட்டமன்றங்களின் சட்டம் கொண்டுவரப்பட்டது ........ 1909
- ★ மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தப்படி, மாநிலங்களில் இரட்டை ஆட்சிமுறை நடைமுறைப்படுத்தப்பட்டது. ........ 1919

* முதன்முதல், சென்னை மாகாணத்தில், பொதுத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் சென்னை மாகாணச் 'சட்டமன்றம்' அமைக்கப்பட்ட நாள். ............ ...17.12.1920
* சட்டமன்றத்தில், உறுப்பினர்கள் முதன்முதலாகத் துணைக் கேள்வி கேட்க ஒப்புதல் பெறப்பட்டது; வினா எழுப்பியோர் மட்டுமே அப்படிக் கேட்கலாம் என்று நிபந்தனை விதிக்கப்பட்டது ............ ...1921
* பெண்களுக்கும் வாக்குரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்ட நாள் ............ ...1.4.1921
* தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு, முதன் முதல் ஒரு பெண்மணி (டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி) உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது ............ ...1927
* இப்போது நடைமுறையில் உள்ள சட்டமன்ற ஆட்சிமுறை நடைமுறைப்படுத்தப் பட்டது ............ ...1933
* மாகாணங்களுக்கு உரிய தன்னாட்சி உரிமை வழங்கப்பட்டது (Provincial Legislature). அதன்படி ஈரவை -சட்டப்பேரவை (Assembly) சட்டமன்றம் (Council) உருவாக்கப்பட்டது. இந்தக் கவுன்சிலே பின்னர் மேல்சபை என்றாயிற்று. அதுவரை ஒரே சபைதான் என்ற நிலை இருந்துவந்த நிலை இவ்வாறு மாறியது ............ ...1935
* செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்டப்பேரவை மண்டபம் புதுப்பிக்கப்படவே, சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவை மண்டபத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை கூடிய நாள் ............ ...16.7.1937
* இந்திய சுதந்திரத்திற்கு முன்பு, தமிழகத்தின் பிரதமராக (Premier) இருந்த திரு. ராஜாஜி ஆட்சி கலைக்கப்பட்டு முதன்முதல் நீண்டகாலம் கவர்னர் (லார்டு எர்ஸ்கின்) ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது ............ ... 1939 - 46
* திரு. குமாரசாமி ராஜா அவர்கள் (காங்கிரஸ்) அரசாண்ட காலத்தில், அவர்மீது, ஆளும்கட்சி சார்பில் 14 குற்றச்சாட்டுகளோடு, திரு. பிரகாசம் அவர்கள் ஊழல் புகார் சுமத்தியது ............ ... 1952
* சட்டமன்றப் பேரவை, சிலகாலம் அரசினர் தோட்டத்தில் (தற்போதுள்ள கலைவாணர் அரங்கம் கட்டடத்தில்) நடைபெற்று வந்தது ............ ...1952
* 'தமிழ்நாடு' என்று நம் மாநிலத்தின் பெயரை மாற்றியமைக்கும் தீர்மானத்தின்மீது, மாண்புமிகு தமிழக முதலமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள் உரையாற்றிய நாள்: ............ ...18.7.1967
* உடல்நலக் குறைவு காரணமாக அமெரிக்க நாட்டில் சிகிச்சை பெற்றுத் திரும்பிய மாண்புமிகு முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள், முதன்முதல் கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற 'தமிழ்நாடு' பெயர் சூட்டு விழாகூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியது ............ ...1.12.1968
* இந்திய சுதந்திரதின வெள்ளி விழா ............ ...1972
* சுதந்திர இந்தியாவில், முதன்முதல் தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவராட்சி பிறப்பிக்கப்பட்டது ............ 31.1.1976 முதல் 30.6.1977 வரை
* அதன்பின், இரண்டாவது முறையாகத் தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிறப்பிக்கப்பட்டது ............ 17.2.1980 முதல் 9.6.1980 வரை
* சட்டமன்ற மேலவை கலைக்கப்பட்டது ............ ...1986
* சட்டப்பேரவை பொன்விழா ஆண்டு ............ ...1987
* அதற்கான வன்னமிகு விழா, சட்டப்பேரவை மண்டபத்திலேயே மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் கொண்டாடப்பட்டது. ............ ...1989
* தமிழ்நாட்டில் மூன்றாவது முறையாகக் குடியரசுத் தலைவர் ஆட்சி ............ 30.1.1988 முதல் 27.1.1989 வரை
* தமிழ்நாடு சட்டமன்றப் பவள விழா- தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வைர விழா, சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் சிறப்புறக் கொண்டாடப்பட்டது ............ 14.7.1997

சட்டமன்றப் பவளவிழாவில் மாண்புமிகு முதல்வர் ஆற்றிய உரை அடுத்த இதழில்...

- தொகுப்பு: 'சோழராஜா'



# வாசகர் இதயம்

சீட்டுறவையும், பேதமற்ற வாழ்வையும் வலியுறுத்தும் வகையில் வெளியிடப்பட்டிருந்த 'தமிழரசு' வண்ணமுகப்பு பிரமாதம்.

ச.தீபா
செங்கல்பட்டு

'தமிழரசு' ஒவ்வொரு இதழிலும் பல புதிய பகுதிகளைத் தருகிறீர்கள்; காட்சிக்கும், கருத்துக்கும் இனிய விருந்தாகத் திகழும் தமிழரசின் பணிக்கு எனது நன்றி. நன்றி!

ஜெ. சரவணன்
திருப்பத்தூர்.

'அன்பு கொள்வோம்' என்ற தலைப்பில் முதல்வர் கலைஞர் எழுதியதில் இருந்த அறிவுரையும், கருத்துரைகளும் அற்புதமாக இருந்தன.

ப. அருணாசல சண்முகம்
விரூர்.

மேதினத் 'தமிழரசில்' உழைப்பாளர் புகழ்பாடும் வகையில் இருந்த கட்டுரைகளும், கவிதைகளும், ஓவியங்களும் கருத்தைக் கவர்ந்தன.

புலவர் கு. கலியமூர்த்தி
மல்லசமுத்திரம்.

சுற்றுப்புறச் சுகாதாரம் குறித்து வெளியிட்டிருந்த கட்டுரை மிகமிகப் பயனுள்ளது.

எஸ். நாகராஜன்
மேலப்பாதி

'தமிழரசு' இதழுக்கு இதழ் மெருகு கூடுகிறது. நல்வாழ்த்துகள்!

பா. சந்திரசேகரன்
சென்னை63.

திருநீற்றுப் பச்சிலை பற்றிய மருத்துவக் கட்டுரையை டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ் அவர்கள் மிகவும் பயன்படும் விதத்தில் எழுதியிருந்தார்.

ஜி. ராஜா
நாமக்கல்

தங்களுடைய மருத்துவப் பகுதி கட்டுரை விஷயங்கள் மூலம் எங்கள் தாத்தா உடல்நிலை முன்னேற்றம் அடைந்து வருகிறது. தாத்தாவின் சார்பில் நன்றி.

தே. மந்திரி
பொள்ளாச்சி

சாதி வேறுபாடுகளைச் சாடும் கவிதையடிகள் தொகுப்பு அருமை.

ப.மு. பாண்டியன்
கரப்பாடி.

துறைதோறும் தொழிலாளர் நலன் பற்றிய கட்டுரை, தொழிலாளர் நலனில் அரசு கொண்டுள்ள நாட்டத்தைக் காட்டியது. வனத்துறையில் உள்ள தினக்கூலித் தொழிலாளர்களையும் கவனித்தால் நல்லது.

கி. ராமதாஸ்
சென்னை23

'தமிழரசின்' ஓராண்டு சாதனை மலரைப் பாதுகாப்பாக பைண்ட் பண்ணி வைத்துவிட்டேன்.

தமிழ்ப்பரிதி
நெல்லிக்குப்பம்

மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க, அதிகாரிகளோடு தொடர்புகொண்டு விளக்கம் தரும் தமிழரசே, வளரட்டும் உனது பணி! வாழ்த்துவதே எங்கள் பணி!

க. கோமகவரன்
நக்கலூர்.

மே மாத தமிழரசுவின்—அரசின் ஓராண்டு சாதனைகளைப் படித்தேன். அப்பப்பா. என்ன அருமை!

வெ. கனகராஜ்
அந்திப்பள்ளம்.

# Vintage hospitality

# By The Taj



The Savoy Hotel



The Taj Garden Retreat

*Far from the madding crowd, amidst the tranquil surroundings of the lofty Nilgiris, experience a gracious ambience.*

*At the Taj Garden Retreat, Coonoor.*

*Or surrender to the charm of old English living.*

*At the Savoy Hotel, Ooty.*

**SAVOY HOTEL**
*(The Taj Group of Hotels)*
**77, Sylks Road, Ooty, Nilgiris District,**
**Tamil Nadu 643 001. Tel : (423) 44142**

★★★

**TAJ GARDEN RETREAT**
*(The Taj Leisure Hotels)*
**Upper Coonoor, Church Road, Nilgiris,**
**Tamil Nadu 643 101. Tel : (423) 30021**

**FOR RESERVATION CALL :**

**• Mumbai : 202 3366/202 2524 • Delhi : 332 2333/332 2256 • Chennai : 827 2827**
**• Bangalore : 225 5055 • Calcutta : 248 3939**






# தலைவர்களின் பெயரில் அறக்கட்டளைகள் 28

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 5-6-1997ஆம் நாள் கூட்டிய அனைத்துக் கட்சி அரசியல் தலைவர்கள் மற்றும் சமுதாயத் தலைவர்கள் கூட்டத்தில் பெரும்பாலான தலைவர்கள் தெரிவித்த கருத்துக்கிணங்க மாவட்டங்களுக்கும் போக்குவரத்துக் கழகங்களுக்கும் வைக்கப் பட்டுள்ள பெயர்களை அகற்றுவதென்றும், அகற்றப்பட்ட தலைவர்களின் பெயர்களால் - ஒவ்வொரு தலைவரின் பெயராலும் 25 (இருபத்தைந்து) இலட்ச ரூபாய் வைப்பு நிதி வழங்கி - 15 பல்கலைக்கழகங்களில் 28 அறக்கட்டளைகள் தொடங்குவதென்றும் 1.7.97ல் முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் கூடிய அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு தலைவர் பெயரிலும் வைப்பு நிதியாக வைக்கப்படும் 25 இலட்ச ரூபாயிலிருந்து கிடைக்கும் வட்டித்தொகையிலிருந்து அந்தப் பல்கலைக்கழகத்திற் குட்பட்ட கல்லூரிகளின் சிறந்த மாணவர்களுக்கு உதவித்தொகை (SCHOLARSHIP) வழங்கப்படும். இந்த உதவித் தொகையில் கல்விக் கட்டணம், புத்தகச் செலவு மற்றும் விடுதிக் கட்டணம் ஆகியவை அடங்கும்.

## பல்கலைக்கழகங்களும் அறக்கட்டளைகளின் பெயர்களும்

அறக்கட்டளை தொடங்கப்படும் பல்கலைக் கழகங்களும் அறக்கட்டளைகளுக்கான பெயர்களும் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1. | அண்ணா பல்கலைக்கழகம். | 1. காயிதே மில்லத்<br>2. எம்.ஜி.ஆர். |
| 2. | சென்னை பல்கலைக்கழகம். | 1. அறிஞர் அண்ணா<br>2. சம்புவராயர் |
| 3. | டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை. | 1. ஜீவா |
| 4. | அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம். | 1. வள்ளலார்<br>2. இராமசாமி படையாட்சியார் |
| 5. | பாரதியார் பல்கலைக்கழகம், கோவை. | 1. காமராசர் |
| 6. | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை. | 1. பெரியார் |
| 7. | பெரியார் பல்கலைக் கழகம், சேலம். | 1. டாக்டர் அம்பேத்கர்<br>2. இராஜாஜி |
| 8. | மதுரை காமராசர் பல்கலைக்கழகம். | 1. மருதுபாண்டியன்<br>2. மாவீரன் சுந்தரலிங்கம்<br>3. மன்னர் திருமலை |
| 9. | பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சி. | 1. பெரும்பிடுகு முத்தரையர்<br>2. தீரன் சின்னமலை<br>3. வீரன் அழகுமுத்துக்கோன் |
| 10. | அன்னை தெரசா பல்கலைக்கழகம். | 1. இராணி மங்கம்மாள் |
| 11. | மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம், திருநெல்வேலி. | 1. கட்டபொம்மன்<br>2. நேசமணி<br>3. மன்னர் பூலித்தேவன் |
| 12. | அழகப்பா பல்கலைக் கழகம், காரைக்குடி. | 1. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்<br>2. சிதம்பரனார் |
| 13. | தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர். | 1. பாரதியார்<br>2. ஏ.டி. பன்னீர் செல்வம் |

14. எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை. — 1. ராஜீவ்காந்தி
2. அன்னை சந்தியா

15. தமிழ்நாடு கால்நடைப் பல்கலைக்கழகம், சென்னை. — 1. பட்டுக்கோட்டை அழகிரி

### போக்குவரத்துக் கழகங்கள் பெயர் மாற்றம்

தலைவர்களின் பெயராலும், அரசர்களின் பெயராலும், தளபதிகளின் பெயராலும் இயங்கும் போக்குவரத்துக் கழகங்கள், அந்தந்தப் பகுதிகளில், பூகோள அமைப்புக்கிணங்க பின்வருமாறு பெயர் மாற்றம் செய்யப்படும்:-

1. பல்லவன்
2. அம்பேத்கர் : மாநகரப் போக்குவரத்துக் கழகம், சென்னை.

3. திருவள்ளுவர்
4. ராஜீவ்காந்தி : அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு.

5. சேரன்
6. மகாகவி பாரதியார்
7. ஜீவா : தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோவை.

8. அண்ணா
9. அன்னை சத்யா : தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம்.

10. தந்தை பெரியார்
11. பட்டுக்கோட்டை அழகிரி
12. எம்.ஜி.ஆர். : தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம்.

13. சோழன்
14. தீரன் சின்னமலை
15. மருதுபாண்டியன்
16. வீரன் அழகுமுத்துக்கோன் : தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம்.

17. பாண்டியன்
18. கட்டபொம்மன்,
19. நேசமணி
20. இராணி மங்கம்மாள்,
21. மாவீரன் சுந்தரலிங்கம் : தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை.

### மாவட்டங்களின் பெயர்கள் மாற்றம்

தலைவர்களின் பெயர்களில் அமைந்துள்ள மாவட்டங்களின் பெயர்கள் அந்த மாவட்டத் தலைநகரங்களின் பெயர்களால் அமையும். அவை பின்வருமாறு:

1. அண்ணா மாவட்டம் : காஞ்சிபுரம் மாவட்டம்
2. எம்.ஜி.ஆர். மாவட்டம் : திருவள்ளூர் மாவட்டம்
3. வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் : வேலூர் மாவட்டம்
4. திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் : திருவண்ணாமலை மாவட்டம்
5. தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம் : கடலூர் மாவட்டம்
6. விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம் : விழுப்புரம் மாவட்டம்
7. திருவாரூர் ஏ.டி.பன்னீர்செல்வம் மாவட்டம் : திருவாரூர் மாவட்டம்
8. நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம் : நாகப்பட்டினம் மாவட்டம்
9. திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம் : திருச்சிராப்பள்ளி மாவட்டம்
10. கரூர் தீரன் சின்னமலை மாவட்டம் : கரூர் மாவட்டம்
11. பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம் : பெரம்பலூர் மாவட்டம்
12. வைகை வீரன் அழகுமுத்து மாவட்டம் : தேனி மாவட்டம்
13. திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டம் : திண்டுக்கல் மாவட்டம்
14. பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம் : சிவகங்கை மாவட்டம்
15. காமராஜர் மாவட்டம் : விருதுநகர் மாவட்டம்
16. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் : திருநெல்வேலி மாவட்டம்
17. சிதம்பரனார் மாவட்டம் : தூத்துக்குடி மாவட்டம்
18. இராஜாஜி மாவட்டம் : நாமக்கல் மாவட்டம்
19. பெரியார் மாவட்டம் : ஈரோடு மாவட்டம்

சென்னை, கன்னியாகுமரி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், கோவை, மதுரை, சேலம், தருமபுரி, நீலகிரி ஆகிய 10 மாவட்டங்களின் பெயர்கள் அப்படியே நீடிக்கும். ★




# வேலூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் லிமிடெட்

**சத்துவாச்சாரி, வேலூர்-632 009.**

## தமிழகத்திலேயே அதிகமான பால் உற்பத்திகொண்ட மாவட்டம்

| | | | |
|---|---|---|---|
| 1. | தற்போது இவ்வொன்றியத்தில் செயல்படும் சங்கங்கள் | : | 1035 |
| 2. | நாளொன்றுக்கு பால் கொள்முதல் | : | 2,34,000 லிட்டர்கள் |
| 3. | வாரந்தோறும் கிராம பால் உற்பத்தியாளர்களுக்கு பாலின் மூலம் சென்றடையும் பணம் | : | ரூ.1.00 கோடி |
| 4. | கறவை இனங்களுக்கு செயற்கைமுறை கருவூட்டல் வசதி கொண்ட சங்கங்கள் | : | 308 |
| 5. | மாதந்தோறும் அங்கத்தினர் கால்நடைகளுக்கு செய்யப்படும் செயற்கைமுறை கருவூட்டல்களின் எண்ணிக்கை | : | 15,000 |
| 6. | கால்நடை பராமரிப்பு பணிகள் | : | 800 சங்கங்கள் |
| 7. | கன்று வளர்ப்பு திட்டத்தில் 100% மானியத்தில் சேர்க்கப்பட்ட கன்றுகள் எண்ணிக்கை | : | 225 (800 சேர்க்கப்பட உள்ளது) |
| 8. | நகர்புறங்களில் பால் விற்பனை நாள் ஒன்றுக்கு | : | 40,000 லிட்டர்கள் |

- பால் உற்பத்தியை மேம்படுத்த 25 ஆண்டுகளாக அயராது முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.
- கிராமப்புறங்களில் உற்பத்தியாகும் பாலை கொள்முதல் செய்து நிலையான வருவாயை ஏழை எளியோர்க்கு அளித்து வருகிறது.
- வாய்ப்புள்ள கிராமங்களை ஆய்வு செய்து புதிய சங்கங்கள் துவக்கப்படுகின்றன.
- பலகோடி ரூபாய் மூலதனத்தில் 4 பால் குளிரூட்டும் நிலையங்களும் 1 பால்பத நிலையமும் இயங்கி வருகிறது.
- தனியார் பால்பண்ணை அச்சுறுத்தலுக்கும், பொய்யான விளம்பரங்களுக்கும் மாற்று சவாலாக செயல்பட்டு வருகிறது.
- பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்கள், தற்போது ஏற்பட்டுள்ள தனிநபர் ஆக்ரமிப்புகளை கண்டு ஏமாறாமல் தொடர்ந்து உங்களின் நிறுவனமாகிய இவ்வொன்றியத்திற்கு நிலையான ஆதரவு நல்கிட வேண்டுகிறோம்.

**"நிலையான, தரமான பால் - ஆவின் பால்"**

ஏ.எம்.ஆசைதம்பி
நிர்வாக இயக்குநர்,
வேலூர் மா.பா.உ.கூ.ஒன்றியம்

# ❑ பொது விநியோகமுறை கணினி மயமாக்கப்படும்!

# ❑ போலி குடும்ப அட்டைகள் ஒழிக்கப்படும்!

## - மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் உரை

நம்முடைய மாநிலம் முழுவதும் அமைந்துள்ள நியாய விலைக் கடைகளுடைய எண்ணிக்கை 23,125. அவற்றில் கிராமப்பகுதியிலே உள்ள கடைகள் 18,242 நகர்ப் புறங்களிலே உள்ள கடைகள் 4,883.

இப்பொழுது ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் குறைந்தது ஒரு நியாய விலைக்கடை வீதம் செயல்பட்டு வருகிறது.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு வார்டிலும் குறைந்தது ஒரு நியாய விலைக்கடையாவது இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் கடைகள் அமைக்கப்படுகின்றன.

ஊரகப் பகுதிகளில் ஒரு கடைக்குக் குடும்ப அட்டைகள் 800-க்கு அதிகமாகாமலும் 500-க்கு குறையாமலும் இருக்குமாறு திருத்தி அமைக்கப்பட உள்ளது. அந்தப் பணிகள் இப்போது தொடங்கப்பட்டு சில இடங்களில் நடைபெற்று வருகிறது. இவ்வாறு திருத்தி அமைக்கிற நேரத்தில் தற்போது இயங்கிக்கொண்டிருக்கிற கடைகள் மூடப்படக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது.

அப்படி கடைகளைத் திருத்தி அமைக்கும்போது எந்த ஒரு குடும்ப அட்டைதாரரும் நியாய விலைக்கடைக்குச் சென்று பொருள்களைப் பெறுவதற்கு 2 கிலோ மீட்டருக்கு மேல் செல்லக்கூடாது என்ற அடிப்படையிலே இந்தக் கடைகள் அமைக்கப்பட வேண்டும் என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டு அவ்வாறு அவை அமைக்கப்பட்டு வருகின்றன.

**20 கிலோ அரிசி யாருக்கு?**

இப்போது ஒரு யூனிட் உள்ள குடும்பத்திற்கு 12 கிலோ அரிசி தருகிறோம். ஒரு யூனிட் என்பது பெரியவராக ஒருவர் இருந்தால் ஒரு யூனிட். அந்த யூனிட் ஒன்று உள்ள குடும்பத்திற்கு 12 கிலோ அரிசி.

ஒன்றரை யூனிட் உள்ள குடும்பத்திற்கு 14 கிலோ அரிசி. ஒன்றரை என்றால், இந்த அரை யூனிட் என்பது சிறியவர்களை-குழந்தைகளைக் குறிப்பிடும். ஒன்றரை யூனிட் உள்ள குடும்பத்திற்கு 14 கிலோ அரிசி.

இரண்டு யூனிட் உள்ள குடும்பத்திற்கு 16 கிலோ அரிசி. இரண்டரை யூனிட் உள்ள குடும்பத்திற்கு 18 கிலோ அரிசி, 3 யூனிட்டும் அதற்கு மேலும் உள்ள குடும்பங்களுக்கு 20 கிலோ அரிசி. மூன்று பெரியவர்கள் அதற்கு மேல் எவ்வளவு பேர் இருந்தாலும் இன்றைக்கு அந்தக்குடும்பங்களுக்கு 20 கிலோ அரிசி வழங்கப்படுகிறது.

தற்போது ஏறத்தாழ ஒரு கோடியே 50 இலட்சம் குடும்ப அட்டைகள் இருக்கின்றன. அவைகளிலே 20 இலட்சத்திற்கு மேற்பட்டவை போலி அட்டைகள் என்று உணரப்பட்டுள்ளது.

போலி குடும்ப அட்டைகள் அரசின் நிதி ஆதாரத்தை எந்த அளவிற்குப் பாதிக்கும் என்பதை நான் சொல்லாமலே நீங்கள் எல்லாம் புரிந்துகொள்ளக்கூடும்.

**பொது விநியோக முறை கம்ப்யூட்டர் மயமாகும்!**

போலி அட்டைகளைக் களையும் ஒரு முயற்சியாக பொது விநியோக முறையைக் கம்ப்யூட்டர் மயமாக்க-அதாவது கணினி மயமாக்க அரசு முடிவு செய்துள்ளது.

வீட்டுக்கு வீடு கணக்கெடுக்கப்பட்ட குடும்ப அட்டைதாரர்களின் விபரங்கள் எல்காட் நிறுவனத்தின் உதவியோடு கணினி மயமாக ஆக்கப்பட்டு வருகின்றன. இப்படி கணினி மயமாக்கப்பட்ட விவரங்களோடு குடும்பத்தலைவரின் புகைப்படத்துடன் கூடிய புதிய குடும்ப அட்டைகள் இன்று வழங்கப்படுகின்றன.

இந்தப்புதிய குடும்ப அட்டைகளின் மூலம் போலி குடும்ப அட்டைகள் முழுவதுமாக ஒழிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

1250 ரூபாய் வரையிலே மாத வருமானம் உள்ளவர்கள் ஏழை-எளிய மக்கள் என்று இப்போது நாங்கள் கருதி அந்தப் பட்டியலிலே வைத்திருக்கிறோம்.

1251 ரூபாய் முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை மாத வருமானம் பெறுகின்றவர்களை நடுத்தர வருவாய்ப் பட்டியலிலே வைத்திருக்கிறோம்.

மாத வருமானம் பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் பெறுவோர் வசதி படைத்தவர்கள் - என்றும் மூன்று பிரிவாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியே குடும்பஅட்டைகள் வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது.

**நிறங்களும், முறைகளும்!**

1250 ரூபாய் வரையிலே மாத வருமானம் பெறுகின்ற ஏழை-எளியோர் பட்டியலிலே இருக்கின்றவர்களுக்கு இளம் சிவப்பு நிறத்திலே அட்டைகள் வழங்கப்படுகின்றன. அதாவது வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு சிவப்பு நிறத்திலே அட்டை-வறுமையின் நிறம் சிவப்பு என்பதற்கு அடையாளமாக சிவப்பு அட்டைகள்!

நடுத்தரப் பிரிவினருக்கு மஞ்சள் நிறத்தில் அட்டைகள் வழங்கப்படும்.

வசதி படைத்தவர்களுக்குப் பச்சை நிறத்தில் அட்டைகள், இவர்கள் வளமாக இருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்ற வகையில் அவர்களுக்குப் பச்சை நிறத்தில் அட்டைகள் வழங்கப்படும்.

இந்தக் குடும்ப அட்டைகளில் குடும்பத் தலைவருடைய புகைப்படம் கணினி மூலம் அச்சிடப்பட்டிருக்கின்றன. இதன் நோக்கம் புழக்கத்திலே உள்ள போலி அட்டைகளை முழுவதுமாகக் களைந்து பொது விநியோகத் திட்டத்தினுடைய பயன் ஏழை-எளிய மக்களுக்கு முழுமையாகச் சென்றடைய வேண்டும் என்பதுதான்.

அதன்படி சிவப்புநிறக் குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி உள்பட அனைத்து அத்யாவசியப் பொருள்களும் அரசு நிர்ணயித்துள்ள மான்ய விலையில் வழங்கப்படும்.

மஞ்சள் நிற குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசியும் அனைத்து அத்தியாவசியப் பொருள்களும் வழங்கப்படும். ஆனால் அதிலே ஒன்று; அவர்களுக்கும் சிவப்பு நிற அட்டைக்கு உள்ளதைப் போல எல்லா அத்தியாவசியப் பொருள்களும்-அரிசியும் வழங்கப்படும் என்றாலும்கூட-அவர்களுடைய விருப்பத்தின்படி அவர்கள் அரிசியையோ அல்லது அரிசிக்குப் பதிலாகக் கூடுதலாக மூன்று கிலோ சர்க்கரையையோ, ஐந்து லிட்டர் மண்ணெண்ணையையோ அவர்கள் பெற்றுக் கொள்ளலாம்-அரிசி வேண்டாம் என்று சொல்லி விடுவார்களேயானால்.

பச்சை நிறக் குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி-தவிர-அரிசி நிச்சயம் கொடுக்கப்பட மாட்டாது-அது தவிர ஏனைய அத்தியாவசியப் பொருள்கள் பச்சை அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும்.

**மூன்று கட்டங்களாக வழங்கப்படும்**

இந்தப் புதிய குடும்ப அட்டைகள் வழங்குகின்ற பணி மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

முதல் கட்டம் சென்னையின் புறநகர்ப் பகுதிகள் உள்பட, சென்னை மாநகரத்திலும், சேலம், கோவை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய ஆறு மாநகராட்சிப் பகுதிகளிலும் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன.

இரண்டாவது கட்டமாகத் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகராட்சிப் பகுதிகளிலும் மாவட்டத்தலைநகரங்களிலும் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட இருக்கின்றன.

மூன்றாவது கட்டமாக - மாநிலத்தின் இதர பகுதிகளான நகரப் பஞ்சாயத்துகளிலும், கிராமப் பஞ்சாயத்துகளிலும் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட இருக்கின்றன.

**அரிசி போடுவதைக் குறைக்கவில்லை**

இன்னொன்று முக்கியமாக உங்களுக்குச் சொல்லவேண்டும். நடைபெறுகின்ற தவறான பிரச்சாரத்திற்கு விளக்கமளிக்கின்ற வகையிலே, ஒன்றைக் கூற விரும்புகின்றேன். ஏதோ இந்த ஆட்சி வந்த பிறகு அரிசி போடுவதைக் குறைத்துவிட்டோம் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. நான் உங்களுக்கு ஒரு புள்ளி விவரத்தைச் சொல்ல விரும்புகின்றேன்.

1991ஆம் ஆண்டு மொத்தமாக விநியோகிக்கப்பட்ட அரிசியின் அளவு ஒரு இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து இருநூற்று நாற்பத்தி நான்கு டன்கள்.

1992ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து இருநூற்று தொண்ணூற்றி இரண்டு டன்கள்.

1993இல் ஒரு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து எண்பத்து ஐந்து டன்கள்.

1994ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து ஆறாயிரத்து எழுநூற்றி எழுபது டன்கள்.

1995இல் ஒரு இலட்சத்து இருபத்தைந்து ஆயிரத்து முன்னூற்றி இருபத்தெட்டு டன்கள்.

1996இல் நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, இரண்டு இலட்சத்து ஆயிரத்து எண்பது டன்கள் அரிசி விநியோகிக்கப்படுகிறது

-என்ற விபரத்தை உங்களுக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்ட 23 ஆயிரத்துக்கு மேற்பட்ட நகரங்கள், கிராமங்களிலே இருக்கிற நியாய விலைக்கடைகளில் எல்லாக் கடைகளிலும் நியாயமாக எல்லாம் நடக்கும் என்று நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இங்கொன்றும், அங்கொன்றுமாகச் சில இடங்களிலே தவறுகள் நடைபெறக்கூடும். அப்படி நடைபெறுகின்ற தவறுகளைக் களைவதற்கான முயற்சிகள் இந்த அரசின் சார்பில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

கடந்த நான்கு ஐந்து மாத காலமாக நான் நேரடியாகவே முயற்சி எடுத்துக்கொண்டு, அந்த முயற்சிக்கு உறுதுணையாக நம்முடைய தம்பி உணவுத்துறை அமைச்சர் நேரு அவர்களும், அதிகாரிகளும் என்னோடு ஒத்துழைத்ததன் காரணமாக, இன்றைக்குத் தமிழ்நாட்டிலே நியாய விலைக் கடைகளில் எந்தவிதமான புகாரும் இல்லை. ஒன்றிரண்டு இருந்தாலும் அவைகள் சுட்டிக்காட்டப்படும்போது களையப்படுகின்றன என்பதை எடுத்துக்கூறி இந்தக் குடும்ப அட்டைகளை வழங்குகிற நிகழ்ச்சியைத் தொடங்கிவைக்கின்றேன்".

- இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார். ★

"*புதிய ஆட்சி மலர்ந்த பிறகு, ரேஷன் கடைகளில் வழங்கும் அரிசி குறைக்கப் படவில்லை. கூடுதலாகவே வழங்கப்பட்டு வருகிறது. போலி குடும்ப அட்டைகளை ஒழிக்க, கணிப்பொறி மூலம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன என்று மூன்று வண்ணங்களில் குடும்ப அட்டைகள் வழங்கும் பணியை 1.7.97 அன்று துவக்கி வைத்துப் பேசுகையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார். இவ்விழாவில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.கே. என். நேரு, வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மு. க. ஸ்டாலின் மற்றும் அமைச்சர் பெருமக்களும், அரசு உயர் அதிகாரிகளும் பங்கேற்றனர். அவ்விழாவில் முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை விவரம் இது.*"

## "நியாய விலைக்கடைகளில் கூடுதல் அரிசி வழங்கப்படுகிறது!"

# மேதைகள் வாழ்விலே!



கவிமணி
தேசிக விநாயகம்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் நண்பர் ஒருவர், தன் வீட்டில் இடவசதி இல்லையால், கவிமணியின் உதவியை நாடினார். அவரும் அவ்விருந்தைத் தமது வீட்டிலேயே நடத்திக்கொள்ள அனுமதித்தார். அதுமட்டுமல்ல; ஏதோ தம்வீட்டுக்கு வருவோரை உபசரிப்பதுபோல, இவரும் விருந்துக்கு வந்தோரை ஓடிஓடி உபசரித்தார்.

அப்போது கவிமணிக்கு ஒரு 'தந்தி' வந்தது; அதை வாங்கிப் பிரித்துப் படித்த அவர், மறுபடி மடித்துச் சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டு, விருந்துபசரிப்பில் மும்முரமானார்.

ஒருவழியாக விருந்து முடிந்தது; கடைசியாகப் பார்த்தால் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையைக் காணோம்! தன் மனைவியிடம்கூட சொல்லிக்கொள்ளாமல் நாகர்கோயிலுக்குப் போய்விட்டிருந்தார் அவர்!

காரணம் என்ன தெரியுமா?...

கவிமணியின் மருமகன், நாகர்கோயிலில் அகால மரணம் அடைந்த செய்திதான் தந்தி மூலம் வந்திருந்தது!

(கவிமணி பிறந்த நாள் : 28.7.1897)

□



நாவலர்
ச.சோ. பாரதியார்

தமிழ் மீதுற்ற காதலால்-இந்திமீது கடும் எதிர்ப்புக் காட்டி வந்தவர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார். தந்தை பெரியார் மீதும் மிகுந்த பற்றுக்கொண்டிருந்த இவர், வாந்தியத்தின்மீது பற்று மிகவே-அவரோடு முரண்படலானார்.

ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் மன்றம்தான் சோமசுந்தர பாரதியாருக்கு 'நாவலர்' பட்டம் சூட்டி மகிழ்ந்தது.

சென்னைத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம் ஒரு விழாவில் அவருக்குக் கேடயம் வழங்கிச் சிறப்பித்தது.

அந்த விழாவில் பேசும்போது, அதுபற்றி நாவலர் சோமசுந்தர பாரதியார் இவ்வாறு குறிப்பிட்டார்: "இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டிருக்கும் எனக்குக் கேடயம் எதற்கு? வாள் அல்லவா கொடுத்திருக்கவேண்டும்?"

(நாவலர் ச.சோ.பாரதியார் பிறந்த நாள் : 27.7.1879)

□



மறைமலை
அடிகளார்

தனித்தமிழ்ப் பற்றாளரான மறைமலையடிகளார் மீது மிகுந்த பற்றுவைத்திருந்தார், பொதுவுடைமைக்கொள்கை மீது அகலாப் பற்றுகொண்டிருந்த ப.ஜீவானந்தம். இதனாலேயே அவர் தனது பெயரை 'உயிரின்பன்' என்று மாற்றி வைத்துக்கொண்டதும் உண்டு.

தனித்தமிழ் ஆர்வலர் எனினும், கம்பனின் கற்பனை வளம், மறைமலை அடிகளாருக்கு அவ்வளவாகப் பிடிக்காது.

தமிழில் பிறமொழிக் கலப்பை அடியோடு வெறுத்துவந்த மறைமலை அடிகளார் வீட்டுக்கு ஒருநாள் அவரைக் காணச்சென்றார் ஜீவானந்தம். கதவைத் தட்டினார்.

'யாரது-போஸ்ட்மேனா?' என்ற கேள்வி உள்ளிருந்து வந்தது. அடிகளார் ஆங்கிலச் சொல்லைப் பயன்படுத்தி வினாத் தொடுக்கிறாரே என்று அசந்தே போய்விட்டார் ஜீவானந்தம்!

தமிழில் மட்டுமல்ல; ஆங்கிலத்திலும், வடமொழியிலும்கூட பெரும்புலமை பெற்றிருந்தவர் மறைமலை அடிகளார்!

(மறைமலை அடிகள் பிறந்த நாள் : 15.7.1876)





மாயூரம்
வேதநாயகம்

'பிரதாப முதலியார் சரித்திரத்தை' எழுதி முதல் தமிழ் புதினப் படைப்பாளர் என்கிற பெருமை பெற்றவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை.

முன்சீஃபாகப் பணியாற்றி வந்தாலும், முத்தமிழிலும் வல்லவராகத் திகழ்ந்தார். தமிழ் மட்டுமல்ல; ஆங்கிலமும், பிரெஞ்சு மொழியும்கூட இவருக்கு நன்கு தெரியும்.

இவர் வாழ்ந்த காலம் வெள்ளையராட்சிக்காலம்; எனவே, தனது முன்சீஃப் பதவி போனதை-"அடிமைச்சீட்டு கிழிபட்டது" என்று மகிழ்வுடன் குறிப்பிட்டார், இவர்.

தான் தீர்ப்புரைத்த ஒரு வழக்கின் தீர்ப்புரைத்ததை பற்றி, ஒருமுறை அவர் சொன்னது என்ன தெரியுமா?

"இந்த வழக்கில் உண்மையைக் காணுவது சற்றுக் கடினமாகத்தான் இருந்தது; நேற்றிரவு வாதி என் வீட்டிற்கு வந்து லஞ்சம் கொடுத்த போதுதான் எனக்கு உண்மையே தெரிந்தது; ஆகவே, நீதியை எதிர் தரப்பிற்கும், மன்னிப்பை வாதிக்கும் அளித்தேன்!"

(வேதநாயகம் பிள்ளை மறைந்த நாள் : 21.7.1889)

□



பரிதிமாற்
கலைஞர்

தமிழறிஞர் வி. கோ. சூரியநாராயணன் என்ற தமது பெயரையே 'பரிதிமாற்கலைஞர்' என்று மாற்றிக்கொள்ளும் அளவிற்கு தனித்தமிழ்க் கொள்கை உடையவராக இருந்தார், அவர்.

ஆங்கிலத்திலும், வடமொழியிலும்கூட திறம்பெற்றிருந்தார் இவர். சென்னையில் உள்ள கிறித்துவக் கல்லூரியில் மாணவராக இருந்த இளமைக் காலத்தில், அவர் வாழ்வில் சுவைமிக்க சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

கல்லூரித் தலைவரான டாக்டர் மில்லர் என்ற ஆங்கிலேயர், மாணவர் வருகைக் குறிப்பேட்டைப் படித்து, வருகையைச் சரிபார்த்துக் கொண்டிருந்தார். சூரியநாராயணன் என்று உச்சரிப்பது அவருக்குச் சிறிது கடினமாக இருந்தது. "உன் பெயரை மாற்றிவைத்துக் கொள்ளேன்?" என்றார் அவர்.

மறுநாளே, வருகைக் குறிப்பேட்டில் அந்தப்பெயர் - 'சூரியநாராயண சாஸ்திரியார்' என்றிருந்தது! "நீங்கள்தானே மாற்றிவைத்துக் கொள்ளச் சொன்னீர்கள்!" என்றார், பரிதிமாற் கலைஞர். வகுப்பே சிரிப்பில் ஆழ்ந்தது. (பரிதிமாற் கலைஞர் பிறந்த நாள் : 6-7-1870) □



மேனாட்டறிஞர்
இங்கர்சால்

அமெரிக்கநாட்டு நியூயார்க் மாவட்டத்தில் உள்ள டிரஸ்டன் நகரில் பிறந்தவரான ராபர்ட் கிரீன் இங்கர்சாலின் தந்தையார் ஜான் இங்கர்சால், கிறிஸ்தவ மதத்தின்மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

ஆனால் இங்கர்சால் சாதிமதக்கோட்பாடுகளின் மீது பெரிதும் அவநம்பிக்கை கொண்டிருந்தார். மதவாதிகள், மக்களை அச்சுறுத்தியே மதங்களையும், கடவுள் நம்பிக்கையையும் பரப்பிவருகிறார்கள்-என்றெல்லாம் வெளிப்படையாகப் பேசிடலானார். மதவாதிகளின் கொடுமைகளையும் சுட்டிக்காட்டி கண்டித்தார்.

தன்னை நாத்திகன் என்று சொல்லிக்கொள்ளுவதில் பெருமைப்பட்ட இங்கர்சாலுக்கும், அவருடைய தந்தையாருக்கும் இடையிலேயே இதுபற்றிப் பலமுறை வாக்குவாதங்கள்-அனல்பறக்க நடந்ததுண்டு.

அந்தத் தந்தையாரின் கடைசிக் காலத்தில் என்ன நடந்தது தெரியுமோ? மதவாதியான அவரும் நாத்திகக் கருத்துகளை ஏற்றுக்கொள்பவராக மாறிவிட்டார்!

ஆக, அங்கேயும் ஒரு 'தகப்பன் சாமி'!

(இங்கர்சால் பிறந்த நாள் : 11.8.1833-மறைந்த நாள் : 20.7.1899)

□



பெருந்தலைவர்
காமராசர்

முதலமைச்சராக இருந்த நேரம். காமராசர் தனது காரிலேயே நீண்ட தூரச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு சென்னை திரும்பினார். பயணக் களைப்பால் சிறிது கண்ணயர்ந்திருந்த அவர், நீண்டநேரம் கார் ஒரு இடத்திலேயே நிற்பதைப் போல் உணர்ந்து விழித்தார்.

"டிரைவர், என்னப்பா ஆச்சு! எங்கே வந்துருக்கும்-ஏன் நிக்கிறே?" என்று கேட்டார்.

'சைதாப்பேட்டை பாலம் வந்தாச்சுங்க, ஏதோ, ஆக்ஸிடெண்ட் போலிருக்குங்க ஐயா; டிராபிக் ஜாம் ஆயிருக்கு!' என்றார் டிரைவர்.

எழுந்து உட்கார்ந்து சுற்றுமுற்றும் பார்த்தார் காமராசர். போக்குவரத்து ஸ்தம்பித்திருந்தது. போலீசார் யாரையும் காணோம். காரை விட்டுக் கீழே இறங்கிய அவர், வேட்டியை மடித்துக்கட்டிக்கொண்டு நேரே விடுவிடென்று சைதாப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனுக்கு நடந்தார்.

அப்போது அங்கே 'டூட்டி' யில் இருந்த மூன்றே மூன்று போலீசார், முதலமைச்சரே கண்ணெதிரில் வந்து நிற்பதைக்கண்டு பதறிக்கொண்டு எழுந்தனர்.

"ரோடு பூரா வண்டி வாகனம் போகமுடியாம நெரிசலா அடைஞ்சுபோய்க்கிடக்கு, இங்கே உட்கார்ந்துகிட்டு என்ன பண்றீங்கங்கிறேன்? வாருமய்யா வெளியே!"- என்று சொல்லிவிட்டு அவர் வெளியே வர, போலீசாரும் உடன் ஓடிவந்தனர்.

போக்குவரத்தைச் செம்மைப்படுத்துவதில், தாம் ஒரு முதலமைச்சர் என்பதையும் மறந்து சுறுசுறுப்போடு, அவர்களோடு இணைந்து செயல்படலானார் காமராசர். அரைமணி நேரத்தில் சாலைப் போக்குவரத்து சரிசெய்யப்பட்டது.

(பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் : 15-7-1903)

தொகுப்பு : பிலா. ராஜேந்திரன்

21644




# மொழி வளர்ச்சி

## • இன்றைய நிலையும் • எதிர்காலத் தேவைகளும்

முனைவர் ம. இராசேந்திரன்

ஓர் அரசு, ஒளிவுமறைவற்று மக்களுக்குத் தொண்டாற்ற மக்கள் மொழியில் தமது செயற்பாடுகளை அமைத்துக் கொள்ளல் இன்றியமையாதது. மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த, அன்றாடம் வெளிப்படும் அறிவியல் அவர்களுக்குத் தெரிந்த மொழியில் அறிமுகமாக வேண்டும். சுயசிந்தனையாளர்களாக, புதியன படைப்பவர்களாக மாணவர்கள் உருவாகத் தாய்மொழி வழிக் கல்வி தான் பயன்பட முடியும். எனவே ஆட்சிமொழியாக, அறிவியல் மொழியாக, பயிற்றுமொழியாகத் தமிழைப் பயன்பாட்டுமொழியாக வளர்த்தெடுக்க வேண்டியது இன்றைய உடனடித் தேவையாக இருக்கிறது. அவ்வகையில் தமிழை வளர்த்தெடுக்க மொழிபெயர்ப்பு இன்றியமையாததாக இருக்கிறது.

### ஆட்சித் தமிழும் மொழி பெயர்ப்பும்

அரசின் அனைத்து நடவடிக்கைகளும் மக்கள் மொழியில் அமைவதற்கு ஆட்சித்தமிழ் பயன்படுகிறது. ஆட்சித்தமிழை உருவாக்குவதில் தலைமைச் செயலகத்தில் உள்ள தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறையின் ஓர் அலகாக இயங்கிவரும் மொழி பெயர்ப்புத்துறை பணியாற்றி வருகிறது.

சட்டம் தொடர்பானவற்றைத் தமிழாக்கும் பணியில் சட்டத்துறையின் தமிழ்ப்பிரிவும் ஆட்சிமொழி ஆணையமும் செயற்பட்டு வருகின்றன. ஆட்சிமொழிச் செயலாக்கத்தை மேம்படுத்த ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் தமிழ் வளர்ச்சித்துறை அலுவலர்கள் உள்ளனர்.

### அறிவியல் தமிழ்

நாளும் புதுமைதரும் அறிவியலைத் தமிழில் கொண்டுவரும் முயற்சியில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் உள்ள அறிவியல் தமிழ்த்துறை பணியாற்றி வருகிறது.

### பயிற்றுமொழியாகத் தமிழ்

பல்வேறு துறைகளையும் சார்ந்த நூல்களைத் தமிழில் கொண்டுவருவதன் மூலம், பயிற்றுமொழியாகத் தமிழை வளர்த்தெடுக்க முடியும், இதற்கென்று பாடநூல் நிறுவனம் செயற்பட்டு வருகிறது. இவற்றுடன் தனியார் பலரும் தமிழ் வளர்ச்சிப் பணிகளிலும் மொழிபெயர்ப்புப் பணிகளிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் தமிழ்மொழியைத் தற்காலப் பயன்பாட்டு மொழியாக மேலும் வளர்த்தெடுக்கப் பின் வருவனவற்றைச் செயற்படுத்தலாம்.

### கலைச்சொல்லாக்கக் குழு

ஆட்சித் தமிழையும், அறிவியல் தமிழையும், பயிற்றுமொழித் தமிழையும் உருவாக்கிட கலைச் சொற்களைத் தமிழில் மொழிபெயர்த்திடல் உடனடித் தேவையாக இருக்கிறது.

ஒரே கலைச்சொல்லிற்குப் பலரும் பல்வேறு விதமான தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்துவதில் நேரிடும் குழப்பங்களையும் சிக்கல்களையும் தவிர்த்திடவும், கலைச் சொற்களைத் தரப்படுத்திடவும் கலைச் சொல்லாக்கக்குழு ஒன்று அமைக்கப்படல் வேண்டும். இக்குழுவில் பல்வேறு துறைச்சார்ந்த பேராசிரியர்களும் அறிஞர்களும் இடம்பெற செய்யலாம்.

### சொல்வங்கி

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முன்னர் செயற்பட்டு வந்த 'சொல்வங்கி' அமைப்பு போன்ற ஓர் அமைப்பு ஏற்படுத்தப்படல் வேண்டும். அவ்வப்போது மொழியாக்கம் தேவைப்படுவோர் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளவும், நல்ல சொல்லாக்கம் அறிந்தோர் தொடர்புகொண்டு தெரிவித்திடவும் ஏதுவாக "சொல்வங்கி' அமைக்கப்படலாம். இதில் ஆட்சிமொழி, அறிவியல் மொழி, பயிற்றுமொழி தொடர்புடையோர் மட்டுமன்றி அன்றாட மக்கள் தமிழில் செயற்பட வேண்டியுள்ள செய்தித் தொடர்புத்துறையினரையும் இடம்பெறச் செய்யலாம்.

### இலக்கிய மொழிபெயர்ப்புக் குழு

ஒரு மொழியின் வளம் என்பதே அதில் உள்ள இலக்கியங்கள் தாம். அவ்வகையில் தமிழ் தன்னிகரற்ற வகையில் இலக்கிய வளங்களைக் கொண்டுள்ளது. எனினும் உலகளவில் இக்கால இலக்கிய வளர்ச்சியையும் திறனாய்வுப் போக்கையும் இனம் கண்டுகொள்ளவும் அதற்கு இணையாகத் தற்காலத் தமிழிலக்கியம் படைக்கப்படவும் இலக்கிய மொழிபெயர்ப்பு அவசியமாகிறது.

எனவே, பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் மொழி பெயர்க்கப்படவும் தமிழிலக்கியங்கள் பிறமொழியில் பெயர்க்கப்படவும் இலக்கிய மொழிபெயர்ப்புக் குழு இன்றியமையாததாகும். ஆசியவியல் நிறுவனம், தமிழ்ப்பல்கலைக்கழகம், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் போன்ற நிறுவனங்களும் தனியார் பலரும் இம்முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் வகையில் இலக்கிய மொழிபெயர்ப்புக் குழு செயற்படலாம்.

> “ஒரு மொழியின் வளம் என்பதே அதில் உள்ள இலக்கியங்கள்தாம்! அவ்வகையில், தமிழ் தன்னிகரற்ற வகையில் இலக்கிய வளங்களைக் கொண்டுள்ளது. எனினும், உலகளவில் இக்கால இலக்கிய வளர்ச்சியையும் திறனாய்வுப் போக்கையும் இனம் கண்டு கொள்ளவும், அதற்கு இணையாகத் தற்காலத் தமிழிலக்கியம் படைக்கப்படவும் இலக்கிய மொழிபெயர்ப்பு அவசியமாகிறது.”

### மொழிபெயர்ப்பு ஆணையம்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட இலக்கிய வளங்களை உடைய மொழியாகவும் இன்றளவும் பேசப்பட்டு வரும் மொழியாகவும் விளங்கிவரும் உலகின் மிகத்தொன்மையான சில மொழிகளுள் ஒன்றாக விளங்கும் தமிழை இன்றையத் தேவைக்கேற்ப வளர்த்தெடுத்திட மொழிபெயர்ப்பு மிகவும் தேவையாகிறது. வழக்கிறந்து போன ஈப்ரு மொழிக்கும் வடமொழிக்கும் புத்துயிர் அளிக்கும் முயற்சிகள் தொடரப்படுகின்றன. அவற்றில் வெற்றியும் பெற்று வருகின்றனர். எனவே இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து இலக்கிய வளமையோடும் பேச்சு மொழியாகவும் விளங்கிவரும் தமிழ்மொழியை மொழிபெயர்ப்பின் வழி வளர்த்தெடுப்பது அரிய செயலாக இருக்காது.

ஆகவே மேற்குறிப்பிட்ட மொழிபெயர்ப்பின் வழியமைந்த பல்வேறு பணிகளையும் ஒருங்கிணைத்து மொழிபெயர்ப்பு ஆணையம் ஒன்று உருவாக்கப்படலாம். இதன்வழி உலகளாவிய அறிவியலையும், கலைகளையும் அவ்வப்போது தமிழில் உடனுக்குடன் கொண்டுவந்து அடுத்த நூற்றாண்டுக்கான தமிழை வளர்த்தெடுக்கலாம். ★





# கற்க கசடற

- ம.ப. விஜயகுமார், இ.ஆ.ப.,
இயக்குநர், சமூக நலத்துறை.

### ஆரம்ப கல்வியில் என்ன குறைபாடு?

பள்ளி செல்லும் வயதுடைய அனைத்துக் குழந்தைகளும் கண்டிப்பாக ஐந்தாவது வரை தொடர்ந்து படிக்கவேண்டும். அவர்கள் தரமான கல்வி பெற வேண்டும். ஐந்தாவது படித்து முடிக்கும் பொழுது தாய்மொழி, கணிதம், சூழ்நிலையியல் ஆகிய மூன்று பாடங்களில் 663 திறன்களைப்பெற்று இருக்க வேண்டும். கற்கவேண்டிய அனைத்தையும் கற்றுக் கொள்வதுதான் தரமான கல்வி, இன்றைய சூழ்நிலையில் இவை எதுவும் சரியாக நடை பெறுவதில்லை.

தமிழ்நாட்டில் ஏறக்குறைய பள்ளி செல்லும் வயதுள்ள அனைத்துக் குழந்தைகளும் முதல் வகுப்பில் பள்ளியில் சேர்க்கப்பட்டு விடுகிறார்கள். துறையின் புள்ளி விவரத்தின்படி 16 விழுக்காடு மாணவர்கள் ஐந்தாவது வரை படிக்காமல் இடையில் நின்றுவிடுகிறார்கள் என்று இருந்தாலும், ஒரு சில தன்னார்வ அமைப்புகள் எடுத்த கணக்கெடுப்புகளின்படி 40 விழுக்காடு மாணவர்கள் இடையில் நின்று விடுகிறார்கள் என்று அறியப்படுகிறது. தன்னார்வ அமைப்புகளின் கணிப்புத்தான் சரியாக இருக்கக்கூடும்.

அதே போல எத்துனை மாணவர்களுக்குத் தேவையான திறன்கள் அனைத்தும் சென்று அடைசிறது என்னும் கணக்கு -துறையில் இல்லாவிட்டாலும், ஒரு சில தன்னார்வ நிறுவனங்கள் எடுத்த கணக்கெடுப்பின்படி, இது 20 முதல் 30 விழுக்காடு ஆகும். இதில் இருந்து என்ன தெரிகிறது என்றால் - ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய ஆயிரத்துத் தொள்ளாயிரம் கோடி ரூபாய்

ஆரம்பக்கல்விக்காகச் செலவு செய்து 30 விழுக்காடு பயன் மட்டுமே பெறுகிறோம். 70 விழுக்காடு வீணாகின்றது. இதை எப்படிப் பொறுத்துக்கொள்வது?

**வீணாகும் செல்வம்**

நமது கிராமங்களில் ஏறக்குறைய 70 விழுக்காடு மாணவர்களுக்கு ஆரம்பக்கல்வியே போய்ச் சேருவதில்லை. ஆரம்பக்கல்விதான் அடிப்படை. ஒரு சில மருத்துவப்பட்டதாரிகளும் பொறியியல் பட்டதாரிகளும் நமது நாட்டைவிட்டு, வேலை தேடி வெளிநாடுகளுக்குச் செல்லும் பொழுது நமது நாட்டுச் செல்வம் வீணாகிறது (Brain Drain) என்று பெரிதாகக் கூறுகிறோம். ஆனால் நமது நாட்டில் உள்ள 70 விழுக்காடு குழந்தைகளின் திறன் எல்லாம் பள்ளிகளுக்கே செல்லாமல் வீணாவதை எப்படி அனுமதிப்பது?

> ***நமது கிராமங்களில், ஏறக்குறைய 70 விழுக்காடு மாணவர்களுக்கு ஆரம்பக்கல்வியே போய்ச் சேருவதில்லை!... அவர்களின் திறன் எல்லாம் பள்ளிகளுக்கே செல்லாமல் வீணாவதை எப்படி அனுமதிப்பது?***

ஆரம்பக்கல்வி சரியாக அமையாததால் குழந்தைகள் பள்ளியில் படிக்காமல் எழுத்தறிவில்லாதவர்களாக வளர்கிறார்கள். இவர்கள் வளர்ந்து பெரியவர்களானவுடன் இவர்களைக் கல்லாதவர்கள் எனக் கண்டறிந்து, அறிவொளி இயக்கத்தின் மூலமும், முதியோர் கல்வியின் மூலமும் ஏராளமான பணச்செலவு செய்து கல்வி அறிவைப் புகட்ட முயல்கிறோம். ஆரம்பக்கல்வியைச் சரி செய்தோமேயானால் இந்நிலை வருமா?

**யார் காரணம்?**

ஆரம்பக்கல்வியில் என்ன குறைபாடு? என்ன செய்ய வேண்டும்? ஏறக்குறைய அரசுத் தரப்பிலும், அரசு உதவி பெறும் வகையிலும் தமிழ்நாட்டில் 36,000 ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகள் உள்ளன.

1,80,000 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர்.

ஒன்று முதல் ஐந்து வரை 65 இலட்சம் குழந்தைகள் படிக்கிறார்கள். நாள்தோறும் பள்ளிகள் நடக்கின்றன. ஆசிரியர்கள் பாடங்கள் போதிக்கின்றனர். ஆனால் பள்ளிகளில் நடக்கவேண்டிய கற்றல், கற்பித்தல் மட்டும் நடைபெறுவதில்லை. யார் காரணம்? எது காரணம்?

பெற்றோர்கள், அவர்கள் வறுமை, குழந்தைகள் வேலை செய்ய வேண்டிய கட்டாயம், பள்ளிகள் இல்லாமை, ஆசிரியர்கள் பற்றாக்குறை, பள்ளிகளில் தேவையான வசதி இன்மை போன்ற பல காரணங்கள் எடுத்துவைக்கப்படுகின்றன.

நமது பள்ளிகளில் கட்டணம் வசூலிக்கப் படுவதில்லை. மேலும் குழந்தைகளை ஈர்க்கும் மதிய உணவு, சீருடை, பாடப்புத்தகங்கள் போன்றவை வழங்கப்படுகின்றன. பெற்றோர்கள் குழந்தைகளைத் தவறாமல் முதல் வகுப்பில் சேர்த்துவிடுகின்றனர். தமிழ்நாட்டில் குழந்தைகளை முதல் வகுப்பில் சேர்க்கும் விகிதம் ஏறக்குறைய நூறு விழுக்காடாகும். மேலும் ஐந்தாவது படிக்கும் குழந்தை 11 வயதுக்கு உட்பட்டுதான் இருக்கும். இந்தச் சிறுவர்களால் குடும்பத்திற்குப் பெரிய வருமானம் ஈட்டித்தர இயலாது. ஆதலால் பெற்றோர்களின் வறுமையினால் அல்லது அறியாமையினால் அல்லது குழந்தைகள் தொழில் செய்யவேண்டிய கட்டாயத்தினால் ஆரம்பக்கல்வியை முழுமையாக வழங்க இயலவில்லை என்ற கூற்று ஏற்கக்கூடியது அல்ல!

பள்ளிகளில் முதல் வகுப்பில் சேரும் குழந்தைகள் தான் தொடர்ந்து படிப்பதில்லை. படித்தாலும் திறன்களைப்பெறுவது இல்லை. இதற்குப் பெற்றோரைக் குறைகூறுவது சரியாக இராது. ஐந்தாவது படித்து முடித்த குழந்தை தாய்மொழியில் சரியாக எழுதப்படிக்கக்கூட தெரியாத பொழுது சிறிய கூட்டல், கழித்தல் கணக்குகளைக் கூட்டிப் போடமுடியாத பொழுது அத்தகைய கல்வியின் மீதும் கல்விச்சாலையின் மீதும் எங்ஙனம் சமுதாயத்திற்கும் பெற்றோருக்கும் நம்பிக்கை பிறக்கும்? ஆர்வத்துடன் பெற்றோர், குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கின்றனர். பள்ளிகள் கவர்ச்சிகரமாக இல்லாததால் குழந்தைகள் பள்ளியிலிருந்து வெளியே தள்ளப்படுகின்றனர். பள்ளிகளில் சேர்ப்பதில் காண்பித்த ஆர்வத்தைப் பெற்றோர்கள் குழந்தைகளைப் பள்ளிகளில் தொடர்ந்து படிக்கவைப்பதில் காட்டுவதில்லை!

**களையப்பட வேண்டியது**

ஆசிரியர் பற்றாக்குறை, பள்ளிகளில் வசதியின்மை போன்ற காரணங்களையும் ஏற்க இயலாது. ஏனென்றால் தேவையான ஆசிரியர்கள் உள்ள பள்ளிகளிலும், அனைத்து வசதிகள் உள்ள பள்ளிகளிலும் கல்வியின் தரம் மோசமாகத்தான் உள்ளது. இவற்றையெல்லாம் விட வேறு ஏதோ ஒன்று இடர்செய்கிறது. அதைக் கண்டறிந்து களையவேண்டும்.

குழந்தைகளுக்குக் கற்கும் திறன் பிறக்கும் இடத்தைப் பொறுத்து மாறுவதில்லை. சென்னையில் பிறந்தாலும், வேலூரில் பிறந்தாலும், இலண்டனில் பிறந்தாலும் கற்கும் திறன் ஒன்றுதான். கற்பிக்கும் முறையில்தான் வேறுபாடு உள்ளது. குழந்தைகள் சிறப்பாகக் கற்பதும் கற்காமலிருப்பதும் கற்பிக்கும் முறையில்தான் உள்ளது.

குழந்தைகளுக்குப் பிடிக்கும்படியாகப் பாடங்களை விளையாட்டாகவும், ஆடல், பாடலாகவும் சொல்லிக் கொடுப்போமேயானால் கண்டிப்பாக அந்தக் குழந்தைகள் நன்கு கற்றுக்கொள்ளும். நமது கல்விக் கொள்கையும் குழந்தைகளை மையமாக வைத்துச் செயல்பாட்டு முறையில் கல்வி கற்பிக்க வேண்டும் என்றுதான் வலியுறுத்துகிறது. ஆனால், இது நடைபெறுவதில்லை. ஏன்? நமது பள்ளிகளில் கற்பிக்கும் முறை மட்டுமே மாறுமேயானால் ஆரம்பக்கல்வியில் மிகப்பெரிய மறுமலர்ச்சியைக் காணலாம். இதற்குக் கூடுதல் செலவினம் கிடையாது. இதை ஏன் செய்யக்கூடாது?

மனம்தான் மாறவேண்டும்; மாறினால் குழந்தைகள் வாழ்வில் ஒளி பிறக்கும்! ★



# சுடுமண் சிலைகள்

- சா. கந்தசாமி

மனிதர்களின் ஆதி படைப்புகள் மண் உருவங்கள்தான். நதிக்கரையோரங்களில் தங்கி நிரந்தரமாக வாழ ஆரம்பித்த மனிதக்கூட்டம், மனத்தில் தோன்றிய கற்பனைகளுக்கு மண்ணை எடுத்துத் தண்ணீர் ஊற்றிப் பிசைந்து உருவங்கள் படைக்க ஆரம்பித்தார்கள். எனிய அவர்களின் படைப்புக்கள் கற்பனை என்பதோடு, அனுபவங்களையும் - பயன்படுத்திய ஆயுதங்களாகவும் - கண்ட காட்சிகளாகவும் இருந்தன.

ஆனால், ஈரமண்ணில் செய்து வெய்யிலில் உலர்த்திக் காய வைத்த படைப்புகள் வெகுகாலம் நிலைத்திருக்கவில்லை. மழை வெள்ளம் என்று தண்ணீரில் நனைந்தபோது கரைந்து அழிந்து போயின. ஆனால் கற்பனைத் திறன் கொண்ட மனித மனம் இடைவிடாது மறுபடியும் மறுபடியும் மண் உருவங்களைப் படைத்துக்கொண்டே இருந்தது.

நெருப்பு கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் தங்களின் அருமையான மண் படைப்புக்களைச் சுட்டெடுக்க ஆரம்பித்தார்கள். இன்று மனித நாகரிக வளர்ச்சியைக் கணக்கிட்டுச் சொல்லக் காரணமாக இருக்கும் தடையங்களில் இம்மாதிரியான சுடுமண் படைப்புக்கள் அரிய பொக்கிஷங்களாக இருக்கின்றன. பண்டைய நாகரிக வாழ்க்கையின் உச்சமாக இருந்த மொகோஞ்சோதாரா-ஹரப்பாவில் எருது மாடு, ஏர், நாணயங்கள், கடவுள், தாய்க்கடவுள் எனப் பலதரப்பட்ட சுடுமண் உருவங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. அது மட்டுமின்றி அரச இலச்சினைகளும் அகழ்ந்து எடுத்திருக்கிறார்கள்.

கலைப்படைப்புக்கள் மட்டுமின்றி - வீடுகள், மாளிகைகள் கட்ட மண்ணால் கற்கள் செய்து சுட்டெடுத்து அந்நாளிலேயே நேர்த்தியான அமைப்புக்களோடு கட்டிடங்கள் கட்டி இருக்கிறார்கள்.

இம்மாதிரி மண்ணால் உருவங்கள் செய்து தீயில் சுட்டு எடுப்பதை 'டெரகோட்டா' என்கிறார்கள். 'டெர' என்றால்



மண், 'கோட்டா' என்றால் சுட்டது என்று பொருள். இரண்டும் சேர்ந்து 'டெர கோட்டா' என்று ஆகியது. இந்த 'டெரகோட்டா' என்ற சொல், களிடையே ஒரு பழக்கமாக இருந்து வந்தது சமூக சரித்திர வரலாறு நூல்களில் இருந்து தெரிகிறது.

> *தமிழ்நாட்டில் பல இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் மூலமாகக் கிடைத்த சுடுமண் உருவங்கள், மண்பாண்டங்கள், தாழிகள், பாலிகைகள், குடங்கள் - தமிழ்மக்கள் சுடுமண் உருவங்கள் செய்வதிலும் அவற்றைப் பயன்படுத்துவதிலும் அடைந்திருந்த முன்னேற்றத்தைக் காட்டுவதாக இருக்கிறது!*

காலம் செல்லச் செல்ல பரந்துபட்ட அளவில் பொருள் பெற்றது. இயற்கையாகப் பல இடங்களில் காணப்பட்ட மண்ணின் காவி வண்ணத்தை 'டெரகோட்டா' வண்ணம் என்று அழைக்க ஆரம்பித்தார்கள்.

'டெரகோட்டா' என்பது சுட்டமண் உருவங்களைச் சுட்டிக்காட்டுவதோடு, செங்கல், காலிவர்ணம் ஆகியவற்றோடு சேர்ந்து போயிற்று.

தமிழ்மக்கள் வெகு கால மாகவே 'டெரகோட்டா' கலையை நன்கு அறிந்திருந்தார்கள் என்பதற்குச் சங்க இலக்கியத்தில் நிறைய சான்றுகள் உள்ளன. மண் பாண்டங்கள் செய்த கலை ஞர்கள், வேட்கோ, கலஞ் செய்கோ என்றும் அழைக் கப்பட்டார்கள். அக்காலத்தில் தமிழ் மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் மண்பாண்டங்கள் இடம் பெற்றன.

இறந்து போனவர்களைப் பெரிய மண் தாழிகளில் வைத்து பூமியில் புதைத்தது, தமிழர் தங்கக் காசுகளைத் தமிழ் மக்கள் மண் குடங்களில் போட்டுவைத்து இருந்தது பற்றி ஒரு மேல்நாட்டு அறிஞரும் எழுதி இருக்கிறார்.

தமிழ் நாட்டில் பஞ்சாயத்துத் தேர்தலின் போது, வாக்குப் பெட்டிகளாக மண்பாண்டம் பயன் பட்டதால், குடவோலை என்றே வாக்குச்சீட்டு அழைக்கப் பட்டதும், சரித்திரத்தின் வாயி லாக தெரிகிறது.

டெரகோட்டா என்று அழைக் கப்படும் சுடுமண் உருவங்கள் வடிவமைப்பதில் மகத்தான மாறுதல், ஏகநாதர் பிறப்பதற்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் மத்திய தரைக் கடல் பகுதியில் ஏற்பட்டது எனச் சரித்திர ஆசிரியர்கள் சொல் கிறார்கள்.

அதாவது, சக்கரம் 'டெர கோட்டா' செய்வதில் ஓர் அங்கமாக இணைந்தது. சக்க ரத்தைச் சுற்றி 'டெரகோட்டா' செய்ய ஆரம்பித்த காலத்தில் தான், வடிவமைப்பில் நேர்த்தியும், ஒரே அளவு கன பரிமாணமும் கிடைக்க ஆரம்பித்தது. மத்திய தரைக்கடல் பகுதியில் ஏற்பட்ட - கலையில் தொழில் நுட்பம் மெல்லமெல்ல ஒவ்வொரு நாடாகப்பரவி, இன்றுவரையில் தன் இருப்பைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது.

டாக்டர் ஆனந்தகுமாரசுவாமி போன்ற கலை வல்லுநர்கள் சுடுமண் சிலைகள், உருவங்களின் முக்கியத்துவம் பற்றி அதன் வழியாகச் சரித்திரத்தை அறிந்து கொள்ள முடியும் என்று எழுதி நிலை நிறுத்தியது, மேலும் மேலும் சரித்திர ஆராய்ச்சி யாளர்களை இத்துறையில் ஈடுபாடு கொள்ள வைத்தது. தமிழ்நாட்டில் பல இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் மூலமாகக் கிடைத்த சுடுமண் உருவங்கள், மண்பாண்டங்கள், தாழிகள், பாலிகைகள், குடங்கள், தமிழ் மக்கள் சுடுமண் உருவங்கள் செய்வதிலும் அவற்றைப் பயன் படுத்துவதிலும் அடைந்திருந்த முன்னேற்றத்தைக் காட்டுவதாக இருக்கிறது.

மாமன்னன் ராஜராஜ சோழன் பட்டத்தரசி கோயில்களுக்கு மண்பாண்டங்கள் செய்து கொடுக்கும் வேட்கோக்களுக்கு மானியம் அளித்திருந்தது பற்றி ஒரு கல்வெட்டு மூலமாக அறியமுடிகிறது. ஆனால் காலம் செல்லச்செல்ல வேறுவேறு உலோகங்கள் உபயோகத்திற்கு வந்தபோது, மண்பாண்டங்கள் ஓரளவு மதிப்பு இழக்க ஆரம்பித்தன. வெள்ளி, செம்பு போன்ற தாதுக்களில் செய்யப் பட்ட பாத்திரங்கள் மதிப்பும் அங்கீகாரமும் பெற்றன.

இக் காலகட்டத்தில் சமூக ஆய்வாளர்களாகவும், சரித்திர ஆசிரியர்களாகவும் செயல்பட்ட இ.பி.ஹேவல் போன்றவர்கள் சென்னை, ராஜதானி முழுவதும் பயணமேற்கொண்டு, அரிய மட்பாண்டங்களைத் தேடிக் கண்டுபிடித்து காட்சிக்குக் கொண்டு வந்தார்கள். எட்கர் தர்ட்லன், போர்ட்வுட் போன்ற சமூக எழுத்தாளர்கள் அவைபற்றி விளக்கமாகக் குறிப்புக்கள் எழுதினார்கள்.

இந்தியாவில் 'டெரகோட்டா' ஒரு கலையாக வங்காளம், குஜராத்-போன்ற பகுதிகளில் இருந்தாலும், உச்சமாக இருப்பது வங்காளத்திலும் தமிழ்நாட்டி லும்தான். வங்காளத்தில் 'டெரகோட்டா' கோயிலை நிர்மாணித்து இருக்கிறார்கள். பதினாறு பதினேழாவது நூற்றாண்டில் கட்டப்பட்ட டெரகோட்டா கோயில் இன்றும் பொலிவோடு இருந்து வருகிறது.

தமிழ்நாட்டு டெரகோட்டா - சுடுமண் சிலைகள் தனித் தன்மையும் வனப்பும் கொண்ட வைகளாக இருக்கின்றன. காவல் தெய்வம் என்று அழைக்கப்படும் ஐயனார் கோயிலில் அவை இருந்தாலும், மரபு ரீதியில் அவை கோயில்களே இல்லை. சூரியனில் காய்ந்தும் - மழையில் நனைந்து கொண்டும் இருந்தாலும், அவை திறந்த வெளியில் இருந்து மக்களைக் காக்கின்றன.

இந்தக் காவல் தெய்வத்தோடு இணைத்து சொல்லப்படுவது சுவாரசியமானது. மன்னன் தனது சட்ட ஆட்சியைச் செலுத்தி மக்களுக்கு நீதிவழங்கி, பாது 'காப்பைக் கொடுக்கும்போது, இரவில் கெட்ட ஆவிகளிடம் இருந்து மக்களைப் பாதுகாப்பது 'ஐயனார் என்பதுதான் தத்துவம். அதன் காரணமாகவே ஐயனார் ஏரிக்கரை, குளக்கரை, ஆற்றங் கரை என்று ஊரின் கரையில் இருந்து உயிர்களைக் காக்கிறார். இரவில் குதிரைமீது ஏறி சலங்கையொலிக்க வேட்டை நாய் பின்தொடர பவனிவந்து மக்களைக்காக்கிறார் என்பது ஐதீகம்.

மூடாத இமைகளும், கரத்தில் பிடித்த நீண்டவாளுமாக ஐயனார் சில இடங்களில் அமர்ந்து இருக்கிறார். ஒவ்வொரு ஊரிலும் ஐயனார் ஊரின் நிலைகளுக்கு ஏற்ப மாறுவதும் உண்டு.

ஐயனாருக்கு ஐதீகப்பின்னணி இருப்பது போலவே சரித்திரப் பின்னணியும் உண்டு. ஓர் ஊரில் இருந்து போருக்குச் சென்று, வீரமரண மடைந்தவர்களின் நினைவைப் போற்றும் வித மாகவும் - ஊருக்குள் புலி, கரடி போன்ற விலங்குகள் புகுந்த போது அவற்றைக்கொன்று மக்களைக் காக்கும்போது உயிர் நீத்தவர்களின் வீரத்தைப் போற்றும் விதமாக வைத்த சுடுமண் சிலைகளை, வெளியூரில் இருந்து வந்தவர்கள், ஐயன் யார் என்று வினவியதால் ஐயனார் என்று மருவிவிட்டது என்று சரித்திரம் சொல்கிறது.

> *போருக்குச் சென்று, வீர மரணமடைந்தவர்களின் நினைவைப் போற்றும் விதமாகவும். ஊருக்குள் புலி, கரடி போன்ற விலங்குகள் புகுந்தபோது அவற்றைக் கொன்று மக்களைக் காக்கும்போது • உயிர்நீத்தவர்களின் வீரத்தைப் போற்றும் விதத்தில் வைத்த சுடுமண் சிலைகளை வெளியூரில் இருந்து வந்தவர்கள் 'ஐயன் யார்?' என்று வினவியதால் 'ஐயனார்' என்று மருவிவிட்டது!.*

சரித்திரமானாலும் - ஐதீக மானாலும் தமிழகத்து சுடுமண் சிலைகள் கலையின் சிறப்பு அம்சமாக இருக்கின்றன. பண்பாடு நாகரிகம் என்பதின் தொடர்ச்சியாக, மரபின் இழை யறாமல் இருந்து வருகின்றன.

புதுக்கோட்டை, தர்மபுரி, தஞ்சாவூர், சேலம், மதுரை ஆகிய பகுதிகளில் 'டெரகோட்டா'வின் உச்சமெனச் சொல்லத்தக்க பல சுடுமண் சிலைகளைப் பார்க்க முடிகிறது. ஆவுடையார் கோயில் பகுதியில் - மாணிக்கவாசகர் கோயில் கட்டிய ஊரில்-கோயில் மண்டபமே குதிரைசுவாமி மண்டபமாக இருப்பதால் அந்தப் பகுதியில் 'டெர கோட்டாவில்' குதிரை என்பது பிரதான அம்சமாகிறது. நமன சமுத்தி ரத்தில் சின்னஞ்சிறிய குதிரைகள் சிறப்பு அம்ச மென்றால் ராஜேந்திர சோழன் காலத்தில் ஆள் உயரத்திற்கு மேலான குதிரை அதிசயப்பட வைக்கிறது.

வாழ்க்கையில் இருந்து கலையைப் பிரித்தெடுக்க முடியாது என்பதால் - விஞ்ஞானம் மிகமிக, மனித மனம் என்பது புராதானக் கலைகளில் இன்றும் ஈடுபாடு கொள்கிறது. எனவே மனிதர் களின் ஆதி கலை வெளிப் பாடான 'டெரகோட்டா' என்று சொல்லப்படும் சுடுமண் சிலைகள் எல்லாதரப்பட்ட மக்களையும் வசீகரித்து வாழ்க்கையின் ஓர் அங்கமாக இடம்பெற்று வருகிறது.

களச்சாவு கண்டவர்களின் சுடுமண் சிலைகளைப் பார்த்து, 'ஐயன் யார்?'' என்றெழுந்த வினாவுக்கான விடையே நாளா வட்டத்தில் 'ஐயனார்' ஆகியது என்கிறது வரலாறு! ★

கவிஞர் எழில்வேந்தன்

இயற்கை எழுதிய தண்ணீர்க் கவிதை -
மண்ணின் மனக்குரலின் திரவப் பதிவு -
புவிக்கோளத்தின் புதுமை.
யுகங்களைக் கடந்து நிற்கும்
அகிலத்தின் ஆயுள் ரேகை!

உயிர்களைப் பிரசவிக்க
மண்மங்கை கருவுற்றபோது
உயிரணுக்களுக்காக ஊறிவந்த தாய்ப்பால்!

நாகரிகத்தின் நாற்றங்கால்
வெளியில் மிதக்கும்
வெளிச்சப் புதையல்!

எழுந்திடத் துடிக்கும் அலைகள் -
குளிர் ஜுவாலைகள்!

நான்
பிரபஞ்ச மொழியில்
பேசியதெல்லாம் புரியாமல் போனதால்
உள்ளூர் மொழியில் உரைத்திட வந்தேன்!

ஜீவநாடியாய்ச் செல்லத்துடித்து
காட்டாறாகக் காலம் கழித்திருந்தேன்.
கரைகளை என் காவலுக்கு அனுப்பினீர்கள்-
கௌரவம் வந்ததாய் கர்வப்பட்டாமல்...
என்னை அங்கங்கே அணைச்சிறைக்குள்ளே
அடைத்து வைக்கிறீர்கள்!

என்
பார்வை முழுக்க
பள்ளங்களையே பார்த்திருக்கிறபோது
மேடுகளைக்கண்டு மிரண்டுபோகிறேன்...
அருவியாய்ப் பாய்ந்து அங்கங்கே குதிக்கிறேன்!

வீரிய விளைச்சல்களுக்கே
விருப்பப்படுகிற என்னை
விழலுக்கு விரயமாக்காதீர்கள்!

வந்து செல்கிற வழிகள் தோறும்
பச்சைக் கம்பளப் பாய் விரிக்கின்றேன்!

உங்கள் கால்களைத் தழுவ
பூக்களைப் பரிசாகச் சுமந்து வருகிறேன்.
நீங்களோ...
முட்களையே முகத்தில் வீசியெறிகின்றீர்கள்!

உங்கள்
அழுக்குகளை அகற்றிட வந்த என்னை
அசிங்கங்களால் அழுக்காக்கி விட்டீர்கள்!
சமுத்திர சங்கமம் என்னும் சங்கற்பத்தில்
சமரசங்களுக்குச் சம்மதிப்பதில்லை.
இலட்சியங்களை அடகுவைத்துவிட்டு
அடக்குமுறைகளுக்கு அடிபணிவதில்லை.
தாமதமாகலாம்...ஆனால் தவிர்க்கமுடியாது!

என்
உடன்பிறப்புகளின் சந்திப்புகளில்...
பாதையில் நேர்ந்த துயரங்களைச் சொல்லி
தேம்பியழுவதால்தான்...
கடல்நீர் கண்ணீரால் கரித்து
உப்பு நீராய் உவர்த்துப்போனது!

எங்களைச்
சூரிய நெருப்பு சுட்டெரிக்கிறது-
மேகச் சிறகுகளைக் கட்டிக்கொண்டு
மேலே பறந்து
மழைத்துளியாக மறுபடி உயிர்க்கிறோம்!

என் கோபத்தைக் காட்டிட
அவ்வப்போது குமுறியிருக்கிறேன்.
நீங்களோ
நியாயங்களைத் தள்ளுபடி செய்தீர்கள்!
தரையோடு தரையாய்
தவழ்ந்துவந்து கேட்கும்
இந்தத்
தண்ணீரின் கோரிக்கைகள்
நிராகரிக்கப்படுமென்றால்...
நாளை...நான்
நெருப்பாகக் கொழுந்துவிட்டு
நிமிரவேண்டியிருக்கும்!



TNPSC

## தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

**தமிழ்ப்புலமைத்தேர்வு - செப்டம்பர் '97**

**விளம்பர எண் 12/97**

1997-ம் ஆண்டு, செப்டம்பர் மாதம் **18-ம்** தேதியன்று ஆறு ஆண்டுகள் பணிநிறைவு பெறாமலும், பள்ளி இறுதி வகுப்பிலோ, பட்டப்படிப்பிலோ தமிழை ஒரு பாடமாக எடுக்காமலும் அல்லது தமிழில் எந்தத் தேர்விலும் தேர்ச்சி பெறாமலும் உள்ள தமிழ்நாடு பிரிவைச் சார்ந்த, தாய்மொழி தமிழ் அல்லாத அகில இந்தியப்பணிகள் **(ஐ.ஏ. எஸ்., ஐ.ப்பி.எஸ்., மற்றும் ஐ.எப்.எஸ்.,)** அலுவலர்களுக்கான தமிழ்ப்புலமைத் தேர்வு, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால், அதன் அலுவலகத்தில் 1997-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் **18** மற்றும் **19**-ஆம் தேதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது. இத்தேர்வில் தேர்ச்சி பெறுபவர்கள் **ரூ. 1,000/-** ரொக்கப் பரிசாகப் பெறத் தகுதி பெற்றவர்களாவார்கள். இத்தேர்வுக்கான விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் வந்து சேர வேண்டிய கடைசி தேதி **20.8.97** மாலை **5.45.** ஐ.ஏ.எஸ்., ஐ.ப்பி.எஸ்., மற்றும் ஐ.எப்.எஸ்., அலுவலர் அல்லாதவர்கள் இத்தேர்வு எழுதத் தகுதியற்றவர்கள் ஆவர். விண்ணப்பப்படிவம் **தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை - 600 002** அவர்களிடமிருந்து எழுத்து மூலம் விண்ணப்பித்துப் பெறலாம்.

DIPR/1354/CNI/97

TNPSC

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

**விளம்பர எண். 11/97.**

**அகில இந்தியப் பணிகள் மற்றும் மாநிலப் பணிகளைச் சேர்ந்த அலுவலர்களுக்கான அரையாண்டு மற்றும் மொழித் தேர்வுகள் - செப்டம்பர் 1997.**

அகில இந்தியப் பணிகள் (ஐ.ஏ.எஸ்., ஐ.ப்பி.எஸ்., ஐ.எப்.எஸ்.,) மற்றும் தமிழ்நாடு மாநிலப் பணிகளைச் சார்ந்துள்ள சில வகைப் பிரிவு அலுவலர்களுக்காக [Certain Classes of Officers] அரையாண்டு மற்றும் மொழித்தேர்வுகள் இவ்வாணையத்தால் 18.9.97 முதல் நடத்தப்படும். இத்தேர்வுக்கான விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி 20.8.97. கடைசித் தேதிக்குப் பின் பெறப்படும் விண்ணப்பங்கள் கண்டிப்பாகத் தள்ளுபடி செய்யப்படும். தபால் துறையின் தாமதம் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ள ஒரு காரணமாகக் கருதப்பட மாட்டாது. விண்ணப்பப்படிவத்தையும் சம்பந்தப்பட்ட விவரங்களையும், தேர்வுக்கட்டுப்பாடு அலுவலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-2, அவர்களிடமிருந்து எழுத்து மூலம் விண்ணப்பித்து கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

**குறிப்புகள்:** 1. மேற்குறிப்பிட்டுள்ள பணிகளில் தற்போது பணியில் இருப்போருக்கு மட்டுமே இத்தேர்வுகள் உரியதாகும். -

2. இத்தேர்வுகளுடன் நடத்தப்பெறும் தமிழ்மொழி உயர்நிலைத் தேர்வே மற்ற மாநிலங்களைச் சார்ந்த அகில இந்தியப் பணிகளில் பணிபுரியும் அலுவலருக்கான ரூ. 1,000/- ரொக்கப் பரிசளிப்புத் திட்டத்தின் கீழான "தமிழ்ப் புலமைத் தேர்வும்" ஆகும். இத்தேர்வு எழுத விரும்பும் அலுவலர்கள் பத்தாண்டு பணிக்காலம் பூர்த்தி செய்யாதவர்களாயிருத்தல் வேண்டும். தேர்வு எழுத விரும்புவோர் அவர்களது விண்ணப்பம் 20.8.97-க்குள் தேர்வாணையத்திற்கு வந்து சேரும்படி தங்கள் மாநில அரசாங்கத்தின் தலைமை செயலர் வாயிலாக, தமிழ்நாடு அரசுத் தலைமைச் செயலர், சென்னை 9, அவர்களுக்கு விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.

DIPR/1347/CNI/97

**FOR FUN FILLED HOLIDAYS STAY AT**

*Sterling Resorts*

**FERN HILL**
P.B. No. 73
KUDAH HOUSE ROAD
FERNHI HILL
OOTY - 643 004

**ELKHILL**
P.B.No. 25
RAMAKRISHNA MUTT ROAD
ELK HILL
OOTY - 643 001

## உள்ளாட்சி அமைப்புகளுக்கு

# தமிழக அரசு வழங்கியுள்ள அதிகாரங்கள்!

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், நாட்டில் நீண்ட நெடுங்காலமாக நடத்தப் படாமலிருந்த உள்ளாட்சித் தேர்தலை நடத்தி ஜனநாயகத்திற்குப் புத்துணர்வு ஊட்டினார். மேலும் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் நாட்டு மக்களுக்கான நலப்பணிகளை விரைந்து நிறைவேற்றிடத் தமிழ்நாடு அரசின் சார்பாக ஏராளமான அதிகாரங்களை வழங்கியுள்ளார். மேலும், தேவையான அதிகாரங்களை வழங்கிடப் பரிசீலித்து வருகிறார்.

தற்போது வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பற்றிய விவரம் வருமாறு:

ஊராட்சிகள்

★ இதுவரை ஊராட்சிகளுக்கான மான்யம் மற்றும் அரசு உதவித்தொகை ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக அளிக்கப்பட்டு வந்தது. இப்பொழுது ஒவ்வொரு ஊராட்சிக்கும் சேரவேண்டிய தொகை அரசு அளவிலேயே கணக்கிட்டு, அதனை நேரடியாக ஊராட்சி மன்றக் கணக்கில் செலுத்தும் புதிய முறை உருவாக்கப் பட்டுள்ளது. மக்கள் தேவைகளை அவர்களாகவே பூர்த்தி செய்யும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

★ ஊராட்சிகளின் தலைவர்கள் ஊராட்சியின் செயல் அலுவலராக நியமனம் செய்யப்பட்டு,



> **மைய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்குப் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது !**

செயல் அலுவலர்களுக்கான அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

★ ஊராட்சி சாலைகள் போன்ற பணிகளை மன்றத் தீர்மானத்துடன் எடுத்து நிறைவேற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

★ தெருவிளக்கு, குடிநீர்த் திட்டம் ஆகியவற்றைப் பழுது பார்க்கவும், பராமரிக்கவும் ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

★ ஊராட்சி உதவியாளர்கள் இல்லாத இடங்களில், பகுதிநேர எழுத்தர்களை நியமித்துக்கொள்ளும் அதிகாரம் ஊராட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் ஊராட்சித் தலைவர்களின் கட்டுப்பாட்டில் இருப்பார்கள்.

★ மனைகளில் வீடு கட்டும் அனுமதி வழங்கும் அதிகாரம் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டு அதற்கான விதிமுறைகள் வகுக்கப்படுகின்றன.

★ மைய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களான ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம், ஊரக இளைஞர் சுயவேலைவாய்ப்பு பயிற்சித் திட்டம், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம், இந்திரா நினைவுக்குடியிருப்புத்திட்டம், மத்திய ஊரகச் சுகாதாரத்திட்டம், மில்லியன் கிணறுகள் திட்டம் போன்ற திட்டங்களுக்குப் பயனாளிகளைத் தேர்வு செய்யும் அதிகாரம் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ புதிய படிப்பகங்கள் திறப்பதற்கான அதிகாரம் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திற்கும் ஜவகர்வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் சுமார் ரூ.80,000 வரையிலும் பத்தாவது நிதிக்குழு அளிக்கும் நிதியிலிருந்து ரூ.30,000 வரை வழங்கப்படுகிறது. இது அந்த ஊரின் மக்கள் தொகை அடிப்படையில் மாறுபடக் கூடும்.

**ஊராட்சி ஒன்றியங்கள்**

❑ ஏற்கெனவே உள்ள பொறுப்புகள்-ஊராட்சி ஒன்றியச் சாலைகள் பராமரிப்பு, நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும் கண்மாய்கள் பராமரிப்பு, அரசு திட்டங்களைச் செயலாக்குதல் (கண் ஒளி திட்டம், குடும்ப நலத்திட்டம், சத்துணவுத்திட்டம், ஆதி திராவிடர்கள் நலத்திட்டம் ஆகியவை) போன்ற பொறுப்புகள் தொடர்ந்து ஊராட்சி ஒன்றியங்களிடம் இருக்குமாறு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

❑ வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயலாக்கும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் சுமார் ரூ.70 இலட்சம் அளவில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

❑ ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயலாற்றும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குச் சுமார் ரூ.30 இலட்சம் வரை நிதி ஒதுக்கீடு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடு மக்கள்தொகை அடிப்படையில் மாறுபடக் கூடும்.



# உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தமிழக அரசு வழங்கிவரும் நிதி !

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் பத்தாவது நிதிக்குழு அளிக்கும் நிதியின் கீழ் ரூ.10 இலட்சம் வழங்கப்படுகிறது.

வறட்சி நிவாரணப்பணிகள், குடிநீர் வசதி ஆகிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயலாக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் ஊராட்சி ஒன்றியத் தொடர்பான பணிகளைச் செயலாக்கும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிலுள்ள ஊராட்சி ஒன்றியக் கட்டிடங்களை ஊராட்சி ஒன்றியங்களே பராமரித்துக் கொள்ள அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 114(2)-ன் படி, ஏற்கெனவே ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசாணை எண்.886, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 29.10.1990-இல் கொடுக்கப்பட்டுள்ள திட்ட ஆய்வுப்பணிகள் தற்போதைய சூழ்நிலையில் இத்துறைகளில் நிறைவேற்றப்படும் திட்டங்களுக்கேற்ப தக்க திருத்தங்களுடன் திரும்ப ஒப்படை செய்யப்பட்டுள்ளது. பொது சுகாதாரம், ஆரம்பக்கல்வி, குடிநீர், சாலைகள், சிறுபாலங்கள் மற்றுமுண்டான போக்குவரத்துத்தொடர்பு, கதர், கிராம மற்றும் குடிசைத்தொழில்கள், தொழில் நுட்பப் பயிற்சி மற்றும் வேலைக்கல்வி, நூலகங்கள், ஊரக மின்மயமாக்கல் மற்றும் மரபு சாரா எரிசக்தி வளங்கள் ஆகிய பணிகளை மேற்பார்வையிடும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**மாவட்ட ஊராட்சிகள்**

❑ மாவட்ட ஊராட்சிகள் வேளாண்மைத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, தொழில்துறை, நீர்ப்பாசனத்துறை, மின்சாரத்துறை, கூட்டுறவுத்துறை, சமூக நலத்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, கல்வித் துறை, சத்துணவு, ஆதிதிராவிடர் நலத்துறை ஆகிய துறைகளைக் கலந்து ஆலோசித்து திட்டப்பணிகளின் முன்னேற்றத்திற்கான ஆலோசனைகள் அந்தந்தத் துறைகளுக்குத் தெரிவிக்கும் அதிகாரம் மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

❑ மாவட்ட பரவலாக்கத் திட்டத்தின் கீழ் ஊரகப்பணிகளைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

❑ ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 20 சதவீதப் பணிகளைத் தேர்ந்தெடுத்து நிறைவேற்றும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

❑ பத்தாவது நிதிக் குழு ஒதுக்கீடு செய்யும் தொகையில் வளர்ச்சிப் பணிகளைத் தேர்ந்தெடுத்து வெவ்வேறு துறைகளின் மூலம் செயலாக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

❑ ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் பல்வேறு திட்டங்களின் கீழ் சுமார் 1 கோடி ரூபாயும், பத்தாவது நிதிக் குழு வழங்கிய தொகையிலிருந்து ரூ.50 இலட்சமும் வழங்கப்படுகிறது.

**உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தமிழக அரசு வழங்கி வரும் நிதி பற்றிய விவரம்:**

ஊராட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்களைப் பெருக்க இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இதன்பொருட்டு ஊராட்சிகளின்

நிதிநிலையை ஆராய்ந்து நிதி நிலைமையினை, நிதி ஆதாரங்களை மேம்படுத்தவும், மாநிலத்தின் தொகுப்பு நிதியிலிருந்து மானியம் அளிப்பதற்கான கொள்கையை வகுத்தல், மாநிலத்திற்கும் ஊராட்சிகளுக்கும் இடையே அரசினால் விதிக்கப்படும் வரிகள், சுங்கக் கட்டணங்கள் முதலியவற்றில் கிடைக்கும் நிகர வருமானத்தைப் பிரித்தல் மற்றும் அந்த வருமானத்தை ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்கான கொள்கைகளை வகுக்கவும், ஊராட்சிகளுக்கு ஒப்படை செய்ய வேண்டிய வரிகள், சுங்கக் கட்டணங்கள் நிர்ணயம் செய்யவும் அமைக்கப்பட்ட மாநில நிதிக் குழுவின் **(State Finance Commission)** பரிந்துரைகள் பெறப்பட்டு, பரிசீலனைக்குப்பின் பரிந்துரைகள் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, உடனடி செயல்பாடாக ஊராட்சி அமைப்புகளுக்கு நிதி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

மாநில நிதிக் குழுவின் பரிந்துரைப்படி கேளிக்கை வரியைத் தவிர, இதர மாநில அனைத்து வரிகளும் தொகுக்கப்பட்டு அதில் 8 சதவீத அளவுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு 1997 -98ஆம் ஆண்டிற்குப் பகிர்ந்தளிக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. இத்தொகை மொத்தம் ரூ.662 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. 8 சதவீத மானியத்தில் 15 சதவீதம் அளவுக்குச் சமன்பாடு மற்றும் ஊக்க நிதியாக ஊரக மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகளுக்கு 60:40 எனும் விகிதத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 85 சதவீதம் ஊரக மற்றும் நகர அமைப்புகளுக்கு 55:45 என்ற விகிதத்தில் ஒதுக்கப்படும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய ரூ.309.485 கோடியை, 10:45:45 என்ற விகிதத்தில் மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளுக்கு இடையே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1997- 98ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மதிப்பீட்டின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளுக்கு இந்த அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை முறையே ரூ.139.27 கோடியாகும்.

இவை தவிர, பத்தாவது நிதிக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட மானியத் தொகையான ரூ.71.83 கோடியில் மாவட்ட ஊராட்சிகளுக்கு ரூ.28 கோடியும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.38.40 கோடியும் - 10,000 மற்றும் அதற்கு மேல் மக்கட்தொகை கொண்ட ஊராட்சிகளுக்கு ரூ.5.43 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய அமைப்புகளான மாவட்ட ஊராட்சிகளுக்கு அலுவலகம் மற்றும் தொடக்க மூலதனச் செலவுகளுக்காக ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் ரூ.15 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது மாநில அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தலவரி, தலவரி மீதான மேல் வரி மற்றும் முத்திரைத்தாள் தீர்வையின் மீதான மேல்வரி ஆகியவற்றை முழுமையாக அளிக்கிறது. மேலும், கேளிக்கை வரியில் முன்பு 70 சதவிகிதம் என்று இருந்ததை 90 சதவிகிதமாக அதிகரித்து வழங்குகிறது. மேலும் மாநில நிதிக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று மாநில வரியிலிருந்து கிடைக்கும் மொத்த வரி வருவாயில் 8 சதவிகிதம் வழங்குகிறது.

இதுமட்டுமின்றி மூலதன செலவிற்காக மத்திய நிதிக்குழுவின் பரிந்துரையின்படி மாநில அரசு பெறும் 100 கோடி ரூபாயும், மேலும் முதலீட்டுச் செலவினங்களுக்காகத் தமிழக அரசின் சார்பில் 271.55 கோடி ரூபாயும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்த ஆண்டு வழங்கப்படுகிறது.

<u>ஆக,கடந்த ஆண்டு</u>
<u>உள்ளாட்சிக்கு வழங்கியது</u> - ரூ. 646 கோடி

<u>இந்த ஆண்டு வழங்கியது</u> - ரூ. 1545 கோடி

அதுமட்டுமின்றி, ஆரம்பப் பள்ளியாசிரியர்கள் சம்பளம், ஆரம்ப சுகாதாரப்பணிகள் ஆகியவற்றிற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு, மாநில அரசு செலவழிப்பது ரூ.1677 கோடி, எனவே, மொத்தமாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.3222.55 கோடி செலவழிக்கப் படுகிறது. மத்திய அரசு தற்போது வரியைப், பகிர்ந்தளிக்கும் முறைக்குப் பதிலாக மத்திய அரசின் அனைத்து வரிகளிலிருந்தும் பெறப்படும் வருவாயில் 29 சதவிகிதம் என்ற முறையினால் ஏற்கெனவே இந்த ஆண்டிற்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிற 2,485 கோடி ரூபாயை விட, கூடுதலாக சுமார் 200 கோடி ரூபாய் மாத்திரமே கிடைக்கும். ஆனால் இப்போதே தமிழக அரசு செலவழிப்பது ரூபாய் 3222.55 கோடியாகும். ★


# மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, வேலூர் மாவட்டம்
# வறுமை ஒழிப்பு மற்றும் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டங்கள் 1996-97

| வ. எண். | திட்டத்தின் பெயர் | வேலைகளின் எண்ணிக்கை | முடிக்கப் பட்டவை | நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | 1-7-96இல் நிலுவைப்பணிகள் | 3535 | 3374 | |
| 2. | ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டப் பணிகள் | 2019 | 1154 | 979.68 |
| 3. | தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுத்தல் | 4246 | 927 | 1150.50 |
| 4. | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் | 6267 | 4531 | 213.00 |
| 5. | கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம் | 679 | 679 | 29.92 |
| 6. | மகளிர் குழந்தைகள் மேம்பாடு திட்டம்-குழுக்கள் அமைத்தல் | 146 குழுக்கள் | 146 குழுக்கள் | 36.79 |
| 7. | கரிமவாயு கலன் அமைக்கும் திட்டம் | 200 கலன்கள் | 202 கலன்கள் | |

**பிரதீப் யாதவ், இ.ஆ.ப.,**
கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி)
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
வேலூர் மாவட்டம்

**ப.வி.ச. டேவிதார், இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சித்தலைவர்
வேலூர் மாவட்டம்
வேலூர்-9.

STD : 04112
20019
22933
24233
Fax : 91-04112 24311

# A.G.K. SILKS

**For Upto Date Most High Class Fashionable Silk Sarees, Kanchi Cotton Sarees Manufacturers and Dealer's**

45-B, Sheikpet Nadu Street,

**KANCHIPURAM - 631 501.**

*Partners:*

**A.G.KRISHNA SAH**

**A.G.KANDASAMY SAH**

**A.G.PURUSHOTHAMAN SAH**

**K.JAWAHAR SAH**

# குதிரைச் சவாரி

**ஜெயசிம்ஹன்**

குடலைப் பார்த்தபடியே மணற் பரப்பில் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன் நான். அலைகள் ஆரவாரத்துடன் கரையை நோக்கி வருவதையும், பிறகு கரையால் விரட்டப்பட்டு பின்வாங்குவது போலப் போவதையும் எவ்வளவு நேரம் பார்த்தாலும் எனக்குச் சலிக்கவேயில்லை.

நேற்று வரை காலைப் பொழுதுகளில் இது போன்ற சல்லிக்காசு பெறாமல் கடலைப் பார்த்து உட்கார்ந்துகொண்டிருந்தவன் இல்லை நான். விலை மதிப்புள்ள ஒரு காரின் பொறுப்புமிக்க டிரைவராக இருந்தேன். என் முதலாளிக்கும் அவர் குடும்பத்துக்கும் காலை முதல் இரவு வரை பயணம் செய்ய என் பணி தேவைப்பட்டது. அதெல்லாம் இப்போது முடிந்து விட்டது. நேற்று வேலை மாற்றம் பெற்று குடும்பத்தோடு எங்கோ இமயமலை அடிவாரத்தில் இருக்கும் ஒரு மாநிலத்துக்குச் சென்றுவிட்டார் அவர்.

> ***'அந்தக் கல்லூரியிலிருந்து இதைத்தான் கற்றுக்கொண்டோம் என்று மறைமுகமாக அறிவிப்பதுபோல் அவர்களின் செய்கைகள் இருந்தன!'***

கடந்த மூன்று வருடங்களாக தொடர்ந்து அவர்கள் வீட்டில் வேலை செய்ததைப் போல, என் பத்து வருட டிரைவர் அனுபவத்தில் இனிமையாக எங்கும் வேலை செய்ததில்லை. முப்பது வயதாகும் எனக்கு கார் ஓட்டுவதைத் தவிர வேறு வேலை எதுவும் தெரியாது.

கடற்கரை வெயில் சுள்ளென்று இருந்தது. எனக்குப் பின்னால் தூரத்தில் இருவர் நடந்து வருவது தெரிந்தது. உற்றுப்பார்த்தேன். வினோதமான கிராப்பும், பாவாடை போன்ற பேண்டும் அணிந்திருந்தான் ஒருவன். அவன் கையில் ஒரு நோட்டுப்புத்தகம், அவனை உரசியபடி ஒடிசலாய், குள்ளமாய் தோளில் ஒரு டம்பப் பையுடன் ஒருத்தி. இருவருக்கும் ஏறக்குறைய இருபது வயது தான் இருக்கும்.

சிறிது நேரத்தில் அவர்கள் இருவரும் கரையில் நின்றிருந்த படகின் கிழே அமர்ந்தனர். அவன் சட்டென்று அவள் மடியில் தலைவைத்துப் படுத்தான். அவள் தன் கழுத்தைச் சுற்றியிருந்த சுரிதார் துணியை எடுத்து வெயில் படாதவாறு தன் தலை மேல் போர்த்திக் கொண்டாள், அப்படியே நீளமான அந்தச் சுடிதார் துணியை தன் மடிவரை இழுத்து அவன் முகத்திலும் வெயில் படாமல் லாவகமாக ஒரு கையால் பிடித்துக்கொண்டாள்.

ஏனோ எனக்கு அவர்களைப் பார்க்கும் போது அருவறுப்பும், கோபமும் வந்தது. அவர்களுக்குப் பின்னே தூரத்தில் தெரிந்த





மிகப்பெரிய கல்லூரியைப் பார்த்தேன். அந்தக் கல்லூரி யிலிருந்து இதைத்தான் கற்றுக் கொண்டோம் என மறைமுகமாக அறிவிப்பது போல் அவர்களின் செய்கைகள் இருந்தது.

'ம்...நான் மட்டும் கொஞ்சமாவது படித்திருந்தேன் என்றால், இதோ என் பின்னால் தெரியும் தலைவர்களின் சிலையைப் போல் எனக்கும்கூட ஒரு சிலை வைக்கும் அளவுக்குத் தகுதி பெற்றிருக்கலாம்' - என நினைத்தேன். எனக்கு எழுதப்படிக்கத் தெரியாது என்று நான் சொன்னால் யாரும் இப்போது நம்புவதுகூட இல்லை. ஏதோ அவர்களிடம் விளை யாடுகிறேன் என நினைக்கிறார்கள். சே...எல்லாம் விதி! என என்னை நானே நொந்துகொண்டேன்.

கரையில் நின்றிருந்த படகின் கீழே தஞ்சம் புகுந்திருந்த அந்த வினோத கிராப்புத் தலையனையும், இரத்த சோகை உள்ளவன்போல் மெலிந்திருந்த அந்தப் பெண் ணையும் பார்த்தேன். இருவரும் கல்லூரியில் படித்தாலும் என்னைப் போலவே அன்றாடங்காய்ச்சி குடும்பத்தில் இருந்துதான் வந்திருக்கவேண்டும் என அவர்கள் இருவரையும் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவர்களின் சந்தோஷமே இவ்வளவு தான் என நினைத்துக் கொண்டேன்.

பெரிய குதிரை ஒன்று எனக்கு முன்னே ஓடியது. அதன்மேலே சுமார் பத்து வயது கொண்ட சிறுவன் உட்கார்ந்திருந்தான். கையில் ஒரு சின்னக்குச்சியை வைத்துக் கொண்டு அந்தப்பெரிய குதிரையை, கடற்கரையில் பொழுதைப்போக்கிக் கொண்டிருந்தவர்கள் முன்நிறுத்தி 'சார் ஏறுங்க சார், நல்ல குதிரை சார், நான் கூடவே ஓடிவரேன், தைரியமா ஏறுங்க சார்' என்று குதிரைச் சவாரிக்கு கூப்பிட்டுக் கொண்டி ருந்தான். என்னை அவன் திரும்பிக் கூட பார்க்கவில்லை.

குதிரை மீதிருக்கும் சிறுவனுக்கு மெலிந்த உருவம்தான் ஆனால் நோஞ்சான் போல் இல்லை. அவன் முடி காற்றில் கலைந்திருந்தது. இந்தச் சிறுவன் மட்டும் சில நூறு வருடங்களுக்கு முன் பிறந்தி ருந்தான் என்றால், இவன்கூட ஒரு குதிரை வீரனாகியிருப்பான். ஊர் சுற்றித்திரியும் சோம்பேறிகள் இவனைப் பார்த்து அச்சம் கூட கொள்ளலாம். பாவம், காரும் விமானமும் சீறிப்பாயும் இந்தக் காலத்தில் இவன் தப்பிப் பிறந்து கஷ்டப்படுகிறான் என நினைத்தேன்.

காற்று என் முகத்தை முட்டிக் கொஞ்சியது. சுகமாய் தூங்கிப் போனேன்.

ஒரு அழகிய வெள்ளைக் குதிரை, நான் தான் அந்தக்குதிரை, மிக வலிமையான குதிரை நான். இந்தப் பட்டணத்துத் தெருவை எல்லாம் நாற்கால் பாய்ச்சலில் சுதந்திரமாய்ச் சுற்றி வருகிறேன் நான். என் பழைய முதலாளிகளின் வீடுகளுக்குப் போய் அவர்கள் முன்னே நிற்கிறேன். யாரும் ஒரு குதிரை வந்ததைப் பற்றிப் பொருட்படுத்தக்கூட இல்லை. நான் குதிரையாகவே என் பழைய முதலாளிகளின் கால்களின் முன் மண்டியிட்டு என்னை வைத்துக் கொள்ளுமாறும், நான் நல்ல குதிரைதான் என்று கூறியும் கெஞ்சியும், செருப்பும், பூட்சும் அணிந்த அவர்களின் கால்களை முத்தமிடுகிறேன். என் பழைய முதலாளிகள் ஒவ்வொருவரும் தங்களின் கார்களை எனக்குச் சுட்டிக் காட்டி 'குதிரை வேண்டாம்' என வெறுப்பாகக் கூறிப்போய் விடு கிறார்கள். 'யாருக்கும் நான் வேண்டாம் என்றால் நான் போகிறேன்' என்று கோபமாகக் கத்தியபடி கடலை நோக்கிக் கனைத்துக்கொண்டே ஓடுகிறேன் நான். கருநீலக் கடல் அலைகளில் நான் மூழ்கித்தண்ணீரில் தத்தளிக் கிறேன்...

'சே... இது என்ன கனவு!' என்று விழித்தேன். தெரியாமல் தூங்கிப் போனேன். அதற்குப் பரிசாய்ப் பயங்கரமாய் ஒரு கனவு. நல்லவேளை எனக்கு இந்த டிரைவிங் வேலையாவது தெரிந்ததே என நிம்மதிப் பெருமூச்சு விட்டேன்.

பிறகு எழுந்து நுரைக்கும் அலைகளைப் பார்த்துக்கொண்டே நடக்க ஆரம்பித்தேன். ஏற்றுமதிக் கம்பெனியில் வேலை செய்யும் என் மனைவியை நினைத்தேன். திருமணமாகி பத்து வருஷம் ஆகியும் குழந்தை இல்லை என்ற வருத்தம் எனக்கும் அவளுக்கும் இருந்தது. 'அதுவும் பொறந்து நம்பகூட கஷ்டப்படக் கூடாதுன்னு தான் சாமி நமக்கு குழந்தை தரவேயில்லை' என அவள் ஆணித்தரமாய் வருத்தத்தை மறைத்தும் நியாயப்படுத்துவது போலவும் கூறுவதை நினைத்த போது எனக்கு சிரிப்புத் தான் வந்தது.

தூரத்தில் சிவப்பு நிறம் கொண்ட புதிய கார் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. நடுத்தர வயதுள்ள பருமனான ஒருவர், முகம் எல்லாம் வியர்த்து காற்றிறங்கிய காரின் முன் சக்கரத்தைப் பார்த்துக் கொண் டிருந்தார். அவரின் மனைவி என்பதற்குப் பொருத்தமாய் ஒரு பெண் அவர் அருகில் நின்று கொண்டிருந்தாள். அந்தக் காருக்கு முன்னே பருமனான ஆசாமியின் சாயலை அதிகம் கொண்டிருந்த ஒரு சிறுமி மெல்லிய வெள்ளை நிற ஃப்ராக்கை அணிந்து நின்று கொண்டிருந்தாள். அந்தச் சிறுமி இரண்டு கைகளாலும் ஒரு பெரிய வண்ணப் பந்தினை அவள் வயிற்றோடு ஒட்டிப் பிடித்துக் கொண்டிருந்தாள். நான்கு அல்லது ஐந்து வயது தான் அந்தச் சிறுமிக்கு இருக்கும். பால் வடியும் முகம். அவள் பந்தினை வயிற்றோடு ஒட்டிப் பிடித்திருந்த தோற்றம் எனக்கு நிறைமாத கர்ப்பிணிப் பெண்களை நினைவூட்டியது. அந்தச் சிறுமி எதைப்பற்றியும் கவலைப்படாமல் ஆங்கிலப் பள்ளிக்கூட பாடல் ஒன்றினை உரக்கப் பாடிக்கொண்டி ருந்தாள். அந்தச் சிறுமியுடன் எனக்கு விளையாடத் தோன்றியது. எத்தனை முதலாளிகளின் குழந்தைகளுக்கு அன்புமிக்க விளையாட்டுத் தோழன் நான் என்று எண்ணிப் பார்க்கையில் எனக்கே மலைப்பாக இருந்தது.

அந்த மூவரையும் நான் கடந்து சென்றபோது பருமனான மனிதர் என்னைப் பார்த்து "இங்க மெக்கானிக் யாரையாவது தெரியுமா? டயர் பஞ்ச்சர்" என்றார்.

'நானே பார்க்கிறேன் சார்' என்று கூறி அவரைப்பார்த்துப் புன்ன கைத்தேன். நேற்று வரை நான் ஓட்டிக்கொண்டிருந்ததும் இதே போன்ற கார்தான். அதன் வண்ணம் பழுப்பு - இது சிவப்பு. டேஷ்போர்டு அருகில் தொங்கிக்கொண்டிருந்த சாவிக்கொத்தினை எடுத்து டிக்கியைத் திறந்து ஜாக்கியை எடுத்தேன். நான் வேகமாகவும், நளினமாகவும் வேலை செய்வதைப் பார்த்து அவர்கள் ரசிப்பது எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

> *'திருமணமாகிப் பத்து வருஷம் ஆகியும் குழந்தை இல்லை. அதுவும் பொறந்து நம்பகூட கஷ்டப்படக் கூடாதுன்னு தான்- சாமி நமக்குக் குழந்தை தரவேயில்லை' என்று அவள் ஆணித் தரமாய் வருத்தத்தை மறைத்தும் நியாயப் படுத்துவது போலவும் கூறுவதை நினைத்த போது எனக்கு சிரிப்புத் தான் வந்தது!'*

சிறிது நேரத்தில் ஸ்டெப்னியை காரில் பொருத்திப் பஞ்சரான டயரை உருட்டிக்கொண்டு போய் டிக்கியில் வைத்தேன். நிச்சயமாகப் பணம் தருவார்கள் என நினைத்தபடி சாவிக்கொத்தினை அவர் கையில் கொடுத்தேன்.

சாவிக்கொத்தினை வாங்கிக் கொண்டு என்னை உற்றுப் பார்த்தார். வாங்க காபி சாப்பிடுவோம் என்று அன்புடன் என்னை அழைத்தார். எனக்கு காபி வேண்டாம், பணம்தான் வேண்டும் என்று அவரிடம் கத்திவிடலாம் போல எனக்குத் தோன்றினாலும், 'பரவாயில்லை சார் காபி வேண்டாம்...' என இழுத்தேன் நான்.

'நீங்க இப்ப நீலகண்டன் சார் கிட்ட வேலைப் பார்க்கலியா?' என என் முன்னாள் முதலாளியின் பெயரைச் சொல்லிக்கேட்டார், சிவப்புக் காரின் சொந்தக்காரார்.

என்னை முன்பே இவர் அறிந்தி ருந்தது எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. பழைய முதலாளியுடன் சிலமுறை இவரைப் பார்த்தது சட்டென்று ஞாபகம் வந்தது. அப்போது இவர் தாடியும் மீசையும் வைத்திருந்தார். இப்போது முகம் முழுக்க மழுங்கச் சிரைத்து விட்டபடியால் சுலபமாக அடையாளம் காண முடியவில்லை.

நேற்று இவர் நண்பர் பணி மாற்றம் பெற்றுப் போனதையும் நான் வேலையற்றுப் போனதையும் இயல்பாக அவரிடம் சொன்னேன். 'உங்களுக்கு யாராவது டிரைவர் தேவைப்பட்டா, என்னைச் சொல்லுங்க சார்' என்று என் மனம் அவரிடம் சொல் என்று சொன்னாலும் என் வாய் மறுத்து விட்டது.

அவர் தன் சட்டைப் பையி லிருந்து ஒரு விலாச அட்டையினை எடுத்து என் கையில் கொடுத்தார். 'நாளைக்கு சரியா எட்டு மணிக்கு இந்த விலாசத்துக்கு வந்துருங்க. நீங்க தான் இந்த வண்டியோட டிரைவர். இன்னிக்கு மாத்திரம் உங்களுக்கு வேலையில்லை' என்றபடி டிரைவர் சீட்டில் அமர்ந்தார். அவர் மனைவியும், மகளும் என்னைப்பார்த்துப் புன்ன கைத்தனர். அவர்கள் கார் கண்ணிலிருந்து மறையும் வரை பார்த்தேன். அவர் கொடுத்த விலாச அட்டையைப் பார்த்தேன், ஆங்கில எழுத்துக்கள் என்னை முறைத்துப் பார்த்தன, என்ன என்று தான் புரியவில்லை. அதனால் என்ன? என் மனைவியிடம் கொடுத்தால் படித்துச் சொல்லிவிடப்போகிறாள்.

இன்று எனக்கு வேலை கிடைத்த புதுமையான அனுபவத்தை என் மனைவியிடம் உடனடியாகச் சொல்லத் துடித்தேன். வீட்டுக்குப் போனதும் அவளும் என்னிடம் சொல்ல ஒரு நல்ல செய்தியைச் 'சுமந்து கொண்டு' காத்திருக்கிறாள் என எனக்கு அப்போது தெரியவில்லை!

★

# குழந்தைத் தொழிலாளர் எழுத்தாளர் முகாம்

குழந்தைத் தொழிலாளர் நிலைமையினைத் தவிர்ப்பது குறித்து, மத்திய அரசு விடுத்த சட்ட பூர்வ நடவடிக்கைக்கு முதன் முதல் இணக்கம் தெரிவித்த மாநிலம் என்கிற பெருமை 'தமிழ்நாடு' அரசுக்குக் கிடைத்திருக்கிறது.

அரசின் கொள்கை கோட்பாடுகளுக்கு வலிவு தரும் வண்ணம் செயல்படுவது நாட்டு மக்கள் கடமையல்லவா? இவ்விதத்தில் பல்வேறு அமைப்புகளும்கூட தம்முடைய நடவடிக்கைகளை மாற்றிக்கொண்டு, மனிதாபிமானத்தோடு செயல்பட முன் வந்திருக்கின்றன.

குழந்தைத் தொழிலாளர் முறைத் தடுப்பின் அடிப்படையில், அண்மையில் திருப்பூரில், எழுத்தாளர்கள் முகாம் ஒன்று சிறப்புற நடைபெற்றது.

யூனிசெஃப் நிறுவனமும், சேவ் தன்னார்வ அமைப்பும் இரண்டு நாட்கள் இந்த முகாமை நடத்தின.

திருப்பூர் நகராட்சி ஆணையர் திரு. பாலச்சந்திரன், தொழிலாளர் நல வாரிய உறுப்பினர் திருமதி மு. கலோச்சனா ஆகியோர் முன்னிலை வகித்திட-கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தானம் இ.ஆ.ப., அவர்கள் இந்த முகாமைத் தொடங்கி வைத்தார். இந்த இரண்டு நாள் முகாம் தேவாங்கபுரம் நகராட்சிப் பள்ளி, பிருந்தாவன் ஓட்டல் ஆகிய இடங்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

புகழ்பெற்ற 57 எழுத்தாளர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு தத்தம் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

அவற்றுள் சிலர் ஆற்றிய உரையின் குறிப்பிடத்தக்க பகுதிகள் வருமாறு:

**ஜெயந்தன்:**

குழந்தைத் தொழிலாளர்கள் விதைநெல்லைப் போன்றவர்கள். குழந்தைகள்தான் வஞ்சனையின்றி இருக்க முடியும். மனித வாழ்க்கையில் சரியான பருவம் குழந்தைப் பருவம். அதைக் குழந்தைத் தொழிலாளிகள் தவற விடுகின்றனர். குழந்தைத் தொழிலாளர்கள் ஏன் முற்பட்ட ஜாதிகளிலிருந்து வருவதில்லை? அவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். படிப்பறிவில்லாத ஏழை மக்கள் வேலைக்கு அனுப்புகிறார்கள். சமூக வன்முறை இது. வளர்ப்பு மிருகமாகிறான் குழந்தை.



**பா. செயப்பிரகாசம்:**

'உலக மயமாக்கல், பொருளாதார சீர்திருத்தங்கள் மனிதர்களைப் பண்டப் பொருளாக்குகிறது. கிராமங்களும், மரபு சார்ந்த பண்பாடுகளும் சிதைந்து விட்டன. கல்வி என்பது வன்முறை ஆகிவிட்டது. உழைப்பும், கற்பனையும், விளையாட்டும் இணைந்து கல்வியைக் கற்கும் நிலை மாறிவிட்டது. சமூக மேன்மை குறித்த கருத்தாக்கங்களில் எழுத்தாளர்கள் ஈடுபடுதல் அவசியம். இன்றைய குழந்தைகளுக்குக் குழந்தை வயது உண்டு. குழந்தைப் பருவம்தான் இல்லை!"

**மேலாண்மை பொன்னுசாமி:**

'வறுமையே குழந்தைத் தொழிலாளர் பிரச்சினைக்குக் காரணம். குழந்தைகள் தங்கள் தொழிலாளர் நிலையிலான சோகங்களை அறியாமல் சந்தோஷப்படும் சூழல் துயரமானது. பெற்றோர்களின் விழிப்புணர்வு இப்பிரச்சினைக்கு மிகவும் அவசியம். குழந்தைகள் உழைப்பதோ, தொழில் கற்றுக் கொள்வதோ தவறில்லை. ஆனால் கல்வியையும், குழந்தைப் பருவத்தையும் இழந்து வெறும் தொழிலாளியாக நீடிக்கக் கூடாது.'

**'தன்னார்வக் குழுக்களும், செயலாக்கமும்' என்ற தலைப்பிலான அமர்வில் திண்டுக்கல் அமைதி அறக்கட்டளையைச் சார்ந்த பால்பாஸ்கர்:**

'பெரும்பான்மையான தொழிற்சாலைகளில் தொழிலாளர்களே தம் குழந்தைகளைத் தொழிலாளர்களாக்குகின்றனர். இது குடும்ப வருமானத்தை அதிகரிக்கச் செய்தாலும், உண்மையில் வயது வந்தவர்களின் வேலை வாய்ப்பை இது குறைக்கிறது. குழந்தைத் தொழிலாளர் குறித்த கணக்கெடுப்பு என்பது கண் துடைப்பாக இருக்கிறது".

**டாக்டர் ஜீவானந்தம்:**
**(தமிழகப் பசுமை இயக்கம், ஈரோடு)**

"குழந்தைத் தொழிலாளர்கள் பல்வகையான உடல் நோய்களுக்கு ஆளாகிறார்கள். பாலியல் சரண்டல் போன்றவை அவர்களை மன நோய்க்கும் இட்டுச் செல்கிறது. சுற்றுலாத் தலங்களில் குழந்தைகள் வேறு வகையான பாலியல் சுரண்டலுக்கு ஆளாகிறார்கள். சுற்றுச்சூழல் கேடு உள்ள இடங்களில் எல்லாம் குழந்தைகள் வெகுவாக பாதிக்கப்படுகிறார்கள்.

**டாக்டர் முருகநாதன்:**
**(திருப்பூர் சமூக சேவை அமைப்பு)**

'பிரச்சினை சிக்கலானது என்று ஒதுங்கிப் போகாமல் அணுக வேண்டி உள்ளது. கல்வியால் விழிப்புணர்ச்சியும், சிந்தனையும் வளரும். குழந்தைத் தொழிலாளர் உழைப்பு என்பதை விட மீட்பு என்பது சரியாக இருக்கும். தொடர்ச்சியான விழிப்புணர்வு பிரச்சாரங்கள், மாற்றுக் கல்வி இவை சரியான தீர்வுக்கு இட்டுச் செல்லும். குழந்தையும் தெய்வமும் ஒன்று என்கிறார்கள். இருவரும் கல்லாகிவிட்டதைத்தான் அப்படிச் சொல்கிறார்களோ என்னமோ!'

**தனுஷ்கோடி ராமசாமி:**

'குழந்தைகள் விளையாட்டை மறந்துவிட்டார்கள். குழந்தைப் பருவத்தை இழந்துவிட்டார்கள். குழந்தைகள் குழந்தைகளாக இருக்கும் வாய்ப்பைத் தர வேண்டும். காந்தியின் ஆதாரக் கல்வியை மறுபரிசீலனை செய்ய வேண்டும்'.

**தோப்பில் முகமது மீரான்:**

'பீடி சுற்றும் குழந்தைகள் வாழ்க்கை அவலமானது. தன் மனைவி கல்யாணத்தின் போது இவ்வளவு பீடி சுற்றினாள். பிறகு காச நோய் காரணமாகச் சுற்றும் பீடி அளவு குறைந்து விட்டது என்று கடிதத்தில் மூன்று முறை தலாக் என்று எழுதி விவாகரத்து பெறுவோர் உண்டு. இவ்வாறான நிலைமைகள் தவிர்க்கப்பட வேண்டும்'.

**கந்தர்வன்:**

'குழந்தைத் தொழிலாளியாக இருந்தவன் நான். மளிகைக் கடை, மாடு மேய்த்தல் உட்பட பல வேலைகளைச் செய்தவன். ஆனால் அதிலிருந்து மீண்டு கல்வி கற்று அரசாங்க வேலையில் இருக்கிறேன். தன்முனைப்பும், விடுபடுகிற உத்வேகமும் என்னுள் இருந்தன. என் அனுபவங்கள் பலவற்றைப் பதிவு செய்திருக்கிறேன்'.

**ரவிசுப்பிரமணியன்:**

'பெர்க்மனின் திரைப் படங்களில் அவரின் சிதைந்த பால்ய பருவத்தைக் காணலாம். தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், விளம்பரங்கள் மூலம் சிறு விழிப்புணர்வு அம்சங்களைக் கொண்டு செல்லலாம்'.

**ஞான ராஜசேகரன்:**

'மிகவும் மோசமான முறையில் குழந்தைகள் சினிமாவில் சித்திரிக்கப் படுகிறார்கள். கல்வி, வேலை வாய்ப்புகள் குறித்த நமது மதிப்பீடுகள், கணிப்புகள் மாற வேண்டும். குழந்தைகளின் மனோபாவங்களைச் சீராக்கும் குழந்தை இலக்கியங்கள் படைக்கப் பட வேண்டும். பிச்சை எடுக்கும் பழக்கத்திற்குக் குழந்தைகள் ஆட்படுவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்'.

பனியன் உற்பத்தியாளர்கள் சார்பில் பேசிய சம்பத்குமார், கே.பி. கோவிந்தசாமி ஆகியோர் ஏற்றுமதி தொழிலில் குழந்தைத் தொழிலாளர் பெருமளவில் குறைக்கப்பட்டு வருவதையும், சட்டங்களைச் சரியாக அமல்படுத்த முயல்வதையும்,

> ”
> **'குழந்தைத் தொழிலாளர்கள் விதைநெல்லைப் போன்றவர்கள்...வறுமையே குழந்தைத் தொழிலாளர் பிரச்சினைக்குக் காரணம்... தொழிலாளர்களே தம் குழந்தைகளை வேலைக்கு அனுப்புவது தவறு... குழந்தைகள் வேறுவகையான பாலியல் சுரண்டல்களுக்கு ஆளாகிறார்கள்...**
> “




ஒன்றுபட்ட கட்டுணர்வால் இதைத் தவிர்க்க இயலும் வகைகளையும் குறிப்பிட்டனர். முதல் நாள் நிகழ்ச்சிகளை பூவண்ணனும், சி.ஆர். ரவீந்திரனும் தொகுத்து வழங்கினர்.

**பூவண்ணன்:**

'குழந்தைத் தொழிலாளர்களை மீட்கிற பணியில் ஈடுபடுதல் அவசியம். ஆந்திராவில் ஒரு கிராமத்தில் களப்பணியில் ஈடுபட்டவர் ஒருவரைச் சந்தித்தேன். கனகாம்பரம் பூவை எடுக்கும் வேலை செய்யும் சிறார்கள். அவர்களை மீட்க அவர்கள் செய்யும் வேலையைப் பெற்றோர்க்கு கொடுத்து 10 மடங்குச் சம்பளம் அதிகம் கொடுத்த சிறுவர்கள் தவிர்க்கப்பட்டு பள்ளிக்கு அனுப்பப்பட்டனர்' என்றார்.

இரண்டாம் நாள் அமர்வுகளைத் தமிழ்நாடன் நெறிப்படுத்தினார். செ. கணேசலிங்கம் தன் பேச்சில் நடுத்தர விவசாயிகள் பாதிக்கு மேலான சதவீதமாய் உள்ள நாடுகள் அவர்களின் சிக்கல்களையும், அவர்களின் குடும்பக் குழந்தைகளின் நிலைமையையும் விவரித்தார். குழந்தைகளால் குடும்பமே உழைப்புச் சக்தியாவதை விளக்கினார். சோ. தர்மன் 'அரசின் திட்டங்களை அமல் படுத்துவதில் நிறையக் குறைபாடுகள் உள்ளன. தந்தையை இழந்த குடும்பத்தில் குழந்தைகள் ஏதாவதொரு தொழிலுக்குச் செல்ல நிர்ப்பந்திக்கப் படுகின்றனர். தொண்டு நிறுவனங்களும் திருப்தியாகச் செயல்படவில்லை. மூழ்கிப் போனபின்பு எழுத்தாளர்களைக் கூட்டி அவர்களின் அபிப்பிராயங்களைக் கேட்பது ஒவ்வொரு பிரச்சினையிலும் நடைபெறுகிறது. எழுத்தாளர்கள், கலைஞர்களின் முக்கியத்துவத்தை உணரத் தவறியதால் பல முட்டுக்கட்டைகளைக் காண முடிகிறது' என்றார்.

**சா. கந்தசாமி:**

'விவசாயம் வாழ்க்கையாகிப் போன தஞ்சையில் சிறுவயதில் விவசாயத்தைத் தொழிலாகக் கற்கும் சிறுவர்கள் குழந்தைத் தொழிலாளர் ஆவதில்லை. வாழ்க்கையையும் கற்று மேம்படுகிறார்கள்'.

**செ. யோகநாதன்:**

'அச்சுத் தொழிலில் குழந்தைகளின் உடம்பில் விஷம் போல் வர்ணங்கள் புகுந்து வாழ்நாளைக் குறைக்கின்றன. தமிழ்ப் பத்திரிக்கைகள், திரைப் படங்கள் குழந்தைகளுக்குச் சரியான வழிகாட்டியாக இல்லை. குழந்தைகளுக்கான இலக்கியம் மிகு கவனத் துடனும், தீவிர எண்ணத்துடனும் கொண்டு செல்லப்பட வேண்டும்'.



**கருணா. மனோகரன்:**



''இலாபநோக்கமுள்ள மூலதனம் உலகெங்கும் சந்தையை நோக்கி ஆதிக்கம் செலுத்துகிறது. அரசியல் தலைமை இல்லாமல் இயங்கும் தோற்றம் அபாயகரமானது. குழந்தைத் தொழிலாளர்களுக்கான தனித்த தொழிற்சங்கங்கள் அமைப்பது அவசியம். பணம் ஆளுமை சக்தியாகி உள்ளது, உடைபட வேண்டும்'.

**பொன்னீலன்:**

'குழந்தை படிக்கவோ, வேலை செய்யவோ - தங்களின் விருப்பதை சுயமாக வெளிப்படுத்த முடிவதில்லை. முந்திரித் தோட்டங்களில் குழந்தைகள் 12 மணி நேரம் சுரண்டப் படுகிறார்கள். விஞ்ஞானமுறை பாடங்களைக் குழந்தைத் தொழிலாளர்களுக்குத் தரவேண்டும்'.

பூமணி, சாந்தாதத், பாமரன், தாமரை, செல்லக் கணபதி, அம்சலட்சுமி போன்றோரும் தங்கள் கருத்துக்களை வழங்கினர்.

முகாமின் நிறைவுரையை ஞானி நிகழ்த்தினார். 'சந்தைப் பொருளாதாரம் இன்றைக்கு உலகளாவிய முதலாளித்துவம் வாழ்க்கையைச் சீரழித்துவிட்டது. வரலாற்றில் சாதாரண மனிதனின் பங்கு முற்றிலும் மறுக்கப்படுகிறது. மனிதம் விலை பேசி வாங்கப்படுகிறது. குழந்தைகளைப் போலவே பெண்கள், ஆதிவாசிகள், தலித்துகள் புறக்கணிக்கப் படுகிறார்கள். குழந்தைகள், தலித்தியம், சூழலியம், பெண்ணியம் போன்றவற்றை ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டு போராட வேண்டும்'.

மாலை அமர்வில் எழுத்தாளர்கள் நான்கு குழுக்களாக - பொன்னீலன், பூமணி, தனுஷ்கோடி ராமசாமி, ஞானி தலைமையில் கலந்துரையாடி விவாதங்களைத் தொகுத்து வழங்கினர்.

இரவில் எழுத்தாளர்கள் கலந்து கொண்ட பொதுநிகழ்ச்சி நடைபெற்றது. வாழ்த்துரை வழங்கிய திருப்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் சே. சுப்பராயன் பேசினார்:

'14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வி அளிக்கப்படவில்லை. கல்வி விலைபொருள் ஆகும்போது ஏழைகள் படிக்க வாய்ப்பில்லை. கி.பி.2030ல் கூட இந்தியாவில் 54 சதவீதம் மக்கள் எழுத்தறிவு இல்லாதவர்களாக இருப்பர் என 'யுனெஸ்கோ' புள்ளி விவரம் தெரிவிக்கிறது. கல்வி தரும் பொறுப்பை அரசு ஏற்க வேண்டும். அடிப்படை சமூக மாற்றம் இல்லாமல் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. பெற்றோர்க்குப் பெரும் பொறுப்பு உண்டு'.

குழந்தைத் தொழிலாளர்களை மையமாகக் கொண்டுள்ள சில திரைப்படங்களைப் பற்றிக் கட்டுரைகளைக் கொண்ட யமுனா ராஜேந்திரன் எழுதிய 'குழந்தைகளின் பிரபஞ்சம்' நூலை செ. யோகநாதன் வெளியிட்டார்.

'வேண்டாம் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை' - சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற அமராவதி, சாந்தாதத், க. வேணுகோபால், அம்சகோபால் முருகன், சங்கர் குமார், பாலகிருஷ்ணன் மல்லிக் ஆகியோருக்குப் பரிசுகளை வழங்கி ஞான ராஜசேகரன் பேசினார்.

சிறுகதைகள் இடம் பெற்ற 'பிஞ்சுக் கரங்கள்' நூலை ஜெயந்தன் வெளியிட்டுப் பேசினார். நொய்யல் பாதுகாப்புக் குழு தலைவர் நடராஜன் பெற்றுக் கொண்டார். குழந்தைத் தொழிலாளர் பிரச்சினையை மையமாக்கி தயாரிக்கப்பட்ட பூமணியின் 'கருவேலம் பூக்கள்' திரைக்கதை நூலை கருணா மனோகரன் வெளியிட்டார். பூமணி தன் திரைப்பட அனுபவங்களை விவரித்தார். எழுத்தாளர்களின் குழு விவாதங்கள் தீர்மானங்களாகப் படிக்கப்பட்டன. பாலகிருஷ்ணன் மல்லிக் நன்றி கூறினார்.

தொகுப்பு:
எல்.பி.எம். சுப்ரபாரதி மணியன்

# இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை (வரையறை)

தபால் பை எண்.2
அச்சங்குளம்-623 601, கமுதி வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

தந்தி : "இராம்நாடு ஸ்பின்"
பேக்ஸ் : 04564 - 21386 (பரமக்குடி)

தொலைபேசி எண்கள்:

ஆட்சியர்(தனி) : 04576-65212 (அபிராமம்)
அலுவலகம் : 04576-65237 (அபிராமம்)
ஆலை : 04576-65239 (அபிராமம்)
ஆட்சியர் இல்லம் : 04564-21386 (பரமக்குடி)

உற்பத்தியாகும் நூல்கள்:

| | | |
|---|---|---|
| 34நெ | 40நெ | கோன் நூல்கள் |
| 36நெ | 60நெ | |
| 20நெ | 40நெ | |
| 60நெ | 2/17நெ | |
| 2/40நெ | 2/60நெ | சிட்ட நூல்கள் |

எங்களது ஆலையில் நவீன இயந்திரங்களைக் கொண்டு மிகவும் தரமான துணிநூல் தயாரிக்கப்படுகிறது. எங்களது ஆலையில் உற்பத்தியாகும் நூல்கள் அனைத்தும் பாவுக்கு ஏற்றவை. துரிதப்போக்குவரத்து, வங்கி சேவை ஆகியன உள்ளன. நெசவுத்தொழில் நிறுவனங்களின் ஆதரவினை வேண்டுகிறோம்.

- ஆட்சியர்




"

**தமிழகத்தில் உள்ள மாவட்டங்கள், நகரங்கள், கிராமங்களில் - பொதுவான குறைபாடுகள் ஏதாவது அரசின் கவனத்திற்கு வராமல் விடுபட்டிருக்கலாம்; அப்படிப்பட்ட பொதுவான குறைகள் பற்றிச் சுருக்கமாக இப் பகுதிக்குப் பொதுமக்கள் எழுதலாம்; அது பற்றி உரிய உயர் அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு அக் குறைபாடு நீக்க வகை செய்து - அதுபற்றி இப் பகுதியிலேயே தெளிவு படுத்தப்படும்.**

"

# எங்கள் ஊர் பிரச்சினை

**பிரச்சினை:**

திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் தாலுகா, கடையம் ஊராட்சி ஒன்றியம் வெங்கடாம்பட்டி ஊராட்சி மன்றம் லெட்சுமியூரில் 2000 மக்கள் வசித்து வருகிறார்கள். அங்கு குடிதண்ணீர் கிணறு வறண்டுவிட்டது; மற்றும் ஆழ்குழாய்க் கிணறுகள் வறண்டுவிட்டது. காரணம் அந்த பகுதியில் பணக்கார விவசாயிகள் 700 அடி ஆழம் போர் போட்டு தண்ணீர் குடம் 50 பைசாவிதம் விற்பனை செய்கிறார்கள். அரசு போடும் போர்வெல் கிணறு ஆழம் 150இல் இருந்து 200 அடி ஆழம். எனவே அரசு 700 அடி ஆழம் 6½ இஞ்சி போர் போட்டு இந்த ஊர் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

- எஸ்.வீமன்
*தலைவர்*
*வெங்கடாம்பட்டி ஊராட்சி மன்றம்.*

**தீர்வு:**

லெட்சுமியூரில் வறட்சி நிவாரணத்திட்டத்தின்கீழ் 1 அடிபம்பு அமைக்க அனுமதி வழங்கப்பட்டு அமைக்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே உள்ள அடிபம்பில் (எண்.245இல்,) தூர் எடுக்கவும் அனுமதி வழங்கப்பட்டு தூர் எடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வெங்கடாம்பட்டி ஊராட்சி மன்றத்தலைவர் கோரியபடி சிறப்பினமாக 700 அடி 6½ ஆழ்குழாய் அமைப்பது தொடர்பாகத் திருநெல்வேலி உதவி நிர்வாகப் பொறியாளரின் தொழில்நுட்பத் தெளிவுரை கேட்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- எஸ். அப்பாத்துரை
*ஆணையாளர்*
*ஊராட்சி ஒன்றியம், கடையம்.*

**பிரச்சினை:**

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஒன்றியம் மேற்பனைக்காடு கிராமம், மாவட்டத்திலேயே பெரிய கிராமம். இவ்வூர் மக்கள் எல்லா வசதிகளையும் பெற வெளியூர்களுக்குத்தான் செல்லவேண்டும். இவ்வூருக்கு அறந்தாங்கியிலிருந்து தடம் எண்.1 பேருந்தும், ஆலங்குடியிலிருந்து தடம் எண்.15 பேருந்தும் வந்து செல்கின்றன. இந்த இரண்டு பேருந்துகளும் சரியான நேரத்திற்கு வருவதில்லை. சில சமயங்களில் வருவதே கிடையாது. இந்தப் பேருந்துகள் இரண்டும் மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்துள்ளது. பாதி வழியிலேயே நின்று பயணிகள் மிகவும் அவதிக்குள்ளாகின்றார்கள். இந்த இரண்டு

பேருந்துகளைத் தவிர வேறு எவ்வித பேருந்து வசதியுமில்லை. எனவே இவ்வூருக்கு இரண்டு பேருந்துகளையும் புதிய பேருந்துகளாகவும், சரியான நேரத்திற்கு வரும்படியும் இயக்கித் தருமாறு ஊர்மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

- எஸ்.கே.பஷீர் அஹமது
வேப்பங்காடு (மேற்கு)
அறந்தாங்கி ஒன்றியம்
புதுக்கோட்டை மாவட்டம்.

**தீர்வு:**

தற்போது நகரப்பேருந்து தடம் எண்.1க்கு டிஎன் 29/ எண்.0258 மற்றும் நகரப்பேருந்து தடம் எண்.15க்கு டிஎன்.63/எண்.0029 என்ற குறைந்த வயதுடைய பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. நகரப் பேருந்துகளுக்குப் பதிலாகக் காலக்கிரமத்தில் புதிய பேருந்துகள் இயக்கப்படும் என்பதையும், அதுவரையில் தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் மேற்படி நகரப்பேருந்துகளில் உள்ள பழுதுகளை முற்றிலுமாக நீக்கி, தினசரி பராமரிப்பு வேலைகளை நல்ல முறையில் பார்த்து, உரிய வழித்தடங்களில், உரிய கால அட்டவணைப்படி பயணத்தடையேதுமின்றி - இயக்கிட தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

- பொது மேலாளர்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை.

**பிரச்சினை:**

திருச்சி மாநகராட்சி 52ஆவது வார்டு பகுதியில் அடங்கிய கல்லங்காடு கிராமத்திற்குப் பாதை வசதி கிடையாது. கோர்ட் அருகில் உய்யக்கொண்டான் ஆற்றின் வடபுறம் கரையே எங்கள் கிராமத்தின் பாதை. இதைத்தவிர வேறுபாதை எங்கள் கிராமத்திற்குக் கிடையாது. இப்பாதை பொதுப்பணித்துறை ஆற்றுப்பாதுகாப்பு கோட்டத்திற்குச் சொந்தமானது. எனவே பொதுப்பணித்துறை ஆற்றுப்பாதுகாப்புக் கோட்டம் எங்கள் கிராமத்தின் கரைப்பாதையில் பொது மக்கள், வண்டி வாகனங்கள் செல்வதற்குத் தடை விதித்துள்ளது. ஆனால் எங்கள் கிராம மக்களுக்கு வேறுபாதை இல்லாத காரணத்தால் போக்குவரத்துப் பாதையாகப் பயன்படுத்தி வருகிறோம். கோர்ட் அருகில் உய்யக்கொண்டான் ஆற்றுப்பாலத்தில் இருந்து கிழக்குப்பக்கம் செல்லும் வலதுகரை, அண்ணாநகர், சுடுகாடு, காயிதேமில்லத் நகர் பாதையை மட்டும் திருச்சி மாநகராட்சி பாதை (தார்ச் சாலை) அமைத்துக் கொடுத்துள்ளது. இப்பாதையும் பொதுப்பணித்துறைக்குச் சொந்தமானது என்பது குறிப்பிடத்தக்கது. எங்கள் கிராமத்தின் பாதை பல ஆண்டுகளாகப் பராமரிப்பு இல்லாத காரணத்தால் குண்டும் குழியுமாக மிகவும் மோசமான பள்ளம் படுகுழியுமாக, மண் அரிப்பினால் பாதை சேதமடைந்து நாளுக்கு நாள் மேலும் மோசமடைந்து வருகிறது. இதனால், பள்ளி மாணவ, மாணவிகள், பொதுமக்கள் மற்றும் இருசக்கர வாகனங்கள் செல்வதற்கு முடியாத அளவு பாதை இருக்கிறது. பொதுமக்கள் நடந்து செல்வதற்குச் சொல்ல முடியாத அளவுக்கு துன்பப்பட்டுச் சிரமப்படுகிறார்கள். எனவே பொதுப்பணித்துறையின் அனுமதியுடன் திருச்சி மாநகராட்சிப் பாதை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

- ஆர். மலையாளி
கல்லங்காடு கிராமம்

**தீர்வு:**

கல்லங்காடு கிராமத்திற்குச் செல்லும் பாதையானது கோர்ட் அருகில் உள்ள உய்யக்கொண்டான் ஆற்றின் வடபுறம் உள்ள பாதை வழியாகத்தான் செல்லவேண்டும். இந்தப் பாதையானது பொதுப்பணித்துறை ஆற்றுப்பாதுகாப்பு கோட்டத்திற்குச் சொந்தமானது. எனவே, மாநகராட்சி நேரிடையாக இந்த பாதையைத் தார் சாலையாக அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள இயலாது. இருப்பினும், பொதுமக்கள் நலன் கருதி இந்த கல்லங்காடு கிராமத்திற்குச் செல்வதற்கு கோர்ட் செட்டிப்பாலம் முதல் பொதுப்பணித்துறை ஆற்று பாதுகாப்பு கோட்டம் கரையோர காவலர் குடியிருப்பு வரை (லஸ்கர்ஷெட் வரை) மாநகராட்சியே தார்சாலை அமைக்க ரூ.6,20,000க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, ஆற்றுப் பாதுகாப்புக் கோட்டம், திருச்சிராப்பள்ளி அவர்களின் அனுமதிக்காக அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவரிடமிருந்து அனுமதி கிடைத்ததும் கல்லாங்காடு கிராமத்திற்குத் தார்சாலை அமைக்கும் பணி நடைபெற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- ஜி.பிச்சை, பி.எஸ்ஸி.
மாநகராட்சி ஆணையர்
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி
திருச்சிராப்பள்ளி-1



**பிரச்சினை:**

நகராட்சி தேர்தல் நடந்து 4 மாதங்கள் ஆகியும் எங்கள் பகுதியில் எந்த அடிப்படை வசதியும் செய்து தரப்படவில்லை. தெருவிளக்குகள் சில 3 வருடங்களாக எரியவில்லை. நாகூர் தர்காவையும் புகைவண்டி நிலையத்தையும் இணைக்கும் பிரதான சாலையாக இது இருந்துவருவதால், இந்தப் பகுதிக்கு சகல அடிப்படை வசதிகளும் மிகவும் அவசியமாக உள்ளது. ஆகையால் சம்மபந்தப்பட்ட அதிகாரிகள் இதில் கவனம் செலுத்தி ஆகவேண்டியதைச் செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

எஸ். ஹெச். ஏ. காதர்
மக்கள் நலத் தொண்டர்
வார்டு எண்.9(நாகை நகராட்சி)
மனோரா வடபுறம் தெரு, நாகூர்.

**தீர்வு:**

நாகூர் பகுதியில் எல்லாத் தெருவிளக்குகளும் எரிய வைக்கப்பட்டுள்ளது. புகைவண்டி நிலையம் மற்றும் தர்காவை இணைக்கும் சாலையில் அவ்வப்போது பழுதாகும் தெருவிளக்குகளை உடனுக்குடன் எரியவைக்கப்பட்டு வருகிறது. தெருப்பள்ளி - தெரு சாலையை உயர்த்தி தார்ச்சாலையாகத் தற்போது அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி தெருவில் இருபுறமும் (சாலகம்) மழைநீர் வடிகால் கட்டப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- இ. தேவராஜ்
நகராட்சி ஆணையர்
நாகப்பட்டினம் நகராட்சி
நாகப்பட்டினம்.

**பிரச்சினை:**

காட்டுமன்னார்குடி வட்டம், கூடலையாற்றூர், காவாலகுடி, முடிக்கண்டநல்லூரார், இந்தக் கிராமங்கள் வெள்ளாறு அருகில் உள்ளது. எனவே சமீபத்தில் ஏற்பட்ட பயங்கர வெள்ளம் காரணமாக மணிலா வீணாகிவிட்டது. அந்த நிலங்களில் மணல்மேடுகள் போட்டுவிட்டது. அந்த மணல் மேடுகளை நிரவாமல் எந்தப் பயிரும் செய்ய முடியாது. எனவே மணல் மேடுகளை 'செயண்ட் புல்டோசர்' மூலம் அகற்றித் தரும்படி முறையிட்டும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. மணிலாவுக்கு நிவாரணமும் இல்லை. எனவே, அரசு இந்த மணல் மேடுகளை அகற்றித் தருவதற்கு ஆவன செய்யுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

- ஏ. கலியபெருமாள்
காவாலக்குடி.

**தீர்வு:**

சேதமுற்ற மணிலா பயிருக்காகக் கீழ்க்கண்டவாறு நிவாரணத்தொகை வேளாண்மைத்துறை மூலம் வழங்கப்பட்டுள்ளது.

| கிராமம் | வழங்கிய நிவாரணத்தொகை ரூ. |
|---|---|
| 1. கூடலையாத்தூர் | 23,925.00 |
| 2. காவாலக்குடி | 60,425.00 |
| 3. முடிகண்டநல்லூர் | 61,700.00 |



மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்தரவின் பேரில் 28.5.97 முதல் காவலக்குடி கிராமத்தில் வெள்ளத்தில் மணல் மேடிட்ட நிலங்களை மண்வாரி இயந்திரம் (Bull Doger) மூலம் இனாமாக அகற்றப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரா. இராதாகிருஷ்ணன்
ஆணையாளர்
ஊராட்சி ஒன்றியம்
கீரப்பாளையம்.

**பிரச்சினை:**

சேலம் மாவட்ட மைய நூலகத்தில் புத்தகங்கள் படிக்க அனுமதிப்பதில்லை. கார்டு வைத்திருப்பவர்களுக்கு மாத்திரம் படிக்கக்கொடுக்கிறார்கள். இதனால் லைப்ரரிக்கு வந்து படிக்கும் வயதானவர்கள் நாளிதழ் படித்துவிட்டுச் செல்கிறார்கள். இவ்வளவு பெரிய நூலகம் இருந்தும் எதற்கும் பிரயோசனம் இல்லாமல் உள்ளது. தாங்கள் தயைகூர்ந்து இந்நூலகம் நன்கு இயங்க, அதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இதுபற்றிக் கூறி நடவடிக்கை மேற்கொள்ளச், செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

- ஆர். சேகர்
சேலம்.

**தீர்வு:**

சேலம் மாவட்ட மைய நூலகத்தில் புத்தகங்கள் அனைவரையும் படிக்க அனுமதிக்கப்படுகின்றது. புத்தகங்கள் நூலகத்திலேயே படிப்பதற்கு அனைத்து வசதிகள் செய்யப்பட்டு வாசகர்கள் தினசரி நூலகத்தைப் பயன்படுத்திவருகின்றனர்.

மேலும் பொதுமக்கள் நூல்களை வெளியில் எடுத்துச்சென்று படிக்க ரூ.50 (ரூபாய் ஐம்பது மட்டும்) செலுத்தி நூலகத்தில் உறுப்பினராகி, கார்டுகள் கொடுக்கப்பட்டு புத்தகங்கள் வெளியில் எடுத்துச்சென்று படித்துவருகின்றார்கள். நூலகத்தில் உறுப்பினர்கள் இல்லாதவர்கள் நூலகத்திலேயே நூல்களைப் படிக்க அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இடைப்பட்ட

காலத்தில் நூலகர் பயிற்சி பொருட்டு 2 மாதம் புத்தக இருப்பு சரிபார்ப்புப் பணி நடைபெற்ற காலத்தில் மட்டும் சஞ்சிகைகள் படிக்கும் பகுதியில் நூல்கள் படிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இப்போது நூல் இருப்பு பகுதியிலே படிக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் இம்மைய நூலகத்தில் குடிமைப்பகுதி - அதாவது ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற உயர்படிப்புக்கான படிக்கும் வசதி நன்கு செய்யப்பட்டுள்ளது. இது அங்கு குறிப்புதவி பகுதியில் நடைபெற்று வருகிறது. இத்துடன் சஞ்சிகைகள் பகுதி, தினசரி தாள் படிக்கும் பகுதி போன்ற பிரிவுகள் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதையும் அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

- **முதல்நிலை நூலகர்**
*மாவட்ட மைய நூலகம், சேலம்.*

**பிரச்சினை:**

எங்கள் ஊர் திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டத்தில் மரக்காணம் யூனியனில் அமைந்துள்ள நகர் பஞ்சாயத்தைச் சார்ந்த நல்லம்பாக்கம். எங்கள் கிராமத்தில் பத்து வருடமாக சாராயம் விற்றுக்கொண்டு வருகின்றார்கள். அதனால் பல குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றனர். நாங்கள் எவ்வளவோ முயற்சிகள் எடுத்தும் பயன் ஒன்றும் இல்லை. பிரம்மதேசம் காவல் நிலையத்தில்



புகார் செய்தால் அவர்கள் மாமூல் வாங்கிக்கொண்டு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகையால் எத்தனையோ ஊர் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்த நீங்கள் எங்கள் ஊர் பிரச்சினையையும் தீர்த்து வைக்குமாறு இருகரம் கூப்பி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

- **ஊர்ப்பொதுமக்கள்**
நல்லம்பாக்கம் நகர் அஞ்சல்
*திண்டிவனம்.*

**தீர்வு:**

நல்லம்பாக்கம் கிராமத்தில் 16.6.97 அன்று மதுவிலக்கு வேட்டை நடத்தி, தன் வீட்டின் பின்னால் நாட்டுச் சாராயம் விற்றுக் கொண்டிருந்த இருவரைக் கைது செய்து, தடயங்களைக் கைப்பற்றி பிரம்மதேசம் காவல் நிலையத்தில் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டப்படி வழக்கு பதிவு செய்து, திண்டிவனம் குற்றவியல் நீதிபதி-2 அவர்கள் அலுவலகத்திற்குக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து அனுப்பப்பட்டது. மேற்படி நீதிபதி அவர்கள் எதிரிகளை விசாரித்து, தலா ரூ.400 அபராதம் விதித்து தண்டனை வழங்கினார்கள்.

மேலும், கிராமத்தில் முக்கியஸ்தர்களை அழைத்து மதுவிலக்குக் குற்றம் புரிபவர்கள் குறித்து காவல் நிலையத்தில் தகவல் தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டது. தொடர்ந்து, கிராமத்தில் மதுவிலக்கு வேட்டையாடி மதுவிலக்குக் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்க பிரம்மதேசம் உதவி ஆய்வாளர் தக்க நடவடிக்கை மேற்கொண்டுவருகிறார்.

- **காவல்துறைக் கண்காணிப்பாளர்**
*விழுப்புரம் மாவட்டம்,*
*விழுப்புரம்.*

**பிரச்சினை:**

தேனி மாவட்டத்தில் உள்ள டொம்புச்சேரி மற்றும் பத்திரகாளிபுரம், மீனாட்சிபுரம் ஆகிய கிராமத்திலிருந்து போடி நாயக்கனூருக்குப் பள்ளியில் படிக்க வரும் மாணவர்கள் மொத்த எண்ணிக்கை 300 பேருக்கு மேல் உள்ளனர். டொம்புச்சேரியிலிருந்து போடி, வழியாகச் செல்லும் பேருந்துகளின் எண்ணிக்கை இரண்டு. இதுவரை பள்ளி மாணவர்களுக்கு பேருந்து வசதி இல்லை. இப்பகுதியில் செல்லும் பேருந்துகள் பள்ளி மாணவர்களுக்குத் தேவையான நேரத்தில் கிடைப்பதில்லை.

பள்ளி நேரத்திற்குச் செல்லப் பேருந்து வசதியில்லாததால் பள்ளிக்கு நேரத்திற்குச் செல்ல முடியவில்லை. இதனால் பள்ளி மாணவர்கள் தலைமை ஆசிரியரால் தண்டிக்கப்படுகிறார்கள். இப்பகுதியில் மாணவர்களுக்கென பள்ளி நேரத்திற்கு டொம்புச்சேரி கிராமம் வரை இரண்டு பேருந்துகள் விட 'தமிழரசு' மூலம் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**— பள்ளி மாணவ, மாணவிகள்**
*போடிநாயக்கனூர்*

**தீர்வு:**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திலிருந்து (மதுரை) போடி-தேனி வழி மீனாட்சிபுரம், பத்ரகாளிபுரம், டொம்புச்சேரி, உப்புக்கோட்டை மற்றும் போடேந்திரபுரம் வழித்தடத்தில் 21 தனி நடைகளும், போடி-பிமீனாட்சிபுரம் தடத்தில் 4 தனி நடைகளும் மற்றும் தேனி-பத்ரகாளிபுரம் வழி டொம்புச்சேரி 2 தனி நடைகளும் இயக்கப்பட்டு வருகிறது. பி. மீனாட்சிபுரம் கிராமத்திலுள்ள மாணவ மாணவியர்கள் போடியிலுள்ள பள்ளிகளுக்கு உரிய நேரத்தில் செல்லும் வகையில் பிமீனாட்சிபுரத்தில் காலை 8.35க்கு புறப்படும்படியாகவும், போடியில் மாலை 5.05க்கு பள்ளி முடிந்து பி. மீனாட்சிபுரம் செல்லும் வகையில் கால அட்டவணை நிர்ணயம் செய்யப்பட்டு கூடுதல் பேருந்து வசதி செய்து தரப்பட்டுள்ளது.



தற்போதுள்ள பேருந்து வசதிகள் நீங்கலாக, மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வகையில் கூடுதல் பேருந்து வசதி செய்து தரக்கோரியுள்ளபடியால் புதிய பேருந்துகள் ஒதுக்கீடு செய்து புதிய வழித்தடங்கள் இயக்கப்படுகின்ற பொழுது இக் கோரிக்கை குறித்து ஆய்வுசெய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- **நிர்வாக இயக்குநர்**
*தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம்,*
*மதுரை.*

**பிரச்சினை:**

எங்கள் கிராமத்தில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். எங்கள் கிராமத்தில் பல சிற்றூர்கள் உள்ளது. பள்ளி-கல்லூரி செல்லும் மாணவ



மாணவியர்கள் படித்தவர்கள் அதிகம் இருந்தும் நூலக வசதி கிடையாது. கிராம மக்கள் தங்களது அறிவுத் திறனைப் பெருக்கிக் கொள்ள ஒரு கிளை நூலகம் அமைத்து கொடுத்தால் பெரிதும் உதவியாக இருக்கும். இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மனுக்கள் கொடுத்தும் பலன் இல்லை. எனவே, கிளை நூலகம் ஏற்படுத்திக் கொடுக்க உதவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

- **கே.எஸ்.கணேசன்**
*தலைவர், டாக்டர் அம்பேத்கர் நற்பணி*
*மன்றம், டாக்டர் அம்பேத்கர் நகர்*
*கல்விளை அஞ்சல், செம்மறிகுளம் கிராமம்*
*திருச்செந்தூர் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.*

**தீர்வு:**

அரசாணை எண்.66, கல்வி நாள் 30.1.96ல் 5,000 மக்கட் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களில் ஊர்ப்புற நூலகம் திறக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய அரசாணையில் தூத்துக்குடி மாவட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள ஊர்ப்புற நூலகங்களில் செம்மறிகுளம் கிராமம் இடம் பெறவில்லை.

மேலும், நூலகம் திறப்பதற்கு ஐந்து நிபந்தனைகள் வகுக்கப்பட்டுள்ளது. அவையாவன:

1. நூலகம் இயங்குவதற்கு வாடகை இல்லாத கட்டிடம் தரப்பட வேண்டும்.

2. பின்னால் நூலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கு 5 செண்ட் முதல் 10 செண்ட் வரை காலிமனை மாவட்ட நூலக ஆணைக்குழு பெயரில் பத்திரப்பதிவு செய்து தரப்படுதல் வேண்டும்.

3. ரூ.1000 வீதம் தொகை செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5. ரூ.2000 மதிப்புள்ள தளவாடங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட வேண்டும்.

மேற்கூறிய ஐந்து நிபந்தனைகளையும் அவ்வூர் கிராம மக்கள் நிறைவேற்றித்தரும் பட்சத்தில் சிதம்பரனார் மாவட்ட நூலக அலுவலரை நேரில் சந்தித்து ஆவன செய்யும்படி கேட்டுக்கொண்டால் பொதுமக்களின் ஒத்துழைப்பு இல்லாத கிராமங்களில் ஏதேனும் ஒன்றில், தங்கள் கிராமம் பரிந்துரை செய்து நூலகம் திறக்க ஆவன செய்யப்படும் என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

- **இரா. கண்ணன்,**
*பொது நூலக இயக்குநர்*
*சென்னை-2.*

**பிரச்சினை:**

எங்கள் ஊர் கடம்பூர் வட்டம் விளாத்திகுளம் தாலுகா புதூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. எங்களது கே. துரைச்சாமிபுரம் கிராமத்தில் ஆர்.சி. தொடக்கப்பள்ளி சுவர் ஐந்து வருடங்களுக்கு முன் இடிந்து விட்டது. இப்பொழுது குழந்தைகள் பள்ளி நடத்தும் இடம் கிறிஸ்தவ கோவில் முன்னால் உள்ள மரத்தடியில், மழைக்காலங்களில் இடியும் நிலையில் உள்ள கிளஸ்டர் தேவாலயத்தில் வைத்து நடத்தப்படுகிறது.

சத்துணவு சமைப்பதற்கு இன்றுவரை கட்டிடம் இல்லாத காரணத்தினால் சத்துணவு அமைப்பாளர் அவர்களது சொந்தச் செலவில் வெயில்தாங்க பந்தல் போட்டு நடத்திவருகின்றார்கள். மழைக் காலங்களில் நனைந்துகொண்டு சமையல் செய்து அமைப்பாளரும், சமயலர் அவர்களும் அதிக சிரமத்துக்கு ஆளாகிறார்கள். மேற்படி ஆசிரியர் அவர்களே எங்கள் கிராமத்து நிலைமையும், பக்கத்துப் பள்ளிக் குழந்தைகள் நிலையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும்தெரியப்படுத்தி எங்கள் கிராமத்துப் பள்ளிக்கும் சாலை செப்பனிட்டு பஸ் போக்குவரத்து வசதிக்குத் தீர்வுகாணுமாறு மிகவும் தாழ்மையுடன் விண்ணப்பிக்கின்றேன்.

- **வி. செல்வராஜ்**
*தலைவர், ஊராட்சி மன்றம்*
*கே.துரைசாமிபுரம்.*

STANCO

**Granite Division**

Admn-office :
1/3, Thiruthangal Road,
Post Box No. 299,
Sivakasi - 626 123. S.INDIA.

23366 (OFFICE)
24856 (WORKS)

Telex : 0448-214 FORT
Fax : (91) 04562 - 72074 / 72543

WE PRODUCE ONLY
SIVAKASI YELLOW GRANITE BLOCKS

மருத்துவம்:

# கண்கள்

- டாக்டர் பி. குமாரவேல்
- டாக்டர் எஸ். கணேசன்

"உடல் உறுப்புகளில் உயர்வானது கண்தான் என்று கவிஞர்கள் பாடுவார்கள். கண்கள் - பார்வைகள் பற்றியெல்லாம் உலகப் பொதுமறையாம் திருக்குறளே விளக்குகிறது. அப்படிப்பட்ட கண்பார்வையைப் பழுதுபடாமல் பாதுகாப்பது எப்படி என்று தெளிவாக்கும் மருத்துவக் கட்டுரை இது:"

**கண்பார்வைக் குறைவு யார் யாருக்கு ஏற்படுகிறது?**

பொதுவாகக் கண்பார்வைக் குறைவு என்பதை வரையறுப்பது - மிகக் குறைந்த பார்வை அல்லது கண்ணில் சிறிதும் ஒளி தெரியாத நிலைமை ஆகியவற்றைக் கொண்டே ஆகும். இந்நிலைமை குழந்தைகள் முதற்கொண்டு வயதானவர்கள் வரை, மிகப் பரவலாகக் காணப்படுகிறது. இதைப் பற்றித் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டியது ஒவ்வொருவருக்கும் அவசியமாகும். ஏனெனில், இக்குறைபாடுகள் பலவற்றை நம்மால் எளிதாகத் தடுக்க முடியும்.

**கண் பார்வைக் குறைவு என்பது வயதானவர்களுக்குத் தான் அதிகமாக வருகிறது என்பது பொதுவான கருத்து. ஆனால் குழந்தைகளுக்கும் வரும் என்கிறார்களே?**

குழந்தைகளுக்கு வரும் என்பது உண்மைதான்: அவ்வாறான கண்பார்வைக் குறைவு குறித்து அறிந்து கொள்வது மிகவும் அவசியம். ஏனெனில் இவற்றைத் தடுக்கவில்லையென்றாலோ, அல்லது ஆரம்ப நிலையில் கவனிக்கவில்லையென்றாலோ அக்குழந்தை உயிரோடு இருந்தும் வாழ்நாள் முழுவதும் பார்வையற்ற நிலையிலேயே துன்பத்தோடு வாழவேண்டிய கட்டாயம் ஏற்படும். ஒரு குழந்தைக்கு அது பிறந்தது முதல், பார்வை சரியில்லை என்பதைப் பெற்றோராலேயே எளிதாகக் கண்டுபிடிக்க இயலும். சிலசமயங்களில் பிறந்தது முதலே கண்ணில் புரை வளர்ந்த நிலை அல்லது கண்ணில் நீரழுத்த நோய் (Glaucoma) என்பவை வர வாய்ப்புண்டு. இக்கண் புரைக்கு முக்கியக் காரணம் மிகவும் நெருங்கிய சொந்தத்தில் திருமணம் செய்து கொள்வது. மகப்பேறு காலத்தில் தாய்க்குப் போஷாக்கான உணவு கிடைக்காமை, சில வகையான அம்மை நோயினால் ஏற்படும் பாதிப்பு ஆகியவை பிற காரணங்களாகும். இவற்றை நம்மால் எளிதாகத் தடுக்க இயலும். அப்படிப்பட்ட பார்வைக் குறைவைக் கவனித்து அறிந்தால், உடனடியாகக் கண் மருத்துவரிடம் அழைத்துச் சென்றாக வேண்டும். புரைக்கோ, கண் அழுத்த நோய்க்கோ அறுவை சிகிச்சை மூலம் எளிதாக நிவாரணம் கிடைக்கும்.

அடுத்தது, குழந்தைகளுக்குச் சத்துக் குறைவினால் உண்டாகும் சில நோய்களும் உண்டு. எல்லோருக்கும் வைட்டமின்-ஏ என்பது குறைவதால்தான் கண்பார்வை குறைகிறது என்ற ஒரு பரவலான கருத்து உள்ளது. ஆனால் வைட்டமின்-ஏவுடன் புரதம் (Protein), கார்போ ஹைட்ரேட் (Carbo Hydrate) ஆகியவை குறையும் போதுதான் நிலைமை மிகவும் தீவிரமாகிறது. உதாரணமாக ஒரு குழந்தைக்கு வயிற்றுப் போக்கு என்று வைத்துக் கொள்ளுங்கள்; அதை ஆரம்ப நிலையிலேயே

# HOTEL VASANTHAM

*LIC Colony Road, (Opp. New Bus Stand) Salem-636 004.*
*Ph : 444485 (8 Lines) Fax : 0427-447627*

★ CENTRALLY AIRCONDITIONED ROOMS

★ HOT & COLD WATERS

★ ROUND THE CLOCK CHECK IN/CHECK OUT SERVICES

★ DIRECT DIALING OF STD/ISD/LOCAL

★ DISH ANTENNA CABLE SYSTEMS.

★ VASANTHA PRIYA A/C. FOR PURE VEGETARIAN CHOICES

★ MAHARAJA BAR FOR YOUR COCKTAILS

★ VASANTHAM CONFERENCE HALL AND BONQUET HALL A/C.

- FOR YOUR CONFERENCE AND MINI PARTY'S.

★ VASANTHAM TRAVELS FOR YOUR SAFE TRAVEL LINGS

★ MAJOR CREDIT CARDS ARE ACCEPTED.




கவனிக்கவில்லையானால் மேற்சொன்ன சத்துக்கள் அனைத்தும் உடலில் அதிக அளவில் குறைகிறது. இவற்றால் உடலில் மற்ற பாகங்கள் பாதிக்கப்படுவதோடு கண்ணும் மோசமாகப் பாதிக்கப்படுகிறது. Xerosis, Keratomalacia மற்றும் மாலைக் கண்நோய் ஆகியவை இதன் விளைவுகளாகும். Keratomalacia என்பது வந்தால் கண்ணின் கருவிழி (Comma) முற்றிலும் அழிந்து விடும்; பிறகு வைத்தியம் செய்வது மிகவும் கடினம். ஆனால் Xerosis மற்றும் மாலைக் கண்நோய் ஆகியவை வந்தால் தகுந்த ஊட்டச்சத்து மற்றும் நேராக வைட்டமின் ஏ ஆகியவற்றைக் கொடுத்தால், மேலும் பார்வை மோசமாகாமல் தடுக்கலாம். இந்த நிலைமை பெரும்பாலும் 6 மாதம் முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு - அதாவது தாய்ப் பாலை நிறுத்தும் நிலையில்தான் அதிக அளவில் காணப்படுகிறது.

**கண்ணின் பார்வையைக் காப்பதற்கான ஊட்டச் சத்துக்கள் யாவை?**

எளிதாக எங்கும் கிடைக்கக் கூடியது, மலிவானது கீரை. இது தவிர காரட், முள்ளங்கி, பப்பாளி, பால், முட்டை, மீன் ஆகியவற்றிலும் வைட்டமின் ஏ சத்து நிறைந்துள்ளது. இவற்றை நாள்தோறும் உணவில் சரியாகக் கலந்து கொடுத்து வந்தால் இவ்வாறான கண் வியாதிகளே வராது.



**குழந்தைகளுக்கு வேறு ஏதாவது வழியில் பார்வைக் குறைவு ஏற்பட வாய்ப்புண்டா?**

உண்டு. உதாரணத்திற்கு, விளையாடும் குழந்தைகள் பலவாறாகக் கண்களில் காயம் ஏற்படுத்திக் கொள்ளும், கூர்மையான பொருட்களால் விளையாடுதல், பட்டாசு போன்றவற்றைத் தகுந்த பாதுகாப்பில்லாமல் கொளுத்துதல் மற்றும் சில இரசாயனப் பொருள்கள் கண்ணில் தெரிந்தோ தெரியாமலோ பட்டுவிடுதல் ஆகியவை சில உதாரணங்களாகும். இவற்றை எளிதாகத் தடுக்கலாம், பெற்றோர்கள் விழிப்புடன் இருந்தால். மேலும், காயம் ஏற்பட்டவுடனேயே மருத்துவரிடம் சிகிச்சைக்கு வந்தால் மேலும் மோசமாகப் பாதிக்காமல் தடுக்கலாம்.

இதுதவிர, பார்வைக் குறைபாடுகள் (Refractive errors) கிட்டப்பார்வை அல்லது தூரப் பார்வை போன்றவை இருந்தாலும் அதை ஆரம்பத்தில் கண்டுபிடித்துச் சரிசெய்ய வேண்டும். இதைப் பள்ளியில் உள்ள ஆசிரியர்களே கலபமாகக் கவனித்து அறியலாம். ஒரு மாணவன் வகுப்பில் கரும்பலகையில் உள்ளதைக் காண மிகவும் அருகில் வந்து பார்த்தாலோ, அல்லது புத்தகத்தை முகத்துக்கு அருகாமையில் கொண்டு படித்தாலோ இக்குறைபாடு உள்ளது என்று அறியலாம்.

**இதைச் சரிசெய்யவில்லையென்றால் என்ன ஆகும்?**

இதன்மூலம் ஒரு கண்ணோ அல்லது இரு கண்களுமோ முழுவதுமாகச் செயலிழக்க வாய்ப்புண்டு. அதிக அளவில் மாறுகண் (Squit) குழந்தைகளிடத்தில் காணப்படுவதற்குப் பார்வைக் குறைபாட்டைச் சரி செய்யாததே காரணம் ஆகும். தகுந்த மூக்குக் கண்ணாடி அணிவதால் இதைத் தவிர்க்க முடியும். ஆனால் பெற்றோர்களுக்கு, சிறிய வயதிலேயே குழந்தைக்குக் கண்ணாடியா என்கிற ஒருவித அச்சம், நிலைமையை மோசமாக்கி விடுகிறது.

**வாலிப வயதில் கண்பார்வை குறைவதற்கான காரணங்கள் யாவை?**

வாலிப வயதில் முக்கியமாகத் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்கள் தகுந்த பாதுகாப்புக் கவசங்கள் அணியாததாலும், சிறிய காயங்களுக்கோ, எந்தப் பொருளின் பிசிரோ விழுதல் போன்றவற்றுக்கு உடனடியாகச் சிகிச்சை பெறாததாலோ, சாலை விபத்துக்களாலோ கண்பார்வை குறையும் வாய்ப்புகள் உண்டு. இவற்றிலும் ஆரம்பத்திலேயே பாதுகாப்புடன் இருந்தாலோ, அல்லது உடனடியாகச் செயல்பட்டாலோ பார்வையைக் காக்கலாம். கிராமங்களில் நெற்கதிரடித்தல், முள் அடித்தல் போன்றவற்றால் கண்ணுக்கு ஆபத்து விளையும். அவர்கள் முதலுதவி என்ற பேரில் தேவையற்ற கைமுறை வைத்தியங்களைச் செய்துவிட்டு, வியாதி முற்றிய நிலையில் வருவதால் பார்வை இழப்பு உண்டாகிறது.

# உதகமண்டலம் சோஷியல் சர்வீஸ் சொசைட்டி,

## உதகமண்டலம்

**பதிவு எண்.14/63**

நீலகிரி மாவட்டத்தில் உதகை சமூக சேவா சங்கம் கடந்த 30 ஆண்டுகளாக சமூக நலப் பணிகளை ஆற்றி வருவது கண்கூடு. சிறப்பாக பெண்கள் முன்னேற்றத்திற்காக பல நல திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

பெண்கள் சங்கங்களின் வழியாக விழிப்புணர்ச்சி கல்வி அளித்து வருகிறது. 199 மகளிர் அமைப்புக்கள் இதன் வழியாக கல்வி, பொருளாதார சமூக மேம்பாடு அடைந்து வருகிறது. மேலும் ஒவ்வொரு ஆண்டும் ஊட்டி, கூடலூர் (நீலகிரி), தாளவாடி, கொங்கர் பாளையம் (பெரியார்) போன்ற இடங்களில் மார்ச் திங்கள் பெண்கள் பேரணிகளை முன்னின்று நடத்தி ஆண்களுக்குப் பெண் சரிநிகர் சமம் என்ற கருத்தை தெளிவுபடுத்தி வருகின்றது.

*பெண்கள்:* சுய வேலைவாய்ப்பை மனதில் நிறுத்தி தனிப்பட்ட பயிற்சிகளை அளித்து சுயமாக தொழில்செய்ய ஊக்குவித்து வருகிறது. கறவை மாடுகள், தையல் இயந்திரங்கள் சிறு தொழில்கள் போன்ற வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களுக்கு கடனுதவி அளித்து அவர்களின் தன்னம்பிக்கையை வெளிக்கொண்டு வருகிறது.

இளைஞர்களின் வருங்கால வாழ்வை தொலைநோக்குடன் ஆய்வுசெய்து பல தொழிற்கல்விகளை அளித்து வருகிறது புனித இருதய தொழிற்கல்வி மையம் கடந்த 10 ஆண்டுகளாய் பல தொழிற்பயிற்சியாளர்களை வெளிக்கொண்டு வந்துள்ளது.

நீலகிரியில் மட்டுமல்ல, பெரியார் மாவட்டத்தில் தாளவாடியை மையமாக வைத்து மக்கள் குழுக்களை உருவாக்கி கல்வி அளித்து தொழில் தொடங்க கடனுதவி செய்து வருகிறது. உயர்நிலைப்பள்ளியை முடிக்க முடியாத இளம் பெண்களுக்கு தையல், மனையியல், வீட்டுப்பிராணிகளைப் பேணுதல், சமையல், தறி, கயிறு பின்னுதல் பிளாஸ்டிக் கூடைகள் பின்னுதல் போன்ற சுய தொழிற்பயிற்சிகளை இலவசமாக அளித்து பல இளம் பெண்களுக்கு ஒளி விளக்காக இருந்து வருகிறது.

பல்வேறு நலத்திட்டங்களை வங்கிகள், அரசுத்துறை நிறுவனங்கள், நல்மனம் கொண்டோர் உதவியுடன் இந்த சமூக நல சங்கம் மனித மேம்பாட்டிற்கு மேன்மேலும் உதவிக்கரம் நீட்டி வருகிறது. இந்த சமூக நல சங்கம் ஒரு கத்தோலிக்க கிறிஸ்தவர் நிறுவனமாயினும் இனம், மொழி, சமயம் போன்றவைகளை கடந்து மனித நேயம் ஒன்றை முக்கியம் என்ற கருப்பொருளை மனத்தில் இருத்தி பணி செய்து வருகிறது.

*சுகாதாரம்* : 150 ஆதிதிராவிட இளம் பெண்களுக்கு சுகாதார துறையுடன் இணைந்து 21 நாட்கள் தாய் சேய் நலப்பயிற்சிகள் அளித்து சான்றிதழும் ரூ.500 உதவித்தொகையும் அளித்து வருகிறது. கடந்த 2 ஆண்டுகளாக தீவிர போலியோ ஒழிப்பு முகாம்களுக்கு பல்வேறு வகையில் உதவி செய்து மக்கள் அனைவரும் இதில் ஈடுபாடு கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது. 1996ஆம் ஆண்டு குன்னூர், ஊட்டியில் 200 பெண்களுக்கு சமூக, பொருளாதார சுகாதார மாதப்பயிற்சிகளை அளித்து வந்தது பல பெண்களின் முன்னேற்றத்திற்கு அடிகோலியது.

அரசு சாராத நீலகிரி, பெரியார் மாவட்ட சமூக நல அமைப்புகளை ஒருங்கிணைந்து (NGOs Forum) பொது நலனுக்காக குரல் கொடுத்து வருகிறது. சமூக நலத்துறை, இன்சூரன்ஸ், விவசாயத்துறை, மேற்படி அரசு இயந்திரங்களை மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தி பல நலத்திட்டங்களை வழங்கிவருகிறது.

தலித் மக்கள் பழங்குடியினர்கள் போன்ற சமுதாயத்தில் நலிவடைந்த மக்களை அடையாளங்கண்டு அவர்களை ஒருங்கிணைத்து சமுதாய விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி வருகிறது.

கிராமங்களில் உள்ள பெண்கள், குழந்தைகள் நல மேம்பாட்டுத்திட்டத்தில் 1000 பெண்களுக்கு பயிற்சி அளித்து வருகிறது.

வீடில்லாத ஏழை மக்களுக்கு வீடுகட்ட உதவி அளித்தும் புயல், வெள்ளம் ஏற்பட்ட காலத்தில் பாதிக்கப்பட்ட பல ஏழைமக்களுக்கு வீடுகளை பழுதுபார்க்கவும் உதவி அளித்து வருகிறது.

சுருங்கக்கூறின் உதகை சமூக நல சங்கம் மனித நேயத்தை மையமாக வைத்து 100 பணியாளர்களின் அயராத உழைப்பாலும் தவத்திரு. ஏ. ஆர். அலெக்ஸ், இயக்குநரின் ஊக்குவிப்பு ஒருங்கிணைப்பு வழிகாட்டுதல் வழியாகவும் ஒவ்வொரு ஆண்டும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பல நூறு மக்கள் மேன்மை அடைந்து சுயகாலில் நிற்கும் அளவுக்கு உயர்த்தப்படுகிறார்கள்.

*பாதர் ஏ. ஆர். அலெக்ஸ்*
*இயக்குநர்*



**ர்வு:**

கே.துரைசாமிபுரம் கிராமத்தில் பழுதடைந்துள்ள டி.நி.ஏ.பள்ளி ஊராட்சி ஒன்றியக் கட்டுப்பாட்டின் கீழ் இல்லை என்றும், அப்பள்ளி தனியார் நிர்வாகத்தின் கீழ் உள்ளதால் இவ்வொன்றியத்தின் மூலம் மேம்பாடு செய்ய இயலாது என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், அப்பள்ளிக்கட்டிடம் தனியார் நிறுவனத்தின் கீழ் உள்ளதால் பள்ளி சத்துணவு சமையல் கூடம், அரசு விதிமுறைகளின்படி ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் செய்ய இயலாது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது. சத்துணவு சமையல் கூடம் உடன் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்படி பள்ளி நிர்வாகத்தினருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

*- ந. கருப்பசாமி*
*ஆணையாளர்*
*ஊராட்சி ஒன்றியம், புதூர்.*

**பிரச்சினை:**

திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் வட்டம், பெருங்காட்டூர் ஊராட்சியில் சுமார் 15 வருடங்களுக்கு முன்பு வாராந்திரச் சந்தை நடைபெற்று வந்தது. தற்சமயம் மேற்படி சந்தை நடைபெறவில்லை. ஊராட்சி மன்றங்களின் தேர்தல்கள் முடிவுபெற்ற நிலையில் ஊராட்சிக்கு நல்ல வருமானம் கிடைக்க வாய்ப்பு அதிகம் உள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு, பெருங்காட்டூர் ஊராட்சி மன்றத்தின் முதல் கூட்டத்திலேயே தீர்மானம் நிறைவேற்றி (தீர்மானம் எண்.5 - ஆர்.சி.என்.1/96 நாள் 12.12.1996) வெம்பாக்கம் ஒன்றிய ஆணையாளர் அவர்களுக்கு 17.12.1996 நாளிட்ட கடிதத்தில் அனுப்பிவைக்கப்பட்டது.

ஆனால் அதற்கான (வாரச்சந்தை) நடைபெறுவதற்கான வழிவகை செய்யவில்லை. மீண்டும் இக்கிராமத்தில் வாரச்சந்தை பெற பொதுமக்களின் ஒத்துழைப்பும் அதிகம் கிடைக்க வாரச்சந்தை நடைபெற உடன் ஆவன செய்வதுடன் - வழிவகை செய்துதருமாறும் பணிவுடன் வேண்டுகிறேன்.

ஜெ. பரதமணி
*பெருங்காட்டூர் ஊராட்சி மன்ற உறுப்பினர்*
*வெம்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், செய்யார்வட்டம்,*
*திருவண்ணாமலை மாவட்டம்.*

**தீர்வு:**

பெருங்காட்டூர் ஊராட்சியில் ஏற்கெனவே 16 ஆண்டுகளுக்கு முன்பு வாராந்திர சந்தை நடைபெற்றது எனவும் அதன்பிறகு அக்கிராம வாராந்திர சந்தை ஏலம் எடுக்க எவரும் முன் வராததினால் ஏலம் நடத்தப்படவில்லை எனத் தெரியவருகிறது. மேலும் தற்போது வாராந்திர சந்தை ஆரம்பிக்கலாம் என அக்கிராமத் தலைவர் மற்றும் பொட்டுக்குடிகள் தெரிவித்துள்ளதன் பேரில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*- கு. சண்முகம்*
*ஆணையாளர், ஊராட்சி மன்றம்,*
*வெம்பாக்கம்.*



☎: 22101

தந்தி : 'முருகோசில்க்'

# காஞ்சிபுரம் முருகன் பட்டு நெசவாளர்
# கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் லிமிடெட், நெ.ஜி.1653

**79, காந்தி ரோடு, காஞ்சிபுரம்-631 501.**

*(குளிர்பதனம் செய்யப்பட்டது)*

**தரமான காஞ்சிபுரம் பட்டு சேலைகள், பாவாடைகள் -**
**நியாயமான விலையில் வாங்க சிறந்த இடம்.**

## விற்பனை நிலையங்கள்

1. காஞ்சி கூட்டுறவு பட்டு,
உம்மிடியார் ஷாப்பிங் சென்டர்,
811, அண்ணாசாலை, சென்னை.

2. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்
சி-47, இரண்டாவது அவன்யூ,
அண்ணாநகர் பிளாசா,
சென்னை-40.

3. சுவேதா சில்க்ஸ்,
253, இரண்டாவது அஹ்ரஹாரம்,
சேலம்.

4. எஸ். கே. சுந்தரம்,
19, திருவேங்கடசாமி தெரு,
ஈரோடு.

5. ஜெயலக்ஷ்மி சில்க்ஸ்,
71, போலீஸ் வெல்பெயர் காம்ப்ளக்ஸ்,
அனந்தபூர்.

6. கலாமந்தீர் சில்க்ஸ் & சாரீஸ்,
12/120, சிவாலயம் தெரு,
புரதட்டூர்.

7. ஓம் ஸ்ரீ லக்ஷ்மி சில்க்ஸ்,
11/498, சர்ச் தெரு,
ஓ.டி.கே. சாலை, சித்தூர்.

8. மகாலக்ஷ்மி சில்க்ஸ்,
7-3-276, மெயின் பஜார்,
இந்துப்பூர்.

9. ஸ்ரீ வெங்கடேஸ்வரா சில்க் ஹவுஸ்,
206, ருக்மணி பில்டிங்ஸ்,
சிக்பெட், பெங்களூர்.

10. திருவேணி சில்க்ஸ் & சாரீஸ்,
8-9-10, அசோகா ரோடு,
தும்கூர்.

11. ஸ்ரீ சாய்நாத் கிளாத் ஸ்டோர்ஸ்,
1/526, மெயின் பஜார்,
கர்நூல் - 518 001.

12. காமதேனு சில்க்ஸ்,
கே. ஆர். எஸ். காம்ப்ளக்ஸ்,
எம். ஜி. ரோடு, சிந்தாமணி.

13. சாந்தாலா சில்க் ஹவுஸ்,
11, கீழ்தளம், பப்ளிக் யூடிலிட்டி பில்டிங்,
எம். ஜி. ரோடு, பெங்களூர்.

**Dr. பி.கே.பெரியசாமி**
இணை இயக்குநர்/தனி அலுவலர்



# DR. SURENDRAN'S INSTITUTE FOR RESEARCH IN-VITRO FERTILIZATION AND G.I.F.T. PROGRAMME

☆
☆☆
☆☆☆

**Dr. Gopala Pillai's Hospital**
**Nagercoil - 629 001. S. INDIA.**

☆☆☆
☆☆
☆

***Directors:***

**Dr. G. SURENDRAN,** M.B.B.S., F.C.G.P.,
M.W.P.A., A.R.C.PSYCH, (LOND) FIPS
Physician & Psychiatrist, Superintendent

**Dr. INDIRA SURENDRAN,**
M.D., D.G.O., F.I.C.O.G., F.I.C.M.C.H.
Obstetrician & Gynaecologist

T.N.G.S.T.No. 183398/93-94
C.S.T. No. 54508/6-3-63

☎ : 23836/22922
தந்தி : 'திருக்கோசில்க்'
P.B.No. : 26

# காஞ்சிபுரம் திருவள்ளுவர் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி

விற்பனைச் சங்கம் லிமிடெட், எண்.ஜி.2054
(குளிர்பதனம் செய்யப்பட்டது)

**207, காந்தி ரோடு, காஞ்சிபுரம்-631 501.**

## கிளை விற்பனை நிலையம் இயங்குமிடங்கள்

| வ.எண். | | விலாசம் |
|---|---|---|
| 1. | மதுரை | பாண்டியன் கூட்டுறவு சிறப்பங்காடி, 162, கீழவெளி வீதி, மதுரை. |
| 2. | காரைக்குடி | ரங்கூன் ஹால், 45, அம்மன் சன்னதி தெரு, காரைக்குடி. |
| 3. | சேலம் | குமரகிரி சில்க்ஸ், 256, இரண்டாவது அக்ரஹாரம், சேலம் - 1. |
| 4. | ஈரோடு | தேவி சில்க்ஸ், 19, திருவேங்கடசாமி தெரு, ஈரோடு - 1. |
| 5. | கோயம்புத்தூர் | விஜய் சில்க்ஸ், 126, ராஜவீதி, கோயம்புத்தூர். |
| 6. | சென்னை | காஞ்சிபுரம் கோ-ஆப் சில்க்ஸ், உம்மிடியார் ஷாப்பிங் சென்டர், அண்ணா சாலை, சென்னை. |
| 7. | சென்னை | தமிழ்நாடு கைத்தறி கூட்டுறவு சங்கங்களின் விற்பனை வளாகம் நெ. C, 47-2ஆவது அவின்யூ அண்ணாநகர் பிளாசா சென்னை-40. |
| 8. | மேட்டுப் பாளையம் | சக்ரவர்த்தி துகில் மாளிகை, 338டி., மெயின் ரோடு, மேட்டுப்பாளையம். |
| 9. | பொரட்டூர் | ஜோதி வஸ்திராலயம், 13/401, சிவாலயம் தெரு, பொரட்டூர். |
| 10. | பொரட்டூர் | சுசீலா சில்க்ஸ் சாரீஸ், சிவாலயம் தெரு, புரட்டூர். |
| 11. | இந்துப்பூர் | ஸ்ரீ விநாயகம் சில்க்ஸ், 8-3-327, மெயின் பஜார், இந்துப்பூர். |

| வ.எண். | | விலாசம் |
|---|---|---|
| 12. | இந்துப்பூர் | மாருதி சில்க்ஸ், 7-3-314, மெயின்பஜார், இந்துப்பூர். |
| 13. | அனந்தபூர் | சாய்ராம் சில்க்ஸ், 10/332, சுபாஸ் ரோட், அனந்தப்பூர். |
| 14. | சித்தூர் | பாலாஜி சில்க்ஸ், 11/498, சர்ச் தெரு, சித்தூர். |
| 15. | கர்நூல் | வீனஸ் கினாத் சென்டர், M/66/20 எம்.எச். ரோடு, கர்நூல். |
| 16. | நந்தியால் | ஸ்ரீவிஸ்வநாதர் கினாத் சென்டர், மெயின் பஜார், நந்தியால். |
| 17. | தேவாங்கிரி | சாந்தலா சாரீஸ், 323/5, சாம்ராஜ்பெட், தேவாங்கிரி. |
| 18. | பெங்களூர் | ஜெயலட்சுமி ஹால், 717, சிக்பெட் பெங்களூர். |
| 19. | பெங்களூர் | சாந்தலாசிவன் சேரீஸ், ஹனுமன் பில்டிங், தர்மம்புடி ரோடு, பெங்களூர் - 53. |
| 20. | பெங்களூர் | காமாட்சி சில்க் கேந்திரா, 16-16-25 முதல் மாடி, என் கே.எஸ். பிளாசா, ஏஸ்.எஸ்.சார் தெரு, 20 பெங்களூர். |
| 21. | சிமோகா | ஸ்ரீ பேஷன்ஸ், ஸ்ரீ நிதி ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், டி.எஸ்.பி. சர்க்கின், நேரு ரோட், சிமோகா. |
| 22. | தும்கூர் | வாசவி சில்க்ஸ் & சாரீஸ், மண்டிபெட், தும்கூர். |

பி.ஏ. பழனிசாமி, டி.எச். டீடி,
துணை இயக்குநர்/தனி அலுவலர்






### வயதானவர்களுக்கு வரும் பார்வைக் குறைபாடுகள் எவ்வாறெல்லாம் ஏற்படும்?

வயதானவர்களுக்கு எத்தனையோ வகையான கண் உபாதைகள் இருந்தாலும், முக்கியமாக நாம் அறிய வேண்டியது கண்புரை மற்றும் கண் அழுத்த நோயாகும். இதற்குத் தடுப்பு முறை என்று ஏதும் இல்லை. தகுந்த இடைவெளியில் மருத்துவரை அணுகி ஆலோசனை பெற்றால் ஆரம்பகாலம் மற்றும் முழுவதும் வளர்ந்த நிலையிலும் கண்புரைக்குச் சிகிச்சையளிக்க முடியும். கண் அழுத்த நோய்க்கு ஆரம்ப கால ஆலோசனை மட்டுமே பார்வையைக் காப்பாற்றும். மருந்து மூலமோ, அறுவை சிகிச்சை மூலமோ, ஆரம்ப நிலையில் கவனித்தால்தான் சரிசெய்ய முடியும். இல்லையேல் நிரந்தரமாகப் பார்வைக் கோளாறு ஏற்படும்.

### GLAUCAMA ஆரம்பத்தில் கவனிக்க வேண்டுமானால் அதற்கு என்ன அறிகுறிகள் ஏற்படும்?

Glaucama-வில் இரு பிரிவுகள் உண்டு. ஒன்று நோயாளிக்குச் சில உபாதைகள் உண்டுபண்ணும் வகை. இது ஒருவிதத்தில் பரவாயில்லையென்று சொல்லலாம். ஏனெனில் இதற்கு நோயாளி ஆரம்பத்திலேயே ஆலோசனைக்கு வர இயலும்; இதில் கண் வலி, பார்வை குறைபடுதல் மற்றும் சிகப்புத்தன்மை ஆகியவை உருவாகும். சில சமயங்களில் விளக்குகளைச் சுற்றி வானவில் போன்ற தோற்றம் காணப்படும் இவையே அறிகுறிகள்.

மற்றொரு பிரிவில் நோயாளிக்கு ஒன்றுமே தெரியாது. சாதாரணமாக இருப்பது போல் உணர்வார். மருத்துவரிடத்தில் வந்தாலும் அங்கு சில பரிசோதனைகள் செய்தாலொழிய இதைக் கண்டுபிடிப்பது அரிது. ஆனால் கண்டுபிடித்தால் மருந்தினாலேயே இக் குறைபாட்டைச் சரிசெய்துவிட முடியும்.

### அப்படியென்றால் இதற்கு நோயாளி என்னதான் செய்வது?

50 வயதிற்கு மேல் குறைந்தபட்சம் இரண்டு வருடத்திற்கு ஒருமுறையாவது கண் பரிசோதனை செய்துகொண்டால் போதும்; மருத்துவர் எளிதாகக் கண்டுபிடித்து விடுவார்.

### LASER வைத்தியம் என்கிறார்களே, அப்படியென்றால் என்ன?

இப்போது எல்லாவிதமான கண் வியாதிகளுக்கும் Laser சிகிச்சை முறை பயன்படுகிறது.

நீரழுத்த நோய், புரை அறுவை சிகிச்சை செய்தபின் வரும் சில பிரச்சினைகள், சில கட்டிகளை அகற்றுவதால் நீரிழிவு நோயால் விழித்திரை பாதிக்கப்படுவது (Diabetic) மற்றும் Laser மூலம் கண்ணாடி அணிவதை முற்றிலும் தடுக்க இயலும். அடிக்கடி, சுத்தமான தண்ணீரால் முகம் கழுவும் போது, கைபடாமல் கண்களையும் கழுவிக் கொள்ளலாம். ★


படிக்க...பயன்பெற...பாதுகாக்க

**தமிழரசு**

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)

ஆண்டு சந்தா ... ரூ.72

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)

ஆண்டு சந்தா ... ரூ.36

சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம், சென்னை - 600 002



ஆசிரியரும் வெளியிடுபவரும் : ஆர். சிவகுமார், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 568926, 568927

## ஆசிரியர் மடல்

"கலைஞர் அவர்கள் தலைசிறந்த பகுத்தறிவுவாதியாவார்; ஆட்சிக்கலையில் அரிய ராஜதந்திரியாகவும், முன்யோசனையுடனும் அவர் நடந்து வருவதன் மூலம் தமிழர்கட்குப் புதுவாழ்வு தருபவராகிறார்" - என்று புகழ்ந்தார் தந்தை பெரியார்.

"அமைச்சர் பதவி ஏற்றுக்கொள் என்றாலும், தண்டவாளத்தில் தலைவைத்துப் படு என்றாலும் - இரண்டையும் ஒன்றாகக் கருதக்கூடியவர் தம்பி கருணாநிதி...அவர் மூலம் நானும் நாடும் இன்னும் நிரம்ப எதிர்பார்க்கிறோம்" - என்று போற்றிப் பாராட்டினார், அறிஞர் அண்ணா.

இத்தனைப் பெருமைக்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால், சட்டமன்றப் பவளவிழாவும் சட்டப்பேரவை வைரவிழாவும் சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டது. சட்டப்பேரவையின் பொன்விழா கொண்டாடப்பட்டதும் இவர் முதலமைச்சராக இருந்த 1989இல் தான்!

சுதந்திர தினப் பொன்விழாவும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால்தான் கொண்டாடப்படவிருக்கிறது.

ஒன்பது முறை சட்டப்பேரவை உறுப்பினராகவும், ஒருமுறை மேலவை உறுப்பினராகவும் இருந்த பெருமைக்குரிய 'விழா நாயகர்' மாண்புமிகு கலைஞர் அவர்கள், நான்காவது முறையாகத் தமிழக முதலமைச்சராக ஆகி இருக்கிறார்!

எனவே, தமிழ்நாடு-இந்திய மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியாகத் திகழும்; தமிழ்நாடு சட்டப்பேரவை, மரபு காத்து மங்காப் புகழ்பெறும் என்பது உண்மை - வெறும் புகழ்ச்சியில்லை!




தூய
பட்டு

தூய
சரிகை

கம்பீரமான ஊதா...
ரப்பூபோல் சிகப்பு...
கரமான மஞ்சள்...
வெளிபோல் நீலம்...
டங்கா
வண்ணங்களில்
ட்டு,
டெக்ஸ்.





# தமிழரசு

ஆகஸ்ட் 1-15, 1997 ரூ.3

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
2-செப்1997
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008





# இந்த இதழில்...


- சமத்துவபுரம் ... 2
- சுதந்திரப் போராட்ட வீரர்கள் வாழ்விலே! ... 3
- டெல்லி செல்லும் விடுதலைப் போராட்ட வீரர்கள் ... 6
- உப்புச் சத்தியாக்கிரகம் ... 7
- 9-வது ஐந்தாண்டு திட்ட ஒதுக்கீடு ரூ.25,000 கோடி ... 9
- அண்ணா வழியில் செயல்படும் கலைஞர்
  -மேதகு ஆளுநர் ... 10
- தமிழகச் சட்டமன்றம் பெருமைக்குரியதாகும்
  -முதல்வர் கலைஞர் ... 11
- மீண்டும் சட்டமன்ற மேலவை
  - பேரவைத் தலைவர் பெருமிதம் ... 14
- பொன்விழாக் காணும் தமிழ்நாடு அரசு
  நெடுஞ்சாலைத்துறை ... 15
- வேலூர் புரட்சி ... 17
- எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு ... 18
- இந்திய சுதந்திரப் போர்
  முக்கியச் சம்பவங்கள் ... 19
- குறுந்தொகை காட்டும் கால்நடைகள்
  -முனைவர் இரா. பிரபாகரன் ... 22
- பேசும் கலப்பை (சிறுகதை)
  - பொன்குன்னம் வர்க்கி ... 24
- நோய் தீர்க்கும் கடுக்காய்
  - டாக்டர் பி. பாலசுப்ரமணியம் ... 33
- எங்கள் ஊர் பிரச்சினை ... 34
- தோல் நோய்கள்
  - டாக்டர் எம். வசந்தா ... 41
- கால்நடைப் பராமரிப்பு -
  ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் ... 46
- ஆசிரியர் மடல் ... 48



**தமிழரசு**
திருவள்ளுவர் ஆண்டு 2028
ஆகஸ்ட் 1-15, 1997
மலர் : 28 இதழ் : 3
விலை ரூ.3

**செண்பகராமன்**

இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் செண்பகராம பிள்ளையின் பெயர் மிகவும் பிரசித்தம். காரணம், அவர் தன்னை இந்திய தேசிய இராணுவத்தில் இணைத்துக்கொண்டு போர்க்குணத்துடன் செயல்பட்டார் என்பது மாத்திரம் அல்ல -'ஜெய்ஹிந்த்' என்கிற தாரக மந்திரத்தின் தந்தையே அவர்தான். இதனாலேயே அவர் 'ஜெய்ஹிந்த்' செண்பகராமன் எனப்பட்டார்.

சின்னச்சாமி - நாகம்மா தம்பதியரின் மகனாகத் திருவனந்தபுரத்தை அடுத்துள்ள புத்தன்சந்தை என்ற ஊரில் பிறந்தவர் இவர். இலங்கை, இத்தாலி, சுவிட்சர்லாந்து என்று சென்று பொறியியலில் 'டாக்டர்' பட்டம் பெற்றவர்.



அந்த நாடுகளிலெல்லாம் இந்திய மக்களுக்கு ஆங்கிலேயரால் இழைக்கப்படும் அநீதி பற்றி எடுத்துக் கூறி அவர்கள் ஆதரவைப் பெற்றார்.

அவர் ஜெர்மனியில்தான் உயிர்நீத்தார்.

இறக்குமுன், அவர் தன் மனைவியிடம் கண்ணீர் விட்டபடி கூறியது என்ன தெரியுமா?

"இந்தியாவின் விடுதலையைப் பார்க்காமலே இறக்கப் போகிறேனே!... மாண்ட பிறகு என் சாம்பலை எடுத்துவை. இந்தியா சுதந்திரம் பெற்றபின், அதைக் கொண்டுபோய் என் தாயார் சாம்பல் சங்கமமான கரமனை ஆற்றில் கொஞ்சத்தைக் கரைத்து விடு; மீதத்தை நாஞ்சில் நாட்டு வயல்வெளிகளில் தூவு! எனக்குப் பிறகு, நீயும் சுதந்திரப் போரில் ஈடுபடு!"

- இப்படிச் சொன்ன செண்பகராமன்தான் 1914 முதல் உலகப் போரின்போது 'எம்டன்' என்ற நீர்மூழ்கிக் கப்பலில் சென்னைக்கு வந்து, வெள்ளையர் பிடியிலிருந்த கோட்டையைத் தாக்கி முதலில் அவர்களைக் கதிகலங்கச் செய்த பெருமையாளர்.

(பிறப்பு : 15.9.1891 - மறைவு: 26.5.1934)

★★★

**பகத்சிங்**

"வெள்ளையரின் வெறித்தனத்தைக் கண்ட பிறகும் நம்போன்ற இளைஞர்கள் வெகுண்டெழ வேண்டாமா?" என்ற தீப்பறக்கும் வினாவை எழுப்பி, முதன்முதல் இளைஞர்களை எழுச்சிமயமாக எழச்செய்த வீரன் பகத்சிங்.

பஞ்சாபைச் சேர்ந்த லாயல்பூர் மாவட்டத்தில் உள்ள பாங்கா என்கிற சிற்றூரில், கிஷன்சிங் - வித்யாவதி தேவியின் மகனாகப் பிறந்தவர் பகத்சிங். 1919ல் ஜெனரல் டயர் என்கிற வெள்ளையனால் ஏற்பட்ட 'பஞ்சாப் படுகொலை' என்கிற 'ஜாலியன் வாலாபாக்' நிகழ்ச்சி, விடுதலைப் போராட்டத்தில் முழுமையாக ஈடுபட்டிருந்த குடும்பத்தில் பிறந்த இவருடைய இதயத்தில் மாபெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.



கல்லூரியில் படித்த வேளையில் கிடைத்த சுகதேவ், யஸ்பால் போன்றோரின் நட்பும் விடுதலை வேட்கையை அதிகரித்தது; அதன் பலனாக'இந்திய சமதர்மக் குடியரசு இராணுவம்' என்ற புரட்சிகரமான அமைப்பு உருவாயிற்று!

லாலா லஜபதிராய், மார்பில் அடிபட்டு மாண்டுபோகக் காரணமாக இருந்த வெள்ளை அதிகாரி சாண்டர்ஸ், பகத்சிங்காலும் அவரது மூன்று முக்கிய நண்பர்களாலும் சுட்டு வீழ்த்தப்பட்டான். டில்லி பாராளுமன்றத்தில் வெடிகுண்டு வீசிடத் தத் என்ற நண்பரோடு தானே முன் நின்றார், பகத்சிங். 8.4.1929ல், நாடாளுமன்றத்தில் உட்புகுந்து அந்த வீரச் செயலைச் செய்தும் காட்டினார்; அங்கிருந்து தப்பமுடியாத நிலையில் அவர்கள் கைதாயினர்.

வழக்கு நடைபெற்றது. முடிவில், பகத்சிங்கும் அவர் நண்பர்கள் இருவரும் வெள்ளைக் கொடியவர்களால் தூக்கிலிடப்பட்டார்கள். கழுத்தில் கயிறு ஏறுமுன் வீரன் பகத்சிங் செய்த முழக்கம் என்ன தெரியுமா?

"விரைவில் இந்தியாவில் மாபெரும் புரட்சி வெடிக்கும்; வெள்ளை ஏகாதிபத்தியம் வேரோடு சரியும்!"

(பிறப்பு: 28.9.1907 - இறப்பு : 23.2.1931)

★★★

**வாஞ்சிநாதன்**

இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் வ.உ.சிதம்பரனார் சுப்பிரமணிய சிவா ஆகியோர் கை தமிழகத்தில் ஓங்கியிருந்த 1906ஆம் ஆண்டு வாக்கில் சரித்திரச் சிறப்படைந்தவர்களில் வாஞ்சிநாதனும் ஒருவர். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள செங்கோட்டையில், ரகுபதி ஐயர் - ருக்மணி அம்மாள் மகனாகப் பிறந்த இவர் மனைவி பெயர் பொன்னம்மாள்.

நீலகண்ட பிரம்மச்சாரி என்பவர் நடத்திவந்த 'பாரதமாதா சங்கம்' என்கிற ரசிய அமைப்பின் உறுப்பினர், வாஞ்சிநாதன். நெல்லை மாவட்டத்திற்கு வரும் ஐரோப்பிய அதிகாரிகளை அச்சுறுத்துவது, விரட்டியடிப்பது, சுதந்திரக் கனல் மூட்டுவது போன்றவைகளே அச் சங்கத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது.



புதுவையில் வ.வே.சு. ஐயரிடம் துப்பாக்கி சுடும் பயிற்சி பெற்றார் வாஞ்சிநாதன்; சிலகாலம் 'வனத்துறையில் பணியாற்றியதும் உண்டு.



1908ஆம் ஆண்டில், திருநெல்வேலியில் வ.உ.சி., சுப்பிரமணிய சிவா இருவரும் அரசுக்கு எதிராக ஆற்றிய எழுச்சிமிகு சுதந்திர உரை அரச நிந்தனையாக இருந்தது என்று வழக்குத் தொடரப்பட்டு, ஃபின்கே என்னும் நீதிபதியால் இருவருக்கும் கடும் தண்டனை அளிக்கப்பட்டது. அவர்கள் பேசிய பொதுக் கூட்டத்தைக் கலைக்க ஆஷ் துரை என்ற சப் கலெக்டர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் சிலர் பலியானதும், மேலும் பலர் கைதானதும் வாஞ்சிநாதனைக் கொதித்தெழச் செய்தது.

இந் நிலையில் நெல்லை கலெக்டராகப் பதவி உயர்வு பெற்ற ஆஷ் துரை, தன் மனைவியோடு கொடைக்கானலுக்குப் பயணமானார். மணியாச்சி ரயில் நிலையத்தில், புகை வண்டிக்குள்ளேயே புகுந்து அவரை மூன்றுமுறை தம் கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார் இருபது வயது இளைஞனான வாஞ்சிநாதன்.

அதுமட்டுமல்ல; ஆங்கில அரசிடம் மாட்டக்கூடாது எனக் கருதிய அவர், அங்கேயே தனக்குத் தானே சுட்டுக்கொண்டு வீர மரணமடைந்தார்!

1957ல், செங்கோட்டை கரையாளர் பூங்காவில் வாஞ்சிக்கு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டது. அவர் மனைவிக்கு இறக்கும் வரை கலைஞர் அரசு ஒய்வூதியம் வழங்கியது; மணியாச்சி ரயில் நிலையத்திற்கு 'வாஞ்சி நகர்' எனப் பெயரிடுமாறும் சிபாரிசு செய்தது.

(பிறப்பு : 8.10.1907 மறைவு : 23.3.1931)

★★★

**முத்துராமலிங்க சேதுபதி**

இந்தியாவெங்கும் பரவலாக விடுதலைக் கனல் மூண்டெழுவதற்கு முன்பே அந்நாளில் ஆங்கியலேயரிடம் இந்திய நாட்டை அடகு வைத்த ஆர்க்காடு நவாபுக்கு மட்டுமல்ல; ஆங்கிலேய ஆட்சியாளருக்கும் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தவர், மன்னர் 'ரிபெல்' விஜய ரகுநாத முத்துராமலிங்க சேதுபதி.

பாளையக்காரர்களுக்கெல்லாம் தலைவராகத் திகழ்ந்த இவர் 'வாணிகம் முன்னே வஞ்சகம் பின்னே' என்று இந்திய மண்ணில் கால் வைத்த ஆங்கில அடக்குமுறை ஏகாதிபத்தியத்திற்குக் கப்பம் கட்ட மறுத்தார்; அவர்கள் இட்ட கட்டளைகளைத் துச்சமென வெறுத்தார். இவரே இராமநாதபுரம் மறவர் சீமையின் கடைசி மன்னரும் ஆவார்.

2,353 சதுரமைல் பரப்பளவு கொண்டதாக 2,168 ஊர்கள் உடையதாக இருந்த சேதுநாட்டின் மன்னரான இவர், பிற்காலத்தில் 'பகைவனுக்கும் அருள்வாய் நன்னெஞ்சே' என்பதற்கிணங்க, தமிழகத்திலேயே முதன்முதலாக மேலைநாட்டுக் கல்வி முறைக்கும் வழிவிட்டார்; 1785ல் சுவார்ட்ஸ் பள்ளியினைத் திறக்க அனுமதித்தார்.

ஏழைகள், ஊனமுற்றோர், தமிழ்ப்புலவர்கள், வடமொழி வித்தகர்களுக்கெல்லாம் எல்லா வகையான மானிய நிலங்களும் அக்காலத்திலேயே வழங்கி, ஆங்கிலேயரின் மொழி ஆதிக்கத்தைப் பலவீனப்படச் செய்தவர் இந்த முத்துராமலிங்க சேதுபதி. இவரது நிர்வாகம், ஆங்கிலேயரும் அதிசயிப்பதாக இருந்தது.



1795ல், ஆங்கிலேயர் பெரும்படையும், பீரங்கியும் கொண்டு கோட்டையைத் தகர்த்து இவரை இரவோடு இரவாகக் கைது செய்தனர்; இதனால் வெகுண்டெழுந்த மக்கள், மலையப்பன் என்பாரின் தலைமையில் நடத்திய உரிமைப் போர் வரலாற்றுச் சிறப்புடையது.

இந்திய விடுதலைக்குப் பாடுபட்டமையால் திருச்சிராப்பள்ளி, சென்னை சிறைச்சாலைகளில் 24 ஆண்டுகள் இவரை ஆங்கில அரசு அடைத்து வைத்துக் கொடுமைப்படுத்தியது.

இராமநாதபுரம் சீமைப் பகுதியில் 'இந்தியப் புலி' என ஆங்கிலேயரே சொல்லி நடுங்குமளவுக்கு அரசாண்டு வந்த இவர், தமது சிறைவாசத்தின்போதே மாண்டுபோனார் என்பது குறிப்பிடத்தக்கது!

(தோற்றம் : 1760 - மறைவு : 23.1.1809)



மாண்புமிகு தமிழ்நாடு அரசு
வணிகவரித்துறை அமைச்சர்,
**திரு. வே. தங்கபாண்டியன்**
அவர்கள், அரசுப் பணி காரணமாக
31.7.1997 அன்று ராஜபாளையம்
சென்றிருந்தபோது, அகால
மரணமடைந்த செய்தி
நமக்கு ஆற்றொணாத் துயரத்தை
அளித்தது; அவரை இழந்து தவிக்கும்
குடும்பத்தார்க்குத் 'தமிழரசு' ஆழ்ந்த
இரங்கலைத் தெரிவித்துக்
கொள்கிறது.

- ஆசிரியர்

# சமத்துவ புரம்

வரும் சுதந்திரத் திருநாள் பொன் விழா ஆண்டினையொட்டி நடைபெறும் கொண்டாட்டங்களுடன், தமிழகத்தைப் பொறுத்தவரை மலைவாழ் மக்கள், ஆதிதிராவிட மக்கள் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு நிரந்தரப் பயன் தரத்தக்க நிலையான கீழ்க்கண்ட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

சுதந்திரத் திருநாள் பொன் விழாவினையொட்டி, ஆதிதிராவிட மக்கள் உட்பட அனைத்துச் சமூகத்தினரும் நல்லிணக்கத்தோடு சமத்துவமாக ஒரே குடியிருப்பில் ஒற்றுமையாக வாழும் வகையில் தலா 100 வீடுகளைக் கொண்ட 50 குடியிருப்புகள் தமிழகம் முழுவதும் 'சமத்துவபுரம்' என்ற பெயரால் உருவாக்கப்படும் என்று முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.




இச் சமத்துவபுரம் – தேவையான குடிநீர், மின்வசதி, நிரந்தரச் சாலை வசதி, பொதுச் சுகாதாரம், கல்வி போன்ற அனைத்து அடிப்படை வசதிகளும் கொண்ட முன்னோடி கிராமமாக அரசால் உருவாக்கித் தரப்படும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 சென்ட் மனை அரசால் இலவசமாகத் தரப்படும். சமத்துவபுரத்தில் குடியிருக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு முப்பதாயிரம் ரூபாய் அரசு மானியத்துடன் வீடு கட்டுவதற்குக் குறைந்த வட்டியில் கடன் வசதியும் செய்து தரப்படும்.

சுதந்திரத் திருநாள் பொன் விழா ஆண்டையொட்டி தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தமிழகத்திலுள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் நகர்ப்புறப் பேரூராட்சிகள் ஒவ்வொன்றிலும் உள்ள குறைந்தபட்சம் ஒரு குடிசைப் பகுதி தேர்வு செய்யப்பட்டு, மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிரந்தர சாலை வசதி, மின் விளக்குகள், குடிநீர் வசதி, தண்ணீர் வசதியுடன் கூடிய பொதுக் கழிப்பிட வசதி, வடிகால் வசதி ஆகிய அடிப்படை வசதிகள் உருவாக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்குச் சுமார் ரூ.35 கோடி செலவிடப்படும்.

மேலும், தமிழகத்திலுள்ள மலைப்பகுதிகளில் உள்ள அனைத்துப் பழங்குடி மக்கள் வாழும் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்கென 'மூன்றாண்டுச் சிறப்புத் திட்டம்' ஒன்று செயல்படுத்தப்படவுள்ளது. இச்சிறப்புத் திட்டம் குடிநீர் வசதி, சாலை மற்றும் மின் வசதி ஆகியவற்றுடன் பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல் போன்ற வளர்ச்சித் திட்டங்களும் படிப்படியாக மூன்றாண்டு காலத்திற்குள் நிறைவேற்றப்படுவதன் மூலம், தமிழகத்திலுள்ள பழங்குடி மக்கள் குடியிருப்புகளும் அனைத்து அடிப்படை வசதிகளைப் பெற்ற குடியிருப்புகளாக உருவாக்கப்படும்.



# சுதந்திரப் போராட்ட வீரர்கள் வாழ்விலே....

## பாரதியார்

அடிமைப்பட்டுக்கிடந்த நம் இந்திய நாட்டில் விடுதலைப் போர் மூண்ட காலத்தில் - தமது ஏற்றமிகு தமிழ்க் கவிதைகளால் எழுச்சி மூட்டிய சிறப்பினர் மகாகவி பாரதியார். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரத்தில், சின்னச்சாமி ஐயருக்கும் - இலக்குமி அம்மையாருக்கும் பிறந்த இவர், சாதிமத பேதங்கள் ஒழியவும் - பெண்கள் முன்னேற்றம் பற்றியும் பாடிய முதல் கவிஞர்.



பண்டிதர்களுக்கு மட்டுமே புரியும் படியிருந்த தமிழ்க்கவிதையைப் பாமர மக்களுக்கும் புரியும்படி எழுதியவர். ஆங்கில ஏகாதிபத்தியம் அச்சுறுத்தவே - புதுச்சேரிக்குச் சென்று தலைமறைவு வாழ்க்கை நடத்தியவர் இவர். அவ்வாறு அங்கே பன்னிரண்டாண்டு காலம் வாழ்ந்தபோது-பாரதியாரின் நிழல் போலிருந்த புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், அவரைப்பற்றி எழுதியிருப்பது இது :

பாரதியாருக்குச் சாதி சமயப் பற்றே கிடையாது. ஆண்கள் பெண்கள் அனைவரும் சரிசமமாக இருக்க வேண்டும் என்பதுதான் அவர் கருத்து.

அவர் தம்மைப் பிராமணர், பிராமண சமூகத்தில் பிறந்தவர் என்றெல்லாம் எண்ணுவது கிடையாது. அவர் கோயில் குளங்களுக்குப் போவது கிடையாது. ஆண்டவனை எப்படி வணங்குவது என்றே அவருக்குத் தெரியாது. விபூதி-நாமங்களைப் போட்டுக்கொண்டு, பஜனை மடங்களில் பாடியும் ஆடியும் அவலமாகக் காலம் போக்கிக் கொண்டிருந்த என்னை இன்றுள்ள நிலைக்குக் கொண்டுவந்தவர் பாரதியார்தான்.

பாரதியார், அன்றுள்ள நிலையில் தேச விடுதலையை முதன்மையாகக் கருதினார். இன்று அவர் இருந்திருப்பாரேயானால் என்னைப் போல முழுக்கமுழுக்கச் சமூக சீர்திருத்தம் குறித்த கவிதைகளையே இயற்றியிருப்பார்.

இவ்வாறாகப் புரட்சிக்கவிஞரால் போற்றப்படும் பாரதியார், சென்னை மாநகருக்கு வந்து சிறந்த பத்திரிகையாளராகவும் திகழ்ந்தவர். இந்தியா விடுதலை பெறுமுன்பே-"ஆனந்த சுதந்திரம், அடைந்துவிட்டோம் என்று ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே" எனப் பாடி, 40 வயதாகும் முன்பே இறந்துபோனார்.

(பிறப்பு : 12.11.1882 - மறைவு : 11.9.1921)

## நேதாஜி

வங்காளத்திலே இருக்கின்ற "இருபத்து நான்கு பர்கானாக்கள்" என்ற கிராமத்தில் உள்ள "கடக்" என்னுமிடத்தில் ஜானகிநாதர்-பிரபாவதி தம்பதியாருக்கு மகனாகப் பிறந்தவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்.

இளமைக்காலத்தில் சுவாமி விவேகானந்தரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த இவர், சிறந்த கல்விமானாகவும் இருந்தார்; கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் வரை போய்ப் படித்தார். ஐ.சி.எஸ்.பட்டம் பெற்றார்.

1921-ல் இந்தியாவில் சூடுபிடித்த சுதந்திரப் போராட்டம் நேதாஜியையும் பிறந்த நாட்டுக்கு ஈர்த்தது. ஆரம்ப காலத்தில் காந்தியாரின் தலைமையின்கீழ் காங்கிரசில் சேர்ந்து பணிபுரிந்தார்; தேசபந்து சி.ஆர்.தாஸ், இவருடைய அரசியல் ஆசான் ஆவார். அவர் 1923ல் காந்தியாரோடு மாறுபட்டு சுயராஜ்யக்கட்சி ஆரம்பித்த போது, இவரும் அவரோடு விலகினார். 1940ல் திரிபுரா காங்கிரஸ் தலைவர் தேர்தலில் காந்தியார் ஆதரவோடு பட்டாபி சீதாராமையா நின்றபோது, அரும்பாடுபட்டு அவரைத் தோல்வி பெறச்செய்து தாமே பெரும் வெற்றி பெற்று காந்தியரையே வியக்க வைத்தார்.



இந்திய சுதந்திரம் அமைதியான முறையில் கிடைக்காது; நாமும் துப்பாக்கி ஏந்தினாலே பெறமுடியும் என்கிற முடிவுக்கு வந்த நேதாஜியால்-இளைஞர் கட்சி, பார்வர்டு பிளாக் போன்றவை அமைக்கப்பட்டன; இந்திய தேசிய இராணுவம் முழுபலம் பெற்றது. 'டில்லி சலோ' என்பது அவர்கள் போர் முழக்கம் ஆயிற்று. இவற்றால் பல முறை சிறைக்கொடுமைக்கு ஆளானர். பிறகு வெள்ளையராட்சியின் கெடுபிடிகளிலிருந்து தப்பி பெர்லினுக்குப் போய்ச்சேர்ந்தார். ஜெர்மனியில் இட்லரைச் சந்தித்து இந்திய விடுதலைக்கு ஆதரவு கோரினார்.

தமிழகத்தில் - முத்துராமலிங்கத்தேவர், அவர் கொள்கை வழி நடப்போரில் குறிப்பிடத்தக்கவராயிருந்தார்.

1945-ல் இந்திய விடுதலை பற்றிப் பேச்சுவார்த்தை நடத்த விமானத்தில் ஜப்பான் நாட்டுக்குப் புறப்பட்டார் நேதாஜி. 'இறுதி மூச்சுவரை இந்திய விடுதலைக்காகவே போராடுவேன்' என்று பாடுபட்ட அவர், விமான விபத்தில் மாண்டு போனார் என்று, அன்றைய தினமே ஜப்பானிய செய்தி நிறுவனமும், டோக்கியோ வானொலியும் அறிவித்தன.

(பிறப்பு : 23.1.1897 - மறைவு : 18.8.1945)

# புதுடெல்லிக்குச் செல்லும் சுதந்திரப் போராட்டத் தியாகிகள்

நம் இந்திய நாடு விடுதலை அடைந்து 50 ஆண்டுகள் ஆகின்றன. அதனையொட்டி நாடு முழுவதும் சுதந்திரத் திருநாள் பொன்விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

சுதந்திரத் திருநாள் பொன்விழாவையொட்டி 14.8.97 அன்று இரவு 9 மணி முதல் 11 மணி வரை, புதுடெல்லியில் தேசிய அணிவகுப்பு நிகழ்ச்சி ஒன்று நடைபெறவுள்ளது. இந்தியா விடுதலை அடைந்து 50 ஆண்டுகள் ஆகின்றன. அதைக் குறிக்கும் வகையில், புதுடெல்லியில் நடைபெறவிருக்கும் சுதந்திரத் திருநாள் பொன்விழா தேசிய அணிவகுப்பில் கலந்துகொள்ளத் தமிழகத்தின் சார்பில் விடுதலைப் போராட்ட வீரர்கள் 50 பேரை அனுப்பிட முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

இந்த 50 பேர்களின் விவரம் பின்வருமாறு:

**சென்னை மாவட்டம்.**
1. திரு. ஆர்.எஸ். நாதன்
2. திருமதி. எஸ். மகாலட்சுமி
3. திரு. எஸ்.ஆர்.கே. வெங்கடாசலம்

**கடலூர் மாவட்டம்**
4. திரு. ஆர். மாரியப்பன்
5. திரு. டி.எஸ். தேவநாதன்
6. திரு. டி. ஏகாம்பரம்

**தஞ்சாவூர் மாவட்டம்**
7. திரு. ஆர். சுந்தரம்
8. திரு. கே.எஸ். ஆறுமுகம்
9. திரு. எம். வெங்கட்ரமணி

**விழுப்புரம் மாவட்டம்**
10. திரு. ஆர். காளிராசன்
11. திரு. எஸ்.ஆர்.டி.நடராஜன்
12. திருமதி. வெ.காளியம்மாள்

**திண்டுக்கல் மாவட்டம்**
13. திரு. க. சோமசுந்தரம் பிள்ளை
14. திரு. வி. ஆனந்தபத்மன்
15. திரு. எம்.எஸ். வெள்ளைச்சாமி

**கோயம்புத்தூர் மாவட்டம்**
16. திரு. என். ராமசாமி
17. திரு. எம். மருதாச்சலம்
18. திரு. ஆர். பெட்டையன்

**இராமநாதபுரம் மாவட்டம்**
19. திரு. எஸ். ஜெய்னுலாப்தீன்
20. திரு. பி.எம்.ராமு
21. திரு. டி. சுப்பையா
22. திரு. எம். ஏ. மகாலிங்கம்

**தருமபுரி மாவட்டம்**
23. திரு. எஸ்.கே. காளியப்பன்
24. திரு. டி.கே. பொன்னுசாமி
25. திரு. எம். கௌரா

**ஈரோடு மாவட்டம்**
26. திரு. என்.ஆர் ராமகிருஷ்ணன்
27. திரு. கே. மாரப்பன்
28. திரு. சி. அங்கமுத்து

**கன்னியாகுமரி மாவட்டம்**
29. திரு. மா. வைத்தியலிங்கம்

**நீலகிரி மாவட்டம்**
30. திரு. கே.பி. ராஜூ
31. திரு. டேனியல் சந்தியநாதன்

**திருவண்ணாமலை மாவட்டம்**
32. திரு. எல். முனுசாமி
33. திரு. பீம நயினார்
34. திரு. டி.எம். குப்புசாமி

**திருச்சிராப்பள்ளி மாவட்டம்**
35. திரு. வி. ரெங்கசாமி
36. திரு. டி. அழகப்பன்
37. திரு. எம். முகமது கனி

**மதுரை மாவட்டம்**
38. திரு. ஏ. சுந்தரம்
39. திருமதி. ப. ஒச்சம்மாள்
40. திரு. கே.எம். காந்தி
41. திரு. இராசு
42. திரு. எம்.எஸ். வடிவேல் பிள்ளை

**சேலம் மாவட்டம்**
43. திரு. வடிவேல் முதலியார்

**திருநெல்வேலி மாவட்டம்**
44. திரு. ஏ. ராஜகோபால்
45. திரு. பெ. ராமையா
46. திரு. எஸ். சுவாமிநாதன்
47. திரு. ஆர்.எஸ். முப்பிடாதி

**விருதுநகர் மாவட்டம்**
48. திரு. கே.ஆர். கதிர்வேல் ராஜா
49. திரு. என்.எம். சுப்பராஜா
50. திரு. என்.எஸ். தியாகராஜன்

**வேலூர் மாவட்டம்**
51. திரு. கே.எஸ். சுந்தசாமி
52. திரு. டி.எஸ். ராஜூ சர்மா

**கரூர் மாவட்டம்**
53. திரு. பா. மருதமுத்து
54. திரு. எஸ். ஆர். வெங்கடாசலம் பிள்ளை

- இவர்கள் அனைவருக்கும் புதுடெல்லி சென்று வரும் செலவு முழுவதையும் தமிழக அரசே ஏற்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



# உப்புச் சத்தியாக்கிரகம்

உப்புச் சத்தியாக்கிரகத்தை 1930 மார்ச் 12ஆம் நாள் மகாத்மா காந்தி, ஆமதாபாத்திலுள்ள சபர்மதி ஆசிரமத்தில் தொடங்கினார். உப்புச் சத்தியாக்கிரகத் தண்டி யாத்திரை என்று வரலாற்றில் அது பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுவிட்டது.

காந்தியடிகள், தேசியக் காங்கிரஸ் தொண்டர்கள் 78 பேர் பின் தொடர, இந்தத் தண்டி யாத்திரையை மேற்கொண்டார்.

தியாகத்திற்குத் தயாராகுமாறு மக்களைத் தட்டியெழுப்பவே இந்தப் போராட்டம். இதில் பெண்கள் பங்கு கொண்டால், போராட்டம் கட்டுக்கடங்காமல் போகலாம் என்றும், அந்நிய ஆட்சியாளரின் அடக்குமுறைகளுக்குப் பெண்கள் ஆளாகக்கூடும் என்றும் மகாத்மா காந்தி கருதியதால், போராட்டத்தில் பெண்கள் பங்குகொள்ள அவர் சம்மதிக்கவில்லை.



சபர்மதி ஆசிரமத்திலிருந்து தண்டி சென்று சேரும்வரை அவர் தமது வழிப்பயணம் நெடுகிலும் குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான பாமர மக்களிடையே பேசினார். பக்தியோடும் பரவசத்தோடும் அவரது பேச்சைக் கேட்ட மக்கள் வீராவேசம் கொண்டனர். விடுதலைக்காக என்ன விலைகொடுக்கவும் தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டனர்.

காந்தியடிகள் 24 நாட்கள் நடந்து 241 மைல் தூரத்தைக் கடந்து 1930 ஏப்ரல் 5ஆம் நாள் தண்டியை அடைந்தார். அடுத்தநாள் காலை சுமார் 2,000 பேருடன் கடலில் குளித்து, தண்டியில் பூத்துச் சிரித்த இயற்கை உப்பைத் தமது புனிதக் கரத்தால் அள்ளி, உப்புச் சட்டத்தை உடைத்தெறிந்தார் உத்தமர் காந்திஜி.

உப்புச் சட்டத்தை மீறியதற்காகக் காந்தியடிகளை அரசு கைது செய்யவில்லை. ஆனால், நாடெங்கும் காங்கிரஸ் தொண்டர்கள் பல்லாயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டனர்; காட்டுமிராண்டித்தனமாக அடித்துத் துன்புறுத்தப்பட்டனர்.

1930 ஜனவரி 26ல் லாகூர் காங்கிரஸ் பூரண சுயராஜ்யத்தைப் பிரகடனம் செய்தது. நாடெங்கும் மக்கள் விழாக்கள் எடுத்து, தியாக வேள்விக்குத் தங்களது தயார் நிலையைப் புலப்படுத்தினர். 1930 பிப்ரவரியில் கூடிய அனைத்திந்தியக் காங்கிரஸ் செயற்குழு, சட்டமறுப்பு இயக்கத்திற்குத் தலைமையேற்று நடத்த, காந்திஜிக்கு அங்கீகாரம் அளித்தது. அதனையொட்டி அடிகள் தேர்ந்தெடுத்த அறப்போராட்ட உத்திதான் உப்புப் போர்.

பஞ்சுப் பொதியில் விழுந்த நெருப்புப்போல், இந்தப் போராட்ட உணர்வு நாடு முழுதும் பற்றிக்கொண்டது. உப்புச் சட்டத்தை மீற ஒவ்வொருவரும் கொதித்தெழுந்தனர். நகரமாயினும் கிராமமாயினும் எங்கணும் மக்களின் எழுச்சியைக் காணமுடிந்தது.

தமிழகத்தில் இந்த இயக்கத்திற்குத் தலைமையேற்றவர் மூதறிஞர் இராஜாஜி. திருச்சியிலிருந்து வேதாரண்யத்திற்குப் பாதயாத்திரை செய்யத் திட்டமிட்டார்; இதற்காக அவர் சுமார் 100 தொண்டர்களைத் திரட்டினார்.

இந்தத் தொண்டர்களுக்குச் சில தகுதிகளை விதித்தார் இராஜாஜி. போராட்டத் துடிப்பு மட்டும் இருந்தால் போதாது; உடல்நலனைப் பேணுகிறவர்களாகவும், நல்ல பழக்க வழக்கங்களைக் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். திருவாளர்கள் கே. சந்தானம், ஏ.என். சிவராமன், ஜி. இராமச்சந்திரன் போன்ற சிறந்த தேசபக்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தமிழ்நாட்டில் இராஜாஜி சுற்றுப் பயணம் செய்து, உப்புப் போராட்டத்திற்குத் தக்கதொரு கடற்கரைப் பகுதியைத் தேர்ந்தெடுத்தார். வேதாரண்ய உப்பளப்பகுதி அவருக்குப் பொருத்தமானதாகப் பட்டது. அங்கு முகாமிட்டுப் போராட்டத்தை நடத்த முடிவுசெய்து, அந்த முகாமின் நிர்வாகத்தைக் கவனிக்கும் பொறுப்பை, சர்தார் வேதரத்தினத்திடம் ஒப்படைத்தார்.

வடக்கே மகாத்மாவின் தண்டி யாத்திரை என்றால், தெற்கே இராஜாஜியின் வேதாரண்ய யாத்திரை என்று சொல்லும் அளவிற்கு அது முக்கியத்துவம் பெற்றுவிட்டது. 52 வயதான இராஜாஜி, உடல்நலம் குன்றியிருந்தபோதிலும், உறுதி தளரா மனப்பான்மையைக் காட்டி, களைப்பின் சுவடுகூடத் தெரியாமல் போராட்டத்தில் முன் நின்றார். குழுவினர் மூன்று வாரம் நடந்து வேதாரண்யத்தை அடைந்தனர்.

வழியெங்கும் இக்குழுவினருக்கு மக்கள் வரவேற்பளித்து வாழ்த்திப் போற்றினர். வேதாரண்யக் கடற்கரையில் இராஜாஜி உப்பை அள்ளியதும் கைது செய்யப்பட்டார். தொண்டர்கள் காவலர்களால் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டனர். ஒரு தொண்டர் தன் கையில் இருந்த உப்பைக் கீழே கொட்ட மறுத்தார். அவரது கைவிரல்கள் கூழாகிப் போகும்வரை தடியடி நடத்தப்பட்டது.

*உப்புக்கும் வரிவிதித்த உன்மத்தர் ஆட்சியிலிருந்து, சுதந்திரத்திற்கு வித்திட்ட புரட்சிப் பயணம் அது!*

- மு. முத்துகானத்தி

## விடுதலை நாள்!



பாரத விடுதலை நாளின் நினைவு
பற்றிடும் போதினிலே - ஒரு
வீரமும் எழுச்சியும் வெற்றியும் மகிழ்ச்சியும்
வீறுது நெஞ்சினிலே! - நாம்

தீரர் பரம்பரை வழியினர் என்னும்
தெம்பு பிறக்கிறது! - புகழ்
ஆரம் அணிந்தவர்க் கஞ்சலி செலுத்திட
ஆர்வம் வருகிறது!

புயலென இடியெனக் கடலென முழங்கிய
பூட்கைகொள் மறவர்களை - இங்கு
அயலவன் கண்டு பயந்து நடுங்கி
அகன்றனன் விரைவினிலே! - அவன்

இயற்றிய பாதகக் கொடுமைகள் கொலைகள்
எண்ணி முடியாதே! - நம்
உயிரை உரமாய்ப் போட்டு நாம் கண்ட
விடுதலை நாளிதுவே!

அன்னை பாரத தேவியின் குழந்தைகள்
அத்தனைப் பேர்களுக்கும் - இங்கே
இன்னல் படுத்திய தளையறு பட்டது
இணைந்தது விடுதலையே! - இந்தப்

பொன்னல நாளினை முன்னவர் பெருமையைப்
போற்றி மகிழ்ந்திடவே - நெஞ்சில்
தன்னல மற்றுப் பிறர்நலம் பேணிச்
சூழுக சூழுகவே!

கொடுமுடி கவிஞர் க.அ. பிரகாசம்

# 9வது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு ரூ.25,000 கோடி

## முதலமைச்சர் கலைஞருடன் விவாதித்தபிறகு முடிவு

புதுடெல்லியில் தமிழக முதலமைச்சர் கலைஞர் தமிழ்நாட்டின் ஒன்பதாவது ஐந்தாண்டுத்திட்ட ஒதுக்கீடு குறித்து முடிவு செய்வதற்காக மத்தியத் திட்டக்குழு துணைத்தலைவர் திரு.மது தண்டவதே அவர்களுடன் 24.7.1997 அன்று விவாதித்தார்.

முதலில், மத்தியத் திட்டக்குழுவின் துணைத்தலைவர் எட்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் தமிழ்நாட்டின் சிறந்த செயல்பாட்டினைப் பாராட்டினார். எட்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் தமிழ்நாட்டிற்கான ஒதுக்கீடு 10,200 கோடி ரூபாய் என்ற போதிலும், அதன் சாதனை 10,407 கோடி ரூபாயாகும்.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக - தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடாக ரூ.25,000 கோடி என்று முடிவெடுக்கப்பட்டது. இத்திட்டத்தில் அடிப்படைக் கட்டமைப்பு, வேளாண்மை ஊரக வளர்ச்சி மற்றும் சமூக நலப்பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அடிப்படை கட்டமைப்பு மற்றும் தொழில் வளர்ச்சிக்கு ஒதுக்கீடு ரூபாய் 9,772 கோடியும், சமூக நலப்பணிகளுக்கு ரூபாய் 8,151 கோடியும், வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கு ஒதுக்கீடு ரூபாய் 6,906 கோடியாக இருக்கும். ஒன்பதாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் ஒதுக்கீடு, எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் ஒதுக்கீட்டை ஒப்பிடும்போது 245.10 சதவிகிதமாகும்.

ஒன்பதாவது திட்டத்தின் நபர்வாரி ஒதுக்கீடு ரூ.4,237 ஆக இருக்கும். இது எட்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் 1,825 ரூபாயாகத்தான் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஒன்பதாவது திட்ட நபர்வாரி ஒதுக்கீடு எட்டாவது ஐந்தாண்டு திட்ட நபர்வாரி ஒதுக்கீட்டுடன் ஒப்பிடும் போது 232.18 சதவிகிதமாகும்.

குறைந்த பட்ச அடிப்படை வசதிகளுக்கான ஒதுக்கீடு ரூபாய் 4,250 கோடியாகும். இது மொத்த ஒதுக்கீட்டில் 17 சதவிகிதம் சத்துணவு (33.42%), குடிநீர் (25.63%), ஆரம்பக்கல்வி (17.27%), கிராம சுகாதாரம் (8.3%), ஊரகச் சாலைகள் (7.41%) ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. ஒன்பதாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் வெளிநாட்டில் உதவி பெறும் திட்டங்களில் 6,000 கோடி ரூபாய் முதலீடு செய்யப்படும்.

தமிழ்நாட்டின் ஒன்பதாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் ஒதுக்கீடான 25,000 கோடி ரூபாயில் மத்திய அரசின் உதவியாக 9,987.91 கோடி (39.95%) வழங்கிட மத்திய திட்டக்குழு ஒப்புக்கொண்டது. மீதமுள்ள 15,012.09 கோடி (60.05%) மாநிலத்தின் சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து திரட்டப்படும்.

காட்கில்-முகர்ஜி கோட்பாட்டினை மாற்றி அமைக்கவும், மத்திய அரசு நடைமுறைப்படுத்தும் திட்டங்களை அவற்றின் நிதியாதாரங்களோடு மாநிலங்களுக்கு மாற்றவும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திட்டக்குழுவிடம் வலியுறுத்தினார். இதுபற்றி தேசிய வளர்ச்சிக்குழுவின் கூட்டத்தில் முடிவெடுக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது.

ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தில் மாநில நிகர உற்பத்தி வளர்ச்சி விகிதம் சராசரியாக ஆண்டுதோறும் 7.73 சதவிகிதம் உயரும். விவசாயம், கால்நடை மற்றும் அவற்றைச்சார்ந்த துறைகளில் ஆண்டு வளர்ச்சி விகிதம் 4.47 சதவிகிதமாகவும், தொழில் மற்றும் அதனைச்சார்ந்த துறையில் ஆண்டு வளர்ச்சி விகிதம் 7.48 சதவிகிதமாகவும்; சேவைத்துறைகளில் ஆண்டு வளர்ச்சி விகிதம் 9.31 சதவிகிதமாகவும் இருக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

திட்டக்குழுவின் சார்பில், திட்டத்துறையின் ராஜாங்க அமைச்சர் திருமதி ரத்னவாலா சவூர், திட்டக்குழுவின் உறுப்பினர்கள் அர்ஜுன் சென்குப்தா, திரு.ஜி.திம்மையா, திரு.சுக்லா, திரு.பிமல் ஜலான் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். தமிழக அரசின் சார்பில் முதலமைச்சர் கலைஞர் அவர்களுடன், தலைமைச் செயலாளர் கே.ஏ.நம்பியார், நிதித்துறைச் செயலாளர் பி.வி.ராஜராஜன், திட்டச்செயலாளர் கே.ஏ.மாத்யூ, மற்றும் மாநிலத் திட்டக்குழு உறுப்பினர் செயலாளர் ஆர்.சி. பாண்டா ஆகியோர் கலந்த கொண்டனர்.



# அண்ணா வழியில் செயல்படும் கலைஞர்!

## மேதகு ஆளுநர் புகழாரம்

தமிழகச் சட்டமன்றப் பவள விழா மற்றும் தமிழகச் சட்டப்பேரவை வைர விழாவில் தலைமையுரையாற்றிய மேதகு ஆளுநர் செல்வி பாத்திமா பீவி அவர்கள் குறிப்பிட்டதாவது:

**ஜனநாயக சமூகப் புரட்சி**

"நம்முடைய அரசியலமைப்புச் சட்டம் ஜனநாயக, சமூகப் புரட்சிக்கு ஒரு அட்டவணையாகும். சட்டமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் பல முனைகளில் இன்னமும் தேவையாக உள்ள சமூகப் புரட்சியை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். நாம் இன்னமும் நீண்ட தூரம் செல்ல வேண்டும்.



இந்த வகையில் மாநில சட்டமன்றம் நம்பிக்கை அளிக்கிறது. ஏனெனில் அவை பல்வேறு வகையான சிந்தனைகளையும், ஆலோசனைகளையும் வழங்குவதன் மூலம் தேசிய அரசியலுக்குப் பெரும் பங்காற்றுகிறது.

மாநில அரசியல் புதிய பாணிகளையும் முறைகளையும் கையாளுவதற்கான பகுதிகளைக் கொண்டுள்ளது. மக்களிடமிருந்து கிடைக்கும் வரவேற்பும் உடனடியாகக் கிடைக்கிறது. மாநில அளவில் தோன்றி, சரித்திரமாக மாறிய நிகழ்ச்சிகளை நாம் அறிந்திருக்கிறோம். தங்களுடைய திறமைகளால் மட்டுமல்ல; மக்கள் நலனில் கொண்டுள்ள கவலையாலும் மற்றவர்களைவிட சிறந்து விளங்கி மாநிலங்களை ஆண்ட உயர்ந்த மனிதர்கள் உள்ளனர்.

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரான பேரறிஞர் அண்ணா, தன்னுடைய ஆங்கில மற்றும் தமிழ் ஆற்றலாலும், பெரும் பிரச்சினைகளின் மீது கொண்ட ஆழமான பார்வையாலும், தனது எதிரிகளையும் வென்ற வாதத் திறமையாலும் உலகம் முழுவதுமே ஒரு பெரும் புயலை ஏற்படுத்தினார். அவர் தமிழக மக்களுக்கு ஒரு மாபெரும் செல்வத்தை விட்டுச் சென்றார். நம்முடைய முதலமைச்சர் அண்ணா எங்கே விட்டுச் சென்றாரோ அதிலிருந்து தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். அவர் தன்னுடைய திறமையாலும், விவேகமான அணுகுமுறையாலும், மதிநுட்பமான முடிவுகளாலும் அதனை அசாதாரண முறையில் செயல்படுத்தி வருகிறார். சமீபத்தில் மாவட்டங்கள் மற்றும் போக்குவரத்துக் கழகங்களின் பெயர்களை மாற்றி எடுத்த முடிவு நான் கூறுவதை மெய்ப்பிக்கும்.

இந்த சட்டமன்றத்திற்குத் தங்கள் சேவையைக் கடந்த காலத்தில் வழங்கிய முன்னாள் உறுப்பினர்களுக்கு என் மரியாதையையும் சட்டமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் மக்களின் பிரதிநிதிகளாகக் குறிப்பிடத்தக்க சேவை புரிந்துவரும் இன்றைய உறுப்பினர்களுக்கு என் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



# தமிழகச் சட்டமன்றம் பெருமைக்குரியதாகும்!

## மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உரை

சட்டமன்றப்பவள விழா - சட்டப்பேரவை வைரவிழா சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் 14.7.97 அன்று சிறப்புற நடைபெற்றது.

விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

இந்த விழா நிகழ்ச்சியை அற்புதமாக ஏற்பாடு செய்து, எழிலும் எழுச்சியும் குலுங்க இந்த நல்ல மாலை நேரத்தில் பெரியவர்களையெல்லாம் அழைத்து அவர்களுடைய அறிவுரைகளை வழங்கிடச் செய்த - அதற்கெனப் பல நாட்கள் அரும் பாடுபட்டு உழைத்த பேரவையினுடைய தலைவர் பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் அவர்களுக்கும், பேரவையைச் சார்ந்த அலுவலாளர்களுக்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



தேர்தல்கள் மூலம் சட்டம் இயற்றும் அமைப்பு ஒன்று தொடங்கப்பட்டு, அந்த அமைப்பினுடைய 75வது ஆண்டு நிறைந்த பவள விழாவையும், தமிழகச் சட்டமன்றத்தின் பேரவை தொடங்கப் பட்டு, அந்தப் பேரவையின் அறுபதாண்டுகள் நிறைந்த வைர விழாவையும் இங்கு நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

**விழா கொண்டாடும் போதெல்லாம்**

1972ஆம் ஆண்டு, இந்திய சுதந்திர வெள்ளி விழாவைக் கொண்டாடும்போதும் நான்தான் இங்கே முதலமைச்சராக இருந்தேன். 1989இல் சட்டமன்றப் பேரவையினுடைய பொன்விழாவைக் கொண்டாடிய போதும், நான்தான் முதலமைச்சராக இருந்தேன். இப்போது இந்திய நாட்டின் சுதந்திரப் பொன் விழாவைக் கொண்டாடும்போதும், நான்தான் முதலமைச்சராக இருக்கிறேன். இன்று - இந்தப் பவள விழா, வைர விழாவைக் கொண்டாடும்போதும் நான் முதலமைச்சராக இருக்கிறேன். எனவே நீங்கள் எனக்கு ஒரு பட்டம் கொடுக்கலாம் - "விழா முதலமைச்சர்" என்று.

இப்படி நானே முதல்வராக இருந்து இந்த விழாக்கள் நடப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். பெருமிதம் கொள்கிறேன்.

தேர்தல்கள் மூலம் சட்டம் இயற்றும் அமைப்பு தொடங்கப்பட்டு 75 ஆண்டு ஆயிற்று என்று சொன்னேன். அதனுடைய பவள விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இதை நீங்கள் அறிவீர்கள்.

**தேர்தல் தமிழர்களுக்குப் புதியதல்ல**

தேர்தல் என்பது தமிழர்களுக்குப் புதிய ஒன்று அல்ல. பிற்காலச் சோழர்கள் காலத்திலேயே தமிழ் நிலத்திலே கிராமப் பகுதிகளில் தேர்தல் முறை இருந்தது என்பதற்கு உத்தரமேரூர் கல்வெட்டு சாட்சியாக இருக்கிறது. யார் யார் தேர்தலுக்கு நிற்க வேண்டுமென்று சுட்டிக்காட்டுவதைவிட, விதிமுறை இருப்பதைவிட, யார் யார் ஊராட்சித் தேர்தலுக்கு நிற்கக் கூடாது; மக்கள் பிரதிநிதிகளாக வரக்கூடாது என்று நிதி முறைகள் வகுக்கப்பட்டிருந்தன. நல்லவர்கள் அல்லாதவர்கள், ஊழல் புரிகிறவர்கள், பிறர் பணத்திற்கு ஆசைப்படுகிறவர்கள், காம வேட்டைக்காரர்கள், குடிகாரர்கள் - இவர்கள் எல்லாம் தேர்தலிலே ஈடுபடக்கூடாது; ஈடுபடுவது தடுக்கப்படும் என்ற விதிமுறையின் அடிப்படையில் பிற்காலச் சோழர்களுடைய காலத்திலே கிராமப்பகுதிகளிலே தேர்தல்கள் நடைபெற்றன என்பதற்குச் சான்று பகன்று இன்றைக்கும் திகழ்ந்து கொண்டிருக்கின்ற கல்வெட்டுத்தான் உத்தரமேரூர் கல்வெட்டு.

நான் பிற்காலச் சோழர்களைக் குறிப்பிட்டேன். சங்ககாலத்திலேயே பழந்தமிழ்க் காலத்திலேயே இந்த வாக்குச் சீட்டு முறை இருந்திருக்கிறது. வாக்குச்சீட்டு என்றால் அச்சடித்த காகிதமல்ல. ஓலைகளிலே இந்த ஊருக்குத் தலைவராக யார் வரவேண்டும் என்று ஊர் மக்கள் விரும்புகிறார்களோ - அந்தப் பெயரை ஓலைகளிலே எழுதி அங்கே நடு மண்டபம் ஒன்றிலே வைக்கப் பட்டிருக்கின்ற குடத்திலே அந்த ஓலைகளை இடுவது ஒரு தேர்தல் முறை.

இதை ஒரு சங்ககாலப் புலவன் – ஒரு போர்க் களக்காட்சியைப் பாடுகின்ற நேரத்திலே நமக்குச் சுட்டிக்காட்டுகிறான். போர்க்களத்திலே பலர் மாண்டு கிடக்கிறார்கள். அப்படி மாண்டு கிடக்கும்போது மாண்டு கிடக்கின்ற அந்தப் பிணங்களின் வயிற்றையும் நெஞ்சையும் தலையையும் கழுகுகளும், பருந்துகளும் குத்திக் கீறி உணவாக்கிக் கொண்டிருக்கின்றன. அதிலே ஒரு கழுகின் செயலைப் பார்க்கிறான் புலவன். ஒரு மாண்டு கிடக்கின்ற வீரனின் குடலை உருவி, அது உண்ணுகின்ற காட்சியை சங்ககாலப் புலவன் வர்ணிக்கிறான். எப்படி என்றால் குடவோலை முறையிலே குடத்திற்குள்ளே போடப்பட்டுள்ள ஓலைகளை வெளியே இழுப்பதைப் போல அந்த வீரனுடைய குடலை இந்தக் கழுகும் பருந்தும் வெளியே இழுக்கின்றன என்று குறிப்பிடுகிறான்.

அந்தப் பாடல் மூலமாகக் குடவோலை முறை பழந்தமிழ காலத்திலே இருந்தது என்பதை நம்மால் அறிய முடிகிறது இப்படி பன்னெடு நாட்களுக்கு முன்பு பழந்தமிழ காலத்திலேயே இந்த மக்களாட்சி மாண்பினை உணர்ந்தவர்களாகத் தமிழ்நாட்டு மக்கள் இருந்திரு

# மீண்டும் சட்டமன்ற மேலவை:

## பேரவைத் தலைவர் பெருமிதம்!

**சென்னை மாகாண கவுன்சில்**

தமிழகத்தின் அரிய வரலாற்றுப் பெட்டகத்தில் மேலும் இரண்டு வரலாற்றுச் சிறப்புகள் இன்று சேர்க்கப்படுகின்றன.

Montague Chemsford சீர்திருத்தங்களைத் தொடர்ந்து இந்திய அரசு சட்டம் 1919ல் நடைமுறைக்கு வந்தது. அதன் காரணமாக முதன் முதலில் தேர்தல் நடைபெற்று சென்னை மாகாண கவுன்சில் 1921ல் தோற்றுவிக்கப்பட்டது. அந்த அமைப்பே விடுதலைக்கு முன்பிருந்த இந்தியாவின் மிகப் பழைய சட்டமன்ற அமைப்பு ஆகும். அந்த மாகாண கவுன்சில் தனித்தன்மையோடு 1937ல் தேர்தல் நடைபெறும் வரை செயல்பட்டது.



1935ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தில் குறிப்பிட்டவாறு, ஏற்கெனவேயிருந்த சென்னை மாகாண கவுன்சில் சட்டமன்ற மேலவை என்றும் சட்டமன்றப் பேரவை என்றும் இரண்டு அவைகள் கொண்ட முறை 1937லிருந்து நடைமுறைக்கு வந்தது.

**அண்ணா ஆட்சியில் மேலவைப் பெயர் மாற்றம்**

பேறிஞர் அண்ணா அவர்கள், தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் 18.7.1967ஆம் நாளன்று சென்னை மாநிலத்தின் பெயரைத் 'தமிழ்நாடு' என மாற்ற வகை செய்யும் தீர்மானத்தை சட்டப்பேரவையில் நிறைவேற்றி "சென்னை சட்டமன்ற மேலவை" "தமிழ்நாடு சட்டமன்ற மேலவையாக"ப் பெயர் மாற்றம் செய்யக் காரணமாக இருந்தார்கள். அவ்வாறு இருந்த சட்டமன்ற மேலவை 1.11.1986 முதல் ஒழிக்கப்பட்டது.

மூன்றாவது முறையாகத் தமிழக அரசின் தலைமைப் பொறுப்பை ஏற்ற மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சட்டமன்ற மேலவையை... மீண்டும் தோற்றுவிக்கப் பேரவையில் 20.2.1989ஆம் நாளன்று கொண்டு வந்த தீர்மானத்தைப் பேரவை நிறைவேற்றியது. பல்வேறு காரணங்களால் அந்தத் தீர்மானம் செயல் வடிவம் பெறவில்லை.

எனினும், நான்காவது முறையாக ஆட்சிக்கு வந்த மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 26.7.1996ஆம் நாளன்று சட்டமன்ற மேலவையைத் தோற்றுவிக்கச் சட்டப்பேரவையில் மீண்டும் முன்மொழிந்த தீர்மானத்தைப் பேரவை ஏற்றுக்கொண்டது. இந்த மாதம் 4ஆம் தேதி கூடிய மத்திய அமைச்சரவை இத்தீர்மானத்தை பாராளுமன்றத்தில் இந்தக் கூட்டத்தொடரில் அறிமுகம் செய்வதாக அறிவித்துள்ளது.

**இந்தியப் பிரதமருக்கு நன்றி**

இதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கும், மத்திய அமைச்சரவைக்கும் குறிப்பாகத் தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**இரண்டாவது சிறப்பு சட்டப் பேரவையின் வைரவிழா.**

இந்திய அரசுச் சட்டம் 1935 வாயிலாக, தமிழ்நாட்டில் 14.7.37ஆம் நாள் காலை 11 மணியளவில், இந்த விழா நடந்துகொண்டிருக்கும் சென்னைப் பல்கலைக்கழக வளாகத்திலேயே அமைந்திருக்கும் ஆட்சிப் பேரவை மண்டபத்தில் (Senate Hall) சட்டமன்றப் பேரவை தன்னுடைய முதல் கூட்டத்தைக் கூட்டியது. அது நடந்து இன்று சரியாக 60 ஆண்டுகள் ஆயிற்று. அதை நினைவுபடுத்தும் வகையிலேயே இன்று வைர விழா நடத்தப்படுகிறது.

*(மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு.பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன் அவர்கள் பேசியதிலிருந்து)*



# பொன்விழா காணும் தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைத் துறை

பொன்விழா ஆண்டினைப் பொலிவுடன் முடித்து, பவள விழா ஆண்டிற்கு ஏறு நடைபோடும் தமிழ்நாடு நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை தன் பெயருக்கு ஏற்ப நீண்டதொரு வரலாற்றைத் தன்னகத்தே கொண்டது.

1946ஆம் ஆண்டு வரை உள்ளாட்சி அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டு வந்த சாலை மற்றும் பாலப்பணிகள் 1946ஆம் ஆண்டில் தமிழக அரசின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டு நெடுஞ்சாலைத் துறை எனும் சிறப்புத் துறையினைத் தோற்றுவித்து, அனைத்து சாலை பாலப்பணிகள் சிறப்புறச் செயலாக்கப்பட்டு வருகின்றன. இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழக அரசின் இத் தனித்துறை அமைப்பு, தலையாயதும் முதலாவதுமாகும்.

தமிழக நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் தற்சமயம் 2002 கி.மீ. நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலையும் 1934 கி.மீ. மாநில நெடுஞ்சாலையும், 13,975 கி.மீ. மாவட்டப் பெரிய சாலைகளும் மற்றும் 39,063 கி.மீ. இதர மாவட்டச் சாலைகளும் உள்ளன. இதனைத் தவிர 1132 கி.மீ. கரும்பு ஆலைகளுக்குச் செல்லும் சாலைகளும் 34,083 கி.மீ. ஊராட்சி ஒன்றியச் சாலைகளும் 29,020 கி.மீ. ஊராட்சிச் சாலைகளும், மற்றும் 6.528 கி.மீ. வகைப்படுத்தப்படாத சாலைகளும் இத்துறையின் தொழில்நுட்ப உதவிகளுடன் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இத்துறையின் 3000க்கும் மேற்பட்ட கடும் உழைப்பிற்கு அஞ்சாத பொறியாளர்களை உள்ளடக்கிய 14,500 அலுவலர்கள், பணியாளர்கள் அடங்கிய மாபெரும் சக்தியே இத்துறையின் சிறப்பான செயல்பாட்டிற்குக் காரணமாக அமைகிறது.

இந்த 50 ஆண்டு கால நெடிய வரலாற்றில் நெடுஞ்சாலைத் துறையின் செயல்பாடுகளில் பல வரலாறு படைத்து நினைவில் நிற்கின்றன. சாலை வடிவமைப்பிலும் பாலங்கள் கட்டுவதிலும் இந்தியாவிற்கே ஒரு வழிகாட்டியாக இத்துறை திகழ்கிறது. இதற்கு எடுத்துக்காட்டாக 1950ஆம் ஆண்டு செங்கல்பட்டு அருகே தேசிய நெடுஞ்சாலையில் பாலாற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலம் அமைந்துள்ளது என்பதைக் குறிப்பிடலாம்.

அன்றாடம் மாறிவரும் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி, சென்னை - சைதாப்பேட்டை அடையாறு ஆற்றின் குறுக்கே போக்குவரத்துக்கு சிறிதும் இடையூறு இன்றி கட்டப்பட்ட மறைமலை அடிகள் பாலம் ஆசிய கண்டத்தில் அகலமான மாநகரப் பாலங்களில் முன்னோடியாகும்.



தமிழகத் தலைநகரில் தனிப்பெரும் மேம்பாலமாகப் பலரும் வியக்கும் வண்ணம் அமைந்துள்ள அண்ணா மேம்பாலம் நெடுஞ் சாலைத் துறையின் அரும்பெரும் சாதனைப் படைப்பு.

திருநெல்வேலி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் போன்ற பெரிய மாநகரங்களில், போக்குவரத்து நெரிசலைப் போக்க கட்டப்பட்ட வில் வளைவு அமைப்புக் கொண்ட மேம்பாலங்கள் இத்துறையின் சாதனைகளைப் பறை

216441

கின்றார்கள். நம்பின மக்கள் அதை உணர்ந்தவர்களாக விளங்கியிருக்கிறார்கள். அவ்வழியிலே வந்த - ஆங்காங்கு சில தடைகள், இடையூறுகள் இருந்தாலும்கூட அவற்றையெல்லாம் கடந்து மக்களுடைய பிரதிநிதிகள் அமர்ந்து சட்டம் இயற்றுவது - சமுதாயத்தை முன்னேறச் செய்வது ஆகிய பணிகளை மேற்கொள் வதற்குத்தான் சட்ட மன்றங்கள், பாராளுமன்றங்கள் எல்லாம் இன்றைக்கு இருக்கின்றன.

**முதலமைச்சர்களாக இருந்த பெருமைக்குரியவர்கள்**

அந்தச் சட்டமன்றத்திலே பல ஆண்டு காலம் பணியாற்றியவன் - 57ஆம் ஆண்டிலேயிருந்து பணியாற்றியவன் - பணியாற்றிக் கொண்டிருக்கிறவன் என்ற முறையில் இந்த இரு விழாக்களிலும் கலந்துகொள்வதில் நான் மிகுந்த பெருமை கொள்கிறேன்.

இந்தச் சட்டமன்றத்திலே எந்தெந்த முதலமைச்சர்கள் எல்லாம் இருந்திருக்கிறார்கள்? 'தாடி வைக்காத பெரியார்' என்று புகழப்பட்ட ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், முதல்வராகப் பொறுப்பேற்றிருந்திருக்கிறார்.

பேசமாட்டார், ஆனால் அரிய செயல்களைப் புரிவார் என்று புகழ்பெற்ற - பேச்சில் என்ன இருக்கிறது. செயலில் தான் எல்லாம் இருக்கிறது என்று செய்துகாட்டிய பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்திருக்கிறார். நிர்வாகத்திலே இவருக்கு நிகர் யாருமில்லை என்று பெயரெடுத்த பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்திருக்கிறார்.

எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்று எதிர்க்கட்சிகளின் தாக்குதல்களை எல்லாம் சட்ட மன்றத்திலே தாங்கிக்கொண்டு Your Days are numbered என்று எதிர்க்கட்சித்தலைவர் ஒருவர் சொன்னபோதுகூட My steps are measured என்று சொன்ன பேரறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்திருக்கிறார்.

என்னுடைய இனிய நண்பர் - அருமை நண்பர் - மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்திருக்கிறார்.

**இந்த சட்டமன்றத்தில் பணியாற்றி பெரும் பதவிகளுக்குச் சென்றவர்கள்**

இந்தச் சட்டமன்றத்திலே பணியாற்றியவர்கள் எல்லாம் பல பெரும் பதவிகளுக்கும் சென்றிருக்கிறார்கள். நம்முடைய சி. சுப்பிரமணியம் அவர்கள் மாநில அமைச்சராக இருந்தார். அவர் மாநில அமைச்சராக இருந்தபோது - 57ஆம் ஆண்டு நான் சட்டசபைக்குள் நுழைந்தவன். அப்போது அவர்கள் நிதியமைச்சர். நான் நுழைந்த இரண்டாம் ஆண்டு - 1958இல் நிதிநிலை அறிக்கையைப் படிக்கத் தொடங்கும்போது "நான் இன்றைக்குச் சதம் அடிக்கப் போகிறேன். செஞ்சுரி போடப் போகிறேன்" என்று சொன்னார்கள். நாங்கள் அகல விழிகளை விழித்து என்னவென்று பார்த்தோம். இந்தப் பட்ஜெட் நூறு கோடி ரூபாய் பட்ஜெட் என்று சொன்னார்கள்.

**பலன் காணமுடியாத சூழ்நிலை**

57-58-ல் நூறு கோடி ரூபாய் பட்ஜெட் அவ்வளவு பெருமையாக இருந்தது. இன்றைக்குப் பதினைந்தாயிரம் கோடி ரூபாய்க்கு பட்ஜெட் போட்டாலும் அதனுடைய பலன்களை மக்கள் அனுபவிக்க முடியாத சூழ்நிலையிலே நாடு இருக்கிறது.

அன்று மாநில அமைச்சராக இருந்த சி.எஸ். அவர்கள் மத்தியிலே அமைச்சரானார்கள். மராட்டியத்தின் ஆளுநராகவும் ஆனார்கள். அதைப்போலவே இங்கே மாநில அமைச்சராக இருந்த ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் மத்தியிலே அமைச்சராகவும், குடியரசுத் துணைத் தலைவராகவும், குடியரசுத் தலைவராகவும் ஆனார்கள். அதைப் போலவே இங்கே சென்னை மாகாண முதல்வராக (பிரதமராக) இருந்த மூதறிஞர் ராஜாஜி அவர்கள் வங்காள மாநில ஆளுநராகவும் முதல் இந்திய கவர்னர் ஜெனரலாகவும் ஆனார்கள். இங்கே மாநில அமைச்சாக இருந்த வி.வி.கிரி அவர்கள் இந்தியாவின் குடியரசுத் தலைவராக ஆனார்கள். இங்கே மாநில அமைச்சராக இருந்த திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் கேரள மாநில ஆளுநராக ஆனார்கள். இங்கு அமைச்சராக இருந்த பிரமானந்த ரெட்டி அவர்கள் (ஒன்றாக இருந்தபோது- சென்னை மாகாணமாக இருந்தபோது) ஆந்திர முதலமைச்சராக ஆனார்கள். பின்னர் ஆளுநராகவும் ஆனார்கள். நீலம் சஞ்சீவரெட்டி அவர்கள் இங்கே அமைச்சராக இருந்தார்கள். பின்னர் ஆந்திர முதல்வராகவும் ஆனார்க்ள். பிறகு இந்தியாவின் குடியரசுத் தலைவராகவும் ஆனார்கள்.

**தமிழகச் சட்டமன்றப் பெருமை**

இந்த அளவிற்குப் பல இந்திய் குடியரசுத் தலைவர்களை உருவாக்கிய சட்டமன்றம் தமிழ்நாட்டைத் தவிர வேறெங்கும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை நான் தவறாகச் சொல்லியிருந்தால் திருத்திக்கொள்ளவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்கால மக்களாட்சித் தத்துவத்திற்கும் மக்கள் சேவை உணர்விற்கும் அக்காலத்திலேயே சோழ மன்னர்கள் வித்திட்டார்கள் என்று கூறினேன். அந்த மக்கள் சேவை எப்படி இருக்க வேண்டும் என்பதை "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்று உத்தமர் காந்தி அடிகளும், அறிஞர் அண்ணா அவர்களும் சொல்லிச் செயல்பட்டதைப் போல "சேவை என்பது மற்றவர்கள் நன்மை அடைவதைப் பார்த்து மகிழ்ச்சியும் திருப்தியும் அடைவதற்காகத் தான் செய்யும் காரியம்" என்று தந்தை பெரியார் அவர்கள் சொல்லி செயல்பட்டதைப் போல, மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் மக்கள் நலனையே உயிர் மூச்சாகக் கொண்டு செயல்பட வேண்டும்.

ஒரு தேசத்தை ஒருவர் ஆட்சி புரிவதென்பது அந்தத் தேசத்து மக்களின் நன்மைக்காகவேயொழிய ஆட்சி புரிவோரின் நன்மைக்காக அல்ல என்பதை ஒவ்வொருவரும் மனதிலே கொள்ளவேண்டும். ஜனநாயகம் என்பது மக்களாட்சி எனும் அரசாங்க முறை "மக்களுக்காக - மக்களால் நடத்தப்படும் - மக்கள் அரசாங்கம்" என்று ஆபிரகாம் லிங்கன் குறிப்பிட்டிருப்பதை மறந்துவிட முடியாது. தற்காலத்தில் ஜனநாயக நாடுகள் யாவும் மக்களாட்சி முறை என அழைக்கப்படும் பிரதிநிதித்துவ அரசாங்க முறையை மேற்கொள்கின்றன.

மக்களின் சார்பில் அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் அரசாங்கத்தை அமைத்து ஆட்சி நடத்துகிறார்கள். தற்போது அரசிடமிருந்து மக்கள் அதிக அளவில் எதிர்பார்க்கிறார்கள். எனக்கும் புரிகிறது எல்லோருக்கும் புரிவதைப் போல!



**சலவை செய்யப்பட்ட உடை**

அவைகளை நிறைவு செய்ய வேண்டிய பொறுப்பு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் கையில்தான் இருக்கிறது. சட்டத்தைப் பயன்படுத்தி சமுதாயத்தை ஒழுங்குபடுத்துவது என்பது சலவை செய்யப்பட்ட உடைக்கு இஸ்திரி போடுவதைப் போல! ஏனென்றால் கொஞ்சம் கவனம் தவறினாலும் இஸ்திரி போடும்போது துணி கருகிவிடும். அதனால்தான் சட்டத்தைப் பயன்படுத்தி, சமுதாயத்தை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று எண்ணுகிற நேரத்தில் சர்வ ஜாக்கிரதையாகச் சட்டம் பயன்படுத்தப்பட வேண்டும்.

சட்டங்கள் என்பது குடிமக்களின் ஏற்புடைய விருப்பை அறிவிக்கும் முறையாகும். சட்டமன்றம் என்பது குடிமக்களின் முடிவை வெளிப்படுத்தும் நிறுவனமாக அமைகிறது. மக்களிடையே பொருளாதாரச் சமத்துவம் உருவாக்கப்பட, வகுக்கப்பட்ட திட்டங்கள் பலவும் தமிழகத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கு உறுதுணையாக விளங்குவதோடு, இந்திய நாட்டிற்கே முழுமைக்கும் வழிகாட்டத் தக்கதாக அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

ஒரு சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி எப்படி இருக்க வேண்டும் ஆளுங்கட்சி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான இலக்கணங்களைப் பேரறிஞர்கள், பெரியவர்கள் பலரும் எடுத்துக் காட்டி அதைச் செயல் படுத்தியும் உணர்த்தியிருக்கிறார்கள்.

**அண்ணா சொன்ன கேரளத்து யானைக் கதை**

எதிர்க் கட்சியைப் பற்றி ஒரு முறை அண்ணா அவர்கள் சட்டமன்றத்திலே பேசும்போது சொன்னார்கள் -

கேரளத்திலே ஒரு திருவிழா நடைபெறும். அந்தத் திருவிழாவிலே யானையின் துதிக்கையிலே ஒரு கம்பத்தைக் கொடுப்பார்கள். அந்த யானை அந்தக் கம்பத்தை - குறிப்பிடப்பட்ட குழியிலே கொண்டு போய் நடும். அது நட்ட பிறகுதான் திருவிழா தொடங்கும். இப்படி ஒரு நாள் ஒரு திருவிழாவில் யானையின் துதிக்கையிலே இரும்புக் கம்பத்தைக் கொடுக்க, அந்த யானை குழிக்கு அருகே சென்று, அதை நட மறுத்து விட்டது. எல்லோருமே ஆச்சரியத்தால் அதிர்ச்சியடைந்தார்கள். அது நாட்டிற்கே நல்லதல்ல என்று கவலை கொண்டார்கள்.

பல முறை பாகன் அடித்தும்கூட, அதைக் குத்தியும் கூட, வதைத்தும்கூட - அந்த யானை அந்தக் குழியிலே அந்தக் கம்பத்தை நட மறுத்து விட்டது. ஏன் என்று தெரிந்துகொள்ள - பிறகுதான் எல்லோரும் குழியைப் போய் எட்டிப் பார்த்தார்கள். குழிக்குள்ளே ஒரு சின்ன பூனைக் குட்டி இருந்தது. கம்பத்தை நட்டால் பூனைக் குட்டி இறந்துவிடும் என்பதற்காக யானை அந்தக் கம்பத்தை நட மறுத்தது என்பதை உணர்ந்தார்கள்.

அண்ணா சொன்னார் - சட்டசபையிலே "நீங்கள் யானையாக இருக்கின்ற ஆளுங்கட்சிக்காரர்கள் - பூனையாக இருக்கின்ற எங்களை - எதிர்க்கட்சியாக இருக்கின்ற எங்களை அந்த யானை எப்படி மதித்ததோ அப்படி மதியுங்கள்" என்று சுட்டிக்காட்டினார்கள்.

இன்னொருமுறை, நம் நண்பர் ஹண்டே அவர்கள் சட்டமன்றத்திலே பேசும்போது - அப்போது ஹண்டே அவர்கள் தோழமைக் கட்சி, சுதந்திரா கட்சி. ஹண்டே அவர்கள் தி.மு.கழகத்தின் ஆட்சி, அண்ணாவின் தலைமையிலே நடைபெறுவதைப் பற்றி, அவர் தோழமைக் கட்சியாக இருந்தாலுங்கூட, ஆட்சிக்குத் தேவையான கருத்துக்களை எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு எதிர்கட்சிக்காரர் எழுந்து "என்ன ஹண்டே இவ்வளவு மென்மையாகப் பேசுகிறார்" என்று கேட்டார். அப்போது அண்ணா சொன்னார். "எப்போதும் எதிர்க்கட்சிதான் வேகமாகப் பேசும்; ஆனால் தோழமைக் கட்சி பூனை தன் குட்டியைக் கவ்விக் கொண்டு போவதைப் போலத்தான் கவ்வும். எதிரிக் கட்சியாக இருந்தால் பூனை எலியின் மீது பாய்வதைப் போலப் பாய்வார்கள். ஹண்டே அவர்கள் பூனை தன் குட்டியைத் தூக்குவதைப் போலப் பல் பதியாமல் எங்களைத் தூக்குகிறார்" என்று அண்ணா அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள்.

இது தோழமைக் கட்சிக்கு இருக்கவேண்டிய இலக்கணம் என்பதை அன்றைக்கே அண்ணா அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

**எதிர்க்கட்சித்தலைவரின் குறைபாடு**

இங்கே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் ஒன்றைக் குறிப்பிட்டார். அவர்கள் சட்டமன்றத்திலே ஏற்கெனவே என்னோடு இருந்தார் என்று எனக்கு நினைவு! நல்ல சட்டமன்றப் பாரம்பரியம் கொண்டவர். நல்ல பண்பாளர். அவர்கள் சில கருத்துக்களை இங்கே சொன்னார்கள்.

இப்போதெல்லாம் சட்டமன்றத்திலே பேசப்படுகின்ற விஷயங்கள் குறித்து - முன்பு போல அதிகாரிகள் மாலை நேரத்திலே எங்களிடம் வந்து கேட்டுத் தெரிந்துகொண்டு நடவடிக்கை எடுப்பதில்லை என்று சொன்னார்கள். நானும் 57லிருந்து சட்டமன்றத்திலே இருக்கிறேன். நான் பேசிய பிறகு, அன்றைக்கு மாலையிலே எந்த அதிகாரியும் என்னை வந்து பார்த்து, என்ன பேசினீர்கள் என்று கேட்டதாக எனக்கு ஞாபகம் இல்லை. ஒருவேளை பாலகிருஷ்ணன் அவர்களைக் கேட்டிருக்கலாம். ஆனால் என்னைக் கேட்டது கிடையாது. நான் 57லும் இருந்தேன்; 62லும் இருந்தேன். எதிர்க்கட்சியாக இருந்தேன்; அதற்குப் பிறகு 67ல் ஆட்சிக்கு வந்தேன். அதற்குப் பிறகு எம்.ஜி.ஆர். காலத்திலே எதிர்க்கட்சியாக இருந்திருக்கிறேன். எந்த அதிகாரியும் என்னைக் கேட்டதாக எனக்கு ஞாபகம் இல்லை.

நம்முடைய பாலகிருஷ்ணன் அவர்களுக்கு - கொஞ்சம் ஞாபக மறதி உண்டோ என்று எனக்கு எண்ணம். ஏனென்றால் - நான் சொன்னேன் முதலிலேயே. பெருந்தலைவர் காமராஜர் சட்டமன்றத்தில் பேசியதே கிடையாது. அவர் இங்கே தமிழை ஆட்சி மொழிச் சட்டத்தை நிறைவேற்றிவிட்டுப் பேசியதாக ஒன்றை இங்கே பாலகிருஷ்ணன் படித்துக் காட்டினார். அந்தப் பேச்சு காமராஜர் பேசியதல்ல. சி.சுப்பிரமணியம் அவர்கள் பேசிய பேச்சு என்பதை - வரலாற்றிலே பிழை வந்து விடக்கூடாது என்பதற்காக - அவர் சார்பாக அந்தப் பிழையை உங்கள் முன் நான் திருத்தி - ஏதாவது நான் தவறு செய்திருந்தால், அந்தத் தவறையும் திருத்துங்கள் என்று உங்களையெல்லாம் கேட்டுக்கொண்டு - உங்களுடைய அன்பான வருகைக்கு நன்றி கூறி இந்த அளவில் விடைபெறுகிறேன்".

*- இவ்வாறு முதல்வர் கலைஞர், அவர்கள் உரையாற்றினார்.*

சாற்றுகின்றன. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருப்பூர், சேலம், ஈரோடு, வேலூர் ஆகிய இடங்களில் உலக வங்கியின் உதவியுடன் வேலைகள் எடுக்கப்பட்டன.



அனைத்துக்கும் மேலாக முற்றிலும் நெடுஞ் சாலைத்துறைப் பொறியாளர்களால் வடிவமைக்கப்பட்டு இராமேஸ்வரம் தீவினைத் தாய் நிலத்துடன் இணைக்கும் வகையில் கடலின்மேல் அமைக்கப்பட்ட பாம்பன் பாலம், நெடுஞ்சாலைத் துறையின் சாதனைக்குப் பெருஞ் சான்றாக அமைகிறது.

உலக வங்கி நிதி உதவியுடன் கட்டப்பட்ட தாம்பரம் மாமண்டூர் நான்கு வழித் தடச்சாலை இத்துறையின் சாதனையில் மற்றுமொரு மைல்கல்.

இந்தியாவின் உயிர்நாடியான கிராமங்களில் வாழும் மக்களுக்கு அவர்தம் விளைபொருட்களை விரைந்து வணிக மையங்களுக்குக் கொண்டுசெல்லச் சீரிய சாலையை அமைப்பதும் இத்துறையே. 1991 கணக்கெடுப்பின்படி ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகையுள்ள 517 கிராமங்களுக்கும் இணைப்புச் சாலை 3 ஆண்டுகளுக்குள் போடப்பட்டுவிடும்.

கரும்பு ஆலைகளுக்குக் கரும்பு கொண்டுசெல்லும் தரமான சாலைகளையும் இத் துறையே அமைக்கிறது. 1957ஆம் ஆண்டு நிறுவப்பெற்ற சென்னை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் மைய அரசின் டெல்லி ஆராய்ச்சி நிலையத்திற்கு இணையாக மேன்மை பெற்றுள்ளது. பல்வேறு பணிப்பிரிவுகளின் தொழில்நுட்ப ஆய்வகங்களைத் தன்னகத்தே கொண்ட நெடுஞ்சாலை ஆராய்ச்சி, தமிழ்நாட்டில் அமைந்துள்ள சாலைகள் பாலங்களுக்கான புலனாய்வு, கட்டுமானம், பராமரிப்பு தொடர்பான செயல் மேலாக்கப் பணிகள் குறித்த ஆராய்ச்சிகளைப் பயனுற மேற்கொள்கிறது. இதன் பணிகளை மாநிலம் முழுவதும் உபயோகிக்கத் தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் கோவை மண்டல ஆய்வகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஒரு நாட்டின் துரிதமான பொருளாதார வளர்ச்சிக்கும் சமூக ஒருங்கிணைப்புக்கும் சாலைப் போக்குவரத்து தொடர்பு இன்றியமையாத அடிப்படைத் தேவையாகும். சாலை மற்றும் ஊரக மேம்பாட்டுப் பணிகளை மேலும் செம்மையாகவும், சிறப்பாகவும் செயல்படுத்தும் பொருட்டு, தற்போது பொன்விழா ஆண்டினைத் தாண்டிச் சென்றுகொண்டிருக்கும் இத்துறைக்கு நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமைச் செயலக அளவிலும் தனித்துறை அமைத்து, தனிச் செயலாளரும் அமர்த்தப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. இதிலும் தமிழகம்தான் முன்னிற்கின்றது என்பது தனிச் சிறப்பு.

உலக வங்கி, ஆசிய மேம்பாட்டு வங்கி, இன்னபிற வெளிநாட்டு நிறுவனங்களின் நிதி உதவியுடன் சாலை நிர்மான கட்டுக்கோப்பினை மேம்படுத்தத் தனியார் மயமாக்கல் போன்ற திட்டங்களைச் செயலுறுத்தவும் மேலும் நபார்டு (NABARD) கடன் உதவியை நிறைவாகத் துய்த்து சாலை மேம்பாட்டில் முழுப்பலன் ஈட்டவும் இத்துறை தனிக்கவனத்தைச் செலுத்திவருகிறது.

இன்றைய மிக இன்றியமையாத பொருளாதார மேம்பாட்டிற்கு அறுதியாகவும், உறுதியாகவும், தேவைப்படும் சாலை, பால மேம்பாடு, தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தையும் இந்திய வளத்தையும் தலை நிமிரச் செய்ய அடிப்படையாக அமைந்துள்ள நெடுஞ்சாலைத்துறை, தமிழகத்தின் முதுகெலும்பாகத் திகழ்ந்து அரும்பணியாற்றுகிறது. ஆற்றும் அத்தகு பணி மேன்மேலும் தொடரும். ★



# வேலூர் புரட்சி

வேலூர்க் கலகம் எனப்படும் வேலூர்ப் புரட்சி 'வீழ்ந்து பட்டோம்' நாம் என்றுணர்ந்த தென்னிந்திய மக்கள் விழித்தெழுந்த வீரக் கதையாகும்.

மாவீரன் திப்புவின் வீழ்ச்சிக்குப் பின், அவரது குடும்பத்தினர் கைதிகளாய் வேலூர்க் கோட்டையுள் அடைக்கப்பட்டனர். அவர்களை 1500 இந்திய, 379 வெள்ளைச் சிப்பாய்கள் காவல் புரிந்தனர்.

## 1806

ஆங்கிலப் படையின் முதல் ரெஜிமெண்டின் முதல் பட்டாலியனின் ஆறு கம்பெனிகளும், நான்காவது ரெஜிமெண்டின் இரண்டாவது பட்டாலியனும் பணியில் இருந்தன. ஏப்ரல், மே மாதம் வாக்கில் சிப்பாய்களுக்குப் புதிய சீருடை அமலாக்கப்பட்டது. புதிய தலைப்பாகை, தோலால் ஆன குல்லாய்ச் சென்டு, புதிய காலுறைகள் வழங்கப்பட்டு அணியுமாறு வற்புறுத்தப்பட்டது. ஆனால் வேலூர்ச் சிப்பாய்களுக்கு அதனை ஏற்க மனமில்லை.

வாலாஜாபாத்திலும் அப்படியே தம் ஆணை செயல்படாமற் போனதற்காக அவமானமுற்ற வெள்ளை அதிகாரிகள், சுதேசி சிப்பாய்களைப் பட்டினி போட்டனர். முன் நின்றவர்களுக்கு தலா 900 சவுக்கடி தண்டனை அளித்தனர். ஒரு சிப்பாயின் மாதச் சம்பளம் 7 ரூபாய் மட்டுமே. அதை விட்டெறிந்து விட்டு வேலையிலிருந்து வெளியேற வேண்டும் என ஆபாச அடைமொழியோடு அவர்கள் வெள்ளையரை வைதனர்.

சிப்பாய்களின் மனத்தில் எதிர்ப்புணர்வென்னும் நெருப்பு! திப்புவின் நினைவு எரிநெய் ஆயிற்று!

திப்புவின் புதல்வர்கள், வேலூர்ப் பட்டாளத்தின் சுதேசித் தலைவர்கள், சிப்பாய்களின் எண்ணம் செயலாக ஊக்கம் கொடுத்தனர். மதுரைக் கலவரம் (1804), சித்தூர்க் கலவரம் (1804-5), மலபார் புரட்சி (1802-5), திருவாங்கூர் புரட்சி (1804-5) முதலானவையும் அவர்களது உணர்ச்சிகளைக் கூடுதலாக்கின.

புரட்சியாளர்கள், வேலூருக்கு அப்பால், நெல்லூர், காளஸ்திரி பகுதிகளோடு ரகசியத் தொடர்பு கொண்டார்கள். இந்து முஸ்லீம் மக்களை, சிப்பாய்களை வெள்ளையர்க்கு எதிராக ஒன்றிணைக்க முயன்றார்கள், தமக்கெதிராக வதந்தி பரப்புவோர் இராணுவ நடவடிக்கைக்கு உள்ளாவர் என்று மிரட்டியது கும்பினி ஆட்சி.

ஜூலை 4ம் நாள் புரட்சி தினமாய்க் குறிக்கப்பட்டது. ஆனால் அது 8-ம் தேதி என மாறி மீண்டும் 9-ம் தேதி ஆயிற்று. அன்று மாலையும் இரவும், பல்வேறு காரணங்கள் காட்டி சிப்பாய்களில் பல பேர் கோட்டைக் குள்ளேயே தங்கினர். வெள்ளை அதிகாரிகள் உறங்கிக் கொண்டிருந்தனர். 10ம் தேதி விடிந்து கொண்டிருந்தது. இரவு இரண்டு மூன்று மணி. சிப்பாய்கள் சிறு பீரங்கிகளைச் சப்தமேதுமற்று நகர்த்திச் சென்று வெள்ளைக் குடியிருப்புகளுக்கு எதிரே நிலை நிறுத்தினர். சைகை கிடைத்ததும் துப்பாக்கி, பீரங்கிகள் முழங்கின.

கர்னல் பான்கோர்ட் முதல் பலி. அடுத்து கர்னல் மெக்சிராஸ். மெக்சிராஸின் சடலத்தின் மீது சிப்பாய்கள் காறி உமிழ்ந்து, எட்டி உதைத்து இகழ்ந்தனர். அவர்தான் புதுத்தொப்பி அணியக் கட்டாயப் படுத்தியவர். அரண்மனைப் பணியாளர் கேப்டன் வில்லிசனைக் சுட்டு வீழ்த்தினர். சார்ஜெண்ட் ஜான் ஈலே துரத்திச் சென்று வளைந்த கொடுவாளால் வெட்டப்பட்டார். திப்புவின் இளவரசர்களது பணியாட்கள், புரட்சி நடத்திய சிப்பாய்களுக்கு முழு உற்சாகத்துடன் உதவி செய்தனர். எதற்கோ, கோட்டையிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்த மேஜர் ஆம்ஸ்ட்ராங் என்ன கலவரம் இது என்றறிய பல்லக்கு விட்டிறங்கினார். கனன்ற குண்டுகளே அவரது கேள்விக்குப் பதிலுரைத்தன.

ஐநூறு இந்திய சிப்பாய்கள் ஒன்று திரண்டு வெள்ளைக் குடியிருப்புகளின் மீது குண்டுமழை பொழிந்தனர். 69-ம் ரெஜிமெண்டின் வெள்ளை வீரர் அநேகம் பேர் மாண்டு வீழ்ந்தனர். சார்ஜெண்ட் காஸ்கிரேவ் ஊனப்பட்டு வீழ்ந்தார்.

ஒன்றரை மணி நேரம், தாக்குதல் தீவிரமாக நீடித்தது. பின் இளவரசர் முஸ்-உத்-தீன் ஆணைப்படி கோட்டையில் வெற்றி முழக்கத்தோடு பச்சை வர்ணப் பின்னணியில் கர்ஜித்து நிற்கும் வரிப் புலிக் கொடியொன்று ஏற்றப்பட்டது. அந்த நேரம் கோட்டை முழுவதும் புரட்சியாளர்கள் வசத்தில் இருந்தது.



காலை 9.30 மணி அளவில் வெளியிலிருந்து வெள்ளைப்படை உதவிக்கு வந்தது. மைசூர் இளவரசரும் தான்தான் தலைவர் என்று அறிவித்து முன் வரவில்லை. புரட்சியின் நோக்கத்தை மறந்து போன இந்திய சிப்பாய்கள் கொள்ளை யடிப்பதில் தீவிரம் காட்டினர். அதனால் பெருங்குழப்பம் விளைந்தது. காலை 10 மணி அளவில் வெள்ளையர் கை ஓங்கிற்று. இந்தியச் சிப்பாய்கள் துருவித் துருவித் தேடப்பட்டுக் கொல்லப்பட்டனர். ஆங்கிலேயர்க் கெதிரான இந்தியாவின் முதலாவது இராணுவக் கிளர்ச்சி இப்படித் தோல்வியுற்றது.

- டாக்டர் பி. சின்னையன் அவர்களது
The Vellore Mutiny - 1806
என்னும் நூலிலிருந்து.

# எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு..

முதலாவதாகத் தனக்குத் தானே கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளுபவனே சுதந்திர மனிதன்!

- மகாத்மா காந்தியடிகள்

சுதந்திரத்திற்குப் பேச்சால் அல்ல, செயலால்; விழா நாளில் மட்டுமல்ல, எல்லா நாட்களிலும்; தனித்தனியே அல்ல, எல்லா மக்களும் மரியாதை செலுத்திட வேண்டும்.

- அறிஞர் அண்ணா

நமது நாட்டில் சுதந்திரம் என்பதற்கு அர்த்தமே, மற்றவர்கள் சுதந்திரத்தைக் கெடுப்பது என்றுதான் பலர் கருதிக்கொண்டிருக்கிறார்கள். இந்த மனப்பான்மை, அடிமைத் தளையின் வாசனையால் ஏற்பட்டதே தவிர, ஒருக்காலும் சுயேச்சைத் தன்மை உடையதாகாது!

- தந்தை பெரியார்

ஒரு மனிதன் தன் சுதந்திரத்தை இழந்துவிட்டா னென்றால், அவன் தனது மனிதத் தன்மையை இழந்துவிட்டான் என்றுதான் பொருள்!

- ரூஸோ

வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்பு வேறொன்று கொள்வாரோ?

- மகாகவி பாரதியார்

உயர்ந்த பதவிகளில் இருப்பவர்களுக்கு, நினைத்தபடி பேசவும் நடந்துகொள்ளவும் சுதந்திரம் இருக்காது!

- டால்ஸ்டாய்

சுதந்திரத்தைப் பெற நாம் கொடுக்கும் விலைதான் கட்டுப்பாடு!

- நார்மன் வின்சென்ட் பீல்

சுதந்திரம் இல்லாத மனிதனிடம் அன்பை எதிர்பார்ப்பது கடினம்; அடிமையிடத்தில் உண்மையான அன்பு எப்படி இருக்கமுடியும்?

- விவேகானந்தர்

உன்னுடைய சுதந்திரத்திற்கான வழி பிறரிடமில்லை; உன்னிடமே இருக்கிறது!

- புத்தர்

நாம் சுதந்திரம் பெற்றதோடு ஒரு யாத்திரை முடிந்துவிட்டது. ஆனால், இன்னொரு யாத்திரை தொடங்கிவிட்டது. வறுமையை ஒழிப்பதற்காகவும், நல்வாழ்வுக்கு உகந்த சமூக, பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்காகவும் துவக்கியுள்ள யாத்திரையே அது!

- ஜவகர்லால் நேரு

அடுத்த இதழ்

**'தமிழரசு'**

**சுதந்திரத் திருநாள் பொன்விழா**

**சிறப்பிதழாக மலரும்!**



# இந்திய சுதந்திரப் போர்: முக்கியச் சம்பவங்கள்!

- **1186-1526**-ல், வட இந்தியாவின் சில பகுதிகளில், இஸ்லாமியர்களான கோரி, கில்ஜி, துக்ளக், லோடி வம்ச ஆட்சி நிலவியது.
- 1510ல், ஐரோப்பியாவிலிருந்து இங்கு வந்தவர்களில், முதன்முதலாக வந்த போர்ச்சுகீசியர்கள் கோவாவில் தங்கள் அரசை நிறுவினர்.
- 1526ல், ஏற்பட்ட மொகலாயர் ஆட்சி, இந்தியாவில் 1857 வரை நீடித்தது.
- 1757ல், நடந்த பிளாஸிச் சண்டை, இந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. முதலாவதாக, வங்கதேசத்தில் ஆங்கிலேயர் ஆட்சி அமைந்தது.
- 1784ல், பக்சார் போர். இதை இரண்டாவது கட்டத் திருப்புமுனை எனலாம். வங்கதேசத்தில் அழுத்தமாகக் காலூன்றிய ஆங்கிலேயர், அதையடுத்து-சென்னை, பம்பாய் எனப் பல பெரிய முக்கிய இந்திய நகரங்களையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டுவந்தனர். 4 மராட்டியப் போர்கள், 3 கர்னாடகப் போர்கள், 3 மைசூர்ப் போர்கள் ஆகியவை-ஆங்கிலேயர் ஆதிக்கம், (ஓரிரண்டு பகுதிகள் தவிர) இமயம் முதல் குமரிவரை இந்தியாவில் பரவிட வகை செய்தது.
- 18ஆம் நூற்றாண்டில், ஆங்கில ஆதிக்கத்திற்கு எதிரான போர்க்குரல் - முதன்முதலாக பூலித்தேவன், வீரபாண்டியக் கட்டபொம்மன், கான்சாகிப், வேலுநாச்சியார் போன்றவர்களால் ஒலிக்கப்பட்டது; அவர்களில் பலரும் ஆங்கிலேய அரசால் வீழ்த்தப்பட்டனர்.
- 1801ல், அகண்ட பாரதம் முழுவதுமே ஆங்கிலேயர் வசமானது.
- 1806ஆம் ஆண்டில்-வரலாற்றாசிரியர்களால், இந்தியாவின் முதல் விடுதலைப் போர் எனப்படும் வேலூர்ப் புரட்சி மூண்டது.
- 1857ல், "இந்தியாவின் மாபெரும் கலகம்" அல்லது "இந்திய சிப்பாய்களின் போர்". இப்போரானது மாபெரும் அரசியல் புரட்சி என்றே பிரிட்டிஷ் பிரதமரால் ஜூலை 27ல் குறிப்பிடப்பட்டது.
- 1876இல் இந்திய தேசிய சங்கம் தொடக்கம். அதுவரை கம்பெனி ஆட்சிக்குட்பட்டிருந்த நம் இந்திய நாடு, இங்கிலாந்துப் பேரரசியார் அதிகாரத்தின் கீழ் வந்தது.
- 1883ல், பம்பாயில் இந்து-முஸ்லிம் கலகம் ஏற்பட்டது.
- 1884ல், சென்னையில் 'மகாஜன' சபை தொடக்கம். சுதேசி சங்கம் சென்னை மகாஜன சபாவுடன் இணைக்கப்பட்டது.
- 1885ல், சில கோரிக்கைகளை நிறைவேற்றுவது ஒன்றே குறிக்கோளாக-இந்தியத் தேசிய காங்கிரஸ் ஹென்றி ஹ்யூம் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது.
- 1892ல், கவுன்சில் சட்டம் நடைமுறைக்கு வந்தது.
- 1894 - இந்திய மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்த பாலகங்காதர திலகர் அரும்பாடு படுதல்.
- 1896 - திலகர், தமது இரண்டு பத்திரிகைகள் மூலம் ஆங்கிலேய அரசுக்கு எதிரான பிரச்சாரத்தை முடுக்கிவிடுதல்.

* 1905ஆம் ஆண்டில் - மிதவாத இயக்கமாக இருந்த காங்கிரஸ், இந்திய விடுதலைக்குக் குரல் கொடுப்பதாயிற்று. கர்சன் பிரபுவால் வங்கதேசம் பிரிக்கப்பட்டது. நம்மவர்களால் - அப் பிரிவினைக்கு மூலகாரணம், இந்துக்களையும் முஸ்லிம்களையும் பிரித்தாளும் சூழ்ச்சியே ஆகும் எனக் கருதப்பட்டது. சுதேசி இயக்கம் தோன்றியது. மேற்கண்ட இயக்கம் மிதவாத இயக்கமாகவே இருந்துவந்தது.
* 1906 - முஸ்லிம் லீக் தோற்றம். முஸ்லிம்களுக்குப் போதிய முக்கியத்துவம் தரப்படவில்லை என்று குறைபடுதல்.



* 1907ல், சூரத் மாநாடு. "சுதந்திரம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்" என்று திலகர் முழங்குதல். இதனால் அங்கு மூண்ட கலவரம் காரணமாகப் பாலகங்காதர திலகர் காங்கிரசை விட்டு விலகியிருத்தல்.

  முதல் சுதந்திரப் போரின் 50ஆம் ஆண்டைக் கொண்டாடும் வகையில், மற்றொரு புரட்சி வெடிக்கலாம் என்று அரசால் அஞ்சப்பட்டது. ஜெர்மனியில் நடைபெற்ற சோஷலிஸ்ட் மாநாட்டில், இந்திய தேசியக் கொடியை "மேடம் காமா" என்பவர் ஏற்றி வைத்தார். தமிழகத்தில் மகாகவி பாரதியார் தேசிய கீதங்களைப் பாடி எழுச்சி மூட்டினார்.
* 1907-ல் வ.உ.சி., பாரதியார், சுப்பிரமணிய சிவா போன்றோர் தமிழ்நாட்டில் சுதந்திரப் போர்முழக்கம் செய்தல்.
* 1909-மிண்டோ மார்லி சீர்திருத்தக் குழுவிடம் முஸ்லிம்கள் தனி மனு தருதல், கிலாபத் இயக்கத்தைக் காந்தியார் தோற்றுவித்தல். முஸ்லிம்களும், துருக்கிக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தல்.
* 1911-ல், மணியாச்சி புகைவண்டி நிலையத்தில் வாஞ்சிநாதனால் ஆஷ் துரை சுட்டுக் கொல்லப்படுதல்.
* 1911-ல், வங்கப்பிரிவினை ரத்து செய்யப்பட்டு, தலைநகர் டில்லிக்கு மாற்றப்பட்டது.
* 1914ல், தென்னாப்பிரிக்காவிலிருந்து காந்தியடிகள் வருகை. கிலாபத் இயக்கம் தொடக்கம். காந்தியர் சகாப்தம்.
* 1914-ல், முதல் உலகப்போர். பிரிட்டிஷ் அரசு இந்தியாவையும் ஈடுபடுத்திடல்.
* 1916-ல், அன்னி பெசன்ட் அம்மையாரின் ஹோம் ரூல் இயக்கம் உருவாதல்.
* 1919-ல், ஜாலியன் வாலாபாக் துப்பாக்கிச் சூடு-ஆயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்படுதல்.
* 1920-ல், சேலம் விஜயராகவாச்சாரியார் தலைமையில் நாகபுரியில் காங்கிரஸ் மாநாடு. காங்கிரசில் பெரியார் சேருதல்; மதுவிலக்கு, கதர் இயக்கம் போன்றவற்றில் தீவிரமாக ஈடுபடுதல்; இதன் காரணமாகத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரானார், பெரியார், வ.வே.சு.ஐயர், சத்தியமூர்த்தி, திரு.வி.க., வரதராஜுலு நாயுடு போன்றோர் சுதந்திரக் கனல் மூட்டுதல்.
* 1920-ஆகஸ்ட்டில் காந்தியடிகளால் ஒத்துழையாமை இயக்கம் அறிவிக்கப்படல்.
* 1921 முதல் காந்தியடிகள், ஜின்னா இடையே கருத்து வேறுபாடு.
* 1922-ல், மக்கள் கிளர்ச்சியில் 'சௌரி சௌரா' என்ற இடத்தில் காவலர் உட்படப் பொதுமக்கள் பலபேர் மாண்டனர்.
* 1925-ல், சட்டமன்ற நுழைவுக்குக் காந்தியார் எதிர்ப்புத் தெரிவித்ததை ஆதரித்து, காங்கிரஸ் கட்சியை விட்டுப் பெரியார் விலகல்.
* 1925-ல், காந்தியாரை விட்டுப் பிரிந்து சென்ற சித்தரஞ்சன் தாஸ், மோதிலால் நேரு, ராஜாஜி போன்றோர் சுயராஜ்யக் கட்சி தொடங்குதல். தேர்தலில் பங்கேற்று அங்கே ஒத்துழையாமைப் போராட்டத்தை நடத்துவது என்பதே நோக்கம்.
* 1927-இந்தியாவுக்கு சைமன் கமிஷன் வருகை. காங்கிரசார் புறக்கணிப்பு-'சைமனே திரும்பிப் போ!' என முழக்கமிடல். சென்னை-ஸ்பென்ஸர் எதிரே வைக்கப்பட்டிருந்த கொடுங்கோலன் நீலன் சிலை தகர்ப்பு.
* 1929-ல், காங்கிரசில் காந்தியாரின் செல்வாக்கு ஓங்கியது. ஜனவரி 26-ல் இந்திய சுதந்திர தினமாகக் கொண்டாடி பிரதிக்ஞை எடுத்துக்கொள்ளுமாறு நாட்டுமக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். ஜவஹர்லால் நேரு பிரபலமடைதல்.



* 1930 - காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கம் (Civil Disobidient Movement) அமைப்பு. கள்ளுக்கடை மறியல், உப்புச் சத்தியாக்கிரகம் அறிவிப்பு; தண்டியில் காந்தியாரும், வேதாரண்யத்தில் ராஜாஜியும், சென்னையில் சீனுவாச ஐயங்காரும் தலைமையேற்று நடத்துதல். போராட்டத்தில் பெண்களும் பெருமளவில் ஈடுபடுதல். வட்டமேஜை மாநாட்டில் பங்கேற்ற முஸ்லிம் லீகினர் தனிநாடு கோருதல்.
* 1930, 1931, 1932-ல் வட்டமேஜை மாநாடுகள். இரண்டாவது மாநாட்டில் மட்டுமே காந்தியடிகள் பங்கேற்பு.
* 1932-ல், காந்தியார் கைதுக்கு எதிர்ப்பு தெரிவித்து திருப்பூரில் நடைபெற்ற கண்டன ஊர்வலத்தில் தீவிரமாக ஈடுபட்ட குமாரசாமி (கொடிகாத்த குமரன்) என்பார், காவலர் தாக்குதலால் உயிர்நீத்தல். ஜனவரி 26-ல், சென்னை-கோட்டையில் உள்ள 200 அடி கொடிக்கம்பத்தில் பாஷ்யம் என்பவர் யாருக்கும் தெரியாமல் ஏறி தேசியக்கொடியைப் பறக்கவிடுதல்.
* 1934, செப்.18-ல் காங்கிரசையே விட்டு விலகும் அளவிற்குக் காந்தியார் விரக்தியடைதல். ஜெயபிரகாஷ் நாராயணன் போன்றோர் காந்தியாரைவிட்டு விலகி காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி அமைத்தல்.
* 1934-40ல், காங்கிரஸ் இயக்கத்தார், சட்டசபைகளில் நுழைந்து விடுதலை முழக்கம் செய்தல்.
* 1935ஆம் ஆண்டுச் சட்டம் (Govt. of India Act) ஓரளவு தன்னாட்சி அளிப்பதாக வெளியிடப்படுதல். தேர்தலில் பங்கேற்பதற்குக் காந்தியார் உடன்பாடு.



* 1936-முஸ்லிம் லீகினர் தனிநாடு கோரிக்கையை வலியுறுத்தல். 'இந்தியாவைத் துண்டாட நினைப்பது, ஒரு பசுவை வெட்டி இரண்டாகக் கூறு போட வேண்டுவது போன்றதாகும்' - என்று காந்தியார் அறிவிப்பு. டாக்டர் அம்பேத்கர் எழுச்சி,
* 1937-ல், ம.பொ.சிவஞானம், காமராசர் ஆகியோர் காங்கிரசில் தீவிரமாகப் பணியாற்றல்.
* 1939-ல், இந்தியாவைக் கலந்து பேசாமல், 'இந்தியாவும் இரண்டாவது உலகப் போரில் பங்கேற்கும்' என ஆங்கிலேயர் அறிவித்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து, காங்கிரஸ் அமைச்சரவை பதவி விலகல். இந்த முடிவு தவறு என அறிவித்து, காங்கிரசை விட்டு ராஜாஜி விலகுதல்.
* 1939-45 இரண்டாம் உலகப்போர்க் காலம். நேதாஜி 'இந்திய தேசிய இராணுவத்தை'ப் பலப்படுத்தல்.
* 1940-ல், தனிநபர் அறப்போர்; இப்போரில், முதல் அறப்போர் தியாகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் விநோபா பாவே. லாகூரில் முஸ்லிம் லீக் மாநாடு.
* 1941-ல், காந்தியடிகளோடு நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் முரண்படுதல்; இந்திய தேசிய இராணுவம் அமைத்தல். ஜப்பான், இத்தாலி போன்ற பிறநாட்டு உதவியோடு இந்தியாவை மீட்பதே நோக்கம்.
* 1942 ஆகஸ்ட் 8-ல், காந்தியார் அறப்போர் தொடக்கம்-முக்கியக் காங்கிரஸ் தலைவர்களெல்லாம் முதல் நாளே கைது செய்யப்படவே, நாடெங்கும் வன்முறை தலை தூக்கியது. 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் தீவிரம். காங்கிரஸ் இயக்கத்திற்குத் தடை. அடிமை இந்தியாவில் இனி வாழ்வதில்லை; இதைச் செய்வோம் அல்லது செத்து மடிவோம்' என்று காந்தியார் அறிவிப்பு.'புரட்சித் தீ பரவியது. 538 இடங்களில் துப்பாக்கிச் சூடு, 15 ஆயிரம் பேருக்குமேல் பலி. சிம்லா மாநாடு, காபினெட் தூதுக்குழு. வேவல் கமிஷன் வருகை.
* 1946-ல், நேத்தாஜியின் முன்னேற்றக் கட்சியில் சேர்ந்து, தென்னாட்டில் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் விடுதலைப் போரில் ஈடுபடல்.
* 1946 - இங்கிலாந்து நாட்டில், வின்ஸ்டன்ட் சர்ச்சில் அமைச்சரவை தோல்வி கண்டு, பல பகுதிகள் பிரிந்து செல்லல். அட்லி அமைச்சரவை பதவியேற்பு.
* 1948 ஜூன் மாதத்திற்குள் இந்தியாவிற்கு சுதந்திரம் அளிப்பதென - 1940 பிப்ரவரி 20-ல் அட்லி அமைச்சரவை முடிவெடுத்தல். மவுண்ட் பேட்டன் பிரபுவை இந்தியாவிற்கு அனுப்பிவைத்தல்.
* 1947 ஆகஸ்ட் 15ல், நம் இந்திய நாடு சுதந்திரம் அடைதல்.

- தொகுப்பு : பி.எல்.ஆர்.

# 'குறுந்தொகை' காட்டும் கால்நடைகள்

முனைவர் இரா. பிரபாகரன்

சங்ககாலத்து இலக்கிய நூல்களில் குறிப்பிடத் தக்கவை எட்டுத்தொகை நூல்களேயாம். மனித வாழ்வினை அக வாழ்வென்றும், புற வாழ்வென்றும் பிரித்துப் பல்வேறு நீதிகளை விளக்கி உலகியலைச் செம்மைப்படுத்தும் தன்மை உடையன இந்நூல்களில் அடங்கியுள்ள பாடல்கள். எட்டுத் தொகையின் ஒவ்வொரு நூலிலுள்ள பாட்டுக்களும் பல புலவர்களால் இயற்றப்பட்டவையாம். தொழில், பொருள், அளவு, பாட்டு என்ற அடிப்படையில் ஒவ்வொன்றாய்த் தொகுக்கப் பெற்றமையால், அவை தொகை எனப் பெயர் பெற்றன. எட்டுத் தொகை நூல்களுள் அகவாழ்வினை அடிப்படையாகக் கொண்ட ஐந்து நூல்களில் ஒன்றே குறுந்தொகை.

அகவாழ்வு குறித்த பாடல்களையே கொண்டிருந்தாலும், புறத்தே தோன்றும் காட்சிகளைச் செய்யுள்களிற் புனைந்து காட்டும் ஆற்றலிலும் மிகவும் சிறந்தது குறுந்தொகை என டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள் பாராட்டியுள்ளார். அவ்வாறான காட்சிகளில் ஆங்காங்கே கால்நடைகளைப் பற்றியும் பல்வேறு இடங்களில் விளக்கப்பட்டுள்ளது. சங்ககாலத் தமிழர்தம் வாழ்வில் கால்நடைகளின் பங்கு எத்தகையது என்பதனை விளக்குவனவாய் அமைந்துள்ளன இப்பாடல்கள்.

### பசுக்கள்

சங்ககால அரசியல் பொருளாதார வாழ்வியலில் பசுக்கள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருந்தன. இரு அரசர்களுக்கிடையே நிகழும் போரில், ஒரு நாட்டிலிருந்து பசுக்களைக் கவர்ந்து செல்வது வெற்றியின் ஒரு அடையாளமாய்க் கருதப்பட்டது. பசுக்களுடன் மக்கள் கொண்டிருந்த உணர்வுபூர்வமான பிணைப்போடு, அதனால் ஏற்படும் பொருளாதார இழப்பையும் கருதியே, ஆநிரை கவர்வது, போரின் அங்கமாக நிலவியது.

'அஞ்சுவ துடைய ளாயின் வெம்போர்
நுகம்படக் கடக்கும் பல்வே லெழினி
முனையான் பெருநிரை போல'.
80:4-6

'தகடூரை ஆண்ட அதியமான் அஞ்சி (எழினி) தனக்குரிய பசுக்களைக் கைக்கொண்ட பகைவரிடத்திலிருந்து அவற்றை மீட்டுக் காத்தாற்போல்' என்பது இதன் பொருளாம்.

இதுவன்றி, வாழ்வியலில் தாய்மைப் பண்பினை விளக்கும் கால்நடைக் குறிப்புக்களையும் 'குறுந்தொகை' கொண்டுள்ளது.

'புலம்பயி ரருந்த வண்ண லேற்றொடு
நிலந்தூங் கணைவ வீங்குமுலைச் செருத்தல்
பால்வார்பு குழவி யுள்ளி நிரையிறந்
தூர்வயிற் பெயரும் புன்கண் மாலை'
344:3-6

'மேய்ச்சல் நிலத்தில் பயிரை உட்கொள்ளும் எருதுடன் காணப்படும் பசுக்கள், தம் கன்றுகளை நினைத்து பால்திரம்பிப் பெருத்த மடிக்காம்புகளிலிருந்து பாலை ஒழுக விட்டுத் தம்மோடு ஒருங்கே மேயும் ஏனைய பசுக்களை விட்டு நீங்கிப் பிரியும் மாலை நேரத்தில்' என இது விளக்கம் பெறுகிறது. தற்காலப் பராமரிப்பில் பால் ஒழுகும் மடி மாட்டினுடைய குறைபாடாகக் கருதப்படுகிறது. என்றாலும், கால்நடைகளிடமும் காணப்படும் தாய்மைப் பண்பினை விளக்குவதாகவே அமைந்துள்ளது இப்பாடல்.

குறுந்தொகையில் மற்றுமொரு பாடல் பசும்பாலிலிருந்து பால் பொருட்களும் பெறப்பட்டதை விளக்குகிறது.

'திண்டேர் நள்ளி கானத் தண்டர்
பல்லா பயந்த நெய்யிற் றொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு'
210:1-3





திண்ணிய தேரையுடைய நள்ளியின் காட்டிலுள்ள இடையர்களுக்குரிய பல பசுக்கள் உண்டாக்கிய நெய்யோடு, எனச் செல்கிறது இப்பாடல். பசுக்களின் பாலினைத் தயிராக்கிப் பின் கொழுப்புச் சத்தினைப் பிரித்தெடுத்து நெய்யாக உருக்கிப் பயன்படுத்தும் வழக்கம் கடைச்சங்கத் தமிழர்களிடையே நிலவியது புலப்படுகிறது.

### எருது

மனித மாண்புகளை விளக்க கால்நடைகளைக் கையாண்ட குறுந்தொகைப் பாடல்களிடையே, வீரத்தையும், வேகத்தையும் வெளிப்படுத்த எருதுகளை எடுத்துக் காட்டுக்களாய்க் காட்டும் பாடல்களும் உள. இடையரால் பிணிக்கப்பட்ட கயிற்றை அறுத்துச் செல்லும் எருதினைப் போல், என்னும் பொருள்பட,

'கயிறரி யெருத்திற் கதழுந் துறைவன்'
117:4

- என்ற அடி அமைந்துள்ளது.

### எருமை

கடைச்சங்க காலத்தில் வளர்க்கப்பட்ட எருமைகளின் புறப்பண்புகளும் கீழ்க்கண்டவாறு ஒரு பாடலில் விளக்கப்பட்டுள்ளன.

'திரிமருப் பெருமை யிருணிற மையான்
வருமிட றியாத்த பகுவாய்த் தெண்மணி
புலம்புகொள் யாமத் தியங்குதொ றிசைக்கும்
இதுபொழு தாகவும் வாரார் கொல்லோ'.
279:1-4

முறுக்கிய கொம்பையும், இருள் நிறத்தையுமுடைய எருமையினது கழுத்தின்கண் கட்டப்பட்ட தெளிந்த ஓசையையுடைய மணியானது தனிமையைக் கொண்ட நடுஇரவில், அவ்வெருமை நடக்குந்தோறும் ஒலிக்கின்ற காலம் - என விளக்கம் பெறுகிறது இப்பாடல்.

### ஆடு

பசு மற்றும் எருமைப் பால் மட்டுமின்றி, ஆட்டுப்பாலும் கூட ஒரு சிறந்த உணவுப் பொருளே. சங்க காலத் தமிழர்கள் இவ்வாறான ஆட்டுப்பாலின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தனர் என்பதை ஒரு 'குறுந்தொகைப் பாடல்' புலப்படுத்துகிறது.

'பறியுடைக் கையர் மறியினத் தொழியப்
பாலொடு வந்து கூழொடு பெயரும்
யாடுடை யிடைமகன் சென்னி.
221:2-4

(பறியுடைக்கையர் - கையில் பறிகளை ஏந்திய இடையர், மறியினத்தொழிய - குட்டிகளை உடைய ஆடுகளுடன்)

ஆட்டு இடையர்கள் ஆட்டுப் பாலினைக் கொடுத்து உணவுத் தானியங்களைப் பெற்றுச் சென்றனர் என்பது இதனால் விளங்குகிறது. நாணய முறை நடைமுறைக்கு வருவதற்கு முன் நிலவிய பண்டமாற்றுப் பொருளாதார முறையும் இதன் மூலம் அறியப்படுகிறது.

### நாய்:

நாய்களின் மோப்ப சக்தி, கொள்ளையர்களையும், கொலை செய்தவர்களையும் கண்டறிய குற்றப் பிரிவுக் காவல் துறையினரால் பயன்படுத்திக் கொள்ளப்படுவது போல், பண்டைக் காலத்திலும் வேட்டைக்குச் செல்வோர் வேட்டையாடப்படும் விலங்கினங்களின் இருப்பிடம் அறிய நாய்களைப் பயன்படுத்தினர். வேட்டை விலங்குகளை விரட்டி மடக்கவும் நாய்கள் பயன்பட்டன.

'கல்லென் கானத்துக் கடமா வாட்டி
எல்லு மெல்லின்று ஞமலியு மிளைத்தன'
179:1-2

காட்டினிடையே பொழுது மங்கியது; வேட்டைக்கு அழைத்துச் செல்லப்பட்ட நாய்களும் (ஞமலி) களைத்தன என விளக்குகிறது இப்பாடல்; எங்கள் பல்கலைக் கழகத்தில் சாந்திநல்லா செம்மறி ஆட்டினப்பெருக்க ஆராய்ச்சி நிலையத்தில் ஆடு மேய்த்தலில் நாய்கள் பயன்படுத்தப் படுகின்றன.

### கோழி

கோழியினம் குறித்த இரு 'குறுந்தொகைப் பாடல்கள் இலக்கிய நயமும், நகைச்சுவை வெளிப்பாடும் கொண்டவையாம்.

'குப்பைக் கோழித் தனிப்போர் போல
விளிவாங்கு விளியி னல்லது
களைவோ ரிலையா லுற்ற நோயே'.
305:6-8

கோழிகளின் சண்டையைப் பலரும் காண வருவர். கடைச்சங்க காலத்தும் கோழிப்போர் ஒரு பொழுது போக்காக விளங்கியது. கோழிப் போரில் ஈடுபடுத்தப்படும் 'அசீல்' எனப்படும் கோழி இனத்திலிருந்தே இன்றைய இறைச்சிக் கோழி இனங்கள் மேலை நாட்டினரால் உருவாக்கப்பட்டன என்பது வரலாறு.

ஆனால், குப்பையைக் கிளறும் கோழி தனியே சண்டையிட்டுக் கொண்டிருப்பதாக இப்பாடலில் விளக்கப்பட்டுள்ளது. அதனை விலக்கி விடுவோரில்லை எனப் பொருள்பட இப்பாடல் இயற்றப் பெற்றுள்ளது.

மற்றொரு பாடலில்,

'குடுமிக் கோழி நெடுநக ரியம்பும்
பெரும்புலர் விடியலு மாலை'
234:4-5

சேவல் குரலெழுப்புகின்ற விடியற் பொழுதும் கூட மாலைக் காலமே எனத் தலைவியின் பிரிவுத்துயரை விளக்கும் இப்பாடலில் சேவல், கொண்டையுடைய கோழி என்ற பொருள்பட 'குடுமிக் கோழி' என விளக்கப்பெறுவதில் உள்ள சொல் நயமும், நகைச்சுவையும் உணர்ந்து பாராட்டத்தக்கது.

### மீன்கள்

மீன் இனமும் கூட குறுந்தொகைப் பாடல்களில் இடம் பெறுகிறது.

'தண்கடற் படுதிரை பெயர்த்தலின் வெண்பறை
நாரை நிரைபெயர்ந் தயிரை யாரும்'
166:1-2

குளிர்ந்த கடற்பரப்பில் உண்டாகும் அலைகள் மீன்களை வெளிக்கொணர்வதால், தங்கள் வரிசையிலிருந்து நீங்கி வெண் சிறகுகளை உடைய நாரைகள் அயிரை மீனை உண்ணுதற்கிடமாகிய - என ஒரு ஊர் அடையாளம் காட்டப்பெற்றுள்ளது.

மேலும்,

'பன்மீன் வேட்டத் தென்னையர் திமிலே'
123:5

என்ற வரியில், பலவகை மீன்களை வேட்டையாடும் என் தமையன்மார் ஏறிச்சென்ற மீன்பிடிப் படகுகள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவையன்றி, வேறு பல பாடல்களிலும் கூட, மேற்கூறிய கால்நடை, கோழி, மீன் போன்ற இனங்களும், குதிரை, மான், முதலை, யானை, அன்னம், காக்கை, புறா என வேறு பல்வகை இனங்களும் குறித்த குறிப்புக்கள் 'குறுந் தொகை'யில் காணப்படுகின்றன. வாய்ப்புப் பெறுவோர் அத்தகைய வரிகளில் மூழ்கி, சங்ககாலத் தமிழர் வாழ்வியலில் கால்நடைகள் பெற்றிருந்த சிறப்பினை உணர்ந்து உவக்கலாம்.

சிறு கதை

# பேசும் கலப்பை

- பொன்குன்னம் வர்க்கி

காளை என்று பேச்சு வந்துவிட்டால், தம்பி ஔசுப் எல்லாவற்றையும் மறந்து விடுவான். "அவன் ஒரு காளைப் பைத்தியம்" என்றே மற்றவர்கள் சொல்லி வந்தார்கள். அவனுடையக் கண்ணனைப் பற்றி வியந்து பேசாத விவசாயி அங்கே கிடையாது. கண்ணன் அவ்வாறு ஔசுப்பின் ஜீவனாக இருந்து வந்தது. சாம்பல் நிறம், நல்ல திடமான உருவம்; குட்டையாகத் தடித்தும் வளைந்துள்ளதுமான கொம்புகள்; அந்த உறுதியான சருமத்தின் மீது சுருண்டு கொண்டிருக்கும் அழகான வடிவங்கொண்ட திமில்; கண்கள் வெளியே துருத்தும்; கண்ணனது நடைகூட ஒரு விசேட நிறைவைக் கொண்டது. உழுகிற போதும் மற்ற நேரங்களிலும் கண்ணன் ஔசுப்பின் மனம் அறிந்து நடக்கும். வயலானாலும் சரி, வீட்டுக் கொட்டடியானாலும் சரி, ஔசுப் என்ன நினைக்கிறானோ அதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் அந்த உழவு மாடு.

ஔசுப், கண்ணனிடம் சாட்டையை ஒரு போதும் பயன்படுத்த மாட்டான். கொஞ்சம் அதை உயர்த்திக்காட்டுவான். மற்றதைப் போல அது இது என்று கத்த வேண்டியும் இருக்காது. கண்ணனிடம் ஒரு நண்பனிடம் பேசுவது போலப் பேசுவான். எத்தனை மாடுகள் இருந்தாலும் கண்ணன்தான் அங்கே கூட்டத் தலைவன். ஓர் உழவு முடிந்துவிட்டதெனில் அடுத்த பக்கத்திற்குப் போக கண்ணனுக்குச் சொல்ல வேண்டியதில்லை. எதையெல்லாம் எப்படி, எப்போது செய்ய வேண்டுமென அறியும். சில சமயம் அடுத்த வயலுக்குப் போக கண்ணன் எத்தனிக்கையில் ஔசுப் தான் இடைமறித்து ஓய்வு வேண்டுவான்.

"கொஞ்சம் இரு. வெற்றிலை போட்டுக்கொள்கிறேன் - ரொம்ப நேரமாகி விட்டது" என்பான்.

இதைக் கேட்டுக் கண்ணன் நிற்கும். செல்லமான வெற்றிலை விவகாரம் முடிந்ததும் "ம்" என்பான் ஔசுப். கண்ணன் வேலைக்கு ஆயத்தமாகும். ஒரு வயல் உழவு முடிந்து, அடுத்த பக்கம் போகையில் அந்தச் சின்ன வரப்பை எத்தனை ஜாக்கிரதையாகத் தாண்டும் தெரியுமா? அந்த வரப்புகளிலே எந்த இடத்தையும் கண்ணன் மிதித்ததில்லை. அந்த மண்ணை நாசப்படுத்த ஒரு மிதியே போதும் என்பதை அது அறியும்.

கண்ணனைக் கட்டிப்போடவும் தேவையில்லை. எதைச் சொன்னாலும் அறிந்து கொள்ளக்கூடியதால், உழவு முடிந்ததும், அது வேண்டிய மட்டும் புல்லை மேய விடுவான். அப்போதெல்லாம் ஔசுப் ஒரு சிறு எச்சரிக்கை மட்டும் தருவான்.

"போய் – வேண்டியவரை மேய்ந்துகொள். அந்த வாழை மரம் மட்டும் வேண்டாம்".

கண்ணனும் வாழையையோ சின்னஞ்சிறு தென்னங் கன்றுகளையோ தொடுவதில்லை. அவைகளைத் தொடுவதும் சரி, அவற்றை நட்டு ,வளர்த்த சொந்தக்காரர்களைக் கொம்பால் முட்டுவதும் சரி, இரண்டும் ஒன்றுதான் என்பதை அறியும். உழவெல்லாம் முடிந்ததும், அதன் உடம்பு பூராவும் சேறு நீங்க கழுவிச் சுத்தப்படுத்துவான் ஔசுப். இதில் மிகவும் கவனமாக இருந்தான்.

"வலது காலைத் தூக்கு, தலையை ஏன் ஆட்டிக் கொண்டிருக்கிறாய்? பாரேன், இந்தக் கொம்பு என்னைத் தொட்டுவிட்டால் என்ன ஆகும். சும்மா இரு-அசையாதே..."

இந்த மாதிரி சாதாரண பேச்சுக்கள் எல்லாம் கண்ணனுக்கு நன்றாகப் புரியும். ஆனால் அவை சொல்லப்படும் விதம் அதற்கு ரசிக்கத் தக்கதாயில்லை. குளிப்பதையும் அது வெறுத்தது. ஔசுப்பின் பேரில் கொண்டிருந்த அன்பால் அது சம்மதிக்கும். இந்த அன்பும் நேசமும் கொண்ட பிராணிகளை அறியாத உழவர்கள் என்ன சொல்வார்கள்? "எந்த மாட்டையும் ஔசுப்பிடம் கொண்டுவிடு. ஒரு தடவை அவன் தீனி காட்டிவிட்டால் போதும். அது புதிய மாடாகிவிடும்".

ஔசுப் மாடுகளிடம் இயல்பாகவே பேசுவான். நாள் முழுவதும் மாட்டின் தீனி பற்றிய கவனமாகவே இருப்பான். மிருகவதைத் தடுப்புப் பற்றி ஔசுப்பிடம் பேசினால் அவனுக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வரும். "விலங்குகளைக் காப்பாற்று, காப்பாற்று" என்று எல்லாரும் பிரசங்கம் பண்ணுவதில் குறைவில்லை. இந்த அரசு எங்கேயாவது ஒரு சிறு காணி நிலத்தையாவது தருகிறதா? மாட்டுத் தீனிக்கு நம்ம தாடியே போதுமா?" என்பான்.





கண்ணனின் பசியடங்கிய பிற்பாடுதான் ஔசுப்பின் சாப்பாடு முடியும். வாயில்லாச் சீவன்கள் பட்டினி கிடந்தால் வீட்டிற்குச் சாபக்கேடு என்பது அவன் நம்பிக்கை. ஒரு மரவள்ளிக்கிழங்கை அவன் கண்ணனுக்குத் தருகிறான் என்று வைத்துக்கொள்வோம். அதை வெகு நேர்த்தியாக மசித்துவிட்டே தருவான். அன்னாசி போன்ற வேறு ஏதாவது முள் குத்தும் இலைகளைத் தருவதாக இருந்தாலும் அப்படித்தான். அந்த முட்களையெல்லாம் சீவியெடுத்து, துண்டுத் துண்டாக அந்த இலைகளையெல்லாம் ஒழுங்காக வெட்டித்தான் கொடுப்பான்.

வயலிலெல்லாம் சுற்றிவிட்டுக் கண்ணன் வீடு திரும்பி விட்டவுடனேயே ஔசுப் "ஏ கண்ணா" என்று குரல் கொடுப்பான். அந்தக் குரல் ஒலித்தவுடனேயே மாடு பிரியத்துடன் பதில் குரல் கொடுக்கும். ஔசுப் அதனிடம் வரும்வரையில் தலையுயர்த்திக் காத்து நிற்கும். ஒரு கைப்பிடி கீரை-வாழைப் பழத்தோல் இப்படி ஏதாவது பண்டத்துடன் அதன் பக்கம் ஔசுப் செல்வான். அதை அவன் கையிலிருந்தே கண்ணன் சாப்பிடும். தடவிக்கொடுத்தால் அவனது கைகளை நக்க ஆரம்பிக்கும். ஔசுப்பின் உலர்ந்த வியர்வையின் கரிப்பு கண்ணனுக்கு மிகவும் பிடித்தமானது.

எந்தக் கூட்டத்திலும் கண்ணன் ஔசுப்பின் குரலைக் கண்டுபிடித்துவிடும். கேட்கும்போது அப்படியே இடியோசை கேட்ட மயிலைப் போல மகிழ்ச்சியடையும். வயலிலோ ஔசுப் தான் ஏரைப் பிடிக்க வேண்டுமென அடம் பிடிக்கும். வேறு யாராவது வந்துவிட்டால் சண்டித்தனம் பண்ணும். அப்போது ஔசுப் வந்து சமாதானப்படுத்த வேண்டியிருக்கும்.

"வேண்டாம் கண்ணா — பாரு, இது நம்ம குட்டப்பன்தான், உனக்குத் தெரியவில்லையா?" இப்படிப் பேசி, ஔசுப் சமாதானத்தை ஏற்படுத்துவான். வயலிலே முழக்கும் கீதம் ஒன்று இருக்கிறது. சொற்கள்-வாக்கியங்கள் எதுவுமில்லாமல், "ஹோ" என்று குரலை உயர்த்தி ஔசுப் பாடுவான். சில நிமிடங்கள் சங்கீதம் நிலைத்து நிற்கும். அது சிருங்காரப் பாடல்களிலும் கோஷ்டி கானங்களிலும் உள்ள இசையின் நாட்டுப்புற வடிவம் போல இருக்கும். ஒரு மாட்டுமந்தையின் பரிசுத்தப் பாடலென்றோ, மந்திரமென்றோ அதைச் சொல்லிவிடுவது பொருத்தமாயிருக்கும். ஔசுப் முழு மூச்சுடன் பாட்டில் ஈடுபடுகையில் கண்ணன் நோய், வலி, வேலை எல்லாவற்றையும் மறந்து சங்கீத ரசனையில் மூழ்கிவிடும்.

அந்தக் கழுத்துமணி- 'மண்ணில் புதைகிற கால்'-இவை தாளம் போடும்.

ஒருநாள் ஒரு ரசமான சம்பவம் நடந்தது. துண்டத்துக் கேளனின் பையன் பாச்சன் கலப்பையைப் பிடித்திருந்தான். வாதப்பிடிப்புடன் ஔசுப் வீட்டிலே தங்கிவிட்டான். அவனது காளைகள் இல்லாமல் கேளனின் வயலுழவு அன்றே முடிவு பெறாது. எனவே கண்ணனையும் வேறொரு மாட்டையும் அழைத்துக்கொண்டு போ என்று சொல்லிவிட்டான். இரண்டும் மற்ற மாடுகளுடன் வயலுக்குப் போயாயிற்று. ஓர் உழவு நடந்து முடிந்திருந்த வயல் அது. அடுத்த

கிறிஸ்தவர்களின் எந்தக் கடையும் திறந்திருக்கவில்லை. ஆனாலும் துணிக்கடைகள் இருந்தன. ஓரிரு கடைக்குச் சென்று: துணி வகைகளையும் விலையையும் விசாரித்தான்.

"அடேயப்பா! என்ன விலை?" துணியின் எக்கச்சக்கமான விலை பற்றிய ஒரு வயதான மனிதனின் அபிப்ராயம் இது.

"இன்னும் இரண்டு மூன்று கடைகளில் கேட்டுப் பார்க்கலாம். ஓரணா குறைவாக எங்கே கிடைக்கும். யாருக்கும் தெரியாது?"

முனிசிபல் கட்டடம் வரை நடந்துவிட்டான். அங்கே சுவர்ப்பக்கம் கூட்டம் கூட்டமாக மாடுகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு மாட்டின் எலும்பையும் எண்ணிவிடலாம். அதெல்லாம் எலும்பும் தோலுந்தான். கிழட்டு மாடுகள் தங்கள் வாழ்நாளை முடித்துக்கொள்ள அங்கே வந்திருந்தன. சில, வால் அறுந்தவை. சில, கழுத்துப்பக்கம் வருடக்கணக்கான வண்டித்தழும்புகளுடன், சில குட்டையாக்கப்பட்ட கொம்புகளோடு, மனிதனின் இரக்க குணம் ஜீவராசிகளிடம் குறைந்து விட்டது என்பதைக் காட்டி நிற்கும் சில.



இப்படிப் பலவற்றை அந்த மாட்டிடையே பார்க்க முடியும். ஒவ்வொரு மாட்டின் மீதும் முனிசிபாலிட்டி முத்திரை பதிந்திருந்து. சாவு முத்திரை, இன்னும் மீதியிருக்கிற அந்த மாடுகளின் உடல் ஈஸ்டர் கொண்டாட்டத்தின் விருந்தாகப் போகிறது. அம்மாதிரி முத்திரை போடப்படாத மாட்டை இறைச்சிக்காகக் கொல்லும் கடைக்காரர் மீது முனிசிபாலிடி பொதுமக்களின் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டி இவ்விஷயத்தில் எந்தச் சலுகையும் காட்டவில்லை.

இந்தக் கட்டுப்பாடு மட்டும் இல்லையெனில் இந்தக் கடைக்காரர்கள் மனித ஆரோக்கியம் பற்றிக் கவலையே இல்லாமல் எந்த மோசமான மாட்டையும் கொல்வார்கள். இவ்விஷயத்தில் ஔசுப் முனிசிபாலிடிக்கு ஆதரவு தருபவன். நின்றுகொண்டிருந்த பல மாடுகளுக்குச் சாவு ஒரு நிம்மதியாக இருக்கும். ஏதோ ஒரு சுமையிலிருந்து கிடைக்கும் விடுதலை. முடிந்தவரை உழைத்துக் கொடுத்தாயிற்று. தள்ளாமையின் கொடுமைக்கும் இகழ்ச்சிக்கும் முன்னே இந்தச் சாவு எவ்வளவோ நிம்மதி.

ஔசுப் சிறிது நேரம் அங்கு நின்று பார்த்துக் கொண்டிருந்தான். அந்தக் காட்சி அவன் இளகிய நெஞ்சத்தைத் தொட்டது. மொத்தம் நாற்பது மாடுகள் இருக்கும். வேறு பல முத்திரை குத்தப்படுவதற்காக விவசாயிகள் கொண்டு வந்தவை. தன் நண்பர்கள் மரண தண்டனையடைந்து, கொண்டு செல்லப்படுவதைப்போலப் பார்த்துவிட்டு நகர்ந்தான்.

திடீரென அவன் துணுக்குற்றான். நம்பமுடியாமல் இருந்தது. எலும்பும் தோலுமாக இருந்த அந்த மிருகத்தைப் பார்த்ததும் தன் கண் ஏமாற்றுகிறதோ என்று எண்ணினான். அவன் இதயம் அங்கே நொறுங்கியது. எல்லாமே இருண்டது. அவனுக்கு உதறல் எடுத்தது. ஆமாம். அது கண்ணன்.

கண்ணா என்று உள்ளமெல்லாம் துடிக்கக்கூவினான் அவன். சுகத்தையும் நம்பிக்கையையும் அந்த மிருகத்திற்கு அளித்திருந்த குரல் அது. செயலற்றும் போயிற்று. அந்த அழகான கட்டடத்தின் முன்னர் கண்ணன் தலையைத் தாழ்த்தி நின்று கொண்டிருந்தது. ஒரு தடவை ஜீவனுள்ள அந்தக் குரல் அதன் காதுகளில் எதிரொலித்தது. தலையை உயர்த்திச் சுற்றுமுற்றும் பார்த்தது.

"என்னைத் தெரியலையா? மகனே? இந்த நிலையிலா உன்னைப் பார்க்க வேண்டும்!".

அவன் நெஞ்சோடு அந்த மாட்டைக் கட்டிக்கொண்டு ஆதரவாக் அதன் நெற்றியைத் தடவிக் கொடுத்தான். அந்தக் கைகளின் ஸ்பரிசம் பட்டு அது வாலை உயர்த்திற்று. உடனே அழுதது. வாயால் அல்ல, நெஞ்சால், ஔசுப் கண்ணன் உடம்பு மீது முத்திரையிடப்பட்டுள்ளதா என்று பார்த்தான். ஆமாம். முன்னங்காலில் தெளிவாகத் தெரிந்தது. அதை அழித்துவிட முயன்றான். ஆனால் முனிசிபாலிட்டியின் கறுப்பு முத்திரை அவ்வளவு எளிதில் அழித்துவிடக்கூடியதல்ல.

வயிற்றின் கீழ் கண்ணனுக்கு நீர்வடியும் புண் இருந்தது. ஈக்கள் அதை அரித்துக் கொண்டிருந்தன.

''இந்த மாடு உன்னிடம் இருந்ததா?'' கசாப்புக்கடைக்காரனில் ஒருவன் ஔசுப்பிடம் கேட்டான்.

"நீயா இதை இங்கே கொண்டுவந்தது?" ஔசுப் அவனிடம் கேட்டுப்பார்த்தான்.

"ஆமாம்" என்றான் கசாப்புக்காரன்.

கண்ணன் தன் அருமையான எஜமானரின் வியர்வை படர்ந்த உடம்பை நாவால் நக்க ஆரம்பித்துவிட்டது. அந்த வியர்வையைத் துடைக்க தனது வாழ்வின் பெரும்பகுதியைத் தந்திருக்கிறது. தனது வாழ்வின் கடைசிப் பகுதியிலும்கூட அது அவ்வியர்வையை ஏற்றுக்கொள்ளும். தனது ருசியாகவும்



வாழ்வின் பகுதியாகவும் உள்ளதுமான வியர்வை அது. அந்த விவசாயியின் சூடான கண்ணீர் கண்ணனின் முகத்தில் வீழ்ந்தது.

"போகலாம், நேரமாகி விட்டது. பகலுக்குள் இறைச்சியைக் கடைக்குக் கொடுக்க வேண்டும்" என்று கடைக்காரன் மற்ற இருவரிடமும் சொல்லிக்கொண்டிருந்தான். ஒரு வியாபாரி இரண்டு மூன்று மாடுகளுடன் புறப்பட்டு, கண்ணனை அழைத்துச் செல்லத் தயாரானார். ஆமாம், இன்னும் ஒன்றிரண்டு மணி நேரத்தில் கண்ணன் ஈஸ்டர் கொண்டாட்டத்தில் விருந்தாகி விடும். இருட்டிவிட்டது.

"இந்த இடத்தை விளக்கை ஏற்றுவதற்கு முன்பு பெருக்கி விடு" என்று மகளிடம் சொன்னாள் மரியா. ஔசுப்பை எதிர்பார்த்துக்கொண்டே.

"இன்னும் ஏன் அப்பா வரவில்லை?" கத்ரிகுட்டி கேட்டாள்.

"விஷயமாகத் தானே போயிருக்கார். வரட்டும்" என்று மரியா சமாதானம் சொன்னாள்.



"கோட்டயத்திற்குப் போயிருந்தால் இதற்குள் வந்திருக்க வேண்டுமே?" துணிக்காகக் காத்திருந்த கத்ரி பொறுமையிழந்திருந்தாள். சாலையையே பார்த்துக்கொண்டிருந்தாள். மரியாவும் அங்கேதான் பார்த்துக் கொண்டிருந்தாள். ஔசுப் தென்படவில்லை. அவர்கள் விளக்கை ஏற்றினார்கள்.

தொலைவில் வெள்ளையாக உருவமொன்றைப் பார்த்தாள். "இதோ! அப்பா. அவர்தான், "கத்ரி குட்டி மகிழ்ச்சியோடு கூறினாள். முதல் முதலில் தானே கண்டதால் அவளுக்குச் சந்தோஷம். அம்மாவும் மகளும் பார்த்துக்கொண்டு அங்கே நின்றார்கள். ஒரே நினைவோடு.

"ஔசுப் தானே?" பக்கத்து வீட்டு மாத்யூ கேட்டார். தையல்காரர் அவர். மூன்று ரவிக்கைகள் அன்றிரவு தைத்தாக வேண்டும். கத்ரி மறுநாள் காலை புறப்பட வேண்டும். தயாராக இருக்கும்படி மாத்யூஸைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். எல்லாவற்றையும் திட்டமிட்டபடி முடிக்க.

துணிகளைப் பார்க்கத்துடித்த அந்த இளங்கண்களின் முன்பு ஔசுப் கண்ணனோடு வந்து சேர்ந்தான்.

''ஐயோ! இது கண்ணன்'' என்று கத்ரி ஆச்சரியத்தோடு கூறினாள்.

"துணி எங்கே? இதுதானா நீ வாங்கி வந்தது?" என்றாள் மரியா. கண்ணன் பழைய தொழுவத்திற்குள் நுழைந்து சந்தோஷமாக தன்னைச் சாய்த்துக்கொண்டது

அங்கே அவர்கள் ஆயிரம் கேள்விகளால் கூச்சலிட்டு ஔசுப்பைத் துளைத்துக்கொண்டிருந்தார்கள்.

ஔசுப் மௌனமாக உட்கார்ந்திருந்தான். கைகளால் முகத்தைத் தாங்கியவாறு. மரியா நம்பிக்கையிழந்து ஆட்டங்கண்டாள். கத்ரி துயரம் பொறுக்காமல் அழுதாள். ஔசுப் ஒரு வார்த்தையும் பேசவில்லை. அவனது உடம்பு வியர்வையில் நனைந்திருந்தது.

''அப்பா, நீ இப்படிச் செய்வாயென்று நினைக்கவேயில்லை" கண்ணீருடன் கத்ரி சொன்னாள்.

கம்மிய குரலில் அப்பா சொன்னார் "மகளே, நீ எனக்கு எப்படியோ அப்படித்தான் கண்ணனும். அந்தக் கசாப்புக்காரன்..."கண்ணீரைத் துண்டால் துடைத்தான். அதை முழுவதுமாகச் சொல்ல முடியவில்லை. அந்த இரவு ஒரு கொடுமையான இரவு. ஒரு பொட்டுத் தூக்கமில்லாமல் அந்த இரவைக் கழித்தார்கள்.

விடிந்தது. ஔசுப் ஒரு களிம்பு தயாரித்துக் கண்ணனின் புண்ணிற்குப் போடத் தொழுவதற்குச் சென்றான். அது ஓர் அருமையான களிம்பு. மாடுகளின் நோய்க்குச் சில அரிய குறிப்பிட்ட நிவாரணத்தை ஔசுப் அறிவான். விடிவதற்குள் அப்படி ஒன்றைக் கலந்து, மருந்துடன் தொழுவத்திற்குள் நுழைந்தான்.

"காலை நீட்டு...தலையை உயர்த்து..."

கண்ணன் படுத்திருந்தது.

'கண்ணன்' என்று கூவினான். ஔசுப்பின் நெஞ்சு உருகிற்று. கண்ணன் இனிமேல் விழிக்கமாட்டான். ஔசுப்பை, அவன் குடும்பம் குதறியடிப்பதைக்கண்டு பொறுக்காது இந்த உலகத்தை விட்டே போய் விட்டது போலும்.

கண்ணனின் பிரேதம், ஔசுப்பின் உடைந்த இதயம், இவற்றுக்கு உயரே ஒட்டடையோடிய கலப்பை. அதன் மீது சோகமாகச் சத்தமிட்டபடி ஒரு பல்லி.

- தற்கால இந்தியச் சிறுகதைகள்
தொகுப்பிலிருந்து, பொன்குன்னம் எழுதிய
மலையாளச்சிறுகதையின் தமிழாக்கம். இது ஒரு சாகித்ய
அக்காதெமி வெளியீடு.

உழவை ஆரம்பிக்கையில், பாச்சனுக்கும் ஏதோ பாட வேண்டும் என்ற அடக்கமுடியாத ஆவல் தோன்றிவிட்டது. ஒரு ராகத்தை ஆரம்பித்தான். சங்கீத லட்சணங்கள் ஏதுமறியாத இந்தப் பாச்சன் ஏன்தான் பாடவிரும்பினான்? அவன் விருப்பம் அது. காரணம் வேறு எதுவுமில்லை. அற்பமான அந்த இசை கிளம்பிய உடனேயே கண்ணன் வெறுப்புற்றது. கொம்புகளை இங்குமங்குமாகப் பலமாக அசைத்துத் தனது எதிர்ப்பைத் தெரிவித்தது. தன்னுடைய இசை மழையில் மூழ்கியிருந்த பாச்சனுக்கு இது தெரியாது.

சங்கீத விஷயத்தில் அது ஒரு சங்கடம். பாடுபவர்கள் தங்கள் இசையின் தராதரம் பற்றி ஒருபோதும் உணர்வதில்லை. கொஞ்சநேரம் கண்ணன் வெளிப்படையாகத் தனது வெறுப்பைக் காட்டியது. ஆனால் பாச்சன் விட்டபாடில்லை. பாச்சனின் நண்பர்களைப் பொறுத்தவரை உலகின் எந்த ராகமும் ஒரே ராகம்தான். அவர்களிடமிருந்து கண்ணன் எந்த ஆதரவையும் பெறமுடியாது. பாச்சன் சங்கீதத்தைக் கேவலப்படுத்தினான். அவனது வலக்காலில் கண்ணன் ஒரு சரியான உதை கொடுக்க, அந்தப் பாடகன் மூன்று நாட்கள் வீட்டிலேயே தங்கி ஒத்தடம் பெறவேண்டி வந்தது!



எந்தவித ஓய்வும் இல்லாமல் பன்னிரண்டு ஆண்டுகள் கண்ணன் ஔசுப்பிற்காக உழைத்தது. அவ்வாண்டுகளில் எல்லாம் இரு போகமும் அமோகம். மரஞ்செடி கொடிகள், குளிர், பனிக்காலங்களைக் கண்டன.

வீறாப்புடன் மக்களிடையே விறைத்து நின்ற பல மகுடங்களும் செங்கோல்களும் கீழே விழுந்து நொறுங்கின. நம்ப முடியாத மாற்றங்கள் நிகழ்ந்தன. சுரண்டல்-மனிதன் அடுத்தவனைச் சுரண்டக்கூடாது என்பதும் இதுபோன்ற மற்ற மகிழ்ச்சி தரும் சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டு ஒரு புதுவகை அரசு ஏற்பாடாயிற்று. ஆனால் ஔசுப் தனது அருமை மாடுகளை விற்கவேண்டிய கட்டாயத்தில் இருந்தான்.

அவன் ஏற்கெனவே தனக்கிருந்த சொத்தான நிலத்தை விருப்பமின்றி அடமானம் வைத்தாயிற்று. வேறு வழியில்லை. கல்யாண வயதைத் தாண்டி நிற்கும் பெண்ணைப் பெற்ற தந்தை அவன். மாப்பிள்ளை வீட்டார் ஏழைதான் என்றாலும் அவர்கள் கேட்ட மூவாயிர ரூபாய் வரதட்சிணைப் பணம் ஔசுப்பிற்குப் பெரிய விஷயம். வயலை ஆயிரத்தைந்நூறு ரூபாய்க்கு அடமானம் வைத்தான். கொடுப்பதற்கு அது போதும். ஆனால் கல்யாணச் செலவுக்குப் பணம் வேண்டியிருந்தது. வேறு வழியில்லை; தன்னுடைய மாடுகளை, அருமையான மாடுகளை விற்கத்தான் வேண்டும்.

இருபது ஆண்டுகளாகப் பகல் இரவு பாராமல் உழைத்திருக்கிறான் அந்த நல்ல விவசாயி. என்ன பலன்? தலை நரைத்தாயிற்று. பார்வை தடுமாறிற்று. உடல் சுருங்கிவிட்டது. வாத நோய் வேறு. கத்தி இறங்காது. அத்தனை அளவு வேலை செய்து உரம் பெற்றவை அவனது கைகள், என்ன செய்ய முடியும்? ஐயாயிரம் ஆண்டுக்காலமாகப் பயன்படுத்தும் உழவுக் கருவி, எரு எதுவும் போடப்படாது செழிப்பை இழந்து நிற்கும் பூமி. ரிக்வேத ஸ்லோகங்களைப் புகலடையும் நிலையை அடைந்தான் ஔசுப். நீரையும் மழையையும் மலையையும் காற்றையும் வேண்டினான். ஆதியும் அந்தமுமான அவனுடைய நிலத்தைப் பாதுகாக்கப் பிரார்த்தித்தான். அந்த ஆண்டுகளில் கிடைத்த சோர்வு இன்னும் விடவில்லை. ஆனால், எங்கும் வியாபாரம் பெருகி நின்றது. சுரண்டல் நிறைந்து நின்றது. அவனை ஊறு செய்யும் எல்லா விஷயங்களும் மலிந்தன.

கண்ணனை விற்ற நாளில் ஔசுப் வீட்டில் இல்லை. விற்பனைப் பத்திரத்தின் மூலம் ஒரு ரூபாய் பணம் அவனைச் சேரவேண்டும். அவன் அந்த இடத்தை விட்டுப் போய்விட்டான். விடும் கண்ணீரை எந்தப் பணமும் நிறுத்திவிடாது. கண்ணன் வீட்டைவிட்டுப் போக மனசு இல்லாமல் தலையை உயர்த்திச் சுற்றுமுற்றும் தன் எசமானர் இருக்கிறாரா என்று பார்த்துத் தன் உயிரைத் தேடிற்று. ஏதோ எங்கோ தவறிருக்கிறது என்பதுபோல ஓரிரு தடவை முனகிற்று. அந்தச் சமயத்தில் ஔசுப் தெற்குப்புறப் பலாமரத்தினடியில் கண்ணீரை மௌனமாகத் துடைத்துக் கொண்டிருந்தான்.

நேசம் என்பதற்குச் சொற்களோ, வேறு எந்த வெளிப்பாடோ தேவைப்படுவதில்லை. சோகமுணர்ந்த மனங்களின் நெருக்கம் தான் நேசம் என்றால், ஔசுப்பையும் கண்ணனையும் விட நெருக்கமுற்றவர் யாரும் இல்லை. அவர்கள் தங்கள் துன்பங்களை வெளியே சொல்வதில்லை. அது அந்த உள்ளங்களை மேலும் வேதனையடையச் செய்யும்.

சொந்த இடத்திலே அவமானப்பட்டும், உதவியற்றும் இருக்கும் ராணுவ வீரன், சிலசமயம் எதிரி நாட்டை நாடலாம். இந்தக் கிராமத்திலும் உதவியற்றுப் போய்ச்சீரழியும் சில விவசாயிகள் வயநாடு செல்லத் தீர்மானிக்கிறார்கள்.

"கண்காணாத இடம். தெரிந்தவரோ, உறவுக்காரரோ வந்துபோக முடியாது. அங்கே மலேரியா வாசம். எப்படி ஔசுப், இதெல்லாம் தெரிந்தும் உன்னை அங்கே போகவிட முடியும்?"



கிட்டு சார்-ஔசுப்பின் பக்கத்து வீட்டுக்காரர் கேட்டார். மலபார் சமாச்சாரங்கள் குறித்து ஔசுப் விசாரித்துக் கொண்டிருந்தான்.

"வேறு என்ன செய்யமுடியும் கிட்டு சார்? கொஞ்சம் நிலம் ஏதாவது தாருங்களேன். நிலத்தின் பணம் கிடைக்காவிட்டால் என் மனம் ஆடிப்போய்விடும்" என்றான் ஔசுப்.

வேதனையே வாழ்வாக ஒரு போக்குக் காட்டுகிற காற்றுப் போல ஔசுப்பின் வாழ்வு ஆகிவிட்டது. மலபார் பிரயாணம் ஒவ்வொரு நாளும் தள்ளிப் போடப்பட்டு வந்தது.

அது மட்டுமல்ல-இப்போது இருந்துவரும் ஏழு சென்ட் நிலத்தையும் ஒரு விலைக்கு விற்க முன்வந்தான். வேறொரு பிரச்சினை. இப்போது அவனது மகள் உண்டாகியிருக்கிறாள். முதல் பேரப்பிள்ளையின் பிஞ்சு முகத்தைப் பார்க்கவும் அவன் மனத்துக்குள் ஆவல்.

ஈஸ்டர் வந்தது. கிறிஸ்துவ நோன்பின் கடைசிப் பருவம். அவர்களுக்கு இது ஒரு மகிழ்ச்சியூட்டும் நாள். ஏழை வீட்டில் கூட ஒவ்வொரு சமையலறையிலிருந்தும் அருமையான இறைச்சி மணம் வீசும் நாள். அப்பங்கள் சுடப்படும் ஓசையும் மணமும் வேறு ஆவலைக் கிளப்பிவிடும். சூடான மாமிசத் துண்டங்கள் மசாலாக் கீரையோடு தேங்காய்த் துருவல் பணியாரங்கள் இரண்டு தட்டு இருந்துவிட்டால், ஆகா, இது சொர்க்கம்!



இதுமாதிரி நல்ல நாளில் இலையில்லாமல் இருக்கும் வீடு அரிது. ஆனால் ஔசுப் உட்கார்ந்து ஏதோ எண்ணிக்கொண்டிருந்தான். பக்கத்து வயலில் யாரோ உழுது கொண்டிருக்கிறார்கள். இன்பகரமான உழவு எழுப்பும் ஓசையை அவனால் கேட்க முடிந்தது. அது மனத்தை வாட்டி எடுத்தது. அதுஒரு விவசாயியின் மனம். ஒட்டடை படர்ந்து தொழுவத்தில் வைக்கப்பட்டுள்ள தனது கலப்பையைப் பார்க்கையில் பெருமூச்சுகள் எழுந்தன. இனி என்றாவது கண்ணனைப் போன்ற ஒரு ஜோடி மாடு கொண்டு நாலைந்து ஏக்கர் நிலத்தை இந்தக் கலப்பையால் உழுவானா? அம்மாதிரி ஓர் அதிர்ஷ்ட நாளைப் பார்க்கத்தான் முடியுமா? என்று அவன் ஏங்கினான்.

"எத்தனை நேரம்தான் இப்படி இருப்பது? என்ன வந்து விட்டது இப்போது - கோட்டயம் போக வேண்டாமா? பெண்ணைக் கொண்டுவிட வேண்டாமா? பெற்றவர் செய்ய வேண்டியதில்லையா?" பேச்சடங்கியிருந்த அவனை அவன் மனைவி மரியா இடித்துரைத்தாள்.

மகளை மாப்பிள்ளை வீட்டில் அடுத்த நாளே கொண்டு விட்டு வரவேண்டும். அவளுக்கு எடுத்துக் கொடுக்க வேண்டிய துணியை இன்னமும் கொடுக்கவில்லை. போகவேண்டாம் என்றில்லை. பணம் குறைகிறது. மாமியார் வீட்டில் எல்லாரும் குறை சொல்ல ஆரம்பித்தாயிற்று. இதெல்லாம் மகள் கத்ரிகுட்டி அம்மாவிடம் தான் சொல்லியிருந்தாள். எப்பாடுபட்டாவது அவளுக்குத் தரவேண்டிய மூன்று துண்டுத் துணியைத் தந்துவிட வேண்டும். மீதியைப் பார்த்துக்கொள்ளலாம். இதை மட்டும் செய்தாக வேண்டும். பணத்திற்காக மறுகிக்கொண்டிருக்கையில் நல்லவேளை மரியா கட்டி வந்த சீட்டு இருபது ரூபாய்க்கு வழி வகுத்தது. வயிற்றைக் கட்டி அவர்கள் சேர்த்த சீட்டு. மரியா அவனை இடித்துரைக்கும்போது அவள் தன் கையில் பணத்தை வைத்திருந்தாள்.

அவனால் முடிந்திருக்காது. ஆனால் அவள் சாதித்திருக்கிறாள். ஔசுப் கடைக்குப் போக எழுந்தான். "அப்பா துணி கொஞ்சம் கெட்டியாக இருக்குமாறு பார்த்துக்கொள்" என்று எச்சரிக்கை செய்தாள் கத்ரிகுட்டி.

"இன்னும் நிலவரி கட்டவில்லை. அதையும் கொடுத்து விடலாம்" என்றாள் மரியா.

"நீ வைத்திருப்பதைக் கொண்டு ஊரையே வாங்கிவிடலாமே".

"என்ன செய்யலாமோ தெரியாது. எனக்கும் ஒரு துணி வேண்டும். நான் கட்டிக் கொண்டிருப்பது ஒரே கிழிசல்!"

"அப்படியானால் நீயே போ. நான் சமையலறையில் இருக்கிறேன்".

"உன் தாடி இருக்கிறதே, அதையும் தந்துவிடு"என்றாள் மரியா. கத்ரிகுட்டி கையால் வாயை மூடி, சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

"ஆமாம். எனக்குத் தாடி உண்டு. சரிதான். தாடியெல்லாம் இரவல் வாங்க மாட்டேன்". ஔசுப் கத்தினான். தொடர்ந்து, "உனக்கு மட்டும் தாடியிருந்தால் இந்தப் பகுதியிலேயே ஒரு மனிதனைக்கூட விட்டிருக்கமாட்டாய்" என்றான்.

குடையை கைகளில் இடுக்கிக்கொண்டான்-ஒரு துண்டைத் தோளில் போட்டுக் கொஞ்சம் வெற்றிலைப் பாக்கை பையில் அடக்கிக்கொண்டு ஔசுப் புறப்பட்டான்.

ஈஸ்டர் கொண்டாட்ட ஆரவாரத்திற்கு கிளர்ச்சிக்கும் கோட்டயத்தில் குறைவில்லை.

[illegible] பக்கம்

# கவிதையும் கணிதமும்

*அறிவின் பிறப்பிடம் மூளை.*

*இரக்கத்தின் பிறப்பிடம் இதயம்.*

*காரணங்களைக் கேட்பது மூளை.*

*கவிதைகளைத் தருவது இதயம்.*

*மூளையின் மொழி வேறு; இதயத்தின் மொழி வேறு.*

*இரண்டும் ஒரேநிலையில் இருப்பதைவிட எதிர் எதிர் நிலையில் இருப்பதே அதிகம்.*

எனக்கு ஒரு நிகழ்ச்சி நினைவு வருகிறது. ப்ரா ஈன்ஸ்டின் என்பவர் ஒரு சிறந்த கவிஞர். இவர் உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி ஆல்பார்ட் ஈன்ஸ்டின் அவர்களின் மனைவி ஆவார்.



மனைவியோ கவிதை மேதை. கணவனோ கணித மேதை. ஒன்றும் ஒன்றும் இரண்டு என்பது கணிதம். ஒன்றும் ஒன்றும் ஒன்றுதான் என்பது கவிதை. இரண்டும் மாறுபட்ட மொழிகளைப் பேசுவது.

ஒருமுறை ப்ரா ஈன்ஸ்டின் ஒரு காதற் கவிதை எழுதினார். அந்தக் கவிதையைக் கணவனிடம் கூறி அவரின் பாராட்டைப் பெற விரும்பினார். இருக்காதா பின்னே? உலகப் புகழ்பெற்ற ஒரு மாபெரும் மேதையின் வாழ்த்தைப் பெற யார்தான் விரும்பமாட்டார்கள்? கவிதையைக் கணவனிடம் படித்துக் காட்டத் துவங்கினார். ஆனால் கணவனின் முகத்தில் எந்தவித உணர்ச்சிகளையும் காண முடியவில்லை. கணவனின் முகம் ஒரு கற்சிலை போல் காணப்பட்டது.

அது ஓர் அழகான காதற்கவிதை. காதலியின் முகத்தை நிலவுக்கு ஒப்பிட்டுக் காதலன் கரைந்துருகும் ஒரு வரியைப் படித்தபொழுது, ஆல்பார்ட் ஈன்ஸ்டின் பொறுமை இழந்து கத்தத் தொடங்கினார்.

"போதும் நிறுத்து. கவிதையாம் கவிதை. இது மிகவும் அபத்தம். நிலாவைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? நிலாவின் ஆழம், அகலம், அதன் எடை உனக்குத் தெரியுமா! அந்த நிலாவை ஒரு பெண்ணின் தலைமேல் வைத்தால், அந்தப் பெண் நசுங்கிக் காணாமல் போய் விடுவாள்! நிலா அழகாக இருக்கும் என்று யார் உனக்குக் கூறியது? அது ஒரு உயிரற்ற கல்மலை; பசுமையே இல்லாதது; ஈரமில்லாதது; பூவோ, மரங்களோ பறவையோ இல்லாதது; நிலா அழகான ஒன்று இல்லை; அழகின் இலக்கணமே உனக்குத் தெரியாது."

- என்று கோபாவேசத்துடன் கத்திக் குதித்தார் ஆல்பார்ட் ஈன்ஸ்டின்.

ப்ரா ஈன்ஸ்டின் பிரம்மை பிடித்தது போல் அமர்ந்து விட்டார். இவ்வளவு பெரிய விஞ்ஞானி இவ்வளவு மோசமாகவா ஒரு கவிதையை அறிந்து கொள்வார் என்று ஆச்சர்யப்பட்டார்! ஆனால் உண்மை அதுதான். ஆல்பார்ட் ஈன்ஸ்டின், மூளையின் மூலம் கவிதையைப் பார்க்கிறார். மூளை கவிதையின் மொழியை அறியாது.

அந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் ப்ராஈன்ஸ்டின் தனது நினைவுக் குறிப்பில் கீழ்க்கண்டவாறு எழுதி வைத்துள்ளார்:

*"அந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் நான் என் கணவனிடம் கவிதை பற்றிப்பேசியதே கிடையாது. அவரிடம் கவிதை குறித்துப் பேசுவதைவிட ஒரு கற்பாறையின் முன் கவிதையைப் பற்றிப்பேசலாம். ஒருவேளை அந்த கற்பாறை கூட என் கவிதையைக் கேட்டுக் கண் சிமிட்டலாம்; எது எவ்வாறாயினும் என் கணவனை விட அந்தக் கற்பாறையே கவிதையைக் கேட்டுக் களிக்கும்".*

- பகவான் புத்தர் கூறுவார், 'ஆம். மூளையும் இதயமும் எப்போதும் முரண்பட்டே இருக்கும்'!

- எஸ்.பி.என். இராமலிங்கம் எழுதிய
'ஓஷோவின் கதைகளும்,
கருத்து விதைகளும்'
நூலிலிருந்து.



# இளம் கவிஞனே!



மண்ணையும், சூரியனையும், உயிர்களையும் நேசி.
பணத்தை இலட்சியம் செய்யாதே!
கேட்கிறவனுக்கெல்லாம் கொடு.
அறிவில்லாதவர்கள் சார்பாகவும்,
பித்தர்கள் சார்பாகவும் போராடு;
உன் வருமானத்தையும்
உழைக்கும் சக்தியையும்
பிறருக்காகச் செலவிடு;
யதேச்சாதிகாரிகளை வெறு;
மக்களிடம் பொறுமையுடனும்,
சகிப்புத் தன்மையுடனும்
நடந்துகொள்;
தெரிந்ததோ, தெரியாததோ
எதற்கும் அடிபணியாதே;
தனிமனிதனோ மனிதக் கூட்டமோ
யாருக்கும் தலை வணங்காதே!
படிக்காத மேதைகளிடையிலும்,
இளைஞர்களோடும்,
குழந்தைகளின்
தாய்களுடனும் தாராளமாகப் பழகு;
உன் வாழ்க்கையின் ஒவ்வோர் ஆண்டிலும்,
ஒவ்வொரு பருவத்திலும்
இந்தக் கவிதை இதழ்களைத்
திறந்த வெளியில் படி!
பள்ளியிலோ, கோவிலிலோ, புத்தகத்திலோ
உனக்குச் சொல்லப்பட்டவைகளை எல்லாம்
மறுபரிசீலனை செய்!
உன் ஆன்மாவை
எதெல்லாம் அகௌரவப்படுத்துகிறதோ
அதையெல்லாம் தள்ளிவிடு!
இப்படியெல்லாம் செய்தால்,
உன் சதைகூட மாபெரும் கவிதை ஆகும்.
உன் சொற்கள் மட்டுமல்லாமல் உனது
உதடு, முகம் கண்ணிமைகளின் இடைவெளி
ஆகியவற்றிலுள்ள ஒவ்வொரு கோடும்,
உடன் உடலில் ஒவ்வொரு அசைவும்
ஒவ்வொரு வகை இனிப்பூட்டும்
சரளமான செறிவோடு கவி சொல்லும்!

(வால்ட் விட்மனின்; 'புல் இதழ்கள்'
கவிதைத் தொகுப்பின் முன்னுரை)
பேராசிரியர் த.க. மங்கள முருகேசன்
எழுதி - பகவதி பதிப்பகம்
மனை எண்.77, மடிப்பாக்கம், சென்னை 91
வெளியிட்ட 'துணுக்கு மலர்கள்' புத்தகத்திலிருந்து.



# THE WINDSOR CLUB

**14, RAJAJI ROAD, SALEM - 7. PHONE : (0427) 415060/417346**

***Facilities:***

- ★ Swimming Pool
- ★ Health Club (Steem Sauna)
- ★ Gymnasium
- ★ Skating Rink
- ★ Table Tennis
- ★ Video Games
- ★ Billiards Room

*(Exclusively for members only)*

***Offers :***

- ★ Multi Cuisine Restaurant
- ★ Royal Room & Suites
- ★ Sweet Waters - Bar
- ★ Antartica - Ice Cream Parlour
- ★ Dosa Daba *(Veg. Kaiyenthi Bhavan Style)*
- ★ Conference Hall
- ★ Out Door Catering Unit

*Also the Windsor Fitness Centre (Gym) for members & Public*


# நோய் தீர்க்கும் கடுக்காய் ஒரு காயகற்ப மூலிகை

டாக்டர் பி. பாலசுப்ரமணியம்

கடுக்காயும்-தாய் போல் பிள்ளையை வளர்க்கும் மூலிகைதான்! இதற்கு என்றே தனித்தன்மை சில உண்டு.

*"கடுக்காயும் தாயும் கருத்தி லொன்றாகில்*
*கடுக்காய் தாக்கதிகம் தான் நீ-கடுக்காய்நோய்*
*ஒட்டி உடல்தேற்றும் உற்றஅன்னையோ சுவைகள்*
*ஊட்டி உடல் தேற்றும் உவந்து*

- என்று ஒரு சித்தர் பாடல் பாடி உள்ளார்.

கடுக்காய் மரம் பொதுவாகவே நாடு நகரமாகிய இடங்களில் வளராது. அடர்த்தியான பெரிய காடுகளில் தான் வானளாவிய மரங்களாக வளரும். இந்தக் கடுக்காய் மரங்களை அறுத்து - வீடுகட்ட வாசக்கால், சன்னல், பலகைகளாகவும் செய்து பயன்படுத்துவது நமது நாட்டின் மரபு (Terminalia Chebula).

ஆனால் கடுக்காய் ஒரு சிறந்த மருந்தும் ஆகும் எனக் கூறலாம். சித்த மருத்துவர்களும் மற்ற வைத்திய முறை மருத்துவர்களும் கடுக்காயை மருந்தாக உபயோகப்படுத்துகிறார்கள். கடுக்காய் மரம் இந்தியாவில் பல பாகங்களில் வளர்கிறது. விந்திய மலைக்குத் தெற்கே வளரும் மரங்கள் மிகவும் உயர்ந்து நன்கு பலன தருகிறது. வடக்கேயும் வங்காளம், இலங்கை போன்ற இடங்களிலும் நடுத்தரமான வகையினதாக இது வளர்கிறது.

கடுக்காய் இனத்தில் எட்டுவகை உண்டு. அவைகள் விசயன், அரோகினி, பிரிதிவி, அமிர்தம், சிவந்தி, திருவிருத்தி, அபயன் என்பவையாகும். ஒவ்வொன்றிற்கும் தனித்தனி குண நலன்கள் உண்டு எனக்கூறி உள்ளார்கள். கடுக்காய்ப்பிஞ்சு மலத்தைக் கட்டுப்படுத்தும். பெரிய கடுக்காய்த்தோல் மலத்தை இளக வைக்கும் தன்மையைக் கொண்டது.

### பொதுக்குணங்கள்

கடுக்காயை மருத்துவ ரீதியில் பயன்படுத்தும் பொழுது அது இதயக்கோளாறு, அதிமூத்திரம், குமட்டல் (அரோசிகம்), உதரவாதம், உதட்டுரோகங்கள், உணர்ச்சியின்மை, நாள்பட்ட பேதி, கண்நோய்கள், காமாலை வகைகள், காசம், குன்மம் கை கால் எரிவு, குட்டம், கோழை, சித்தப்பிரமை, சிரரோகங்கள், சோணித ரோகம், பாண்டு, மலச்சிக்கல், நாவறட்சி, இரைப்பைக் கோளாறுகள், மேகநோய், மகோதரம், இருமல், இரணம் முதலியன குணமாகும்.

பெற்ற தாய்க்குப் பாலூட்டிச் சீராட்டி, ஈ எறும்பு மொய்க்காமல், கண் விழித்து, பாடுபட்டு வளர்க்கத்தான் தெரியும். தவிர மேற்கண்ட வியாதிகளை வர விடாமல் தடுக்கும் சக்தியைப் பெற நமக்கு கடுக்காயின் மூலம் தனிச்சக்தி கிடைக்கிறது. எனவே தான் கடுக்காயைப் "பெற்ற தாயினும் பெரிய தாயார்" என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளார்கள்.

### கடுக்காயின் நிறங்கள் - குணங்கள்

பால் கடுக்காய் - வெண்மை நிறமுடைய கடுக்காய் உடல் பலமும் அழகும் தரும். இதன்மூலம் வாத நோய் தீரும்.

வரிக்கடுக்காய் - காயின்மேல் வரிவரியாக மேடுகள் அமையப்பெற்றிருக்கும். மூன்று தோடங்களையும் இது போக்கும். (வாதம், பித்தம், கபம் தீரும்).

செங்கடுக்காய் - சிகப்பு நிறமுள்ள கடுக்காயால் உடல் பொன்னிறமாக ஒளிபெறும் மூன்று தோடங்கள் நீக்கும். புத்தி தெளிவு உண்டாகும். நரம்புகளில் காணும் நோய்கள் நீங்கும். சுவாசம், காசம், இருமல் நீக்கும். மலத்தை இளக வைக்கும்.

கருங்கடுக்காய் - இது காயகற்பமாகப் பயன்படும் எனவும் கூறியுள்ளனர். மலைப்பிரதேசங்களில் வளரும். மலசுத்தி உண்டாக்கும், மலச்சிக்கல் நீங்கும் , பித்த கபத்தை நீக்கும், உடலுக்குச் சக்தியைத்தரும், தோல் சுருக்கத்தை நீக்கும் குணம உண்டு. புண்களை ஆற்றும்.

### திரிபலா

கடுக்காய்த்தோல், தான்றிக்காய், நெல்லிவற்றல் என மூன்றையும் திரிபலா என்பது குறிக்கும். கடுக்காய் லேகியம் செய்து மலச்சிக்கல், வாயு, சூலை குன்மம், மூலநோய், ஆசனக்கடுப்பு, அசீரண வாய்வு தீர்க்கலாம். ஒரு சித்த வைத்தியர் அனுபவத்தின் மேற்பார்வையில் மருந்து செய்து சாப்பிடவேண்டும். நீங்களாகத் தனியே செய்யக்கூடாது, அனுபவம் முக்கியமானது. சிறந்ததும் ஆகும்.

### சிறப்புக் குணங்கள்

1. வாதம் முதல் பித்தம், கபக் குற்றங்களை முற்றவிடாமல் தடுக்கும் சக்தி உடையது கடுக்காய்.

2. அவரவர் உடல்வாகுக்கு ஏற்றபடி தந்தால் குடலில் உள்ள இயற்கைச் சக்தியைத் தூண்டுவதும் மலத்தை வெளிப்படுத்துவதும் ஆகிய செய்கை உண்டு.

3. கிழத்தன்மையைத் தடுத்து நோய்களை நீக்கும் தன்மையும் இக்காய்க்கு உண்டு.

### கடுக்காய் இனிப்பு ஊறல் (மருந்து)

நல்ல கடுக்காய்களைத் தேர்ந்தெடுத்து, கொட்டையை நீக்கி கற்கண்டு தேன் சேர்த்து ஊறவைக்கவும். ரவியில் வைத்து பக்குவம் ஆனதும் சாப்பிடவேண்டும். 20 நாள், 40 நாள் சாப்பிடலாம். அத்துடன் பிணிகள் நீங்கும்.

**மண்ணிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வது,**
**ஒரு மரத்திற்குச் சுதந்திரம் ஆகாது.**
*-தாகூர்*



# எங்கள் ஊர் பிரச்சினை

**பிரச்சினை:**

எங்கள் ஊரில் சாராயக் கடைகளும், கள்ளுக்கடைகளும் பெருகி ஆண்கள் தினம் குடித்து உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்வதோடு, மனைவி, குழந்தைகளை அடித்துத் துன்புறுத்துகிறார்கள். சிலர் குடிக்கப் பணம் இல்லாமல் வீடுகளில் திருடுகிறார்கள். பெண்களுக்கு வாழ விருப்பம் இல்லாமல் தற்கொலை செய்து கொள்ளும் முடிவில் உள்ளோம். ஆகவே தயவுசெய்து எங்கள் ஊரில் சாராய, கள்ளுக்கடைகளை ஒழிக்க ஆவன செய்யுமாறு கரம்கூப்பி மண்டியிட்டு கேட்டுக்கொள்கிறோம்.

புத்திரன்கோட்டை கிராமப் பெண்கள்,
குழந்தைகள்.

**தீர்வு:**

**இக்கிராமத்தில் ஏற்கெனவே கள்ளச்சாராயம், கள் விற்பனை செய்த நபர்கள் மீது நடவடிக்கை எடுத்து பல வழக்குகள் பதிவுச் செய்யப்பட்டு, தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் விசாரணை செய்ய தற்போது**



**கிராமக் கட்டுப்பாடு இளைஞர் அணி சார்பாக கள், சாராயம் விற்க கூடாது எனக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேற்படி கிராமத்தில் கள்ளச்சாராயம், கள் விற்பனை செய்யாமலிருக்க, தொடர்ந்து கண்காணித்து வரப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.**

கிறிஸ்டோபர் நெல்சன், இ.ஆ.ப,
காவல் கண்காணிப்பாளர்
காஞ்சிபுரம் மாவட்டம்.



**பிரச்சினை:**

**1992-1993**ஆம் ஆண்டிற்கான டேனிடா திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையம் பாதி கட்டப்பட்ட நிலையிலேயே சுகாதார நிலைய மருத்துவருக்கும் கிராமக் கமிட்டி (கட்டிடத் தலைவருக்கும்) ஏற்பட்ட பிரச்சினையால் பாதியிலேயே நிற்கின்றது. அதை முடித்து, பொதுமக்களுக்கு உதவும்படி கேட்டுக்கொள்கிறோம்.

கிராமப் பொதுமக்கள்
பழஞ்சநல்லூர்
காட்டுமன்னார் கோயில்.

**தீர்வு:**

**பழஞ்சநல்லூர் கிராமத்தில் கட்டுமானப்பணி நடைபெற்று வரும் கட்டிடம் துணைச் சுகாதார நிலையம் என்பதையும், அது ஆரம்பச் சுகாதார நிலையம் அல்ல என்பதையும் மேற்படி துணைச் சுகாதார நிலையம் கட்டிட கட்டுமானப்பணி தற்போது நடைபெற்று வருகிறது என்பதையும் மேற்படி துணைச் சுகாதார நிலையம் கட்டிடக் கட்டுமான ப்பணிகள் விரைவில் முடிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

டாக்டர் ஆர்டி.பொற்கை பாண்டியன்,
எம்பிபிஎஸ்., டிபிஎச்.,
துணை இயக்குநர்,
சுகாதாரப்பணிகள், கடலூர்.





**பிரச்சினை:**

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம் தரகம்பட்டி என்பது எங்கள் ஊர். தரகம்பட்டி, கடவூர் ஊராட்சி ஒன்றியத்தின் தலைமை இடம். எங்கள் ஊரில் மக்கள் தொகை 5000க்கும் அதிகம். கரூர், திருச்சி, திண்டுக்கல், குளித்தலை, மணப்பாறை ஆகிய ஊர்களுக்கு இங்கிருந்து வியாபாரம் சம்பந்தமாக ஆயிரக்கணக்கான மக்கள் மேற்கண்ட ஊர்களுக்குத் தினம்தோறும் சென்று வருகின்றனர். பஸ் வசதி போதிய வசதி இல்லாததால் பஸ்களில் கூட்டம் அலைமோதுகிறது. திண்டுக்கல் தவிர மற்ற ஊர்களுக்கு ஓரளவு மட்டும் பஸ் வசதி உள்ளது. திண்டுக்கல்லுக்கு அறவே கிடையாது. திண்டுக்கல் செல்ல மக்கள் 20 கி.மீ. தொலைவில் உள்ள பாளையம் மற்றும் வையம்பட்டி ஆகிய ஊர்களுக்குச் சென்று தான் பஸ் மாறிச் செல்கிறார்கள். மேலும் 8 கி.மீ.தொலைவில் உள்ள பாலவிடுதி கிராமத்திற்கு திண்டுக்கல்லில் இருந்து ஒரு ஆர்.எம்.டி.சி. பஸ் வருகிறது. அந்தப் பேருந்து அங்கு 30 நிமிடம் வரை நின்று செல்கிறது. அந்தப் பேருந்தை தரகம்பட்டி வரைக்கும் திருப்பி விடவும், மேலும் வேடசந்தூர்குஜிலியம்பாறை வழியாகக் கூடுதல் பேருந்துகளைத் தரகம்பட்டி வரை இயக்குவதற்கு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?.

அ.காளிதாஸ்
தரகம்பட்டி அஞ்சல்,
கரூர் 621311.

**தீர்வு:**

**மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பாளையம் மற்றும் குஜிலியம்பாறை பகுதிகளுக்குத் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்திலிருந்து மணப்பாறை - பாளையம் 4 நடைகள், மணப்பாறை-குஜிலியம்பாறை 2 நடைகளும் இயக்கப்பட்டு வருகிறது.**

**தரகம்பட்டியை மையமாகக்கொண்டு நகரப் பேருந்துகள் இயக்கம் செய்ய, தரகம்பட்டி, அரசால் அங்கீகரிக்கப்படாத ஊர் ஆகும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம்,
கும்பகோணம்.

**பிரச்சினை:**

இப்பவும் தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறையின் மூலம் மேட்டூர் அணை அரசு வேளாண்மைப்பள்ளி உள்பட 12 பள்ளிகள் இயங்கின. இங்கு ஒருவருடம் பயிற்சி முடித்தவர்களுக்கு வேளாண்மைத்துறையில் வயல்விளக்க அலுவலர்கள் பணி வழங்கினார்கள். பின்னர் 1992-93ஆம் ஆண்டு



அனைத்துப்பள்ளிகளையும் மூடிவிட்டார்கள். தற்போது பயிற்சி முடித்தவர்கள் தமிழகம் முழுவதும் 2400 மாணவர்கள் இருக்கிறோம். தற்போது நாங்கள் வறுமையில் இருக்கிறோம். தயவுசெய்து வேளாண்மைத் துறையில் வயல்விளக்க அலுவலர் பணி அல்லது தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் "கரும்பு உதவியாளர்" பணி வழங்கி எங்களது துயர்துடைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மு.ஜெயரவி
பள்ளிப்பட்டி

**தீர்வு:**

அரசு தனது ஆணை 457 வேளாண்மை, நாள் **28.7.93ல் (வே.நி5)** தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்க சார்புப் பணியின் அடிப்படை பணியாளர்கள் என உதவி வேளாண்மை அலுவலர் மட்டுமே நியமிக்க முடிவு எடுத்து, தற்போது உள்ள அனைத்து வயல்விளக்க அலுவலர்களையும் படிப்படியாக உதவி வேளாண்மை அலுவலராகத் தரம் உயர்த்தி அனைத்து வயல்விளக்க அலுவலர்களையும் உதவி வேளாண்மை அலுவலர்களாக நியமித்த பின்பு வயல் விளக்க அலுவலர் பணியிடங்களை நீக்கம் (ABOLISH) செய்யவும்



பிரச்சினை:

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் சக்காளம்மன்பட்டி கிராமத்தில் 1995-96ல் ஊராட்சி அரசுப் பள்ளி தொடங்கப் பள்ளிக்கல்வி இயக்குநர் அனுமதி கொடுத்திருந்தார். ஆனால் இன்றுவரை பள்ளி திறக்கப்படவில்லை. அந்த ஊர் சிறுவர்களில் சிலர் 2 கிலோ மீட்டர் தூரம் சென்று படிக்கின்றனர். பல குழந்தைகள் பள்ளிக்கூடம் இல்லாததால் ஆடுமாடு மேய்க்கின்றனர். மேலும் அருகில் கல்குவாரியில் 150 குடும்பங்கள் உள்ளன. 10 வயது பையன்கள் கூட கல்லுடைக்க ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

- ஊர்ப்பொதுமக்கள் சார்பாக,
பள்ளிக்குழுத் தலைவர்.

தீர்வு:

ரெட்டியார்-சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கொத்தப்புள்ளி ஊராட்சியைச் சேர்ந்த ஜக்காளம்மன்பட்டி கிராமத்தில் புதியதாக ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளி 1995-96ம் ஆண்டில் தொடங்கப்படுவதற்காக, பள்ளி கல்வி இயக்குநர் அனுமதி வழங்கப்படவில்லை. போதிய அளவுக்கு இக்கிராமத்தில் ஜனத்தொகை மற்றும் பள்ளி செல்லும் வயதுள்ள குழந்தைகள் எண்ணிக்கை இல்லை. மேலும் இக்கிராமத்திலிருந்து 8 கி.மீ. தூரத்தில் பெத்திநாய்க்கனூர் கிராமத்தில் ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளி செயல்பட்டு வருகிறது. மற்றும் 1.5 கி.மீ. தூரத்தில் தாதன்கோட்டை, கதிரணம்பட்டி கிராமங்களில் அரசு ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளிகள் செயல்பட்டு வருகிறது. எனவே ஜக்காளம்பட்டி கிராமச் சிறுவர்கள் 2 கி.மீ. தூரம் சென்று படிக்க வேண்டிய நிலையில் இல்லை. இக்கிராமத்திலிருந்து மொத்தம் 17 சிறுவர்கள் மட்டும் அருகிலுள்ள பெத்திநாயக்கனூர் கிராமத்தில் படித்து வருகின்றார்கள். பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளதால் புதிய அரசு துவக்கப்பள்ளி ஆரம்பிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- பி. பாலசுப்பிரமணியன்
ஆணையர்
ஊராட்சி ஒன்றிய அலுவலகம்
ரெட்டியார் சத்திரம்.

பிரச்சினை:

எங்கள் ஊர் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், வாகைக்குளம் பஞ்சாயத்துக்குட்பட்ட நாலுவாசன் கோட்டை கிராமம் ஆகும். இது சுமார் 2,500 மக்கள் தொகை கொண்ட ஊர். இங்குள்ள மக்களின் அன்றாட பிரச்சினையாகத் தண்ணீர் உள்ளது. இங்குள்ள மக்கள் கூலிவேலை, சிறுவிவசாயம், கல் உடைத்தல், தீப்பெட்டி வேலை ஆகியவை செய்து பிழைக்கின்றனர். இங்கு உள்ள மக்கள் தண்ணீர் வேண்டி பலமுறை இதற்கு முன்பு முயற்சி செய்தும் இதுவரை இங்குள்ள மக்களுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. மக்கள் தண்ணீர் வேண்டி 3 கி.மீ. தூரம் வரை சென்று மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு வருகின்றனர். இங்குள்ள மக்களுக்கென்று கிணறு, அடிபம்பு எதுவும் கிடையாது. இப்பகுதியில் மழை எதுவும் இல்லாததால் வறட்சியாக உள்ளது. தண்ணீர் ஒரு பெரும் அன்றாடப் பிரச்சினையாக உள்ளது. எனவே எங்கள் பஞ்சாயத்துக்குட்பட்ட நாலுவாசன் கோட்டை கிராமத்திற்குத் தண்ணீர் கிடைக்க உதவி செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

- தலைவர்
ஊராட்சி மன்றம், வாகைக்குளம்.

தீர்வு:

குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம் வாகைக்குளம் ஊராட்சி நாலுவாசன்கோட்டை கிராமத்திலுள்ள ஒரு அடிபம்பு பழுதுநீக்கம் செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் சீராக நடைபெற்று வருகிறது. தற்போது நிலவிவரும் வறட்சியை முன்னிட்டு, மேற்படி கிராமத்திற்குக் கூடுதலாகப் புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைக்க நடப்பு வருட வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் அரசுக்குப் பிரேரணை அனுப்பப் பட்டுள்ளது. ஒப்புதல் கிடைக்கப் பெற்றவுடன் புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தரப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறோம்.

- செ. ராமையா
ஆணையாளர்
ஊராட்சி ஒன்றியம், குருவிகுளம்.

பிரச்சினை:

எங்கள் ஊரில் 161 மாணவர்களைக் கொண்ட ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளி உள்ளது. பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர்களின் எண்ணிக்கை ஓராசிரியர் மிஞ்சினால் ஈராசிரியர் தான். புதியதாக ஆசிரியர்களை நியமனம் செய்தாலும் அவர்கள் உடனே மாறுதல் கேட்டுச் சென்று விடுகின்றனர். காரணம் பஸ் வசதி இல்லாமைதான்.

காலை 7.35க்கு 265ஏ என்ற பேருந்து செஞ்சியில் இருந்து மருர் வழியாக விழுப்புரம் செல்லுகிறது. அது 8.15 மணிக்கு மருர் வந்து விடுகிறது. அதை விட்டால் வேறு பேருந்து அந்த வழியில் 11.00 மணிக்குத்தான்.

எனவே மாணவர்களின் நலனை மனதில் கொண்டு 8.30 மணிக்கு செஞ்சியில் கிளம்புவது போல், ஒரு பஸ் செஞ்சி to மருர் வழியில் விட்டால் மாறுதல் கோராமல் ஆசிரியர்கள் பள்ளிக்கு வந்து செல்வார்கள். மாணவர்களின் படிப்பும் கெடாமல் இருக்கும். கி.பி.2000க்குள் அனைவருக்கும் கல்வி என்ற அரசின் இலக்கை அடைய வேண்டுமாயின் இப்படிப்பட்ட சிறிய குறைகளையும் நிவர்த்தி செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

- எம்.மேரி பால்ராஜ்
மருர் கிராமம்.



தீர்வு:

செஞ்சியிலிருந்து இயக்கப்படும் நகரப்பேருந்து தடம் என்.டி.5 செஞ்சி-கூட்டேரிப்பட்டு (வழி) திருவம்பட்டு, மருர், ரெட்டணை, வழித்தடத்தில் நாளொன்றுக்கு 4 நடைகளும், விழுப்புரம் பணிமனையிலிருந்து இயக்கப்படும் புறநகர் பேருந்து தடம் எண்.265 விழுப்புரம்-செஞ்சி(வழி) விக்கிர வாண்டி, பேரணி, மருர் திருவம்பட்டு வழித்தடத்தில் நாளொன்றுக்கு 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

இவற்றில் செஞ்சியிலிருந்து இயக்கப்படும் நகரப்பேருந்து டி5 காலை 8.10 மணிக்கு கூட்டேரிப்பட்டில் நடையெடுத்து ரெட்டணை, மருர், திருவம்பட்டு, ஜம்போதி வழியாக செஞ்சிக்கு 9.30 மணிக்கு சென்று அடைகிறது. இந்நடை ரெட்டணை, மருர், திருவம்பட்டு, ஜம்போதி கிராம மாணவ, மாணவியர் அருகிலுள்ள செஞ்சி நகருக்குச் சென்று கல்வி பயில ஏதுவாக இயக்கப்பட்டு வருகின்றன. இந்நடையைக் கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு கால அட்டவணையை மாற்றி இயக்கினால் தற்போது மேற்படி நேரத்தில் பேருந்து வசதி பெற்று வரும் கிராம மாணவ, மாணவியர் மற்றும் பொதுமக்கள் பேருந்து வசதி இழக்க நேரிட்டு, சட்டம் ஒழுங்கு பிரச்சினை எழும் என்பதால் இத்தடத்தின் கால அட்டவணையை மாற்றி இயக்க இயலாது.

மற்றொரு பேருந்து விழுப்புரம் பணிமனை யிலிருந்து இயக்கப்படும் புறநகர் தடம் எண்.265 காலை 7.45 மணிக்கு செஞ்சியில் நடையெடுத்து ஜம்போதி, திருவம்பட்டு, மருர், பேரணி, விக்கிரவாண்டி வழியாக விழுப்புரத்திற்கு 9.40 மணிக்கு, சென்று அடைகிறது.

இத்தடம் சுமார் 8.30 மணிக்கு மருர் வந்தடை கிறது. இந்நடையில் செஞ்சியிலிருந்து மருவூர் மற்றும் அதனைச் சார்ந்த கிராமங்களில் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் பள்ளிக்கு வந்து சேர ஏதுவான நேரமாகும். மேலும் ஒவ்வொரு நகரத் திலிருந்தும் கிராமங்களுக்குச் சென்று பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஏதுவான நேரத்தில் பேருந்து இயக்குவது என்பது நடைமுறையில் இயலாத ஒன்றாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

- பொது மேலாளர் (இயக்கம்)
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம்.

பிரச்சினை:

நாங்கள் பெரியார் மாவட்டம் காங்கேயம் தாலுகா, வெள்ள கோவில் பேருராட்சி கச்சேரி வலசு இந்திராநகர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் அருந்ததிய இன மக்கள், வெள்ளகோவில் நகரம், நாகப் பட்டணம் திருச்சி சாலையிலிருந்து வடபுறம் பிரிந்து சி.எஸ்.ஐ. தேவாலயம் வழியாக கச்சேரி வலசு வந்து பின் இந்திராநகர் வழியாக, வெள்ளகோவில் ஈரோடு ரோட்டினை அடைகிறது ஒரு ரோடு. இந்த ரோடுதான் இப்பகுதியில் வசிக்கும், 1000 மக்கள் அன்றாட கூலி வேலைக்கும் நடத்தும் சைக்கிளிலும் 24 மணி நேரமும் சென்று வருகிறோம். கடந்த 40 ஆண்டுகளாக இந்த ரோடு யாராலும் மராமத்து செய்யப்படவில்லை.

நாங்கள் குளிக்கும் தண்ணீர், துவைக்கும் தண்ணீர், சிறுநீர் அனைத்தும் வடிகாலின்மையால் ரோடுகளில் உள்ள குழிகளில் தேங்கிவிடுகிறது. மொத்தத்தில் அனைத்து வியாதிகள் வரும் அளவுக்கு சுகாதாரக் கேடு உள்ளது. தமிழரசு மூலமாகவாவது தமிழ்நாடு அரசு இவைகளைக் கவனிக்குமா?

கனகராஜ்
வெள்ளக்கோயில்

தீர்வு:

வெள்ளக்கோயில் பேருராட்சி கச்சேரி வலசு இந்திராநகர் ஆகிய பகுதிகளின் வழியாகச் செல்லும் தெருக்களுக்குத் தார்ச்சாலை வசதி செய்யவும், தெருக்களில் கழிவுநீர் செல்வதற்காக வடிகால்கள் கட்டுவதற்கும், குடிசை மாற்று வாரியத்தின் மூலம் சர்வே பணி செய்யப்பட்டுள்ளது. அத்திட்டங்களுக்கு அங்கீகாரம் கிடைத்த பின்னர் குடிசைமாற்று வாரியத்தினரால் பணி மேற்கொள்ளப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- ஒ.பதுரைசாமி
செயல் அலுவலர்
வெள்ளக்கோயில் பேருராட்சி
பெரியார் மாவட்டம்.

ஆணை பிறப்பித்து வயல் விளக்க அலுவலர் பணியிடங்களைப் புதுநியமனம் மூலம் நிரப்ப அரசு தடை விதித்துள்ளது.

எனவே தற்போது செயல்பாட்டில் உள்ள விதிகளின்படி வயல் விளக்க அலுவலர் பணிக்கு (வேளாண்மை கல்வி பயின்றவர்களை) புதிய நியமனங்கள் செய்ய விதிகளில் வழிவகை இல்லை, என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

*பி.ஏ.இராமையா, இ.ஆ.ப,*
*வேளாண்மை இயக்குநர்*
*சேப்பாக்கம், சென்னை.*

**பிரச்சினை:**

எங்கள் ஊர் தருமபுரி மாவட்டம், தேன்கனிக்கொட்டை வட்டம் உரிகம் கிராமம் ஆகும். எங்கள் பஞ்சாயத்திற்குத் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம், தேன்கனிக்கொட்டை - உரிகம் பேருந்து எண்.டி.என்.29-0526 ஒன்று மட்டும் ஓடுகிறத். இந்த ஒரு பேருந்துக்குக் கோட்டையூர், மஞ்சு கொண்டபள்ளி, உரிகம் ஆகிய பஞ்சாயத்து மக்கள் பயணம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. மூன்று பஞ்சாயத்திற்கு ஒரு பேருந்து என்ற நிலைமை எங்கள் பகுதியில் இன்னமும் உள்ளது.

மேலும் இந்தப் பேருந்து பழுதடைந்துவிட்டால், அது சரிசெய்து வரும் வரையும் மற்றொரு பேருந்து விடுவதில்லை. சுமார் இரண்டு, மூன்று நாட்கள் எங்கள் பஞ்சாயத்திற்குப் பேருந்து வசதி இருக்காது. இதுபோன்ற சம்பவம் அடிக்கடி நிகழ்வதுண்டு. இதனால் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கும், மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் படிப்புக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே எங்கள் ஊர் பேருந்து பிரச்சினையைத் தீர்த்து வைக்கவும், கூடுதல் பேருந்து விட்டு எங்கள் குறையினைத் தீர்த்து வைக்கும்படியும் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

*எம்.வெங்கடாசலபதி செட்டியார்*
*தி.மு.க. கிளைச் செயலாளர்*
*ஊராட்சி மன்றத் தலைவர்*
*உரிகம்.*

**தீர்வு:**

***தேன்கனிக்கோட்டை-உரிகம் தட பேருந்து உரிகத்திற்கு நாளொன்றுக்கு 8 நடைகள் இயங்கி வருகின்றது. இத்தட பேருந்து மட்டுமன்றி இக்கழகத்தைச் சார்ந்த மற்றொரு பேருந்து தருமபுரியிலிருந்து தேன்கனிக்கோட்டை வழியாக உரிகம் வரை நாளொன்றுக்கு 4 நடைகள் இயங்கி வருகின்றது. எனவே உரிகம் கிராமத்திற்கு இக்கழகம் இரு பேருந்துகள் மூலம் 12 நடைகளை இயக்கிவருகிறது. மேலும் உரிகம் தட பேருந்து பழுது ஏற்படும் சமயங்களில் சிறிய பழுதாக இருப்பின் பேருந்தின் பழுது உடனுக்குடன் நீக்கப்பட்டு அத்தடபேருந்தே மீண்டும் தடத்தில் இயக்கப்படுகிறது. தேவைப்படின் மாற்றுப் பேருந்துகளைக்கொண்டு 12 நடைகளும் தினசரி இயக்கப்படுகின்றது. மனுவில் குறிப்பிட்டுள்ளபடி தட பேருந்து பழுதடையம் சமயங்களில் பழுது சரி செய்திடும்வரை வேறு பேருந்து இயக்கப்படுவதில்லை என்பது சரியல்ல.***

***பணிகள் கொள்திறன் அதிகரிப்பின் கூடுதல் பேருந்து அரசின் ஒப்புதல் பெற்று இயக்கிட தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.***

*மேலாண்மை இயக்குநர்*
*தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம்.*

**பிரச்சினை:**

எங்கள் ஊர் தஞ்சை மாவட்டம் திருவையாறு வட்டம் கண்டியூருக்கு அய்யம்பேட்டை ரோட்டில் கிழக்கே (ஒரு கிலோ மீட்டர்) மணல் மேடு கிராமம் உள்ளது. ஒரு ஆண்டு காலமாகக் கண்டியூர் கோபால் என்பவர் சாராய வியாபாரம் செய்து வருக்கிறார். நடுக்காவேரி போலீஸ் உயர் அதிகாரியையும் கையில் வைத்துக்கொண்டு பொதுமக்களும் கிராமவாசிகளும் நேரடியாகப் போய் சொல்லியும் பெட்டிசன் கொடுத்தும் எந்தப் பலனும் இல்லை. நீங்கள் உடனே இந்த சாராய சாம்ராஜ்யத்தை ஒழிக்கவேண்டும்.

*தமிழரசு வாசகர்கள்*
*மணல்மேடு, கண்டியூர் அஞ்சல்.*

**தீர்வு:**

***விசாரணையிலும், மதுவிலக்கு சோதனை செய்ததிலும் மணல்மேடு கிராமத்தில் கண்டியூரைச் சேர்ந்த கோபால் என்பவரோ அல்லது வேறு நபரோ கள்ளச்சாராயம் விற்பனை செய்யவில்லை. மேற்படி கிராமத்தில் ஊர் கட்டுப்பாடு போடப்பட்டு கள்ளச்சாராயம் விற்பனை அறவே இல்லை. மேலும் நடுக்காவேரி காவல் நிலையத்தில் பெறப்படும் புகார்களுக்கு அவ்வவ்போது தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்படி ஊரில் தற்போது கள்ளச்சாராயம் விற்பனை எதுவும் நடைபெறவில்லையென ஊராட்சி மன்ற தலைவர் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.***

*டாக்டர் கே.ஜெயந்திமுரளி, இ.கா.ப,*
*காவல் கண்காணிப்பாளர்,*
*தஞ்சாவூர்.*





**பிரச்சினை:**

எங்கள் ஊர் தஞ்சை மாவட்டம் திருவையாறு வட்டம் திருக்காட்டுப்பள்ளி அருகிலுள்ள முல்லைக்குடி சிற்றூராட்சி, நல்ல தார் சாலை உள்ளது. 6,000க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்டது. அரிசன பெண், ஊராட்சித் தலைவிக்குரியது. தஞ்சையிலிருந்து 12-அ டவுன் பஸ் காலை 8 மணி, மாலை 6.30 மணி என ஒரு நாள்கு இருமுறை தான் உள்ளது. அரசுபணி, கல்லூரி, பள்ளி ஆகிய பணிகளுக்கு இதுபோதுமானதன்று. குறைந்தது 4 முறை சென்றால் மக்கள் பலன்அடைவர். குறை தீர்க்க விழைகின்றேன்.

*பெ. சோதிவேல்*
*வணிகவரி அலுவலர் (ஓய்வு)*
*முல்லைக்குடி*



**தீர்வு :**

***முல்லைக்குடி கிராமம் திருகாட்டுப்பள்ளி - செங்கிப்பட்டி சாலையில் இருந்து 4 கி.மீ. தூரத்திலும், திருக்காட்டுப்பள்ளியிலிருந்து 6 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது.***

***தற்சமயம் இக்கிராமத்திற்கு நகரத் தடம் எண். ஏ 7 ஏ மற்றும் ஏ12 மூலம் தஞ்சையிலிருந்து தினசரி 4 நடைகள் இயக்கப்படுகின்றன. தஞ்சையிலிருந்து இக்கிராமம் 34 கி.மீ. தூரத்தில் உள்ளது.***

***முல்லைக்குடிக்கு இயக்கப்படும் தடைகளின் கால அட்டவணை பின்வருமாறு:***

| | தஞ்சாவூர் | | முல்லைக்குடி | |
|---|---|---|---|---|
| | வ.நே. | பு.நே. | வ.நே. | பு.நே. |
| உ.தடம் எண்.ஏ12 | - | 7.00 | 8.10 | - |
| | 9.45 | - | - | 8.25 |
| தடம் எண்.ஏ-7ஏ | - | 17.15 | 18.50 | - |
| | 20.25 | - | - | 19.00 |

> ***ஒரு தேசம் சுதந்திரம் பெற்றுவிட்டது என்பதைக் காலண்டர் மட்டுமே சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது; சுதந்திரம் மக்களையும், மக்கள் சுதந்திரத்தையும் சொல்லிக்கொண்டே இருக்கவேண்டும்!***
>
> ***- கவிஞர் வைரமுத்து***



***இக்கிராம மக்களுக்குப் பயன்படும் வகையில் மேற்படி பேருந்துகள் காலையில் முல்லைக்குடியிலிருந்து புறப்படும் நேரமும், மாலையில் தஞ்சாவூரில் இருந்து புறப்படும் நேரமும் கல்விக்கூட/அலுவலக நேரங்களுக்கேற்றவாறு அமைக்கப்பட்டுள்ளன.***

***தற்சமயம் தஞ்சையிலிருந்து இயக்கப்படும் நகரப்பேருந்துகள் யாவும் பல்வழித்தடத்தின் 3 அல்லது 4 தடங்களில் தஞ்சாவூர் ே பூதலூர், திருவையாறு திருவோணம், ஒரத்தநாடு, அம்மாபேட்டை முதலிய ஒன்றிய மக்களுக்குப் பயன்படும் வகையில் இயக்கப்படுகின்றன. முல்லலைக்குடிக்கு இயக்கப்படும் நடைகளை அதிகப்படுத்த வேண்டுமானால், மற்ற கிராமங்களுக்கு இயக்கப்படும் நடைகளைக் குறைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். இதனால் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் ஏற்படவும் வாய்ப்புள்ளது.***

***இந்நிலையில் முல்லைக்குடிக்கு கூடுதல் நடைகள் இயக்குவது குறித்து தஞ்சை நகரின் புதிய நகர வழித் தடங்கள் திறக்கப்படும் போது கருத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.***

***இக்கோரிக்கைத் தொடர்பாக, மேற்படி தகவல்களை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு ஏற்கனவே தெரிவித் துள்ளோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.***

*எஸ்.ஏ.துரைசாமி*
*வட்டாரப் போக்குவரத்து அலுவலர்*
*தஞ்சாவூர்.*

(ESTD. 1944)

**SOUTH INDIA TANNERS & DEALERS ASSOCIATION** (Registered)

(Recognised by the Government of India)

**RANIPET - 632 401.**

*Telegram* : "TANNERS" *Phone* : 25354 *Fax* : 04172-22653

*SITDA was formed during the year 1944. At present it has 253 members. The main objectives of the Association are to solve the common problems and difficulties faced by the members in the matters relating to provisions of Factories Act and other Labour laws and mainly to improve the condition of tanning industry in South India.*

*This Association has taken necessary steps for the setting up of two Common Effluent Treatment Plants (CETP) one each at Ranipet and Melvisharam at a cost of Rs.550 lakh and Rs.480 lakh respectively. Further, two more CETPs one each at Melpudupet near Walajapet and at Chettithangal near Ranipet are also under construction.*

*This Association is also importing Wattle Extract in bulk quantities and procuring indigenous Wattle Extract and distributing the same among members on 'no loss no profit' basis. Besides, running Grinding Mill at its premises at Ranipet and a Baling Press at Chennai.*

*This Association is authorised by the Govt. of India to issue Certificate of Origin.*

# தோல் நோய்

- டாக்டர் எம்.வசந்தா

**தோல்** நோய்கள், நம்முடைய உடலின்மேல் காணப்படுபவை ஆகும். ஒருசில பாகங்களைத்தவிர, அவைகளை நாமே நன்றாகப் பார்த்துக்கொள்ளலாம். சருமத்தின் ஆரோக்கியம் என்பது உடலின் ஆரோக்கியம் ஆகும்.

"அரிது அரிது மானிடராகப் பிறப்பது அரிது" என்றார்கள். இந்த ஆறறிவு படைத்த மானிடனே-எல்லா உயிர்ப்படைப்புகளிலும் உயர்ந்தவன். உயிரே நம் உடலை இயக்குவது. அந்த உயிர் உடம்பில் உள்ளது. உடம்பானது தசை, நரம்பு, எலும்பால் ஆனாலும் அதில் மிக அற்புதமான அவயவங்களாக - மூளை, இருதயம், நுரையீரல், குடல், கல்லீரல், சிறுநீரகம், பிறப்பு உறுப்புகள் ஆகியவை உள்ளன. இந்த முக்கிய உறுப்புகளையெல்லாம் அந்தந்தப் பாகத்தில் இருத்தி-வடிவம் கொடுத்து அவைகளை மிகச்சிறந்த உறையாகப் போர்த்தி, ஒரு பாதுகாப்புக் கவசமாக அமைந்திருப்பது நம் சருமமேயாகும்.

தலைமுதல் பாதம்வரை நீண்டு பரவியிருக்கும் மனிதனின் மிகப்பெரிய பாகமே தோல். இது மிகப்பெரியது மட்டுமல்ல; மற்ற உறுப்புகளைப்போல் தோல் மிக நுணுக்கமான பாகங்களையும் உடையது; பலவிதமான முக்கிய வேலைகளையும் எல்லா நேரமும், எல்லா வயதிலும் எல்லா பாகங்களிலும் செய்துகொண்டிருப்பதுமாகும்.

**தோலின் முக்கியத்துவம் :**

மனிதத் தோலின் முக்கியத்துவம் என்ன என்பதை இங்கே பார்க்கலாம். தோல் இன்றி மனிதனைக் கற்பனை செய்து பாருங்கள், புரியும்.

★ உடலுக்கு வண்ணம் கொடுப்பது
★ கவர்ச்சியை அளிப்பது
★ உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பது
★ இளமையைக் காட்டுவது
★ முதுமையை அறிவிப்பது
★ உடல் வெப்பத்தைச் சீரமைப்பது

- எல்லாம் தோல்தானே ?

இப்படியான இந்த அவயவம் பலவிதமான தாக்குதல்களுக்கு உள்ளாகிறது. நேரிடையாக வெயில், பனி, குளிர், மழைக்கும் - காயங்கள், நுண்கிருமிகளின் தாக்குதலுக்கும் உட்பட்டு-நமக்குத் துன்பம் அளிக்கலாம்; நோய்கள் வரலாம்.

நம் உடலின் பாதுகாப்புக் கவசமான சருமமானது மிகவும் பெரியது. மேலும் அதில் மிக முக்கியமாக நரம்புகள், தசைகள், இரத்தக் குழாய்கள், வியர்வை சுரப்பி நாளங்கள், கொழுப்புச்சத்து தரும் சுரப்பிகள், நிறம் கொடுக்கும் செல்கள், மற்றும் நம் எதிர்ப்புச்சக்தியை அறிவிக்கும் செல்கள் போன்றவை உள்ளன.

முடி, நகம் ஆகியவற்றைத் தாங்கி நரம்பு, எலும்புகளைப் பாதுகாக்கும் தோலில்-மேல்தோல், அடித்தோல், நடுத்தோலும் அடங்கும்.

**நோய் வகைகள்**

நடைமுறையில் அன்றாடம் நாம் காணும் சருமநோய்கள் பல :

சத்துக் குறைவினால் (வைட்டமின் கொழுப்பு புரதம் தாதுக்கள்)

★ நிறமாற்றங்கள்
★ வெண்படைகள்
★ க்ஷயரோகம்
★ தொழுநோய் ஆகிய நோய்களும் -
★ பனி, வெப்பம் ஆகியவைகளால் - வடுவலை
★ உடம்பில் உள்ள சுய எதிர்ப்புச் சக்திகளினால் (Auto immune)
★ பச்சைக் குத்திக் கொள்வதால்
★ பழக்கவழக்க முறைகளினால்
★ ஆடை அணி ஆபரணங்களால்
★ அழகு சாதனங்களினால்
★ வீட்டில் வளர்க்கும் செல்லப் பிராணிகளினால் (Pet Animals) ஏற்படும் நோய்கள்.

**பரம்பரை நோய்கள்**

**மச்சங்கள்:**

உடலில் உள்ள மற்ற உறுப்புகள் பாதிப்பால் ஏற்படும் நோய்கள்,

**புற்றுநோய்கள்:**

இப்படி இன்னும் பல சரும நோய்கள் உள்ளன.

நம் நாடு அதிக வெப்பமான நாடாகும். மேலும் நம் நாடு முற்றிலுமாக வறுமை நீங்கி முழு வளர்ச்சி அடையவில்லை. ஆகையால் சுகாதாரக் குறைவினால் சரும நோய்கள் பல எளிதில் உண்டாகலாம்.

அவற்றில் முக்கியமாகச் சொறிசிரங்கைப் பற்றி அறியலாம். சொறி ஒருவிதமான முக்கிய சரும நோயாகும்; சொறி என்பது வியாதியின் பெயரே தவிர, சொறிவது அல்ல. அரசு மருத்துவமனைகளில் அன்றாடம் அதிக அளவு நோயாளிகளிடம் காணப்படுகிறது.

**அறிகுறிகள்:** முக்கியமாக இளம் வயதினர், நடுத்தர வயதினர், ஆண்,பெண் இருபாலருக்கும் வரலாம். தலைமுடி, தலை, நகம் ஆகியவைகளும் பாதிக்கப்படலாம். அறிகுறிகள் அந்தந்த வகையான படையைப் பொறுத்து உள்ளன.

**தேமல்:** என்பது தோலின் நிறம் சிறிது குறைந்து, சிறிது வெளுப்பாக அல்லது சாம்பல் நிறமாகவோ, கருப்பாகவோ தனித்தனியாக, திட்டுத்திட்டாகக் காணப்படும். முக்கியமாக முதுகு, மார்புப் பகுதிகளில் அதிகமாகத் தென்படும். அரிப்பு ஏதும் இருக்காது. சில இடங்களில் தோல் உரிந்தும் போகும்.

தோலின் உலர்ந்த, உதிர்ந்த பாகத்தை எடுத்து அதில் சிறிது கார திரவம் போட்டு நுண்ணோக்கியில் பார்த்தால் கிருமியின் பாகங்கள் நமக்குத் தென்படும்.

தடவும் மருந்துகள் மிகவும் இதற்கு உபயோகமானவை. மருத்துவர் ஆலோசனைப்படி சிகிச்சை பெறவேண்டும். இதற்கு ஆளானோர், நீரிழிவு நோய் இருக்கிறதா என முதலில் பரிசோதிக்க வேண்டும்.

**படைகள்:** காளான் எனப்படும் ஒட்டுண்ணிகளால் வருவது. இதில் பலவிதமானவை உள்ளன. உடம்பில் தலை முதல் பாதம் வரை எப்பாகத்திலும் வரலாம். முக்கியமாக ஈரப்பசை உள்ள தேகத்தின் இடுக்குப் பகுதிகளில் காணப்படும். தலையில் சொட்டை மாதிரி அல்லது சீழ் பிடித்துக் கட்டி மாதிரி காணப்படும். முகத்தில் வட்டமாகக் காணப்படலாம், அல்லது தாடையில்



மயிர்க் கால் கட்டிகள் (ஆண்கள்) காணப்படலாம். நகம் சொத்தையாகலாம். ஆண், பெண், நடுவயதினர் நடைமுறையில் காணப்படும்.

**இதன் அறிகுறி :** அரிப்பு, தோலில் வட்டமான சிறுசிறு கொப்பளங்கள் காணப்படும். ஒன்றோ இரண்டோ அதிகமாகவோ காணப்படும். மேலும், தொடை இடுக்குகளில் அதிகமாகப் பரவலாம். நிறம் கருப்பாக மாறி தோல் உரிந்தும் காணப்படலாம். நிறை பாகங்களிலும் காணப்படும். நோய் பரவுதலை நுண்ணோக்கியின் உதவியினால் அறியலாம்.

தவறாமல் தினப்படி மருத்துவ ஆலோசனைப்படி சிகிச்சை எடுக்கவேண்டும். 4 வாரம் முதல் 6 வாரம் வரை சிகிச்சை எடுக்க வேண்டும். நுட்பமான சுகாதார முறை கடைப்பிடிக்கவேண்டும். தவறாமல் வெந்நீரில் குளிக்க வேண்டும். சுத்தமான துவைத்த ஆடை அணிய வேண்டும். உள்ளாடைகளை அதி சுத்தமாக உபயோகிக்க வேண்டும்.



சரியான சிகிச்சை எடுக்கப்படாவிட்டால் இது தேகம் பூராவும் பரவலாம். மேலும் பலவிதமான சிக்கல்கள் இதனால் வரலாம். உதாரணமாகத் தோல் முழுவதும் வெந்து காணப்படலாம்.

**மருக்கள்:** இவை ஒருவித வைரஸ் எனப்படும் மிகநுட்பமான கிருமியால் உண்டாவது. மருக்கள் பலவிதம் உண்டு. கை கால், பாதம் மற்ற பாகங்களில் காணப்படும். சிறுசிறு கருமையான அல்லது சாம்பல் நிறமான கட்டிகளாக இது கண்டும் வலி அதிகம் இருக்காது. அழுத்தினால் வலி உண்டாகும். இந்த நோயும் ஒட்டிக்கொள்ளும் தன்மையானது ஆகும்.

**பால் உண்ணி :** முக்கியமாகக் குழந்தைகளுக்கு முத்துப் போல் வெண்மை நிறமான சிறுகட்டிகள் மிருதுவாகக் காணப்படும். இதுவும் ஒருவகை வைரஸ் வியாதிதான்.

மருக்களை அமிலத்தால் அல்லது மின்சாரத்தால் தீய்த்து விடலாம். பெரியதாக இருப்பின் அறுவை சிகிச்சை செய்தே அகற்றலாம். பால் உண்ணிகளை மிகச் சுலபமான முறையில் சிறிய ஊசி கொண்டு எடுத்துவிடலாம்.

**முக்கியத்துவம் :** அவை பெரியதாகி, கட்டிகளாக மாறலாம். சில ரத்தக் கட்டிகளாக மாறலாம்.

காசநோய் என்றாலே இருமல், சளி வருதல், ரத்தம் கலந்த கோழை, ஜுரம் மெலிந்து சக்தியிழந்து காணப்படுதல் ஆகியவையே நாம் கற்பனை செய்வோம். காசநோய், காசநோய்க் கிருமியினால் வருவது (T.B.) இது நம் தோலிலும் வரலாம் என்பது பலருக்குத் தெரியாத விஷயம். விந்தையான காச நோய் நம் தோலில் பலவிதங்களில் காணப்படலாம். அவை சில சிறுவயதிலும், சில நடுவயதிலும் வரலாம். மேலும், முகம் கை கால்கள் கழுத்து, தொடை இடுக்கிலும் வரலாம். அவை உடலின் பாகத்திற்கேற்ப தோற்றத்தில் மாறுபட்டுக் காணப்படும்.

சிவந்த, படர்ந்த தோல் தடிப்புடன் காணப்படலாம் அல்லது சிவந்த சிறு கட்டிகளாகக் காணப்படும்.

★ புண்களாகக் காணப்படும்

★ சில மருக்கள் போலும் காணப்படும்.

★ தீராத சீழ் வடியும் சிறு புண்களாகக் காணப்படும்.

★ உடம்பு முழுவதும் வேர்க்குரு மாதிரியும் காணப்படலாம்.

அதற்கு, தக்க மருத்துவர் மூலம் மருத்துவ பரிசோதனை செய்து சிகிச்சை அளிக்க வேண்டும். முக்கியமாக உடலில் மற்ற உறுப்புகளில் காச நோய் உள்ளதா என்று பார்க்க வேண்டும். சிகிச்சைக்குப்பின் பெரிய தழும்புகள் வந்து விகாரமாகத் தோற்றமளிக்கும்.

**நிறமாற்றங்கள் :** உடல் பூராவும் தோல் நிறத்தில் சில மாறுதல்கள் சாதாரணமாக ஆரோக்கியமாக இருக்கும்போதே காணப்படுவது நாம் அறிந்ததே. ஆனால் நிறமாற்றத் தோல் நோய்கள் அநேகம் உண்டு. அவை பலவிதக் காரணங்களினால் வருவன. உடல் பூராவும் மாற்றம், அதிகக் கருப்பாக, ஒரே மாதிரியாக அல்லது ஆங்காங்கு கருப்பாக, திட்டுத்திட்டாக அல்லது முகம், நெற்றி கன்னங்கள் மட்டும், கழுத்து மட்டும், மூக்கில் மட்டும் போன்றவை. இந்த கருப்பு நிறமாற்றம் முக்கியமாக இது வருவதற்கான காரணங்கள்: வெயில்படும் இடங்களில் வெயிலின் கதிரினால் வரக்கூடும், சிலவகை மருந்துகள், சிலவகை அழகு சாதனங்கள் வாசனைத் திரவியங்கள், நம் பெண்களில் சிலருக்குப் பொட்டு வைப்பதால், சிலருக்கு கன்னங்களில் கருப்பாக - அது உடலின் நாளமில்லா சுரப்பிகள் - தவறால் வரக்கூடும்.

இவையெல்லாம் வெள்ளைப்படை உடலின் எந்த பாகத்திலும் எந்த வயதிலும் வரக்கூடும். இதன் அடிப்படை காரணம் 1. பரம்பரை 2. உடலில் நிறம் தரும் செல்கள் அழிக்கப்படுகின்றன ஒருவித சுய எதிர்ப்புச் சக்தி இவையெல்லாம் ஆகும். மிகச் சாதாரணமாகக் காணப்படுவார்கள். காரணத்திற்கேற்ப சிகிச்சை அளிக்க வேண்டும்.

நமக்கு ஒருவிதமாக விகாரத் தோற்றத்தை இது கொடுக்கும். நம்மைப் பார்ப்பவர்களுக்கு அதிர்ச்சி, அச்சம் தரக்கூடும். ஆனால் இவை ஒட்டவோ, தொற்றவோ செய்யாது.

சத்துக் குறைவினால் ஏற்படும் தோல் நோய்களும் உண்டு. புரதக் குறைவால் முடிகள் உலர்ந்து மெலிந்து காணப்படும். சரிவர வளர்ச்சி இருக்காது. நகம் மிருதுவாக வளரும். உடையும் தன்மை உடையது. தோல் உலர்ந்து வெடித்து நிறம் மாறி இருக்கும். மேலும் குழந்தைகளுக்கும் அதிகமாகக் காணப்படும்.

**வைட்டமின், தாதுக்கள், உலோக சத்துக்கள்:**

பொதுவாக இவ்வாறான தோல் நோய் எனில் தோல் காய்ந்து வெடித்துக் காணப்படும். கோடுகளாகத் தெரியும். மிகவும் மெல்லியதாகக் காணப்படும். தோல் உரியும். முக்கியமாகக் கை, கால்களில் மேலும் தவளைச் சொரி காணப்படும் மிக நுண்ணிய, கடினமான கட்டிகள் முட்டிகளில் காணப்படும். வாய்களில் புண்கள், முடி உதிர்தல், சிலசமயம் உடலில் புண்கள் காணப்படலாம். இந்தச் சத்துக்கள் அதிகமானாலும் நோய் பாதிக்கப்படலாம்.

குடிப்பழக்கத்தினால் தோலில் வியாதிகள் வரலாம். முகத்தில், மார்பில், புறங்கைகளில் மற்றும் சில இடங்களில் தோல் வெந்து சிவந்து உரிந்து காணப்படும். இதனால் எரிச்சல், அரிப்பு இருக்கும்.

எய்ட்ஸ் என்றும் பயங்கர நோயும் தோலில் பலவிதமான புண்களை ஏற்படுத்தும். இதனால், கட்டிகள், கொப்புளங்கள் உண்டாகவும் கூடும்.

உடலின் முக்கியமான உறுப்புகள் நோயினால் பாதிக்கப்பட்டால், அந்நோய்க்கு ஏற்ப தோலில் பலவித மாற்றங்கள் ஏற்படும். இதனால் நோய்கள் வரலாம்.

கொசுக்கடி மற்றும் பூச்சிக் கடிகளினால் சிலருக்குத் தொல்லை கொடுக்கும் கட்டிகள், கரப்பான் போன்றவை காணப்படும். இவை தொடர்ச்சியாக வந்து போய்க்கொண்டே இருக்கும்.

இன்று எண்ணிலடங்கா தோல் நோய்கள் உள்ளன. அவைகளைச் சுருக்கிக் கூறுவது என்பது இயலாது. விளக்குவதும் கடினம்.

**தொழுநோய் :** இது யாவரும் அறிந்த முக்கியமான வியாதி. இது குறைந்த உணர்ச்சியற்ற படையாகவோ அல்லது உடம்பு பூராவும் சிறு படைகளாகவோ அல்லது கைகள், விரல்கள் மடங்கி புண்ணாகி கால்கள், விரல்கள் இல்லாமல் உபயோகமற்ற அவயங்களாக மாறி காணப்படும். தொழுநோய் மிகவும் விரிந்து பரந்து விதவிதமான தோற்றங்களில் காணப்படலாம். மேலும், பலவிதமான சிக்கல்கள் இதன் காரணமாக வந்து உடல் பாதிக்கப்பட்டு அன்றாட வாழ்க்கை, அன்றாடப் பழக்கங்கள், வேலைகள் சுத்தமாகப் பாதிக்கப்பட்டு நம்மைச் சமூகத்துக்கு உபயோகமற்றவராக ஆக்கிவிடும். ஆகையால் தொழுநோய் பற்றிப் புரியும்படி சுருக்கமாகக் கூறுவது மிகக்கடினம். ஏனெனில் அதுபற்றி அவ்வளவு சொல்லியாகவேண்டும்.

இது மிகவும் மோசமான நோய். ஆகையால், இதனால் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாகத் தக்க மருத்துவரை அணுகிப் பரிசோதித்துக்கொண்டாக வேண்டும்.

இவ்வாறாகப் பலவிதத் தோல் நோய்கள் உண்டு. முன்னெச்சரிக்கையே இதற்கு முக்கியம். ●

## தில்லையாடி வள்ளியம்மை நினைவகத்தை மேம்படுத்திட ரூ.5.91 இலட்சம் அனுமதி

### முதல்வர் கலைஞர் ஆணை

தென்னாப்பிரிக்காவில் அண்ணல் காந்தியடிகளின் தலைமையில் இந்தியர்களுக்காக நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு தீரத்துடன் செயல்பட்டதன் காரணமாக காந்தியடிகளால் பாராட்டப்பட்ட பெருமைக்குரியவர் விடுதலைப் போராட்ட வீராங்கனை தில்லையாடி வள்ளியம்மை ஆவார். அவர் நினைவைப் போற்றும் வகையில் வள்ளியம்மை பிறந்த நாகப்பட்டினம் மாவட்டம், தில்லையாடி கிராமத்தில் 1971ஆம் ஆண்டில் முதல்வர் கலைஞர் அவர்கள் தகுந்த நினைவுச் சின்னம் ஒன்றை அமைத்தார்கள். அந்த நினைவுச் சின்னத்தைப் பின்வந்த ஆட்சியாளர்கள் உரிய முறையில் பராமரிக்காமையினால், அது இன்று பழுதுற்று, முற்றிலுமாகப் பொலிவிழந்து சிதிலமடைந்த நிலையில் உள்ளது.

இந்திய விடுதலையின் பொன்விழாவைக் கொண்டாடும் வேளையில், அந்த விடுதலைப் போராட்ட வீராங்கனை தில்லையாடி வள்ளியம்மையின் நினைவகத்தைப் புதுப்பித்துச் சீரமைத்து மேம்படுத்துவதற்காக முதல்வர் கலைஞர் அவர்கள் 5 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாயை அனுமதித்து ஆணையிட்டுள்ளார்கள்.

**சொறி வருவதற்கான காரணம்**

**ஒட்டுண்ணி மற்றும் நுண் கிருமி (PARASITE) :**

**பரவும் விதம் :** ஒருவரிடமிருந்து அடுத்தவர்க்கு மிகவும் நெருக்கமாக இருப்பதனால் ஆண், பெண், சிறுவர், முதியவர் யாவருக்கும் வரலாம். முக்கியமாக சுகாதாரக் குறைவும் வியாதி பரவக் காரணமாகும்.

**இதற்கான அறிகுறிகள்:** அரிப்பு, தாங்கமுடியாத, தூங்கவிடாத, சொறிந்து கொண்டே இருக்கும்படியான, அரிப்பு - உடல் பூராவும் அரிப்பு இருக்கும்.

விரல் இடுக்குகளில் (கை, கால்) கைமுட்டியில், மார்புகளில், தொடையில், புட்டங்களில் இப்படி வரும். முதலில் நுண்ணிய கட்டி வரும். பின் அவை கொப்புளங்களாக மாறி, சீழ் பிடித்துக் காணப்படும். இந்த பாகங்கள் தவிர- குழந்தைகளுக்கு முகம், தலை, பாதம் ஆகிய இடங்களில் நுண்ணிய கட்டிகளாக வரலாம்.

தோல் பாதிக்கப்பட்ட இடத்தை அதன்மேல் தோலைச் சிறு கீறலாக எடுத்து நுண்ணோக்கியில் பார்த்தால் அந்தக் கிருமியையோ, அதன் பாகங்களையோ காணலாம். கால்கள் தலை எலும்பு ஆகியவை தெரியும்.

மேலும், இவ்வாறான அறிகுறிகளை வைத்தே கண்டுபிடித்துவிடலாம்.

***சிகிச்சை :*** வயதுக்கேற்ற படி, நோயின் நிலைக்கேற்றபடி இதற்குச் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். முக்கியமாகத் தோலில் தடவும் மருந்தும், அரிப்பு நிறுத்தும் மருந்தும் (சல்பர்) கந்தகம் கலந்த கிரீம், ஆயின்மெண்ட், பசைகள் மிக உபயோகமானவை. அவையில்லாமல் பென்சைல், பென்சோயேட், காமாபென்சின், எவித்சா குளோரைடு முதலியவை இதற்கு நன்றாகப் பயனளிக்கும். இந்த மருந்துகளை நன்றாக சோப்பு போட்டுத் தேய்த்துக் குளித்தபின்தான் - பாதிக்கப்பட்ட பின்தான் தடவ வேண்டும்.

விடாமல் 3 நாட்கள் பகல் - இரவு இருவேளையும் தடவலாம். மருந்து தோலில் இருந்துகொண்டே இருக்கவேண்டும்.

கட்டிகள், கொப்புளங்கள் இருந்தால் அதற்கான ஆண்டிபயாடிக் கொடுக்கவேண்டும்.

சொறி நோயானது சுகாதார குறையைக் காட்டுகிறது. விரைவில் எளிதில் ஒட்டிக்கொள்கிறது. முக்கியமான சில வியாதிகள் வர இது காரணமாகும். மேலும் நுண் கிருமிகள் தாக்கப்பட்டு பெரிய கட்டிகள் கரப்பான் வர ஏதுவாகி, பின் முக்கிய உறுப்பான சிறுநீரகம் கூட இதனால் பாதிக்கப்படலாம். மேலும், சரிவர சிகிச்சை அளிக்காவிட்டால் உடல்பூராவும் வெந்து, தோல் உரிந்து சிக்கலான நிலை வரலாம்.

வீட்டில் வளர்க்கப்படும் நாய்களின் மூலமும் இப்படி வரலாம். ஆனால் அது சிறிது வித்தியாசப்படும். சொறி வியாதிகளிலும் இவ்வாறு பலவகை உண்டு.

***சிரங்கு:*** பொதுவாகக் குழந்தைகளுக்கு, முகத்திலும், கை கால்களிலும் வருவது.

***காரணம்:*** பாக்டீரியா, நுண்கிருமிகள் (தோலில் நுழைவதால் வரலாம்)

***அறிகுறி:*** முதலில் சிவந்த நீர் கொப்பளமாகி, பின்பு சீழ் வைத்து உடைந்து, சீழ் ரத்தம் கலந்த திரவமாக வெளிப்படும்; லேசான அரிப்பு எரிச்சல் உண்டு. மேலும், வீக்கமும் காணப்படலாம்.

இதிலிருந்து விடுபட கிருமி நாசினிகள், தடவி, நன்றாகச் சுத்தப்படுத்த வேண்டும். ஆண்டிபயாடிக் கொடுக்கப்படலாம்.

**முக்கியத்துவம் :** எளிதில் ஒட்டிக்கொள்ளும். அதிக வீக்கம் வந்து கிருமிகள் ஆழமாகச் சென்று பெரிய கட்டிகள் வரலாம். தழும்பு இருக்காது. மயிர்க்கால்களிலும் சிரங்கு மாதிரி வரலாம். சிரங்கினாலும் உடல் உள் உறுப்புகள் பாதிக்கப்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது.



**கரப்பான் (எக்ஸிமா) :** தோல், மேல்தோல், நடுத்தோல் பலவிதக் காரணங்களால் வெந்துபோய், நீர் கசிந்து வீக்கத்தோடு சில இடங்களில் காணப்படும். இது வரப் பல காரணங்கள் உண்டு.

தோலில் உள்ள சில திரவங்கள் அதிகமாகி பொடுகு போன்ற நிலை ஏற்பட்டு அது கரப்பான் ஆகலாம். அதுபோல் சிலருக்குப் பரம்பரை தோல் கரப்பான் வரலாம். தோல் காய்ந்து போய் வறட்சியினால் வரலாம்.

மருந்துகள் ஒவ்வாமையினால் (Allergy) வரும். மேலும் வெயிலினால் அரிப்பு வந்து, தோல் சிவந்து சில சமயம் வெந்து, போய் கரப்பான் வரலாம். சில குறிப்பிட்ட தாவரங்களின் இலை திரவம் படும் இடங்களில் வரும்.

முக்கியமாக நம் ஆடை, அலங்காரப் பொருள்கள், சென்ட்,லிப்ஸ்டிக், மை, நகப்பூச்சு, டை (சாயம்) தோல் பொருட்கள், கைக்கடிகாரம், கண்ணுக்கு அணியும் கண்ணாடியின் பாகங்கள், பிளாஸ்டிக், ரப்பர் சில உலோகங்கள், இவை தோலில் பட்டால் அந்தப் பொருட்களால் ஒவ்வாமை ஏற்பட்டு, அந்த பாகங்களில் அரிப்பு ஏற்பட்டு கரப்பான் உண்டாகும்.

ஆக, கரப்பான் வர இப்படிப் பல காரணங்கள் உண்டு. ஆனால் எல்லா வகைக் கரப்பான்களிலும் பொதுவாக அதிக அரிப்பு, எரிச்சல், தண்ணீர் கசிதல், சில சமயம் வீக்கம் காணப்படும். பின்பு, தோல் சிறிது உலர்ந்து விரியும்.



**இதற்கான சிகிச்சை:** நீர் கசியும் போது உலர்த்துவதற்கான லோஷனைத் தடவலாம்; அரிப்பைக் கட்டுப்படுத்த மாத்திரை சாப்பிடலாம். வீக்கத்தைத் தடுக்கவோ, குறைக்கவோ ஆண்டிபயாடிக் எடுத்துக் கொள்ளலாம். உலர்ந்த பின்பு கிரீம் தடவலாம்.

காரணம் கண்டு அதைச் சரி செய்யாவிடில், வேறு நோயில் சிக்க நேரிடும். திரும்பத் திரும்ப வரவும் வாய்ப்புண்டு.

**சேற்றுப்புண் :** இதற்கான காரணம், தொடர்ச்சியாகத் தண்ணீரில் வேலை செய்தல்; தண்ணீரில் உள்ள கிருமிகள்,



ஒட்டுண்ணிகள், காளான்களால் கால் கைகளில் வரலாம். விரல் இடுக்குகள், பாதம், ஓரங்கள் ஆகியவை இதனால் பாதிக்கப்படும்.

இதனால் அரிப்பு, தோல் உரிதல், சிவந்து ஊறிப்போய் காணப்படும், அல்லது குழி குழியாகப் பாதங்களில் காணப்படும். தோல் காய்ந்து போய் சிலசமயம் படை மாதிரியும் காணப்படும் அல்லது நீர்க் கொப்புளங்கள் வரும். பின் உடைந்து, தண்ணீர் வரும். நுண் கிருமிகளால் தாக்கப்பட்டு வீக்கம் வரவும் வாய்ப்புண்டு.

அரிப்புக்கு மருத்துவர் தரும் மாத்திரைகள் சாப்பிடலாம். தோல் உலர்ந்து காணப்பட்டால் தோலை மிருதுவாக்க எண்ணெய் தடவலாம். மேலும் கிரீம்கள், அதற்கேற்ற மருந்து தடவி தகுந்த மாத்திரைகள் சாப்பிட வேண்டும். முக்கியமாகத் தோல் உலராமல், அதேநேரம் அதிகம் ஈரத்தில் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**நகசுத்தி :** இது ஒரு மிகவும் முக்கியமான வியாதி. தொடர்ச்சியாகத் தண்ணீரில் வேலை செய்வது, விரல் நகங்கள், கால் விரல் நகங்கள் சுற்றியும் உள்ள சதைகள் வீங்கி வலியுடன் இது காணப்படும். ஒரு விரல் அல்லது அதிக விரல்களில் கூட இப்படி காணப்படும். நாளாக ஆக நகம் வீணாகி விடும். இந்த நிலையிலும் தண்ணீரில் உள்ள நுண்கிருமிகள் ஆகியவைகளால் தாக்கப்படலாம்.

விரலில் நகசுத்தியால் அதிகவீக்கம் இருப்பின், ஆன்டிபயாடிக், ஆன்டிசெப்டிக் கிரீம் தடவ வேண்டும்.

தண்ணீரில் அதிக வேலை செய்தல், கை ஈரமாக வைத்திருப்பது ஆகியவையே இது வர முக்கியக் காரணம். Bakery - உணவு விடுதிகளில் அதிகம் காணப்படும். இதற்காகக் கைஉறை அணிவது மட்டுமே போதுமானதல்ல. இது நீரிழிவு நோயின் அறிகுறியாகவும் இருக்கலாம்.

**வெடிப்புகள்:** மேல்தோல் சிறிது வெடித்து, பிளந்து நடுத்தோல் தெரியும் அல்லது இன்னும் ஆழமான புண்ணாக ஏற்படலாம்.

இதற்கு முக்கியக் காரணம் தோல் உலர்ந்து காய்ந்து ஈரப்பசை இல்லாமலும் இருப்பது.

உலர்ந்த தோல் பல வகையான காரணங்களால் காணப்படலாம். தோல் அதிகம் உராய்வதினால் வெடிப்பு ஏற்படலாம். முக்கியமாகப் பாதங்கள், குதிகால்கள், பாகங்களின் ஓரங்களில் காணப்படும் (நடப்பது அதிக உராய்தல் தரும் வேலைகள் போன்றவை). பரம்பரை உலர்ந்த தோல் காரணமாக வெடிப்பு காலில் பலபேருக்கு உண்டு. ஆனால் சிலருக்கு ஆழமாகிப் புண்ணாகலாம். ஆகையால் இதற்குச் சிகிச்சை பெறுவது முக்கியமானது.

எண்ணெய்ப் பசை தரும் கிரீமைப் பாதிக்கப்பட்ட இடத்தில் தடவ வேண்டும்.

அதிகம் நடப்பதைத் தவிர்க்க வேண்டும். தகுந்த காலணிகள் சிறந்த தடுப்புச் சாதனம் ஆகும்.

சில தோல் நோய்கள் காலில் மட்டுமின்றிக் கைகளில் வெடிப்புகளுடனும் காணப்படும். இதற்கு ஆனாலோர் மருத்துவரை அணுகவேண்டும்.

**வேர்க்குரு:** இது யாவரும் அறிந்ததேயாகும்.

அதிக உஷ்ணம், வெப்பம், வெயில், வியர்வை, நுண்ணிய கட்டிகள் ஆகியவைகளே இவை. எல்லா வயதிலும் வரலாம். மூடிய பாகங்களிலும், உடையினால் மூடப்படாத பாகங்களிலும் இப்படி வரலாம். இதனால் எரிச்சல், அரிப்பு உண்டாகி தோல் சிவந்து காணும்.

நம் உடலில் அதிக முக்கியப் பாகமாக உள்ளவை வியர்வை சுரப்பிகள். அவை நம் உடலின் சீதோஷ்ண நிலையை நிலையாக வைத்துக்கொள்ள உதவுவதாகும். இப்படி வியர்வை என்னும் தண்ணீர் போன்ற திரவத்தால் அதிக வெப்ப நாட்களில் அதிக வியர்வை வெளியாகும். இதனால் அந்த வியர்வை சுரப்பிகளின் நாளங்களில் வியர்வை தங்கி அடைப்பட்டுக் கட்டிகளாக வெளிப்படும்.

இதனால் ஏற்படும் எரிச்சல் அரிப்பு குறைக்க, லோஷன் அல்லது மாத்திரைகள் உபயோகிக்க வேண்டும். காற்றோட்டமான சூழ்நிலை இதைத் தவிர்க்க அவசியம். தினமும் குளிப்பதும், பழம் அதிகம் சாப்பிடுவதும் நல்லது.

சிலசமயம் தட்டம்மையோ அல்லது ஒவ்வாமை நோயோ என்று நினைக்கத் தோன்றும். உடம்பு முழுவதும் இதனால் பாதிக்கப்பட வாய்ப்புண்டு. தோல் உரியலாம். வேர்க்குருகள் கட்டிகளாக மாறலாம். பெரிய கட்டிகளாகவும் வரலாம். சீழ் பிடித்து தானாக உடைந்தும் கொள்ளலாம்.

***தேமல்/படை:*** இவை தோலில் சிறு சிறு திட்டுகளாக, நிறம் மாறி தோல் உரிந்து காணப்படும். அவைகள் மிக அதிகமாகக் காணப்படும்.

**இதற்குக் காரணம் :** ஒட்டுண்ணிகளினால் வருபவை. காளான்கள் தண்ணீரிலோ, அல்லது ஈரமான மண், சிலவகை பிராணிகளிலிருந்தும் இது ஒட்டிக்கொள்ளும்.

# கால்நடைப் பராமரிப்பு - ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள்!

கால்நடைப் பராமரிப்புத் துறையின் கீழ் இயங்கும் திட்டங்களைச் செயல்படுத்துதல், மேற்பார்வை செய்தல், ஆய்வு செய்தல் ஆகியவை தொடர்பான பின்வரும் அதிகாரங்களை ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், மாவட்ட ஊராட்சிகளுக்கும் வழங்கிட முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள்:**

1. கால்நடை துணை மையங்களில் வெளிநாட்டு உதவிபெறும் திட்டத்தின் மூலம் செயற்கை முறையில் இனப்பெருக்கம் செய்யும் திட்டத்தின் பயனாளிகளைத் தெரிவு செய்தல்.
2. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உறைவிந்து வசதிகள் அளிக்கப்படுவதில் பயனாளிகளைத் தெரிவு செய்தல்.
3. கிராம அளவில் கால்நடை மற்றும் கோழியினக் கண்காட்சிகளை நடத்துதல்.
4. இறைச்சிக் கொட்டில்களைப் பராமரித்தல்.
5. செம்மறியாடு வளர்ப்பதற்காகச் சிறு விவசாயிகள் மற்றும் குறு விவசாயிகளுக்கு நிதியுதவி வழங்க பயனாளிகளைத் தெரிவு செய்தல்.
6. பன்றி வளர்ப்புத் திட்டத்திற்குரிய பயனாளிகளைத் தெரிவு செய்தல்
7. விலங்குகள், பறவைகள் வழங்கப்படும் திட்டத்திற்குரிய பயனாளிகளைத் தெரிவு செய்தல்.
8. முயல் வளர்ப்பு கோழி வளர்ப்புக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்திற்குரிய பயனாளிகளைத் தெரிவு செய்து, அத்திட்டத்தைச் செயற்படுத்துதல்.
9. மேய்ச்சல் நில மேம்பாட்டு நிதியுதவித் திட்டத்திற்குரிய பயனாளிகளைத் தெரிவு செய்தல்.
10. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தரமான கறவை மாடுகள் வழங்கும் திட்டத்திற்குரிய பயனாளிகளைத் தெரிவு செய்தல்.
11. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் திட்டப் பணிகளில் பயனாளிகளைத் தெரிவு செய்தல்.
12. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும் திட்டப் பணிகளில் பயனாளிகளைத் தெரிவு செய்தல்.

**ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள்**

1. கால்நடை துணை மைய மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகளைச் செயற்படுத்தலும், பார்வையிடுதலும்.
2. கால்நடைத் துணை மையங்களில் வெளிநாட்டு உதவி பெறும் திட்டத்தின்கீழ் செயற்கை முறையில் இனப்பெருக்கம் செய்யும் திட்டத்தைச் செயற்படுத்துதல், பார்வையிடுதல், மேற்பார்வை செய்தல்.
3. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உறைவிந்து வசதிகள் வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்துதல்.
4. கிராம அளவில் நடத்தப்படும் கால்நடை மற்றும் கோழியினக் கண்காட்சிகளை மேற்பார்வை செய்தல்.
5. இறைச்சிக் கொட்டில்களைப் பராமரித்தல்.
6. செம்மறியாடு வளர்ப்பதற்காகச் சிறு விவசாயிகள் மற்றும் குறு விவசாயிகளுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்துதல்.
7. பன்றி வளர்ப்புத் திட்டத்தைச் செயற்படுத்துதல்.
8. விலங்குகள், பறவைகள் ஆகியவற்றை வழங்கும் திட்டத்தினைச்செயல்படுத்துதலும், பராமரித்தலும்.
9. முயல் வளர்ப்பு கோழி வளர்ப்புக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்துதல்.







10. மேய்ச்சல் நில மேம்பாட்டு நிதியுதவித் திட்டத்தைச் செயற்படுத்துதல்.
11. பால்பண்ணைக் கூட்டுறவுச் சங்கங்களை மறு ஆய்வு செய்தல்.
12. ஒருங்கிணைந்த பால்பண்ணை மேம்பாட்டுத் திட்டங்களை மறு ஆய்வு செய்தல்.
13. தரமான கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தை மறு ஆய்வு செய்தல்.
14. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் திட்டப் பணிகளைப் பார்வையிடுதலும், மேற்பார்வை செய்தலும், மறு ஆய்வு செய்தலும்.
15. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் திட்டப்பணிகளைப் பார்வையிடுதலும், மேற்பார்வை செய்தலும், மறு ஆய்வு செய்தலும்.

**மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள்**

1. கால்நடைத்துணை மையம், மருந்தகம் மற்றும் மருத்துவமனைகளை மேற்பார்வை செய்தலும் மறு ஆய்வு செய்தல்
2. வெளிநாட்டு உதவி பெறும் திட்டத்தின் கீழ் கால்நடைத் துணை மையங்களில் செயற்கை முறையில் இனப்பெருக்கம் செய்யப்படும் திட்டத்தை மறு ஆய்வு செய்தல்.
3. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உறைவிந்து வசதிகள் வழங்கும் திட்டத்தை மேற்பார்வை செய்தலும், மறு ஆய்வு செய்தலும்.
4. மாவட்ட அளவில் கால்நடை மற்றும் கோழியினக் கண்காட்சி நடத்தும் திட்டத்தைச் செயற்படுத்துதலும், மறு ஆய்வு செய்தலும்.
5. இறைச்சிக் கொட்டில் பராமரிப்புப் பணிகளை மேற்பார்வை செய்தலும், மறு ஆய்வு செய்தலும்.
6. செம்மறியாடு வளர்ப்பதற்காகச் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நிதியுதவி வழங்கப்படும் திட்டத்தை மேற்பார்வை செய்தலும், மறு ஆய்வு செய்தலும்.
7. பன்றி வளர்ப்புத் திட்டத்தை மேற்பார்வை செய்தலும், மறு ஆய்வு செய்தலும்.
8. விலங்குகள், பறவைகள் வமங்கும் திட்டத்தை மேற்பார்வை செய்தலும், மறு ஆய்வு செய்தலும்.
9. ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை கால்நடை குறித்த கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்படும் திட்டத்தை மேற்பார்வை செய்தலும், மறு ஆய்வு செய்தலும்.
10. முயல் வளர்ப்பு கோழி வளர்ப்புக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தை மேற்பார்வை செய்தலும், மறு ஆய்வு செய்தலும்.
11. மேய்ச்சல் நில மேம்பாட்டுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தைப் பார்வையிடுதல்.
12. பால்பண்ணைக் கூட்டுறவுச் சங்கங்களை மறு ஆய்வு செய்தல்.
13. ஒருங்கிணைந்த பால்பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தை மறு ஆய்வு செய்தல்.
14. தரமான கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தை மறு ஆய்வு செய்தல்.
15. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும் திட்டப் பணிகளை மறு ஆய்வு செய்தல்.
16. மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும் திட்டப்பணிகளை மறு ஆய்வு செய்தல்.

**முதல் அட்டை :**

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவராகப் பதவியேற்கவுள்ள திரு. கே.ஆர். நாராயணன் அவர்களை, புதுதில்லியில் 24.7.1997 அன்று அவரது இல்லத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சந்தித்து, பொன்னாடை மற்றும் சந்தன மாலை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

**2ஆம் அட்டை :**

கால்நடைகள் (கட்டுரை உள்ளே)

**4ஆம் அட்டை :**

இந்திய சுதந்திரத் திருநாள் பொன்விழாவினையொட்டி தேசிய கவி பாரதியார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : ரா. சிவகுமார், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 568926, 568927

ஆசிரியர் மடல்

# நெஞ்சில் உரமுமின்றி...

கனியைச் சுவைத்திடும்போது, அதன் விதை கடிபடுமானால் அந்தக் கசப்பு நமக்குள் சற்றே நெருடலைத் தான் உண்டாக்கும்; அதைப் போல, அங்கொன்று இங்கொன்றாக நடைபெறும் சாதிமதக் கலவரங்கள் - சுதந்திர தினப் பொன்விழாவை மகிழ்ந்து கொண்டாடவிருக்கும் நமக்குள் ஒருவித மனப் புழுக்கத்தை உண்டாக்கத்தான் செய்கின்றன.

சுதந்திரக் கனல் மூண்டெழுந்த அக்காலத்தில், அறப்போராட்டத்தை அறிவித்த காந்தியடிகளும், மற்ற தலைவர்களும், போராட்டத்திற்கு முதல் நாளே பிடித்துச் சிறை வைக்கப்பட்டார்கள். அதன் காரணமாக நாடெங்கும் வன்முறை மூண்டது; இதனையறிந்த காந்தியடிகள் 'போராட்டத் திட்டத்தை வகுத்தேனே தவிர, போராடத்தக்க மனப்பக்குவத்தை மக்களிடம் உண்டாக்கத் தவறி விட்டேனே!' என்று மிகவும் வருத்தத்தோடு அறிக்கை வெளியிட்டார்; உண்ணாவிரதமும் இருந்தார்.

சாதாரணமாக இருந்த காந்தியடிகள் - மகாத்மாவாக, இவ்வாறான சம்பவங்களும் காரணம்!

அமைதிப் பூங்காவாக இருக்கின்ற தமிழ்நாட்டில் - 'யாராவது தீ மூட்டட்டும்; நாம் குளிர் காயலாம்...' 'ஊரார் தோளில் ஏறித் திருவிழாக் காணலாம்...' 'அடுத்தவர் தொடையில் கயிறு திரிக்கலாம்...' 'எவருக்காவது கொம்பு சீவி, குத்தவிட்டு வேடிக்கைப் பார்க்கலாம்...' என்பது போலெல்லாம் சிலர் செயல்படுவதை அறிகின்றபோது 'நெஞ்சில் உரமுமின்றி...' என்கிற பாரதி பாடல்தானே நமக்கெல்லாம் நினைவுக்கு வருகிறது?






ந்திரத் திருநாள்
பொன்விழாச் சிறப்பிதழ்
50
15செப்1997
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
தமிழரசு
ஆகஸ்ட் 16-31, 1997 ரூ.3





## இந்த இதழில்...


நல்லோர் வழியில் நடைபோடுவோம் ... 2
தியாகத்தைப் போற்றிடுவோம் ... 9
- முதல்வர் கலைஞர்
மகாத்மா காந்தி - முதல் டாக்குமெண்டரி ... 14
- சா. கந்தசாமி
எங்கும் விடுதலை - எதிலும் விடுதலை ... 17
- சிலம்பொலி செல்லப்பன்
சுதந்திர இந்தியா ... 20
- முனைவர் நாகநாதன்
ராஜா ராம்மோகன் ராய் ... 23
விடுதலை இயக்கப் பாடல்கள் .... 25
- சிலம்புச்செல்வர் ம.பொ.சி.
ஜீவா சொன்ன தேசபக்திக் கதை ... 30
- முக்தா சீனிவாசன்
வாழ்க்கை முகவரி-கவிதை .... 32
- ஈரோடு தமிழன்பன்
தமிழகத்தில் நேரு ... 34
விடுதலைப் போரில் வீராங்கனைகள் ... 36
செக்கிழுத்த செம்மலின் செந்தமிழ்த்தொண்டு ... 41
காங்கிரஸ் தலைவர் பெரியார் ... 44
-சாமி. சிதம்பரனார்
தியாக தீபம் ... 49
நல்லிரவாகிய நள்ளிரவு .. 51
மகாகவிகளின் மறதிகள் ... 54
- பிரபஞ்சன்



**தமிழரசு**

திருவள்ளுவராண்டு - 2028

ஆகஸ்ட் 16-31, 1997

மலர் : 28 இதழ் : 4

விலை: ரூ.3

# நல்லோர் வழியில் நடைபோடுவோம்

## முதல்வர் கலைஞர்

சுதந்திரத் திருநாளில், ஆகஸ்டு 15-ஆம் நாள் - தேசியக் கொடியேற்றும் உரிமை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில முதலமைச்சர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென மத்திய அரசுடன் வாதாடி, இந்தக் கோட்டைக் கொத்தளத்தில் 23 ஆண்டுகளுக்கு முன்பு, 1974ல் மகிழ்ச்சியுடன் இந்த மணிக்கொடியை ஏற்றிவைத்திடும் வாய்ப்புப் பெற்றிருந்த எனக்கு, இப்போது சுதந்திர நாள் பொன்விழா ஆண்டிலும் இந்தக் கொடியை ஏற்றிவைக்கும் பெரும் பேற்றினை வழங்கியுள்ள தமிழ்த் திருநாட்டு மக்கள் அனைவருக்கும் என் இதயமார்ந்த நன்றியையும் - பணிவு மிகுந்த வணக்கத்தையும் - பாசம் நிறைந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் அன்னைத் திருநாடு, அடிமை விலங்கை உடைத்தெறிந்து விடுதலை பெற்று ஆயிற்று ஐம்பது ஆண்டுகள் - எனினும்; இன்னமும் நாம் முழுமையான சுதந்திர விடியலை எதிர்பார்த்து வைகறைப் பொழுதிலேதான் இருக்கிறோம் என்பதை மறந்து விடுவதற்கில்லை.

விடுதலை வேட்கை கொண்ட வீரன் ஒருவனைப் பார்த்து வெள்ளைக்கார துரையொருவன்,

**"தொண்டு செய்யும்**
**அடிமை - உனக்குச்**
**சுதந்திர நினைவோடா?**
**பண்டு கண்டதுண்டோ**
**- அதற்குப்**
**பாத்திர மாவாயோ?**
**ஜாதிச் சண்டை**
**போச்சோ? - உங்கள்**
**சமயச் சண்டை**
**போச்சோ?**
**நீதி சொல்ல வந்தாய்**
**- கண்முன்**
**நிற்கொணாது போடா!"**

-என்று கூறியதாகப் பாரதியார் பாடினாரே; அந்தப் பாட்டு இந்தச் சுதந்திரப் பொன்விழா ஆண்டிலும் பாடப்பட வேண்டிய நிலை இருப்பதை எண்ணிடும்போது புண்ணில் வேல்பட்டது போன்ற துடிதுடிப்பும் துன்பமுமன்றோ நம்மைத் துளைத்தெடுக்கிறது!

நினைத்துப் பார்க்க வேண்டாமா; நம் நெஞ்சில் நிழலாட வேண்டாமா; தமதுடலைக் குருதியில் நனைத்து உயிர் மூச்சை சுதந்திரக் கொடி பறந்திட காற்றாக வழங்கிய தியாகத் திருவிளக்குகள் எத்தனைப் பேர், இந்த நாட்டு விடுதலைக்கு அடித்தளமாக அமைந்துள்ளனர்!

தென்னாப்பிரிக்காவில் இனவெறி எதிர்ப்புப் போராட்டத்தில் தன்னுடன் சிறையேகி மாண்டுவிட்ட மகளிர்குல இளம் மணிச்சுடர் தில்லையாடி வள்ளியம்மாளின் தியாகம்தான்; இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்திற்கான உணர்வைத் தனக்கு எழுப்பியது என்றுரைத்த உத்தமர் காந்தியடிகளின் தலைமையில் பெற்ற சுதந்திரத்திற்குப் பொன்விழா - சுதந்திரம் வாங்கித் தந்தவருக்கே என்ன பரிசளித்தது இந்த நாடு!

"என்னைப் பற்றிக் கவலையில்லை - நான் வாங்கித் தந்த சுதந்திரத்தையாவது காப்பாற்றுங்கள்" என்ற வேண்டுகோளுடன் தானே காந்தியடிகள் கடைசியாகக் கண் மூடியிருப்பார்!





அதை நினைத்தாவது நாம் பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்திட இந்நாளில் உறுதி பூணுவோம்.

சுதந்திரமுடன் இயங்கிடும் எத்தனையோ நாடுகளின் நிலையோடு ஒப்பிடுகையில் நமது இந்திய நாட்டு நிலைமை, முற்றிலும் வேறுபட்டது. ஊட்டச்சத்து வாய்ந்த உணவுதான் குழந்தைகளுக்கு வழங்கப்பட வேண்டுமென வேறு நாடுகளில் அறிவுரைகள் செயல் வடிவம் பெறுகின்றபோது, எந்தச் சத்து பற்றியும் கவலை இல்லை, எதையாவது போட்டு, கத்துகிற வயிறை அடைப்பதற்கு உணவு என்ற பெயரால் ஒரு பொருள் கிடைக்குமா என ஏங்குகின்ற ஏழைகள் இங்கே அங்கிங்கெனாதபடி அலைந்து கொண்டிருக்கின்றனர்.

காயும் கதிரவனை மறைக்கக் கையையே குடையாகக் கொண்டும், மழையில் ஒதுங்க மரத்தடியையே மாளிகையாகப் பாவித்தும் நமது மக்கட் தொகையில் பெரும் பகுதியினர் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆண்டவனின் புத்திரர்கள் என்று அன்பொழுக அழைக்கப்படுகிற அரிஜனங்கள் எனப்படும் ஆதிதிராவிடர் லட்சோப லட்சம் பேர் வாழுகின்ற வீடுகள் குக்கிராமத்துக் குப்பைத் தொட்டிகளாக இருக்கின்றன.

உணவு வழங்கும் உழவன்-மானங்காக்க உடை தரும் நெசவாளி - வியர்வைத் துளிகளை தன்னைப் பெற்றெடுத்த இந்திய மண்ணுக்குப் பன்னீர்த் துளிகளாகத் தெளித்துக் கொண்டிருக்கும் தொழிலாளி - சுரங்கம் தோண்டுவோன் - முத்துக் குளிப்போன் - மீனவன் - உலைக் கூடத்தில் வதைபடுவோன் - மண் சுமப்போன் - மரம் ஏறுவோன் - உடை வெளுப்போன் - முடி திருத்துவோன் - ஏதோ இரண்டெழுத்துப் படித்து எழுத்தர் பணி புரிவோன் - இன்னோரன்ன மக்கள் தொகுதியினர் வாழ்விலே இன்பத் தென்றல் வீசிடவில்லை. அதற்காக முயற்சிகள் எடுக்கப்படாமல் இல்லை. ஆனால் அந்த முயற்சிகள், முழுப் பயனையும் அளித்திடத் தக்க வண்ணம் அமைந்திடவில்லை. ஐந்து பேருக்காகத் தயாரிக்கப்படும் விருந்து, பரிமாறப்படுகிற நேரத்தில் பத்துப் பதினைந்து பேருக்கு என்ற நிலைபெற்று விடுமேயானால், அதனை அருந்தி மகிழ்வதில் முழுமை எப்படி இருந்திட இயலும்?

**"எல்லையுடைய புவியின்**
**மீது**
**எல்லையற்ற வளர்ச்சி,**
**சாத்தியமன்று"**

- என்பதை ஒவ்வொரு தனி மனிதனும் உணர்ந்து, அதற்கேற்ப நடந்தால்தான், வளர்ச்சித் திட்டங்களின் முழுப் பயனைச் சமுதாயம் பெற்றிட முடியும். எத்தகைய பொருளாதார முன்னேற்றத் திட்டங்களைத் தீட்டினாலும், கட்டுங்கடங்காத வகையில் மக்கட் பெருக்கம் செல்லுமேயானால், தீட்டப்பட்ட பொருளாதாரத் திட்டங்கள், காட்டில் காய்ந்த நிலவாகத்தான் ஆகிவிடும்.

இத்துணை சிரமங்களுக்கிடையே மக்கட்பணி நடைபெறும்போது அரசின் முயற்சிகளைத் தகர்த்தெறியும் பொருளாதாரக் குற்றவாளிகள் - சமூக விரோதிகள், சாதி சமய வெறி பிடித்தோர்; எரியும் வீட்டில் பிடுங்கிய வரை ஆதாயம் என்பது போலத் தங்கள் கைவரிசையைக் காட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள். இந்த மக்கள் நல

விரோதிகளைத் தடுத்து நிறுத்த - அரசு எடுத்திடும் நடவடிக்கைகளில் பொது மக்கள் முழு ஒத்துழைப்பைத் தந்திட வேண்டும்.

கடத்தல்காரர் - கறுப்புப் பண முதலைகள் - வரி ஏய்ப்போர் - கலப்பட வணிகர் - பதுக்கல் மனிதர் - ஊழல் பெருச்சாளிகள் - வன்முறை விரும்பிகள் - இவர்களைச் சமுதாயத்தின் ஓர் அங்கம் என்று கூறக் கூட நா கூசுகிறது. சமுதாயத்தை அழிக்கும் புற்றுநோயாக அவர்கள் வளர்ந்து வருகிறார்கள். அந்தக் கொடிய நோய் தடுக்கப்பட - அதன் கோரப்பிடியிலிருந்து நமது மக்கள் விடுவிக்கப்பட சபதம் ஏற்கும் ஆண்டாக இந்தப் பொன் விழா ஆண்டு அமைந்திடல் வேண்டும்.

இருள் - மழை - புயல் இவற்றுக்கிடையே மின்னல் வெளிச்சத்தில் வழிதெரிந்து நடப்பதைப் போல இந்த ஐம்பதாண்டு காலமாக இடையில் வந்த நெருக்கடி நெருப்பாற்றையும் கடந்து நிற்பதுதான், நமது இந்திய நாட்டின் ஜனநாயகமாகும்.

ஒரு துணைக் கண்டம் எனக் கூறப்படும் இந்தப் பெரிய நாடு, பெரிய ஜனநாயக நாடாகவும் திகழ்ந்து, மற்ற பல நாடுகளுக்கு மத்தியில் தனது மதிப்பை உயர்த்திக் கொண்டிருப்பதை இந்தப் பொன் விழா ஆண்டில் நினைத்துப் பூரிப்புக் கொள்கிறோம்.

மக்களாட்சியின் மாண்புக்குத் தமிழகத்தில் சங்க காலத்திலேயே அடையாளம் உண்டு என்பதை நமது இலக்கியங்கள் அறிவிக்கின்றன. ஊராட்சித் தலைவர்கள் மக்களால் தேர்வு செய்யப்பட்டதை உத்திரமேரூர் கல்வெட்டு தெரிவிக்கிறது.

உள்ளாட்சி மன்றங்களில் ஊனமுற்றிருந்த ஜனநாயகத்தைக் குணப்படுத்தி, கடந்த ஆண்டு நடமாட வைத்த பெருமை உங்களால் உருவாக்கப்பட்ட இந்த அரசுக்கு உண்டு. அந்த உள்ளாட்சிகளுக்குத் தேவையான நிதியும் - போதுமான அதிகாரப் பொறுப்புகளும் படிப்படியாக வழங்கப்பட்டு வருகின்றன.

கிராமங்கள்தான் நாட்டின் முதுகெலும்பு என்று காந்தியடிகள் சொன்ன வாசகத்தை மறவாமல் - நாடு, நகரம், கிராமம், குக்கிராமம், பட்டி தொட்டி அனைத்திலும் இந்த அரசின் பணிகள் பரவலாக நடைபெறுவதற்கு கட்சிச் சார்பற்ற முறையில் அனைத்து மக்களின் அன்பான ஆதரவும் வேண்டப்படுகிறது.



அடிப்படை வசதிகளான பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர், சாலை வசதி, மின்சாரம், மருத்துவ வசதி, உணவு, உடை, உறையுள் போன்ற மக்களின் குறைந்தபட்சத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும் என்ற குறிக்கோளை நோக்கித்தான் இந்த அரசின் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

தியாகங்கள் பல செய்து இந்தத் திருநாட்டை மீட்டவர்கள் - நாட்டின் நலிவு போக்க நாளும் உழைத்திடும் நல்லவர்கள் - அனைவரும் காணும் கனவுகளை நிறைவேற்றிடத் தொடர்பயணம் மேற்கொண்டிருக்கும் நாம், அந்தத் தியாக சீலர்களைப் போற்றிப் புகழ்வதுடன் நில்லாமல், அவர் தம் வாழ்வில் வறுமைத் தேள் கொட்டாமலும் பாதுகாத்திடும் பொறுப்பையும் ஏற்றுள்ளோம்.

அந்தத் தியாகிகளின் ஓய்வூதியமாக மாதம் ஆயிரத்து ஐநூறு ரூபாய் வழங்கிவருகிறது தமிழக அரசு!

சுதந்திரம் அடைந்த ஐம்பதாம் ஆண்டு பொன் விழா நினைவாக - இனிமேல் விடுதலைப் போர் தியாகிகளுக்கு மத்திய அரசு இந்தப் பொன் விழா ஆண்டில் அறிவிக்கும் ஓய்வூதியப் பயன் எவ்வளவோ - அந்த அளவுக்குச் சமமான பயனை மாநில அரசு ஓய்வூதியம் பெறும் தியாகிகளும் பெற்றிட வழிவகை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியோடு இங்கே அறிவிக்கின்றேன்.

சிதம்பரனார் சிறையில் இழுத்த செக்கைத் தேடிக் கண்டுபிடித்து அதனைச் சென்னையில் காட்சிப் பொருளாக வைத்தது முதல்..... தியாகத் தலைவர்களின் நினைவாக எத்தனையோ செயல்களை ஆற்றியுள்ள இந்த அரசு;





ஆகஸ்டு 31 - மதுரையில் நடத்த இருக்கும் தீண்டாமை ஒழிப்பு மாநாட்டையொட்டி, அதே நாளில் தியாகச் செம்மல் முன்னாள் அமைச்சர் கக்கன் அவர்களின் சிலை யமைப்பு விழாவை நடத்த இருக்கிறது.

நீண்ட காலக் கோரிக்கையாக இருந்துவரும் விசுவநாததாஸ் அவர்கள் வாழ்ந்த மதுரை திருமங்கலம் இல்லத்தை அரசு நினைவகமாக இந்தப் பொன்விழா ஆண்டில் மாற்றிட இருக்கிறது என்பது மட்டுமல்ல; கட்டபொம்மன் வாரிசுகளுக்கும், மருதுபாண்டியர் வாரிசுகளுக்கும், சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கும் உதவிடுவது போல விசுவநாததாஸ் வாரிசுகளுக்கும் உதவிடும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுதந்திர தின வெள்ளி விழா 1972ஆம் ஆண்டு நான் அறிவித்தது போலவே; இந்தப் பொன்விழா ஆண்டிலும் சிறைவாழ் கைதிகளுக்குச் சலுகைகள் சிலவற்றை அறிவிக்கின்றேன்.

பத்தாண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றோருக்கு ஒன்றரை ஆண்டுக் காலத் தண்டனைக் குறைப்பு. இந்தச் சலுகை மூலம் 139 சிறைக் கைதிகள் விடுதலை பெறுவார்கள்.

ஐந்தாண்டுகளுக்கு மேல் பத்தாண்டுகளுக்குள் தண்டனை பெற்றோருக்கு ஓராண்டு காலம் தண்டனைக் குறைப்பு. இதன் மூலம் 24 கைதிகள் விடுதலை பெறுவார்கள்.

ஓராண்டுக்கு மேல் ஐந்தாண்டுகள் வரை தண்டனை பெற்றோருக்கு நான்கரை மாதம் தண்டனைக் குறைப்பு. இதன்வாயிலாக 64 சிறைக் கைதிகள் விடுதலை பெறுவார்கள்.

மூன்று மாதங்களுக்கு மேல் ஓராண்டு வரை தண்டனை பெற்றோர் பாதிக் காலத் தண்டனை அனுபவித்திருந்தால் மீதிக் காலத் தண்டனை குறைக்கப்பட்டு விடுதலையாவர். இதன்மூலம் 166 கைதிகள் விடுதலை அடைவார்கள்.

இதே கைதிகள் பாதிக் காலத் தண்டனை அனுபவிக்காமல் இருந்தால், அவர்களுக்கு மூன்று மாதம் தண்டனைக் குறைப்பு. இந்தச் சலுகை காரணமாக 72 கைதிகள் விடுதலை அடைவார்கள்.

மூன்று மாதமும் அதற்குக் குறைவாகவும் தண்டனை பெற்றோர் அனைவருமே விடுதலையாவர். இந்த வகையில் 89 சிறைக் கைதிகள் விடுதலை ஆவார்கள்.

எனவே தற்போது அறிவிக்கப்படும் இந்தச் சலுகைகளின் பலனாக 554 சிறைக் கைதிகள் உடனடியாக விடுவிக்கப்படுவதோடு, சுமார் 3,300 சிறைக் கைதிகள் தண்டனை குறைப்புப் பயனையும் அடைவார்கள் என்பதை இந்தப் பொன் விழா நாளில் அறிவிப்பதில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த அறிவிப்புகள் தேன் குடங்கள் அல்ல; வெறும் தேன்துளிகள்தான் என்பதை நானறிவேன்.

தாழ்த்தப்பட்ட மக்கள் - பிற்படுத்தப்பட்ட மக்கள் - மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் - நடுத்தர மக்கள் - அலுவலர்கள் - அனைத்துத் தொழிலாளர்கள் - எல்லோரது பிரச்சினைகளையும் மையமாக வைத்து, அரசின் சக்கரம் சுழல வேண்டுமென்ற அண்ணா அவர்களின் வழி நின்று, நாளும் செயல்படும் இந்த அரசு என உறுதி அளிக்கிறேன்.

நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை காத்து, தமிழர் கொற்றம் சிறக்கப் பணியாற்றுவோம்!

நாட்டுக்குழைத்த நல்லோர் வழியில் நடைபோடுவோம்!

உத்தமர் காந்தியடிகள் - உண்மையே கடவுள் என்றார்!

அறிஞர் அண்ணா - ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்றார்!

கைமாறு கருதாமல் கடமையைச் செய் என்றார் தந்தை பெரியார்!

உழைப்பே உயர்வு தரும் என்றார் பெருந்தலைவர் காமராசர்!

இவர்தம் எண்ணமெல்லாம் தமிழர் வாழ்வில் வண்ணமாகப் பொலிவுற, இந்தச் சுதந்திர பொன்விழா நாளில் தொண்டாற்ற தூய சபதம் ஏற்றிடுவோம்!

வணக்கம்.

***-சுதந்திரத் திருநாள் பொன் விழா (15.8.1997) அன்று, சென்னை புனித ஜார்ஜ் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மாண்புமிகு முதல் அமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை.***

# நேரு சகாப்தம்!

## தி. சு. அவினாசிலிங்கம்

நான் 1934ஆம் ஆண்டு மத்திய சட்டமன்றத்திற்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1946ஆம் ஆண்டு வரை அதன் உறுப்பினராகப் பணியாற்றி வந்தேன். 1946ஆம் ஆண்டில் நான் சென்னை மாநில சட்டமன்றப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, கல்வி அமைச்சராகவும் பணியாற்றினேன். 1951ஆம் ஆண்டில் நான் புதுடெல்லியில் நாடாளுமன்ற உறுப்பி னரானேன். பின்னர் 1964ஆம் ஆண்டு வரை மாநிலங்களவை உறுப்பினராக இருந்தேன்.

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் நான் பாரத நாட்டின் முதல் பிரதமரான பண்டித ஜவஹர்லால் நேருவைப்பற்றித் தெரிந்து கொள்ளவும், அவருடன் பழகவும் வாய்ப்பைப் பெற்றேன்.

நேருவும், சர்தார் வல்லபாய் பட்டேலும் சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் ஆற்றல் மிக்க இருமனிதர்கள் ஆவர். சர்தார் உயிருடன் இருக்கும்வரை, நேரு அவருடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டியதாயிற்று. இருவரும் நிறைந்த மன உறுதியையும், பேருக்கத்தையும் பெற்றிருந்தனர்.

அதே நேரத்தில், எதிர்கால நிலவரத்தைக் கணிப்பதிலும், மனப்பாங்கிலும் வேறுபட்டிருந்தனர். நேருவின் நிபந்தனையற்ற மதச்சார்பின்மையைக்கண்டு மகிழ்ச்சி அடையவோ, சமூகச் சீர்திருத்தங்களுக்காக அவர் கைக்கொண்ட தீவிரப் போக்கை ஆதரிக்கவோ சர்தாரால் இயலவில்லை. சர்தார் இரும்பு மனிதர்; விரைந்து செயலாற்றுபவர்; நேருவோ மென்மை யானவர்; விட்டுக்கொடுக்கும் தன்மை உடையவர்.

### சுதந்திரத்தின் பலன்

இந்தியாவை ஒருங்கிணைக்க சர்தார் இறுதி நடவடிக்கை எடுத்தபோது-அதாவது ஹைதராபாத்துக்கு எதிராக போலீஸ் நடவடிக்கை மேற்கொண்டபோது, அமைச்சரவையிலிருந்து பலருக்கு நடவடிக்கை முடியும்வரை அதுபற்றித் தெரியாது. நடவடிக்கை தொடங்கிய பிறகுதான், நேருவுக்கே தெரிவிக்கப் பட்டது. பல விஷயங்களில் நேருவுக்கும் சர்தாருக்கும் ஒருமித்த கருத்து நிலவவில்லை. அரசு நிர்வாகம் சுமுகமாக நடைபெறப் பலமுறை மகாத்மா காந்தியின் உதவியை நாடவேண்டியதாயிற்று.

ஆனால், மவுண்ட்பேட்டன் பிரபு கூறியதுபோல், இந்திய சுதந்திரத்தின் பலன்களை ஒன்றுசேர்க்க இருவருமே தேவைப்பட்டனர் என்றே குறிப்பிடலாம்.

1950ஆம் ஆண்டில் சர்தார் மறைந்தபிறகு, காங்கிரஸ் இயக்கத்திலும் சரி, நாடாளுமன்றத்திலும் சரி; அவருக்கு நிகரான பெருமையும், வல்லமையும் பெற்றவர்களோ, வழிநடப்பவர்களைக் கொண்டவர்களோ இல்லை. அதனால் நேரு ஒப்பற்ற தலைமை நிலையை எய்தினார். நேருவிற்கு மற்றொரு அனுகூலமும் இருந்தது. அதாவது, அப்போது, மாநிலங்களை ஆண்டுவந்த அனைத்து அரசுகளும் காங்கிரஸ் அரசுகளாக இருந்தன. ஆகவே, அவர் மத்திய அரசை நிர்வகித்ததோடல்லாமல், அனைத்து மாநிலங்களிலும் அவரது வாக்கு, சட்டமாக இருந்தது. ஆனால், அவர் மிகுந்த அதிகாரத்தைப் பெற்றிருந்த போதிலும், அவர் சமநிலையுடனும், மக்கள் போற்றும் வகையில் அடக்கத்துடனும் செயல்பட்டதால் தான் மங்காப் புகழைப் பெற்றார் என்றே சொல்லவேண்டும்.

### திட்டக் குழுவை அமைத்தல்



ஜவஹர்லால் நேரு திட்டமிட்ட வளர்ச்சியில் மிகுந்த நம்பிக்கை கொண்டவர். அதற்கான தூண்டுதலை அவர் ரஷ்யாவிடமிருந்து பெற்றார். எனவே, முதல் பாராளுமன்றத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் முதல் நடவடிக்கை இந்தியாவிற்குத் தேசியத் திட்டக்குழு அமைத்ததே ஆகும்.

அத் திட்டக் குழுவிற்குப் பிரதமர் தலைவர் ஆனார். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அரசுக் கொள்கையின் நெறிக்கோட்பாடுகளின் அடிப்படை நோக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ''மாநில அரசு, நீதி, சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகியவை அடங்கிய சமூக ஒழுங்கைப் பயனுள்ள வகையில் பாதுகாப்பதன் மூலம், மக்கள் நலனை மேம்படுத்த முயலுவதுடன், மக்களுக்கு அறிவுறுத்தவும் வேண்டும்" என்பது அடங்கும். மேலும் அரசு குறிப்பாக -



தமிழில் முதல் சுயசரிதையை எழுதியவர் பாரதியார். இதை 1910ல் கவிதையாக எழுதினார்.

அ. நாட்டு மக்களுக்கு-ஆடவர், பெண்டிர் அனைவருக்கும் சமநிலையில் வாழ்க்கை வசதிகளைப் பெறும் உரிமை கிடைக்கவும்.

ஆ. சமுதாயத்தின் வளவாயில்களின் உரிமையும், பொறுப்பும், பொதுமக்களின் நலனுக்குப் பெரிதும் பயன்படும் வகையில் பகிர்ந்தளிக்கப் படவும்.

இ. செயலிலுள்ள பொருளாதார முறை சொத்து ஓரிடத்திலேயே குவிந்து கிடக்கக் காரணமாகாத வகையிலும், உற்பத்தி வழிகள் பொதுமக்களைப் பாதிக்காத வகையிலும் இருக்கவும்...

நெறிமுறைக் கோட்பாடுகளை விதிக்கலாம்.

"திட்டமிடல்' என்பதில் மேம்பட்ட வேளாண்மை, புதிய தொழில்கள் தொடங்குதல், கல்வி வசதிகள் விரிவாக்கம், வளர்ச்சிக்குத் தேவைப்படும் பொறுப்புகளை ஏற்று நடத்தத் தகுதி வாய்ந்த நிருவாக அமைப்பை மேம்படுத்துதல், சமூக நீதியை உறுதிப்படுத்தும் வரிவிதிப்பு அமைப்பை வகுத்தல், நிலச் சீர்திருத்தம், சமூக ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதல், மகளிர்; பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்; பழங்குடிகள் ஆகியோரின் முன்னேற்றத்திற்கான தனி நடவடிக்கைகள், நாடெங்கிலும் கிராமங்களில் பெருமளவில் காணப்படும் வறுமையை ஒழித்தல் போன்ற பொருளாதார அம்சங்கள், தேசிய வாழ்க்கையின் பல்வேறு அம்சங்கள் ஆகியவற்றின் வளர்ச்சி அடங்குகிறது.

### சமுதாய வளர்ச்சித் திட்டங்கள்

எனவே, திட்டமிட்ட வளர்ச்சியின் தொடர் பயனாக, கிராம மக்களின் பொருளாதார, சமூக, கல்வி நிலையை உயர்த்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்ட சமுதாய வளர்ச்சித் திட்டம் உருவாக்கப்பட வேண்டிய அவசியத் தேவை ஏற்பட்டது.

ஆகவே, பெரிய அளவிலான ஊரக வளர்ச்சித் திட்டத்தை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. சுமார் ஏழு இலட்சத்திற்கு மேற்பட்ட கிராமங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் முப்பது கோடிக்கும் மேலான மக்களை முன்னேற்றுவதற்கான வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுவது என்பது, அரிய பெரும்பணியாக இருந்தது. பெருமளவில் பணமும், உழைப்பும் தேவைப்பட்டன. அதிர்ஷ்டவசமாக டாக்டர் டக்ளஸ் என்ஸ்மிங்கர் தலைமையிலான போர்டு பவுண்டேஷன் பெரிய அளவில் உதவ முன்வந்ததன் விளைவாக, சமுதாய வளர்ச்சித்திட்டம் உருவாக்கப்பட்டு, நாடாளுமன்றத்தில் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டது.

திட்டக் குழுவின் துணைத் தலைவர் திரு.வி.டி.கிருஷ்ணமாச்சாரியார் அவர்களும், சமுதாய வளர்ச்சி இணை அமைச்சர் திரு.எஸ்.கே.டே அவர்களும் புதிதாகத் துவக்கப்பட்ட சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் உயிர்நாடிகளாக விளங்கினர். திட்டத்தை நிறைவேற்றுவதில் பெரும்பங்கு வகித்தனர். முதலாமவர், பரோடாவில் ஊரக வளர்ச்சிக்காகப் போற்றத்தக்க பணியாற்றியவர்; 1952ஆம் ஆண்டில் உணவு உற்பத்திப் பெருக்க விசாரணைக்குழுத் தலைவராக இருந்தபோது, ஊரக வளர்ச்சிக்கான பயனுள்ள கருத்துரைகளை வழங்கியவர்.

ஊரக வாழ்க்கையின் எல்லா அம்சங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதை உணவுப் பொருள் உற்பத்திப் பெருக்க விசாரணைக்குழு அறிந்துகொண்டதோடு, குறிப்பிட்ட பிரச்சினைகள் குறித்து தனிக்கவனம் செலுத்தும்படி கோரப்பட்ட போது, "அவற்றிற்கான திட்டங்கள் பெரிய அளவிலான நோக்கங்களை எய்துவதன் ஒரு பகுதியாகவும், அவற்றை ஒருங்கிணைக்கக் கூடியவையாகவும் இருக்கவேண்டும் என்றும் தெரிவித்தது.

இக்குழுவின் பரிந்துரைகள் இந்தியாவில் ஊரக வளர்ச்சிக்கான ஊரக விரிவாக்க அணுகுமுறையை உருவாக்குவதில் பெரிதும் உதவின. இந்தியாவில் சமுதாய முன்னேற்றத்திட்டத்திற்கு முக்கிய அம்சமாக விளங்குவது ஊரக ஒருங்கிணைப்பு விரிவாக்கப்பணியே என்பதும், விரிவாக்கக் கல்வி அமைப்புகள் மூலம் விஞ்ஞான அறிவும், தொழில் நுணுக்க முறைகளும் மக்களைச் சென்றடையவேண்டும் என்பதும் உணரப்பட்டன.

இப்புதிய அணுகுமுறையை முதலாவது ஐந்தாண்டுத்திட்டம் ஏற்றுக்கொண்டது. கிராம மக்களின் சமூக, பொருளாதார வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுவத்துவதையே முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் குறிக்கோளாகக்கருதப்பட்டது. சமுதாய வளர்ச்சி



அம்பேத்கர் அவர்கள் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்களிடம் இந்திய அரசியல் சாசனத்தை அளிக்கிறார். ஜவஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய் படேல், மூதறிஞர் ராஜாஜி, மௌலானா அபுல் கலாம் ஆசாத் உடனிருக்கின்றனர்.

மூலமும், ஊரக விரிவாக்கக்கல்வி அமைப்புகள் மூலமும் அத்தகு நிலை அடையப்படவேண்டும் என்பதே முதலாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் அணுகு முறையாகும்.

## அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி

நேருவின் காலத்தில் இந்தியாவில் அறிவியல், தொழில்நுட்ப நிறுவனங்கள் பெருமளவில் வளர்ச்சி பெற்றன. நாடு முன்னேற, வேளாண்மை உற்பத்தியும், தொழில் உற்பத்தியும் பெருகிட, தகவல் தொடர்பு, போக்குவரத்து வசதிகள் மேம்பட, மக்களுக்குப் பெருமளவில் வேலை வாய்ப்பு வசதிகளை அளிக்க, நோய்த் தடுப்பு, நோய்ச் சிகிச்சை ஆகிய இருவகையிலும் மக்கள் நலம்காக்க, தொழில் நுட்ப ரீதியிலான புரட்சி தேவை என்பதைப் பண்டித நேரு உணர்ந்தார்.

ஆராய்ச்சியின் பயனாக விஞ்ஞான அறிவு பெருகுகிறது. அதன் விளைவாக வயல்களிலும், தொழிற்கூடங்களிலும் உற்பத்தி பெருகப் புதிய தொழில்நுட்ப உத்திகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. வேறுவேறு துறைகளில் பெரும் அளவில் ஆய்வுக்கூடங்களையும், நிறுவனங்களையும் அரசு நிறுவுகிறது.

இத்தகைய நோக்கங்களை நிறைவேற்ற, விஞ்ஞானிகளுக்குச் சிறந்த பணி நிலைமைகளை அளிக்கவும், கொள்கைகளை வகுப்பதில் அவர்களுடன் ஒத்துழைக்கவும், தேசிய வாழ்க்கையில் அவர்களுக்கு மதிப்புமிக்க இடத்தை அளிக்கவும், அரசு முடிவு செய்தது.

முதலாவது, ஐந்தாண்டுத்திட்டத்தில், தேசிய ஆய்வுக்கூடங்களையும், ஆராய்ச்சி நிலையங்களையும் ஏற்படுத்த முதற்கவனம் செலுத்தப்பட்டது.

இரண்டாம் ஐந்தாண்டுத்திட்டத்தில், இருக்கின்ற வசதிகள் மேம்படுத்தப்பட்டன. விரிவான அடிப்படையில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்களிலும், ஏனைய ஆராய்ச்சி மையங்களிலும், ஆராய்ச்சி வசதிகள் விரிவுபடுத்தப்பட்டன.

மூன்றாம் ஐந்தாண்டுத்திட்டத்தில் ஆய்வுப்பணி பின்வருவன தொடர்பாக மேற்கொள்ளப்பட்டது:

1. தற்போதுள்ள ஆராய்ச்சி நிறுவனங்களை வலுப்படுத்துவது; ஆராய்ச்சி வசதிகளைப் பரந்த அளவில் விரிவுபடுத்துவது;

2. பல்கலைக்கழகங்களில் அடிப்படை ஆராய்ச்சியை ஊக்குவிப்பது;

3. பொறியியல், தொழில்நுட்ப இயல் துறைகளில் ஆராய்ச்சியை ஊக்குவிப்பது;

4. ஆராய்ச்சிப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பது; ஆராய்ச்சிக்கல்வி ஏற்பாடு, ஆராய்ச்சிப் படிப்பு உதவித் தொகைத் திட்டத்தை விரிவுபடுத்துவது;

5. அறிவியல், தொழில் சாதனங்களை உருவாக்குவது, மேம்படுத்துவது தொடர்பான ஆராய்ச்சியை மேற்கொள்வது;

6. தேசிய ஆய்வுக்கூடங்கள், பல்கலைக் கழகங்கள், தொழில் நுட்ப இயல் நிறுவனங்கள், ஆராய்ச்சிச் சங்கங்களின் ஆய்வுக்கூடங்கள், அரசுத்துறைகளின் ஆராய்ச்சிப் பிரிவுகள் ஆகியவை மேற்கொள்ளும் ஆராய்ச்சிப் பணிகளை ஒருங்கிணைப்பது;

7. ஆராய்ச்சியின் முடிவுகளை முன்னோடிப் பயிர்பாதுகாப்புத் திட்டம், முழு அளவிலான களப்பரிசோதனைகள் முதலானவை மூலம் மெய்ப்பித்து, அவற்றைப் பயன்படுத்தவது.

முதலிரண்டு ஐந்தாண்டுத்திட்டங்களில் மேற்கொண்ட முயற்சியின் பயனாக அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட விரிவான தொடர்பமைப்பு ஏற்பாடு உருப்பெற்று, பல்வேறு மையங்களில் தனி ஆராய்ச்சி, செயல்முறை ஆராய்ச்சி, குறிப்பிட்ட துறைகளில் ஆராய்ச்சி ஆகிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ★



# தியாகத்தைப் போற்றிடுவோம்!

(1972-ல் சுதந்திரதின வெள்ளி விழாவில் முதல்வர் கலைஞர்)

இந்திய சுதந்திரத் திருநாள் இன்று வயது
இருபத்தைந்து. முழுமையான பருவம்.
வெற்றித் திலகம் பெற்று வெள்ளி
விழாக் கொண்டாடுகின்ற பருவம்.
இந்த வீரச் செல்வத்தைப் பெற்றிட
[illegible]



[illegible]



[illegible]

[illegible]

[illegible]

15/8/1972

(இந்திய சுதந்திரத் திருநாள் வெள்ளிவிழா நாளன்று, 15.8.1972ல் கோட்டை கொத்தளத்தில் கொடியேற்றி வைத்து, ஆற்றிய உரை)



சுதந்திரத் திருநாள் பொன்விழா 15.8.1997 அன்று தலைமைச் செயலகம் முன்பு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அணிவகுப்பு மரியாதை ஏற்றல்.

# மகாத்மா காந்தி

## முதல் டாக்குமெண்டரி

சா. கந்தசாமி

மகாத்மா காந்தி பற்றி முதன்முதலாக ஒரு டாக்குமெண்டரி படம் எடுத்தவர் ஏ.கே.செட்டியார். 'உலகம் சுற்றும் தமிழர்' என்று தமிழ் மக்களால் அன்போடு அழைக்கப்பட்டவர். நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகக் 'குமரி மலர்' என்ற தமிழ் மாதப் பத்திரிகை ஒன்றையும் நடத்திவந்தார். அது கடைகளில் விற்பனை செய்யப்பட்ட பத்திரிகை இல்லை. சந்தாதாரர்களுக்கு மட்டும் அனுப்பப்பட்டு வந்தது. குமரிமலர் பலவிதமான அம்சங்களைக் கொண்டு இருந்தாலும், அதன் பிரதம தொனி காந்தி தான். மகாத்மா காந்தி பற்றியும்-அவர் தத்துவங்கள் பற்றியும் எழுதுவதை ஏ.கே.செட்டியார் வாழ்க்கையின் இலட்சியம் மாதிரியே கொண்டிருந்தார்.



மகாத்மா காந்தியின் இலட்சியங்கள் மீது அபாரமான பற்றுகொண்ட ஏ.கே.செட்டியார் இளம் பருவத்தில் ஜப்பான் சென்று போட்டோ எடுப்பதில் பயிற்சி பெற்றவர். பர்மாவில் இருந்து வெளிவந்த 'தனவணிகன்' பத்திரிகையில் ஆசிரியராக இருந்தார். இந்த அனுபவமே அவரைப் பின்னால் 'குமரி மலரை' ஒரு இலட்சிய மாத இதழாக நடத்த வைத்து-உலகம் முழுவதும் சுற்றி, அந்த அனுபவத்தை எழுதி நூலாக வெளியிட்டவர். சுற்றுலா நூல்களுக்கு எல்லாம் வழிகாட்டி என்றுகூட சொல்லலாம்.

1940-ஆம் ஆண்டில் ஏ.கே.செட்டியார் மகாத்மா காந்தி டாக்குமெண்டரியை எடுக்க ஆரம்பித்தார். இரண்டு மொழிப்படம்-இங்கிலீஷ், தமிழ்.

டெக்னிக்கல் டைரக்டர் பிரபல கேமிராமேன் டாக்டர் பி.வி.பதி. தமிழ்விளக்க உரை த.நா.குமாரசுவாமி. பாடல்கள் பாடி இருப்பது டி.கே.பட்டம்மாள்.

மகாத்மா காந்தியின் வாழ்க்கைப் போதனைகளைச் சொல்வதுதான் படத்தின் பிரதானமான நோக்கம். அதற்காக இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா எல்லாம் சென்று படப்பிடிப்பு நடத்தினார்கள். இந்தியாவில் மகாத்மா காந்தி வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட பல ஊர்களில் படப்பிடிப்பு நடந்தது.

ஏ.கே.செட்டியார் ஒரு எழுத்தாளர். ஆகையால் தனது படப்பிடிப்பு அனுபவங்கள் பற்றி எழுதி இருக்கிறார். ஆனாலும் அவர் அனுபவம் பற்றி சொல்வதைக் கேட்பது இன்னொரு அனுபவம். தன்னை முன்நிறுத்திக்கொள்ளாத ஒரு தொனியில் செட்டியார் எப்பொழுதும் பேசுவார். அதைக் கேட்பதே ஒரு அனுபவம்.

மகாத்மா காந்தி டாக்குமெண்டரி படம் எடுத்த விதத்தைப் பற்றி ஏ.கே.செட்டியாருடன் என்னால் ஐந்தாறு முறைகளுக்கு மேல் பேச முடிந்தது. அவர் மனத்தில், படம் எடுத்தவிதம் அப்படியே பதிந்து இருந்தது. எத்தனை முறை பேசினாலும் கூடுதல் குறைச்சல் இன்றி, படம் எடுத்த விதத்தைப் பற்றிச் சொல்லிக்கொண்டே இருந்தார். அவர் சொன்னதில் மகாத்மா-காந்தி பக்தியை நிறையவே காணமுடிந்தது என்பது இன்னொரு அம்சம்.

ஒருமுறை ஏ.கே.செட்டியார் சொன்னார்:

"மகாத்மா காந்தி டாக்குமெண்டரி எடுத்துக்கொண்டு இருந்தபோது சபர்மதி ஆசிரமத்திற்குச் சென்று சில காட்சிகளை எடுப்பது என்று முடிவு செய்தோம். திடீரென்று மகாத்மா காலைப்பொழுதில் "வாக்' வரும் காட்சியையும் சேர்க்கலாம் என்று நினைத்தோம். அதற்காக மகாத்மா வழக்கமாக 'வாக்' வரும் காலை நேரத்தில், விடியற்காலையிலேயே கேமராவை எல்லாம் எடுத்துக்கொண்டு போய், வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டோம். பிறகு என்ன காட்சியை எப்படி எடுப்பது என்று கேமராமேன் பதியிடம் விளக்கிச் சொன்னேன். அதாவது மகாத்மா 'வாக்' வரும் போது நான் வணக்கம் சொல்லுவேன்; அவர் பதில் வணக்கம் சொல்லி, கையெடுத்துக் கும்பிடுவார். அப்பொழுது அவரை மட்டும் படம் பிடித்துக்கொள்ள வேண்டும் என்று.

தொலைவில் மகாத்மா காந்தி வருவது தெரிந்தது. நாங்கள் பரபரப்போடு படப்பிடிப்புக்குத் தயாராகி விட்டோம்.

மகாத்மா காந்தி சாலையில் வருகின்ற பால்காரர்கள், ஆட்டுக்காரர்கள் என்றுதான் இல்லை-யாரைப் பார்த்தாலும் நமஸ்தே சொல்லி, கையெடுத்துக் கும்பிட்டுக்கொண்டே வந்தார். எனக்குக் கும்பிட வேண்டிய அவசியமே ஏற்படவில்லை. ஆனால் கேமிராமேனுக்கு மகாத்மா கையெடுத்து கும்பிடும் காட்சிகள் கிடைத்தன.



மகாத்மா காந்தி பற்றி பம்பாயில் படம் எடுத்துக்கொண்டு இருந்தபோது-பகல் முழுவதும் நிறைய வேலை. இரவு ஒன்பது பத்துமணிக்குத்தான் திரும்பிவருவோம். படப்பிடிப்புக் குழு ஒரு பெரிய வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு தங்கி இருந்தது. சாப்பாடு எல்லாம் ஆனபிறகு கொஞ்சநேரம் பொழுது போக்கிற்காகச் சீட்டு ஆடுவோம்-காசு வைக்காமல் தான். அப்பொழுது ஒரே கத்தலும் கூச்சலுமாக இருக்கும். தினமும் இதுவே நடந்துகொண்டு இருந்தது. பக்கத்து வீட்டில் "திடீர்திடீர்' என்று விளக்கு எரியும். ஜன்னலைத் திறந்து பார்ப்பார்கள். நாங்கள் ஒன்றையும் பெரிதாக நினைக்கவில்லை. எங்கள் சீட்டு ஆட்டத்திலேயே மூழ்கி இருந்தோம். ஐந்தாறு நாட்கள் அது தொடர்ந்தது.அப்புறம் ஒருநாள் பக்கத்து வீட்டில் இருந்து ஒரு ஆள் வந்தார்.பார்க்கப் பெரிய மனிதர் மாதிரி இருந்தார். மிகவும் சாந்தமான குரலில், "கொஞ்சம் சப்தம் இல்லாமல் இருந்தால் நாங்கள் தூங்க முடியும்'' என்றார்.

எங்களுக்கு வெட்கமாகப் போய்விட்டது. சரியென்று தலையசைத்தோம். இவ்வளவு தன்மையாக நடுஇரவில் சொல்லிவிட்டுப்போகும் இவர் யார் என்று தெரிந்துகொள்ளும் ஆவலில் பெயரைக் கேட்டோம். பிரதிவிராஜ் என்றார். எங்களுக்குத் தூக்கிவாரிப் போட்டது. இந்தி சினிமாவின் முடிசூடா மன்னர் மாதிரியானவர். எங்களுக்கு வெட்கமாகப் போய்விட்டது. அன்றில் இருந்து சீட்டு ஆடுவதையும்-இரவில் விடியவிடிய 'லைட்' போட்டுக்கொண்டு பேசுவதையும் விட்டுவிட்டோம்.

மகாத்மா காந்தி டாக்குமெண்டரி படத்தை எடுத்துக்கொண்டு இருந்தபோது, ஒருவர், தண்டி யாத்திரை பற்றி ரகசியமாக எடுத்துவைத்து இருந்த படத்தை விற்க வந்தார். அவருக்குப் பணமுடை - ஏதாவது பணம் கொடுத்துவிட்டு முழுப்படத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள் என்றார். ஏங்கள் தேவை தண்டி யாத்திரைபற்றிச் சில அடிகள். அதை வாங்கிக் கொண்டு பணம் கொடுத்துவிட்டு-உங்கள் படத்திற்கு நல்ல விலை கிடைக்கும் வைத்திருங்கள் என்று சொல்லி அனுப்பிவைத்தேன். பின்னர் தண்டி யாத்திரை படம் நல்ல விலைக்குப் போனதாகச் சொன்னார்கள்.

மகாத்மா காந்தி படம் முடிந்ததும் சென்சாருக்குச் சென்றது. சென்சார் போர்டில் அப்பொழுது இருந்தது பிரபல டாக்டர் டி. கிருஷ்ணாராவ், இந்து ஆசிரியர். ஒரு வெட்டுக்கூட இல்லாமல் படத்திற்கு சர்டிபிக்கெட் கொடுத்தார்கள். ஆனால் அவர்கள் இருவரும் சென்சார் போர்டில் இருந்து நீக்கப்பட்டுவிட்டார்கள்.

இந்த அறிவிப்பு வந்ததும் தேசத்திற்கு ஒரு சிறிய அளவில் சேவை செய்து இருக்கிறோம் என்றார்கள்.

உற்சாகத்தோடு படம் எடுத்து முடித்து சென்சார் எல்லாம் ஆகிவிட்டது. ஆனால் படத்தை வெளியிடத் தியேட்டர் மட்டும் கிடைக்கவில்லை. அங்கும் இங்கும் முயற்சி செய்து பார்த்தோம். ஒன்றும் கிடைக்கவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் ஆபீஸைத் திறந்து வைத்துக்கொண்டு உட்கார்ந்து இருந்தோம்.

ஒருநாள் ஒரு குஜராத்தி ஆபீஸுக்கு வந்தார். மகாத்மா காந்தி படத்தைத் தங்களுக்கு சொந்தமான சபாளி தியேட்டரில் வெளியிடக் கொடுக்கவேண்டும் என்றார். என்ன முறையில் என்று கேட்டேன். நீங்கள் எப்படிச் சொல்கிறீர்களோ அப்படி. ஆனால் சென்னையில் எங்கள் தியேட்டரில்தான் படம் முதலில் வெளிவரவேண்டும் என்றார். வெளியிடும் முறை பேசி முடித்தேன். நான் என்ன சொன்னாலும் அவர் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தார். பின்னர் அவரிடம் மகாத்மா காந்தி படத்தை வெளியிட இவ்வளவு உற்சாகம் காட்டுவது ஏன் என்று கேட்டேன்.

"எங்களுக்கு ஊர் போர்பந்தர் பக்கம். வியாபார நிமித்தம் இந்தப் பக்கம் வந்துவிட்டோம். எனது சகோதரி போர்பந்தரில் இருக்கிறாள். அவள் மகாத்மா காந்தி சத்தியாகிரகத்தைப் பார்த்துவிட்டு - அதில் மக்கள்



2-வது வட்டமேஜை மாநாட்டில் காந்தியார்

21441



- என்றோ பாடிக்கொண்டு வருவார்கள். கொட்டகை முழுவதும் கைத் தட்டல்-எழுச்சி முழக்கம்.

வள்ளியை மணக்க வருகின்ற வேடனுக்கும், கதர்க்கப்பல் கொடிக்கும் எந்தத் தொடர்புமில்லை. என்றாலும் நாட்டில் கொழுந்துவிட்டெரிந்த விடுதலைப் போரின் வீச்சு-பேச்சேயாயினும், எழுத்தேயாயினும், நாடகங்களேயாயினும், கதை புதினங்களேயாயினும்-அனைத்திலும் எதிரொலித்தது.

அடக்குமுறை கோலோச்சிய காலம். இம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால் தூக்குமேடை என்ற காட்டாட்சிக் காலம். இத்துணை கொடுமைகளிலும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, எவ்வாறோ விடுதலைக் கருத்து விதைகளைத் தூவி விடுவர்.

நாடக மேடைகளில் ஆங்கிலேயரிடம் இந்தியர் நம் நிலை கூறுவது போன்று ஒரு காட்சி. வெள்ளையர் என்று சொல்வதற்குக் கூட அச்சம். ஆங்கிலேயரைக் கொக்கு என்றும், இந்தியரைக் காக்கை என்றும் குறியீடாக்கி, கொக்குக்கும் காக்கைக்கும் உரையாடல் நடக்கும்.

காக்கை : கொஞ்சமா நஞ்சமா எங்கள்
கும்பி கொதிக்கப் பணத்தைக்
கொள்ளை கொண்டு போகிறாயே
கொக்கே கொக்கே-வெள்ளைக்
கொக்கே கொக்கே!

கொக்கு : அங்குக் கொண்டுபோன பணத்திற்கு
இந்தியா சட்டசபையில் செலவுண்டு
காக்காய் காக்காய்-கருங்
காக்காய் காக்காய்

காக்கை : கஞ்சியில்லா ஏழைமக்கள்
கஷ்டப்படும் காலத்திலே
கள்ளுக்கடை எதுக்காக
கொக்கே கொக்கே!-வெள்ளைக்
கொக்கே கொக்கே!

கொக்கு : கஞ்சியில்லா ஏழைமக்கள்
கஷ்டப்படும் காலத்திலே
கள்குடித்துப் போதைவந்தால்
கவலை தெரியாதடி
காக்காய் காக்காய்-கருங்
காக்காய் காக்காய்

காக்கை : ஆட்டுத்தோலுக் கம்பெனிக்கு
ஆதியில் இடங்கொடுத்து
உங்களிடம் மாட்டிக்கொண்டோம்
கொக்கே கொக்கே-வெள்ளைக்
கொக்கே கொக்கே!

கொக்கு : ஆட்டுத்தோலுக் கம்பெனிக்கு
ஆதியில் இடம் வாங்கி
வண்ணப்புகை வண்டியென்ன
தந்தியென்ன தபாலென்ன ',...

- இவ்வளவு நன்மைகள் செய்திருக்கிறோமே எனத் திமிராகப் பேசும். நாட்டுக்கு உரியவர் அஞ்சி, நடுங்கி, கெஞ்சிக் கேட்க வஞ்சகமாய் நாட்டை கொண்டோர் மிரட்டி, அடக்கி, ஓங்கிப் பேசிக் கொண்டிருக்கும் இரங்கத்தக்க நிலை.

வீழ்ந்து கிடக்கும் நிலையிலிருந்து இந்தியன் வீறுகொண்டெழுகின்ற காட்சியை நாடகப் போக்கிலேயே பாரதியாரும் ஒரு பாடலில் படைத்துக் காட்டுகிறார். காக்கையாக இல்லாமல் இந்தியன் இந்தியனாகவே பேசுகிறான்; ஆங்கிலேயனிடம் தன் உறுதிப்பாட்டினை எழுச்சிக் குரலில் முழங்குகிறான்.

ஆங்கிலேயன் விடுதலை வேண்டுமென்று கோரும் இந்தியனிடம் சொல்கிறான்:

'தொண்டு செய்யும் அடிமை-உனக்குச்
சுதந்திர நினைவோடா ?
பண்டு கண்ட துண்டோ ?-அதற்குப்
பாத்திரம் ஆவாயோ
ஜாதிச் சண்டை போச்சா ?-உங்கள்
சமயச் சண்டை போச்சா ?
நீதிசொல்ல வந்தாய்-கண்முன்
நிற்கொணாது போடா!'



ஆங்கிலேயன் விரட்டுகிறான்; இந்தியன் முன்புபோலக் கூனிக்குறுகி நெளியவில்லை; துணிச்சலோடு நேர் நின்று கேட்கிறான்;

'சொந்த நாட்டில் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்-இனி அஞ்சிடோம்
எந்த நாட்டினும் இந்த அநீதிகள்
ஏற்குமோ ?-தெய்வம் பார்க்குமோ ?
வந்தே மாதரம் என்றுயிர் போம்வரை
வாழ்த்துவோம்-முடி-தாழ்த்துவோம்!
எந்தம் ஆருயிர் அன்னையைப் போற்றுதல்
ஈனமோ ?-அவமானமோ ?'



என் தாயை நான் போற்றுவது ஈனமா? வெள்ளையனே! என் சதையைத் துண்டு துண்டாக வெட்டி, நாய்களுக்கும், கழுகுகளுக்கும், பொல்லா விலங்குகளுக்கும் போட்டால்கூட "என் உள்ளத்திலே ஏற்றிவைத்துள்ள தீயை-உரிமை வேட்கையை உலகத்தில் எந்தச் சக்தியாலும் அணைக்கமுடியாது' என அழுத்தந்திருத்தமாக வெள்ளையன் கன்னத்தில் அறைவதுபோலப் பேசுகிறான்.

'சதையைத் துண்டுதுண்டாக்கினும் உன் எண்ணம்
சாயுமோ ?-ஜீவன்-ஓயுமோ ?
இதயத்துள்ளே இலங்கு மகாபக்தி
ஏகுமோ ?-நெஞ்சம்-வேகுமோ ?'

- இது இந்தியனின் வீரக்குரல்.

இவ்வாறு துணிந்து பாடுபட்டதால் விடுதலை பெற்றோம். ஐம்பதாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறோம்.

விடுதலை பெற்றது பெரிதில்லை. பெற்ற விடுதலையைப் பயனுள்ளதாக்க வேண்டும்! அதற்குத் தடையாயுள்ளவற்றை முதலில் அழித்தொழிக்க வேண்டும்! அப்போதுதான் விடுதலை பயனுள்ளதாய் இருக்குமென விடுதலைபெற்ற அப்போதே எடுத்தியம்பினர் எண்ணற்றோர். விடுதலை பெற்ற நம் நாட்டில் என்னென்ன குறைபாடுகள் தோன்றலாம் என்பதைப் பாவேந்தர் பாரதிதாசன் அன்றே பட்டியலிட்டுக்காட்டினார்.

'எண்ணிலா வீரர்கள் எண்ணிலாத் தீரர்கள்
கண்ணீர் செந்நீர் களங்கண்ட தன்பின்
வந்தது விடுதலை; உரிமை பெற்றது;
உடல்பொருள் ஆவி வெந்தீந் தவரின்
ஈகத்தி னால்தான் எய்தினோம் விடுதலை!'

விடுதலை பெற்று விட்டோம்! மகிழ்ச்சி! ஆனால் அவ்விடுதலையின் பயனைப் பெற முடியாத் தடைக்கற்கள் உள்ளனவே என எச்சரிக்கிறார் பாவேந்தர். விடுதலை பெற்று விட்டோம்; என்றாலும் இனி,

'சாதி மதத்தின் சழக்குகள் மிகுந்திடும் இனவெறி யாட்டம் பிணம்தின்னி யாகும் மொழிப்போர் மூளலாம்; சமதருமத்தின் விழி திறவாது; வேற்றுமைச் சிக்கல் மாநிலம்தோறும்-வெறுப்பும் பகையும் கால்கொளும்; ஏழை எளியவர் கடுந்துயர் உள்நாட்டவரால் கொள்ளைநோய் ஆகும்'!

- விடுதலை கிடைத்த அப்போதே இதைப் பாடினார். 'இப்பொழுதே நீ எப்படி அறிவாய்? என்று என்னை அனைவரும் சினக்கவும் கூடும்!' என்றும் சொல்லுகிறார். இருந்தாலும் நான் சொல்லுகிறேன் என அவர் தொடர்கிறார்;

'மக்களுக் குள்ள சிக்கலறுக் காமல்
எல்லார்க்கும் எல்லாம் என்னும் உரிமை
சொல்லால் செயலால் தொடவும் எண்ணிடார்!
இரவில் வாங்கும் இந்திய விடுதலை
என்று விடியுமோ யார் அறிகுவரே!'

- என மக்களுக்கிடையே உள்ள சாதி மத வேறுபாடுகள், மத இனக்கலவரங்கள், சமத்துவமின்மை இவற்றையெல்லாம் எண்ணி நொந்து விடுதலையின் முழுப்பயனைப் பெறுவோமோ? என்று ஏங்கிப் பேசினார்.

இந்த ஏக்கம் இன்னும் ஏக்கமாகவே இருக்கிறது. ஏக்கத்தைப் போக்கி ஆக்கத்தைக் கூட்ட ஐம்பதாண்டுப் பொன்விழா நாள் புதிய பாதை காணட்டும்! ★

போலீஸ் அடிதடிக்கு ஆளாவதைப் பார்த்து மனம் நொந்துபோய் இருக்கிறாள்-இந்தச் சமயத்தில் நீங்கள் மகாத்மா பற்றி ஒரு படம் எடுத்து இருப்பதைப் பற்றி பத்திரிகையில் படித்துவிட்டு-எப்படியாவது மகாத்மா பற்றிய படத்தை நமது தியேட்டரியில் வெளியிடவேண்டும் என்று எழுதினாள். அதனால்தான் வந்தேன்'' என்றார்.

இன்னொரு சந்திப்பில் ஏ.கே.செட்டியார் முதல் சுதந்திர தினத்தன்று - ஆகஸ்டு 15ஆம் தேதி புதுதில்லியில் மகாத்மா காந்தி படத்தைத் திரையிட்ட விதத்தையும் - அதில் கலந்து கொண்டவர் களையும் பற்றிச்சொன்னார்.

எனக்கு ஆகஸ்டு 15ஆம் தேதி அன்று மகாத்மா காந்தியைப் புதுதில்லியில் தேசத்தலைவர்களுக்குப் போட்டுக்காட்ட வேண்டும் என்ற எண்ணம் வந்தது. பெட்டியை எடுத்துக்கொண்டு புதுதில்லிக்குச் சென்றேன். ரீகல் தியேட்டர் வசதியாக இருக்கும் என்றார்கள். அதன் முதலாளியைப் பார்த்துப் பேசினேன். உடனே அவர் ஒத்துக்கொண்டு, தனக்கு ஒரு பாஸ் மட்டுமாவது கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தியேட்டர் முடிவு ஆனதும், பிரதமர் ஜவகர்லால் நேருவைச் சென்று பார்த்தேன்.

இன்றைக்கு முடியாதே என்று வருத்தப்பட்டார். கூடஇருந்த இந்திரா காந்தியை அனுப்பி வைப்பதாகவும் இன்னொரு நாள் போட்டால்-கண்டிப்பாகத் தான் வருவதாகவ்ும் சொன்னார்.

பிறகு ராஜேந்திர பிரசாத்தைப் பார்க்கப் போனேன். அவரைச் சுற்றி ஒரு பெரிய கூட்டம் இருந்தது. அவரிடம் விஷயத்தைச் சொன்னேன். சந்தோஷமாகச் 'சரி' என்றார். ஆனால் அவர் செயலாளர், "உங்களுக்கு அந்த நேரத்தில் வேறு முக்கியமான வேலை இருக்கிறது..." என்று டைரியைக் கொண்டுவந்து காட்டினார்.

அதை அவரே வாங்கி, பழைய அப்பாயின்மெண்டை அடித்துவிட்டு அதன்மீது



நீங்கள் வாழும் நாட்டை முன்னேறச் செய்யுங்கள்; எல்லோருடனும் சமாதானமாக வாழுங்கள்; அதுவே நாட்டுக்கும் நல்லது, நமக்கும் நல்லது.

-காயிதே மில்லத்

'ரீகல்-மகாத்மா காந்தி படம்' என்று எழுதினார்.

புதுதில்லியில் ஆகஸ்டு 15ஆம் தேதி மகத்தான காரியங்கள் நடந்துகொண்டு இருந்தபோது-மகாத்மாகாந்தி படத்தையும் அதில் சேர்த்துச் சொல்லவேண்டும்.

ஏ.கே.செட்டியார், தன் மகாத்மா காந்தி படத்தை இந்திய அரசுக்குக் கொடுத்துவிட்டார்.

ஆட்டன்பரோவின் காந்தி சினிமா வந்தபிறகு ஒருநாள் ஏ.கே.செட்டியாரைப் பார்த்துப் படம் பார்த்தீர்களா? என்று கேட்டேன்.

"இல்லை. பார்ப்பதாகவும் இல்லை. நான் மகாத்மா காந்தி பற்றி ஒரு படம் எடுத்து இருக்கிறேன். காந்தி பற்றி எனக்கொரு கருத்து உண்டு. அது அப்படியே இருக்கட்டும்'' என்றார்.

பிறகு, காந்தியில் மகாத்மா வேகமாக நடப்பது பற்றிப் பேச்சு வந்தபோது சொன்னார். "சாதாரணமாகவே மகாத்மா வேகமாக நடப்பார். ஆனால், காந்தி சினிமாவின் வேகம் மாதிரி அது இருக்காது; அப்பொழுது இருந்த பிலிம் ஸ்பீடு, காந்தியை அதிவேகமாக நடப்பது மாதிரி காட்டி இருக்கும்.

அதை டைரக்டர் எடுத்துக்கொண்டு இருக்கலாம். இந்தக்குறை இருந்தாலும், காந்தி நன்றாக இருக்கிறது என்று எல்லோரும் சொல்கிறார்கள். அதுவே எனக்குச் சந்தோஷமாக இருக்கிறது'' என்றார்.



மகாத்மா காந்தியைப் பற்றிய முதல் டாக்குமெண்டரி என்பதோடு மட்டுமில்லாது - மிக முக்கியமான டாக்குமெண்டரி என்ற சிறப்பும் ஏ.கே.செட்டியார் தயாரித்த 'மகாத்மா காந்திக்கு' உண்டு!



# எங்கும் விடுதலை எதிலும் விடுதலை!




சிலம்பொலி செல்லப்பன்

ஆண்டிப் பிழைக்க வந்த ஆங்கிலேயர்களால் அடிமைப் படுத்தப்பட்டு உரிமை வாழ்வை இழந்து கிடந்த இந்திய நாடு விடுதலை பெற்று ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. நாடு முழுவதும் பொன்விழா நாள் பொலிவுடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நாளில் இரண்டு செயல்களை நாம் மேற்கொள்ளவேண்டும். இன்னுயிர் ஈந்தும், இன்னல் பல ஏற்றும் விடுதலைக்காகப் போராடியவர்களுக்கு நம் நன்றியைக் காணிக்கையாக்குவது ஒன்று; பெற்ற விடுதலையைப் பேணிக் காத்து, 'விடுதலை' என்னும் சொல்லுக்கான உண்மைப் பொருளை உருவாக்கி நிலவச் செய்வது இன்னொன்று.

விடுதலைப் போராட்டம் வீறுகொண்டிருந்த காலத்தில் அவரவர் தாம் ஈடுபட்டிருந்த துறையைப் போர்க்களமாக்கிக் கொண்டனர். பேச்சு, எழுத்து, செயல் அனைத்தும் விடுதலை உணர்வைத் தூண்டுவனவாக அமைந்தன. எந்தச் செயலைச் செய்தாலும் அதில் மறைமுகமாகவோ நேரடியாகவோ விடுதலை உணர்வு கொப்புளிக்கும்.

வள்ளித் திருமணம் நாடகம் நடைபெறும். நாரதர் வாயிலாக வள்ளியைப் பற்றி அறிந்த முருகன், வேடன் வடிவில் வள்ளியைக் காணத் தினைப்புனம் வருவான். தினைப்புனத்தில் வள்ளி 'ஆலோலம்' பாடிப் பறவைகளை விரட்டியிருப்பாள். இக்காட்சியில் வேடனாக வரும் முருகன், நாடக முறைப்படி

'ஆயலோட்டும் பெண்ணே
ஆவியே என் ஆருயிர்ச் சஞ்சீவியே
மன்மதன் என்னும் பாவியே
மலர்க் கணைகள் தூவியே
வாட்டுறான் கண்ணே!
ஆயலோட்டும் பெண்ணே'...

- என்று பாடிக்கொண்டு திரையினின்று வெளியே வரவேண்டும். ஆனால் அன்றைய நடிகர்கள், விசுவநாத தாஸ் போன்றவர்கள்-இந்தப் பாடலைப் பாடி வரமாட்டார்கள். மாறாக-

கதர்க்கப்பல் கொடி தோணுதே
கரம்சந்திர மோகனதாஸ்
காந்தி இந்தியா சுதேச
கதர்க்கப்பல் கொடி தோணுதே!'
- என்றோ, அல்லது
'பண்டித மோதிலால் நேருவைப்
பறிகொடுத்தோமே-நெஞ்சம்
பரிதவித்தோமே!'

ஆக இருந்தது. இது 1993 -94ல் 225.4ஆக உயர்ந்துள்ளது. எரிசக்தி வளர்ச்சி 1950 -51ல் 2.3 மில்லியன் கிலோவாட்டாக இருந்து 1993 -94ல் 86.7 மில்லியன் கிலோவாட்டாக அதிகரித்துள்ளது. பால், வெண்ணெய், சிமெண்ட் உற்பத்தியில் இந்தியா உலகில் முதலிடம் வகிக்கிறது. இரும்பு உற்பத்தியில் உலகில் ஆறாவது இடத்தை வகிக்கிறது.

இந்திய மக்கள்தொகை 1950-51ஆம் ஆண்டு 36 கோடியாக இருந்து 1994 -95ஆம் ஆண்டு 90 கோடியாக அதிகரித்துள்ளது. மக்கள்தொகை வளர்ச்சி இந்தியப் பொருளாதாரத்தில் பெற்ற பல சாதனைகளை முறியடிக்கிறது. பிறப்பு விகிதம் 1950 -51ஆம் ஆண்டு ஆயிரம் நபருக்கு 39.9 ஆக இருந்து 1994 -95 ஆம் ஆண்டு ஆயிரம் நபருக்கு 28.6 ஆகக் குறைந்துள்ளது. அதேபோன்று இறப்பு விகிதம் 1950 -51ல் 9.2 ஆக குறைந்துள்ளது.



சராசரி மனிதனின் ஆயுள் காலம் 1950 -51ல் 32.1 ஆக இருந்து 1994 -95ல் 60.8 ஆக உயர்ந்துள்ளது.

இதுபோன்று பல சாதனைகளைப் பொருளாதார வளர்ச்சி ஏற்படுத்தியிருந்தாலும் ஏழ்மையும், ஏற்றத்தாழ்வும், கல்லாமையும் பொன்விழாவைக் கடந்துசெல்லும் இந்தியாவிற்கு அறைகூவல்களாக உள்ளன. அந்நியக் கடன்கள் அச்சுறுத்தும் நிலையில் உள்ளது. ஆனால் அண்டை நாடான மக்கள் சீனத்தில் பல துறைகளில் ஏற்பட்டுள்ள சீரான வளர்ச்சி, உறுதியான பொருளாதார அமைப்பு நமக்கு நல்ல படிப்பினை தருகிறது. நூறு கோடி மக்கள் தொகையைத் தாண்டிவிட்ட சீனம் 2020 ஆம் ஆண்டில் அமெரிக்க நாட்டைவிடப் பொருளாதார வளர்ச்சியிலும், வளமையிலும் மிஞ்சிவிடும் என்று உலக வங்கி (WORLD BANK) அறிக்கை கூறுகிறது.

ஆனால் இந்திய நாட்டில் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் தாதாபாய் நவரோஜி எழுப்பிய சில வினாக்களுக்கு இந்திய சுதந்திரம் இன்னும் விடை அளித்ததாகத் தெரியவில்லை. இந்தியாவிற்குள் இரண்டு இந்தியா இருப்பதாகத் தாதாபாய் குறிப்பிட்டார். விடுதலை பெற்று அய்ம்பது ஆண்டுகள் ஆகியும், வெள்ளை ஆட்சி வெளியேறியும் பணக்கார இந்தியாவும், ஏழை இந்தியாவும் இருந்துகொண்டுதானே உள்ளது?

இந்நிலை போக்கிட அறிஞர்கள் சிந்திக்க வேண்டும். அரசியல் தலைவர்கள் நல்வழி காட்டிடல் வேண்டும். இளைஞர்கள் எழுச்சிபெற்று நாடு நலம் பெற நற்பணிகள் ஆற்றிட வேண்டும். ஊழல் விரட்டப்படல் வேண்டும்.

இந்த உயரிய இலக்குகளை அடையத்தான், இந்தியத் தலைவர்களுக்கு எடுத்துக்காட்டாய், 74 அகவை கடந்தாலும், உறுதி கொண்ட நெஞ்சோடு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அயராது, ஓயாது உழைக்கிறார். ஏழைமக்கள் பயன்பெறும் வகையில் நல்லாட்சி தருகிறார். ஆனால், நாட்டில் நாள்தோறும் பிரச்சினைகள் பெருகி வருகின்றன. இவற்றினை வெற்றியுடன் எதிர்கொள்வதற்கு, புதியதோர் உலகம் படைப்பதற்கு, இளைஞர்கள் புரட்சிகரச் சிந்தனைகளோடு, சுயநலமற்ற உழைப்பினை நல்கிடல் வேண்டும் என்பதே விடுதலை நாள் பொன்விழா ஆண்டின் முழக்கமாக இருந்திடல் வேண்டும்.

"தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா
எளிமை கண்டிரங்குவாய் வா வா வா
ஏறு போல் நடையினாய் வா வா வா"

– என்று முழங்கிய விடுதலைப் போராட்டக் கவிஞர் பாரதியின் உணர்வு வரிகளை உள்ளத்தில் ஏந்திச் செயல்பட வேண்டும்.

### தேசிய கீதமும் தேசியப் பாடலும் !

ரவீந்திரநாத் தாகூரால் எழுதப்பட்ட 'ஜன கண மன' 1911ஆம் ஆண்டு டிசம்பர் 27ஆம் தேதியன்று கல்கத்தாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் தான் முதன்முறையாகப் பாடப்பட்டது.

1950ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் தேதி இந்த பாடலை இந்தியாவின் தேசிய கீதமாக அரசியல் சாசன சபை அங்கீகரித்தது. இப்பாடல் ஐந்து பத்திகளைக் கொண்டது. முதலாவது பத்தி தேசிய கீதத்தை முழுவதுமாக கொண்டுள்ளதாகும்.

பங்கிம் சந்திர சட்டர்ஜீ எழுதிய 'வந்தே மாதரம்' பாடல் சுதந்திரத்திற்காக போராடிய நம் முன்னோர்களுக்கு எழுச்சியூட்டுவதாக இருந்தது. இது 'ஜன கண மன' பாடலுடன் சம அந்தஸ்து கொண்டது. 1896ஆம் ஆண்டில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் தான் அரசியல் விழாவில் முதன்முறையாக இது பாடப்பட்டது.

இதுவும் தேசிய கீதத்திற்கு இணையாகவே மதிக்கப்படுகிறது.


**REFERENCES**

1. The Future Results of the British Rule in India - New York Daily Tribune, 8 August 1853
2. Tilak and the Struggle for Freedom Edited J.M. REISNER and NIM GOLDBERG 1963.
3. The Indian Musalmans - Hunter and History of the Freedom Movement - TARACHAND in India 1967 New Delhi.




## விடுதலைப்போர்க்கால சமயச் சீர்த்திருத்தம்:
# ராஜாராம் மோகன்ராய்



ஆங்கிலேயரின் ஆட்சி 18ஆம் நூற்றாண்டின் கடைசியில் இந்தியா முழுவதுமே நிறுவப்பட்டுவிட்டது. அதனால் படர்ந்த ஆங்கில நாகரிகமும் பண்பாடும் நம்முடைய சமுதாய சமய இயக்கங்களைப் பெரிதும் ஊனப்படுத்துவதாக இருந்தன.

மேலைநாட்டு மோகத்தால், பலரும் கிறித்துவ மதத்தில் சேர்ந்திடலாயினர்.

இவ்வாறான காரணங்களால் இந்தியாவில் சில சீர்திருத்தவாதிகள் தோன்றினர்; அறிவியக்கம் உருவாயிற்று; சமூக, சமயக் கொள்கைகளில் தீவிர மாறுபாடுகள் ஏற்பட்டன. இவ்வாறான மாற்றங்கள் இந்திய நாட்டை இடைக்காலத்திலிருந்து நவீன காலத்திற்குக் கொண்டுவந்தன.

அப்படித் தோன்றிய சமுதாயச்சீர்த்திருத்த இயக்கங்களின் நோக்கம்-சாதிமுறைகளைச் சாடுவதும், இந்தியர்களிடையே ஒருமைப்பாட்டுணர்வை வளர்ப்பது மாகவே இருந்தது. அவ்வியக்கங்கள் மூலம் சாத்திரச் சம்பிரதாயங்கள் திறனாய்வு செய்யப்பட்டன; ஒழுக்கம், சமயம் ஆகியவை இதனால் புதிய விளக்கம் பெற்றன. இவ்வாறான புதிய மாறுபாடுகள் ஏற்பட அயராது உழைத்து நமது நாகரிகத்தையும் பண்பாட்டையும் காத்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் ராஜா ராம்மோகன் ராய் ஆவார்.

19ஆம் நூற்றாண்டு இந்திய மக்கள் இந்தியப் பண்பாடு-மேனாட்டு நாகரிகம் ஆகிய இரண்டிற்கும் இடையே இருதலைக் கொள்ளி எறும்பாகத் தத்தளித்துக் கொண்டிருந்தார்கள். இந்திய சுதந்திரப் போர் வேகத்தையே இது பலவீனப்படுத்துவதாக இருந்தது.

மேனாட்டு அறிஞர்களும், பாதிரியார்களும் மக்களைத் தங்கள்பால் ஈர்க்க அரசே உதவியது;



1946ல் முதன்முதல் இந்தியாவில் அமைந்த இடைக்கால அரசு

# சுதந்திர இந்தியா

## -சில கருத்துகளும் உணர்வுகளும்

முனைவர் மு. நாகநாதன்

இது (1997) இந்தியாவின் விடுதலைப் பொன்விழா ஆண்டு. 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் நாள், வெள்ளை ஏகாதிபத்தியம் இந்தியர்களிடம் அரசியல் அதிகாரத்தை அளித்த நாளாகும். அம்பது ஆண்டுகளில் இந்தியா பல்வேறு துறைகளில் அடைந்த வெற்றிகளையும், அடையவேண்டிய இலக்குகளையும் ஆய்வதற்கு முன், கடந்த நூற்றாண்டுகளில் அரசியல், பொருளாதார, சமூகத் துறைகளில் அந்நிய ஆதிக்கம் எப்படி கால் ஊன்றியது, நிலைபெற்றது என்பதையும் சிந்திப்பது அவசியமாகிறது.

பல்வேறு இன, மொழி, பண்பாடு, மத மற்றும் உணவுப் பழக்கவழக்கங்களை உடைய பல தேசிய இனங்களின் கூட்டமைப்பே இந்தியாவாகும். இந்தக் கூட்டமைப்பு உடைவதற்கும், உருவாவதற்குமான காரணங்களைப் பல அரசியல் அறிஞர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

முகலாயப் பேரரசு வீழ்ந்த பிறகுதான் அந்நிய ஆதிக்கச் சக்திகள் இந்திய அரசியலை ஆக்கிரமித்தன என்கிறார் கார்ல் மார்க்சு. அவரின் கூற்றுப்படி -

"முகலாயப் பேரரசின் ஆட்சியை முகலாய சிற்றரசர்கள் முறியடித்தனர்; முகலாய சிற்றரசர்களின் ஆட்சியை மராட்டிய அரசர்கள் முடிவுக்குக் கொண்டு வந்தனர். மராட்டியர்களின் ஆட்சியை ஆப்கானிய அரசர்கள் முறியடித்தனர். எல்லோரும் ஒருவருக்கொருவர் போராடிக் கொண்டிருந்தபோது, பிரிட்டன் அதிவேகமாக நுழைந்து இவர்களை எல்லாம் அடிமைப்படுத்தியது".

"The paramount power of the Great Mughal was broken by the Mughal Viceroys. The power of the Viceroys was broken by the



Mahrattas. The power of the Mahrattas was broken by the Afghans and while all were struggling against all, the briton rushed in and was enabled to subdue them all".

நடந்து முடிந்த இவ்வரலாற்று நிகழ்ச்சி நிகழ்காலத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கும் ஓர் எச்சரிக்கைதானே? நாடு இரண்டுபட்டது கூத்தாடிக்குக் கொண்டாட்டமோ இல்லையோ, வெள்ளையர்களின் கொள்ளைக் கூத்திற்கு வழிவகுத்துவிட்டது. பிரிட்டானிய ஏகாதிபத்திய அரசு சர்வ வல்லமைமிக்க ஆட்சியை 19ஆம் நூற்றாண்டில் திறுவி, வணிக மற்றும் காலனி சுரண்டலைத் தொடங்கியது. இந்திய வளங்கள் சூறையாடப்பட்டு, பிரிட்டன் சொர்க்க பூமியாவதற்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இந்தக் காலகட்டத்தில், உலகின் மற்ற பகுதிகளில் ஏற்பட்ட கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் தாக்கங்களைப் பற்றி அறியாமல் பெரும்பான்மையான மக்கள் சாதி, மத மருளில் மண்டிக்கிடந்தனர். 1893ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் 20ஆம் நாள் புரட்சித்துறவி விவேகானந்தர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து இந்திய மக்களின் நிலையை நாம் அறிய முடிகிறது .

"கிழக்கிந்திய நாடுகளில் மிக அவசியமான தேவை என்னவெனில், மதமல்ல - மக்கள் அதிக அளவில் மதங்களைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், அங்கே தேவைப்படுவது ரொட்டிதான். பசியால் வாடுகின்ற மக்களிடம் போய் மதத்தைத் தருவது அவமானத்திற்குரிய செயலாகும். பசியால் வாடும் மனிதனிடம் போய் கற்பனைக் கருத்துக்களைச் சொல்வதும் அவமானத்திற்குரிய செயலாகும்!

"The crying evil in the East is not religion - they have religion enough - but it is bread ... It is an insult to the starving people to offer them religion, it is an insult to a starving man to teach him Metaphysics".

சாதி, மத மயக்கத்திலிருந்து மக்கள் தெளிவுபெற்றால்தான், சமூகத்தில் அறிவு பரவும் என்று எண்ணி, சமூகச் சீர்திருத்தச் செம்மல்கள் ராசாராம் மோகன்ராய், விவேகானந்தர் போன்றவர்கள் புரட்சி முழக்கம் செய்தனர்.

இஸ்லாமியப் பெருமக்களும் பிரிட்டானிய ஏகாதிபத்தியம் உறுதிப்படுத்திய கொடுமைகளை எதிர்க்கத் தலைப்பட்டனர். வகாபி இயக்கத்தை (WAHHABI MOVEMENT) தொடங்கி, இஸ்லாமிய மக்கள் அறிவியல் தொழில்நுட்பக் கல்வி கற்றல் வேண்டும் என்று அப்துல் வகாப் வலியுறுத்தினார். பின்பு சையது அகமதுகான் அலிகார் கல்லூரியைத் தொடங்கினார்.

புதிய சிந்தனைகள் பெற வேண்டும் என்ற பேரார்வம் மதங்களைக் கடந்து பரவத் தொடங்கியது. முற்போக்குக் கருத்துக்களும், மதச்சார்பின்மையும் மக்களிடையே தென்படத் தொடங்கின. இந்த நல்உணர்வுகளை இந்திய தேசியக் காங்கிரசும், அந்தப் பேரியக்கத்தில் பணியாற்றிய தீவிரவாதிகளும், பிரிட்டானிய அரசிற்கு எதிராகப் பயன்படுத்தினர். காங்கிரஸ் இயக்கத்தில் பெரும்பான்மையோர் வெள்ளைய அரசு பல சீர்த்திருத்தச் சட்ட நடவடிக்கைகளையும், சலுகைகளையும் இந்தியர்களுக்கு வழங்கிட வேண்டும் என்று வாதிட்டனர்.

இந்தியாவில் இரண்டு இந்தியாக்கள் உள்ளன. பணம் படைத்தோரின் இந்தியா ஒன்றும், ஏழை இந்தியா மற்றொன்றும் உள்ளது. முதல் இந்தியாவில் பிரிட்டானிய முதலாளிகளும், உயர்நிலை அதிகாரிகளும், இராணுவத்தினரும் செழிப்புடன் வாழ்ந்து, வருமானத்தை இங்கிலாந்திற்கு அனுப்புகின்றனர்.

இரண்டாவது இந்தியாவில் ஏழைகளும், உழைப்பாளிகளும் வறுமையில் வாடி வதங்குகிறார்கள். முதல் இந்தியா இரண்டாவது இந்தியாவைச் சுரண்டி சுகம் காணுகிறது என்று புள்ளி விவரங்களோடு பறைசாற்றினார் தாதாபாய் நவரோஜி அவர்கள். தாதாபாய் அடுக்கிக் காட்டிய ஆதாரங்களைத் தொடர்ந்து ரானடே, கோகலே, லாலா லசபதிராய், ஆர்.சி. தத் போன்ற சுதந்திரப் போராட்ட வீரர்கள் ஏகாதிபத்தியச் சுரண்டலை எடுத்துக் காட்டினர். விருந்து மண்டபங்களிலும், விழா மண்டபங்களிலும் ஒலித்த குரலைப் பெருந்தலைவர் காந்தியார் நகரங்களில், கிராமங்களில், வெட்டவெளியில், மக்கள் மன்றத்தில் எதிரொலிக்கச் செய்தார்.

அரசர்களையும், ஆண்டிகளையும், நில உடைமையாளர்களையும், நிலமற்ற விவசாயிகளையும், முதலாளிகளையும், தொழிலாளர்களையும், இந்துக்களையும், இஸ்லாமியர்களையும், மிகப் பிற்போக்கான பார்ப்பனர்களையும், தீண்டத்தகாதவர்களையும் காங்கிரஸ் பேரியக்கத்தின் ஆதரவாளர்களாக மாற்றினார். தந்தை பெரியாரையும், மூதறிஞர் ராசாசியையும் காங்கிரஸ் பேரியக்கத்தில் இணைத்தது காந்தியின் தலைமைதானே!

1921ல் ' தொடங்கிய ஒத்துழையாமை இயக்கம், அந்நியத் துணிகள் எரிப்பு, உப்புச் சத்தியாகிரகம், கள்ளுக்கடை மறியல், வெள்ளையனே வெளியேறு போன்ற போராட்டங்கள் பிரிட்டானிய ஆட்சியை அகற்றுவதற்கு வழிகோலின. மாவீரர் நேதாஜியின் தலைமையில்



இந்திய தேசிய இராணுவத்தின் போர்த் தாக்குதல்கள் பிரிட்டானிய அரசை நிலைகுலைய வைத்தன. இரண்டாவது உலகப் போரில் ஏற்பட்ட இழப்புகள், இங்கிலாந்து நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாறுதல்கள், வெள்ளையர்கள் இந்தியாவை விட்டு வெளியேறுவதற்கு வழிவகுத்தன. ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகளாக நடைபெற்ற அரசியல் நிகழ்வுகள், அம்பது ஆண்டுகளாக நடைபெற்ற போராட்டம், சில கருத்துத் தாக்கங்களைத் தெளிவுபடுத்தின. ஏழ்மை, இல்லாமை, கல்லாமை போன்ற இருளில் சிக்கியுள்ள மக்கள் விடுதலை பெற வேண்டும். சாதி, மதச் சண்டைகள் அறவே அகற்றப்பட வேண்டும். ஏற்றத்தாழ்வு குறைந்த சமூகம் தோற்றுவிக்கப்படல் வேண்டும் என்பதைப் போன்ற உயரிய எண்ணங்களும், நெறிகளும் உருவாவதற்குத் தானே இந்த விடுதலைப் போராட்டத் தாக்கங்கள் பயன்பட்டிருக்க வேண்டும்? பயன்பட்டனவா, உண்மையான விடுதலை பெரும்பான்மையோருக்குக் கிட்டியதா என்ற வினாக்கள் எழும்பிய வண்ணம் உள்ளன.

விடுதலை பெற்ற பிறகு, இந்தியாவில் ஏற்பட்ட பிளவுகள், பிணக்குகள், மதவாதப் போக்குகள் எல்லாம் விடுதலைப் போராட்ட உணர்வுகளுக்கு எதிரானவை. ஏற்பட்டுவிட்ட இந்தத் துயர்நிகழ்ச்சிகளுக்கு இடையேதான் கடந்த அம்பது ஆண்டுகாலப் பொருளாதார, சமூக வளர்ச்சிப் போக்கினையும், ஏற்றத்தாழ்வையும் கணக்கிடல் வேண்டும். 150 ஆண்டுகால வணிக, காலனியச் சுரண்டலால் நிலைகுலைந்த இந்தியப் பொருளாதாரத்தைச் சீர் செய்வதற்குத்தான், சுயச்சார்புடைய பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்க அய்ந்தாண்டு திட்டங்கள் தீட்டப்பட்டன.

வளர்ச்சியும், சமூகநீதியும் இரு பெரும் குறிக்கோள்களாகச் சுட்டிக்காட்டப்பட்டன. அரசின் முதலீடு விவசாயத்துறை, தொழில்துறை மற்றும் கல்வி, மருத்துவத் துறைகளில் செய்யப்பட்டது. இதன் விளைவாக, பல தடுமாற்றங்களுக்கு இடையிலேயும் பல சாதனைகளை இந்தியப் பொருளாதாரம் படைத்திருக்கிறது.

1950- 51ஆம் ஆண்டில் இந்திய தேசிய வருமானம் ரூ.8,574 கோடியாகும். இது 1993- 94ஆம் ஆண்டில் 6.14 இலட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. தனிநபர் வருமானம் 1950- 51ல் 239 ரூபாயாக இருந்து 1993 -94ஆம் ஆண்டில் 6,910 ரூபாயாக அதிகரித்துள்ளது. விவசாய வளர்ச்சி, குறிப்பாக உணவு தானிய உற்பத்தி 1950- 51ஆம் ஆண்டில் 50.8 மில்லியன் டன்னாக இருந்து 1993 -94ஆம் ஆண்டில் 182 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளது.

தொழில் துறையின் உற்பத்திக் குறியீடு 1950- 51ஆம் ஆண்டு 18.3

சென்னையிலே உயர்நிலைப்பள்ளி ஒன்றில் தமிழாசிரியராகப் பணிபுரிந்த பாவலர், தேசபக்தி காரணமாக ஆசிரியத் தொழிலை விட்டார். காங்கிரசிலே சேர்ந்து அரசியலில் ஈடுபட்டார். சில ஆண்டுகள் சென்னை மாவட்ட காங்கிரஸ் அங்கத்தினராகவும் இருந்தார். அந்நாளில் அகில இந்தியாவிலும் செல்வாக்குப் பெற்றிருந்த மயிலை எஸ். சீனிவாச ஐயங்கார் அவர்களுடன் பாவலர் நெருங்கிய தோழமை கொண்டிருந்தார். சிறந்த மேடைப் பேச்சாளராகவும் விளங்கினார்.

நாடக மேடையின் வாயிலாகவும் தேசியப் பிரச்சாரம் செய்யும் குறிக்கோளுடன், நாடகத்துறையில் ஈடுபட்டார் பாவலர். "பால மனோகர சபா" என்ற பெயரில் தனியாக ஒரு நாடகக்குழுவினை நடத்தினார். "கதரின் வெற்றி' உட்பட தேசிய நாடகங்கள் பலவற்றை எழுதினார். தமது சிறுவர் நாடகக் குழுவைக் கொண்டு தமிழகம் முழுவதிலும் அவற்றை நடத்தி விடுதலைக் கிளர்ச்சியை வலுப்படுத்தினார்.

1930ஆம் ஆண்டில் வடக்கே நாகபுரியில் நடைபெற்ற கொடிப் போராட்டத்தைக் கருப்பொருளாக்கி, அந்தப்போராட்டத்தில் கதாநாயகன் கலந்துகொள்வதாகக் கற்பித்து, "தேசியக்கொடி" என்னும் பெயரில் ஒரு நாடகத்தை எழுதினார். அதனை நாடு முழுவதும் நடத்திக்காட்டினார்.

1924க்குப் பின் "மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி"யில் ஆசிரியப் பொறுப்பை ஏற்றார். "கதரின் வெற்றி", "பதிபக்தி', "பம்பாய் மெயில்", "கவர்னர்ஸ் கப்" ஆகிய தேசிய மணங்கமழும் சமூக சீர்திருத்த நாடகங்களை எழுதி, அவற்றை நடத்தி வைத்தார்.

பாவலரின் தேசிய நாடகங்களால் ஏகாதிபத்திய எதிர்ப்பு வலுப்பெற்று வருவதைக் கண்ட ஆட்சி, சில ஊர்களில் அந்த நாடகங்களை நடத்தவொட்டாமல் தடை விதித்தது. அந்தத் தடைகளை மிகுந்த தந்திரத்துடன் சமாளித்தும், சில சந்தர்ப்பங்களில் தடையை மீறியும் நாடகங்களை நடத்தியிருக்கிறார்.

தமிழ் நாடகக் கலைஞர்களில், தேசியப் பாசறையோடு இரண்டறக் கலந்திருந்தவர்களிலே ஆரியகான கே.எஸ். அனந்தநாராயண ஐயர் ஒருவராவர். இவர், புகழ்மிக்க நடிகராக விளங்கினார். அந்நாளில் ஆண்கள் பெண் வேடந்தாங்கி நடிப்பதுண்டு. ஐயரும் நாடக மேடையில் பெண் வேடத்திலேயே தோன்றி நடித்தார். இவர், 1937 முதல் 1941 வரையுள்ள ஐந்தாண்டு காலத்தில் சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினராகவும், முதல் சர்க்கிள் காங்கிரஸ் கமிட்டி, முதல் வட்ட (குன்னையார்பேட்டை)க் காங்கிரஸ் கமிட்டி ஆகியவற்றின் தலைவராகவும் இருந்து விடுதலைப் போருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்தார். தாம் நடித்த புராண நாடகங்களிலேயும் தேசியக் கருத்துக்களை வெளியிட்டு ரசிகப்பெருமக்களின் பாராட்டுதலைப் பெற்று வந்தார்.

## விசுவநாத தாஸ்

எஸ்.எஸ்.விசுவநாத தாஸ் என்ற நடிகர் தேசபக்தி மிக்க தேசியவாதியாகத் திகழ்ந்ததோடு, தமது நாடகத்துக்கு அரசாங்கம் விதித்த தடையை மீறிச் சிறைத்தண்டனை பெற்ற தியாகியாகவும் விளங்கினார். நாடக மேடையைத் தேசியப் பாடல் மயமாக்கும் பணியிலே பிற நடிகர்களுக்கு இவரே சிறந்த வழிகாட்டியாக விளங்கினார். இவருக்கிருந்த தேச பக்தியைக் கண்டு அரசாங்கம் அஞ்சியதெனலாம்.

1919ல் பஞ்சாப் படுகொலை நடந்தபோது, அதனைக் கண்டித்து இயற்றப்பட்ட "பஞ்சாப் படுகொலை; பாரிற் கொடியது, பரிபவமிக்கது" என்ற பாடலைப்பாடி பாடி, நாட்டு மக்களுக்குத் தேசாவேசத்தை ஊட்டினார்.

வெள்ளை நிறத்து அதிகாரிகளைக் கொக்குகளாகக் கற்பனை செய்து நாடக மேடையில் பாடுவதற்கென்று பூமிபாலக தாஸ் என்பவர் இயற்றிய "கொக்கு பறக்குதடி பாப்பா" என்ற பாடல் பிரசித்தி பெற்றதாகும். நாடக மேடையில் தோன்றியபோதெல்லாம் நடிகர் தாஸை "கொக்கு' பாட்டைப்பாடும்படி ரசிகப்பெருமக்கள் வற்புறுத்தினர். அரசாங்க அதிகாரிகளோ, அதைப் பாடக்கூடாதென்று பயமுறுத்தினர். தேசபக்தி மிக்க விசுவநாத தாஸ், அதிகாரிகளின் பயமுறுத்தலைப் புறக்கணித்து மக்களின் விருப்பத்தையே நிறைவேற்றுவார். அவர் பாடிய கொக்குப் பாட்டின் சில வரிகள் வருமாறு :

*'கொக்கு பறக்குதடி பாப்பா !-அதைக்*
*கோபமின்றிக் கூப்பிடடி பாப்பா !*





*மக்களை ஏமாற்றும்*
*கொக்கு-அதன்*
*மமதை அழியவேண்டும்*
*பாப்பா !*
*தேம்ஸ்நதிக் கரையில்*
*கொக்கு-அங்கு*
*தின்ன வழியில்லாத*
*கொக்கு-மது*
*மாமிச வெறிபிடித்த*
*கொக்கு-நம்*
*மக்களை ஏமாற்ற வந்த*
*கொக்கு'*

இந்தப் பாடலையேயன்றி, வேறு பல தேசியப் பாடல்களையும் அவர் பாடுவதுண்டு. "வள்ளித்திருமண" நாடகத்திலே அவர் முருகன் வேடத்தில் தோன்றும்போதும் "கொக்கு பாட்டுப் பாடு" என்று ரசிகப்பெருமக்கள் குரல் கொடுப்பார்கள். பாடத் தொடங்கியதுமே ஆனந்தத்தால் கைதட்டி ஆரவாரம் செய்வார்கள். ஒருமுறை பாடி முடித்தால், "ஒன்ஸ் மோர்" என்று கூவி, திரும்பவும் பாடுமாறு வற்புறுத்துவார்கள். அவரும் பாடுவார்.

நாடக நடிகர்களிலேயே தலைசிறந்த தேசியவாதியாகத் திகழ்ந்த விசுவநாத தாஸ், திருமங்கலம் தாலுகா காங்கிரஸ் கமிட்டியில் அங்கம் வகித்தார். மதுரை ஜில்லா போர்டிலும் காங்கிரஸ் சார்பில் அங்கம் வகித்தார். இவர் வேடந் தரிப்பதற்கான உடைகளையும் கதரிலேயே தயாரித்துப் பயன்படுத்தினார். தேசியப் பாசறையிலே மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த நிலையில், 31.12.1940ல் எஸ்.எஸ்.விசுவநாத தாஸ் திடீரென்று மரணமடைந்தார். சென்னை ராயல் தியேட்டரில் (இப்போது அந்தக் கொட்டகை இல்லை) வள்ளித்திருமணம் நாடகத்திலே கழுகாசல சீனில் தோன்றிப் பாடிக் கொண்டிருந்த போது திடீரென்று மாரடைத்து மேடையிலேயே மரணமடைந்தார். அப்போது அவர் தாங்கியிருந்த முருகன் வேடத்துடனேயே மயில் மீது அமர்ந்த கோலத்திலேயே அவரது பிரேத ஊர்வலம் நடத்தப்பட்டது.

## தேச பக்தி

தேசபக்தர் சாமிநாத சர்மா, "பாணபுரத்து வீரன்" என்னும் சரித்திரந் தழுவிய நாடகம் ஒன்றைத் தமிழில் தந்துள்ளார். அதனை, 'தேசபக்தி' என்ற மாற்றுப் பெயரால் நாடக உலகில் புகழுடன் விளங்கிய டி.கே.எஸ்.சகோதரர் நாடகக் குழுவினர் நடித்துள்ளனர். பல ஊர்களில் அரசினரின் தடைக்கும் உள்ளானது இந்நாடகம்.

## இராட்டைப் பாட்டு

நாடகமேடையில் நடத்தப்பட்ட தேசிய நாடகங்கள் அதிகமில்லை; சொற்பமே! ஆயினும் புராண நாடகங்களிலே-கதைக்குப் பொருத்தமின்றியும்-தேசியப் பாடல்களைப் பாடி, அந்நாளைய நடிக-நடிகையர் தேச பக்தியை வளர்த்தனர். இதனால் ஆன்ம ஒளிபெருக்கும் தெய்வ பக்திப்பாடல்களையே வழிவழி கேட்டு வந்த தமிழ்மக்கள். அடிமைத் தளையறுக்கும் தேசபக்திப் பாடல்களையும் தமிழில் கேட்கும் பேறுபெற்றனர். இது காந்தி சகாப்தத்திலே நாடகத்தமிழ் அடைந்த மறுமலர்ச்சியாகும்.

*'கதர் கப்பல் கொடி*
*தோணுதே*
*கரம் சந்த்ர மோகன தாஸ்*
*காந்தி இந்தியா சுதேச...*
*(கதர்)'*

*– என்றும்*
*'ஆடு ராட்டே சுழன் றாடு*
*ராட்டே-சுய*
*ஆட்சியைக் கண்டோமென்*
*றாடு ராட்டே'*

*– என்றும்,*
*'நம்பிக்கை கொண்டெல்லோரும் கை*
*ராட்டை சுற்றுவீர் !-கை*
*ராட்டை சுற்றுவீர்-சுய*
*நாட்டைப் பற்றுவீர்'..*

- என்றும் தொடங்கும் கைராட்டைப் பாட்டுகளைப் பாடாமல் அந்நாளில் எந்த நாடகமும் நடந்ததில்லை. நடிக-நடிகையரேயன்றி நாடகத்திலே ஒரு காட்சிக்கும் இன்னொரு காட்சிக்குமிடையே உள்ள அவகாசத்தில் ஆர்மோனியக்காரர்களும் தேசியப் பாடல்கள் பாடுவார்கள்.

தேசியக் கவி ராஜா சண்முக தாஸ், லட்சுமண தாஸ், மதுர பாஸ்கர தாஸ், சுந்தர வாத்தியார், கவி ஆறுமுகனார் முதலிய பாவலர்களின் பாடல்களே பெரும்பாலான நடிக - நடிகையரால் பாடப்பட்டன.

வள்ளித் திருமணம் நாடகத்திலே, தினைப்புனத்தில் பரண் மீது நின்று வள்ளி ஆயலோட்டும்போது, தினையரிசிகளைக் கொத்தித் தின்னவரும் குருவிகளை ஆங்கிலேயர்களாகக் கற்பித்துக் கொண்டு, "வெள்ளையனே வெளியேறு" என்னும் பொருள்பட வள்ளி பாடுவாள். ஆம்; 1942 ஆகஸ்டுப் புரட்சிக்கு முன்பே!

*'வெள்ளை வெள்ளை கொக்குகளா வெகுநாளாய் இங்கிருந்து*
*கொள்ளை யடித்தீர்களே ஆலோலங்கடிச் சோ-இனி*
*கோபம்வரும் போய்விடுங்கோ ஆலோலங்கடிச்சோ !*
*காந்தி மகத்துவத்தால் கதிர்கள் விளைந்து இங்கே*
*சாய்ந்து கிடக்குதென்றா ஆலோலங்கடிச்சோ-இங்கு*
*தட்டிப் பறிக்க வந்தீர் ஆலோலங்கடிச்சோ !*
*இந்தியாவைக் கொள்ளையிட எங்கிருந்தோ இங்குவந்து*
*குத்தித் தின்னும் குருவிகளா ஆலோலங்கடிச்சோ-உங்கள்*
*சொந்த நாட்டைத் தேடிப்போங்க ஆலோலங்கடிச்சோ !'*

எந்த நாடகமாயிருந்தாலும் சரி; அந்த நாடகத்திலே எந்தக் காட்சியாக இருந்தாலும் சரி; மக்கள் ஒரு தேசியப் பாட்டைப் பாடும்படிக் கேட்டுவிட்டால், அதைப் பாடி ரசிகர்களைத் திருப்தி செய்விக்காமல் மேலே நாடகத்தை நடத்திச் செல்ல முடியாது. ஆம்; தேசாவேசம் உச்சநிலையில் இருந்த காலம் அது! தேசபக்தியானது தமிழ்ப்பற்றோடு பிணைந்து வளர்ந்த காலமுமாகும்!

## சிவாவும், வ.வே.சு.வும்

தியாகி சுப்பிரமணிய சிவம், மொகலாய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி மாண்ட சிவாஜி - செஞ்சி தேசிங்கு ஆகிய மாவீரர்களின் வரலாறுகளை பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்புக்கும் பயன்படும் வகையில் நாடகங்களாக எழுதினார். அவற்றை, சிவமும் அவருடைய "ஸ்ரீ பாரத விலாச சபை"யினரும் தமிழகமெங்கணும் சென்று நடித்துக் காட்டினர். நாடகங்களில் வசூலான பணத்தைத் தேச விடுதலை இயக்கத்திற்காகப் பயன்படுத்தினர்.

சிவா குழுவினரின் "தேசிங்கு" நாடகம் சிதம்பரத்திலே அரசினரால் தடை செய்யப்பட்டது. அரசின் அடக்குமுறையை எதிர்த்து நாடகத்தை நடத்திய தேசபக்தர்கள் சார்பாக அப்போதைய சென்னை சட்டமன்றத்திலே கண்டனக்குரல் கொடுத்தார் நாவலர் சத்தியமூர்த்தி. இவரும் நாடகத்துறையில் அக்காலத்தில் "சுகுண விலாஸ சபையில்" சேர்ந்து விடுதலைப்போராட்ட மையக்கருத்துள்ள நாடகங்களில் நடித்துப் புகழ்பெற்றதுண்டு. தேச விடுதலைப் போருக்கு வெற்றி தேடும் பொருட்டாக நாடகப் பணியில் ஈடுபட்டவர்களில் வ.வே.சு.ஐயரும் ஒருவராவார்.

(பூங்கொடி பதிப்பகம் வெளியிட்ட
"விடுதலைப்போரில் தமிழ் வளர்ந்த வரலாறு"
புத்தகத்திலிருந்து)

அவர்களுக்கு அசல் அடிமைகளாகிவிடாமல் நம்மவர்களைக் காப்பாற்ற மதத்தலைவர்களும், சமூகச் சீர்திருத்தவாதிகளும் விழிப்போடு அறிவே துணையாகச் செயல்படலானார்கள். அவர்களில் முன்னின்று பாடுபட்ட ராஜா ராம்மோகன் ராய், 19ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் தோன்றிய "மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தை" என்றே போற்றப்பட்டார்.

பன்மொழிப் புலவரான அவர், வங்காளத்தைச் சேர்ந்தவர். ஆத்மீக சபை, பிரம்ம சமாஜம் ஆகியவற்றின் நிறுவனர் இவரே. இவருக்குப் பின்னர் இந்திய மக்களிடம் ஆங்கிலேய மோகம் வேரூன்றாமல் தடுக்கும் நோக்கில்-பிரார்த்தனை சமாஜம், ஆரியசமாஜம், ராமகிருஷ்ணமடங்கள், பிரம்மஞான சபை போன்றவை தோன்றின.

இந்திய மொழிகளுக்கும், இந்தியருக்கும் வாய்ப்பும் வசதியும் ஏற்படுத்திக் கொடுத்தால் ஆங்கிலத்தையும், ஆங்கிலேயரையும் விடச் சிறந்துவிளங்குவர் என்பதை மெய்ப்பித்தார், ராஜா ராம்மோகன் ராய்.

விஞ்ஞானக் கல்வி இந்திய ஏழை-எளிய மக்களுக்கும் கற்பிக்கப்பட வேண்டும் என்று ஆங்கில அரசை வலியுறுத்தினார்.

'சம்வத் கௌமுதி' என்ற வங்கமொழிப் பத்திரிகையொன்றையும், 'மிராட்-உல்-அக்பர்' என்கிற பாரசீக மொழிப் பத்திரிகை ஒன்றையும் நடத்தினார். அவற்றின்மூலம் தம் சீர்த்திருத்தக் கருத்துக்களைப் பரப்பிடலாயினார், இவர்.

இதைக்கண்ட ஆங்கில ஏகாதிபத்தியம், அந்த ஏடுகளுக்குத் தடைவிதித்தது; அதை எதிர்த்து வழக்காடி வென்றார், ராய்.

கணவன் இறந்து போனால், மனைவியும் உடன்கட்டை ஏறவேண்டும் என்றிருந்த 'ஸதி' என்ற கண்மூடிப்பழக்கத்தை அரும்பாடுபட்டு மண்மூடச் செய்த பெருமையாளர் இவர். 1829ல் இந்த 'ஸதித்திட்டம்' வில்லியம் பெண்டிங் பிரபுவால் சட்ட விரோத செயலாக அறிவிக்கப்பட்டது.




*இந்தியக்குடியரசு அரசியல் அமைப்பின் பூர்வாங்க வாசகம்.*

இதைத்தொடர்ந்து-பிற்காலத்தில் பலதார மணத் தடைச் சட்டம், சிறுவர் மணத் தடைச் சட்டம் போன்றவை கொண்டு வரப்பட்டன. விதவை மறுமணம் ஏற்கப்பட்டது. அடிமை முறை, பெண் குழந்தைக் கொலை ஆகியவை தடைசெய்யப்பட்டன.

நவீன கால மறுமலர்ச்சி, சமயச் சீர்திருத்த வரலாறெல்லாம் அடிமைப்பட்டுக்கிடந்த இந்தியாவில் தோன்றிட மூல காரணமாக இருந்தவரே மோகன்ராய் தான் என்று கவி தாகூரே சிறப்பித்துக் கூறியிருக்கிறார்.

ராயின் பின்னால்-அவருடைய மறுமலர்ச்சிப் பணிகளைத் தேவேந்திரநாத் தாகூர், கேசவ் சென் போன்றோர் தொடர்ந்தனர். 1772ல் இந்தியாவில் பிறந்த ராய், 1833ல் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தபோது பிரிஸ்டலில் இறந்துபோனார்.

— *பி.எல்.ஆர்.*

### அஞ்சாதே தமிழா!

*'தமிழா, பயப்படாதே! ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களையெல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய். ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே. 'ஜாதி இரண்டொழிய வேறில்லை' என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள். பெண்ணை அடிமையாகக் கருதாதே. முற்காலத்துத் தமிழர், மனைவியை 'வாழ்க்கைத் துணை' என்றார். ஆத்மாவும் சக்தியும் ஒன்று, ஆணும் பெண்ணும் சமம்!*

*- மகாகவி பாரதியார்*



**நாடக மேடைகள் மூலம் வெள்ளையரை நடுங்கவைத்த**

# விடுதலை இயக்கப் பாடகர்கள்

*- சிலம்புச்செல்வர் ம.பொ.சி.*

இந்திய விடுதலைப் போரின்போது இயற்றமிழும் இசைத்தமிழுமேயன்றி நாடகத் தமிழும் வளர்ச்சி பெற்றது. விடுதலைப் பாசறை வீரர்கள் நாடக மேடையையும் விட்டுவைக்கவில்லை. அதனையும் கைப்பற்றி ஏகாதிபத்திய எதிர்ப்புப் பிரசாரத்திற்குப் பயன்படுத்தினர்.

"நாடகம்" என்பதற்கு "நாடு முழுவதையும் தன்னகத்தே காட்டுவது" என்றும் பொருள் கூறப்படுகின்றது. ஆனால், விடுதலைப் போருக்கு முன்பு நாட்டின் நிலையைக் காட்டுவதாக நாடக மேடை இருக்கவில்லை. ஆம்; மன்னர் நாடு திகழ்ந்த பெருமையைக் காட்டும் சரித்திரங்களையோ, பின்னர் நாடு அன்னியர் வசப்பட்டு அல்லலுறுவதையோ, வருங்காலத்தில் நாடு அடைய வேண்டிய விடுதலைக்கான வழியையோ மக்களுக்குப் போதிக்கும் நாடகங்கள் அந்நாளில் நடத்தப்படவில்லை. மக்களுடைய வாழ்க்கையோடு பொருந்தாத இதிகாச-புராணக் கற்பனைக் கதைகளே நாடக மேடையிலே ஆதிக்கம் பெற்றிருந்தன. அந்த நிலையிலே மாறுதல் கண்டனர் தேசியவாதிகள்.

மராத்தி வீரன் சிவாஜி, செஞ்சி வீரன் தேசிங்கு, பாஞ்சாலங்குறிச்சிக் கட்டபொம்மன் ஆகிய ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களின் வீர வரலாறுகளையும்; காந்தியடிகள் சாத்வீக முறையில் தோற்றுவித்த தேசிய எழுச்சியையும் பரப்ப நாடக மேடையைப் பயன்படுத்தி, நாடகக் கலையிலே மறுமலர்ச்சி கண்ட பெருமையும் தேசியவாதிகளுக்கு உண்டு. இந்த உயரிய பணிக்காகக் கல்வியறிவும் முற்போக்குக் கொள்கைகளும் உடைய தேசியவாதிகள் சிலர் நாடக ஆசிரியர்களாகவும், நடிகர்களாகவும் மாறினர். இவர்களுடைய தொடர்பு காரணமாகத் தொழில்முறை நடிக-நடிகையரிலும் பலர் தேசியவாதிகளாயினர். இந்த மாறுதல்களால் நாடகத்தமிழ் வளமும் வளர்ச்சியும் அடைந்தது. தேச விடுதலை ஆர்வத்தையும் சமூக சீர்திருத்தக் கொள்கைகளையும் பிரதிபலிக்கும் நவீன நாடக நூல்கள் தோன்றின.

இந்தக் காலத்தில்தான் "கூத்தாடிகள்" என்று பெயர் பெற்று மேன்மக்களால் இழிவாகக் கருதப்பட்டுவந்த நடிக - நடிகையர் முதன்முதலாக அரசியல் பெருந்தலைவர்களால் மதிக்கப்படும் மாண்பைப் பெற்றனர். இது வரலாறு கூறும் வாய்மை.

## முதல் தேசிய நாடகம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலே, காங்கிரஸ் மகாசபையின் முதல் பத்தாண்டு காலப் பணியினையும், அதனால் விளைந்த பயன்களையும் விளக்கி, தமிழ்ப் பண்டிதர் கா.கோபாலச்சார் என்பவர் "ஆர்ய ஸபா" என்னும் பெயரால் தமிழில் நாடக நூலொன்று இயற்றினார். பெயர் வடமொழியில் அமைந்திருப்பினும், கவர்ச்சிகரமான எதுகை மோனை நடையிலே இயற்றப்பட்டுள்ளது. 102 பக்கங்களே கொண்ட இந் நாடக நூல், ஐந்து அங்கங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. இதில் உள்ள பாடல்களை ஆசிரியரே இயற்றியுள்ளார். மொத்தத்தில் நாடகம் தமிழில் எழுதப்பட்டிருப்பினும், பிராமணப் பாத்திரங்கள் இடையிடையே சமஸ்கிருத சுலோகங்களையும் முழக்குகின்றன. இஸ்லாமியப் பாத்திரங்கள், நிறைய பாரசீகச் சொற்களைக் கலந்து மணிப்பிரவாள நடையில் பேசுகின்றன.

ஐரோப்பியர்களே தோன்றும் ஒரு காட்சி முழுவதற்கும் உரையாடல் ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டுள்ளது. இது மேடையில் நடிக்கப்பட்டதா என்பது தெரியவில்லை. ஆனால், நடிப்பதற்காகவே இயற்றப்பட்டதாகும். தேசிய காங்கிரஸ் மகாசபை பிறந்த பின்பு தமிழில் எழுதப்பட்ட முதல் தேசிய நாடகம் இதுதான்.

## பாவலரின் பணி

காந்தி சகாப்தம் தோன்றுவதற்கு முன்பு நாடக அரங்கிலே ஏகாதிபத்திய எதிர்ப்புப் பிரச்சாரத்தை நடத்தியவர்கள் தெருக்கூத்துக் கலைஞர்களேயாவர். நவீன சாதனங்களைக் கொண்டு நகரங்களிலே நாடகம் நடத்திய கலைஞர்கள், சிறிது காலங் கடந்துதான் விடுதலை இயக்கத்தோடு தொடர்பு கொண்டனர். காந்தி சகாப்தத்தில்தானே ஏகாதிபத்திய எதிர்ப்புக்கிளர்ச்சி பொது ஜன இயக்கமாக மாறியது. தேசிய இயக்கத்தோடு தொடர்பு கொண்டால்தான் ரசிகப்பெருமக்களின் ஆதரவை நடிக-நடிகையர் பெறமுடியும் என்ற நிலை உருவானது. அதனால் நகரங்களிலே நாடகம் நடத்திய கலைஞர்களும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

சதாவதானம் தெ.பொ.கிருஷ்ணசாமிப் பாலவர் தேசிய நாடகங்களை எழுதுவதிலேயும் நடத்துவதிலேயும் பிற நாடகாசிரியர்களுக்கு முன்னோடியாக விளங்கினார்.

## ஜீவா சொன்ன

# தேசபக்திக் கதை

### -முக்தா சீனிவாசன்

நான் மாணவப் பருவத்தில் தொடங்கி, 1963 வரை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கத்தினராக இருந்தேன். அந்தக் காலத்தில் கும்பகோணம் சாராங்கபாணி சன்னதித்தெரு, கம்யூனிஸ்ட் இளைஞர்களின் சரணாலயமாக இருந்தது.

வெங்கடாச்சாரி என்கிற இளைஞர் (எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதியின் மூத்த சகோதரர்) எங்களுக்கெல்லாம் தலைவர்; அவர் மூலமாகக் கம்யூனிஸ்ட் தலைவர் ப.ஜீவானந்தம் அவர்களின் அறிமுகத்தை நான் பெற்றேன். எங்களது நட்பு ஜீவாவின் மரணகாலம் வரை தொடர்ந்து இருந்தது.

ஜீவா மிகப்பெரிய இலக்கியவாதி, ஆற்றல்மிக்க பேச்சாளர். பெரியாரிடம் ஆரம்பக்காலப் பயிற்சி பெற்றவர். தன்னலம் சிறிதும் இல்லாத அப்பழுக்கற்ற தேசபக்தர். சுதந்திரப்போராட்டத்தில் முழுமூச்சோடு கலந்துகொண்டவர்.

அவர் கூட்டங்களில் பேசும்போது சுதந்திர வீரர்களின் வரலாற்றை-உணர்ச்சிபூர்வமாக - குரலை மேலும் கீழும் ஏற்றி இறக்கி-க்தைபோல் சொல்லுவார். கேட்கும் மக்களிடையே கண்ணீர் வெள்ளமாகப் பெருகும்.




பேரறிஞர் அண்ணா அவர்களே கூட சொல்லியிருக்கிறார்; தான் 'ஜீவாவின் பேச்சுக்களை கூட்டத்தின் கோடியில் நின்று கேட்டு மகிழ்ந்ததுண்டு' என்று.

அப்படிப்பட்ட உயர்ந்த தேசபக்தரான ஜீவா, சென்னை மாநகரத்தில் நடந்த ஒரு சுதந்திரப்போராட்ட நிகழ்ச்சியை, கேட்பவர் உள்ளம் எல்லாம் நெகிழ நெகிழச் சொல்லுவார். அதை நான் இக் கட்டுரையில் எடுத்தாள்கிறேன்:

1928ஆம் ஆண்டு -

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், தன்னிடம் அடிமைப்பட்டுள்ள இந்திய நாட்டில் எழுந்துள்ள சுதந்திர வேட்கையைத் திசை திருப்பிவிட, சைமன் கமிஷன் என்கிற ஒரு குழுவை அமைத்தது. அந்தக்கமிஷன், இந்தியாவிற்கு பிரிட்டிஷ் மேலாண்மைக்கு உட்பட்டு-எந்த அளவுக்குக் குடியேற்ற நாடு என்கிற அந்தஸ்தையும், அதை ஒட்டி சிறுசிறு சலுகைகளையும் அளிக்கலாம் என்று ஆராய்ச்சி செய்யவே இந்தியா வந்தது. அந்தக்குழுவில் இந்தியர் யாரும் இல்லை. அத்துனைபேரும் ஆங்கிலேயர்.

அந்தக்குழுவை பகிஷ்கரிக்க காந்திஜி உத்தரவிட்டார்.

நமது சென்னைக்கு அந்த சைமன் கமிஷன் வந்தது. மாணவர்கள் அணிஅணியாகத் திரண்டு அதை பகிஷ்கரித்தார்கள்.

''சைமன்-திரும்பிப்போ'' என்று குரல் எழுப்பியபடி உயர்நீதிமன்றத்தின் முன்னால் மாணவர்கள் கூடினார்கள். சற்று உணர்ச்சி வசப்பட்ட ஒரு மாணவன் நீதிபதியின் காரின் மீது பாஸ்பரசை வீசிவிட்டான். ''நீதிமன்றத்தை மூடிவிடுங்கள்'' என்கிற அவனது வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டதன் விளைவே அது. ஆத்திரம் கொண்ட நீதிபதி, ராணுவத்திற்குத் தகவல் தருகிறார். அவர்கள் தங்களது பீரங்கிப் படையோடு வருகிறார்கள். மாணவர்களைச் சுடுவதற்கு இராணுவம் தயாராகிறது.



இதைக்கேட்டார் பிராட்வே பகுதியில் பத்திரிகை நடத்திக்கொண்டிருந்த டங்குடுரு பிரகாசம் (இவர் பிற்காலத்தில் சென்னை மாநிலத்தின் முதலமைச்சரானார்). ''ஆந்திர கேசரி'' என்கிற பட்டப்பெயரும் பெற்றார். நேராக உயர்நீதிமன்றப் பகுதிக்குப் பதறிக்கொண்டு வருகிறார், டி. பிரகாசம்.

மாணவர்களை ஒரு பக்கமாக நிற்கும்படி உத்தரவிடுகிறார்.

ஆர்மீனியன் தெரு நுழைவு வாசல்.

டி. பிரகாசம் தன் கார் மீது ஏறி நிற்கிறார். சட்டைப் பொத்தானைக் கழற்றுகிறார். இரு கைகளாலும் சட்டையை விலக்கிக்கொண்டு மார்பைத் திறந்து காட்டுகிறார்.

"இதோ இங்கு நிற்கும் அனைத்து மாணவர்கள் என் இந்த இதயத்தில் வசிப்பவர்கள். இவர்களைச் சுடுவதற்குப் பதிலாக என்னைச் சுட்டுவிடுங்கள். என் திறந்த மார்பு உங்கள் துப்பாக்கிக்குறியின் எல்லைக்குள்ளேயே இருக்கிறது, சுடுங்கள். என் மார்பை நோக்கி உங்கள் குண்டுகள் வரட்டும்'' என்று ஆங்கிலத்தில் கர்ஜிக்கிறார், ஆந்திரகேசரி பிரகாசம் பந்துலு!

அதிகாரிகள் கையைப் பிசைகின்றனர். "நாம் மேற்கொண்டு எது செய்தாலும் சென்னையே இரத்தக்குளம் ஆகிவிடும்'' என்பதை உணர்கிறார்கள்.

இராணுவம் நகர்கிறது.

பீரங்கிகள் வெளியேறுகின்றன.

வெள்ளையன் தோற்கிறான்.

சைமன் கமிஷன் திரும்பிப்போகிறது!

மரணத்தைச் துச்சமென மதித்து மாணவர்களுக்குத் தலைமையேற்ற அந்த பிரகாசம்தான் எங்களுக்கு-உங்களுக்கு-இந்த நாட்டுக்கு - அண்ணன், அப்பன் - ஆசான்" என்று பேசுகிறார் தோழர் ஜீவா.

இந்தக் கதையை உணர்ச்சிப் பிழம்பாக உரத்த குரலில் அவர் சொல்லி முடிக்கும்போது கூட்டத்தில் ஒருவன் ''வந்தேமாதரம்'' என்று கத்தினான். நாங்களும் பதிலுக்கு "வந்தேமாதரம்-அல்லாஹூ அக்பர்" என்று பெரும் குரல் கொடுத்தோம்.



# சிரிக்கத் தெரிந்தவர் சிரிக்க வைத்தவர்!



இலக்கியங்களில் சொல்லப்படும் ஒன்பது வகைச் சுவைகளில் நகைச்சுவை சிறப்பிடம் பெறுகிறது. மனித வாழ்க்கையில் நகைச்சுவைக்குத் தனி மதிப்பு இருந்து வருகிறது. பொதுக்கூட்டங்களில் நகைச்சுவை உணர்வுடன் உரையாற்றுகின்ற பேச்சாளர்கள், பொதுமக்களின் பாராட்டுகளை எளிதில் பெறுகிறார்கள்.

நாடகத்திலும் சரி, திரைப்படத்திலும் சரி; நகைச்சுவைக் காட்சிகளை மக்கள் மிகவும் ரசிக்கிறார்கள். நகைச்சுவைக் கலைஞர்கள் மிகுந்த பாராட்டை எளிதில் பெற்றுவிடுகிறார்கள். தமிழகத் திரைப்பட நகைச்சுவை நடிகரான கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் மேல்நாட்டு நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளின் ஆகிய இருவருக்கும் சிலை எடுத்துப் பெருமை சேர்த்துக்கொள்கிறார்கள்,ரசிகர் பெருமக்கள்.

நமது நாட்டில் பல அரசியல் தலைவர்களிடம் நகைச்சுவை உணர்வு பெருகியிருக்கிறது.

வாழ்நாள் முழுவதும் அறப்போரிலும் அரசியல் நிகழ்ச்சிகளிலும் ஆவேசச் சொற்பொழிவுகளிலும் ஆன்மீக போதனைகளிலும் பிரார்த்தனைக் கூட்டங்களிலும் கலந்துகொண்ட அண்ணல், நகைச்சுவை உணர்வையும் சுவீகரித்துக்கொண்டிருந்தார் என்ற செய்தி பிறரையும் வியப்பில் ஆழ்த்தும்.

ஒருமுறை காந்தி அவர்களிடம ஓர் அன்பர் கேட்டார்; "வாழ்க்கைக்கு நகைச்சுவை அவசியம் என்று நீங்கள் கருதுகிறீர்களா ?"

"அந்த இயல்பு என்னிடம் இல்லாவிட்டால் நான் என்றோ தற்கொலை செய்து கொண்டிருப்பேன்" - காந்தியடிகள் அளித்த பதில் இது.

நகைச்சுவையை, சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் காந்தியடிகள் பயன்படுத்தி இருக்கிறார் என்பதை அவரது நெடிய வரலாறு தெரிவிக்கிறது.

காந்தியடிகள், வட்டமேஜை மாநாட்டிலே கலந்துகொள்வதற்காகக் கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அதே கப்பலில் பயணம் செய்த ஒரு வெள்ளைக்காரன் தான் எழுதிய கவிதை ஒன்றினை அடிகளிடம் கொடுத்து, "இது நான் எழுதிய கவிதை; இதைப் படித்துப் பார்த்து எப்படி இருக்கிறது என்று சொல்லுங்கள்' என்றார். அந்தக் கவிதையைப் படித்துப்பார்த்த காந்தி அடிகள், தம்மைப்பற்றிக் கேலி செய்து அந்தக் கவிதையில் எழுதப்பட்டிருப்பதைப் புரிந்து கொண்டார்.

சிறிது நேரம் கழித்து அந்த வெள்ளைக்காரன் அடிகளிடம் வந்தான்-

"கவிதை .எப்படி இருந்தது?" அவன் கேட்டான்.

"கவிதையின் சாரத்தை மட்டும் நான் தனியாக எடுத்து வைத்திருக்கிறேன்" - அடிகள் பதில் சொன்னார்.

வெள்ளைக்காரனுக்குப் புரியவில்லை. திகைப்பு ஏற்பட்டது.

"இதுதான் நான் குறிப்பிட்ட சாரம்" என்று சொல்லியபடி ஒரு குண்டூசியை எடுத்துக் காண்பித்தார் காந்தியடிகள்.

அந்த வெள்ளைக்காரன் எழுதிய கவிதையினால் பயன் எதுவும் கிடையாது. ஆனால் அந்தக் காகிதத்தில் இணைக்கப்பட்டிருந்த குண்டூசிதான் பயன்படக்கூடியது என்பதை நகைச்சுவை ததும்பக் காந்தியடிகள் எடுத்துரைத்தார்.

ஒருமுறை திபெத்தின் முனிவரான 13வது தலாய்லாமா, டான் ஷ்யூன்ஷான் என்னும் சீன அறிஞரின் மூலம் காந்தியடிகளுக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தார். கடிதத்தைப் பிரித்துப் பார்த்த அண்ணல் அது திபெத் மொழியில் எழுதப்பட்டிருப்பதை அறிந்தார். வந்திருப்பவருக்கு திபெத் தெரியாது என்பதை அண்ணல் அறிந்துகொண்டார்.

"தயவுசெய்து கடிதம் கிடைத்த விவாரத்துக்குப் பதில் எழுதுவீர்களா ?" சீன அறிஞர் காந்தி அடிகளைக் கேட்டார்.

"நிச்சயம் எழுதுகிறேன்! நான் குஜராத் மொழியில் பதில் எழுதிப் போடப்போகிறேன். அப்போதுதான் தலாய்லாமாவும் என்னைப்போல மொழி தெரியாமல் விழித்துத் திண்டாடுவார்! நான் இங்கே திண்டாடிச் சிரிப்பது போல அவரும் சிரிப்பார்" நகைச்சுவை ததும்பும் விதத்திலும் பொருள் பொதிந்த முறையிலும் பதிலளித்தார் காந்தி அடிகள்.

ஒருமுறை சிறையில் இருந்தபோது காந்தி அடிகளுக்குக் கடுமையாகச் சளிப் பிடித்துக்கொண்டது. டாக்டர் அவரது உடல் நிலையைச் சோதித்துப் பார்த்தார்.

- புலவர் தமிழ்ப்பித்தன்



"ஊசி போட்டுக்கொண்டால் மூன்றே நாளில் சளி ஓடிப்போகும்! இல்லாவிடில் குணமாவதற்கு மூன்று வாரமாவது ஆகும்"-டாக்டர் சொன்னார்.

"ஊசி எதற்கு? வேண்டாம்! மெதுவாய்க் குணமாகாட்டும்! எனக்கு இப்போது அவசரமில்லை" - காந்தி அடிகள் சொன்னார்.

"உங்களுக்கு அவசரம் இல்லாதிருந்திக்கலாம். உங்கள் சளி, மற்றவர்களுக்கும் பரவக்கூடும் அல்லவா ?" டாக்டர் கேட்டார்.

"அப்படி என்றால் அவர்களுக்குப் போடுங்கள் ஊசியை" - காந்தியடிகள் சட்டென்று சொன்னார்.

டாக்டரும் சிரித்துவிட்டார், நகைச்சுவை நிறைந்த இந்தப் பதிலைக் கேட்டு!

காந்தி அடிகள் இலண்டனுக்குப் போயிருந்தபோது பிரிட்டிஷ் மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் அவரை விருந்துக்கு அழைத்திருந்தார். மன்னரைச் சந்திக்கச் செல்லும் காந்தியடிகள் எத்தகைய ஆடை அணிந்து கொள்வார் என்று அந்த நாட்டுப் பத்திரிகைகள் பிரச்சினையைக் கிளப்பியிருந்தன.

காந்தி அடிகள் எந்த விதமான சிறப்பான உடைகளையும் அணியாமல், வழக்கம்போல் நான்கு முழ வேட்டி அணிந்து மேலே ஒரு துண்டைப் போர்த்தியவாறு சென்றார்.

விருந்துக்கு மறுநாள்; ஒரு பத்திரிகை நிருபர் காந்தி அடிகளைச் சந்தித்து

"நீங்கள் நேற்று மன்னரைச் சந்திக்க என்ன வகை உடை அணிந்து சென்றீர்கள் ?" என்று வினவினார்.

"எப்பொழுதும் அணிந்துவரும் இதே உடையுடன் தான் சென்றேன்" - நமது வேட்டியையும் மேல் துண்டையும் காண்பித்தார் காந்தி அடிகள்.

"வெறும் வேட்டி மாத்திரம்தானா ?" வியப்புடன் கேட்டார் நிருபர்.

"ஆம்! இது போதாதா? உங்கள் அரசர்தான் எனக்கும் சேர்த்து உடை அணிந்திருந்தாரே"-நகைச்சுவை ததும்ப பதில் தந்தார் காந்தி அடிகள்.



சிறையிலிருந்த போது ஒருமுறை கவியரசி சரோஜினி தேவியாருடன் பேட்மின்டன் விளையாட விரும்பினார் காந்தி அடிகள். ஆனால், தனக்கு நன்கு விளையாடத் தெரியும் என்று சொன்ன அண்ணல் மட்டையை இடது கையில் பிடித்திருந்தார்.

"மட்டையை எந்தக் கையில் பிடிப்பதென்பது கூடத் தெரியவில்லை! நீங்கள் எப்படி விளையாடுவீர்கள் ?" சரோஜினி கேலி செய்தார்.

அண்ணல் சமாளித்துக்கொண்டு மட்டையை வலது கையில் பிடித்துக்கொண்டார். சில விநாடிகள் கழித்துப் பார்த்தபோது சரோஜினி மட்டையைத் தமது இடக்கரத்தில் வைத்திருப்பதைக் கண்டார்.

நீங்கள் மட்டும் மட்டையை இடக்கையில் ஏந்தியிருக்கிறீர்களே - சந்தேகத்துடன் கேட்டார் அண்ணல்.

"அதுவா? எனது வலக்கரம் சுளுக்கிக் கொண்டுவிட்டது. அதனால்தான் இடக்கரத்தில் மட்டையைப் பிடித்திருக்கிறேன்" - சரோஜினி பதில் தந்தார்.

சில விநாடிகள் கழிந்தன. அண்ணல் மறுபடியும் மட்டையை இடக்கரத்தில் ஏந்திக் கொண்டார். அதனைப் பார்த்த சரோஜினி, "இன்னமும் உங்கள் தவறைத் திருத்திக் கொள்ளாதிருக்கிறீர்களே" என்று கேட்டார்.

"முன்பு அது தவறாக இருந்திருக்கலாம். இப்போது அது தவறல்ல! ஒரு பெண்மணி இடக்கரத்தில் மட்டையைப் பிடித்துக்கொண்டு சிரமத்துடன் விளையாடும் போது, நான் மட்டும் வலக்கரத்தில் பிடித்து ஆடுவதை விரும்பவில்லை'' என்று அண்ணல் பதிலளித்தபோது சரோஜினி சிரித்துவிட்டார்.

ஏராளமான அரசியல் போராட்டங்களிலும், எண்ண முடியாத சத்தியாக்கிரகங்களிலும் ஈடுபட்டு-காவல் துறையினரின் கெடுபிடிக்கும் ஒற்றர்களின் கண்காணிப்புக்கும் அடிக்கடி ஆளாகிவந்த காந்தியடிகள் இப்படி நகைச்சுவைக்கனிகளையும் உதிர்த்திருக்கிறார். அண்ணல் சிரிக்கத் தெரிந்தவர் மட்டுமல்ல; பிறரைச் சிரிக்க வைக்கவும் தெரிந்தவர்! ★

## சோதனையில் வெற்றி

நம்முடைய ஒவ்வொரு
பணியிலும் புதிய புதிய
சோதனைகள் ஏற்படலாம்.
பணிவு, எளிமை, அகிம்சை,
சகிப்புத்தன்மை ஆகிய
நல்ல சில பண்புகளினால்
அத்தகைய சோதனைகளில் எல்லாம்
நாம் பரிபூரணமான
வெற்றி அடைந்துவிடலாம்.

- காந்தியடிகள்

# விடுதலைப் போரில்
# வீராங்கனைகள்

புலியையே முறத்தினால் அடித்து விரட்டிய வீராங்கனைகள் பலரும் நம்முடைய தமிழ்நாட்டில் வாழ்ந்திருக்கிறார்கள்.

பகைவரோடு சண்டையிட்ட தன் மகன், முதுகிலே காயம்பட்டு மாண்டான் என்பதை உணர்ந்த அணங்கொருத்தி இப்படிப்பட்ட கோழைக்கா பால் கொடுத்து வளர்த்தோம் என்று வாளெடுத்துத் தன் மார்பகங்களையே அறுத்தெறிந்த வீரத்தின் விளைநிலமே தமிழகம்.

இந்த வீரமண்ணுக்கு, அந்தப் புறநானூற்றுக்காலப் பெண்மணிகளைப்போல ஏராளமான மங்கையர் திலகங்களைப் பெற்றுத் தரும் சக்தி இன்னமும் அற்றுப் போய் விடவில்லை.

இதை மெய்யாக்கும் வகையில் ஒவ்வொரு காலகட்டத்திலும் எண்ணற்ற வீராங்கனைகள் நம்நாட்டின் எங்கோ ஓர் மூலையில் பிறந்திருக்கிறார்கள்; புகழ் நிறுவி இறந்திருக்கிறார்கள்.

குறிப்பாக-சுதந்திரப் போர்க்களத்தில் சுடர்விட்ட அந்த வீரத் தாய்மார்களை நம்மால் மறக்கவே முடியாது.

இந்தியாவில் கும்பினி ஆதிக்கத்தை எதிர்த்து விடுதலை வேள்வி துவக்கப்பட்ட ஆரம்பக் காலகட்டம், இந்திய விடுதலையின் 50-வது ஆண்டு விழா கொண்டாடும் இந்நாளில், நாம் எண்ணிப்பார்த்து இறும்பூது எய்தத் தக்கது ஆகும். அதிலும் குறிப்பாக, எழுச்சி கொண்டு அந்நாளில் வெகுண்டெழுந்த தாய்க்குலத் தகைமையாளர்களை நாம் நினைவுகூர்தல் நன்று.

ராஜபுத்திர குலத்தில் பிறந்த பத்மினி, கோண்ட்வானா மாநிலத்தில் பிறந்த துர்க்காவதி, மகாராட்டிரத்தில் பிறந்த தாராபாய், ஜான்சி நாட்டு அரசி ராணி லட்சுமிபாய் போன்ற மங்கையர் திலகங்கள் இந்தியாவைச் சூழ்ந்த அடிமை இருள் விலக்க அரும்பாடு பட்டவர்களில் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

மதுரை மங்கம்மாளைப் போலத் தமிழகத்தில் போராட்டக் களம் கண்டு புகழ்பெற்ற பெண்மணிகள் பலராவர். இந்திய விடுதலைப் போரில் தம் வாழ்வையே தியாகம் செய்த அந்தத் தன்மானப் பெண்மணிகள் பற்றிய விவரக் குறிப்புகளின் தொகுப்பே இந்தக் கட்டுரை.

**கிட்டூர் சென்னம்மா**

"விடுதலைப் போரில் கர்நாடகம்" என்ற நூலில், இந்தியாவில் முதன்முதலாக விடுதலை எழுச்சிக்கு வித்திட்டவரே பெண்மணிதான் என்கிற குறிப்புக் காணப்படுகிறது.

1824-ல் நடந்த கிட்டூர் சென்னம்மாளின் போராட்டம் தேசிய முக்கியவத்துவம் வாய்ந்த ஒன்றாகும். ஜான்சி ராணி லட்சுமிபாய்க்கு ஒரு தலைமுறைக்கு முன்பாகவே, கிட்டூர் ராணி சென்னம்மா, ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராக ஆயுதமேந்திப் போராடி இந்தியாவிலேயே முதல் புரட்சியாளராக விளங்கினார் என்று அந்நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதற்குக் கால் நூற்றாண்டுக்கு முன்பே - தமிழகத்தில் பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டியக் கட்டபொம்மனால் எழுச்சிக்கனல் மூட்டப்பட்டதும், அந்நூலில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, விடுதலைப் போரில் இறங்கிய முதல் பெண்மணி என்கிற பெருமை வேண்டுமானால் அவருக்குச் சேரக்கூடுமா என்றால் அப்படியும் தெரியவில்லை.

ஏனென்றால், 1783க்கு முன்பே கர்னல் ஸ்மித் என்பானோடு, சிவகங்கைச் சீமையை ஆண்டு வந்த





> *சுதந்திரப் போராட்டக் காலத்தில் களம்கண்ட பெண்மணி திருமதி ருக்மணி லட்சுமிபதி அம்மையார் அஞ்சல்தலை அண்மையில் வெளியிடப்பட்டது; தில்லையாடி வள்ளியம்மாள் நினைவகத்தை மேம்படுத்த முதலமைச்சர் கலைஞர் அவர்களால் ரூ.5.91 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவர்களைப்போல, விடுதலைப் போரில் துணிந்து நின்ற வீராங்கனைகள் பற்றி விவரிக்கும் கட்டுரை இது.*

முத்துவடுகரும், அவரது அன்பு மனைவி வீரமங்கை வேலு நாச்சியாரும் போரிட்டார்கள் என்கிறது நம் சுதந்திர காலத் தமிழக வரலாறு.

போரில் முத்துவடுகர் மாண்ட பின்னர், அதே வீர உணர்வுகளோடு சிவகங்கையை வேலுநாச்சியாரே ஆட்சி செய்து வந்திருக்கிறார். பிறகுதான் பெரிய மருது, சின்ன மருது இருவரும் ஆட்சிப் பொறுப்பேற்றனர்.

ஆகவே, விடுதலைப் போரில் முதலிடம் பெறுகின்ற பெண்மணி யார் என்பதை ஆய்வாளர்கள் கருத்துக்கே விட்டுவிடுவோம்.

**அன்னிபெசன்ட்**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே நியூயார்க்கைச் சேர்ந்த பிளாவட்ஸ்கி அம்மையாரும், கர்னல் ஆல்காட் என்பாரும் 'தியோசாபிகல் சொசைட்டி' என்ற பிரம்மஞான சங்கத்தைத் தோற்றுவித்தார்கள். 1875ல் தொடங்கப்பட்ட அச் சங்கத்தில், அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவரான அன்னி பெசண்ட் அம்மையார் சேர்ந்தார். பின்னர் அவர் சென்னை வந்து சேரவே 1883ல் அச் சங்கத்தின் தலைமை நிறுவனம் அடையாறில் நிறுவப்பட்டது.

இந்தியாவில் தேசியக்கல்வி பரப்புவதில் இச்சங்கம் மிகவும் ஈடுபாடு கொண்டது.

1916ல். பெசண்ட் அம்மையார் காங்கிரஸில் சேர்ந்தார். அவரால் தோற்றுவிக்கப்பட்ட "ஹோம் ரூல்" இயக்கத்தை மகாத்மா காந்தியடிகளும் கூட ஆதரித்துப் பிரச்சாரம் செய்ததுண்டு.

தமிழ்நாட்டைத் தாய்வீடு போல் கொண்ட அவ்வம்மையார், இந்தியக் குடிமகளாகவே தம்மைப் பதிவு செய்துகொண்டார். இதனாலேயே, 1917ல் கல்கத்தா காங்கிரஸ் தலைவராக்கப்பட்டார் அன்னிபெசன்ட் அம்மையார். கோவையிலும் உதகமண்டலத்திலும் இருந்த அவரது இல்லங்கள் இரண்டும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் அவ்வப்போது வந்து பல்வேறு அரசியல் பிரச்சினைகள் பற்றிக் கலந்தாலோசிக்கும் கேந்திரங்களாயின.

''காமன்வீல்'', ''நியூஇண்டியா'' ஆகிய பத்திரிகைகளையும் துவக்கிய அவ்வம்மையார், தமிழகத்தில் இந்திய விடுதலைக் கனல் மூட்டிய முதல் பெண்மணி என்றுகூடக் கூறப்படுவதுண்டு. அந்த அளவுக்குப் பாடுபட்ட அன்னிபெசண்ட் அம்மையார், பிரிட்டிஷ் மக்களின் பார்வையை இந்தியாவின்மேல் திருப்பி வெற்றி கண்டவரும் ஆவார்.

திருமதி மார்கரெட்கசின்ஸ் என்கிற வெள்ளைக்காரப் பெண்மணியும் தியோசாபிகல் சங்கத்தின் சார்பில் காங்கிரசில் சேர்ந்தார். 1932-ல், நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறைபுகுந்தவர் இவர். 1893-ல் இந்தியக் கம்பெனியின் வழக்கொன்றை நடத்துவதற்காகத் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றார் காந்தியடிகள். அந்நாட்டில் இந்தியர் படும் அல்லல் அவர் கவனத்தில் பட்டது. அங்கே நிறவெறி பிடித்த வெள்ளையரால் ஒப்பந்தக் கூலிகளாகக் கடத்தப்பட்ட இந்தியர்களில் பெரும்பாலோர் சென்னையிலிருந்து கொண்டு செல்லப்பட்டோராவர்.



தில்லையாடி வள்ளியம்மை

**தில்லையாடி வள்ளியம்மை**

இதனால், அங்கு நடத்தப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டங்களில் பெரும்பாலும் தமிழர்களே பங்கேற்றார்கள். தில்லையாடி வள்ளியம்மை என்ற தமிழகத்து வீராங்கனை அப்படிப் போராடியவர்களில் குறிப்பிடத்தக்கவராவார். சத்தியாக்கிரகப் போராட்டம் காரணமாகத் தமது 17-ஆம் வயதில் சிறையில் அடைக்கப்பட்ட அவர் சிறைக்கொடுமை தாங்காமல் நோயுற்று,

# தமிழகத்தில் நேரு



தீரர் சத்தியமூர்த்தியின் அழைப்பின் பேரில் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தார், நேரு. சென்னையில் தீரர் சத்தியமூர்த்தி வீட்டிலேயே தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால், சில அரசியல் மாறுபாடுகளால் அவரைப் பிடிக்காத சிலர், அவர் வீட்டில் தங்கக்கூடாது என்று நேருவுக்குத் தந்தி கொடுத்தார்கள்; கடிதம் எழுதினார்கள். நேரு அதைப் பெரிதுபடுத்தவில்லை. தீரர் சத்தியமூர்த்தியின் விருந்தினராகவே தங்கினார்.

பொன்னேரி புகை வண்டி நிலைய வரவேற்பில் பத்தாயிரம் ரோஜாக்களால் தயாரிக்கப்பட்ட மிகப் பெரிய மாலையொன்று அவருக்கு அணிவிக்கப்பட்டது. "இவ்வளவு பெரிய மாலையா? இதைப்போல இதற்குமுன் நான் எங்கும் பார்த்ததில்லை" என்று சொல்லிச் சொல்லி வியப்படைந்தார் நேரு.

மறுநாள் காலை நேரம். தீரர் சத்தியமூர்த்தியும், காமராசரும் சுற்றுப்பயணத்தில் நேருவுடன் புறப்படத்தயாராக இருந்தார்கள். வீட்டு வாசலில் நிறுத்தப்பட்டிருந்த காருக்கு வந்தார் நேரு. அப்போது நேரு எழுதிய 'சுயசரிதை' நூலுடன் வாசலில் நின்ற இளைஞர் ஒருவர், அதிலொரு கையெழுத்துப் போட்டுத்தருமாறு வேண்டினார்.

"மத்தியானம் வாருங்கள், போட்டுத்தருகிறேன்" என்றார் நேரு.

அந்த இளைஞர் விடுவதாயில்லை.

"கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்; கையெழுத்திடுங்கள்" என்றார்.

"யாரானாலும் கெஞ்சுவது எனக்குப் பிடிக்காது" என்றார் நேரு.

"என்ன செய்வது, நம் நாடே பிச்சைக்கார நாடுதானே?" என்று பதிலுக்குச் சொன்னாரோ இல்லையோ, நேருவுக்கு குபீரென்று கோபம் வந்துவிட்டது.

"இந்த நாடும் பிச்சைக்கார நாடல்ல. நானும் பிச்சைக்காரனல்ல. பிச்சை கேட்பவர்களையே நான் வெறுக்கிறேன்".

- என்று உரத்த குரலில் சொல்லிவிட்டுக் காரில் ஏறினார், நேரு.

தீரர் சத்தியமூர்த்தி அந்த இளைஞரைக் கோபத்தோடு பார்த்தார். ஆனால், நேருவின் கோபமோ அடுத்த நிமிஷம் ஆறிவிட்டது. அந்த இளைஞரின் கையிலிருந்த புத்தகத்தைத் தாமே வேகமாக வாங்கி அட்டையைப் புரட்டி, முதல் பக்கத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துவிட்டு வேறுபக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டார்.

இதைக்கண்ட சத்தியமூர்த்தியும், காமராசரும் வியப்போடு ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். அந்த இளைஞரோ? "பண்டித நேரு வாழ்க" என்று உற்சாகமாகக் குரல் எழுப்பினார்.

நேருவுடன் பகல் உணவு சாப்பிட, ராஜாஜியையும் அழைத்திருந்தார் சத்தியமூர்த்தி. நேருவும் அவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அது, ராஜாஜி அரசியலை விட்டு ஒதுங்கியிருந்த நேரம். பேச்சோடு பேச்சாக அதை ஒருவர் நினைவுபடுத்தினார்.

உடனே நேரு "அதை நான் நம்பமாட்டேன்; சிறுத்தைப் புலி தன் வரிகளை எப்படி மாற்றிக்கொள்ள முடியும்?" என்று வேடிக்கையாகக் கேட்டார். ராஜாஜி உட்பட அனைவருமே சிரித்துவிட்டனர்.

குபீரென்று கோபப்படுவதும், அடுத்த வினாடியே அதை மறந்து விடுவதும் நேருவுக்கே உரிய தனித்தன்மை. சில நேரங்களில் அவர் குழந்தையைப்போல் மாறிவிடுவதும் உண்டு.

**"இந்தியா சுதந்திரம் பெறுமுன்-1936-ல் (அக்டோபர் 5-20) தமிழகமெங்கும் சுற்றுப்பயணம் செய்தார், அந்நாள் இந்தியக் காங்கிரஸ் தலைவராக இருந்த ஜவகர்லால் நேரு. அப்போது நடந்த சில சுவைமிகு சம்பவங்கள் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன."**



ஒருநாள் சுற்றுப்பயணம் முடித்துவிட்டு வந்திருந்த நேரு. அன்றைய பத்திரிகைகளில் தமது நிகழ்ச்சிகள் பற்றிய புகைப்படங்கள் வெளிவந்திருப்பதை வியப்போடு பார்த்துக்கொண்டிருந்தார். பிறகு பக்கத்தில் இருந்தவரிடம் "ஒரு கத்தரிக்கோல் வேண்டுமே?" என்றார்.

"கத்தரிக்கோல் எதற்காக?" என்று கேட்டார்கள்.

"பல்லாயிரம் மைல்களுக்கப்பால் இருக்கிற என் மகள், இதையெல்லாம் பார்த்தால் தன் தந்தைக்குக் கிடைக்கும் வரவேற்பைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைவாள்; இந்தச் செய்தித்தாள்களில் உள்ள படங்களைக் கத்தரித்து அவளுக்கு அனுப்பப்போகிறேன்" என்றார், நேரு.

"அப்படியானால் இந்தப் படங்கள் எதற்கு? அவர்களிடம் கேட்டு அந்தப் புகைப்படங்களையே வாங்கித் தருகிறோம்" என்றார்கள், அங்கிருந்தவர்கள்.

"அப்படியானால் அந்தப் படங்களைக் கண்ணாடி போட்டே வைத்துக்கொள்வாள் அவள்" என்று பெருமகிழ்ச்சியோடு தெரிவித்தார் நேரு. அவருடைய இந்த மகிழ்ச்சி அங்கிருந்த அனைவரையும் அதிசயிக்கச் செய்வதாக இருந்தது.

கோவை மாவட்டம் கோபியில் நேருவுக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்குப் பேசுவதாக முன்னேற்பாடு இல்லை. ஆனால் அங்கிருந்த அமைதியான மக்களைக் கண்ட நேரு சுமார் அரைமணி நேரம் உரையாற்றினார்.

"இதுபோன்ற அமைதியான மக்களிடையே பேசுவது எனக்கு ஆனந்தமாக இருக்கிறது" என்றும் அவர் பெருமையோடு சொன்னார்.

பிறகு, ஈரோட்டில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேச ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கே கூடியிருந்த மக்கள் செய்த ஆர்ப்பாட்டம் நேருவுக்குப் பிடிக்கவில்லை. "அமைதியாக இருந்தாலன்றி, நான் இங்கே பேசப் போவதில்லை" என்று பணிவாகவும் கடுமையாகவும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். மக்கள் அமைதியடைவதாக இல்லை.

அவ்வளவுதான், "இன்னொரு சமயம் பார்த்துக் கொள்ளலாம்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார் நேரு.

பொள்ளாச்சி பொதுக்கூட்டம் இரவு 10 மணிக்கு; நேரு முதலானோர் அங்கு வரவே சுமார் பன்னிரெண்டு மணியாகிவிட்டது.

கூட்டம் முடிந்ததும் "உடுமலைக்குப் போகலாம்" என்றார் நேரு.

"நீங்கள் சாப்பிட வருவீர்கள் என்று சேட்ஜி காத்திருப்பாரே?" என்றார் ஒருவர்.

## ஆகஸ்ட்டுத் தீர்மானம்

**"வெள்ளையனே வெளியேறு" தீர்மானம் 1942 ஆகஸ்ட் 8ஆம் நாளன்று பம்பாயில் கூடிய காங்கிரஸ் பெருங்குழுவில் கொண்டுவரப்பட்டு நிறைவேறியது.**

**"ஆகஸ்ட் 8 தீர்மானம்" என்று இந்திய வரலாற்றில் தனிப்படக் குறிப்பிடப்படும் அத்தீர்மானத்தை முன்மொழிந்தவர் ஜவகர்லால் நேரு; அதை வழிமொழிந்து பேசியவர் சர்தார் வல்லபாய் படேல்.**

"சேட்ஜியும் அவர் விருந்தும் காத்திருக்கலாம்; ஆனால் என்னுடைய மக்களை நான் காக்க வைக்க முடியாது" என்று மிகுந்த கண்டிப்போடு சொல்லிவிட்டார், நேரு.

உடுமலைப்பேட்டை பொதுக்கூட்டத்தை முடித்துக் கொண்டு தங்குமிடத்திற்கு வந்து சேர்ந்தார்கள் அனைவரும். பொள்ளாச்சியில் சாப்பாடு என்று சொல்லப்பட்டிருந்ததால், அங்கே உணவு தயாரித்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

"இப்படியா இருப்பீர்கள்?" என்று அங்கிருந்தவர்களிடம் சப்தம் போடத் தொடங்கினார் தீரர் சத்தியமூர்த்தி.

இதைக் கவனித்த நேரு "சத்தியமூர்த்தி, இரவில் சாப்பிடாமல் இருப்பது உடம்புக்கு மிகவும் நல்லது தெரியுமா? அதற்காக அவர்களிடம் கோபப்படாதேயும்" என்று சிரித்தபடி சொல்லி, அவரை அடக்கினார்.

நேருவைத் தொட்டுப் பார்க்கும் ஆவலில் கோவை மாவட்ட மக்கள் எடுத்துக்கொண்ட உரிமை, "அவருடைய சிவந்த கரங்களில் நகக்கீறல்களாகக் கோடு கோடாகத் தெரிந்தது. இதைக் கவனித்த தி.சு. அவினாசிலிங்கம் "எங்கள் மாவட்ட மக்கள் இப்படி அதிகப்படியாக நடந்து கொண்டதற்காக, தாங்கள் மன்னிக்க வேண்டும்" என்றார் பணிவோடு.

"மக்களுக்கு என்னிடம் உள்ள அன்பின் அடையாளச் சின்னமல்லவா இது; இதில் வருத்தப்பட என்ன இருக்கிறது!" என்றார் நேரு, சிரிப்போடு!

- இந்திரன்

Tel : Rocket
Fax : 04562-72063

Phone : 20814
72825
21614

REGISTERED TRADE MARK

Estd : 1923

**SRI KALISWARI FIRE WORKS**

*Manufacturers of the Best* ***'Cock'*** *Brand Sparklers,*
*Crackers, Rockets & Toy Fireworks*

★★★★
★★
★

5-A, Chairman A. Shunmuga Nadar Road,
Post Box No.133, **Sivakasi-626 123.**

# செக்கிழுத்த செம்மலின் செந்தமிழ்த் தொண்டு!

'கப்பலோட்டிய தமிழன்' என்றும் 'செக்கிழுத்த செம்மல்' என்றும் இன்று பாராட்டப்பெறும் வ.உ.சிதம்பரனார் அவர்கள் வெறும் அரசியல்வாதியாக மட்டுமன்றித் தமிழ் இலக்கிய உலகிற்கும் அரும் பணியாற்றியுள்ளார்.

வ.உ.சிதம்பரனார் இளமைக் காலந்தொட்டே தமிழ் நூல்களைப் படிப்பதில் பேரார்வம் காட்டினார். அவர் அரசியலில் ஈடுபட்டுச் சிறையில் செக்கிழுத்துச் சொல்லொணாத் துயருற்ற காலத்திலும் அவர் எழுதுகிற கடிதங்களில் தமிழ் மணக்கும்; பல கவிதை மலர்கள் பூத்து மணம் பரப்பும். வெண்பாக்களையும், அகவற்பாக்களையும் விரைந்து பாடுவார்.

வ.உ.சிதம்பரனார் சென்னையில் இருந்தபோதும், கோவில்பட்டியில் வழக்கறிஞராகப் பணி புரிந்தபோதும் பல பழம் ஏட்டுச் சுவடிகளை ஒப்பு நோக்கிச் சில பழைய தமிழ்நூல்களைப் பதிப்பித்துள்ளார். இவ்வாறு தமிழ் நூல்களைப் பதிப்பித்ததோடு ஆங்கில நூல்கள் சிலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்துத் தாய்த்தமிழகத்திற்குத் தந்துள்ளார்.

அரசியல் வரலாற்றில்-குறிப்பாக விடுதலை வரலாற்றில் வ.உ.சிதம்பரனார்க்கு உள்ள தனிப் பெருமை, தமிழ் இலக்கியத் துறையிலும், தமிழ் இல்க்கிய வளர்ச்சி வரலாற்றிலும் உண்டு என்பதிலே கருத்து வேறுபாடு இருக்க முடியாது. தமிழ் இலக்கிய உலகிற்கு அவர் தந்து சென்றுள்ள அவரது 'செல்வக் குழந்தைகள்'-ஆம் இலக்கியச் செல்வங்கள் என்றும் நின்று அவரது ஈடிலாப் புகழை இசைத்துக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. அத்தகைய அவரது இல்க்கியப் பணியை, இந்த நேரத்தில் நினைந்து பார்ப்பது சாலப் பொருத்தமுடையதாகும்.

## சிதம்பரனார் பெருமை

ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியத்திற்கு அன்று முதல் இன்றுவரை உரை எழுதித் தந்துள்ளவர்கள் பலர். அவர்களுள் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், பேராசிரியர், தெய்வச்சிலையார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள் இளம்பூரணர் என்பார் காலத்தால் பேராசிரியருக்கு முற்பட்டவர். கி.பி.9 அல்லது 10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படுகிறார். எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்கட்கு இவர் எழுதிய உரையை 1928-ல் அச்சிட்டு உதவிய பெருமை வ.உ.சிதம்பரனார் அவர்கட்குண்டு.

பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் திருக்குறளும் ஒன்று; எனினும் திருக்குறள், தமிழில் எழுந்த உலகப் பெருநூலாக மட்டுமன்றி, உலகப் பொதுநூலாகவே போற்றப்படுகிறது. அத்தகைய திருக்குறளுக்கு அந்நாளில் உரையெழுதிய பதின்மருள் சிறந்த உரையாசிரியராகப் பலரால் கருதப்படுகிற பரிமேலழகரையும் விடக் காலத்தால் சற்று முற்பட்டவர் மணக்குடவர். இவரது உரையே பரிமேலழகர் உரைக்கும் முற்பட்ட உரையாகும். இந்த உரையை முதன் முதலில் அச்சிட்டு வெளியிட்ட பெருமை வ.உ.சிதம்பரனார் அவர்களையே சாரும். மேலும், 'திருக்குறள் படிக்காத தமிழன், தமிழனல்ல' என்று கருதிய சிதம்பரனார் 1935-ல் தம் அறத்துப் பால் ஆராய்ச்சியை வெளியிட்டார்.



"இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, நாற்பதாண்டு காலச் சிறைத்தண்டனை பெற்றதோடு, கோவைச் சிறையில் செக்கிழுத்து வதைபட்ட பெருமையாளர் வ.உ.சிதம்பரனார். அன்னைத் தமிழுக்கு அவர் ஆற்றிய அளவிடற்கரிய தொண்டுபற்றி விளக்கிடும் கட்டுரை இது."

விடுதலை செய்யப்பட்ட சில நாளிலேயே மாண்டு போனார். மணவிழாக்கூட காணாத அப்பெண்மணிக்கு மரணவிழா எடுக்கப்பட்டது.

இதற்கெல்லாம் பின்னாலேதான், அப்போராட்டத்தில் தாமே ஐக்கியமாகித் தீவிரம் காட்டினார் காந்தியடிகள். சத்தியாக்கிரகப் போராட்டம் வெற்றிபெற்றது.

தென்னாப்பிரிக்காவிலிருந்து 1914-ல் இந்தியாவுக்குத் திரும்பிய காந்தியார், அப்படியொரு விடுதலை வேள்வி இங்கேயும் துவக்கப்படவிருப்பதை உணர்ந்தார். கோபாலகிருஷ்ண கோகலே அவருக்கு அரசியல் வழிகாட்டினார்.

**காந்தியார் பெருமிதம்**

"பலன் ஏதும் கருதாமல் தென்னாப்பிரிக்காவில் தியாகம் செய்து வெற்றி கண்ட தில்லையாடி வள்ளியம்மை முதலானவர்கள்தான் எனக்கு முதன்முதலில் விடுதலை உணர்வூட்டிய பெருமைக்கு உரியவர்கள்" என்று பின்னர் சென்னை வந்திருந்தபோது திருவல்லிக்கேணி கடற்கரை திலகர் கட்டத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசும்போது பெருமிதத்தோடு குறிப்பிட்டார் காந்தியார். மாயவரம் சென்று, அதற்கு அருகாமையில் உள்ள தில்லையாடியில் இருந்த வீரமாது வள்ளியம்மாள் வீட்டுக்குச் சென்று மரியாதைச் செலுத்திவரவும் அவர் தவறினாரில்லை.


அன்னி பெசண்ட்

1921-ல் இரண்டாவது முறையாகச் சென்னைக்கு வந்த காந்தியடிகள், தமிழகத்தின் பல ஊர்களுக்கும் சென்றார். அப்போது பெரியார் ஈ. வெ. இராமசாமியின் இல்லத்திற்குப் போய்த் தங்கினார். பெரியாருக்கும் அவர் குடும்பத்தாருக்கும் கைராட்டையில் நூல்நூற்கும் வித்தைக் கற்றுக்கொடுத்தார். தனது மனைவியார் நாகம்மையார், தமையனார் ஈ.வெ.கிருஷ்ணசாமி நாயக்கர் ஆகியோருடன் சேர்ந்து ஒத்துழையாமைப் போரில் ஈடுபட்ட தியாக குடும்பத்தின் தலைவரே பெரியார் ஈ.வெ.ரா.கள்ளுக்கடை மறியலின் போது தமக்குச் சொந்தமான தென்னை மரங்களையெல்லாம் குத்தகைக்கு விட மறுத்ததோடு, இலாபம் எண்ணாமல் அவைகளை வெட்டித் தள்ளவும் செய்தார்.

அம்மறியலில் அவர் மனைவியார் நாகம்மாளும், சகோதரி கண்ணம்மாளும் காட்டிய தீவிரம் காந்தியடிகளாரையே வியக்கவைப்பதாக இருந்தது.

கள்ளுக்கடை மறியலைக் கைவிடுமாறு ஒருமுறை காந்தியாரிடம் வலியுறுத்தப்பட்டபோது "அதைக் கைவிடுவது என் கையில் இல்லை; தமிழ்நாட்டைச் சேர்ந்த ஈரோட்டில் இருக்கும் நாகம்மாள், கண்ணம்மாள் என்கிற இரண்டு பெண்மணிகள்தான் அந்த அமைப்பைத் தலைமை தாங்கி நடத்துகிறார்கள்; அவர்களிடம் போய்ப் பேசிப்பாருங்கள்" என்றார் அவர்.

அந்த அளவுக்கு விடுதலைப் போர்க்காலத்தில் சிறப்புற்றிருந்தார்கள் அந்தப் பெண்மணிகள்!

**வைக்கம் பொதுவிடுதலை**

கேரள மாநிலத்தைச் சேர்ந்த வைக்கத்தில், அரிசன மக்கள் கொத்தடிமைகளாக நடத்தப்பட்டு வந்தார்கள். ஆலயங்களுக்குள்ளே புக மட்டுமல்ல; முக்கிய வீதிகளில் நடக்கவும் கூடாதெனத் தடுக்கப்பட்டிருந்தார்கள். அந்த நிலை நீங்க, "வைக்கம் போராட்டம்" பெரியார் ஈ.வெ.ரா.தலைமையில் நடத்தப்பட்டபோதும் திருமதி நாகம்மாளும், திருமதி கண்ணம்மாளும் அதில் ஈடுபட்டு சிறைத் தண்டனை பெற்றார்கள்.

அந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்திலே வெற்றி கண்ட பெரியார் ஈ.வே.ரா. "வைக்கம் வீரர்" என்றே சிறப்புறக் குறிப்பிடப்பட்டார்.

7-8-1724ல் திருவிதாங்கூர் மன்னர் இறந்துபோன பின், பட்டத்திற்கு வந்த மகாராணி சேதுபார்வதியம்மாள் அந்தச் சத்தியாக்கிரகத் தியாகிகளுக்கெல்லாம் பொது விடுதலையளித்தார்.

1930ஆம் ஆண்டு, இந்திய விடுதலைப் போரின் ஓர் அங்கமாகத் தமிழ்நாட்டின் உப்புச் சத்தியாக்கிரகம் நடத்தப்பட்டது. அப்போது, அப்போராட்டத்தில் பங்கேற்று ஓராண்டு சிறைத்தண்டனை பெற்றவர்களில் செல்வி துர்காபாய், திருமதி ருக்மணி லட்சுமிபதி இருவரும் குறிப்பிடத்தக்கத் தியாகப் பெண்மணிகளாவர்.

மதுரையைச் சேர்ந்த எல். கிருஷ்ணசாமி பாரதியின் மனைவியார் திருமதி கே.லட்சுமி பாரதி என்பாரும் இந்திய விடுதலைப்போரில் களம் கண்டு சிறைசென்று சிறப்புற்றார். தமிழ்நாடு சட்டமன்றத்தில், 1937ஆம் ஆண்டிலும் 1946ஆம் ஆண்டிலும் உறுப்பினராக அங்கம் வகித்தவர் இவர்.

அந்நியத் துணிக்கடை மறியலில் ஈடுபட்டு திருமதி எஸ்.அம்புஜம்மாள், ஜானம்பாள், கமலாபாய், லட்சுமி சங்கர ஐயர் போன்றோரும் சிறைத்தண்டனை ஏற்றார்கள். அதே போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைதண்டனை ஏற்ற திருமதி பி.லீலாவதி, லலிதா பிரபு இருவரும் தலைச்சேரி நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரிக்கப்பட்டனர். அவர்கள் கழுத்தில் கிடந்த தாலிக்கயிறும் போலீசாரால் அகற்றப்பட்டது. இதனால், "தாலியறுத்தான் தலைச்சேரி" என்றே அவ்வூர் அப்போது குறிப்பிடப்பட்டது.

அதை எதிர்த்து இந்திய மகளிர் சார்பில் திருமதி டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, அம்மு சுவாமிநாதன், ஜி. விசாலாட்சி ஆகியோரால் கண்டனக் கூட்டங்கள் நடத்தப்பட்டன; எதிர்ப்பு அறிக்கைகள் விடப்பட்டன.

திருமதி சுப்பம்மாள், கன்னட மாநிலத்தில் உள்ள பெல்காம் சிறையில் அடைக்கப்பட்டார். சென்னை மாகாணக் கல்வி அமைச்சராக இருந்த மாதவமேனன் என்பாரின் மனைவி திருமதி குட்டிமாளு அம்மாள் கைக்குழந்தையோடு சிறை புகுந்தார்.

**விட்டுக்கும் ஆபத்து!**

ஒரு சந்தர்ப்பத்தில் தேசபக்தர்களுக்கு யாரும் வீடு வாடகைக்குத் தரக்கூடாது என்று அரசே அறிவித்ததால், திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம் அம்மையாரும் அஞ்சலையம்மர்ளும் போலீஸ் கமிஷனர் அலுவலக வளைவுக்குள்ளேயே போய் அடுப்புப் பற்ற வைத்துச் சோறாக்கி எதிர்ப்பைக் காட்டினார்கள்.

திருமதி மரகதம் சந்திரசேகர், திருமதி ராதாபாய் சுப்பராமன், மீராபாய், திருமதி நீலாவதி சுப்பிரமணியம், டாக்டர் பிச்சமுத்து அம்மாள், கே.எஸ். பார்வதவர்த்தனி போன்ற இன்னும் பல பெண்மணிகளும் விடுதலைப் போர்க்களம் புகுந்து சிறை சென்றார்கள்.

சுதந்திரப் போர் மூண்ட காலத்தில், அந்த எழுச்சிக்கனல் மங்காமல் ஒளிவிட அரும்பாடுபட்ட தமிழகப் பெண்மணிகளை நினைவுகூரும் நாம், அனைத்திந்திய அளவில் இவ்வகையில் பங்கேற்றவர்களையும் மறந்துவிட முடியாது.

கடமை வீரரான காந்தியடிகளாரின் துணைவியார் கஸ்தூரிபா அம்மையாரும், மோதிலால் நேருவின் மனைவியார் சொரூபாணியும், கவியரசி சரோஜினியும் அவரது சகோதரிகளில் ஒருவரான மிருணாளினி சட்டோபாத்யாயாவும் அனுசூயாதேவியும் இன்னபிறரும் இந்திய விடுதலைக்காகச் செய்த தியாகங்களும் இணையற்றவைகளாகும் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

"நாட்டு விடுதலைக்காகப் போராட ஆண்கள் மட்டுந்தான் முன்னிற்பதா? ஆண்களோடு சரிநிகர் சமானமாக நிற்க நாங்களும் தயார்" என்ற வகையிலே தாய்க்குலமும் எழுந்தது இப்படி!

பிறந்த நாட்டைத் 'தாய்நாடு' என்றுதானே கூறுகிறோம்; அதை மெய்ப்பிப்பது போல் அலைபோல் ஆர்ப்பரித்தெழுந்த அவர்களை நாடு மறக்காது.

- ராஜு



## காந்தியார் பார்வையில் தமிழும் தமிழரும்

*"தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போரில் தமிழ்மக்கள் புரிந்த துணையைப் போல் வேறெந்த இந்தியரும் புரியவில்லை. அவர்களுக்கு நன்றியறிதல் காட்ட நூல்களைப் பயில வேண்டுமென நினைத்தேன். அப்படியே அவர்கள் மொழியைப் பயில்வதில் ஊக்கமாக ஒரு திங்கள் கழித்தேன். அம்மொழியைப் பயிலப் பயில அதன் அழகை உணரலானேன். அது மனங்கவரும் ஓர் இனிய மொழி.*

*தமிழ் மக்களுள் பண்டைய நாளிலும் - இந்நாளிலும்கூடப் பல அறிஞர் இருந்தனர்-இருக்கின்றனர் என்பது அம்மொழியின் அமைப்பாலும் பயிற்சியாலும் அறியக் கிடைக்கின்றது. இந்தியாவில் ஓரினம் ஏற்பட வேண்டுமாயின் சென்னை மாநிலத்திறகு அப்புறமுள்ளவர்களும் தமிழுணர்தல் வேண்டும்.*

*தமிழ் மக்கள் எனது இரத்தக் கலப்புற்ற உடன் பிறந்தவர் போலத் தோன்றுகிறார்கள்.*

*இருபது ஆண்டுகளுக்கு முன்னரே நான் தமிழ் பயிலத் தொடங்கியதற்குக் காரணம், திருக்குறள் மூலத்தையே நேராகப் படித்தல் வேண்டும் என்று என் உள்ளத்தில் எழுந்த ஆசையேயாகும்.*

*தமிழ்மொழியில் புலமை பெறுவதற்குரிய ஒய்வு எனக்கு ஆண்டவன் அருளினானில்லை. அதுகுறித்து நான் அடையும் வருத்தத்திற்கு ஓர் அளவில்லை.*

*தமிழ்மக்கள் தங்கள் தாய்மொழியாகிய தமிழ்பயில வேண்டுவது அவர்களது இன்றியமையாக் கடமை. தமிழர் தம் மொழியை ஆங்கிலம் முதலிய மொழிகளை விடக் கூட முதன்மையாகக் கருதுதல் வேண்டும்."*

*- காந்தியடிகள்*

# காங்கிரஸ் தலைவர் பெரியார்

- சாமி சிதம்பரனார்



ஈ.வெ.ரா., திரு. காந்தியாரின் சொற்களையெல்லாம் முற்றும் நம்பினார். அவற்றையே தமது ஒத்துழையாமைப் பிரசாரத்தில் பேசினார். தாம் அணிந்துவந்த ஆடம்பரமான ஆடைகளையெல்லாம் வீசியெறிந்தார். சிகரெட் குடிப்பது, வெற்றிலை போடுவது முதலிய அனேகப் பழக்கவழக்கங் களை ஒரே பகலில் அடியோடு நிறுத்திவிட்டார். ஒரு சாது ஆனார். முரட்டுக் கதரையே உடுத்தினார், தாம் மட்டிலும் அல்ல; உயர்ந்த பட்டு உடுத்திவந்த நாகம்மையாரையும் கதர் உடுத்தச் செய்தார். தமது 80 வயது அம்மையாரையும் கதர் உடுத்தச் செய்தார். மற்றும் வீட்டில் உள்ளவர்களையும் தம் இனத்தவரையும் நண்பரையும் கதர் அணியச் செய்தார்.

"ஸ்ரீமான் நாயக்கர் செல்வமெனும் களியாட்டில் அயர்ந்தவர்; உண்டாட்டில் திளைத்தவர்; வெய்யில் படாது வாழ்ந்தவர். ஈரோட்டு வேந்தரென விளங்கியவர். ஸ்ரீமான் நாயக்கர் தமது செல்வம் முதலிய மாயைகளை மறந்து வறியார்போல் எளிய உடைதரித்து, எளிய உணவு உண்டு இரவு பகல் ஓயாது தேசத் தொண்டிற்கே தமது வாழ்வை அர்ப்பணம் செய்துள்ளதை எவரே அறியார்?"

- என்று 24.5.1924ல் ஈ.வெ.ரா. சிறைப்பட்டபோது "நவசக்தி"யில் திரு.வி. கலியாணசுந்தர முதலியார் எழுதியுள்ளார்.



தமிழ்நாட்டில் இன்று நடைபெற்று வரும் கதர் இயக்கம் ஈ.வெ.ரா.வினாலேயே பலமடைந்தது. அவர்தாம் கதரைக் காங்கிரசோடு பிணைத்தார். காங்கிரஸ் கதர் வஸ்திராலயங்கள் அவரால்தான் ஏற்படுத்தப்பட்டன. அதுவரை தனிப்பட்ட வியாபாரிகள் கொள்ளையடித்து வந்தார்கள். திரு. சி.ராஜகோபாலாச்சாரியார் நிர்வாகம் நடத்திவந்த திருச்செங்கோடு ஆச்ரமமும் ஈ.வெ.ரா வினாலேயே திறந்துவைக்கப்பட்டதாகும். கதரைப்பற்றி அவர் செய்த சொற்பொழிவுகள் அளவற்றவை. அவர் சொற்பொழிவைக் கேட்ட ஒருவன் சீமைத் துணியைக் கையினாலும் தொடமாட்டான். அதை நெருப்பிட்டுக் கொளுத்துவான். உடனே கதர் கட்டத் தொடங்கி விடுவான். தீண்டாமை விலக்கைப் பற்றியும் மிகவும் வன்மையாகப் பேசுவார்.

கோர்ட்டுகளை விலக்குதல் பள்ளிக்கூடங்களை விடுதல் முதலியவைகளைப் பற்றிப் பேசுவாரானால் உடனே அப்பேச்சுக்குப் பலன் விளைந்துதான் தீரும். ஒத்துழையாமை காலத்தில் இராமசாமியார் செய்துவந்த சொற்பொழிவுகள் தமிழ்நாட்டினரின் மனத்தைக் கவர்ந்து வந்தன. பிரசாரகர்களுக்கு அவுடதம் போலாயின. இன்றும் தமிழ்நாட்டில் நல்ல கெட்டிக்காரச் சொல்வன்மைப் பிரசாரகர்கள் என்போர் இவரது பேச்சுக்களில் உள்ளவைகளைப் பொறுக்கிப் பேசுவதன் மூலமேதான் பெயர் பெற்றிருக்கின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். சொல்வன்மையில் இவருக்கு இணை எவரும் இல்லை. இது இவர் பகைவர்களாலும் மறுக்கப்படாத செய்தி.

"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்".

-என்பது வள்ளுவர் மொழி. இதற்கு இவர் சொற்பொழிவே சிறந்த எடுத்துக்காட்டு. தமிழ்நாட்டில் ஒத்துழையாமைக் காலத்தில் ஈ.வெ.ரா.வின் சொற் பொழிவுக்குத் தனி மதிப்பிருந்தது. தனித்த பெரும் பயனும் விளைந்தது. மூலையாகட்டும், முடுக்காகட்டும், நாடாகட்டும், நகரமாகட்டும் "ஈரோட்டு ராமசாமி நாயக்கர் பிரசங்கம்" என்றால்போதும், படிக்காதவர்களும் படித்தவர்களும் ஆயிரக்கணக்கில் கூடிவிடுவார்கள். கேட்போர் சலிப்படையாதபடி மணிக்கணக்கில் 2 மணி 3 மணி நேரம் பேசுவார். இவருடைய சொற்பொழிவில் வீரச்சுவை நிறைந்திருக்கும். வேண்டுமிடத்தில் சோகத் தன்மை சொட்டும். நகைச்சுவையைக் கொட்டுவதில் இவருக்கு ஈடாக எவரும் இலர்.

"ஸ்மரணையற்றுக் கிடந்த தமிழர்களின் உள்ளத்தை "அடிதெரியும்படி" கலக்கிய பிரம்மாண்ட பாக்கியம் நாயக்கரைப் பெரிதும் சேர்ந்ததாகும் அப்பா! நாயக்கரின் அழகு பிரசங்கத்தை ஆணித்தரமான சொற்களை, அணியணியாய் அலங்காரம் செய்யும் உவமானங்களை, உபகதைகளை, அவரது கொச்சை வார்த்தை உச்சரிப்பை, அவரது வர்ணனையை, உடல் துடிப்பைப் பார்க்கவும்,






கேட்கவும் வெகுதூரத்திலிருந்து ஜனங்கள் வண்டுகள் மொய்ப்பதுபோல், வந்து மொய்ப்பார்கள்... அவர் இயற்கையின் புதல்வன். மண்ணை மணந்த மணாளன், மண்ணோடு மண்ணாய் உழலும் மாந்தர்களுக்கு நாயக்கரின் பிரசங்கம் ஆகாய கங்கையின் பிரவாகம் என்பதில் சந்தேகமில்லை... செய்ய வேண்டும் என்று தோன்றியதைத் தயங்காமல் செய்யும் தன்மை அவரிடம் காணப்படுவதுபோல தமிழ்நாட்டில் வேறு எவரிடமும் காணப்படுவதில்லை... நாயக்கர் மகாஸரஸி, பரம ரஸிகர்".

-இது 1933ல் "காந்தி" என்னும் பத்திரிகையில் வெளி வந்தது. நல்ல எழுத்தாளரான வ. ராமசாமி அய்யங்கார் அவர்களால் எழுதப்பட்டது.

ஈ.வெ.ரா. கதர் வளர்ச்சிக்காக ராட்டினத்தைத் தூக்கிக்கொண்டு ஊர் ஊராகச் சுற்றிவந்தார். கதர் மூட்டைத் தூக்கி விற்றார். அந்நிய நாட்டுத் துணியை விலக்கவேண்டுமென்பதற்கும் கதரையே அணியவேண்டு மென்பதற்கும் இவர் சொல்லும் விதவிதமான காரணங்கள் கேட்பவர்கள் மனதை அவ்வினாடியிலேயே கவ்விவிடும். சுருங்கக் கூறவேண்டுமானால் தமிழ்நாட்டில் இன்று கதர் உடுத்துபவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேரும், இதுவரையில் கதர் உடுத்தி இப்போது கைவிட்ட பல்லாயிரக்கணக்கானவரும் ஈ.வெ.ரா. வின் சொற்பொழிவைக் கேட்டுக் கதர் அணிந்தவர் களேயாவார்கள்.

'கோர்ட்டு'களை விலக்கவேண்டும் என்பதைச் செயலில் காட்டியவர் இவரேயாகும். இக்கொள்கையின் பயனாய்த் தம் குடும்பத்திற்கு வரவேண்டிய சுமார் 50,000 ரூபாயை இழந்தார். அதில் 28,000 ரூபாய்க்கு ஒரு அடமானப் பத்திரம் இருந்தது. ஒத்துழையாமை காரணமாய்க் கோர்ட்டுக்குப் போய் அதை வசூலிக்க ஈ.வெ.ரா. விரும்பவில்லை. காங்கிரசுக்குத் தலைவராயிருந்த சேலம் சி. விஜயராகவாச்சாரியார் அவர்கள் இதையறிந்தார். "இந்தப் பத்திரத் தொகைக்காகத் தாவா செய்ய உமக்கு இஷ்டமில்லையானால் நீர் அதை 'மேடோவர்' (மாற்றி) செய்துகொடுத்துவிடும். நான் இனாமாகவே வாதாடி வசூல் செய்து தருகிறேன். அந்தப் பணத்தையடைய உமக்கு இஷ்டமில்லையானால், வசூல் செய்ததும் அதைத் திலகர் சுயராஜ்ய நிதிக்காவது கொடுத்துவிடும்" என்று ஈ.வெ.ரா.விடம் வலியுறுத்திக் கேட்டார். ஆயினும் அவர் இணங்கவில்லை. அவ்வளவு பெரிய தொகையை மனதார இழந்தார்.

அதுசமயம் அவர் திரு. விஜயராகவாச்சாரியாருக்குச் சொன்னதாவது: "நானே வழக்காடுவதும் ஒன்றுதான். உங்களிடம் எழுதிக்கொடுத்து வழக்காடச் செய்வதும் ஒன்றுதான். இது என் கொள்கைக்கு ஒத்ததல்ல. கொள்கையே பெரிது; பணம் பெரிதல்ல" என்பதாகும்.

மதுவிலக்குப் பிரசாரம் மும்முரமாக நடந்தபோது, காந்தியார் ஒரு பணியிட்டார். "கள்ளுக்கு உதவும் மரங்களையெல்லாம் வெட்டிவிட வேண்டும்" இது அப்பணி. வடநாட்டில் பெரும்பாலும் கள் தருவது ஈச்சமரங்கள். அவைகளை வெட்டிவீழ்த்துவதால் பெருஞ்சேதம் இல்லை. தென்னாட்டில் அப்படியல்ல. இங்கே கள் இறக்கப்படுவது தென்னை மரங்களில். தென்னையின் பயன் மிகமிகப் பெரியது. இவைகள் அழிக்கப்பட்டால் நாட்டுக்குப் பொருட்சேதம் பல. இதைப் பற்றிக் காந்தியார் சிந்திக்கவே இல்லை போலும்!

காந்தியாரின் பணியைப் பலர் ஏற்றனர். வடநாட்டில் பல இடங்களில் ஈச்சமரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டன. இச்செய்தி, செய்தித்தாள்களில் வந்தன. கண்டார் ஈ.வெ.ரா. காந்தீய வெறியில் மூழ்கியிருந்தார் அல்லவா? தமது தோட்டங்களிலிருந்த 500 தென்னை மரங்களையும் வெட்டிச் சாய்த்தார்.

அக்காலத்தில் காந்தீய வெறியினால் தென்னைகளை வெட்டி வீழ்த்திய பைத்தியக்காரர்களில் இவரே தலைசிறந்தவர் என்று கூறலாம்.

1921ஆம் ஆண்டில் கள்ளுக்கடை மறியல் மிகவும் புகழ் பெற்றது. ஈரோட்டில் மறியல் மும்முரம் மிகுதி. ஈ.வெ.ரா. மறியலைத் தலைமை தாங்கி நடத்தியவர். இதற்காக 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. மறியல்காரர்கள் தடையுத்தரவைப் பொருட்படுத்தவில்லை. எண்ணற்ற தொண்டர்கள் சிறை புகுந்தனர். 1921 நவம்பரில் ஈ.வெ.ரா.வும் அவரோடு சுமார் 100 தொண்டர்களோடு சிறைபிடிக்கப்பட்டனர். ஒரு மாதம் தண்டனை பெற்றார். இதனால் ஊரெங்கும் அமளி. நாடெங்கும் கலவரம்.

இச்சமயம் நாகம்மையாரும் ஈ.வெ.ரா.வின் தங்கை கண்ணம்மாளும் மறியலுக்குப் புறப்பட்டனர். இவர்களுடன் பல பெண்மணிகளும் தொடர்ந்தனர். மறியல் செய்பவர்கள் ஒருநாளில் ஆயிரக்கணக்கில் பெருகினர். நாகம்மையாரும் அவருடன் சென்ற தோழர்களும் சிறைபடுத்தப்பட்டால் ஈரோட்டின் நிலைமை மிக்க மோசமாகி 10,000 போர்களுக்குச் சிறை வேண்டியிருக்குமென்று அதிகாரிகள் கருதி, சென்னை அரசாங்கத்துக்குத் தந்தி கொடுத்து முன்னறிவுடன் தடையுத்தரவை நீக்கினர். அதுசமயம் சர்க்கார் 144 க்கு மதிப்பற்று வாய்தா காலத்திற்குள் ரத்து செய்யப்பட்டது இது ஒன்றேயாகும். இச்சம்பவத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் கள்ளுக்கடை மறியல் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்துவிட்டது. இவ்வாறு குடும்பத்துடன்



## சுதந்திரம்

மகிழ்ச்சியும் எழுச்சியும் பெற்றிட-
வாழ்த்தும் வணக்கமும் கூறிட-
உறுதியும் அஞ்சாமையும் பெற்றிட-
சுருக்கமாகக் கூறுவதானால்,
பெற்ற சுதந்திரத்திற்கு ஏற்றவர்களாக
நம்மை ஆக்கிக்கொள்ள-
சுதந்திரத்தின் முழுப்பயனை
நாட்டவர் அனைவரும் பெற்றிட-
அதற்கான அறிவாற்றலையும்,
பண்பாட்டையும் வளர்த்துக் கொள்ளவே
இந்த ஆகஸ்டுப் பதினைந்து.
வீரம்-வெற்றியைத் தந்தது;
தியாகம் - சுதந்திரத்தைத் தந்தது;
வீரமும் தியாகமும் போற்றத்தக்கவை;
அதிலும், உலக உத்தமர் காந்தியடிகள் வகுத்தளித்த
அறநெறி வழிநின்று இந்தியா பெற்ற சுதந்திரம்
உலக வரலாற்றுக்கே ஒரு புதுமையாகும்!

- அறிஞர் அண்ணா

திருக்குறள் பாயிரத்தில் காணப்படுகிற "கடவுள் வாழ்த்து", "வான் சிறப்பு" "நீத்தார் பெருமை" ஆகிய மூன்று அதிகாரங்களும் திருவள்ளுவர் இயற்றவில்லை என்பது சிதம்பரனார் கருத்து.

"இன்னிலை" என்பதும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும். பொய்கையாரால் இயற்றப்பட்ட இந்நூலையும் முதன்முதலில் அச்சிட்டு வெளியிட்டவர் வ.உ.சிதம்பரனார் அவர்களேயாவர்.

### சிவஞான போதம்

சிதம்பரனார் சைவ சித்தாந்தத்தில் அழுத்தமான ஈடுபாடு கொண்டவர். சித்தாந்த வரிகளின் மூல நூலாக-மூலமந்திரமாகக் கருதப்படுகிற இந்நூலுக்கும் சிதம்பரனார் ஒரு நயமான உரை எழுதியிருக்கிறார்.

இவ்வாறு பழைய நூல்களைப் பதிப்பித்த தோடன்றிப் பிறநாட்டு இலக்கியங்கள் சிலவற்றைத் தமிழில் பெயர்த்துத் தமிழ் உலகிற்கு வழங்கிய பெருமையும் வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கு உண்டு.

ஆங்கில நூலாசிரியரான ஜேம்ஸ் ஆலன், சிறந்த ஒழுக்க நூலாசிரியராகப் பாராட்டப்பெறுபவர். அவரது சீரிய சிந்தனைகள் தமிழ் மக்களிடையே பரவவேண்டும் என்று பெரிதும் விரும்பினார். அவ்விழைவின் விளைவே, "மனம்போல வாழ்வு", "அகமே புறம்", "வலிமைக்கு மார்க்கம்" ஆகிய நூல்கள்.

"மனம் போல வாழ்வு"-மனத்தின் தன்மையைத் தெளிவுபடுத்துகிறது; அந்த மனத்தை மாசற்றதாக - தூய்மையுடையதாக வைத்துக் கொள்ள வேண்டியதன் இன்றியாமையை வலியுறுத்துகிறது.

"அகமே புறம்" - என்பது இப்போதும் எப்போதும் இங்கும் எங்கும் நமது உயிர் வாழ்வுநிலை பேறடைவதற்கான வழிமுறைகளை வகுத்துக் கொடுத்துரைப்பது; அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதற்கு ஒரு விரிவான விளக்கமாகத் திகழ்வது.

"வலிமைக்கு மார்க்கம்"-என்பது உடலும் உள்ளமும் சோம்பி நலிந்து வாழ்வோர், வலியுடைவராக ஆதற்குரிய உடற்பயிற்சி, உளப்பயிற்சி ஆகிய இரண்டினையும் தெளிவான முறையில் சித்திரித்துக் காட்டுகிறது.

இவ்வாறு பழைய நூல்களைப் பதிப்பித்தும், பிற நாட்டு நல்லறிஞரின் சிந்தனைச் செல்வத்தைத் தமிழ்ப் பெருமக்கள் கற்றுத் தேர்ந்து தெளிய வழிசெய்தும், இலக்கியப் பணியாற்றிய வ.உ.சிதம்பரனார் அவர்கள் புது நூல்கள் பல இயற்றியும் உதவியிருக்கிறார்கள்.

அவையாவன:-

**மெய்யறிவு** : அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை அடைவதற்கான வழிவகைகளையும் உவமைகளோடு சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறுவது. பல்வேறு நீதி நூல்களின் பிழிவென விளங்குவது இந்நூல்.



**மெய்யறம்** : திருக்குறளின் வழிநூல் எனத்தகும் இந்நூலில் மாணவ இயல், இல்வாழ்வியல், அரசியல், அந்தண இயல், மெய்யியல் என்னும் ஐந்தியல்கள் உள்ளன. சிதம்பரனார் கண்ணனூர்ச் சிறையில் இருந்தபோது எழுதப்பட்ட இந்நூலில், கைம்மை மணத்தை ஆதரிக்கிறார்.

**வள்ளியம்மை சரித்திரம்** : இது வ.உ.சிதம்பரனார் அவர்களின் முதல் துணைவியாரின் வரலாறு, இது, செய்யுள் வடிவானது. ஆடவர் தம் வாழ்க்கைத் துணைவியாரிடத்தும், உற்றாரிடத்தும், மற்றவர் களிடத்தும் பின்பற்ற வேண்டிய முறைகளை யெல்லாம் எழிலுற விளக்கும் அறிவு நூலாகும்.

**என் பாடல் திரட்டு** : பல்வேறு சூழ்நிலைகளில், பல்வேறு காலகட்டங்களில் வ.உ. சிதம்பரனார் அவர்கள் இயற்றிய நூறு பாக்களைத் கொண்ட தொகுப்பு இது. மக்கள் அனைவர்க்கும் பொதுவான ஒழுக்கப் பண்புகளை வலியுறுத்தத்தக்க பாடல்களைக் கொண்ட இந்நூல் கற்போர்க்கு விருந்தாகிப் பயன் தரத்தக்கது.

**சொற்பொழிவு நூல்** : 1927-ஆம் ஆண்டு சேலம் மாவட்ட மூன்றாவது அரசியல் மாநாடு நடைபெற்றது. அம் மாநாட்டில் வ.உ.சிதம்பரனார் அவர்கள் ஆற்றிய பேருரையே இந்நூல். இந்நூலில் தன் ஆட்சி என்றால் என்ன, அதனை அடைவதற்குரிய வழிகள் யாவை, என்பவையெல்லாம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

**தற்சரிதை** : வ.உ. சிதம்பரனார் அவர்களின் "தற்சரிதை'யாக விளங்கும் இந்நூல் முற்றும் அகவற்பாவால் ஆனது. சிதம்பரனார் சிறைக் கோட்டத்தில் இருந்தபோது, "லோகோபகாரி" பத்திரிகையின் ஆசிரியராக விளங்கிய பரலி சு. நெல்லையப்பர் அவர்களின் வேண்டுகோட்கிணங்க இந்தத் "தற்சரிதை" எழுதப்பட்டது. நூலின் பிற்பகுதி, சிதம்பரனார் அவர்கள் சிறைக் கோட்டத்தினின்றும் வெளிவந்த பின் இயற்றி இணைக்கப்பட்டது. சிதம்பரனார் "விவேக பானு" என்னும் பெயரில் திங்கள் இதழ் ஒன்றை நடத்தினார்.

இவ்வாறு தமிழ் இலக்கிய உலகில், வ.உ.சிதம்பரனார் அவர்கள் சிறந்த பதிப்பாசிரி யராகவும், மொழி பெயர்ப்பாளராகவும், உரையாசிரியராகவும், நூலாசிரியராகவும், தத்துவ ஞான வித்தகராகவும், பத்திரிகையாளராகவும் விளங்கி ஆற்றியுள்ள அருந்தமிழ்த் தொண்டுக்குத் தமிழ் மக்கள் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர். தமிழ்த் தொண்டினை மனத்தகத்தே எண்ணி மகிழ்ந்து பாராட்டுவோமாக.

- சாமி. பழனியப்பன்



## கை குவித்து வணங்குவோம்!

- நாமக்கல் கவிஞர்

அடிமை வாழ்வை நீக்கிநாம்
அரசரான நாளிது!
அந்நியர்க்கு அஞ்சிவாழ்ந்த
அவதிவிட்ட நாளிது!
கடமையோடு கண்ணியம்
கட்டுப்பாடு மூன்றையும்
கண்ணைப்போலக் காப்போமென்று
கையடித்த நாளிது!
விடுதலைநாள் கொண்டாடும்
வீரம்மிக்க நாளிதில்
வியப்புமிக்க சாந்தசத்திய
விரதம்பூண்ட வேள்வியில்
கடுமையான தவமியற்றிக்
கட்டவிழ்த்து விட்டநம்
காந்தியண்ணல் நினைவுகொண்டு
கைகுவித்து வணங்குவோம்!

☆★★☆
★★
☆

# THE HIND MATCHES LIMITED

# &

# STANDARD MATCH INDUSTRIES (P) LIMITED

☆★★☆
★★
☆

*Manufacturers of* ***'The Train & Sun Flower'*** *Brand*
*Cardboards & Veneers Safety Matches.*

☆★★☆
★★
☆

**5-2-15-C, Sattur Road,**
**SIVAKASI-626 123.**
**Tel : 21142, 22173, 20952**
**Fax : 04562-72378**

# தியாக தீபம்

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மறக்க முடியாத ஊர் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பூர்; இந்த ஊரில்தான், **1932** ஜனவரி மாதம் வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து நடைபெற்ற அறப்போராட்டத்தில் தாயின் மணிக்கொடியான தேசியக் கொடியைக் காப்பதற்காக, தடியடியைத் துச்சமென மதித்து, உயிர்த் தியாகம் செய்தார் குமாரசாமி என்கிற தீரர்; குண்டாந்தடியால் தாக்கப்பட்டுக் குருதி வெள்ளத்தில் குற்றுயிராகக் கிடந்தபோதும், பாரதத் தாயின் மணிக்கொடியைத் தரையில் வீழாது காத்த குணக்குன்று. குமாரசாமி 'திருப்பூர்க் குமரன்' என்ற புகழ்ப் பெயரைப் பெற்று, இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனி இடம்பெற்றுவிட்டார்.

பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த சென்னிமலையில் நெசவாளர் குடும்பத்தில், நாச்சிமுத்து - கருப்பாயி தம்பதியருக்கு, **1904** அக்டோபர் மாதத்தில் பிறந்தவர் குமாரசாமி. இவருக்கு ஆறு சகோதரர்கள். ஐந்தாவது வயதில் சென்னிமலையில் பள்ளியில் சேர்ந்த குமாரசாமி ஐந்தாவது வகுப்பு வரையில் தான் படித்தார். அதற்குமேல் அவரைப் படிக்க வைக்க அவரது பெற்றோரின் பொருளாதார நிலை இடங்கொடுக்கவில்லை.

பள்ளிப்பாளையத்தில் தாய்மாமன் வீட்டில் தங்கி, நெசவுத் தொழிலைக் கற்றுக்கொண்டு, சென்னிமலை திரும்பி, நெசவுத் தொழிலைச் செய்யத் தொடங்கினார். இவரது பத்தொன்பதாவது வயதில் பதினான்கு வயதுப் பெண் இராமாயியை இவருக்கு இவரது பெற்றோர் திருமணம் செய்துவைத்தனர். நெசவுத் தொழிலில் போதிய வருமானம் இல்லாததால், திருப்பூர் பஞ்சரைக்கும் தொழிற்சாலையில் எடைப் பதிவு எழுத்தர் வேலையில் சேர்ந்தார்.

கள்ளுக்கடை மறியலா, கதராடை உற்பத்தியா, எதிலும் முன்னணியில் நின்ற ஊர் திருப்பூர்; காந்தியடிகள் காட்டிய வழியில், சுதந்திரப் போராட்டத்தில் அந்நகர மக்கள் காட்டிய ஆர்வமும், எழுச்சியும் போற்றத் தக்கவை. தேசபந்து





தேசத்திற்குத் தியாகம் செய்த இராமசாமியாரைச் சிலர் நாக்கில் நரம்பின்றித் தேசத்துரோகி என்று தூற்றுகின்றனர். என்னே! இக் கற்றுக்குட்டிகளின் பேதமை.

இச்சமயம் பொதுவாகவே இந்தியாவில் நடந்துவந்த ஒத்துழையாமைக் கிளர்ச்சி சம்பந்தமாகக் காங்கிரசுக்கும் அரசாங்கத்துக்கும் ஒரு சமாதான ஒப்பந்தப் பேச்சு நடைபெற்றது. இதற்காகப் பம்பாயில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. அதற்குக் காலஞ்சென்ற சர். சங்கரன் நாயர் தலைவர். இம்மாநாட்டின் பெயர் மாளவியா மாநாடு. இம்மாநாட்டின் நடவடிக்கை துவக்கப்படும் முன்பு திரு. பண்டிட் மாளவியா அவர்களும் சர். சங்கரன் நாயர் அவர்களும் 'மறியலை நிறுத்திவிட்டு, நடவடிக்கை துவக்கலாம்' என்று காந்தியாரைக் கேட்டுக்கொண்டார்கள்.

அப்போது காந்தியார், "மறியலை நிறுத்துவது என் கையில் இல்லை; அது ஈரோட்டிலுள்ள இரண்டு பெண்களிடம் இருக்கிறது. அவர்களைக் கேட்க வேண்டும்" என்று பதிலுரைத்தார். இச்செய்தி, அச்சமயம் 19.1.22ந் தேதி வெளியான "ஹிந்து" பத்திரிக்கையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

காந்தியார் இவ்வாறு சொன்னதற்குக் காரணம், ஈ.வெ.ரா.வின் மனைவி நாகம்மையார், அவரது தங்கை கண்ணம்மாள் ஆகிய இரு பெண்மணிகளும் மறியலுக்கு முக்கியக் காரணமானவர்கள். ஆதலால் அவர்களின் கருத்தையறிந்த பின்பே முடிவு செய்ய வேண்டுமென்று கருதிக் கூறியதேயாகும்.

கள்ளுக்கடை மறியல் செய்வதாக முதன் முதல் முடிவு செய்த இடம் ஈரோடுதான். ஈ.வெ.ரா. அவர்கள் வீட்டில் காந்தியார் முதலிய தலைவர்கள் கூடின காலத்தில், கள்ளுக்கடை மறியல் செய்யவேண்டுமென்று பேசி முடிவு செய்யப்பட்டது. அம்முடிவுக்கு அடிப்படை ஈ.வெ.ரா.வின் முழு ஆதரவேயாகும்.

பின்பு ஒத்துழையாமை ஒருவாறு அடங்கிற்று. பலர் அம்முறை தவறு என்று உணர்ந்தனர். அவர்களில் காலஞ்சென்ற சி.ஆர்.தாஸ் என்பவரும் ஒருவர். "விலகி நின்று கூச்சலிடுவது பயன் தராது கோட்டைக்குள் சென்று எதிரிகளை மடக்கவேண்டும்" என்ற கொள்கையுடன் சுயராஜ்யக் கட்சியைத் தொடங்கினார் இவர். இக்கட்சியை ஈ.வெ.ரா. ஆதரிக்கவில்லை; எதிர்த்தார். காந்தியார் முதலிய மற்றும் பலரும் ஒப்புக்கொள்ளவில்லை. திரு. சி. ராஜகோபாலாச்சாரியாரும் ஈ.வெ.ரா.வையே பின்பற்றினார்.

காந்தியாரின் தலைமைக்கடங்கிய இவர்கள் வைதீக ஒத்துழையாதார் அல்லது "மாறுதல் வேண்டாதார்", என்று அழைக்கப்பட்டனர். ஆயினும் சுயராஜ்யக்கட்சி வளர்ச்சியடைந்து வந்தது. தென்னாட்டிலும் இக்கட்சி உரம் பெற்றது. அப்பொழுது நமது மாகாணத்தில் நீதிக்கட்சியின் பேரால் பார்ப்பனரல்லாதார் அதிகாரம் நடத்தினர். பார்ப்பனர்களால் இதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. அதற்காகவே சுயராஜ்யக் கட்சியை ஆரம்பித்தார்கள் என்றும், தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் சுயராஜ்யக் கட்சியை ஆதரித்து நின்றனர் என்றும் சொல்லவேண்டும். "பார்ப்பனரல்லாதார் கட்சியை அதிகாரத்திலிருந்து விரட்டவேண்டும், சுயராஜ்யக்கட்சியின் பேரால் நாமே அதிகாரத்தைக் கைப்பற்றவேண்டும்" என்பது அக்காலச் சுயராஜ்யக் கட்சியின் நோக்கம். இதனாலேயே பார்ப்பனர்கள் அனைவரும் ஒருமுகமாக அக்கட்சியைப் போற்றினர், ஆதரித்தனர். இவ்வுண்மையை ஈ.வெ.ரா.வும் அறிந்துகொண்டார்.

வைக்கம் சத்தியாக்கிரகம் நாடெங்கும் புகழ்பெற்று விட்டது. இதனால் ஈ.வெரா. "வைக்கம் வீரர்" என்ற பெயர் பெற்றார் இன்றும் தமிழ்நாட்டார் இப்பெயரை மறக்கவில்லை. "வைக்கம் வீரர்" என்றால் போதும், ஈ.வெரா. என்று நன்கறிவார்கள். எனவே தீண்டாமையை ஒழிப்பதற்காகத் திருவாங்கூர் அரசாங்கத்தாரால் இவர் இருமுறை சிறையிலிடப்பட்டார்.





*நம்முடைய நாட்டிற்கு இப்போது உழைப்புதான் தேவை; இதை நாம் நன்குணர்ந்து பணியாற்றினால், இப்போதுள்ள தொல்லைகள் அனைத்தும் நம்மைவிட்டு நீங்கும்.*

*- காமராசர்*

இச்சமயம் நம் நாட்டுப் பத்திரிகைகளெல்லாம் நடுநிலைமையின்றி ஒரு சார்பாகவே நடைபெற்றுவந்தன. அவைகள் எல்லாத்துறைகளிலும் பார்ப்பனர்களையே ஆதரித்துவந்தன. வைக்கம் சத்தியாக்கிரகத்திலும் ஈ.வெ.ராவின் வழக்கிலும் அவைகள் நடுநிலைமை வகிக்கவில்லை. பார்ப்பனரல்லாதாரின் கருத்துக்களைப் பற்றிய உண்மைச் செய்திகளை வெளியிடுவதே இல்லை.

பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் பேரால் நடைபெற்று வந்த ஆங்கிலத் தினசரி "ஜஸ்டிஸ்" பத்திரிகையும், தமிழ்த் தினசரி "திராவிடன்" பத்திரிகையும் செல்வாக்கில்லாமல் இருந்தன. ஆதலால், பார்ப்பனரல்லாதார் நன்மையைப் பாதுகாக்க ஒரு தனிப்பத்திரிகை வேண்டும் என்கின்ற எண்ணம் இவருக்கு அப்போதுதான் உதயமாயிற்று போலும்! எனவே, 2.5.1935ல் "குடி அரசு" என்னும் பேரால் ஈ.வெ.ரா. ஒரு வாரப் பத்திரிகையை ஈரோட்டில் தொடங்கினார். இது இன்றும் நடந்துவருகிறது. இப்பத்திரிகை, சிறந்த தமிழறிஞரும், பெரியாருமாகிய திருப்பாதிரிப்புலியூர் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரியசுவாமி என்னும் ஞானியார் சுவாமிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குருகுலப் போராட்டம் தொடங்கிற்று. "தமிழ்நாட்டுக் குருகுலம்" என்ற பெயருடன் வ.வெ. சுப்ரமணிய அய்யர் அவர்களால் சேரன்மாதேவியில் ஒரு தேசீய நிலையம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதற்குப் பெயர் குருகுலம். அதற்குப் பண உதவி செய்தவர்கள் தமிழ் மக்கள். காங்கிரசிலிருந்தும் பத்து ஆயிரம் கொடுக்கப்பட்டது. அதன் வளர்ச்சிக்காக ஈ.வெ.ரா. டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு.வி.கலியாணசுந்தர முதலியார், கானாடுகாத்தான் வயி.சு.சண்முகம் செட்டியார் முதலியவர்கள் உழைத்தனர். ஆனால், குருகுலத்தில் உண்மையாய் நடந்தது என்ன? பார்ப்பனப் பிள்ளைகளுக்குத் தனி உணவு; பார்ப்பனரல்லாத பிள்ளைகளுக்கு வேறு உணவு; வேறு வேறு இடம்; வேறு வேறு பிரார்த்தனை. இதன் மூலம் ஜாதிப்பிரிவுக்கு ஆக்கம் இவை குருகுலத்தில் நடைபெற்றன. 'இப்பிரிவினை தவறு; குருகுல நோக்கத்துக்கு மாறுபட்டது; தேசீய ஒற்றுமைக்கு ஏற்றதன்று; சமபந்தி உணவே அளிக்கப்படவேண்டும்" என்று ஈ.வெ.ரா கூறினார். அப்போது ஈ.வெ.ரா. காங்கிரஸ் காரியதரிசி.

காங்கிரசில் குருகுலத்துக்கு 10,000 ரூபாய் கொடுக்க இசைந்து ரூ.5000 முதலில் கொடுத்ததால் மீதி 5000த்தை வ.வெ.சு. அய்யர் கேட்டார். குருகுலத்தில் ஜாதி பேதம் இருப்பதால் கொடுக்கமுடியாது என்று மறுத்துவிட்டார். அய்யர் ஈ.வெ.ரா.வின் கூட்டுக் காரியதரிசியாய் இருந்த ஒரு பார்ப்பனரிடம் செக் வாங்கிக் கொண்டுபோய்விட்டார். இதை ஈ.வெ.ரா. தெரிந்ததும் குருகுலத்தோடு போர் தொடுத்தார். இதற்கு டாக்டர் நாயுடு ஆதரவளித்தார்; திரு.வி.கலியாணசுந்தர முதலியாரும் ஆதரவளித்தார். மந்திரியாயிருந்த திரு. எஸ். ராமநாதன் அவர்கள் வீட்டில்தான் முதன்முதல் குருகுலத்தை எதிர்த்து, அதை ஒழித்துவிட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அப்போது கூடி ஏற்பாடு செய்தவர்கள் திரு. ராமநாதன், ஈ.வெ.ரா., திரு.வி. கலியாணசுந்தர முதலியார், என். தண்டபாணிப்பிள்ளை ஆகியவர்கள். டாக்டர் நாயுடுவைத் தலைவராக வைத்துக் கொண்டு பார்ப்பனீய வளர்ச்சிக்காக இருந்த இக்குருகுலத்தை அடியோடு ஒழித்துவிடக் கங்கணம் கட்டிக் கொண்டார்கள். வ.வெ.சு. அய்யர் இக்கொள்கையை ஒப்புக் கொள்ளவில்லை. அய்யரின் கொள்கை நாடெங்கும் கண்டிக்கப்பட்டது. நாயுடுவும் நாயக்கரும் இதைப்பற்றி நாடெங்கும் சென்று கண்டித்துப் பேசினர். இக்கிளர்ச்சியை அடக்கக் காந்தியாரும் தலையிட்டார். "குருகுலத்தில் ஜாதிப் பிரிவினைக்கு இடந்தருதல் கூடாது. சமபந்தி உணவுதான் அளிக்க வேண்டும்" என்ற காந்தியாரின் கருத்தையும் அய்யர் ஏற்கவில்லை. "பார்ப்பனப் பிள்ளைகளும் அல்லாத பிள்ளைகளும் ஒன்றாக உட்கார்ந்து உணவருந்துவதற்கு நான் ஒருப்பட முடியாது. அப்படிச் செய்தால் குருகுலம் கெட்டுவிடும்" என்று அய்யர் கூறிவிட்டார். இது ஈ.வெ.ரா.வுக்குப் பார்ப்பனர்களையும் காங்கிரசையும் தாக்குவதற்குச் சாதனமாக்கிற்று.

இக்குருகுலப் போராட்டத்தால் தமிழ்நாட்டில் ஒரு பெரும் பரபரப்பு உண்டாயிற்று. பார்ப்பனர்கள் தீண்டாமையைப் பற்றிப் பேசுவது வெறும் பேச்சு; அவர்கள் தேசீயத்தைப் பற்றிப் பேசுவது வீண்; ஒற்றுமையைப் பற்றிப் பேசுவதற்குப் பொருள் இல்லை" என்ற நிரந்தரமான உண்மையை உணர்ந்து கொண்டனர். தமிழ் மக்கள் குருகுலத்துக்குப் பண உதவி செய்து வந்த பார்ப்பனரல்லாத மக்கள் தங்கள் உதவியை நிறுத்திக் கொண்டனர். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இதன் பொருட்டுச் சேர்க்கப்பட்ட தொகைகள், நாயுடு, ஈ.வெ.ரா., திரு.வி.க. இவர்களின் முயற்சியால் ஆங்காங்கே நின்றுவிட்டன. எரிவதை இழுத்துவிட்டால் கொதிப்பது எங்கே?

குருகுலம் ஒழிந்தது. தேசீயத்தின் பேரால் வருணாச்சிரம தருமத்தை நிலைநிறுத்த ஏற்பட்ட ஒரு நிலையம் ஒழிந்ததைப் பற்றித் தமிழர் களிகூர்ந்தனர்.

- அடுத்த இதழில் முடியும்.

('தமிழர் தலைவர்' என்ற நூலிலிருந்து)

வாலிபர் சங்கம் என்ற பெயரில் ஒரு அமைப்பு திருப்பூரில் இருந்தது. அதில் குமாரசாமியும் உறுப்பினராகச் சேர்ந்து, சுதந்திரப் போராட்டத்தில் தீவிர ஆர்வம் காட்டினார். காந்தியடிகள் கூறியபடி கதராடையே உடுத்தினார், தம் மனைவியையும் கதர்ச் சேலை அணியும்படி செய்தார். தினந்தோறும் ராட்டையில் நூல் நூற்பதைத் தம் கடமைகளுள் ஒன்றாக நினைத்துச் செயல்பட்டார்.

வேதாரணியத்தில் மூதறிஞர் ராஜாஜி தலைமையில் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொள்ளத் துடித்தார். ஆனால், குடும்பத்தினரும், தொழில் நிலையத்தினரும் தடுக்கவே, அவரது ஆசை நிறைவேறவில்லை. அதனால் மனம் உடைந்தார். ஒருநாள் முழுவதும் உண்ணாவிரதம் இருந்து, மன ஆறுதல் தேடிக் கொண்டார்.

1932ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் நாள் ஆங்கிலேய வைசிராய் லார்டு வெல்லிங்டன் கட்டவிழ்த்துவிட்ட அடக்குமுறை தர்பார் காரணமாக அண்ணல் காந்தியடிகள் பம்பாயில் கைது செய்யப்பட்டார். நாடே கொத்தளித்தது, நாடெங்கிலும் அறப்போர் தொடங்கப்பட்டது, திருப்பூரும் களத்தில் இறங்கியது. ஜனவரி 6ஆம் நாள் திருப்பூரில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடந்தது. ஜனவரி 10 முதல் அறப்போர் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.

ஜனவரி 10ஆம் நாள், 144 தடை உத்தரவை மீறி, பி.எஸ். சுந்தரம் என்கிற வீரர், ஒன்பது தொண்டர்களுடன் ஒத்துழையாமை ஊர்வலத்தை நடத்தினார். 'வந்தே மாதரம்' முழக்கத்துடன், 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்ற நாமக்கல் கவிஞரின் பாடலை எழுச்சியுடன் பாடிக்கொண்டே, திருப்பூர் நகர வீதியில் தொண்டர்கள் வீரநடை போட்டனர். அந்தத் தொண்டர்களில் ஒருவராக, குடும்பத்தினர் தடுத்தும், நண்பர்கள் அறிவுரை கூறியும் கேட்காமல், எல்லோருக்கும் முன்னால், முன்னணி வீரராக, மூவர்ண்ணக் கொடியுடன் குமாரசாமியும் வீரநடை போட்டார்.

போலீஸ் படை 'கலைந்து செல்லுங்கள்' என்று எச்சரித்தும், கலைய மறுத்து, "அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே" என்று முழங்கினார்கள் விடுதலை வீரர்கள். போலீசார் பாய்ந்து, அவர்களை ஓட ஓடத் துரத்தி அடித்து நொறுக்கினார்கள். கொடியைத் தாங்கி, முன்னால் சென்று கொண்டிருந்த குமாரசாமிக்குச் சரியான அடி. அவரை ஆளுக்கொரு பக்கம் குண்டாந்தடியால் தாக்கினர், மண்டை எலும்பு உடைந்தது, குருதி கொட்டிய நிலையிலும், தாங்கிப் பிடித்த தாயின் மணிக்கொடியை வீரர் குமாரசாமி விடவில்லை. அவரது கரங்களிலிருந்து போலீசாரால் கொடியைப் பறிக்க முடியவில்லை.

பட்ட அடியால், மூளை செயலற்றதும், மாவீரன் குமாரசாமியின் உடல் மண்ணில் சாய்ந்து, குருதியில் தோய்ந்தது. ராமன் நாயர் என்பவர் மார்பில் பலமான அடி விழுந்தது. மார்பு எலும்பு ஒன்று ஒடிந்தது, சுந்தரம் என்பவரின் உடலெல்லாம் எலும்பு முறிவு.

சந்துபொந்துகளில் வீசி எறியப்பட்டிருந்த தொண்டர்களை அவர்களது உறவினர்களும், நண்பர்களும் வந்து எடுத்துச் சென்றனர், குமாரசாமி, ராமன் நாயர், சுந்தரம் ஆகிய மூவர் மட்டும் நடுத்தெருவில் குற்றுயிராகக் கிடந்தனர். வெகுநேரத்திற்குப் பிறகுதான், திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அவர்கள் எடுத்துச் செல்லப்பட்டார்கள்.

ஆபத்தான நிலையில் குமாரசாமி நினைவு இழந்தார். அடுத்தநாள் ஜனவரி 11, விடியற்காலை 4 மணிக்கு அரசு மருத்துவமனையில் திருப்பூர்க் குமரன் அமரர் ஆனார். சுந்தரமும், ராமன் நாயரும் நீண்ட சிகிச்சைக்குப் பிறகு, உயிர் பிழைத்தனர்.

சென்னிமலையில் பிறந்து வளர்ந்த குமாரசாமி திருப்பூர்க் குமரனாக மறைந்தார். தாயின் மணிக்கொடியைக் காக்க, இன்னுயிர் ஈந்த குமாரசாமி, திருப்பூரை, இந்திய மக்கள் மறக்க முடியாதபடி செய்து விட்டார்.

-வ. இராசமனோகரன்



# நல்லிரவாகிய நள்ளிரவு!

நாற்பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்பு, ஆகஸ்டு 14-ஆம் தேதியன்று நள்ளிரவில், இந்தியர் தனது அடிமைத் தளையை உடைத்தெறிந்துவிட்டுச் சுதந்திர நாடாக மலர்ந்தது. 1942-ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்துக்கு நாட்டு விடுதலை உச்சக் கட்டமாக அமைந்தது. பெதிக் - லாரன்ஸ் பிரபுவின் தலைமையிலான பிரிட்டிஷ் அமைச்சகத் தூதுக் குழுவினர், ஆட்சி மாற்றத்துக்கான அரசியல் அடித்தளத்தை உருவாக்கினர்.

மாநிலச் சட்ட மன்றங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் 650 பேரும் இரவு பன்னிரண்டு மணி அடித்தவுடன் வாக்குறுதி எடுத்துக் கொள்வதற்காக, டாக்டர் இராசேந்திர பிரசாத்தின் தலைமையில் கூடியிருந்தனர்.

திட்டத்தைத் திரு சவகர்லால் நேரு கொண்டு வந்து பேசுகையில், "விதியுடன் கால ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறோம்" என்று கூறினார்.

"இரவு பன்னிரண்டு மணி அடித்து ஓய்ந்தவுடன், இங்குக் கூடியுள்ள அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் அனைவரும், கீழ்க்கண்டபடி வாக்குறுதி எடுத்துக்கொள்வார்கள்" என்று கூறும் தீர்மானம் முன் வைக்கப்பெற்றது.

"இன்னல்கள், தியாகங்கள் ஆகியவற்றின் மூலம் இந்தியப் பெருமக்கள் சுதந்திரம் பெற்றிருக்கும் இந்தப் புனித வேளையில், பழம் பெருமை வாய்ந்த இந்த நாடு உலக அரங்கில் தனக்குரிய இடத்தை அடைவதற்கும்-உலக அமைதிக்கும்-மனித சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கும்-இந்த நாடு தன்னாலியன்றதனைத்தையும் செய்வதற்கும் ஏற்ப இந்திய நாட்டுக்கும், மக்களுக்கும் தொண்டு செய்வதற்கு இந்திய அரசியல் நிர்ணய சபை உறுப்பினராகிய நான் தாழ்மையுடன் என்னை அர்ப்பணிக்கிறேன்".

- திட்டத்தை ஆதரித்துப் பண்டித நேரு பின்வருமாறு பேசினார் :

"நமது வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய நேரம் வந்துவிட்டது. வாக்குறுதிகளை முழு அளவுக்கு நிறைவேற்ற முடியாவிட்டாலும், கணிசமான அளவுக்கு நிறைவேற்ற வேண்டும்; உலகம் உறங்கிக் கொண்டிருக்கும் இந்த வேளையில், இந்தியா விழித்து எழுந்து சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்கிறது. பழையன கழிந்து புதியன புகுதலும், நீண்ட நாட்களாக ஒடுக்கப்பட்டிருந்த ஒரு நாட்டின் ஆன்மா விழித்தெழுந்து மீண்டும் பேசும் நிகழ்ச்சியும் வரலாற்றில் அபூர்வமாகத்தான் நிகழும். தாய் நாட்டின் சேவைக்கும், மனித சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கும் எங்களை அர்ப்பணித்துக் கொள்வோம் என்று இந்த நேரத்தில் உறுதிமொழி எடுத்துக்கொள்வது முற்றிலும் பொருந்தும்".

உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த சௌத்ரி காலிக் குஸ்ஸமான் தீர்மானத்தை வழிமொழிந்து பேசினார்.

அதற்கு முன்னால், அவைத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத் தமது துவக்க உரையில், நாடு தனது இலட்சியத்தை அடைவதற்கு வழிகாட்டியமைக்காக இறைவனுக்கு நன்றி செலுத்தினார். காந்தியடிகளைப் பற்றிக் கூறுகையில், "கடந்த 30 ஆண்டுகளாக நமக்குக் கலங்கரை விளக்கமாகவும், வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும் இருந்து வருகிறார்" என்று புகழாரம் சூட்டினார்.

இரவு மணி பன்னிரண்டு அடித்தவுடன் அவைத் தலைவரும் மற்ற உறுப்பினர்களும் எழுந்து நின்று உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். அவைத்தலைவர் உறுதிமொழியைப் படிக்க-ஒவ்வொரு வாக்கியமாக அதை உறுப்பினர்கள் இந்தியிலும் ஆங்கிலத்திலும் திருப்பிக் கூறினர்.

அதன் பின்னர் அவைத் தலைவர், கீழ்க்காணும் செய்தியை வைசிராய் மவுண்ட் பேட்டன்

பிரபுவுக்கு அனுப்ப வேண்டுமென்று முன் மொழிந்தார்.

(அ) அரசியல் நிர்ணய சபை இந்தியாவை ஆள்வதற்கான அதிகாரத்தைப் பெற்றுவிட்டது.

(ஆ) மவுண்ட்பேட்டன் பிரபு 1947 ஆகஸ்டு 15-ஆம் தேதி முதல் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட வேண்டுமென்ற பரிந்துரையினை இந்திய அரசியல் நிர்ணய சபை ஏற்றுக்கொள்கிறது.

இதற்குப் பிறகு பம்பாயைச் சேர்ந்த திருமதி ஹன்ஸாமேத்தா, டாக்டர் சரோஜினி நாயுடு அப்போது அங்கு இல்லாததால் நாட்டுக்குத் தேசியக் கொடியை வழங்கினார்.

திருமதி சுசேதா கிருபளானியின் "வந்தேமாதரம்" பாடலுடன் அவைக்கூட்டம் துவங்கியது. கூட்டத்தின் முடிவிலும் அவரே "சாரே ஜகான் சே அச்சா'' என்ற இந்திப்பாடலைப் ('பாருக்குள்ளே நல்ல நாடு பாரத நாடு' பாடினார்.)

அரசியல் நிர்ணய சபையின் தீர்மானத்தை டாக்டர் இராசேந்திர பிரசாத்தும், திரு.சவகர்லாலும் உடனடியாக வைசிராய் மவுண்ட்பேட்டன் பிரபுவுக்குத் தெரியப்படுத்தினார்.

"எனக்கு அளிக்கப்பட்டுள்ள கௌரவம் குறித்துப் பெருமைப்படுகிறேன்; அரசியல் சட்டத்துக்கு உட்பட்டு உங்கள் ஆலோசனைகளை நிறைவேற்ற முழுமுயற்சி மேற்கொள்வேன்'' என்று மவுண்ட் பேட்டன் பிரபு கூறினார்.

சபை உறுப்பினர்கள் முகமலர்ச்சியுடன் கலைந்து சென்றனர். பார்லிமென்ட் கட்டடத்துக்கு வெளியே கூடியிருந்த பெருந்திரளான மக்கள் அவர்களை வாழ்த்தி வரவேற்றனர். வரலாறு படைத்த அவை உறுப்பினர்களைக் கண்டு, வாழ்த்துவதற்காக உற்சாகம் கரைபுரண்டோட்க் காத்துநின்ற கூட்டத்தினரைக் கட்டுப்படுத்துவது காவல் துறையினருக்குப் பெரும் பிரச்சினையாகிவிட்டது.

டாக்டர் அம்பேத்கர், கூட்டத்தின் நெரிசலில் சிக்கிக் கொண்டார். அண்மையிலிருந்த முக்கியச் சாலையில் அமெரிக்கத் தூதர் திரு.ஹென்ரி கிரேயின்



14-15.8.1947 நள்ளிரவில் நடைபெற்ற சுதந்திர இந்தியாவின் முதலாவது சட்டமன்றக் கூட்டத்தில் பிரதமர் நேரு உரையாற்றுதல்.





இந்தியாவின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேருவுடன், முதல் குடியரசுத்தலைவர் ராஜேந்திர பிரசாத்.

மனைவியார், கூட்டத்தில் தமது கணவரைத் தேடிக் கொண்டிருந்தார். அவரைக் கண்டு கொண்ட ஒரு காவல்துறை அதிகாரி அவரை அழைத்துச் சென்று காரில் அமர்த்தினார்.

ஆகஸ்டு 15-ஆம் தேதியன்று மவுண்ட்பேட்டன் பிரபு, கவர்னர் ஜெனரலாகப் பதவியேற்றார். அப்போதைய தலைமை நீதிபதி கானியா, வைசிராயின் தர்பார் மண்டபத்தில் (இப்போதைய ராஷ்டிரபதி பவன்) அவருக்குப் பதவி ஏற்பு செய்துவைத்தார். நேருவின் தலைமையில் பதவியேற்ற புதிய அமைச்சரவைக்குக் கவர்னர் ஜெனரல் பதவி ஏற்பு செய்துவைத்தார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர், மவுண்ட்பேட்டன் பிரபு தமது ''கோச்'' வண்டியில் ஏறி, அரசியல் நிர்ணய சபை கூடியிருந்த மண்டபத்துக்குப் போய்ச் சேர்ந்தார். சபைக்கூட்டம் காலை பத்து மணிக்குத் துவங்கியது.

இந்தியா சுதந்திரமடைந்ததைப் பாராட்டி உலகெங்கிலுமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகளைச் சபைக்கூட்டத்தில் டாக்டர் இராசேந்திர பிரசாத் படித்துக் காட்டினார்.

பிரிட்டிஷ் மன்னர் அனுப்பிய வாழ்த்துச் செய்தியினை மவுண்ட் பேட்டன் பிரபு படித்தார்.

மவுண்ட்பேட்டன் பிரபு தமது உரையில், இந்தியத் தலைவர்களின் விவேகம், சகிப்புத்தன்மை, சிநேகபாவம் ஆகிய நற்குணங்களைப் புகழ்ந்துகூறினார். ''முதலில் நிர்ணயிக்கப்பட்டிருந்த தேதிக்கு 10 மாதங்கள் முன்னதாகவே ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு இந்தியத்தலைவர்களின் அருங்குணங்களே காரணம்'' என்றார் அவர். சர்தார் வல்லபாய் படேலின் தொலைநோக்கு மதிநுட்பத்தையும், பண்டித நேருவின் தீரத்தையும் கவர்னர் ஜெனரல் பாராட்டிப் பேசினார். 'உலகப் புகழ்பெற்ற தலைவர்களுள் நேருவும் ஒருவர்' என்றார்.

கவர்னர் ஜெனரலின் உரைக்குப் பதிலளித்துப் பேசிய டாக்டர் இராசேந்திர பிரசாத், "இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி இன்றோடு முடிவடைந்தது; இனிமேல் பிரிட்டன் நமது உறவுகள், சமத்துவம், நட்புரிமை நன்மை ஆகியவற்றின் அடிப்படையிலேயே அமைந்திருக்கும்" என்றார்.

அவைக்கூட்டம் முடிந்து திரும்பிச்செல்லுகையில் மவுண்ட்பேட்டனும், அவரது மனைவியாரும், அவரது மகள் பாமிலாவும் - வெளியே காத்திருந்த கூட்டத்தினரின் அன்புப்பிடியில் சிக்கித் தவித்துப் போயினர். கூட்டத்திலிருந்த எல்லாரும், அவர்களுடன் கைகுலுக்க முயன்றனர். அவர்கள் வைசிராயின் இல்லத்துக்குப் போய்ச்சேர்ந்த போது பகல் மணி பன்னிரண்டாகி விட்டது!

- கே. ஜே. வித்யா

# மகா கவிகளின் மறதிகள்

## பிரபஞ்சன்

இந்தியாவின், முதல் தன் வரலாற்று நூலை, வியாசர்தான் எழுதினார் என்று சொல்லலாமா? 'ஆம்' என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

வியாசரின் இயற்பெயர், கிருஷ்ண துவபாயனன் என்பதை அறிவோம். கறுப்பன் என்பதால், 'கிருஷ்ணர்' என்கிற சொல் ஒட்டிக் கொண்டது, போலும். பாரதத்தைத் தொகுத்தவர்தான் வியாசர் என்றாலும், பாரதமே, அந்தப் பேரிலக்கியத்திலே உலவும் பாத்திரங்கள் எல்லாமே, வியாசரின் பரம்பரைதானே?

வியாச மரபைக் கொஞ்சம் விளங்கிக் கொள்வோம்.

குரு வம்ச மன்னன் விசித்திர வீரியன். சந்ததியின்றி இறந்து போகிறார். நாடாள மன்னர் வேண்டுமே. விசித்திர வீரியன் மனைவிமார்கள் இருவர். அம்பாலிகை மற்றும் அம்பிகை அவர்கள். விசித்திர வீரிய அண்ணன் முறையாக வேண்டிய வியாசர் மூலம், அந்தப் பெண்களிடம் சந்ததியை உருவாக்கலாம் என்று யோசிக்கிறாள். விசித்திர வீரியன் தாய் சத்தியவதி. வியாசர் அழைக்கப்படுகிறார். சாஸ்திர சம்மதமான இந்தக் கர்ப்பதான முறைக்கு வியாசர் சம்மதிக்கிறார். வியாசருக்கு அம்பாலிகை மூலம், திருதராஷ்டிரன் பிறக்கிறான். அம்பிகை மூலம், பாண்டு பிறந்தான். அம்பாலிகையின் 'சூத்திரத்' தோழி சுபா மூலம் விதுரன் பிறந்தான். திருதராஷ்டிரன், துரியோதன் முதலான 101 பிள்ளைகள் மற்றும் ஒரு பெண்ணுக்குத் தந்தையாவதும், பாண்டுவின் மனைவிகள் பஞ்சவரைப் பெற்றதும், இவர்களின் கதையே மகாபாரதம் அல்லவா? ஆக, வியாசரின் கதையும், வியாசப் பரம்பரைக் கதையும் தானே மகாபாரதம்? இந்தப் பாரதத்தை வியாசர் எழுதினார். எழுதியவைகளைத் தொகுத்தார் என்கிற கொள்கைகளையும் ஏற்றுக் கொள்வோம் என்றால் மகாபாரதம், வியாசரின் தன் வரலாற்று நூல் என்று சொல்லத் தடை என்ன?

வியாசர் 'சூதர்' வகுப்பைச் சேர்ந்தவர். இன்றைய புராணப் பிரசங்கிகளைப் போலவும் தமிழ் மரபில் பாணர்களைப் போலவும், ஊர்தோறும் சென்று கதை சொல்லி வாழ்கிறவர்களே 'சூதர்' என்பவராவர். வியாசரோடு பலரும் பாரதக் கதையைச் சொல்லியிருக்கிறார்கள். தங்கள் தங்கள் மனோபாவம் கற்பனை தோன்ற இவர்கள் காலம், இடம், சூழல்களுக்கு ஏற்றவாறு கதை சொல்லியிருக்கிறார்கள். இவர்களது மாணவர்கள் மற்றும் ரசிகர்கள் தங்கள் தங்கள் கற்பனையைச் சேர்த்தார்கள். எல்லாப் பேரிலக்கியங்களைப் போலவே, மகாபாரதமும் முதலில் வாய்மொழியாகச் சொல்லப்பட்டு பின்னரே எழுத்து வடிவத்தைப் பெற்றது. எழுத்து வடிவம் பெற்றபோது அது வியாசனுடையதாக மட்டுமின்றி பல ஆசிரியர்களின் கைவண்ணம் பெற்றதாக மாறி இருந்தது. இந்தியாவில் மகாபாரதம் சுமார் பத்துக்கும் மேற்பட்ட பிரதிகளைப் பெற்றிருந்தமைக்கு, இந்த பல ஆசிரியர்களின் கைவண்ணமும், மக்கள் மனோபாவமும் காரணம்.

சுதந்திர இந்தியாவில் பெண்கள் நிலையை மேம்படுத்துவதற்கான முதல் சட்டப்பூர்வமான மகளிர் கமிஷன் 31-1-1992ல்தான் நியமிக்கப்பட்டது!

மகாபாரதத்தின் இரண்டாயிரத்துக்கும் அதிகமான ஆண்டுகளின் ஜீவியத்துக்கு எவை காரணமாக இருக்க முடியும்? அந்த இதிகாசத்துக்கு மேலே பூசப்பட்ட பக்தி முலாம் என்று கூற முடியுமா? அது மிகவும் பலகீனமான காரணமாகவே இருக்க முடியும். வைணவம் புத்துயிர் பெற்ற பத்தாம் நூற்றாண்டை ஒட்டியே, பாரதத்தை, அது தன் வயமாக்கிக் கொண்டது.

அதற்கும் முன்னர், பாரதத்தின் ஆயிரம் ஆண்டு கால ஜீவியத்தை சாத்தியமாக்கியது எது? பாரதத்தின் பேரிலக்கியத் தன்மைதான். மனிதனை, அவனுடைய சகல இருட்டுகளுடனும், சகல உன்னதத்துடனும், எதிலும் குறை வைக்காது சித்திரித்தது மகாபாரதம் மட்டுமே ஆகும். விதவிதமான ஏராளமான பாத்திரங்கள் மட்டும், அதன் விசேஷமல்ல. மாறாக, விதவிதமான மானுட சூட்சமங்களை, மனசின் முடிச்சுகளை அது, வாசகர் முன் வைத்தது போல, பிரிதொரு இலக்கியம் வைத்தது இல்லை. பாரதம் படிக்கப் புகுகிற, எவருக்கும் அதற்குள் ஏராளமான அதிர்வுகள் காத்திருக்கின்றன, மனித குலத்துக்கு என்றுமே சவாலாக இருக்கும் சகமனிதப் புரிதலை அந்த இதிகாசம் சாத்தியப்படுத்தியது போல மற்றொன்று இன்றுவரை சாத்தியப்படுத்தியது இல்லை. மகாபாரதம் பிரதியாக வடிவமைக்கப்பட்ட பிறகு மனிதன், மனிதனுக்குச் சுலபமானவனாக ஆனான். மனிதத்துக்குள்ளே இருக்கிற நூறு ஆயிரம் முகங்களை அவனுக்குச் சொல்லியது பாரதம். அதனால் தான் அது 'மகா' பாரதம் ஆயிற்று. 'மகா' என்கிற அடை, அளவில் வந்தது அன்று. உள்ளடக்கப் பெருமையினால் வந்தது.

என்றாலும், மகாபாரதம், விளங்கிக் கொள்ள முடியாத பல 'விடுதல்களை' அல்லது விலகல்களைப் பெற்றுள்ளதை யோசிக்கவே வேண்டியிருக்கிறது.



1. தன் காலத்தில் இருந்த 'நியோகம்' என்கிற தர்மத்தால் தான் (வழக்கினால்) வியாசர் தன் 'சகோதரன் மனைவிமார்களுடன் கூடி அரச வாரிசுகளைத் தந்தான் என்கிறது மகா பாரதம். வியோகம் என்பது பண்டைய ஆரிய பரம்பரையின் குழந்தைகள் அற்ற விதவைகள், குழந்தைகளைத் தரமுடியாத கணவர்களை உடைய பெண்கள், தன் கணவரின் உடன்பிறந்தார் மூலமும், தன் கோத்திரத்தைச் சேர்ந்தவர் மூலமும் அல்லது காசு கொடுத்து பிராமணன் மூலமும் பிள்ளை பேற்றை அடையலாம். இது அந்தக் காலத்தில் அங்கீகரிக்கப் பட்ட வழக்கம்தான்.

இது வாரிசுகள் என்கிற நோக்கத்தைப் பூர்த்தி செய்கிறது என்றாலும், அந்தக் காரியத்தில் ஈடுபடும் பெண்களுக்குப் பெரும் அவஸ்தையாகவே இருந்திருக்கிறது. வியாசர் என்கிற கருப்பனை, நாற்றம் வீசுகிற உடம்பை உடையவனை, முக்கியமாய் - காதல் அரும்ப முகாந்திரங்கள் இல்லாதவனைக் கண்டு, அருவருப்பால் முகத்தை, கண்களை இறுக்கி மூடிக்கொள்கிறாள் அம்பாலிகை. ஆகவே, கண் இல்லாத திருதராஷ்டிரன் பிறக்கிறான். அம்பிகையின் மனதிலோ கடுமையான பயமே ஏற்படுகிறது. உடம்பு வெளுத்துப் போகிறது அவளுக்கு. அதனால் வெளுத்த பாண்டு பிறக்கிறான்.

இத்தனை அவஸ்தைகளையும் உடைய பெண்களைச் சேர வியாசர் எவ்வளம் மனம் ஒப்பினார்? தாயின் கட்டளைப்படி அவர் இணங்கினார் என்றால் பெண்களின் மனத்துயரம், தர்மசங்கடம் ஏன் சித்தரிக்கப்படவில்லை. மகாபாரதத்தின் பல பகுதிகளையாவது எழுதி இருக்கும் வாய்ப்பைப் பெற்ற வியாசர் தன் மனப் பிரச்சினைகளை ஏன் எழுதவில்லை? ஒரு பெண் தன்னை விரும்பவில்லை என்று தெரிந்தும் பலாத்காரம் செய்யும் அளவிற்குப் போகிற இந்த நியோகத்தை எங்ஙனம் ஒரு கவியால் ஏற்கமுடிகிறது?

2. பிறந்த அக் கணமே தன் தந்தை பராசரனுடன் தவம் செய்யக் கிளம்பும் ஞானக் குழந்தை வியாசர். எல்லை இல்லாத தவப்பெருமையும் ஞான தேஜசும் உடைய மகரிஷி, சடுதியில், இந்த நியோக முறைக்கு எப்படி ஒப்புக் கொள்கிறார்? அவர் தவம் என்னவாயிற்று? தவத்துக்குள் இந்தச் சறுக்கல்கள் உள்ளடங்கியதுதானா?

3. மகாபாரதத்தை இயக்குபவர்கள் மூன்று ஆண்கள், வியாசர், பீஷ்மர், விதுரர் ஆகியோர்களே அவர்கள். இதில், வியாசர் தன்னைக் குறுக்கிக் கொள்கிறார். பீஷ்மனோ மகாமனிதனாக வடிவமைக்கப்படுகிறான்.

பீஷ்மன் என்கிற மனிதனின் மகத்துவம், அவன் தன் தம்பி விசித்திர வீரியனுக்காக அம்பை, அம்பாலிகை, அம்பிகா ஆகிய மூன்று சகோதரிகளைக் கடத்திக் கொண்டு வருவதில் தொடங்குகிறது. இதில், அம்பை ஏற்கெனவே ஒருத்தனின் காதலி, அம்பாலிகை பீஷ்மரின் பௌருஷத்தில் தன் இதயத்தைப் பறிகொடுத்தவள் என்றாலும் என்ன? அம்பையை பீஷ்மனும் ஏற்கவில்லை. அவள் காதலனும் ஏற்கவில்லை. அம்பாலிகையை பீஷ்மன் சுலபமாகவே கைகழுவுகிறான்.

பீஷ்மன் என்கிற மகாமனிதன், கொஞ்சமும் இந்தப் பெண்களின் ஆன்மாவை, மனசைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படவில்லை. ஏன்? அவன் பீஷ்மன். சரி

போகட்டும். வியாசர் ஏன் அவர்கள் மனுஷப் பிறவிகள் என்றுகூட கவலைப்படவில்லை. பீஷ்மனின் ஆளுமையைக் காட்டுவதில் அவர் காட்டுகிற அக்கறை இந்தப் பெண்களை, ஒரு சார்புப் பாத்திரங்கள் என்கிற அளவில்கூட செதுக்கவில்லையே, ஏன்?

பீமன் போகிற போக்கில் காதலித்து, தாயாக்கிச் சென்றுவிடுகிற இடும்பியைக் குறித்து பீமனும் கவலைப்படவில்லை. "அவளைப் பெற்ற" ஆசிரியனும் கவலைப்படவில்லையே - எப்படி?

திரௌபதியின் துகில் உரிப் பருவத்தின் போது மகாமனிதன் பீஷ்மன், மாவீரன் துரோணன், ரிஷிகிருபன், முனிபுங்கவன், அசுவத்தாமன் போன்ற 'மனச்சாட்சிகள்' ஏன் மவுனித்துக் கிடந்தன? கர்ணனுக்கு இருந்த "விட புருஷ" ஆசை இவர்களின் மனதுக்குள்ளும் புகுந்ததா என்ன?

கண் தெரியாத திருதராஷ்டிரனை மன்னனாக்குவதில் மிகத் தீவிரமாக இருந்து அவன் ஆட்சியை, ஆயிரம் கொடுமைகள் அவன் செய்தும், கொடுமைகளுக்குத் துணை போய் இருப்பதும், திருதராஷ்டிரனைக் காப்பாற்றுவதிலும், பீஷ்மர் கொண்ட அக்கறையில் மகா ஞானியாக இருந்த விதுரனை அரசனாக்கிப் பார்ப்பதில் ஒரு எள் அளவும் இல்லையே ஏன்? அவன் 'சூத்திரத்' தாய்க்குப் பிறந்தவன் என்பதாலா? விதுரன் பக்கம் இருக்கும் நியாயம் பற்றிப் பேச "மீனவப் பெண்ணுக்குப்" பிறந்த வியாசனுக்கும் ஏன் வார்த்தைகள் இல்லாமல் போய்விட்டன?

ஒன்று புரிகிறது!

ஆட்சிபீடம் என்கிற நாற்காலியைக் காப்பாற்றுவதிலேயே பீஷ்மனின் ஆயுள் கழிந்து போயிற்று. பெண்கள் அந்த யுகத்தின் பார்வையில் வெறும் நுகர் பொருட்கள். அவர்களுக்கு ஆத்மா என்பது இல்லை. மனம் என்பதும் இல்லை. ஆசைகள் இல்லை. விருப்பு வெறுப்புகள் இருக்கமுடியாது.

இதைக் கேள்வி கேட்கிற ஆய்வுகள், இந்திய மொழிகளில் நடக்கத் தொடங்கி இருக்கின்றன. வியாசரின் 'விலகலை' கேள்விக்குள்ளாக்கும் இலக்கியப் படைப்புக்கள் உருவாகத் தொடங்கி இருக்கின்றன. அண்மையில் வெளிவந்திருக்கும் நந்திகிஷோர் ஆச்சாரியா இந்தியில் எழுதி, தமிழில் சரஸ்வதி ராம்னாத். மொழி ஆக்கத்தில் வெளிவந்திருக்கும் மகாபாரதத்தில் பெண்ணியம் என்கிற நாடகத்தில் இதுபோன்ற எண்ணற்ற கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கிறது (அலைகள் வெளியீட்டகம், சென்னை 24).

மராத்தி எழுத்தாளர் ஐராவதி கார்வே இப்பொருள் பற்றி அருமையாக முயற்சிகள் செய்துள்ளார்.

மகாகவிகளின் மறதிகள், விடுபடல்கள், விலகல்கள் இன்று கேள்விக்குள்ளாகின்றன. எதையும் கேள்விக்கு உள்ளாக்குவதும், ஆராய்வதுமே, அறிவுப் பயணம் செய்யும் அறிவாளர்களின் பணியாக இருக்க முடியும். மகத்துவம் என்று கருதப்படுகிற எதுவும் மண்ணுக்கு மேலும் மனிதத்துக்கு மேலும் இல்லை.



## தேசியச் சின்னம்

தேசியச் சின்னமானது, சுதந்திர இந்தியாவின் அடையாளத்தையும், இறையாண்மையையும், தன்னகத்தே கொண்ட மரியாதையையும், விசுவாசத்தையும் காட்டுகின்றது.



நாட்டின் தேசியச் சின்னமானது, சாரநாத்தில் உள்ள அசோகர் ஸ்தூபி சிங்கத்திலிருந்து வந்தது. அசல் முகப்பில் பின்புறம் ஒன்றுக் கொன்று ஒட்டியுள்ள நான்கு சிங்கங்கள் உள்ளன. அதன் கீழே மணி வடிவ தாமரை மேல், யானை, பாய்ந்து செல்லும் குதிரை, ஒரு காளை மற்றும் ஒரு சிங்கம் ஆகியனவும் இடை இடையே சக்கரங்களும் முன், பொறிக்கப்பட்டுள்ளது. பளபளப்பான ஒரே பாறைக் கல்லில் உருவாக்கப்பட்ட ஸ்தூபியின் மேல் பகுதியானது நீதிச் சக்கரத்தினால் (தர்மசக்கரம்) அலங்கரிக்கப்பட்டுள்ளது.

1950ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் தேதி இந்திய அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இத்தேசியச் சின்னத்தில் மூன்று சிங்கங்களே கண்ணுக்குத் தெரியும். நான்காவது சிங்கம் கண்ணிலிருந்து மறைக்கப்பட்ட நிலையில் உள்ளது. பீடத்தின் நடுப் பக்கத்தில் உள்ள சக்கரத்தின் வலது புறம் ஒரு காளையும், இடது புறம் ஒரு குதிரையும் இடது மற்றும் வலது கோடியில் பிற சக்கரங்களின் புறத் தோற்றங்களும் தெரிகின்றன. மணி வடிவத் தாமரையானது நீக்கப்பட்டுள்ளது. பீடத்தின் கீழே முண்டகா உபநிடதத்திலிருந்து எடுக்கப்பட்ட 'வாய்மையே வெல்லும்' என்ற பொருள் கொண்ட 'சத்யமேவ ஜயதே' என்ற சொற்கள் தேவனாகிரி எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

தேசியச் சின்னமானது, இந்திய அரசாங்கம் மற்றும் மாநில அரசாங்கங்களின் அலுவலக நோக்கங்களுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும். இந்தியக் குடியரசுத் தலைவர், மத்திய அமைச்சர்கள் மற்றும் அமைச்சகங்கள்; வெளிநாடுகளிலுள்ள இந்திய தூதரகங்கள்; மாநில ஆளுநர்கள்; மற்றும் தலைமை அதிகாரிகள்; மாநில அமைச்சர்கள் மற்றும் இலாகாக்களின் ஒரே அதிகாரபூர்வமான முத்திரை இதுவே ஆகும்.






கல்லக் குடிஎனும் களத்திடைப் பிடித்து
சிலமா தங்கள் சிறைவைத் தாரெனை;
பட்டினிப் போரும் பாசப் பெருக்கும்
உறவின ரில்லா உலகுமாய் வாழ்ந்தேன்!
நான்கு சுவர்களின் நடுவே இருப்பதை
எண்ணி எண்ணிநான் ஏக்கம் பெருக்கினேன்!
விரைந்தவர் ஒருநாள் 'விடுதலை' என்றார்;
பறந்தேன் பிறந்த பட்டியை நோக்கி!
விடுதலையின் சுகம் விளக்கவும் ஒண்ணுமோ?
பார்வை புதிது; பசியும் புதிது;
ஊருணி புதிது; உறவினர் புதியவர்;
கண்மாய்க் காற்றின் கனிவே கனிவு!
அன்னை தன் கையால் அமுதம் படைக்க
அள்ளி அள்ளி அருந்திய சுகங்கள்
சூழும் மனைவி, சுற்றம் மக்கள்
வல்லவன் கோவில் வாசக சாலை
நடந்து நடந்து நடையும் பழகினேன்!
சிறகு விரித்த சிட்டுக் குருவிபோல்
வானில் பறந்தே வண்ணம் பாடினேன்!
பத்து நாட்களுக்குள் பட்டினம் வந்தேன்;
மனையொன்று தேடி வாழ்வைத் தொடங்கினேன்.
எண்ணம் புதிதாய் எழுத்தும் புதிதாய்!
வண்ணம் பலப்பல வடித்துச் சிறந்தேன்!
ஒருதரம் சிறையின் உள்ளே சென்று
திரும்பி வந்தால்தான் தெரியும் உலகம்!
'நிழலின் அருமை வெயிலில்' என்று
நிகழ்த்திய மூதோன் மொழிபொய் யன்று!
அடிமை வாழ்வதனையும் அளந்து பார்க்கிறேன்
விடுதலை நாளையும் வியந்து காண்கிறேன்
இரண்டின் நடுவே உள்ளதோர் இடைவெளி
இமயம் குமரி இடைவெளி யலவோ!
சுதந்திரம் முழுவதும் சுகந்தர வேண்டுமேல்
நல்லவர் தமையே நாட்டினர் போற்றுக!
பாரத நாடும் பழந்தமிழ் நாடும்
வாழிய வாழிய வாழிய நீடு!

# THE ARASAN MATCH INDUSTRIES

**WE TWO FIREWORKS INDUSTRIES**

**THE ARASAN ALUMINIUM INDUSTRIES PVT. LTD.**

**VIJAYARAJAN TEXTILES LIMITED**

**SARASWATHI GANESAN FINANCE COMPANY LIMITED**

Regd. Office : Arasan Saraswathi Ganesan Complex,
18, Chairman A Shunmugam Road,
Sivakasi - 626 123 (India)

Phone : (Off) 23101 (4 lines)
(Res) : 72179 & 20117
Cable : "TAMI" "&" "WETWO"
Telex : 0448-201 Tami In
Fax : 04562-72105


# செய்திச் சரம்

*(தமிழ்நாடு அரசு மகிழ்ந்து கொண்டாடி வருகின்ற சுதந்திரத் திருநாள் பொன்விழாத் தொடர்பான - விழாவினுக்கு முந்திய இரண்டு வார முக்கிய நிகழ்ச்சிகள் குறித்த செய்திகள் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன.)*

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால், 1971ஆம் ஆண்டில், நாகப்பட்டினம் மாவட்டம் தில்லையாடி கிராமத்தில் 'தில்லையாடி வள்ளியம்மை நினைவுச் சின்னம்' அமைக்கப்பட்டது. பிற்கால ஆட்சியாளர்களால் அது சரிவரக் கவனிக்கப்படாமல் பொலிவிழந்து சிதிலமடைந்துள்ளது.

எனவே, விடுதலைநாள் பொன்விழா ஆண்டின் நினைவாக அச் சின்னத்தைப் புதுப்பித்துச் சீரமைப்பதற்காக ரூ.5.91 இலட்சத்தை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 3.8.97 அன்று ஒதுக்கீடு செய்தார்.

## சமத்துவபுரம்

சுதந்திரத் திருநாள் பொன்விழாத் தொடர்பாக உயர்நிலைச் செயல்பாட்டுக் குழுவின் கூட்டம் 4.8.97 அன்று அரசு தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தலைமையேற்ற முதலமைச்சர் அவர்கள் "அனைத்துத் தரப்பினரும் நல்லிணக்கத்தோடு சமத்துவமாக ஒரே குடியிருப்பில் வாழும் வகையில் தமிழகம் முழுவதும் 50 இடங்களில் 'சமத்துவபுரம்' என்ற பெயரில் குடியிருப்புகள் உருவாக்கப்படும்" என்று குறிப்பிட்டார்.

## ருக்மணி லட்சுமிபதி அஞ்சல் தலை வெளியீடு

விடுதலைப் போராட்ட வீராங்கனைகளுள் ஒருவரான திருமதி ருக்மணி லட்சுமிபதியின் அஞ்சல் தலை 6.8.97ல் நடைபெற்றது.

திரு. ஜி. கருப்பையா மூப்பனார், எம்.பி., மத்திய அரசின் அஞ்சல் வாரிய உறுப்பினர் திரு. டி. பார்த்தசாரதி, திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி, திரு. டி.சதாசிவம், திரு. டி.டி.வாசு ஆகியோர் கலந்துகொண்ட அவ்விழாவிற்குக் கலைஞர் அவர்கள் தலைமையேற்றார்.

அவர் தமது தலைமை உரையில் - சென்னையில் இருந்த 'மார்ஷல் சாலைக்கு' 'ருக்மணி லட்சுமிபதி சாலை' எனப் பெயரிடத் தாமே முன்பு ஆணையிட்டதை நினைவுகூர்ந்தார்; திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் எம்.எல்.ஏ., வேண்டுகோளின்படி, தமிழ்நாட்டைச் சேர்ந்த தியாகிகளுடைய சரித்திரங்களையெல்லாம் எழுதத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

## தியாகிகள் ஓய்வூதியம்

திருச்சிராப்பள்ளியில் உள்ள வெஸ்ட்ரி மேநிலைப் பள்ளியில் 8.8.97 அன்று நடைபெற்ற சுதந்திரநாள் பொன்விழா கலைநிகழ்ச்சிகள் மற்றும் வேதாரண்யம் வரையிலான கலாச்சாரப் பயணத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்.

அங்கே அவர் பேசுகையில் - சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்குத் தமிழக அரசு வழங்கும் ஓய்வூதியம் இந்த ஆண்டு முதல் உயர்த்தப்படும் என்று குறிப்பிட்டார்.



## 18 தியாகிகளுக்கு நினைவுப் பரிசு

'வெள்ளையனே வெளியேறு' முழக்கம் எழுந்த நாள் நினைவுப் பேரணி, 9.8.97 அன்று காலையில் சென்னையில் துவக்கி வைக்கப்பட்டது.

மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. வ. முல்லைவேந்தன் அவர்கள் முன்னிலையில் மகாத்மா காந்தி சிலை அருகே நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமை தாங்கினார்.

அப்போது அவர் 18 சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கியும், பொன்னாடை அணிவித்தும் சிறப்பித்தார்.



ஆசியாவிலே முதன் முதலில் கலர் பட்டாசுகளை
பொட்டாசியம் குளோரைடு இல்லாமல் தயார்
செய்து அறிமுகப்படுத்தியவர்கள்.

☆
☆★★☆
★★
☆★★☆
☆

**SRI CORNATION FIRE WORKS**

☆
☆★★☆
★★
☆★★☆
☆

*Post Box No.278,*
*Sivakasi - 626 123.*
*Tamil Nadu.*
*Grams : STORK*



# மக்களைக் கவர்ந்த ராஜாஜி

இந்திய நாட்டில் காந்தி மகானின் தலைமை, ஏற்பட்டுப் பத்து ஆண்டுகள் ஆயின. 1929-ஆம் வருஷ இறுதியில் நடந்த அமிருதரசஸ் காங்கிரசின் இலட்சியம் ஒன்று தீர்மானமாயிற்று. 1930ஆம் வருஷ ஆரம்பத்தில் மகாத்மா காந்தி உப்பு சத்தியாக்கிரஹ இயக்கத்தைத் தொடங்கினார். நூறு தொண்டர்கள் அடங்கிய கோஷ்டியுடன் கால்நடையாகத் தண்டி என்னும் இடத்தில் உப்புச் சத்தியாக்கிரகம் செய்யப் புறப்பட்டார். அந்தப் பிரயாணத்தின் விவரங்கள் இந்திய தேசத்திற்கே புத்துயிர் அளித்தன.

காந்திஜி காட்டிய வழியைப் பின்பற்றித் தமிழ்நாட்டிலும் ராஜாஜி வேதாரணியம் உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தார். திருச்சியில் டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் அவர்களின் இல்லத்திலிருந்து நூறு சத்தியாக்கிரகத்தொண்டர்கள் ராஜாஜியின் தலைமையில் கால் நடையாக யாத்திரை கிளம்பினார்கள்.

அந்த யாத்திரையின்போது தமிழ்நாடு என்றும் காணாத காட்சிகளைக் கண்டது.

சுமூர் பதினைந்து நாட்கள் சத்தியாக்கிரகப் படையினரின் யாத்திரை நடைபெற்றது. இந்த யாத்திரையின்போதுதான் ராஜாஜியின் தமிழ்ப் பேச்சுத் திறமை முதன்முதலாக நன்கு வெளியாயிற்று. மாபெரும் பொதுஜனக் கூட்டங்களில் தமிழிலே பேசி ஜனங்களைக் குலுங்கிச் சிரிக்கும்படி செய்யவும், வாதத்துக்கு மேல் வாதமும் உதாரணத்துக்கு மேல் உதாரணமுமாகச் சொல்லி ஜனங்களின் மனத்தைக் கவரவும் ராஜாஜிக்கு ஆற்றல் உண்டு என்பது தெரிந்தது. ராஜாஜி அதுவரையில் திருச்செங்கோடு கிராமவாசிகளிடம் பேசியதைத் தவிர அவ்வளவாகத் தமிழில் பேசியதில்லை. அறிவாளிகளும் ஆங்கிலம் படித்தவர்களும் அடங்கிய கூட்டங்களிலேதான் தம்மால் பேசிச் சமாளிக்க முடியும் என்றுஎண்ணியிருந்தார். வேதாரணிய யாத்திரையின் போது கிராம வாசிகளும் பாமரஜனங்களும் ரசித்துப் பரவசம் அடையும்படிப் பேச முடியும் என்பதைக் கண்டார்.

ராஜாஜியின் பிரசங்க முறை ஜனங்களின் உணர்ச்சியைத் தூண்டி அறிவை மங்கச்செய்து, மனத்தைக் கவரும் முறையல்ல. "ஆஹா! அந்தோ, தேசம் அடிமையில் ஆழ்ந்து கிடக்கிறதே! அதை நினைக்க நினைக்க என் நெஞ்சம் கரைகிறதே, கண்களிலே இரத்தக் கண்ணீர் வருகிறதே! மக்களே! எழுங்கள்! அந்நியனை விரட்டுங்கள்!" என்றெல்லாம் அவரால் பேசமுடியாது. தம்முடைய கட்சி எதுவானாலும் அதைக் கேட்பவர்கள் அறிவினால் ஒப்புக்கொள்ளும்படியாகக் காரணங்களை அடுக்கி உதாரண ரூபத்தில் மனத்திலே பதியச் செய்வார். இவ்விதப் பேச்சினாலும் பதினாயிரக்கணக்கான பொதுமக்களின் கருத்தைக் கவரலாம் என்பது ராஜாஜியின் வேதாரணியம் யாத்திரையின்போது தெளிவாயிற்று.

தஞ்சை ஜில்லா கலெக்டர் மிஸ்டர் தாரன் துரை, ராஜாஜியின் தலைமையில் வரும் சத்தியாக்கிரகப் படைக்கு உணவளித்தல் முதலிய உதவிகளைக் கிராமவாசிகள் செய்யக்கூடாது என்று உத்தரவு போட்டார். இந்த உத்தரவு காரணமாக ராஜாஜியின் யாத்திரை பெரும் முக்கியத்துவத்தை அடைந்தது. தாரன் துரையின் உத்தரவைத் தாக்கியும் பரிகசித்தும் கண்டித்தும் ராஜாஜி, செய்த பிரசங்கங்கள் ரசிகர்களான தஞ்சை ஜில்லா வாசிகளை அவருடைய பக்தர்களாகச் செய்துவிட்டன. தாரன் துரையின் உத்தரவை ஒருவரும் பொருட்படுத்தவில்லை. ராஜாஜிக்கும் அவருடைய தலைமையில் வந்த தொண்டர்களுக்கும் தஞ்சை ஜில்லாக் கிராமங்களிலே இராஜோபசாரம் நடந்தது.



கல்கி

யாத்திரை முடிந்து வேதாரணியத்தை அடைந்தது; ராஜாஜியைச் சட்ட மறுப்புச் செய்ய முடியாமல் தடுத்துவிடுவதென்று போலீசார் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய சூழ்ச்சி பலிக்க முடியாதபடி ராஜாஜி முந்திக்கொண்டார். அதிகாலையில் போலீசார் விழித்தெழுந்து வருவதற்கு முன்னால் கடற்கரைக்குச் சென்று உப்பு எடுத்தார். போலீசாரால் கைது செய்யப்பட்டுபின் ஒரு வருஷம் சிறைத்தண்டனையும் அடைந்தார்.

(நாட்டுக்கொரு புதல்வர்-நூலில் வேதாரண்யம் உப்புச்சத்தியாகிரகம் பற்றிய எழுதிய பகுதி)

இப்பேரணியில் 17 பள்ளிகளில் இருந்தும், 3 கல்லூரிகளில் இருந்தும் பல்வேறு வண்ண உடைகளில் மாணவ-மாணவிகள் அணிவகுத்து வந்தார்கள்.

## தியாகிகளுக்குத் தேநீர் விருந்து

இந்திய சுதந்திரத் திருநாள் பொன்விழாவையொட்டி, அவ்விழாவில் கலந்துகொள்ளப் புதுடெல்லி செல்லும் 50 தியாகிகளுக்குத் தேநீர் விருந்தளித்துக் கவுரவிக்கும் நிகழ்ச்சி 11.8.97 அன்று ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது.

முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் 55 தியாகிகள் கலந்துகொண்டனர்; அனைவருக்கும் தம் கரத்தாலேயே கதராடை அணிவித்துப் பொற்கிழி வழங்கி உரையாற்றினார் கலைஞர்.

தியாகிகள் சார்பில், திரு. டி.செங்கல்வராயன் அவர்கள் நன்றி கூறினார்.



திரு. ஜி. கருப்பையா மூப்பனார், எம்.பி., திருமதி சரோஜினிவரதப்பன் முதலான பலரும் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

தில்லி செல்லும் அத் தியாகிகளை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. வ. முல்லைவேந்தன், மாண்புமிகு தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர், திரு. மு. தமிழ்க்குடிமகன் ஆகியோர் ரயில்வண்டி நிலையத்திற்குச் சென்று வழியனுப்பி வைத்தார்கள்.

## சுதந்திரத் திருநாள் - ஓராண்டு கால நிகழ்ச்சிகள் தொடக்கவிழா

சுதந்திரத் திருநாள் பொன்விழாவையொட்டித் தமிழகமெங்கும் ஓராண்டு காலத்திற்கு நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகள் இசை நிகழ்ச்சி, மாநில விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றின் தொடக்க விழா - சென்னையில் உள்ள ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கில் 14.8.97 அன்று கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

முதல்வர் கலைஞர் அவர்கள் நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்தார்.

மேதகு ஆளுநர் செல்வி மீ. பாத்திமா பீவி அவர்கள் விளையாட்டு வீரர்கள் அணிவகுப்பு மரியாதையை ஏற்று, நான்காவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்றவர்களைச் சிறப்பித்தார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்றார்.



வணக்கத்திற்குரிய சென்னை மேயர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், விளையாட்டுப் போட்டிகளில் வென்றோருக்குப் பரிசளித்தார். இவ்வாறான விளையாட்டுப் போட்டிகள், மற்ற மாவட்டங்களிலும் தொடர்ந்து நடைபெறும்.

மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர், திரு. வ. முல்லைவேந்தன் அவர்கள் வரவேற்புரையோடு தொடங்கிய மேற்கண்ட விழாவில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத் துணைத்தலைவர் திரு. பா. சிவந்தி ஆதித்தன் அவர்கள், விளையாட்டுப் போட்டிகள் பற்றிய விளக்கவுரையாற்றினார்.

விழா முடிவில், புகழ்பெற்ற இசையமைப்பாளர் கங்கை அமரன் குழுவினரின் மாபெரும் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

## சுதந்திரத் திருநாள் பொன்விழா

சுதந்திரத் திருநாள் பொன்விழா நாளான 15.8.97 அன்று காலையில், சென்னையில் - செயின்ட் ஜார்ஜ் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றிவைத்தார், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்.

விழாவில் பங்கேற்ற சுதந்திரப் போராட்டத் தியாகிகள் 50 பேருக்குக் கதராடை அணிவித்து சான்றிதழ்களை வழங்கி



முதலமைச்சர் அவர்கள் பாராட்டினார். பின்னர், கோட்டையின் திறந்தவெளித் திடலில் திரண்டிருந்த மக்களிடை வந்து வாழ்த்துத் தெரிவித்தார்.

*தலைமைச் செயலக முகப்பில்* 'பொன்விழாச் சின்னம்' பெரிய அளவில் வைக்கப்பட்டிருந்தது. நெடிதுயர்ந்த கொடிக் கம்பமும் மலர்ச் சரத்தால் சுற்றி அலங்கரிக்கப்பட்டிருந்தது. தமது சுதந்திரதினப் பொன்விழா உரையில் - மத்திய அரசு சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு அறிவிக்கும் ஓய்வூதியப் பயனுக்குச் சமமாக மாநில அரசும் வழங்கும்; நாடகக் கலைஞர் தியாகி விசுவநாததாஸ் வாழ்ந்த இல்லம் அரசுடைமையாக்கப்படும்; அவர் வாரிசுகளுக்கு நிதியுதவி செய்யப்படும்; முன்னாள் அமைச்சர் கக்கனுக்கு மதுரையில் சிலை அமைக்கப்படும்; 554 கைதிகள் விடுதலை போன்ற அறிவிப்புகளை அவர் வெளியிட்டார்.



சுதந்திரத் திருநாள் பொன்விழாவை முன்னிட்டு கோட்டையில் கொடியேற்றி வைத்தபின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் - சிறந்த அதிகாரிகளுக்கும், தொண்டு நிறுவனங்களுக்கும் விருதுகள் அளித்துச் சிறப்பித்தார்.

காது கேளாதோர், மனவளர்ச்சி குன்றியோர், உடல் ஊனமுற்றோர் உள்ள 4 பள்ளிகளைச் சேர்ந்த 100 சிறுவர் சிறுமியருக்கும் - மற்ற ஊனமுற்ற பள்ளிகளைச் சேர்ந்த 900 குழந்தைகளுக்கும் கலைஞர் அவர்கள் இனிப்பு வழங்கினார்.

சென்னை-எழும்பூரில் ரூ.68.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள காவல்துறை அதிகாரிகள் நட்பகத்தை முதல்வர் அவர்கள் திறந்துவைத்தார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் சார்பில், நூற்றாண்டு விழா நினைவு மண்டபத்தில் - மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் பொன்விழாக் கலை நிகழ்ச்சிகளைத் தொடங்கிவைத்தார்.

## சென்னை - மாநகராட்சி

சென்னை மாநகராட்சியில் - சுதந்திரத் திருநாள் பொன்விழா நாளன்று வணக்கத்திற்குரிய மேயர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

அன்றைய தினம் நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் - சென்னையில் ரூ.29.62 கோடி செலவில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் துவக்கப்படும்; சுதந்திரதினப் பொன்விழாவை முன்னிட்டு மாநகராட்சி சார்பில் இரண்டு வாரங்களுக்குக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என்றெல்லாம் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் உள்ள மற்ற மாநகராட்சிகளிலும் வணக்கத்திற்குரிய மேயர்களே தேசியக் கொடியேற்றி வைத்துக் கொண்டாடினர்.

தொண்டர் படையினரின் 1,050 மீட்டர் நீளமுள்ள தேசியக் கொடியேந்திய பேரணியை, 'மெரினாவில்' முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்; மிக நீளமான அக்கொடியினை, சென்னை மாநகராட்சி வளாகத்தில் - வணக்கத்திற்குரிய சென்னை மேயர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

## புகைப்படக் கண்காட்சி

இந்தியாவின் 50 ஆண்டுகால முன்னேற்றத்தைச் சித்திரிக்கும் புகைப்படக் கண்காட்சியொன்றை, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. வ. முல்லைவேந்தன் அவர்கள் சென்னையில் கலைவாணர் அரங்கத்தில் துவக்கி வைத்தார்.

வரலாற்றுச் சின்னங்கள் பற்றிய புகைப்படக் கண்காட்சி ஒன்றினை - தலைமைச் செயலகத்தில் உள்ள கிளைவ் கட்டடத்தில் செய்தி-சுற்றுலாத்துறைச் செயலாளர் திரு. எஸ். ராஜரெத்தினம் துவக்கி வைத்தார்.

## ஆளுநர் மாளிகை விழா

அன்று மாலை சுதந்திரத்தினப் பொன்விழாவை முன்னிட்டு மேதகு தமிழக ஆளுநர் செல்வி. மீ. பாத்திமா பீவி அவர்கள், ஆளுநர் மாளிகையில் ஏற்பாடு செய்திருந்த வரவேற்பு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், முப்படைத் தளபதிகள், திரு. ஜி. கருப்பையா மூப்பனார், எம்.பி., முதலான அனைத்துக் கட்சித் தலைவர்கள், அரசு உயர்அதிகாரிகள், நீதிபதிகள், பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள், முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன், முன்னாள் மகாராட்டிர ஆளுநர் திரு. சி. சுப்பிரமணியம், சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.

தியாகிகளின் ஓய்வூதியம் உயர்த்தப்பட்டதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் - தமிழ்நாடு - தியாகிகள் சங்கச் சார்பில், மூன்றடி உயர வெள்ளிக் கைத்தடி ஒன்றை - முதலமைச்சர் அவர்களுக்குத் திரு. ஆர்.ஆர். தனபால் வழங்கினார்.

சுதந்திரத் திருநாள் பொன்விழாவையொட்டி, தமிழகத்தில் உள்ள மாவட்டங்கள்தோறும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே தேசியக் கொடியினை ஏற்றிவைத்தார்கள்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : ரா. சிவகுமார், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 568926, 568927





ஆசிரியர் மடல்

## ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

அடிமை இருளில் இருந்த நம் இந்திய நாட்டினைச் சுதந்திர வெளிச்சத்திற்குக் கொண்டுவர - காந்தியடிகள் தலைமையில் அறவழியிலும், நேதாஜி தலைமையில் மறவழியிலுமாக நம் முன்னோர் முயன்று பாடுபட்டு வெற்றி கண்டு, ஐம்பதாண்டுகள் ஆகிவிட்டன.

காந்தியார் வழியிலிருந்து நேதாஜி மாறுபட்டிருந்தாலும்கூட, கடைசிவரை அவர் மீதான மதிப்பும் மரியாதையும் குறையாமலே இருந்தார்; முறைப்படி நாம் சுதந்திரம் பெற்றது 1947 ஆகஸ்ட் 15ஆம் தேதி எனினும் , அதற்குமுன் 1943 அக்டோபர் 21ஆம் நாளே, இந்தியா சுதந்திரம் பெற்றுவிட்டதாகக் கூறி, சிங்கப்பூரில் தற்காலிக அரசை நிறுவினார் நேதாஜி; இது வரலாறு.

இவ்வாறான அரசியல் விடுதலையினைப் பெற்றுப் பொன்விழாக் கொண்டாடும் நாம் - பரிபூரணப் பொருளாதார விடுதலையைப் பெற்றாக வேண்டும். மக்களின் வாங்கும் சக்தியை அதிகரிக்கச் செய்தாக வேண்டும். அறியாமை, வறுமை, வேலையின்மை போன்ற குறைகளற்ற எதிர்காலத்தைக் கண்டாக வேண்டும்.

அந்நியரை விரட்டியடித்து அதிகாரபூர்வமாகச் சுதந்திரம் பெறப் பாடுபட்ட அளவுக்கு - அதை ஆனந்த சுதந்திரமாகக் கொண்டாடுமளவுக்கு அதன் பின்னாலே நாம் திட்டம் தீட்டிப் பாடுபட்டோமில்லை.

இந்த வகையில், அரசோடு ஒத்துழைக்க அவரவரும் முன்வந்தாக வேண்டும். ஊர்கூடித் தேர் இழுப்பது என்பார்களே? அப்படி ஒன்றுபட்டு, பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காப்போம். 'ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று' ஆனந்தப் பண் பாடுவோம்!






பதிவு
Licence N
50
1-30, 1997 ரூ.6/-
மதுரை 31-8-97



வ.உ.சிதம்பரனார்



டாக்டர் இராதாகிருஷ்ணன்
தோற்றம் — மறைவு 16.4.1975

## இந்த இதழில்...


★ சாதியற்ற சமுதாயம் உருவாக நல்லிணக்கக் குழுக்கள் ... 2
★ அண்ணா, அண்ணா... ... 10
★ காங்கிரஸ் தலைவர் பெரியார் ... 14
- சாமி சிதம்பரனார்
★ மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் முதல்வர் உரை ... 17
★ சுதந்திரப் போர் - சில தீரச்செயல்கள் ... 26
- கவியோகி சுத்தானந்த பாரதியார்
★ இந்திய விடுதலை நாள்-திரு.வி.க.கனவு ... 29
- சி.வெங்கடசாமி
★ மாணவர் பக்கம் ... 34
★ விடுதலைப் போரில் திருப்பங்கள் ... 37
- எஸ். நடராஜன்
★ நீலன் சிலையகற்றும் போராட்டம் ... 40
- டாக்டர் ந.க. மங்களமுருகேசன்
★ சுதந்திரப் போராட்ட காலத்தில் மக்கள் தொடர்புச் சாதனங்கள் ... 42
★ இரத்தக் கொதிப்பு ... 45
- டாக்டர் என்.சுவாமிநாதன்
★ வள்ளி திருமணம்-சிறுகதை ... 53
- அறிஞர் அண்ணா
★ பெரியாரின் மனிதநேயம் ... 62
- கயல்விழி ஜோசப்குமார்



தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2028
செப்டம்பர் 1-30, 1997
மலர் : 28 இதழ் : 5&6
விலை ரூ.6/-

### தீண்டாமை ஒழிப்பு மாநாடு:

# சாதியற்ற சமுதாயம் உருவாக தமிழகம் முழுவதும் நல்லிணக்கக் குழுக்கள்

**- முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு!**

"மற்றவர்கள் எல்லாம் பேசும்போது, அரசியல் கட்சித் தலைவர்களே என்று சுருக்கமாக விளித்தார்கள். ஆனால் நான் மாநாட்டுத் தலைவர் என்பது மாத்திரமல்ல; இந்த மாநாடு நடத்த வேண்டுமென்று விரும்பி உங்களை எல்லாம் அழைத்தவன் என்பதால் ஒவ்வொருவராக விளித்து, அவர்களுக்கெல்லாம் வழங்கவேண்டிய நன்றியினையும் அவற்றோடு இணைத்து என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

இன்று காலையில் நடைபெற்ற மனிதச் சங்கிலி, மாலையில் தியாகச் செம்மல் கக்கன் அவர்களுடைய சிலை திறப்பு விழா, அதற்கிடையே மீனாட்சி அம்மன் கோவிலிலும், தேவாலயத்திலும், மசூதியிலும் நடைபெற்ற சமபந்தி விருந்துகள், அதனைத் தொடர்ந்து இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பெருமைக்குரிய இந்த மாநாடு, இவற்றை எல்லாம் சீருற, சிறப்புற, எழுச்சியுற, எழிலுற அமைத்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க - அவ்வாறே செயல்பட்டு முடித்துள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், செய்தித்துறை அமைச்சகத்துக்கும், அவர்களோடு ஒத்துழைத்த ஏனைய அலுவலாளர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் சிறப்பாகப் பல்வேறு அலுவல்கள் இருந்த போதிலும், அவரவர்களுடைய கட்சிகளுக்குரிய பல பணிகளில் ஈடுபட வேண்டிய நெருக்கடியான நிலை இருந்தபோதிலும், அவற்றையெல்லாம் விட இது பெரும் பணி, சிறப்பான பணி, செய்து முடிக்கவேண்டிய பணி, தொடர வேண்டிய பணி என்ற தூய உள்ளத்தோடு இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்குச் சிரமம் பாராமல் வந்துள்ள கட்சிகளின் தலைவர்களையும் சமயச் சான்றோர்களையும் நான் மீண்டும் மீண்டும் வரவேற்று நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**கலந்தேன்; கசிந்துருகினேன்!**

இங்கு நடைபெற்றது ஒரு மாநாடு அல்ல; ஒரு கருத்தரங்கம் என்ற கருத்தினை - முன்னால் பேசியவர்கள் எல்லாம் வெளியிட்டார்கள்.

எனக்கேகூட, வந்து அமர்ந்ததிலிருந்து, நான் பேசுவேன் என்று அழைக்கப்படுகிற வரையில் என்ன பேசுவது என்று சிந்தனை செய்வதற்கே நேரமில்லாமலே போயிற்று. காரணம், சில மாநாடுகளில், சில கருத்தரங்குகளில், சில பேச்சரங்கங்களில், பேசுகின்ற நண்பர்கள் அல்லது தலைவர்கள், நம்மைப் போன்றவர்கள் மேடையில் அமர்ந்து சிந்திப்பதற்கு நேரம் தருவார்கள். ஆனால், இங்கே பேசிய தலைவர்கள் யாரும் அந்த நேரத்தை எனக்குத் தரவில்லை. காரணம் அவர்கள் பேசிய ஒவ்வொரு வார்த்தையிலும் நான் ஒன்றிப் போனேன்; இணைந்தேன்; கலந்தேன்; கசிந்துருகினேன்.

ஐம்பதாண்டு காலமாகிறது, இந்தியத் திருநாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்து; நாம் விடுதலை பெற்று ஐம்பதாண்டு காலத்திற்குப் பிறகும் நாம் நம்முடைய சமுதாய மக்கள் மற்றொரு





சுதந்திரத்திற்காகப் போராட வேண்டிய சூழ்நிலை இருக்கிறதே, என்பதை எண்ணிப்பார்க்கும் போதும், அந்தச் சூழ்நிலையை எப்படி செப்பனிட்டுச் செயல்படுத்துவது, எவ்வாறு அவர்களுக்கு அந்த விடுதலையைப் பெற்றுத் தருவது? என்பதை எண்ணும்போதும், ஒரு பொறுப்பில் இருக்கிற என்னைப் போன்றவர்களுக்கு எவ்வளவு கவலையும் வேதனையும் இருக்கும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

பல திட்டங்கள், பல முறைகள், பல பணிகள், வேண்டுகோளாகவும் அன்புக் கட்டளையாகவும் எனக்கு இங்கே பிறப்பிக்கப்பட்டன. பேராசிரியர் பேசும்போது குறிப்பிட்டதைப் போல தத்துவங்களுக்கும் அவைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் இடையே உள்ள வேறுபாட்டை எண்ணிப் பார்க்கும்போதுதான், நடைமுறைப்படுத்த வேண்டிய இடத்தில் இருக்கிற ஒரு அரசு எத்தனை எத்தனைச் சிக்கல்களுக்கு இடையே, பிரச்சினைகளுக்கு இடையே இந்தப் பணியை ஆற்ற வேண்டியிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது அனுபவரீதியாக!

இந்த ஒன்றரையாண்டு காலத்தில் தமிழ்நாட்டில் எத்தனையோ நலத்திட்டங்களை எல்லாம் நிறைவேற்றி, அது ஏழை, எளிய மக்களுக்கு வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்களுக்கு, சாதாரண, சாமானிய மக்களுக்கு, அடக்கப்பட்ட மக்களுக்கு, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு, பாட்டாளி மக்களுக்கு, விவசாயிகளுக்குச் சென்றடைய வேண்டுமென்று எண்ணுகிற நேரத்தில் சென்றடைய முடியாமல் ஏற்படுகிற இடர்ப்பாடுகள் எவை என்பதை இங்கே பேசிய தலைவர்கள் சில பேர் சுருக்கமாக, அதே நேரத்தில் மிகுந்த வேதனையோடு குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

நம்முடைய இளையபெருமாள் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார். டிசம்பர் 6ஆம் தேதிக்குள் இதைச் செய்து முடிக்காவிட்டால் நான் என்ன ஆவேனோ தெரியாது என்று மிகுந்த உருக்கத்தோடு, உணர்ச்சியோடு குறிப்பிட்டார்கள். அதை நம்முடைய எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டி, அவர் அதில் உரிமை காட்ட வேண்டும் என்று சொன்னார்கள். இளையபெருமாள் அவர்கள் குறிப்பிட்டது ஒவ்வொரு மாவட்டத்திலும், வட்டவாரியாக, அதாவது தாலுகா ரீதியாக நல்லிணக்கக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். அந்தக் குழுக்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்களை - நிர்வாகப் பொறுப்புகளில் மக்களுடைய பிரதிநிதிகள் இருந்தால் அவர்களை உள்ளடக்கியதாக அந்தக் குழுக்கள் அமைந்திட வேண்டும். அந்தக் குழுக்கள் அந்தப் பகுதிகளில் அமைதியை உருவாக்கவும், அமைதி கெடக்கூடிய சூழ்நிலை ஏற்படுமானால் அதைத் தடுக்கக்கூடியதாக அமைந்திட வேண்டுமென்று குறிப்பிட்டார்.

இந்தக் கருத்தை அவர்கள் என்னிடம் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். நான் அதைப் பற்றிக் கலந்து பேசிக்கொண்டிருக்கிறேன். இது கலந்துபேசி, காலம் கடந்து அறிவிக்க வேண்டிய ஒன்றல்ல என்பதை நான் நன்றாக அறிவேன். இப்போதே அறிவிக்கிறேன். டிசம்பர் 6ஆம் தேதி வரையில் இளையபெருமாள் காத்திருக்கவேண்டிய அவசியமில்லை. இளையபெருமாள் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் குழு இன்னும் ஒரு வார காலத்தில் தமிழ்நாடு முழுவதும் அமைக்கப்படுவதற்கான ஆணை இந்த அரசின் சார்பில் இடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்று, இங்கே நாம் சமுதாய ரீதியாக உள்ள மாற்றங்கள், ஏற்பட வேண்டிய நிலைகள் இவைகளை எல்லாம் பேசிக்கொண்டிருக்கும்போதே வைக்கப்படுகிற கோரிக்கைகள் என்னென்ன என்பதையும், இன்றைக்குச் சில பிரிவு மக்களிடத்தில் அதிலும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களிடத்தில் ஏற்பட்டிருக்கின்ற அதிருப்திக்கு என்ன காரணம்



என்பதையும் ஆராய்ந்து பார்த்தால், மிக முக்கியமாக இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீட்டில் ஏற்கெனவே 16 சதவிகிதம் என்று இருந்ததை நான் 1969ல் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு - 16 சதவிகிதம் என்பதை 18 சதவிகிதம் என்று உயர்த்தினேன்.

பிறகு, 89ல் பொறுப்பேற்றபோது 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் என்று இருந்ததை மேலும் ஒரு சதவிகிதம் அதிகமாக்கி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவிகிதம் என்றும், பழங்குடி மக்களுக்கு 1 சதவிகிதம் என்றும் 19 சதவிகிதம் இரு பிரிவினருக்கும் உயர்த்திய பிறகும்கூட அந்தச் சதவிகிதத்தின்படி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்புகளில் உரிய இடம் கிடைக்கவில்லை என்கின்ற மன நிறைவற்ற தன்மை அவர்களை இன்றைக்கு உலுக்கிக் கொண்டிருக்கிறது.

அதில் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால் அதற்கான காரணத்தைத் தயவு செய்து நாம் புரிந்து கொள்ள வேண்டும். காலியிடங்கள் நிரப்பப்படவில்லை என்பது தாழ்த்தப்பட்ட இளைஞர்கள், படித்தவர்கள், இவர்களிடம் எடுத்துச் சொல்லப்படுகிற வாதம். அதன் காரணமாக கிளர்ச்சிகள், போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள்! நான் அவைகளையெல்லாம் தவறு என்று சொல்ல மாட்டேன். அது எண்ணக் குமுறல். ஜனநாயக நாட்டில் எண்ணக் குமுறல்களுக்கு இடம் தர வேண்டும். அது நம்முடைய அடிகளார் குறிப்பிட்டதைப் போல் - வன்முறைவிளிம்பைத் தொட்டுவிடக்கூடாது. அந்த அளவிலே அந்த எண்ணக் குமுறல்களை மதிக்கவேண்டிய கடமை ஒரு ஜனநாயக அரசுக்கு உண்டு.

காலியிடங்கள் நிரப்பப்படவில்லை; பதினெட்டு அல்லது பத்தொன்பது சதவிகிதம் இடங்கள் இன்றைக்கு நிரப்பப்படவில்லை என்று இருக்கின்ற அந்தக் குறைபாட்டை இந்த அரசு நன்றாக உணர்ந்து இருக்கிறது. அதற்காக நான் இந்த மாநாட்டில் ஒரு அறிவிப்பைச் செய்யவிரும்புகிறேன். அத்துடன் ஒரு விளக்கத்தையும் சேர்த்து தெரிவிக்க விரும்புகின்றேன்.

அரசு வேலைவாய்ப்புகளில் ஆதிதிராவிடர்களுக்குப் பதினெட்டுச் சதவிகிதமும், பழங்குடியினருக்கு ஒரு சதவிகிதமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர்களுக்கும், பழங்குடியினர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணியிடங்களை நிரப்ப - குறிப்பிட்ட கல்வித் தகுதி மற்றும் பயிற்சித் தகுதி உடையவர்கள் இல்லாத காரணத்தால் பல்வேறு அரசுத் துறைகளில் ஏராளமான பணியிடங்கள் நிரப்பப்படாமல், கடந்த காலங்களில் அவை காலியாகவே விடப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர்களுக்குத் தேவையான கல்வித் தகுதியையும், பயிற்சித் தகுதியையும் வழங்குவதிலும் வேலை வாய்ப்புகளில் அவர்களுக்கென உள்ள ஒதுக்கீட்டை முழுமையாக நிரப்பிடவேண்டும் என்பதிலும் மிகுந்த அக்கறையுடைய இந்த அரசு நிரப்பப்படாமல் உள்ள காலியிடங்களை நிரப்ப சிறப்புப் பணி அமர்த்தும் தீவிர முயற்சியை (ஸ்பெஷல் ரெக்ரூட்மெண்ட ட்ரைவ்) மேற்கொண்டுள்ளது. ஆதிதிராவிடர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை நிரப்பக் கல்வி மற்றும் பயிற்சி, தகுதி பெற்றோர் தேவையான எண்ணிக்கை இல்லை என்பதை அறிந்து, விதிகளைத் தளர்வு செய்து, இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் பி.எட். பயிற்சி பெற்றவர்களையும் நியமனம் செய்துகொள்ள இப்பொழுது ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, தேவையான அளவுக்கு இடைநிலை பயிற்சிபெற்ற ஆசிரியர்களை உருவாக்கிட 13 இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் ஐந்து கோடி ரூபாய் செலவில் அண்மையிலே ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இப்படி ஆதிதிராவிடர்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள பணியிடங்களை முழுமையாக நிரப்பிட, கழக அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. இந்த நிலையில் இதைக் கண்காணிக்க குழு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை ஒன்று எழுந்துள்ளது. அந்தக் கோரிக்கையை ஏற்பதில் திறந்த, வெளிப்படையான மனத்தோடு செயல்பட்டு வருகின்ற கழக அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை.





ஆதிதிராவிடர்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள பணியிடங்கள் முறையாக நிரப்பப்படுவதைக் கண்காணிப்பதற்கும், கடந்த காலங்களில் நிரப்பப்படாமல் காலியாக உள்ள பணியிடங்களை ஒரு கால வரையறைக்குள் நிரப்புவதற்குரிய வழிவகைகளைக் காண்பதற்கும் ஆதிதிராவிட நலத்துறை அமைச்சரைக் கன்வீனராக, அமைப்பாளராகக் கொண்டு குழு ஒன்று உருவாக்கப்படும். அந்தக் குழுவில் சட்டமன்றப் பேரவையிலேயுள்ள கட்சிகளின் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தோர் இடம் பெறுவார்கள். அந்த உறுப்பினர்கள் யார்யார் என்று பிறகு அறிவிக்கப்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த மாநாட்டில் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மற்றொன்று, ஒரு கோரிக்கை என்ன? ஒரு அறிவுரையாக அருமை நண்பர் சங்கரய்யா சொன்னார். இங்கே சொன்னார்கள். தீண்டாமைப் பழக்கத்தைக் கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி மாநாட்டின் தொடக்கத்தில் என்னால் படிக்கப்பட்டு - ஒவ்வொரு சொற்றொடராக, நீங்களும் திரும்பச் சொல்லி நாம் அனைவரும் இந்த மாநாட்டிலே அந்த உறுதிமொழியை ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். இது மாணவர்களுடைய மனதிலும் பதியவேண்டுமென்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இன்று காலையிலே நான் கண்ட காட்சியிலிருந்து ஒரு நம்பிக்கை எனக்கேற்படுகிறது. காலையிலே நடைபெற்ற மனிதச் சங்கிலியில் பெரும்பாலான மாணவ மாணவியர்சற்றொப்பபதின்மூன்று கிலோ மீட்டர் தொலைவிற்கு அப்பால் நின்றார்கள். கைகோத்து நின்றார்கள். கைகோத்து நிற்க முடியாமல் நெருங்கி நின்றார்கள். தோளோடு தோள் சேர்ந்து நின்றார்கள். காரணம் இடமில்லாத காரணத்தால் அவர்கள் அனைவரும் கைகோத்து நின்றிருப்பார்களேயானால் - இரண்டு அடுக்காக பல இடங்களில் நின்றார்கள். அப்படி இரண்டு அடுக்காக நில்லாமல் ஒரே வரிசையில் நின்றிருப்பார்களேயானால் மனிதச் சங்கிலியின் நீளம் பதின்மூன்றுகிலோமீட்டர் தூரத்தோடு முடியாமல் 25 கிலோ மீட்டர் நீளத்திற்கு இந்த மனிதச் சங்கிலி என்று நாம் கணக்கிட்டிருக்க முடியும். அவ்வளவு எழுச்சி! பெரியவர்கள், பெண்டிர், மாணவ மாணவியர், தொழிலாளர்கள், அலுவலர்கள் அத்தனைப் பேரும் இன்றைக்கு இருந்ததை என்னால் காணமுடிந்தது. எனவே நான் நிச்சயமாக இந்த உறுதிமொழி மாணவர்கள் மனதில் பதியும். ஓரளவு பதிந்திருக்கின்ற காரணத்தால்தான் இன்றைக்குக் கைகோத்து நின்றார்கள். மனிதச் சங்கிலியாக நின்றார்கள்.

மாநாடு மாத்திரமல்ல; ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் மனித சங்கிலியும் நடைபெற வேண்டும். இந்த மாநாடும் நடைபெற வேண்டும் என்றே நான் விரும்புகிறேன். எனவே இங்கு எடுத்து வைக்கப்பட்ட தலைவர்களின் இந்தக் கோரிக்கை தொடர்ந்து நிறைவேற்றப்படும் என்பதையும் நான் இங்கே உங்கள் முன்னால் அறிவிக்கின்றேன்.

இந்த உறுதிமொழியை - பள்ளிக்கூடங்களில் கல்லூரிகளில்கூட, வாரம் ஒரு முறையாவது ஆசிரியர்கள் ஒவ்வொரு வகுப்பறையிலும் படிக்க மாணவர்கள் திரும்பச் சொல்லி இந்த உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கான தாக்கீதுகளை நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் அனுப்பி வைப்பார் என்பதையும் இந்த மாநாட்டில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சாதி ஒழிவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் இங்கே



சொன்னார்கள். சங்கரய்யா மேலவளவு பற்றிக் குறிப்பிட்டார். அதைப்போலப் பல இடங்களில் தேனீர்க் கடையிலே இரண்டு கிளாஸ்கள் வைக்கப்படுவதும், சில இடங்களில் ஒரு கிளாஸ், இன்னொன்று கொட்டங்கச்சி என்று இருப்பதுமான நிலைமை பழைய காலத்திலே ஆரம்பமாகி இன்றைக்கு எல்லா இடங்களில் இல்லாவிட்டாலும் ஒருசில இடங்களில் இருக்கத்தான் செய்கின்றன.

நான், டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய புத்தகம் ஒன்றைப் படித்தேன். அந்தப் புத்தகத்தினுடைய தலைப்பு 'அம்பேத்கருடைய எழுத்தும் பேச்சும்' என்பதாகும். ஆங்கிலப் புத்தகம் அது. அந்தப் புத்தகத்தின் ஐந்தாம் தொகுப்பில் 118ஆம் பக்கத்தில் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் ஒரு இணைப்பை வைத்து, அந்தப் புத்தகத்தைத் தொடர்கிறார்.

அந்த இணைப்பு என்னவென்றால் - "சுவாமி ஆனந்த்தீர்த். அகில இந்திய அரிஜன சேவா சங்கத்தின் பிராந்திய அதிகாரி, அவர் தமிழ்நாட்டில் தன்னுடைய அனுபவம் குறித்து எழுதிய ஒரு டைரி அது. அது 9.3.1952ஆம் ஆண்டு எழுதிய 'சண்டே டைம்ஸ்' பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது. அப்படி வெளியான கட்டுரையை டாக்டர் அம்பேத்கர் அவர்கள் தன்னுடைய 'எழுத்தும் பேச்சும்' என்ற புத்தகத்திலே இணைத்து வெளியிட்டிருக்கிறார்.

அதில் அவர் என்ன சொல்கிறார் - 52ஆம் ஆண்டு அகில இந்திய சேவா சங்கத்தின் பிராந்திய அதிகாரி சுவாமி ஆனந்த்தீர்த், அவர் மதுரை மாவட்டம் வருகிறார். இதே மேலவளவுக்குச் செல்கிறார். அப்போது இங்கு சிலையாகத் திறந்து வைக்கப்பட்ட தியாகச் செம்மல் கக்கன் அவர்கள் அப்போது பாராளுமன்ற உறுப்பினர். 52ஆம் ஆண்டு ஆனந்த்தீர்த் அந்தப் பகுதிக்கு வந்தபோது மேலவளவில் சங்கரய்யா அவர்கள் குறிப்பிட்டதைப் போல ஆதிதிராவிட தோழர்களுக்குக் கொட்டாங்கச்சியிலேதான் தேனீரோ, காப்பியோ கடையில் விற்கப்பட்டது.

இதைப் பார்த்த சுவாமி ஆனந்த்தீர்த் அந்தக் கடைக்காரரர் மீது வழக்குத் தொடர்ந்தார். ஆனால் அன்றைக்கு அந்த வழக்கின் நீதிபதி விதித்த அபராத தொகை வெறும் பத்து ரூபாய்தான். அதை மிகுந்த ஆதங்கத்தோடு அங்கலாய்ப்போடு சுவாமி ஆனந்த்தீர்த் தன்னுடைய கட்டுரையில் குறிப்பிடுகின்றார். அதை அம்பேத்கர் எடுத்துக்காட்டுகிறார்.

மறுபடியும் இரண்டு சிறுவர்களை அழைத்துக்கொண்டு கீழவளவு என்ற பகுதிக்கு ஆனந்த்தீர்த் செல்கிறார். அதே 52ஆம் ஆண்டு; அந்த இரண்டு பேருக்கும் கொட்டங்கச்சியில் தேனீர் கொடுக்கக்கூடாது, கிளாசிலே கொடு என்று கேட்கிறார். அவர்கள் கொடுக்க மறுக்கிறார்கள். மறுத்தது மாத்திரமல்ல; அந்த இரண்டு சிறுவர்களை மாத்திரம் மட்டுமல்லாமல் அவர்களையும் அடித்ததோடு நிற்காமல் சுவாமி ஆனந்த்தீர்த் அவர்களையும் அடித்து உதைக்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஒரு வன்முறைச் செயல் அங்கே நடைபெற்றதை அவர் தன்னுடைய கட்டுரையிலே குறிப்பிடுகிறார். எனவே 52ஆம் ஆண்டு முதல் சுதந்திரம் பெற்ற ஐந்தாவது ஆண்டிலே இந்த நிலைமை இருந்திருக்கிறது.

இன்றைக்கு அந்த அளவிற்கு இல்லாவிட்டாலும் கூட இடுகாடு, சுடுகாடு இந்த இடங்களில் சாதி பேத உணர்வு, வேற்றுமை உணர்வு, தாழ்வு மனப்பான்மை, பிளவு மனப்பான்மை இவைகள் எல்லாம் கொடிகட்டிப் பறக்கின்ற காட்சியை நாம் காண்கிறோம். எல்லோரும் ஒரே குரலில் சொன்னோம். நானும் சொல்கிறேன் இதிலே மனதளவில் தான் மாற்றம் வேண்டும்.

நம்முடைய ஆர்.எம்.வீ. அவர்கள் முதலாக - தொடர்ந்து பேசிய அனைவரும் மனதளவிலேதான் இந்த மாற்றம் ஏற்பட வேண்டுமென்று நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம் என்று மட்டுமே கூறினர். அதற்கு அம்பேத்கர் இந்த சாதி ஒழிப்புக்கு ஒரு வழி சொல்லியிருக்கிறார். "சாதி ஒழிப்புக்கு உண்மையான வழி கலப்பு திருமணம்தான் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ரத்தக் கலப்பின் மூலம்தான் உற்றார் உறவினர் என்ற உணர்வு ஏற்படும். இந்த உறவு, இந்த உணர்வு ஏற்பட்டு வலுவடைந்தாலன்றி சாதியினால் ஏற்பட்டிருக்கும் வேற்றுமையுணர்வு ஒருவருக்கொருவர் அந்நியாராக நினைப்பது மறையவே மறையாது. சாதியை உடைப்பதற்கு உண்மையான தீர்வு கலப்புத் திருமணமே. வேறு எதுவும் சாதியைக் கரைக்க முடியாது". சமபந்தி போஜனமும் கலப்பு மணமும் சாதாரண நடைமுறையாகும் போதுதான் சாதியின் சக்தி அழியும். எனவே நாம் இன்றைக்குச் சமபந்தி போஜனம் நடத்தினோமென்றால் அது அம்பேத்கர் அவர்களுடைய வழியில் அவர் சொன்ன அந்தக் கருத்தின்படி நடத்தியிருக்கிறோம்.



சமபந்தி விருந்து நடத்திவிட்டோம். ஆனால் எத்தனைப் பேர் கலப்புத் திருமணத்திற்குத் தயாராக இருக்கிறோம்? ஆனவர்களைக் கேட்கவில்லை திருமணம் இன்னும் ஆகாதவர்களைக் கேட்கின்றேன். ஆனவர்கள் நான் தயார் என்று கையை உயர்த்தி விடாதீர்கள். நான் கேட்பதற்கு உரிமை படைத்தவன். நம்முடைய பேராசிரியர் தீரன் அவர்களும், ஜனதா தளத்தின் தலைவர் வடிவேலு அவர்களும் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். என்னுடைய குடும்பத்திலேயே பல கலப்புத் திருமணங்களை நடத்தி வைத்தவன் நான்; அதிலும் குறிப்பாக ஆதிதிராவிடப் பெண்ணை என்னுடைய மருமகளாக ஏற்றுக்கொண்டவன் நான்.

ஏற்றுக்கொண்டவன் மட்டும் அல்ல; நானே வரவழைத்து என்னுடைய மகனுக்குக் கட்டி வைத்தவன். இன்றைக்கும் ஆதி திராவிட பேரக்குழந்தையை, பேத்திக் குழந்தையை எடுத்துக் கொஞ்சுகின்றேன்; முத்தமிடுகின்றேன். ஒரு பெண்ணை எடுத்தது மாத்திரமல்ல - என்னுடைய வீட்டுப் பெண்ணை, என்னுடைய பேத்தியை ஒரு தலித் ஆதிதிராவிடர்க்கு; கலப்புத் திருமணம் செய்து வைத்ததும் நான் தான். எனவே அந்த உரிமையோடு கூடத்தான் நான் சொல்லுகின்றேன். கலப்புத் திருமணம் சாதியை ஒழிப்பதற்குப் பெரும் கருவியாக பயன்படுமென்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

அந்தக் கலப்புத் திருமணத்தை ஊக்கப்படுத்துகின்ற வகையில் ஒரு அறிவிப்பை அரசின் சார்பாக இங்கே செய்ய விரும்புகிறேன்.

கலப்புத், திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு ஏற்கெனவே அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டமாக 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு பிறகு 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது.

சுதந்திரப் பொன்விழா ஆண்டையொட்டி நான் ஒரு அறிவிப்புச் செய்கிறேன். இப்பொழுது தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடைபெறும் இந்த நேரத்தில், சாதியற்ற சமுதாயம் அமைந்திட வேண்டும் என்ற நோக்கத்தில் கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதியருள் மணமகனோ அல்லது மணமகளோ ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருந்தால் அந்தத் தம்பதியருக்கு 20 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். வெறும் கலப்புத் திருமணம் மட்டும் போதாது; அதற்கு 10 ஆயிரம் ரூபாய்தான். ஏழைப் பெண்கள் எட்டாவது வரை படித்திருந்தால் அவர்களுடைய வருமான வரம்பை மையமாக வைத்து அவர்களுக்கு இப்பொழுது 10 ஆயிரம் ரூபாய் திருமண உதவியாக வழங்கப்பட்டு வருகிறது.

97,98 ஆகிய இந்த இரண்டு ஆண்டுகளுக்கு மாத்திரம் 46 ஆயிரம் பெண்களுக்கு 46 கோடி ரூபாய் இதற்காக வழங்கப்பட்டு வருகிறது. இஃதன்னியில் கலப்புத் திருமணம் என்றால், அதிலே மணமகன் ஆதிதிராவிடராக இருக்கவேண்டும் அல்லது மணமகள் ஆதிதிராவிடராக இருக்கவேண்டும். இருவரில் ஒருவர் ஆதிதிராவிடராக இருந்து நடைபெறும் திருமணத்திற்கு 20 ஆயிரம் ரூபாய் அரசின் நிதியாக வழங்கப்படும் என்பதை இந்த மாநாட்டில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே, இந்த மாநாடு எல்லா வகையிலும் ஒரு உணர்வை நம்மிடையே எழுப்ப உதவியிருக்கின்ற மாநாடாகும். இந்த மாநாட்டின் மூலமாக, மதுரை தருகின்ற இந்தச் செய்தியின் வாயிலாக மாநில முழுவதும் "தீண்டாமை ஒழிப்போம்" என்கின்ற அந்தக் குரல் ஒலிக்குமென்று எதிர்பார்க்கின்றேன். இருந்தாலும் கூட - மாவட்டத் தலைநகரங்களில் அடுத்து கோவை, நெல்லை, திருச்சி இவ்வாறாக பல மாவட்டத் தலைநகரங்களில் மனிதச் சங்கிலிகளும் சமபந்தி விருந்துகளும் தீண்டாமை ஒழிப்பு மாநாடுகளும் நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகளை இந்தப் பொன்விழா ஆண்டில் அரசு செய்திடும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்த மாநாட்டின் வெற்றி உண்மையிலேயே தீண்டாமை ஒழிவதிலேதான் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன்.

**- மதுரையில் 31.8.97 அன்று நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.** ★

## இருநலம்!

**த**ந்தை பெரியார் அவர்களிடம் பொதுநலம் - சுயநலம் இரண்டிற்கும் விளக்கம் கேட்கப்பட்டது.

உடனேயே பெரியார் அவர்கள் சொன்னார் -

"மழை பெய்வது பொதுநலம்;
குடைபிடிப்பது சுயநலம்!"

## இந்திய தேசிய இராணுவம்

ஜப்பானியர்வசம் போர்க் கைதிகளாகச் சிக்கியிருந்த இந்தியக் கைதிகளை வைத்துக்கொண்டு, இந்திய தேசிய இராணுவத்தை அமைத்து, அதற்குத் தாமே தலைவனும் ஆனார் சுபாஷ் சந்திரபோஸ். அது முதல் அவருடைய படை வீரர்கள் அவரை 'நேதாஜி' என அழைக்க ஆரம்பித்தனர். அப்பொழுதுதான் அவர் 'ஜெய்ஹிந்த்' என்ற முழக்கத்தை இராணுவத்துக்காக உண்டாக்கினார்.

1942-இல், ஆங்கிலேயர்களை இந்தியாவிலிருந்து விரட்டிவிட்டால், இந்தியாவுக்குச் சுதந்திரம் கிட்டுவதில், ஜப்பானியர்கள் உதவுவார்கள் என்ற நம்பிக்கையை ஜப்பானின் சார்பில் ஒருபுறம் இந்திய மக்களுக்கு வானொலி மூலம் ஊட்டிவந்தார் நேதாஜி. இன்னொரு புறம் உள்நாட்டில் காந்தியடிகள் 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கத்தைத் துவக்கினார்.

1942 ஆகஸ்ட் மாதம், ஆங்கிலேயர்களுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் வெளிப்படையாகவே சண்டை ஆரம்பமாகியது - 'செயலில் இறங்கு, அல்லது செத்துமடி'.

காந்தி இப்படி கட்டளையிட்டதும் இருதரப்பினரிடையேயும் தீவிரப் போராட்டம் ஆரம்பமாகியது. இந்தியா முழுவதும் பெரிய - சிறிய எல்லாக் காங்கிரஸ் தலைவர்களையும் அரசு கைது செய்து சிறையில் அடைத்தது. தலைவர்கள் இல்லாத காரணத்தால் மக்கள் ரெயில் தண்டவாளங்களையும், தந்திக் கம்பிகளையும், பாலங்களையும், தெருக்களையும் நாசம் செய்ய ஆரம்பித்தனர். இராணுவமும் போலீசும் துப்பாக்கிப் பிரயோகத்தில் இறங்கின.

ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். பதிலுக்கு மக்களும் போலீசாரில் பலரைப் பழிவாங்கினதால், சில தினங்களுக்கு தேசமே தீப்பற்றி எரிவதைப் போல் இருந்தது.

நாடு முழுவதிலும் நாசமாக்கப்பட்டவைகளைப் புதுப்பிக்கவே ஆங்கிலேயர்களுக்குப் பல மாதங்கள் ஆயின.

இவ்வாறான நாசச் செயல்களுக்காகக் கைது செய்யப்பட்ட மக்களுக்குச் சிறையில் பெரும் கொடுமைகள் இழைக்கப்பட்டன. தலைமறைவாக இருந்த தலைவர்களைப் பற்றிய தகவல்களுக்காக அவர்கள் துன்புறுத்தப்பட்டனர். பீகார் சிறையிலிருந்து தப்பியோடித் தலைமறைவாக இருந்த ஜெயப்பிரகாஷ் நாராயணனைக் கடைசியில் கைதுசெய்து லாகூர் சிறையில் அடைத்து, பல மணி நேரங்கள் பனிக்கட்டியின் மீது அமர்த்தி தொடர்ந்தாற்போல் பல இரவுகள் தூங்கவிடாமல் செய்தனர்.

இரண்டு இரண்டரை ஆண்டுகளுக்கு நாடு முழுவதுமே ஒரு பெரும் சிறைக்கூடமாக மாற்றப்பட்டிருந்தது. ஆங்கிலேயப் படைகள் ஒவ்வொரு வினாடியும் துன்பங்களை எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது.

கடைசியில், காந்தி, சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். மற்ற தலைவர்களும், மெள்ள மெள்ள விடுவிக்கப்பட்டனர். அவர்களின் ஒத்துழைப்பைப் பெற அரசு மீண்டும் முயற்சிகளைச் செய்யத் துவங்கியது. ஆனால், தேசத்தலைவர்கள், முழுச் சுதந்திரத்தைத் தவிர வேறு எந்த உடன்பாட்டையும் ஏற்கத் தயாராயில்லை.

*ஆதாரம்: 'சுயராஜ்யத்தின் கதை'*

## ஆதிதிராவிடர்கள் ஆக்கம் பெற்றிட...

*அஞ்சுகம் அம்மையார் கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ், மணமக்களில் ஒருவர் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தால், எவ்வித வருமான உச்சவரம்பும் இன்றி ரூ.20,000 வழங்கப்படவேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டிருக்கிறார்.*

❑❑❑

*இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் . ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட பணியிடங்களில் பயிற்சி பெற்றவர்கள் இல்லாத காரணத்தால் . ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினைச் சார்ந்த பி.எட். பட்டம் பெற்றவர்களை, விதிகளைத் தளர்த்திப் பணியமர்த்திக் கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.*

❑❑❑

*ஆதிதிராவிடர்களுக்கான அரசுப் பணியிடங்களை முறையாக நிரப்ப, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் சமயநல்லூர் திரு.எஸ்.செல்வராஜ் அவர்களைத் தலைவராகக் கொண்ட கண்காணிப்புக்குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.*

*அக்குழுவில் உறுப்பினர்களாக அங்கம் வகிப்போர் பற்றிய விவரம் வருமாறு :*

*சட்டமன்ற உறுப்பினர்களான திரு.செங்கைசிவம், திரு.எஸ். அழகுவேலு, திருமதி. கோமதி சீனிவாசன், திரு.வி.பி. இராஜன், திரு. எஸ். புரட்சிமணி, திருமதி. ஏ.எஸ். பொன்னம்மாள், திரு.ஜி. பழனிச்சாமி, திரு. சொ. கருப்பசாமி, டாக்டர் கே.கிருஷ்ணசாமி.*

*இவர்களோடு . ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசுச் செயலர் செயல் உறுப்பினராகவும் . பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அரசுச் செயலர் உறுப்பினராகவும் இருப்பார்கள்.*

❑❑❑



## "சமூக சேவை எனும் தடாகத்தில் நீந்திய அன்னப்பட்சி மறைந்தது!"

- அன்னை தெரசாவிற்கு முதலமைச்சர் புகழாரம்

*அன்னை தெரசா மறைவையொட்டி சென்னைத் தொலைக்காட்சியிலும் வானொலியிலும் என்னிடம் இரங்கல் உரை கேட்டபோது நான் சொன்ன வாசகம் "பருந்துகளும் - கழுகுகளும் வட்டமிடும் இந்த உலகத்தில், சமூக சேவை எனும் தடாகத்தில் நீந்திக் கொண்டிருந்த அன்னப்பட்சி மறைந்துவிட்டது" என்று குறிப்பிட்டேன்.*

*அன்னம் ஒரு பறவையையும் குறிக்கும். அன்னம் அன்னை தெரசாவையும் குறிக்கும். அன்னம், அவர்கள் ஏழையெளிய மக்களுக்கு அளித்த உணவையும் குறிக்கும். இப்படி எல்லா வகையிலும் வெண்புறாவாக - சமாதானப் பறவையாக ஏழைகளை உறவினராகக் கொண்டிருந்த நலிந்த மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய அன்னை தெரசா அவர்கள் மறைந்துவிட்டார், என்று சொல்வதை விட நம் அனைவருடைய - உலக மக்கள் அனைவருடைய உள்ளத்திலும் நிறைந்துவிட்டார் என்று சொல்வதுதான் பொருத்தமுடையதாகும்.*



### பண்டித நேரு அவர்கள் குறிப்பிட்ட அழியாத வரிகள்

*அன்னை அவர்களுடைய வாழ்க்கைச் சரித்திரத்தில் 1962 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் ஆசியாவின் ஜோதி பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் பிரதமராக இருந்த அந்தக் காலத்தில் சிறந்த சமூக சேவகிக்கென 'பத்மஸ்ரீ' விருது அவர்களுக்கு வழங்கப்பட்டது. பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது பெரிதல்ல - அந்த விருதை வாங்கிச் சென்ற அன்னை தெரசா "அவர்களைப் பற்றி - பண்டித நேரு அவர்கள் குறிப்பிட்டதுதான் என்றென்றைக்கும் அழியாத வரிகளாக விளங்கிக்கொண்டிருக்கிறது.*

*"குடியரசுத் தலைவருடைய கையிலே இருந்து அன்னை தெரசா அவர்கள் விருதினை வாங்கிச் சென்ற காட்சி - கொடிய நோய்வாய்ப்பட்ட ஒரு குழந்தையை தன் இரு கைகளாலும் பரிவோடு ஏந்தி எடுத்துச் செல்வது போன்ற ஒரு காட்சியை நினைவுறுத்தியது" என்று குறிப்பிட்டார்கள். அது மாத்திரமல்ல; "அந்தக் காட்சியைக் கண்டபோது என் கண்ணீர்த் துளிகளைக் கட்டுப்படுத்துவது எனக்கு மிகவும் அரிதாக இருந்தது. அப்படியே உருகிப் போனேன்" என்று தன்னுடைய சகோதரி விஜயலட்சுமி பண்டிட் அவர்களிடம் நேரு சொன்னதாக ஒரு குறிப்பு.*

*இன்னொன்று, மேற்கு வங்கத்தின் முதலமைச்சர் பி.சி.ராய், முதலமைச்சர்களிலேயே மிகுந்த புகழ் வாய்ந்தவர். பண்டித நேரு அவர்களைப் பெயர் சொல்லி அழைக்கக்கூடிய அளவிற்குப் பண்டித நேருவிடம் பழகியவர். அவர் அன்னையினுடைய அறப்பணிகளைக் குறித்து உதிர்த்த வார்த்தைகள்; பி.சி.ராய் அவர்களுடைய 80வது பிறந்த நாள், அப்பொழுது அவர் செய்தியாளர்களைச் சந்தித்தார்.*

*அன்னை தெரசாவைப் பற்றிச் செய்தியாளர்கள் மேற்குவங்க முதல்வராக இருந்த பி.சி.ராய் அவர்களிடம் கேட்டபோது - பி.சி.ராய் கூறுகிறார் - அந்த வாசகத்தை அப்படியே படித்துக்காட்டுகிறேன்.*

*"இந்த என் பிறந்தநாளில் இந்த முதிய வயதில் முதன் முதலாக யாரைப் பற்றிய நினைவு எனக்கு வந்தது தெரியுமா? நாட்டின் விடுதலைக்காக எந்தத் தலைவரோடு ஒன்றி நின்று போராடினேனோ அந்த என் அருமைத் தலைவர் மகாத்மா காந்தி அவர்களின் நினைவுகூட எனக்கு வரவில்லை. என் உயிருக்குயிரான உற்ற தோழர் ஜவகர்லால் நேரு அவர்களின் எண்ணமும் என் நெஞ்சில் எழவில்லை. ஏன், எனக்கு நெருக்கமான என் உற்றார், உறவினர் எவரைப் பற்றிய சிந்தனையுமே எனக்கு வரவில்லை. ஆனால் எனது அலுவலகத்துக்குச் செல்லும் அந்த மாடிப்படிகளில் நான் காலடி வைத்து ஏறும்போது ஒரே ஒரு எளிய உருவம் மட்டுமே என் நெஞ்சம் முழுவதும் நிறைந்திருந்தது. திக்கற்ற ஏழைகளையும், நோயாளிகளையும் குழந்தைகளையும் காப்பாற்றுவதற்காக, அவர்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக தம் வாழ்வையே ஒப்படைத்துக்கொண்டு அல்லும் பகலும் அயராது உழைக்கிறாரே அந்த தெரசாவின் மெலிந்த வடிவமே என் இதயம், மூளை எல்லாவற்றையுமே சுற்றி வளைத்துக் கொண்டுவிட்டது"*

*- என்று பி.சி.ராய் பாராட்டுகிறார்.*

*பிறந்தநாளில் காந்தி அடிகளை நினைக்கவில்லை. பண்டித நேருவை பிறந்த நாளில் நினைக்கவில்லை. அன்னை தெரசாவின் உருவம்தான் தன் கண் முன்னால் நின்றது என்று மேற்கு வங்கத்தினுடைய முதலமைச்சர் பி.சி.ராய் சொன்ன இந்த வாசகம், அவருக்கு மாத்திரம் சொந்தமானதல்ல. நம் அனைவருக்கும் சொந்தமான ஒரு வாசகமாக ஆகிவிட்டிருக்கின்றது.*

*அன்னை அவர்கள் நம்மை விட்டு நீங்கிவிட்டார், பிரிந்துவிட்டார் என்று யாரும் கருதத் தேவையில்லை. அவருடைய உழைப்பு; ஓய்வற்ற சேவை, ஏழை மக்கள் பால் கொண்டிருந்த இரக்கம், அன்பு, நோயாளிகளிடம் காட்டிய பரிவு, நலிந்தோரிடத்திலே அவர் கொண்டிருந்த நாட்டம் இவைகள் எல்லாம் அன்னையின் வடிவிலே நம்முடைய உள்ளத்திலே பதிந்திருக்கின்றன.*

*அவைகளைச் செயல்படுத்துவது ஒன்றே அன்னை நம்மிடத்திலே விரும்பியது. மலர்களை விட மென்மையான உள்ளத்தோடு ஏழையெளிவர்கள்பால் நாம் காட்டுகின்ற அன்பும் கருணையும்தான் அன்னை தெரசா விரும்பியது; அதைச் செய்வோம். அந்த வழி நடப்போம். அதையே நம்முடைய இந்த இரங்கல் நிகழ்ச்சியிலே மேற்கொள்கிற துணுரையாகக் கொள்வோம்.*

**- 5-9-97ல், அன்னை தெரசா மறைவின்போது, முதலமைச்சர் விடுத்த இரங்கல் செய்தி.**

# அண்ணா அண்ணா



அண்ணா அவர்கள் முதலமைச்சர் ஆனவுடன் காங்கிரஸ் ஆட்சியில் அமைச்சர்கள் பலர் பெரிய கார்களை உபயோகித்து வந்ததுபோல் தனது அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் எவரும் உபயோகிக்கக்கூடாது என்று எண்ணி, முடிவெடுத்து, அனைத்து அமைச்சர்களும் அம்பாசிடர் காரில்தான் செல்லவேண்டும் என்று உத்தரவிட்டு, அதற்காகக் கார்களும் உடனடியாக வாங்கப்பட்டன.

★★★

ஒரு சமயம், அண்ணா அவர்களின் குடும்பப் பங்கீட்டு அட்டையை அண்ணா அவர்கள் பார்க்க நேர்ந்தது. அதிலே தன் குடும்பத்தில் இல்லாத ஒரு நபரின் பெயர் சேர்க்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததும், தன் மனைவியாரைக் கூப்பிட்டு, 'இப்படி நாமே செய்யலாமா?' என்று கேட்டார். அண்ணியாரோ அவர் நம் வீட்டில் அச்சகத்தில் பணியாற்றுவதாலும் அதனால் தினமும் பகலில் சாப்பிடுவதாலும் அவர் பெயரைக் கொடுத்தேன் என்றார்கள். இருந்தாலும் அதை அண்ணா அவர்கள் விரும்பவில்லை.

★★★



டெல்லியில் பிரதமரால் கூட்டப்பட்ட அனைத்து மாநில முதலமைச்சர்கள் கூட்டத்திற்குச் செல்வதற்கான அனைத்து ஆயத்தங்களும் செய்யப்பட்டு, அடுத்த இரண்டாம் நாள் புறப்படுவதாக இருந்தார். அண்ணா அவர்களும், அந்தரங்கச் செயலாளரும் விமானத்தில் செல்ல இருந்தமையால், இரண்டு தினங்களுக்கு முன்பே ரயிலில் திரு.சி. சுந்தரராஜபெருமாள் என்னும் நேர்முக உதவியாளரும், ஒரு மெய்க்காப்பளரும் புறப்பட்டுச் சென்று விட்டனர். அப்போது, பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள், திண்டிவனம் அருகே ஒரு விபத்தில் சிக்குண்டு, அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகச் செய்தி வந்தது.

உடனே அண்ணா அவாகள் பதைபதைத்துப் போனார்கள். என்னைக் கூப்பிட்டு டெல்லி பயணத்தை ரத்து செய்யும்படியும், அப்போது பிரதமராக இருந்த திருமதி இந்திராகாந்திக்கு - வர இயலாமைக்கு ஒரு கடிதத்தைத் தயாரிக்கும்படியும் பணித்தார்கள். அவ்வாறே டெல்லி பயணத்தை ரத்து செய்துவிட்டு, பிரதமர் இந்திராவிற்கு ஒரு கடிதம் தயாரித்து, அண்ணா அவர்களின் ஒப்புதலுக்காகக் காட்டினேன். அது அவர்களுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. "நான் பக்கத்தில் இருந்தால் என் தம்பி கருணாநிதிக்கு மிகவும் ஆறுதலாக இருக்கும். எனவே வரஇயலாமைக்கு வருந்துகிறேன். எனக்குப் பதிலாக(அப்போது)உணவு அமைச்சராக இருந்த திரு.மதியழகனை அனுப்பிவைக்கிறேன்" என்று தானே ஒரு கடிதத்தை எழுதி என்னிடம் கொடுத்து, அதை டைப் செய்யும்படி கூற, அந்தக் கடிதத்தைப் பிரதமருக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் சென்னைக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டுவரப்பட்டு, அவரை அடிக்கடி நேரில் சென்று கவனித்துவந்தார் அண்ணா.

★★★

அண்ணா அவர்களிடம் நேர்முக உதவியாளராகப் பணியாற்றி வந்த திரு.எஸ்.கஜேந்திரன் என்பவர், ஒருநாள் மாலை 6.30 மணி சுமாருக்கு அண்ணா அவர்கள் வீட்டில் வாந்தியெடுக்க ஆரம்பித்தார். அதே சமயத்தில் அடிவயிற்றில் ஒரு பக்கம் வலிப்பதாகவும் கூறினார். உடனே அண்ணா அவர்கள் என்னை அழைத்து, அரசுப் பொது மருத்துவமனைக்குக் கொண்டுபோய்க் காட்டும்படி கூறினார். நான் அழைத்துச் சென்றபோது, அங்குள்ள மருத்துவர்கள் பரிசோதனை செய்துவிட்டு, உடனடியாக அப்பெண்டிசைடிஸ் ஆபரேஷன் செய்யவேண்டுமென்று கூறினார்கள். அதை அண்ணா அவர்களுக்குத் தெரிவித்தபோது, உடனே இரவு சுமார் 10 மணிக்கு அரசு பொது மருத்துவமனைக்குத் தானே நேரில் வந்து, இந்த ஆபரேஷன் முடியும்வரை அங்கேயே இருந்து, அவரை வார்டில் கொண்டு வந்து படுக்கையில் சேர்த்த பின்னர், நன்கு கவனித்துக்கொள்ளும்படி அங்குள்ள டாக்டர்களிடம் கூறி விடைபெற்றார். பின்னர் அடிக்கடி மருத்துவமனைக்கு வந்தும் அவரைப் பார்த்துச் சென்றார்.

★★★

முன்னாள் ஆளுநராக இருந்த திரு.கே.சந்தானம் அவர்களின் மகன் திரு.கே.எஸ்.இராமானுஜம் என்பவர் "இந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகையின் நிருபராகவும், அதன் சிறப்புப் பிரதிநிதியாகவும் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவர் **The Big Change** என்னும் தலைப்பில் எவ்வாறு காங்கிரஸ் ஆட்சி கவிழ்ந்தது, தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சிக்கு வந்தது என்பதைப் பற்றிய ஒரு புத்தகத்தை எழுதி, அதனை அண்ணா அவர்கள் சென்னை நிருபர்கள் சங்கத்தின் சார்பில் 1967ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் தேதி வெளியிட வேண்டுமென்று கேட்டு, அதற்கு அண்ணா அவர்களும் தன் இசைவைத் தெரிவித்தார். அவ்விழா - அன்றைய பாலர்கள் அரங்காக இருந்த, இன்றைய கலைவாணர் அரங்கத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது.

அண்ணா அவர்களிடம், அந்தப் புத்தகத்தின் ஒரு பிரதி முன் கூட்டியே கொடுக்கப்பட்டது. அதை அவர் படிக்க எண்ணினாலும் நேரமில்லாமல் தள்ளிக் கொண்டே வந்தது. காரணம், அண்ணா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டதோ மார்ச் 6, 1967. வேலைப்பளு அதிகம். அண்ணா அவர்கள் ஈரோட்டில் சில நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு,

ரயிலில் இரவு புறப்பட்டு, மறுநாள் காலை சென்னை வந்து, அன்று மாலை இந்தப் புத்தக வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ள வேண்டும். புத்தகமோ சற்றுப் பெரியது. அந்த ரயிலில் பயணம் செய்யும் இரவு அண்ணாவுக்கு வசதியாக யாருடைய தொந்தரவும் இல்லாமல் அமைந்தது. எனவே இரவு முழுவதும் ரயிலில் அந்தப் புத்தகத்தைப் படித்து முடித்துவிட்டார்.

மறுநாள் மாலை சென்னை கலைவாணர் அரங்கத்தில் விழா மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அண்ணா அவர்கள் பேசுவதைக் கேட்க நூற்றுக்கணக்கான படித்தவர்கள் முன்னதாகவே வந்து காத்திருந்தனர். அண்ணாவும் இந்த நிகழ்ச்சிக்கு, குறித்த நேரத்திலே வந்து, ஒரு மணி நேரத்திற்குமேல் கருத்தாழம் மிக்க மேற்கோள்களோடு விமர்சனம் செய்துவிட்டு, அந்தப் புத்தகத்தை வெளியிட்டார்கள்.

★★★

அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வரும்போது நாட்டிலே உணவுத் தட்டுப்பாடு அதிகம். எனவே, ஆட்சிக்கு வந்தவுடன் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபட்டார். அதிலே வெற்றியும் கண்டார். அப்போது திரு.கே.ஏ.மதியழகன் அவர்கள் உணவு அமைச்சராக இருந்தார். ஒருநாள் காபினெட் அறையில் உணவு சம்பந்தமான கூட்டம் பல மணிநேரம் நடைபெற்றது. அந்தக் கூட்டம் முடிந்ததும், வெளியே வரும்போது நிருபர்கள் அண்ணா அவர்களிடமும், திரு.மதியழகன் அவர்களிடமும் அந்தக் கூட்டம் சம்பந்தமான பேட்டி கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அண்ணா அவர்கள் சற்றும் தயங்காது நிருபர்களைப் பார்த்து, கொஞ்சம் பொறுங்கள், உங்கள் ஒவ்வொருவருக்கும் கூட்ட நடவடிக்கைப் பற்றிய விவரங்களைத் தருகிறேன் என்று சொல்லி, கூட்டம் முடிவதற்கு முந்தியே - தானே ஒரு சிறந்த பத்திரிகையாளராதலால் தனக்குள்ள பத்திரிகைத்துறையின் நீண்ட அனுபவத்தாலும், எழுத்தாற்றலாலும், தயாராகச் சிறுசிறு துண்டு காகிதங்களில் கோவையாக எழுதி வைத்திருந்ததை, என்னிடம் கொடுத்து, அதை அப்படியே டைப் செய்து, நிருபர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பிரதியைக் கொடுங்கள் என்றார்.

அவ்வாறே மெல்லிய (Manifolding) காகிதத்தில் பல பிரதிகள் எடுத்து, நிருபர்களுக்குக் கொடுத்தேன். அவர்களும் தங்களுக்கு எழுதும் வேலை [illegible] மகிழ்ச்சி அடைந்ததோடு, அண்ணா [illegible] அப்படியே [illegible] வெளியிட்டார்கள். [illegible] பத்திரிகைகளில் [illegible] அப்படியே வெளியிடப்பட்டது.

★★★

"தமிழ்நாடு" என்று மாநிலத்தின் பெயரை மாற்றியமைக்கும் தீர்மானத்தின் மீது பேரறிஞர் அண்ணா அவர்கள் 18.8.1967ஆம் நாளன்று ஆற்றிய உரையில் சில முக்கியப்பகுதிகளை இங்கே தருகிறேன்:

'சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே எல்லாக் கட்சியினராலும் நல்ல அளவுக்கு ஒப்புக்கொள்ளப்பட்டு தீர்மானமாக நிறைவேற இருக்கின்ற "தமிழ்நாடு" என்று பெயரிடுகின்ற இந்த நிகழ்ச்சி இந்த அவையிலே இன்றைய தினம் உறுப்பினர்களாக இருக்கின்ற ஒவ்வொருவருடைய வாழ்நாளிலும் மிகுந்த மகிழ்ச்சியையும் நல்ல எழுச்சியையும் தரத்தக்க ஒரு திருநாளாகும். இந்தத் திருநாளைக் காண்பதற்குப் பன்னெடுங்காலம் காத்துக்கொண்டிருக்க நேரிட்டதே என்பதுதான் மகிழ்ச்சியின் இடையிலே நமக்கு வருகின்ற ஒரு துயரமே தவிர, நெடுங்காலத்திற்கு முன்னாலே நடைபெற்றிருக்க வேண்டிய ஒரு நிகழ்ச்சியை மிகுந்த காலம் தாழ்த்தி, இன்றைய தினம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்றாலும்,இதிலே எல்லாக் கட்சியினரும் ஒன்றுபட்டு இந்தத் தீர்மானத்திற்கு அவர்கள் தங்களுடைய ஆதரவைத் தந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

'இந்தியப் பேரரசிலே மிகுந்த செல்வாக்கோடு இருக்கின்ற இரண்டொரு தலைவர்களுடன் உரையாடுகின்ற வாய்ப்புக் கிடைத்தபோது இதைப்பற்றி அவர்கள் சொல்லும்போது, "தமிழக சட்டமன்றத்தில் இது நிறைவேற்றப்பட்டு அனுப்பப்படுமானால் இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்துவதிலே தயக்கம் இருக்காது" என்பதனை முன்கூட்டியே என்னிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அங்குள்ள பல தலைவர்கள், அதனை அரசை நடத்துகிறவர்கள் கூட ஏற்றுக்கொள்கிறார்கள் என்று எண்ணத்தக்க விதத்தில் பத்து நாட்களுக்கு முன் பாராளுமன்றத்தில் இந்த மாநிலத்தைப் பற்றிப் பேசவேண்டிய வாய்ப்புக் கிடைத்த நேரத்தில் அங்குள்ள உள்துறை அமைச்சர் திரு.சவான் அவர்கள் மெட்ராஸ் என்று பேசி பழக்கப்பட்டவர் - மிகுந்த அக்கறையோடும் மிகுந்த கவனத்தோடும் "Tamil Nad" என்றுதான் பேசியிருக்கிறார். ஆக இதை அவர்களும் ஏற்றுக்கொண்டு அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு நல்ல வாய்ப்பை இன்றைய தினம் இந்த அளவிலே அவையிலே நாம் பெற்று இருக்கிறோம்.

"தமிழ்நாடு என்று பெயர் இருந்தால் வெளிநாடுகளில் உள்ளவர்கள் அறிந்துகொள்ள மாட்டார்கள் என்பது மட்டுமல்ல, நம்முடைய தொழில் அமைச்சராக முன்னால் இருந்த திரு. வெங்கட்ராமன் அவர்கள் ஒரு நாட்டிற்கும் இன்னொரு [illegible] அதனாலே சிக்கல்கள் [illegible] சொன்னார்கள். [illegible] அவர்கள் வெளிநாடுகளுக்குச் [illegible] உண்மையாகச் சிக்கல்கள் இருக்கின்றனவா? என்பதைக் கவனப்படுத்தவில்லை. மதிப்பிற்குரிய நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் எடுத்துச் சொன்னபடி 'கோல்ட் கோஸ்ட்' என்பது 'கானா' ஆகிவிட்டது. அதனால் எந்தவிதமான சர்வதேசச் சிக்கல்களும் ஏற்பட்டு விடவில்லை. தமிழ்நாடு தனி நாடான இந்தப் பெயரை இடவில்லை. இந்தியாவில் ஒரு பகுதியாக இருந்துகொண்டு இந்தப் பெயரை இடுவதால் இதிலே சர்வதேசச் சிக்கல்கள் எழுவதற்கு நியாயம் இல்லை. ஆகவே, இந்தத் தீர்மானத்தை அனைவரும் தங்கள் தங்கள் கட்சியின் சார்பில் ஆதரிக்க வேண்டுமென்பதை ஒரு கடமையுணர்ச்சியாகக் கொண்டதற்காக மிக்க மகிழ்ச்சியடைகிறேன்."

★ ★ ★

எள்ளை எண்ணையாட்ட வைத்திருந்தேனே, அது எங்கே என்று கேட்டால், நேற்றே அதை எண்ணையாட்டி வைத்திருக்கிறேனே என்றும்,இந்தக் காரியத்தை இன்று செய்யவேண்டும் என்று சொல்லும்போதே, நேற்றே அந்தக் காரியம் செய்து முடித்தாகி விட்டதே என்றும் சொல்லக்கூடியவர் தான் கலைஞர். அண்ணா எண்ணக்கூடியவைகளைக் கலைஞர் உடனுக்குடன் செயல் வடிவில் செய்து முடித்து விடுவார். மேற்சொன்னவைகள் அனைத்தும், அண்ணா அவர்களே கலைஞரைப்பற்றி அடிக்கடி கூறி மகிழக்கூடிய சொற்களாகும்.

- முதலமைச்சரான அறிஞர் அண்ணாவின்
நேர்முக உதவியாளராக இருந்த
திரு. பொ.க.சாமிநாதன் எழுதிய
மூன்று முதல்வர்களுடன் என்ற நூலிலிருந்து...

வெளியீடு: பாரி நிலையம், சென்னை.

# அலிப்பூர் வழக்கில் அரவிந்தர் !

1908ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம், முப்பதாம் நாள், குதீராம்போஸ், பிரபுல்லாசாகீ என்ற இரண்டு வாலிபர்கள், பீகார், முசப்பர்பூரின் மாவட்ட நீதிபதி கிங்ஸ்போர்டின் வண்டி என்று எண்ணி, ஒரு வண்டி மீது வெடிகுண்டு எறிந்தார்கள். அந்த நீதிபதி பல பத்திரிகை ஆசிரியர்களுக்கும் கடும் தண்டனை அளித்தவர்; ஒரு சிறுவனுக்குச் சவுக்கடி தண்டனையையும் விதித்தவர். அதற்குப் பழிவாங்கவே புரட்சியாளர்கள் திட்டமிட்டுக் குண்டு வீசினார்கள்.



ஆனால், வண்டியில் கிங்ஸ்போர்டு வரவில்லை. இந்தியர்களின் அன்புக்குப் பாத்திரமான பிரிங்கல் கென்னடி என்பவரின் மனைவியும் மகளும் குண்டு வீச்சின் காரணமாக உயிர் இழந்தார்கள்!

இந்த நிகழ்ச்சியால் நாடெங்கும் பரபரப்பு உண்டாயிற்று. போலீஸ்காரர்கள் விரைவில் இரண்டு புரட்சிக்காரர்களையும் கைது செய்துவிட்டார்கள்; கல்கத்தா மாணிக்தல்லாவில் ஒரு வெடிகுண்டு உற்பத்தி சாலை இருப்பதைக் கண்டுபிடித்தார்கள். அது சம்பந்தமாக, அரவிந்தரின் தம்பி பாரீந்திரகுமார் கோஷையும் இன்னும் சில இளைஞர்களையும் கைது செய்தார்கள்.

இந்திய சுதந்திரப்போரில் கல்கத்தாவில் உள்ள புரட்சிக்காரர்களைத் தூண்டி விடுபவர் அரவிந்தரே என்பது அரசின் எண்ணம். அரவிந்தர் கைது செய்யப்பட்டார்.

'அலிப்பூர் வெடிகுண்டு வழக்கு,என்று பிரபலமான இவ்வழக்கு ஓராண்டுக் காலம் நடந்தது. மற்றவர்களோடு அரவிந்தரும் அலிப்பூர் சிறையிலேயே வைக்கப்பட்டார். அப்போது, சிறையில் ஏ.பி.சி. என்ற வகுப்புப் பிரிவினைகள் ஏற்படவில்லை. எல்லாவிதக் கைதிகளும் ஒரே சிறையில் அடைக்கப்பட்டார்கள். ஒரேவிதமாக வேலை வாங்கப்பட்டார்கள். வெடிகுண்டு வழக்கு என்பதால் இக் கைதிக்ள் அதிகமாய்த் துன்புறுத்தப்பட்டார்கள்.

அரவிந்தருடைய சொற்பொழிவுகள், 'வந்தேமாதரத்தில்' அவர் எழுதிய கட்டுரைகள், கடிதங்கள் ஆகியவற்றை ஆதாரமாக வைத்து அவர்மீது குற்றம் ஜோடனை செய்யப்பட்டிருந்தது. அவர் சதிகாரர்களைத் தூண்டிவிட்டதாகவும், சுதந்திரத்தாகத்தை உண்டாக்கியதாகவும் அவர்மீது குற்றம் சாட்டப்பட்டது.

புகழ்பெற்ற ஈ. நார்டன் துரை,அரசாங்கத்தின் சார்பில் தோன்றினார். சித்தரஞ்சனாரின் குறுக்கு விசாரணைத் திறனும், சட்ட ஞானமும், நீதிபதியையும், வக்கீல்களையும், மக்களையும் பிரமிக்க வைத்தன.

நீதிபதி தீர்ப்புக் கூறினார்: அரவிந்தர் குற்றவாளி அல்ல!

அவர் விடுதலையானார்; இன்னும் சிலரும் விடுதலை பெற்றார்கள்; அதே சமயம் - பெரும்பாலோர் நாடு கடத்தப்பட்டனர்! ★

*சென்ற இதழ் தொடர்ச்சி:*

# காங்கிரஸ் தலைவர் பெரியார்

## - சாமி சிதம்பரனார்

திருச்சியில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. அதில் டாக்டர் வரதராஜுலு நாயுடு பார்ப்பனத் துவேஷப் பிரசாரம் செய்து வருவதாய்க்கூறி, அவர்மீது ஒரு கண்டனத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அத்தீர்மானத்தை ஈ.வெ.ரா. எதிர்த்துப்பேசித் தோற்கடித்தார். அதன் காரணமாக, அந்தக் கூட்டத்திலேயே டாக்டர் டி.எஸ்.எஸ்.ராஜன், சி.ராஜகோபாலாச்சாரியார், என்.எஸ்.வரதாச்சாரியார், கே.சந்தானம், டாக்டர் சாமிநாத சாஸ்திரி ஆகிய ஐந்துபேரும் உடனே ராஜிநாமா செய்து, கமிட்டியிலிருந்து விலகிக்கொண்டார்கள். டாக்டர் நாயுடு இந்நிகழ்ச்சியை மறந்திருக்கமாட்டாரென்று நம்புகிறோம். இச்சமயத்தில் டாக்டர் நாயுடு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர்; ஈ.வ.ரா.காரியதரிசி. இதற்கு முன் இரண்டு ஆண்டுகளும் ஈ.வெ.ரா.தலைவர்; எஸ்.ராமநாதன் காரியதரிசி. காங்கிரசுக்குள் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்ற உணர்ச்சி ஏற்பட்டதற்கு இதுவே வெளிப்படையான காரணம்.

இக்காலத்தில், காலஞ்சென்ற பனகல் அரசரால் சென்னை சட்டசபையில் அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் (Hindu Religious Endowments Act) நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தை எல்லாப் பார்ப்பனர்களும் எதிர்த்தனர். இந்து மதத்தில் சர்க்கார் தலையிடுகிறதென்று கூச்சலிட்டனர். கோயில்கள் பாழ்படும் என்று புலம்பினர். கோயில் ''தர்மகர்த்தா''க்களும் 'மடாதிபதி'களும் சட்டத்தைக் கண்டித்தனர். திரு.எஸ். சீனிவாசய்யங்கார், விஜயராகவாச்சாரியார் உள்பட - பார்ப்பன வழக்கறிஞர்கள் பலரும் இதனால் "மதத்திற்கு ஆபத்து" என்றும், இச்சட்டம் செய்யச் சென்னை சட்டசபைக்கு அதிகாரம் இல்லை என்றும் கூச்சலிட்டனர். இவர்களில் சிலர் இந்தக் காரணத்தை வைத்து, அச்சட்டத்தை ரத்து செய்வதற்கு வைஸ்ராயிடமும் கவர்னரிடமும் சொல்லி, ஏற்பாடு செய்யப்போவதாக மடாதிபதிகளிடம் கூறி, அவர்களிடமிருந்து நிரம்பப் பணம் பெற்றுக்கொழுத்தனர். காங்கிரஸ் பார்ப்பனர்களும் இதை எதிர்த்தனர். இச்சமயம் ஈ.வெ.ரா. ஒரு அறிக்கை வெளியிட்டார். "கட்சிவேற்றுமை பாராட்டாமல் அறநிலையப் பாதுகாப்புச்சட்டத்தை ஆதரிக்க



வேண்டும். இதனால், அறநிலையங்களுக்கு ஆபத்தில்லை. அவைகளின் செல்வங்கள் கொள்ளை போகாமல் பாதுகாக்கவேண்டும். மதத்தின் பெயரால் கொள்ளையடித்துக் கொண்டிருந்தவர்களுக்குத் தான் இதனால் ஆபத்து" என்ற கருத்துடையது அவ்வறிக்கை. அவ்வறிக்கையை டாக்டர் நாயுடுவும், எஸ்.ராமநாதனும் திரு.வி.க. முதலியோரும் ஆதரித்தார்கள்.

ஈ.வெ.ரா., காங்கிரசிலேயே வகுப்புரிமைக்கும் சமுதாய உரிமைக்கும் போராடியவர்; போராடி வந்தார். பார்ப்பனரல்லாதாருக்கு அரசியலில் தக்க பாதுகாப்பளிக்க வேண்டுமென்று கூறிவந்தார். வகுப்பு எண்ணிக்கைக்குத் தக்கவாறு உத்தியோகம் கொடுக்கவேண்டும் என்பதை ஆதரித்தார். நீதிக்கட்சி தோன்றிய காலத்தில் ஈ.வெ.ரா.போன்றவர்கள், நீதிக்கட்சியுடன் சேர்ந்துவிடாமலிருப்பதற்காக "சென்னை மாகாண சங்கம்" என்றும், ''தேசீய சங்க''மென்றும் இரண்டு உண்டாக்கப்பட்டன. காலஞ்சென்ற கேசவபிள்ளை அவர்கள் முந்தியதற்குத் தலைவர்; இதைத் தோற்றுவித்தவர்கள் பார்ப்பனர்களே. பார்ப்பனரல்லாதார் கட்சியைத் திட்டுவதே இச்சங்கத்தாரின் பணி.

அக்காலத்தில் ஈ.வெ.ரா.இப்பணியை ஆற்றவில்லையென்றாலும் அச்சங்கத்திற்குப் பொருளுதவி செய்து ஆதரித்து வந்தார். அச்சங்கம் பார்ப்பனரல்லாதார் பெயரால் நடைபெற்றாலும் சங்கத்தை ஆட்டிவைத்தவர்கள் பார்ப்பனர்களேயாவார்கள். இச்சங்கத்திலும் தேசீய சங்கத்திலும் ஈ.வெ.ரா.வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பற்றிய தீர்மானத்தை நிறைவேற்றச் செய்தார். என்றாலும் அது காரணமாகவே அச்சங்கங்கள் உடனே கொல்லப்பட்டுவிட்டன. அதற்குப்பின் நடந்த தமிழ்நாடு காங்கிரஸ் மாகாண மாநாடுகளில் எல்லாம் ஈ.வெ.ரா.வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை வற்புறுத்தி வந்திருக்கிறார்.

1920-ல் நடந்த திருநெல்வேலி மாநாட்டில் ஈ.வெ.ரா.வகுப்புவாரி தீர்மானத்தை விஷயாலோசனைக் கமிட்டியில் 6 ஓட்டுகள் அதிகமாகப் பெற்று நிறைவேற்றினார். மாநாட்டில் தலைவர் எஸ்.சீனிவாசய்யங்கார், 'இது பொதுநலக் கேடு' என்று அனுமதிக்காமல் மறுத்துவிட்டார். 1921-ல் தஞ்சாவூர் மாகாண மாநாட்டில் பிரரேபித்தார். அதுசமயம் C.R. அவர்கள், கொள்கையாக வைத்துக்கொள்வோம்; தீர்மான ரூபமாக வேண்டாம் என்று தடுத்தார். 1922-ல் திருப்பூரில் நடந்த மாகாண மாநாட்டில் ஈ.வெ.ரா.பிரேரேபித்தார். அப்போது நடந்த வாதத்தில்தான் ஈ.வெ.ரா.கோபமடைந்து மனுதர்ம சாஸ்திரத்தையும், இராமாயணத்தையும் நெருப்பில் கொளுத்தவேண்டும் என்றார். கலவரம் ஏற்பட்டு திரு.விஜயராகவாச்சாரியார் அடங்கிவிட்டார்.

பிறகு 1923-ல் சேலம் மாகாண மாநாட்டில் பிரரேபித்தார். கலகமாகும்போல் இருந்தது. ஜார்ஜ் ஜோசஃபும், டாக்டர் நாயுடுவும் நிறுத்திவிட்டார்கள். 1924-ல் திருவண்ணா மலையில் ஈ.வெ.ரா. தலைமையில் மாகாண மாநாடு என்றாலும், எஸ்.சீனிவாசய்யங்கார் வகுப்புவாரித் தீர்மானத்தைத் தோற்கடிக்க, சென்னையிலிருந்து ஏராளமான ஆட்களைக் கூட்டி வந்து தடுத்தார்; நின்றுபோய்விட்டது. 1925-ல் திரு.வி.க. தலைமையில் காஞ்சிபுரத்தில் ஈ.வெ.ரா.பிரேரேபித்தார். திரு.வி.க.தீர்மானத்தை நிராகரித்தார். ஈ.வெ.ரா. கோபித்துக்கொண்டு காங்கிரசை விட்டு வெளியேறிவிட்டார். இவ்வாறு ஈ.வெ.ரா. எப்போதும் பார்ப்பனல்லாதார் உரிமையிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித் துவத்துக்காகவும் போராடியே வந்திருக்கிறார்.

1924 டிசம்பரில் திருவண்ணாமலையில் கூடிய தமிழ்நாடு 30-வது காங்கிரஸ் மாகாண மாநாடு நடைபெற்றபோது, அதற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஈ.வெ.ரா., அப்போதும் மாகாண காங்கிரஸ் கமிட்டிக்கும் தலைவர். அம் மாநாட்டின் தலைமையுரையில் அவர் பேசியது மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைப் பற்றி அவர் கூறியிருப்பதாவது-

''தென்னிந்தியாவில் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை குலையாதிருப்பினும் ஹிந்துக்களுக்குள் ஒற்றுமை குறைந்து வருவது உண்மை. முதலாவது பிராமணர் பிராமணரல்லாதார் நிலையைச் சிறிது சிந்திப்போம் ஒரு மதத்தைச் சேர்ந்த இவர்களுக்குள் வேற்றுமையுணர்வு தோன்றுவானேன்? வேற்றுமைக்கு அடிப்படையான காரணங்கள் இருத்தல் வேண்டும். அக்காரணங்களை உணர்ந்து ஒற்றுமைக்கு உழைக்க தேச பக்தர்கள் முயலவேண்டும்.

காங்கிரஸ்வாதியாயிருந்த டாக்டர் நாயர் திடீரென ஒரு கட்சியைத் தோற்றுவிக்கக் காரணங்களாய் நின்றவைகள் எவைகளோ? அவைகள் இன்னும் நிற்கின்றனவா, இல்லையா? என்பதை நேயர்கள் கவனிப்பார்களாக.

அக்காரணங்கள் அழிந்துவிட்டதாக எனக்குத் தோன்றவில்லை. அவைகள் தமிழ்நாட்டில் ஊர்ந்து கொண்டிருக்கும்வரை தமிழ்நாட்டில் பிராமணர், பிராமணரல்லாதார் ஒற்றுமை நிலவுதலரிதே. தேச சேவையில் ஈடுபட்டுத் தமிழ்நாட்டுக் காங்கிரசில் காரியதரிசியாகவும் தலைவராகவும் இருந்து பெற்ற அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டே நான் இங்கே பேசுகிறேன்"

("நவசக்தி",1924 நவம்பர் 21)

இதனாலும் - பார்ப்பனரல்லாதாரின் நிலை எப்பொழுதுமே இவர் கருத்தைக் கவர்ந்து வந்ததென்பதை அறியலாம்.

1925 நவம்பர் மாதத்தில் காஞ்சீபுரத்தில் தமிழ் மாகாண மாநாடு நடைபெற்றது. திரு.வி.க. முதலியார் அம்மாநாட்டின் தலைவர். அம் மாநாட்டில் ஈ.வெ.ரா.வின் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்மானத்திற்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. தீர்மானம் தலைவரால் நிராகரிக்கப்பட்டது என்று முன்னமே கூறினோம். அப்பொழுதுதான், "காங்கிரசால் பார்ப்பனரல்லாதார் நன்மை பெறமுடியாது; "காங்கிரசை ஒழிப்பதே இனி எனது வேலை" என்று மாநாட்டிலேயே எழுந்து கூறிவிட்டு வெளியேறினார். உடனே ஒரு பெருங்கூட்டம் அவருடன் மாநாட்டைவிட்டு வெளியேறிவிட்டது.

காஞ்சி மாநாட்டின்போது, அங்கேயே ஈ.வெரா.வின் முயற்சியால் ஒரு பார்ப்பனரல்லாதார் மாநாடு கூட்டப்பட்டது. அதன் தலைவர் கோவை திரு.T.A. ராமலிங்க செட்டியார். செட்டியாரைத் தலைமைதாங்கும்படி கூறியபோது ஈ.வெரா.:

"தேசத்தில் பிராமணர், பிராமணரல்லாதார் என்ற தனிப்பட்ட கட்சிகள் தோன்றிப் பிணக்குறுவது

## தியாகராயரும், செய்தித் தாள்களும்!



*சர். பிட்டி. தியாகராயர் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளிலும் தினச் செய்தித் தாள்களை அச்சிட்டு வெளியிட்டார்.*

*'ஜஸ்டிஸ்' என்ற பெயரில் ஆங்கில செய்தித் தாளை 1917 பிப்ரவரி 26 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிட்டார். அதன் பதிவு எண். எம்.1263. 'ஜஸ்டிஸ்' என்ற ஆங்கில இதழின் பெயரின் காரணமாக சௌத் இந்தியன் லிபரல் பெடரேஷனானது ஆங்கிலத்தில் "ஜஸ்டிஸ் பார்ட்டி" என்றும், தமிழில் "நீதிக்கட்சி" என்றும் அழைக்கப்படலாயிற்று.*

*1885இல் ரெவரெண்ட் ஜான் ரத்தினம் அவர்கள் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்களின் நலன் கருதி "திராவிட பாண்டியன்'' என்ற ஒரு தமிழ்ச் செய்தித்தாளை வெளியிட்டார். அதே நோக்கில்தான் சர்.பிட்டி. தியாகராயரும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் நலன் கருதி 1917 ஜூன் 1 சனிக்கிழமை 'திராவிடன்' என்ற பெயரில் தமிழ் தினச்செய்தித் தாளை அச்சிட்டு வெளியிட்டார். அதன் பதிவு எண்.எம்.1279.*

*1885இல், தெலுங்கு மொழியில் 'ஆந்திர பிரகாசிகா' என்ற செய்தித்தாள் வெளிவந்தது. சர்.பிட்டி. தியாகராயர் அதே தெலுங்கு செய்தித் தாளை 1917 ஜூன் 10 திங்கட்கிழமையிலிருந்து அச்சிட்டு தினச் செய்தித்தாளாக வெளியிட்டார். அதன் பதிவு எண். எம். 1280.*

216441

அனைவரும் அறிந்த ஒரு விஷயமேயாகும். இவ்வாறு பிரிவினை இல்லையென்று எவ்வளவுதான மூடிவைத்த போதிலும், காங்கிரசிலுங்கூட இத்தகைய பேதம் உண்டென்பதை யாரும் மறுக்கமுடியாது. பிராமணர், பிராமணரல்லாதார் பிரிவினை இல்லை என்பது உலகிலுள்ள புண்ணை மூடிவைத்து அழுகவிடுவதற்கு ஒப்பாகும். அதற்கேற்ற பரிகாரம் செய்து, உடல் நலத்தைக் கெடுக்கும் புண்ணை ஆற்ற முயல்வதே போது நோக்குடைய அறிஞர் கடமையாகும்".

- என்று கூறினார். இது ஈ.வெ.ரா.வின் அக்காலக் கொள்கையையும் உணர்ச்சியையும் காட்டுகின்றதன்றோ?

1925ஆம் ஆண்டு வரையிலும் ஈ.வெ.ரா.உண்மையான காங்கிரசுக்காரராகவே இருந்தார். ஒரு தீவிரமான ஒத்துழையாதாரராகவும் இருந்தார்.

காங்கிரசின் ஆதரவு கொண்டே ஜாதி வேற்றுமையை நிலைநிறுத்தவும் வருணாச்சிரமத்தை ஏற்படுத்தவும் சுயராஜ்யக் கட்சியின்மூலம், பார்ப்பனரல்லாதார் கட்சியையும் அவர்களது தேவைகளையும் ஒழிக்கவும், காங்கிரசிலுள்ள பார்ப்பனர்கள் அனைவரும் ஒன்றுகூடி முயற்சி செய்தார்கள். இதைச் சந்தேகமற உள்ளிருந்து உணர்ந்துகொண்டதே ஈ.வெ.ரா.காங்கிரசைவிட்டு விலகியதற்கு முதற்காரணமென்று கூறலாம்.

கதர்போர்டு நிர்வாகத்திலும் ஈ.வெ.ரா.வே தலைவராக இருந்தபோதிலும், கே. சந்தானம் என்கின்ற ஒரு பார்ப்பனர் காரியதரிசியாக இருந்ததால், அதில் பார்ப்பனர்களே மிகுதியாக இருந்து வந்ததும் அதன் வருவாய் முழுவதும், அதற்காகச் செலவிடும் பொருளும், பெரும்பாலும் பார்ப்பனர்களுக்கே பயன்பட்டு வந்ததும் இவருக்குப் பிடிக்கவில்லை. அதற்காகச் செய்த பல போராட்டங்களில் காந்தியார் தலையிட்டதால் ஈ.வெ.ரா. வெற்றிபெற முடியாமல் போனதும் இவர் விலகியதற்கு மற்றொரு காரணமென்று சொல்லலாம்.

இந்நிலையில் 1926ஆம் ஆண்டு நவம்பரில் சென்னை சட்டசபைக்குப் பொதுத்தேர்தல் நடைபெற்றது. இத் தேர்தலில் ஈ.வெ.ரா.வெளிப்படையாக எக்கட்சியினரையும் ஆதரிக்கவில்லை. நல்ல திறமையுடைவர்கள், பார்ப்பனரல்லாதார் நன்மைக்குப் பாடுபடுகிறவர்கள், தன்னலமின்றிப் பொதுநலத்துக்கு உழைக்கும் உண்மைக் கருத்துடையவர்கள்-இவர்கள் சட்டசபைக்குச் செல்லும் தகுதியுடைவர்கள். இத்தகையவர்களையே வாக்காளர்கள் தேர்ந்தெடுக்கவேண்டும் என்பது இவருடைய கருத்து.

இதையே சொற்கள் மூலமும் பத்திரிகைகள் மூலமும் வெளியிட்டு வந்தார். இச்சமயம் ஒத்துழையாதார் என்று சொல்லிக்கொண்டிருந்த திரு.ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சுயராஜ்யக் கட்சியின் வெற்றிக்காக மறைமுகமாக வேலை செய்துவருவதாக ஈ.வெ.ரா.அறிந்தார். பார்ப்பனரல்லாதார் கட்சியைத் தொலைத்துவிட்டுச் சுயராஜ்யக்கட்சியின் பேரால் பார்ப்பனர்கள் மந்திரிப்பதவிகளில் அமரவேண்டும் என்பதற்காகவே அவர் இவ்வாறு செய்கிறார் என்றும் தெரிந்தார். "பார்ப்பனர்கள் எப்பொழுதும் தங்கள் வகுப்பு நலத்தையேதான் நாடுவார்கள்" என்னும் உண்மையை இப்பொழுதுதான் ஈ.வெ.ரா.நன்கு உணர்ந்தார். "அரசியலில் பார்ப்பனர்களை ஒருபொழுதும் நம்பாதீர்கள்" என்னும் சர்.பி.தியாகராயரின் மொழியின் உண்மையை உணர்ந்தார். இனி பார்ப்பனரல்லாதார் நன்மைக்கே உழைப்பதென்று உறுதிகொண்டார்.

தாம் எடுத்துக்கொண்ட செயலை இடையில் விட்டுவிடுந்தன்மை ஈ.வெ.ரா.விடம் இல்லை. வெற்றி காணும் வரை உழைப்பார். இவ்வுறுதியில் இவருக்கிணை எவரும் இலர். இவர் காங்கிரசில் இருந்தபோதே இவரே காங்கிரஸ்; காங்கிரசே இவர். இவர் வீட்டிலேயே காங்கிரஸ் ஸ்தாபனமிருக்கும். இதுபோலவே எந்த ஸ்தாபனத்தில், எந்த இயக்கத்தில் இருந்து உண்மையாகத் தொண்டாற்றப் புறப்பட்டாலும் அந்த ஸ்தாபனத்தையே தம்முடையதாக்கிக்கொள்வார். அவரே இயக்கமாக ஆகிவிடுவார். இது அவரது இயற்கைக் குணம்.

. காங்கிரசின் கட்டளைப்படிப் பலமுறை சிறைபுகுந்தார். மற்றவர்களும் சிறை புகுவதற்கு இவரே வழிகாட்டினார். பல மாநாடுகளில் தலைமை தாங்கினார். எல்லா மாநாடுகளுக்கும் தவறாமல் சென்று வருவார். நாகம்மையாரையும் உடன்கூட்டிச் செல்வார். ஒவ்வொரு அகில இந்தியக் காங்கிரசுக்கும் மனைவியுடன் சென்று வந்தார்.

இவ்வளவு தியாகஞ் செய்தவர்கள் இன்றைய காங்கிரசில் எவருமே இலர்!

*- சாமி சிதம்பரனார் எழுதிய*
*'தமிழர் தலைவர்' என்ற நூலிலிருந்து.*

## அம்பேத்கரின் பொன்மொழிகள்

★ அரசாங்கமானது,
பெரும்பான்மையினரால்
அமைக்கப்பட்டு,
சிறுபான்மையினரின்
ஒத்துழைப்பையும், சம்மதத்தையும்
பெற்று நடைபெறுவதே
சுயராஜ்ஜியத்தின் அர்த்தம்
ஆகும். அத்தகைய
ஜனநாயகத்தை நான்
வரவேற்பேன்.

★ அறிவு விளக்கம் பெற்ற சமூகங்கள் தமது பழக்க வழக்கங்களை ஆராய்ந்து, நல்லவைகளை ஒப்புக்கொண்டு தீயவைகளை நிராகரித்து முன்னேற முயலுகின்றன.

★ சீரிய இலட்சியமாகிய சுயமரியாதையை மேலும் வளர்ப்பதில் ஒவ்வொரு மனிதனும் தன்னைத் தானே அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்!

★ அரசியல் கொடுமையைவிடச் சமூகக் கொடுமையே மிகப் பயங்கரமானது. எனவே, அரசியல் கொடுமையைவிடச் சமூகக் கொடுமையை எதிர்த்துப் போராடும் சமூகச் சீர்திருத்தவாதியே அதி தைரியசாலி ஆவான்.



# அரசு இயந்திரம் எள் என்பதற்கு முன் எண்ணெயாக, வருமுன் காப்போனாக இருக்க வேண்டும்!

## - மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு முதல்வர் ஆணை

***மா**வட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாட்டில் 2.9.97 அன்று, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.*

**நா**ம் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளைத் தொடர்ந்து மக்களுக்கு நிர்வாக அமைப்பின்மீது ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளோம் என்று மகிழ்ச்சி அடையலாம். இருந்தபோதிலும், இத்துடன் நாம் மெத்தனமாக இருந்துவிட முடியாது. இந்தியாவில் தமிழ்நாட்டைச் சிறந்த மாநிலங்களிடையே மீண்டும் நிலைநிறுத்த மாபெரும் பணியினைத் தன்னடக்கத்துடனும், கட்டுக்கோப்புடனும் செயல்படுத்த நாம் முனைந்துள்ளோம். இதே ஈடுபாட்டுடன் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை முனைப்புடன் செயல்படுத்த வேண்டும் என்று விரும்புகின்றேன்.

பணிகளின் தன்மை சிறப்பாக அமையவேண்டும். வேகமாகச் செயல்படும் கட்டத்தில் எக்காரணத்தைக் கொண்டும் பணிகளின் தரத்தில் குறை ஏற்படாமல் கண்காணிக்க வேண்டும். இது அனைத்துத் துறைகளின் பணிகளுக்கும் பொருந்தும். நிதி ஒதுக்கீடுகள் மட்டும் செலவிடப்பட்டு, தரக் குறைவான பணிகளைச் செய்வது முன்பு இருந்த வழக்கம். அதனை அறவே நீக்கி, வேகமும் தரமும் (Speed and Quality) ஒரு சேர உறுதியாக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்த அரசின் எதிர்பார்ப்பு.

கடுமையான உழைப்பின் வாயிலாகத்தான் ஒரு நிர்வாக இயந்திரம் சிறப்பாகச் செயல்பட முடியும். எதுவும் மாறுவதற்கு வாய்ப்பில்லை என்ற மெத்தனப்போக்கு சில அதிகாரிகளிடம் இன்னமும் இருப்பது விரும்பத்தக்கதல்ல. மேல் மட்டத்திலுள்ள அலுவலர்கள் இதனைக் கூர்ந்து கவனித்து உடனடியாகக் களைந்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

### வரலாற்றிலே வளர்ச்சி

நிர்வாகத்தை எல்லா நிலைகளிலும் பலப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு, 1996 அக்டோபர் திங்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைப்படி, உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஆதாரங்கள் இரு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளன. அதே நேரத்தில் மாநிலத் திட்டக் குழுவின் முதல் அறிக்கையின்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டுள்ளன. நிதி ஆதாரங்கள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளித்ததன் மூலம், வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியை உள்ளாட்சி அமைப்புகள் அடைந்துள்ளன.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில திட்டக் குழுவின் இரண்டாவது அறிக்கையின் பரிந்துரையின்படி, மேலும் அதிகாரங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் மற்றும் மாவட்டத் திட்டக்குழு ஆகியவற்றிற்கு மேலும் அதிகப் பொறுப்புகள் வழங்குவது குறித்து ஆய்வுசெய்து, எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசுக்குப் பரிந்துரைக்க உள்ளாட்சித்துறை அமைச்சரை அமைப்பாளராகக் கொண்டு பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழு ஏற்படுத்திட அரசு முடிவு எடுத்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். இந்த அரசு எடுத்த முடிவுகளுக்கு ஏற்ப, தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கிச் செயலாற்றிட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதிசெய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

### வறட்சி நிவாரணப்பணிகள்

இவ்வாண்டு ஜூன் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் முடிய தமிழ்நாட்டின் தென்பகுதியில் மழையின் அளவு இயல்பைக் காட்டிலும் குறைவு என்ற நிலையில் குடிநீர்த் தட்டுப்பாட்டை நாம் எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. ஏற்கெனவே வறட்சி நிவாரணத்திற்காக வழங்கப்பட்ட ரூ.16 கோடி செலவிடப்பட்டிருந்தாலும், இன்னும் பல கிராமங்களில் குடிதண்ணீர் கிடைக்கவில்லை என்ற புகார்கள் பத்திரிகைகளிலும், மக்கள் பிரதிநிதிகள் மூலமும் வந்துகொண்டுதான் இருக்கின்றன. அடுத்த பருவ மழை பெய்து குடிநீர்த் தட்டுப்பாடு தீரும் வரையில், நாம்



விழிப்புடன் இருக்கவேண்டியது அவசியம். தேவைப்படும் இடங்களில் லாரிகளின் மூலமும் குடிதண்ணீர் வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு அதை ஒழுங்குறச் செயற்படுத்த வேண்டியுள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தங்கள் மாவட்டங்களில் குடிதண்ணீர் மற்றும் பயிரின் நிலை எவ்வாறு உள்ளது என்பதைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் எடுத்துரைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் மாவட்டங்களில் வறட்சிக்கான அறிகுறிகள் தென்படுமேயானால் போர்க்கால அடிப்படையில் வறட்சி நிவாரணப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். உங்கள் மாவட்டத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு தேவை என்று நீங்கள் எடுத்துரைக்கும் அதே வேளையில் எவ்வளவு விரைவில் இப்பணிகள் உங்கள் மாவட்டத்தில் முடிக்கப்படும் என்பதையும் நீங்கள் கணக்கிட்டுக் கூறவேண்டும். வறட்சி நிவாரணப்பணிகளை மேற்கொள்வதில் நடைமுறைச் சிக்கல்கள் ஏதேனும் இருப்பின், அவற்றைக் களைவதற்கான வழிமுறைகளையும் நீங்கள் கூறலாம். வறட்சி நிவாரணப் பணிகளைப் பொறுத்தமட்டில் அரசு இயந்திரம் என் என்பதற்குமுன் என்னையாக, வருமுன் காப்போனாக இருக்கும் என்பதை நீங்கள் செயலில் காட்டவேண்டும்.

> "தெரு விளக்குகள் போடுவது பற்றி பேசப்பட்டு, அதற்கான மனுக்களை செப்டம்பர் திங்கள் 30ஆம் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டுமென்றும், அந்தப் பணிகள் அனைத்தும் 31.3.98க்குள் முடிக்கப்பட வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டது."

தற்போது உள்ளாட்சி அமைப்புகளால் பராமரிக்கப்படும் ஒரு இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரம் கைப்பம்புகள் மற்றும் முப்பதினாயிரத்து எண்ணூறு விசைப் பம்புகளைச் செம்மையாகப் பராமரிக்க வேண்டும். இவைகளை பழுதுபார்க்க உள்ளாட்சித் தலைவர்கள் எடுக்கும் முயற்சிகளுக்குத் தாமதமின்றி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முழு ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும். குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் முழுமையான பயன் கிடைத்திட ஒரு சிறப்பு ஆய்வு செய்யத் திட்டமிட்டுள்ளேன்.

ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் போதுமான குடிநீர் வழங்க ஒரு பெருந்திட்டத்தை இந்த அரசு தீட்டியுள்ளது. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஒரு நாளைக்கு ஒருவருக்கு 10 லிட்டர் குடிநீருக்கும் குறைவாகக் கிடைக்கும் பகுதியில் வசிக்கின்ற மக்களுக்குத் தலா 40 லிட்டர் குடிநீர் கிடைக்க வழிவகை செய்யப்படும் என்ற இந்த அரசின் நோக்கத்தை நான் தெளிவுபடுத்தியுள்ளேன்.

இரண்டு ஆண்டுகளில் 10,000 குடியிருப்புகளுக்கு இந்தச் சிறப்புத் திட்டத்தின் வாயிலாகக் குடிநீர் வழங்க வேண்டும். இந்தக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க நீர் ஆதாரங்களை உருவாக்கக் குடிநீர் வடிகால் வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை நான் அறிவேன். இந்த 10,000 குடியிருப்புகளில், 4,500 குடியிருப்புகளுக்கு நடப்பு ஆண்டிலேயே குடிநீர் வழங்க வேண்டும். இவைகளுக்கான திட்ட மதிப்பீட்டைத் தயாரிப்பதிலும் திட்டப்பணிகளைச் செயல்படுத்த சம்பந்தப்பட்டவர்களுக்கு ஒப்படை செய்வதிலும் விரைவாகச் செயல்பட வேண்டும்.

**பணிகளின் முன்னேற்றம்**

'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' தெரிந்தெடுக்கப்பட்ட சில கிராமங்கள், அனைத்து அடிப்படை வசதிகளையும் பெற்று முன்னோடி கிராமங்களாக திகழவேண்டும் என்பதற்காகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரால் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்திற்கும் 'நமக்கு நாமே' திட்டத்திற்கும் எவ்வளவு முக்கியத்துவம் இந்த அரசு தருகிறது என்பது உங்களுக்குத் தெரியும். நிதிநிலை அறிக்கையில் நான் தெரிவித்தபடி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, அடிப்படை மருத்துவ வசதி, வீடற்ற ஏழைகளுக்கு வீட்டுவசதி, ஏழைக் குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துணவு, ஒவ்வொரு கிராமத்திற்கும் நியாய விலைக்கடை, கட்டாய ஆரம்பக்கல்வி, கிராமங்கள் அனைத்திற்கும் சாலை வசதி ஆகிய குறைந்தபட்ச ஏழு அடிப்படை வசதிகளை அளிப்பதுதான் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் தலையாய குறிக்கோள் என்பது உங்களுக்குத் தெரியும்.

ஜூலை மாதத்தில் நான் வேலூர் மாவட்டம் பொன்னை கிராமத்தில் துவக்கிவைத்த பின்னர் இதுவரை 52 கிராமங்களில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக நீங்கள் அறிக்கை அனுப்பியுள்ளீர்கள். இத்திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மற்ற கிராமங்களில் உடனடியாகப் பணிகள் தொடங்கப்பெற வேண்டும். தொடங்கப்பட்ட பணிகளின் முன்னேற்றம் எந்த அளவிற்கு உள்ளது என்பதையும் தெரிவிக்கவேண்டும்.

இவ்வாண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மற்றொரு புதிய திட்டம் "நமக்கு நாமே" திட்டம். இதை ஒரு திட்டம் என்று சொல்லுவதைவிட திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான புதிய அணுகுமுறை என்றே நான் கருதுவேன். திட்டங்களில் மக்கள் பங்கு பெறுவது





இல்லை; மக்கள் கலந்தாலோசிக்கப்படுவதில்லை; அரசு அதிகாரிகள் கிராம மக்களுக்கு இதுதான் தேவை என்று தாங்களே ஊகித்து அத்தேவைகளைப் பூர்த்திசெய்யும் நிலைதான் இன்றளவும் உள்ள நிலை. பல நேரங்களில் மக்கள் எதிர்பார்க்கின்ற முக்கியமான தேவை, அரசு அதிகாரிகளின் நோக்கில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லாமல் போய்விடலாம். இந்த நிலையை மாற்றி ஊர்மக்கள் மன்றம் முறையாகக் கூடி தங்கள் தேவைகளைப் பற்றி விவாதித்து ஒருமித்த முடிவுகள் எடுப்பதற்கான வாய்ப்பு அளிப்பது ''நமக்கு நாமே'' திட்டத்தின் நோக்கம். இதன்மூலம் ஊர்மக்கள் அனைவரும் திட்டமிடுவதிலும் செயலாற்றுவதிலும் பங்குபெறுகிறார்கள் என்ற உணர்வை ஏற்படுத்த முடியும்.

இந்த ''நமக்கு நாமே'' திட்டத்திற்குச் சிறப்பு ஒதுக்கீடாக ரூ.5 கோடி வழங்கப்பட்டுள்ளது.

> நெல் கொள்முதல் செய்வது பற்றி விவாதிக்கப்பட்டது. மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலையை விட குவிண்டால் ஒன்றுக்கு 35 ரூபாய் மாநில அரசு அதிகமாக விலை நிர்ணயித்திருப்பதை விவசாயிகள் வரவேற்பதாகவும், இணைக் கொள்முதல் அனைத்து மாவட்டங்களிலும் திருப்திகரமாக நடைபெற்றுவருவதாகவும் கூறப்பட்டது. நெல் கொள்முதல் செய்யும்போது கிரேட் கட் (தரத்திற்குத்தகுந்தாற்போல் குறைப்பது) குறுவைக்கு 15 ரூபாயும், சம்பாவிற்கு 5 ரூபாயும் குறைப்பது வழக்கம் என்று அதிகாரிகள் தெரிவித்த போதிலும், விவசாயிகளின் நலனைக் கருத்திலே கொண்டு இந்த ஆண்டு குறுவைக்கும் கிரேட் கட் ஐந்து ரூபாய் அளவிற்கே இருந்தால் போதுமானது என்று இறுதியாக முடிவெடுக்கப்பட்டது.

**கடந்த கால ரணங்கள்**

தாழ்த்தப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் வாழ்க்கை மேம்பட வேண்டும். அவர்களுடைய குடியியல் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்' என்பதில் இந்த அரசு தீவிரமாக இருக்கிறது என்பதை நீங்கள் உணர்வீர்கள். வகுப்புக் கலவரங்கள் நடக்கும் போதெல்லாம் ஒடுக்கப்பட்டவர்கள் மீதுதான் வன்முறை வெறியாட்டங்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. அவர்களுடைய குடியியல் உரிமையைப் பாதுகாப்பதற்கு மாவட்ட நிர்வாகம் முழு உத்திரவாதம் அளிக்கவேண்டும். ஏற்கெனவே கடந்த கால ரணங்கள், தழும்புகளாக மாறி நிற்கின்ற பகுதிகளில் வாழ்கின்ற மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைப் போக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட இடங்களில் வகுப்புக் கலவரங்கள் தொடராமல் இருக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும். அந்தப் பகுதியின் அருகிலேயே மென்மையான நரம்பு மண்டலமாய், பாதிப்புக்கு இடமளிக்கும் வகையில் அமைந்துள்ள சுற்றுப்புற கிராமங்களில் வகுப்புக் கலவரங்கள் நடைபெறாமல் இருக்க எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**சமத்துவபுரம்**

இந்தியா சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகள் நிறைவுற்று பொன்விழா கொண்டாடும் இந்த ஆண்டில் சாதிச் சண்டைகளை ஒழித்து சமத்துவ சமுதாயம் அமைத்து மக்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல சமத்துவபுரங்களை உருவாக்க இந்த அரசு திட்டமிட்டுள்ளது உங்களுக்குத் தெரியும்.

சமத்துவபுரம் திட்டத்தின்கீழ், 50 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து ஒரு கிராமத்திற்கு 100 வீடுகள் அமைத்து அங்கு பல்வேறு சாதிகளைச் சார்ந்த மக்கள் நட்புடனும், அமைதியாகவும் அன்போடும் வாழ வழிவகைகள் செய்யப்படும். 3 செண்டு பரப்பில் அமைக்கப்படும் சாதாரணமான வீடுகளைப் போல் அல்லாமல் இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் வீடுகள் 5 செண்டு பரப்புடைய மனையில் அமையும். இந்தத் திட்டத்தில் வீடு கட்டுவதற்கு மானியமாக ரூ.35,000 வழங்கப்படும். அதே மனையில் தங்கள் விருப்பத்திற்கேற்ப வீடுகளைக் கட்டுவதற்காகத் தேவையான கடனும் கூட்டுறவு நிறுவனங்களிலிருந்து அரசு பெற்றுத்தரும். ஐம்பது கோடி ரூபாய் செலவாகும் இத்திட்டத்திற்கு முதல்கட்டமாக ரூபாய் பத்து கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இத்திட்டத்தினை வெற்றிகரமான முறையில் அமல்படுத்துவதற்கு உறுதியளிக்கும் வகையில் கிராமங்களைத் தேர்வு செய்ய வேண்டும்.

நாம் ஆதிதிராவிட மக்களின் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காகப் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். இத்திட்டங்களைச்



செயல்படுத்துவதில் தரமான முன்னேற்றத்தினை உறுதிசெய்யும் அளவில் நம் முயற்சிகள் அமைய வேண்டும்.

**நல்லிணக்கக் குழுக்கள்**

அமைதியை உருவாக்கவும் அமைதி கெடக்கூடிய சூழ்நிலை ஏற்படுமானால் அதைத் தடுத்திடவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் கோட்டவாரியாக நல்லிணக்கக் குழுக்கள் அமைக்கப்படும் என்று நான் 31.8.1997 அன்று மதுரையில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில் அறிவித்திருக்கின்றேன். அந்த அறிவிப்பினை உடனடியாக மாவட்ட ஆட்சித்தலைவர்கள் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மலைவாழ் பழங்குடியினர் குடியிருப்புகள் அனைத்திற்கும் படிப்படியாக மூன்று ஆண்டுகளில் அடிப்படை வசதிகள் செய்துதர அரசு முடிவு செய்துள்ளது.

இன்னும் பதினைந்து நாட்களில் உங்கள் மாவட்டத்திலுள்ள அனைத்து பழங்குடிகளின் குடியிருப்புகளிலும் அடிப்படை கணக்கெடுப்பு (Bench Mark Survey) நடத்தி எந்தெந்த குடியிருப்புகளுக்கு என்னென்ன வசதிகள் தேவைப்படுகின்றன, எந்தெந்தக் குடியிருப்புகளில் இவ்வாண்டு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும், இத்திட்டத்திற்கு எவ்வளவு நிதியாதாரம் தேவை என்பதை அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும்-மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதியிலுள்ள குடிசைப்பகுதிகளில் அடிப்படை வசதிகளைச் செய்துதரும் திட்டத்திற்கென்று ரூ.38.46 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணையும் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தையும் எவ்வாறு நன்முறையில் நிறைவேற்றுவது என்பதைப் பற்றி இக்கூட்டத்திலே கலந்தாலோசிக்கலாம்.

**திருமண நிதியுதவி**

சமூக நலத்திட்டங்களுக்கு, அதிலும் குறிப்பாக திருமண நிதி உதவித் திட்டங்களுக்கு இந்த அரசு எவ்வளவு முக்கியத்துவம் வழங்கியிருக்கின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்கள் என்ற ஒரே காரணத்திற்காகப் பெண்களின் திருமணம் இடையூறுகளைச் சந்திக்கலாகாது என்ற உயரிய எண்ணத்தின் காரணமாகவே பல்வேறு திருமண திட்டங்களை நாம் தீட்டியிருக்கின்றோம். மூவலூர் மூதாட்டியார் இராமாமிர்தம் அம்மையார் நினைவாக அமைந்துள்ள திருமண உதவித் திட்டத்திற்கென்றே 1997-98ஆம் ஆண்டுகளுக்கு மட்டும் 46 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

இத்திட்டத்தில் பயனடைவோர் என்னைச் சந்திக்கும்போதெல்லாம் ஒரே ஒரு குறையைத்தான் சொல்கிறார்கள். திருமணம் முடிந்து நெடுநாட்கள் கழிந்த பிறகே இந்நிதியுதவி தங்களுக்குக் கிடைக்கின்றது என்பதுதான் அது. இக்குறை களையப்பட்டு திருமணத்திற்கு முன்பாகவே, முடிந்தால் அரசின் சார்பில் ஓர் அலுவலரோ, மக்கள் பிரதிநிதிகளோ நேரில் சென்று திருமண வாழ்த்து வழங்கி நிதியுதவியையும் வழங்கினால் மிகச் சிறப்பாக இருக்கும்.

இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த நிதி ஒதுக்கீடு ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதை வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். அதற்காகக் கூடுதல் நிதியாதாரம் திரட்டியாவது இத்திட்டத்தை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் நான் பொதுமக்களிடம் நன்கொடை கோரி வெளியிட்ட அறிவிப்பினைப் பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள். இந்தத் திட்டத்தின் சிறப்பினை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உணர்ந்து செயல்பட வேண்டுகிறேன்.

1972ஆம் ஆண்டு இந்த அரசு ஆட்சியில் இருந்தபோது 1500க்கு மேல் மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புத் தார்ச் சாலைகள் அமைக்கும் திட்டத்தைத் தொடங்கியது. அடுத்தகட்ட முயற்சியாக, ஆயிரம் பேருக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கான இணைப்புச் சாலைகளை அமைக்கவும் 1990ஆம் ஆண்டு கழக அரசு முயற்சிகளை மேற்கொண்டது. இவற்றில் மீதமுள்ள 517 கிராமங்களில் 108 கிராமங்களுக்கு இந்த ஆண்டிலும், எஞ்சிய 409 கிராமங்களுக்கு 1998-99ஆம் ஆண்டிலும் இணைப்புச் சாலைகள் போடப்படவுள்ளன.

ஜூலை மாத இறுதிவரையில் இந்நிதியாண்டிற்கான திட்ட ஒதுக்கீட்டில் 17.5 விழுக்காடு செலவிடப்பட்டுள்ளது. கடந்த நிதியாண்டுகளில், முதல் நான்கு மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட திட்ட செலவினத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டின் செலவினம் சற்று அதிகமாகவே

**நியாய விலைக் கடைகளுக்குக் கொண்டுவரப்படும் பண்டங்களில் தற்போது எடைக்குறைவு குறித்து பொதுவாக ஒரு புகார் கூறப்பட்டு வருவதாகவும், அதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனித்து அந்தப் புகார் வராத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டது.**



இருந்தாலும், இச்செலவினம் என் எதிர்பார்ப்பிற்கும் குறைவாகவே உள்ளது. பெரும்பாலான திட்டப்பணிகளை டிசம்பர் மாதத்திற்கு முன்பாகவே நிறைவேற்றி முடிப்பது நமது குறிக்கோளாக இருக்கவேண்டும்.

மக்கள் நலனுக்காகப் பல திட்டங்களைத் தீட்டி அரசு செயல்படுத்துவதுபற்றிய தகவல்கள் பொதுமக்களுக்குச் சென்றடைவதில்லை. தகவல் தெரிந்தால்தான் உள்ளூர் அளவில் அரசின் திட்டங்களை மக்கள் கண்காணிப்பதற்கும் திட்டங்களில் ஊர்மக்கள் ஈடுபாடு காட்டுவதற்கும் திட்டப் பணிகளின் பயன்களை மக்கள் முழுமையாக அடைவதற்கும் ஏதுவாக இருக்கும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாவட்டத்தில் பல்வேறு துறைகள் மூலமாக இந்த நிதியாண்டில் நிறைவேற்றப்பட இருக்கும் திட்டங்கள், ஒதுக்கீடு, பணிகள் முன்னேற்றம் போன்றவற்றை அடிக்கடி பத்திரிகையாளர்கள் கூட்டத்தை நடத்தி விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

**முதல்வர் நிறைவுரை (3.9.97)**

2.9.97, 3.9.97 ஆகிய இரண்டு நாட்களில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் வறட்சி நிலவரம் வறட்சி நிவாரணம், குடிநீர் வழங்கல், சமூக நலத் திட்டங்கள்-குறிப்பாகத் திருமண உதவித் திட்டங்கள், 'சமத்துவபுரம்' அமைத்தல், மலைவாழ் மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருதல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்கென பொருளாதார மேம்பாட்டுக் கழகச் செயல்பாடுகள், உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றுதல், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், தொகுப்பு வீடுகள் திட்டம், பொது விநியோக முறை, நியாயவிலைக் கடைகள், சாலைப் பணிகள், பேருந்து வசதிகள், திட்டப் பணிகளின் முன்னேற்றம் ஆகிய பொருள்கள் பற்றி விரிவாக விவாதம் நடைபெற்றது. குறிப்பாக வறட்சி நிவாரணப் பணிகள் பற்றி விரிவான விவாதம் நடைபெற்றது.

**குடிநீர்ப் பிரச்சினை - உடனடி நடவடிக்கை:**

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக உடனடி நடவடிக்கையாகவும், நீண்டகால நடவடிக்கையாகவும் அரசுக்கு அனுப்பியுள்ள பல முன்மொழிவுகளைப் பற்றிக் கூறினார்கள். வறட்சி நிவாரணப் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுப்பிய கோரிக்கைகள் எல்லாம் உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு ஆணைகள் வழங்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டதோடு குடிநீர்ப் பிரச்சினை எதுவும் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும், இயற்கையை எதிர்த்து நின்று இப்பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டுமென்றும் குடிநீர்ப் பிரச்சினையிலே நிதி நிலவரம் பற்றிக் கவலைப்படாமல், மக்களுக்குக் குடிநீர் இல்லை என்ற நிலைமை வராது பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும், ஆணையினை எதிர்நோக்கி அதற்காகக் காத்துக் கொண்டிராமல் மக்களுக்கு உடனடியாக குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்றும், மக்கள் பிரதிநிதிகளிடம் அடிக்கடி தொடர்புகொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முன் எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது.

**கலப்புத் திருமணத் திட்ட உதவி:**

அடுத்து, தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில் கூறப்பட்ட கலப்புத் திருமணத் திட்டம் பற்றி விரிவாகப் பேசப்பட்டது. மணமகனோ அல்லது மணமகளோ - இருவரில் ஒருவர் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால், அந்தக் கலப்புத் திருமணத்திற்கு இருபதாயிரம் ரூபாய் உதவி நிதியாக வழங்கலாம் என்பது குறித்து விவாதிக்கப்பட்டு, இதில் எந்தவிதமான வருமான உச்சவரம்பும் நிர்ணயிக்கக்கூடாது என்று முடிவெடுக்கப்பட்டது.

**15 நாட்களில் திருமணத் திட்ட உதவி:**

மேலும் மூவலூர் மூதாட்டியார் நினைவு திருமண உதவித் திட்டத்திற்காக வரக்கூடிய மனுக்களைப்

**போக்குவரத்து வசதி பெறாத கிராமப்புறப் பகுதிகளுக்குத் தனியார் சிறிய பேருந்துகளை (VANS) இயக்குவது பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு போக்குவரத்துப்பேருந்துகள் ஓடாமல் இப்படிப்பட்ட இடங்கள் எங்கெங்கே இருக்கின்றன என்பது குறித்து ஒரு வாரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் விவரங்களைத் தொகுத்து வரைபடத்துடன் அரசுக்கு அனுப்பும்படி கூறப்பட்டது.**



பரிசீலிப்பதில் எந்தவிதமான காலதாமதமும் செய்யக்கூடாது என்றும், இந்தப் பணத்தினை வழங்கும்போது இடையிலே யாராவது இடைத் தரகர்கள் ஆதாயம் பெற முனைந்தால் அது பற்றி உடனடியாக அரசாங்கத்திற்குத் தகவல் தெரிவிக்கலாம் என்றும், இத்திட்டத்தினை மேலும் செம்மையாக நடத்திட மாவட்ட அளவில் உள்ள சமூக நலத்துறையும், வருவாய்த் துறையும் கலந்து பேசி முடிவெடுக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. திருமண உதவிக்காகத் தரப்படும் மனுக்கள் 15 நாட்களுக்குள் தீர்வு காணப்பட வேண்டுமென்றும், திருமண உதவித் திட்டத்திற்கு இனி எவ்விதமான எண்ணிக்கை உச்சவரம்பும் இல்லாமல், வரக்கூடிய அத்தனை மனுக்களும் பரிசீலிக்கப்பட்டு உதவி அளிக்கப்பட வேண்டுமென்றும், அதற்காகத்தான் திருமண உதவித் திட்டத்திற்காகத் தனிப்பட்டவர்களிடமிருந்து நன்கொடை கோரப்பட்டுள்ளதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் விளக்கப்பட்டது.

**கிராமப்புற மருத்துவமனைகளுக்கு வராமல் அலட்சியப்படுத்துகிற மருத்துவர்களைப் பற்றிய புகார்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உடனுக்குடன் தலைமைச் செயலகத்துக்குத் தெரிவிக்கவேண்டுமென்றும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அது வாய்ப்பாக இருக்குமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

திருமண உதவி கேட்டு பெறப்பட்ட மனுக்களின் நிலை குறித்த அறிவிப்புப் பலகை ஒன்றைச் சம்பந்தப்பட்ட அலுவலகத்தின்முன் மக்கள் தெரிந்துகொள்ளும்படி வைக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டது.

### சமத்துவபுரம்

அடுத்து, 'சமத்துவபுரம்' பற்றி விரிவாகப் பேசப்பட்டது. சமத்துவபுரங்களில் அமைக்கப்படும் நூறு வீடுகளில் கணிசமான விகிதாசார வீடுகள் ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்றும், மீதமுள்ள வீடுகள் மற்ற சமுதாயத்தினருக்கும் ஒதுக்கப்பட வேண்டுமென்றும், இந்தக் குடியிருப்பினை வேண்டுவோருக்கு எந்தவிதமான வருமான வரம்பும் விதிக்கத் தேவையில்லை என்றும் முடிவெடுக்கப்பட்டது. சமத்துவபுரம் அமைப்பதற்குத் தேவையான நிலம் எடுப்பதிலே காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக நிலத்தை விரும்பித் தர முன்வருபவர்களுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகள் மூலம் நிலத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும், மேலும் அரசு புறம்போக்கு நிலங்கள் இருந்தால் அவைகளையே இதற்காகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் விரைவில் இத்திட்டம் நடைமுறைபடுத்தப்பட வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டது.

### தீண்டாமை ஒழிப்பு நல்லிணக்கக் குழுக்கள்:

தீண்டாமை ஒழிப்பைத் தீவிரப்படுத்துகின்ற அளவிற்கு மதுரை மாநாட்டில் அறிவித்ததற்கிணங்க ஒவ்வொரு கோட்டத்திலும் ஒரு நல்லிணக்கக் குழு உடனடியாக அமைக்கப்பட வேண்டுமென்றும், அக்குழுவில் அந்தந்தப் பகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சமயச் சான்றோர்கள், ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த முக்கியப் பிரதிநிதிகள், இதர சமுதாயத்தைச் சேர்ந்த பெரியவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள்/நகராட்சி மன்றத் தலைவர்கள் ஆகியோர் இடம்பெற வேண்டுமென்றும் கூறப்பட்டது. இளமையிலேயே சமத்துவ உணர்வையும், மனிதநேயத்தையும் உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் பள்ளிகளிலே வாரம் ஒரு முறை மாணவர்கள் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியை எடுத்துக்கொள்ளச் செய்ய வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டது.

### மலைவாழ் பழங்குடியினர் குடியிருப்புகள் வசதி:

பழங்குடியினர் வாழும் மலைப் பகுதிகளில் சாலை வசதிகள் ஏற்படுத்துவது பற்றி தலைமைச் செயலாளர், துறையின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்து பேசி ஆவன செய்ய வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது. மலைவாழ் மக்கள் வாழும் பகுதிகளில் சாலை வசதி அமைக்க எந்தெந்த இடங்களில் வனத்துறையினரின் முன் அனுமதி தேவையில்லையோ அந்த இடங்களில் பணிகளை உடனடியாகத் துவக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. எந்தெந்த இடங்களில் வனத்துறையின் அனுமதி தேவையோ அந்த இடங்களில் மட்டும் மத்திய அரசின் அனுமதியைக் கோரலாம் என்றும், மத்திய அரசுக்கு அனுப்புவதற்கு முன்பாக மத்திய சட்டத்தின்கீழ் உள்ள விதிகளின்படி குறிப்பிட்ட படிவத்தில் மாவட்ட வன அதிகாரிகளுடைய பரிந்துரைகளை அனுப்ப வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் இதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றும், அரசு மட்டத்தில் வனத்துறை, பொதுப்பணித் துறை, எரிசக்தித் துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை செயலாளர்கள் ஒரு ஒருங்கிணைப்புக் கூட்டத்தினை நடத்தி இந்தப் பணிகளை விரைவுபடுத்த எப்படி மைய அரசின் அனுமதியைப் பெற வேண்டுமென்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டது.

### வீட்டுமனைப் பட்டா வழங்கல் விரைவுபடுத்தப்படும்

வீட்டு மனைப்பட்டா தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் வழங்குவதில் போதிய முன்னேற்றம் இல்லாததற்கு என்ன காரணம் என்பதைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில் விளக்கம் கேட்கப்பட்டது. அந்தப் பொறுப்புக்கு வரும் துணை ஆட்சியர்கள் அந்தப் பொறுப்பிலே நீடிக்காமல் விடுமுறையில் சென்று விடுவதால் இப்பணி தாமதமாவதாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருத்து தெரிவித்தனர்.

எனவே - துணை ஆட்சியர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்களாகப் பதவி உயர்வு பெறுவதற்கு முன்பு



குறைந்தபட்சம் ஓராண்டுக் காலமாவது ஆதிதிராவிடர் நலத்துறை அல்லது மாவட்டப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலராக அவசியம் பணியாற்ற வேண்டுமென்று பணி விதிகளைத் திருத்துவது பற்றி தலைமைச் செயலாளர் ஆராய வேண்டுமென்று கூறப்பட்டது.

### ஆதிதிராவிட மாணவர்களுக்கு

சென்னையில் உள்ள ஆதிதிராவிட கல்லூரி மாணவர்களுக்கான விடுதிகளில் தனியார்கள் வந்து தங்குவதால் அங்கே தங்கியிருந்து பயிலும் மாணவர்களுக்கு ஏற்படும் இடையூறுகளை மனதிலே கொண்டு அந்த விடுதிகளில் உணவு வழங்குதல் பரீட்சார்த்த முறையிலே ஒப்பந்த அடிப்படையிலே விடலாமா என்பது பற்றி துறை பரிசீலிக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.

### பிற்படுத்தப்பட்டோர்க்கு

ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் நடத்தப்படும் விடுதிகளில் தரப்படும் உணவுக் கட்டண அளவிற்குப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறை மூலம் நடத்தப்படும் விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கான உணவுக் கட்டணத்தையும் உயர்த்துவது என்று முடிவெடுக்கப்பட்டது. மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுக் கட்டணத்திலே பேதம் இருக்கக் கூடாது என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டது.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பாக நடத்தப்படும் ஓட்டுநர் பயிற்சியில், பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை 200லிருந்து 2000ஆக உயர்த்தப்படலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.

இதுவரை ஒரு பட்டதாரி கூட இல்லாத குடும்பத்தைச் சேர்ந்த பல்தொழில் பயிற்சி பட்டயப் படிப்பு பயிலுகின்ற பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த ஆயிரம் மாணவர்களுக்கு 1997-98 முதல் இலவசக் கல்வி வழங்கப்படும் என்று ஏற்கெனவே இருந்த எண்ணிக்கையை இரண்டாயிரம் மாணவர்களாக உயர்த்துவதென்று முடிவெடுக்கப்பட்டது.

### அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

அடுத்து அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் விரிவாக எடுத்துக் கூறினார்கள். தொடங்கப்பட்ட இடங்களில் எல்லாம் அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகள் முறையாகத் தொடர்ந்து நடைபெற்று வருவதாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்தார்கள். திட்டங்களை விழா எடுத்துத் தொடங்கி வைத்தால் மாத்திரம் போதாது என்றும், பணிகள் விரைந்து முடிக்கப்பட வேண்டுமென்றும், ஒவ்வொரு திட்ட துவக்க விழாவிற்கும் முதலமைச்சரையே எதிர்பார்த்துக்கொண்டு காத்திராமல், மற்ற அமைச்சர்களைக் கொண்டு பணிகளைத் தொடங்கி விரைவில் முடிக்க வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கருத்து தெரிவிக்கப்பட்டது.

திட்டங்களுக்கான பெயர்ப் பலகைகள் வைக்கும்போது அதன் கீழ் அண்ணா மறுமலர்ச்சித் திட்டக் கிராமம் என்று எழுதி வைப்பதோடு, பணிகள் எந்தத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படுகிறதோ - உதாரணமாக இந்திரா காந்தி வீட்டு வசதித் திட்டம், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற அந்தப் பெயர்களையும் அவற்றுக்குரிய இடங்களில் எழுதப்பட வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கூறப்பட்டது.

### நமக்கு நாமே திட்டம்

நமக்கு நாமே திட்டம் குறித்து அடுத்து விவாதிக்கப்பட்டது. இத்திட்டத்திற்குப் பெரும் வரவேற்பு மக்கள் மத்தியிலே இருப்பதாகவும் உதாரணத்திற்கு 47 இலட்ச ரூபாய் மதிப்பீடுள்ள ஒரு திட்டத்திற்கு அரசிடமிருந்து எந்தவித நிதி உதவியும் பெறாமல், முழுச் செலவையும் ஒரு ஊர் மக்களே ஏற்றுக்கொண்டு செய்து முடித்திருப்பதாகவும் ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் கூறினார். இதுவரை ஏன் இப்படிப்பட்ட பணிகள் செய்யப்படவில்லை என்று கேட்டதற்கு, தூண்டுதற்கு யாரும் இல்லாததால் செய்யப்படவில்லை என்றும், தற்போது பொதுமக்கள் ஆர்வமாக முன்வந்து இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த உதவுகிறார்கள் என்றும் கூறப்பட்டது. உதவுவதற்கு முன்வந்த போதும் ஒரு சில கிராமங்களில் நிதி உதவியளிக்கப் பொதுமக்கள் வசதியற்ற நிலையிலே இருப்பதாகவும், அவர்கள் உழைப்பை இத்திட்டத்திற்கு அளிக்க முன்வருவதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்ததின் பேரில், நமக்கு நாமே திட்டங்களுக்கு 25 சதவிகித அளவிற்குக் குறையாத நிதியைப் பணமாகவோ அல்லது உழைப்புத் தானமாகவோ பொது மக்களிடமிருந்து ஏற்றுக் கொள்ளலாம், என்று முடிவெடுக்கப்பட்டது. இத்திட்டத்திற்குத் தாமாக முன்வந்து நிதி உதவி அளிக்கும் தனிப்பட்ட பிரமுகருக்கோ அல்லது ஸ்தாபனங்களுக்கோ மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தகுந்த விருதுகளை அளிப்பதன் மூலம் மற்றவர்களும் பின்பற்ற வழிவகுக்குமென்ற கருத்தும் கூறப்பட்டு ஏற்கப்பட்டுள்ளது.

நமக்கு நாமே திட்டத்தின் மூலம் ஏரிகளில் தூர்வாரப்படும்போது, அங்கேயுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டுமென்றும், ஏரிகளில் தூர் வாறுவது என்பது மழைநீரைத் தேக்கி தேவைப்படும் நேரங்களில் பயன்படுத்திக் கொள்வதற்கு மாத்திரமல்லாமல், வறட்சிக் காலங்களில் ஏழையெளியவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கவும் உதவக்கூடிய வகையிலே அந்தப் பணிகள் நிறைவேற்றப்படவேண்டுமென்ற கருத்து வலியுறுத்தப்பட்டது.

நமக்கு நாமே திட்டத்தின் மூலம் பள்ளிக் கட்டிடங்களோ அல்லது வேறு கட்டிடங்களோ கட்டும்போது அந்தப் பணிகளை அவ்வூர் மக்களே செய்வதா அல்லது பொதுப்பணித் துறை மூலம் செய்வதா என்பது விவாதிக்கப்பட்டு நமக்கு நாமே திட்டங்களை அந்த ஊர் மக்களே செய்து கொள்ளலாம் என்றும், அந்தக் கட்டிடங்களின் உறுதித் தன்மைக்கு மட்டும் பொதுப்பணித்துறை மூலம் சான்றிதழ் பெற்றுக் கொள்ளலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

### பாராளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாடுத் திட்டம்

பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் பற்றி விரிவாகப் பேசப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி திட்டத்திற்காக மத்திய அரசு 57 கோடி ரூபாய் தருவதாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தொடர்பு கொண்டு திட்டங்களைப் பெற்று அவைகளைச் செயற்படுத்த போதுமான கவனம் செலுத்த வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டார்கள்.

இத்திட்டம் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருத்துக் கூறும்போது, சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் பணிகளைக் கடந்த கால ஆட்சியிலே கொடுத்ததைப் போல, தாங்கள் விரும்பும் ஒப்பந்தக்காரர்களிடம் தரவேண்டுமென்று வலியுறுத்துவதாகவும், அதற்கு ஒப்புக்கொண்டால் தான் திட்டங்களையும், வேலைகளையும் குறிப்பிட்டுக் கொடுப்பதாகவும், அதனால் தான் பணிகளை நிறைவேற்றக் கால தாமதமாவதாகவும் தெரிவித்தார்கள். இதுபற்றி விவாதிக்கப்பட்டு இறுதியாக இந்தப் பணிகள் டெண்டர் மூலமாகத்தான் விடப்பட வேண்டுமென்றும், அதில் எந்த மாறுதலும் செய்யப்படக் கூடாதென்றும், அதற்கு மீறி வேறு யாராவது குறிப்பிட்டு நியமன முறையிலே தான் இந்தப் பணிகளை ஒப்படைக்க வேண்டுமென்று வற்புறுத்தினால் அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரசுக்குத் தெரிவிக்கலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

எந்தவகையான பணிகள் இந்தத் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கலாம் என்று முடிவெடுக்கும் அதிகாரம் எப்படி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிறதோ, அதைப் போலவே சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் தொகுதிக்கு என்னென்ன பணிகள் தேவை என்பதை முடிவு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் அறிவிக்கலாம் என்றும், அதிலே எந்த நிபந்தனையும் விதிக்கத் தேவையில்லை என்றும் முடிவெடுக்கப்பட்டது. இதன்மூலம் இதுவரையில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் ஒதுக்கீடான 25 இலட்சத்தில் கண்டிப்பாக 13 இலட்ச ரூபாயை குறிப்பிட்ட பணிகளுக்காகச்செலவழித்தே தீரவேண்டுமென்ற நிபந்தனை மாற்றப்பட்டு, அவரவர்கள் விரும்பும் பணிகளுக்காகச் செலவழித்துக் கொள்ளலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வல்லம் கிராமத்தில் நடைபெற்ற 'அண்ணா மறுமலர்ச்சித் திட்ட' தொடக்க விழாவில், மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் 'தமிழரசு' சந்தாதாரர்களுக்குத் தமிழரசு பிரதியை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வெ.இறையன்பு இ.ஆ.ப., ஆலந்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சி.சண்முகம், செங்கல்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.தமிழ்மணி ஆகியோர் உள்ளனர்.
(19-9-97)





# வாகை சூடும் நாடு

– உடுமலை நாராயணகவி



எங்கள் தந்தை தாயின் நாடு - இந்தியா
   எனும் இந்நாடே - (எங்கள்)

சங்கம் தரும் தரளம் பவளம்
   தங்கம் விளை நாடு
மங்காத நல்வாழ்வில் நாளும்
   வாகை சூடும் நாடு! (எங்கள்)

போர் வேந்தர்கள் போற்றும் புனித
   ஏர் வேந்தர்கள் நாடு
கார்வேந்தன் ஐந்தருவும் போல
   கருணையாளர் நாடு! (எங்கள்)

ஆடு புலி மானுமே நீராடும்
   துறை நாடு
கேடில் விழுச் செல்வம் கல்வி
   ஏற்றம் வாய்ந்த நாடு! (எங்கள்)

உடுமலை நாராயண கவி அவர்கள் எழுதி, இதுவரை வெளியிடப்படாத பாடல் இது; உதவியவர் அவர் மகன் திரு.பி.என். இராமகிருஷ்ணன்



# சுதந்திரப் போர்: சில தீரச் செயல்கள்!

-கவியோகி சுத்தானந்த பாரதியார்

டில்லி செங்கோட்டையில் (1947) விடுதலைக் கொடி ஏறுமுன்பே 1790-ல் சிவகங்கையில் விடுதலைக்கொடி வானளாவப் பறந்தது. முத்து வடுகநாதன் வீரப்போரில் தியாகப் பலியானார். அவரது பசுந்தலை முன்-அரசி வேலுநாச்சியார், அவள் தந்தை கோலாகலத் தேவர், தம்பி வீரத்தேவன், படைத்தலைவர் பெரிய சின்னமருதர் - ஆகியோர் விரதங் கொண்டு விடுதலைப் போர் நடத்தினர். 1858-ல் இராணி இலட்சுமிபாய் போர்க்களத்தில் இறந்தாள். இங்கே வேலுநாச்சியார் ஆங்கிலேயரை வென்று புரந்தாள். அவள் தம்பி வீரத்தேவன் துறவி வேடத்தில் வடக்கே சென்று பிரம்மாவர்த்தத்தில் 1857-ல் நானா சாகிப்பைத் தூண்டினான்.



□□□

பாஞ்சாலங்குறிச்சியில் எட்டு மேஜர்களை வீழ்த்திக் கட்டபொம்முவும் தூக்குமேடையேறினான். தூக்குமேடை நாட்டை ஊக்கும் மேடையானது.

□□□

ஊமையன் ஒரே வாரத்தில் இடிந்த கோட்டையை வானளாவ எழுப்பிப் பாதர் வெள்ளை, நீலமேகம், சுப்பிரமணியபிள்ளை போன்ற சூரரைக் கூட்டிப் போர் முடுக்கினான். முதற்போரில் ஆங்கிலேயர் கை ஓங்கியது; ஊமைத்துரை சிவகங்கைக்கு ஓடி வந்து, மருது இருவருடன் சேர்ந்து, திருமயத்தில் பாசறை அமைத்துக் காளையார் கோவில் காடுகளில் படையணி மன்றத்துப் பாய்ந்து பாய்ந்து போர் புரிந்தான். மருது சகோதரர் கடும் போர் புரிந்து தூக்கு மேடையில் இறவாப் புகழ் பெற்றனர் (1812).

நாற்பதாண்டுகள் ஓடி மறைந்தன. வடக்கே 1857-ல் தமிழ்நாட்டுப் பாபாஜி (வீரத்தேவன்) தாந்தியாதோபே, ராணாசாகேபு, இலக்குமிபாய், கண்வார்சிங், அபிமுல்லாகான், அகம்மது மௌலி முதலியோரைத் தூண்டிப் போர்ப் புயல் வீசச் செய்தான். டில்லி பிடிபட்டது. ஆனால், துரோகிகள் காட்டிக்கொடுத்தனர். நீல்களும், ஹால்லக்குகளும் நமது வீரரைச் சுட்டுக் குவித்தனர்; ஆயிரக்கணக்கான மக்களைத் தூக்கு மேடையில் ஏற்றி வைத்தனர். கிராமம் கிராமமாகத் தீ மூட்டி மக்களைத் தீயில் போட்டு மடித்தனர்.

□□□

இக்கொடிய வெற்றியும், குமுறிய போரும் விக்டோரியா சர்க்காருக்குப் புதிய பாடம் கற்பித்தன. துப்பாக்கியாலும், சட்டத்தாலும் இந்த நாட்டு உரிமையுணர்வை அடக்க முடியாது. நாட்டினரை அடக்க நாட்டினரைக் கொண்டே ஓர் இயக்கம் தொடர்வோம் என்ற சூழ்ச்சியால் ஹியூம், வெட்டர் பார்ன் ஆகிய இருவரையும் ஊக்கிக் காங்கிரஸ் சங்கத்தை நாட்டினர். அதில் நீண்ட காலம் (1885-1912) பம்பாயில் கோகுல்தாஸ் வடமொழிக் கல்லூரியில் டபிள்யூ.சி.பானர்ஜி தலைமையில் நடந்தது. அதற்குத் தமிழ்நாட்டிலிருந்து மதுரை மணி ஐயர், சுதேசமித்திரன், ஜி.சுப்ரமணி ஐயர், கேசவபிள்ளை ஆகியோர் சென்று பேசினர்.

□□□

1907-ல் சூரத்தில் கோகலேயின் மிதவாதக்கூட்டம் நடந்தது. அதைத் திலகர் சிதம்பரப்பிள்ளை-பாரதியார் முதலிய தீவிரச் சுதேச வீரர்கள் செருப்பெறிந்து சிதறடித்தனர். அரவிந்தர் தலைமையில் முழு விடுதலை சுதேச விரதத்துடன் நிறைவேறியது. மறு ஆண்டு அட்வகேட்-ஜெனரல் கிருஷ்ணசாமி ஐயர் செல்வாக்கால் சென்னையில் மிதவாதிகளின் கன்வென்ஷன் காங்கிரஸ் நடந்தது. அதை "இந்தியா' இதழாசிரியர் பாரதியார் ஆட்டுமந்தைக்கூட்டம் என்று கேலி செய்தது திலகர்-அரவிந்தர் இயக்கத்திற்கே ஆக்கமளித்தார். சென்னையில் அடக்கப்பட்ட 'இந்தியா' புதுவையில் மிடுக்கு நடைபோட்டது. அதையும் 1910-ஆம் ஆண்டு அடக்கியது ஆங்கில ஆட்சி.



□□□

உடனே அரவிந்தரின் "கர்மயோகி'யினைப் பாரதியார் தமிழில் நடத்தினார். தமிழகம் அரவிந்த மணம் கமழ்ந்தது. ஆள் தூக்கிச் சட்டம் இதோ துரத்துகிறது. பாரதியார் முயற்சியால் அரவிந்தர் கல்கத்தாவில் கப்பலேறி 4.4.1910-ல் புதுச்சேரி புகுந்து முதலில் சங்கரஞ் செட்டியார் வீட்டு மாடியில் தவம் தொடங்கினார். பிறகு வெள்ளைக்காரத் தெரு மாளிகையில் குடியேறி நான்கு மாணவருடன் வசித்தார். 1910 முதல் 1950 வரையில், நாற்பதாண்டுகள் அரவிந்தர் தமிழகத்திற்கே உரியவராகி, இங்கேயே உலகம் வியந்து போற்ற ஆசிரமமும், ஆரோவில்லும் அமைத்து அன்னையிடம் விடுத்து அமரரானார். அரவிந்தர் அரசியலை நீங்கி ஆன்ம நேய ஒருமைத் திறனால், இந்தியாவுக்கு உலகப் புகழ் தேடினார். அவர் கல்கத்தாவில் பிறந்தார். இலண்டனில் கற்றார். பரோடாவில் கலை வளர்த்தார். கல்கத்தாவில் நான்கு ஆண்டுகள் எழுத்தாலும், பேச்சாலும் நாட்டை வீறுபடுத்தினார். இறுதியில் காந்தி கண்ட சாத்வீக எதிர்ப்பும், ஒத்துழையாமையுமே வழி எனச் சொல்லி உள்ளடங்கி யோகச் சக்தியை வளர்த்து, மனிதன் தெய்வ மாறுதல் அடையும் ஆத்ம சாதனத்தைத் தந்து சென்றார். பாரதியாரும், அடியேனும், அரவிந்தர் திருவடி பற்றிப் புதுவாழ் வெய்தினோம். எனது 'பாரத சக்தி' அரவிந்த சக்தி வரலாறே, அதை அவர் ஆங்கில மொழி பெயர்ப்பில் படித்து ஆசி கூறினார்.

□□□

1910-ல் அரவிந்தர் வந்த சில மாதங்களுக்குப் பிறகு வீர விளக்கு 'வ.வே.சு.ஐயர் இடர்க் கடல்களை நீந்திப் பாரிசில் பார்சி கனவான் விக்ரமசிங் ஆகி, கெய்ரோவில் அப்துல்லா மௌல் வியாகிப், பம்பாயில் குலாம் காதராகி, நாசிக் சிறையில் சாவர்காரைக் கண்டு, அவர் வந்தே மாதர ஆர்ப்புடன் அந்தமான் செல்வதைப் பார்த்துவிட்டு, நாகபுரி காங்கிரஸ் கண்டு, புதுச்சேரிக்குப் பக்கிரி வேடந்தாங்கி, அல்லாகு அக்பர், என்று வந்தார். மண்டம் ஆசாரியார் வீட்டில் ஒரு வாரம் தங்கிப் பிறகு கோயில் தெருவில் குடி புகுந்தார். மனைவி வரகநேரியிலிருந்து வந்து சேர்ந்தாள். புதுச்சேரியில் ஐயர்பட்ட இடர்கள் பிரதாபசிங்கன், கரிபால்டி ஆகிய வீரர் பட்ட இடர்களைப் போலும்.

□□□

ஐயர் கிருஷ்ணபிள்ளை தோட்டத்தில் வாஞ்சி மாடசாமி, நீலகண்டன், சங்கர கிருஷ்ணா முதலியோருக்குத் துப்பாக்கிப் பயிற்சி தந்தார். அடியேனுக்கு மறவர் ஹவால் போதிய வாட் பயிற்சியும், சுடு பயிற்சியும் கிடைத்தது. ஆதலால் என்னை ஐயர் மிகவும் விரும்பி இன்னொரு செயலுக்காகப் பயிற்றினார்.

□□□



மணியாச்சியில் கலெக்டர் ஆஷை வாஞ்சி சாம்பலாக்கினான். பிறகு ஐயருக்குப் பல இடர்கள் தொடர்ந்தன. என் உடல் பொருள் ஆவியெல்லாம் ஐயருக்காகவும், அரவிந்தருக்காகவும் அளித்தேன். ஐயரைத் தூக்கிச் செல்லவும், சூனியம் வைத்துப் பித்தாக்கவும், மயக்கவும், மாயம் செய்யவும் ஒற்றர் செய்த வஞ்சனைகள் எண்ணிலா. நான் உச்சிக்குடுமி தாசரி வேடம் பூண்டு அவருக்கு உதவினேன். வீரன் மாடசாமியும், வேலைக்காரி பார்வதியும் ஐயருக்குச் செய்த உதவிகள் பல.

□□□

ஒருநாள் ஒற்றர் ஐயர் வீட்டுக் கிணற்றில் வெடி மருந்துகள் அடங்கிய ஜாடியை வைத்தனர். பார்வதி கண்டுபிடித்தாள். ஐயர் ஜாடியைப் புதுவை கவர்னரிடம் காட்டி

.... நேரம் கழிந்துகொண்டே சென்றது. இறுதியில், ஏதோ ஒரு மூலையிலிருந்து பதில் வந்தது; மிகவும் ஏக்கமான குரலோடு, தழுதழுத்த விம்மல் ஒலியுடன், உருக்கமான பதில் வந்தது. உருவம் தெரியவில்லை. ஆனால், குரல் மட்டுமே கேட்டது:

*"மைந்தா;*
*இங்கேஎன் பழங்கதைகள்*
*இயம்புவதால் என்னே?*
*என்நிலையோ நிர்வாகம்;*
*எச்சபையார் ஏற்பார்*
*பொங்கார*
*முடிசெங்கோல்*
*பூண்பதென்றோ போச்சு;*
*பொலிவுடலும்*
*பொன்உடையும்*
*புரிஉணவும் போச்சு;*
*கங்காளி;*
*துச்சிலுள்ளேன்;*
*கம்பலையே ஆச்சு;*
*கடும்பசிநோய்*
*முடுக்குகின்ற*
*கர்மம்என தாச்சு!"*



தன் அவல நிலையை, உருக்கும் வகையில் இவ்வாறு எடுத்துரைக்கிறாள், இந்தியத் தாய்.

உலக நாடுகள் பலவும் உரிமைப் பொலிவோடு வீற்றிருக்கும் பேரவையில், அடிமைநாடு, அப்போது எப்படி இடம் பெற முடியும்?

"தன்மானம் இழந்து, ஆங்கில நாட்டு ஆதிக்கத்தில் வாடித் தவித்த நிலைமாறி, விடுதலை பெறும் நன்னாள் எப்போது வருமோ?" என்ற ஏக்கம், இன்றைய இந்தியத் தாயின் பதிலில் காண்கிறோம்.

மேலும் இந்தியத் தாய், தன் நிலையை விளக்குகிறாள்:-

*வடிவினிலே பெரியள்யான்;*
*வயதினிலே பெரியள்;*
*வளத்தினிலும் வன்மையிலும்,*
*மக்களிலும் பெரியள்;*
*கடியரணில், மலையரணில்,*
*கடலரணில் பெரியள்;*
*காலினிலே தளைவந்த*
*காரணந்தா னென்னே?*
*படியினிலே இல்லாத*
*பாழான சாதி*
*பகுப்புடனே, தீண்டாமை,*
*பாவையர்தம் அடிமை*
*கொடியஇவை குடிகொண்டு*
*கொடிகொடியாய்ப் படர்ந்தே*
*கொல்லவுடன் பிறப்பன்பைக்*
*குலைத்ததென்றன் வாழ்வே.*

தன் பழம் பெருமைக்குக் கேடு விளைவித்த தீய பண்புகளை, அடியோடு நீக்கும் தொண்டில் ஈடுபடுமாறு, தம் மக்களை இந்தியத்தாய் வேண்டுகிறாள்:

*"என்னாட்சி பரிணமிக்க*
*எழுங்கிளர்ச்சி பலவே,*
*ஏரார்சு தேசியத்தில்*
*இருப்பதென்றன் ஆட்சி;*
*தன்னாட்சி அந்நியத்தைத்*
*தாங்குவதி லில்லை;*
*தலையின்றி அந்நியரைத்*
*தாக்கலிலு மில்லை;*
*மன்னாட்சி அறநெறியில்*
*மலர்ந்திடவே வேண்டும்;*
*மாக்கலைகள் வாழ்விடையே*
*வளர்ந்திடவும் வேண்டும்;*
*நன்னாட்டுத் தொழிலரசு*
*நலம்பெறவே வேண்டும்;*
*நான்சபையில் வீற்றிருக்கும்*
*நாள்அந்த நாளே".*

*(மன் ஆட்சி: நிலைபெற்ற ஆட்சி*
*கங்காளி : எலும்புருவானவள்)*

"தாயின் காட்சி" என்ற தலைப்பில், "தமிழ்த் தென்றல்" திரு.வி.க. அவர்கள் 1931ஆம் ஆண்டில் இயற்றிய கவிதைக் கனவின் ஒரு பகுதியே, மேலே காண்பது.

அடிமை இந்தியாவின் அவல நிலைமையை- உணர்ச்சிக் கொந்தளிப்பை - கலை நயத்துடன் இக்கவிதை, தமிழ் மக்களுக்கு எடுத்துக்காட்டியது. அன்று மட்டும் அல்ல; இன்றும் கூடத்தான். இந்தியா விடுதலை பெற்ற பின்னும், இத்தகைய கவிதைகள் சாகாவரம் பெற்றுவிட்டன.

உணர்ச்சித் துடிப்புகளுக்கு அழியாக் கலை உருவம் தரும் ஆற்றல், உண்மைக் கவிஞர்களின் தனிச்சிறப்பு. அத்தகைய கவிஞர்கள் வரிசையில் திரு.வி.க. சிறப்பிடம் பெற்றுள்ளார்.

ஆம். அவர் கண்ட கனவு - கவிதைக் கனவு பலித்தது. அவர் போன்ற எண்ணற்ற சான்றோர்களின் சீரிய பணி வீண் போகவில்லை. அடிமை இந்தியாவின் விலங்கு முறிந்தது. நாம் விடுதலை பெற்றோம். இந்தியத் தாய், உலகப் பேரவையில் தனிச் சிறப்புடன் வீற்றிருக்கும் காட்சியை, திரு.வி.க. அவர்கள், தமது வாழ்நாளிலேயே காணமுடிந்தது. ஆம்! கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி., பாரதியார் ஆகியோர்க்கும் கிடைக்காத வாய்ப்பு திரு.வி.க.வுக்குக் கிடைத்தது.



# இந்திய ரத்தம்

தஞ்சை வே. மன்னர் மன்னன்



எனக்கொரு ஆசை...
சின்னஞ்சிறு ஆசைதான்... !

ஏசுநாதரின் சிலையை,
இப்ராகிம்ராவுத்தர் அமைக்கட்டும் !
பள்ளிவாசலுக்குப்
பரமேஸ்வரன் அடிக்கல் நாட்டட்டும்...

அந்தோணி திருமணத்திற்கு,
அல்லாபிச்சை தலைமை ஏற்கட்டும்... !
நவாஸ்கான் குழந்தைக்கு,
நாகநாதய்யர் பெயர் சூட்டட்டும்... !
பள்ளிவாசலில்,
பகவத்கீதை படிக்கப்படட்டும்... !
மாதாகோவிலில்,
மார்க்கத்தின் தொழுகை நடக்கட்டும்... !
பரந்தாமன் ஆலயத்தில்,
பைபிளின் தத்துவம் பரிமளிக்கட்டும்... !

மதங்கள் எதுவானாலும்,
மனங்கள் ஒன்றாகட்டும்... !
சிந்திய ரத்தம் எதுவானாலும்
இந்திய ரத்தம் என்றாகட்டும்... !

ஆசை நிறைவேறினால் - எனது இந்தச்
சின்னஞ்சிறு ஆசை நிறைவேறினால்,
இந்திய மக்கள்
இணைபட வாழமுடியும்... !
இல்லையேல்... ?

வினாக்குறி -
வியப்புக்குறியாக மட்டுமல்ல;
விபரீதக் குறியாக மாறிவிடும் ! !

அதுமட்டுமல்ல; "பெண்ணின் பெருமை" வளரத் தொண்டாற்றிய திரு.வி.க. அவர்கள் மனம் மகிழ, உலக நாடுகள் பேரவையின் தலைவியாக ஓர் இந்தியப் பெண்மணி (பிரதமர் சகோதரி திருமதி விசயலட்சுமி பண்டிட்) வீற்றிருக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

மேலும், நம் நாட்டுப் பேரறிஞர்கள் பலர் (பிரதமர் நேரு தொடங்கி, திருவாளர்கள் ஆர்க்காடு இலட்சுமணசாமி முதலியார், இராமசாமி முதலியார், கோவை ஆர்.கே. சண்முகம் செட்டியார், ஜி. பார்த்தசாரதி, பெனகல் நரசிங்கராவ்.மால்கம் ஆதிசேஷய்யா, இராஜம்மாள் தேவதாஸ் முதலியோர்) உலக நாடுகள் சபையின் பல்வேறு நிறுவனங்களில் சிறப்பாகப் பணியாற்றி உலகப் புகழ் பெற்றுள்ளனர். அண்மையில், பேரறிஞர் அண்ணாவும், கலைஞரும் நடத்திய "உலகத் தமிழ் மாநாடு" வாயிலாக, "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தமிழ் முழக்கம், உலகப் பேரறிஞர்களிடையே ஆக்கம் பெற்று வருகிறது. திருவள்ளுவரின் குறள் உலகெங்கும் பரவிவருகிறது.

1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15ஆம் நாள், இந்தியா விடுதலை அடைந்தபோது, திரு.வி.க. அவர்கள் பெருமகிழ்ச்சி அடைந்தார். ஆயினும் அம் மகிழ்ச்சியின் ஊடே மனக்குறை ஒன்று நிழலாடியது. திரு. ம.பொ.சி. அவர்களை ஆசிரியராகக் கொண்டு, 15.8.1947ல் வெளி வந்த 'தமிழ் முரசு' இதழில், மிக நுட்பமாக இதைக் கோடிட்டுக் காட்டி, அவர் பின்வருமாறு அப்போது எழுதினார்:

"பிரிட்டிஷ் ஆட்சி நம்மை விட்டு அகன்றது உண்மை. ஆனால், சாம்ராஜ்யம் இன்னும் நம்மை விட்டு அகலவில்லை.

முன்னொருகால் வடநாடு சிதறுண்டு வருந்திய போது, அதையும் முழுநாட்டையும் பண்படுத்தும் முயற்சி, தென்னாட்டிலிருந்தே எழுந்தது, அம்முயற்சி மீண்டும் காலத்துக்கேற்ற முறையில் எழுவதாக!"

விடுதலை பெற்ற இந்தியாவில் விழா கொண்டாடும் இந்நாளில், தமிழ்ச் சான்றோர் திரு.வி.க. அவர்கள் நினைவூட்டிய கருத்துகள், சிந்தனைக்குரியன.

வழியில் முள் இருந்தால் தைக்கும்; செருப்பில் ஓட்டை இருந்தால் சுடும்; அதேபோல் நம்மிடம் பல ஜாதிகள் இருந்தால் பலவகைத் துன்பங்களுக்கும் ஆளாகத்தான் நேரிடும்.

மனத்தில் மாசு, மதவெறி, சாதி, ஆணவம், சுயநலம் இவற்றை மக்கள் விட்டொழிக்க வேண்டும்; அப்போதுதான் நம் நாடு முன்னேறும்!

சாதிமுறை, சடங்கு என்பனவெல்லாம் தந்திரமாக அமைக்கப்பட்ட பொருளாதாரச் சுரண்டல் திட்டமேயாகும்; ஆகவே, சாதி முறையை ஒழிப்பதும் சமதர்மத் திட்டம்தான்!



இந்த நாட்டிலே சாதிதான் மக்களுக்குள் பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம்; பேதமற்ற சமுதாயத்தை - சமத்துவத்தை சமதர்மத்தை நாம் நாடவேண்டுமானால் முதலில் சாதி தொலைந்தாக வேண்டும்!

- அறிஞர் அண்ணா

வரும்போது ஒற்றர் கிணற்றை இறைத்துப் பார்த்து ஏமாந்தனர். குண்டர் கள்ளுண்டு மற்றொரு தடவை இரவில் ஐயரைத் தூக்கிச் செல்லவே கூட்டமாக வந்தனர். ஐயர் தமது ஆயுதச் சாமான்களை மாடியேறி இன்னொரு வீட்டில் ஒளிய வைத்து, மனைவி மக்களையும் அங்கே அனுப்பித் துப்பாக்கி எடுத்து மேலேயிருந்து இரண்டு வேட்டுப் போட்டார். காலிகள் ஓடி மறைந்தனர்.

□□□

முதல் உலகப் போர் மூண்ட போது எம்டன் கப்பல் சென்னையில் குண்டு போட்டுப் புதுவைக்கு வந்தது. அதில் சண்பகஇராமன்பிள்ளை இருந்தார். மாடசாமி படகில், இரவு பன்னிரண்டு மணிக்கு ஐயர் எனக்குக் "கடிதம்' தந்து அனுப்பினார். சண்பக இராமர் பதில் தந்தார். "புரட்சியைப் பலமாக நடத்தினால் கைசரின் உதவி வரும்', என்றார்.

□□□

இதன் பிறகு ஐயர், அரவிந்தர், பாரதி ஆகிய அனைவரையும் அல்ஜீரியாவுக்கு நாடு கடத்த முயன்றனர். அரவிந்தர் நடக்காது என்றார். நடக்கவில்லை.

□□□

1917-ல் காந்தியடிகள் வந்தார். அவரது உபதேசத்தால் துப்பாக்கி வெறி ஒழிந்தது. ஐயருடன் எல்லோரும் காந்தியர் ஆனோம். போர் முடிந்ததும் அரசியல் கைதிகள் விடுதலை பெற்றனர். பாரதியார் பாய்ந்து வந்தார். சென்னைக்கு ஐயரும் வந்தார். பிறகு காந்தி வழி பற்றித் தொண்டு பரவினோம்.

அரவிந்த சக்தியால் புதுச்சேரி ஆன்ம நேய நிலையமானது. உலகமெல்லாம் அங்கே கூடுகிறது. "வள்ளலார்' கண்ட கனவு வண்ணப் புதுவையில் ஆரோவில்லில் நிறைவேறுகிறது. இந்திய விடுதலைப் போரின் தியாகப் பாசறை புதுச்சேரி அது புதுயுகச் சேரியாகி உலகச் சங்க நிலையமாக நிலவுகிறது.

□□□

காந்தியத்திற்கும் கனிந்துதவியது தமிழகமே. வடக்கே தண்டியாத்திரை போல இங்கே வேதாரண்ய உப்புச் சத்தியாகிரகம் நடந்தது. அங்கே சபர்மதி ஆசிரமம், இங்கே நான்கு காந்தி ஆசிரமங்கள் எழுந்து விளங்குகின்றன.

இந்தியச் சுதந்திரப் போரில் 1790 முதல் இன்று வரையில் தமிழர் ஈடுபட்டுப் பாடுபட்டனர்.

இந்தப் போர்களுக்கிடையே பெரியார், அண்ணா நடத்திய தன்மானப் போர் வரிசைகளை நாம் மறக்க முடியாது.

*தமிழரசு வந்ததே;*
*தன்மானம் வென்றதே;*
*அமுதமான தமிழ்மொழியும்*
*அரியணை வகித்ததே!*

□□□



இந்திய விடுதலை நாள்:

# திரு.வி.க. கனவு!

ச.வேங்கடசாமி

*"ஆடுகின்ற மயிற்குழுக்காள்!*
*ஆடல் நுட்பம்*
*அருங்கலையை முதலீன்ற*
*அன்னை எங்கே?*
*பாடுகின்ற புள்ளினங்காள்!*
*பண்ணின் பண்பைப்*
*பாரினுக்குப் பரிந்தளித்த*
*பாவை எங்கே?*
*ஓடுகின்ற புயல்திரள்காள்!*
*உரிமை நீர்மை*
*உலகச்சகோ தரமென்ற*
*ஒருத்தி எங்கே?*
*தேடுகின்றேன், தேவிஎங்கே?*
*தேவி எங்கே?*
*திரிகாற்றே! நீயாதல்*
*செப்பாய் கொல்லோ?"*

அன்பின் திருவுருவாம் அன்னையைத் தேடி அலைகிறான், துடிப்புள்ள ஓர் இந்தியன். காடு மேடுகளையெல்லாம், கழனி வரப்புகளையெல்லாம், கடந்தோடுகிறான்; எதிர்ப்பட்ட பொருள்களையெல்லாம் ஏக்கத்தோடு கேட்டுக்கொண்டே தேடுகிறான்; தன் தாயின் புகழைச் சொல்லிக்கொண்டே ஓடுகிறான்.

இந்தியத் தாய் தவிர, மற்ற தேவியர் எல்லாமும் 'உலகச் சபையில்' மதிப்புடன் வீற்றிருக்கும் காட்சியைக் காண்கிறான்.

*"அரிமிருக்கை யேறிமுடி*
*அணிந்துயர்கோல் தாங்கி,*
*ஆண்மையொடு வீற்றிருக்கும்*
*அரசிகளைக் கண்டேன்;*
*அரிவையர்கள் முகம்நோக்கி*
*யார்யாரென் றுணர,*
*அருகணைந்தேன், தெரிந்தவரும்*
*அருளினர்இவ் வாறே"*

அங்கே, கம்பீரமாகக் கொலு வீற்றிருந்தவர்கள் யார் யார் என அறிமுகம் செய்யப் பெறுகின்றனர்.

*"நானாநாற் பத்தாண்டில்*
*நலமுற்ற ஜப்பான்*
*நாயகிநான்; பெருநதிகள்*
*நானிலத்தில் பூண்டே*
*ஆனாத வளமுடைநான்*
*அமெரிக்கச் செல்வி;*
*அடுக்கடுக்காய்க் கலைவினைகள்*
*ஆக்குஜெர்மன் யானே;*
*கானாடுங் கனிமொழியும்*
*ஓவியமும் காதல்*
*கவின்பிரான்சின் திருமகள்யான்.*
*காண்கவென முறையே*
*தேனாரும் மலர்வாயால்*
*தெரிவித்தார் தம்மைச்*
*சிரித்தொருத்தி முடிவினிலே*
*செப்பியதைக் கேண்மோ!"*

ஆம், ஆணவச் சிரிப்போடு தன்னைத் தட்டிக் கேட்கும் தைரியம் உலகில் யாருக்கும் இல்லை என்ற இறுமாப்போடு தனது சாம்ராஜ்ய ஆட்சிக்கு எப்போதும் அழிவே இல்லை என்ற மமதையோடு பிரிட்டன் மாது பேசுகிறாள்:

*"என்னருமை இந்தியனே!*
*என்னையறி யாயோ?*
*என்னாட்சிக் கதிர்மறைதல்*
*எப்பொழுது மில்லை;*
*என்னிலத்தின், என்கடலின்,*
*என்வெளியின் பரவல்*
*எவர்க்குண்டோ? இவ்வுலகில்*
*எங்குமென தாணை;*
*உன்னலத்தின் பொருட்டாக*
*உன்னையுமே யாளும் ஓரரசி"*

எத்தகைய அறிமுகம்! இந்திய மக்களின் நன்மைக்காக! பிரிட்டன், இந்திய நாட்டையும் ஆள வேண்டியுள்ளதாம்! ஏகாதிபத்தியவாதத்தின் செருக்கு மேட்டுக்குடிமனப்பான்மை அதில் எதிரொலிக்கிறது! ஆதிக்க முடைநாற்றம், அதில் அப்பட்டமாக வீசுகிறது!

இதைக்கேட்ட இந்தியன் உள்ளம், எவ்வளவு புண்பட்டிருக்கும்? எப்படிக் கொதித்திருக்கும்? அடிமையில் கட்டுண்டு வாடிய இந்தியத் தாயின் நிலையை நினைத்து நினைத்துக் கண்ணீர் வடிக்கிறான். அந்த அழுகையிலேயும், தன்தாய் நாட்டின் பழம் பெருமையை எண்ணி எண்ணி ஏற்றம் பெறுகிறான்: அப்போது தான்,

*"ஆடுகின்ற மயிற்குழுக்காள்!*
*ஆடல் நுட்பம்*
*அருங்கலைகள் முதலீன்ற*
*அன்னை எங்கே?"*
*பாடுகின்ற புள்ளினங்காள்!*
*பண்ணின் பண்பைப்*
*பாரினுக்குப் பரிந்தளிக்கப்*
*பாவை எங்கே?"*
*என்று, அவலப்பன் பாடத் தொடங்குகிறான்.*
*"இடமகன்ற இந்நிலத்தில்*
*என்தாய் எங்கே?*
*எங்கே? என் தாயெங்கே?*
*எங்கே? எங்கே?"*
என்று துடிதுடித்துக் கேட்கிறான்.

அவன் கேள்வியில் அலறல் எங்கும் எதிரொலிக்கிறது! பதில் சொல்வார் யாரும் இல்லையா?

# அண்ணாவின் சொல்நயம்



தீரர் சத்தியமூர்த்தி, இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் தீவிர அரசியல்வாதி ஆயினும் கலைத்துறை ஆர்வம் மிகுந்தவராகவே இருந்தார்.

சென்னை நாடக அரங்குகளில் புகழ் பெற்ற சுகுண விலாச சபையின் முக்கிய அங்கத்தினராகவும், நடிகராகவும் அவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து, நாடகக் கலையை வாழ்வித்தார். பல இசை மாநாடுகளிலும் பங்கெடுத்துக் கொண்டார். திரைப்படத் தொழில் வளர்ச்சியிலும் அவர் பங்கு குறையாத அளவில் இருந்தது. 1939ல் நடந்த முதலாவது அகில இந்தியத் திரைப்படத் தொழில் மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். தென்னிந்திய பிலிம் வர்த்தகக் கழகம் உருவாகவும் மூலகாரணராக இருந்தார்.

சமஸ்கிருதத்தில் உருவாக்கப்பட்ட 'மிருச்சகடி' நாடகத்திலும், 'மாளவிகாக் நிமித்ர' நாடகத்திலும் அவர் சிரிப்பு நடிகராகப் பங்கேற்றார்.



'சபலா' என்கிற தமிழ் நாடகத்தில் சுவாமிநாதன் என்ற முக்கியக் கதாபாத்திரத்திலும், 'வேணி சம்ஹாரம்' என்ற நாடகத்தில் அசுவத்தாமாவாகவும் தீரர் சத்தியமூர்த்தி சிறப்புற நடித்தார்.

1928ல், சென்னை மியூஸிக் அகாடெமியில் உறுப்பினராகவும், துணைத் தலைவராகவும் அவர் பதவி வகித்தார்.

நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் நடனமாடக் கூடாது; தேவதாசிகள் மட்டுமே வித்தியாசமானபடி நோக்கப்பட்டு நடனம் ஆடலாம் என்றிருந்த காலம் அது.

அந் நேரத்தில், மிலட்டூர் நடேச ஐயரிடம் நட்னம் கற்ற ஈ. கிருஷ்ண ஐயர், மேடைகளில் ஆடத் தொடங்கினார். 1931ல், மியூஸிக் அகாடெமியில் அங்கத்தினராக இருந்த அவர், சென்னையில் முதன்முதலாகத் திருவாளப்புத்தூர் பெண்களின் பரத நாட்டியத்தைத் துணிவோடு ஏற்பாடு செய்தார்.

பலபேர் அந்த நிகழ்ச்சி நடக்கக்கூடாது என எதிர்த்தார்கள். தீரர் சத்தியமூர்த்தி, நடனக் கலை தமிழகத்தில் நசிந்துவிடாதிருக்க இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்தே ஆகவேண்டும் என்றார். அப்போது 'ஹிந்து' ஆசிரியராக இருந்த திரு. ஏ.ரங்கசாமி ஐயங்காரும் அவரை ஆதரித்தார். நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடந்தேறியது. இதைப் பலரும் எதிர்த்துப் பேசினார்கள்; பலரும் எதிர்த்து எழுதினார்கள்.

இருந்தும் தீரர் சத்தியமூர்த்தியின் வாதமே வென்றது. 1935ல் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபை பொன் விழாவையொட்டி அமைக்கப்பட்ட அலங்கார மேடையில், அவரால் சிறந்த பரதநாட்டியப் பாணியைக் கையாளும் நடிகைகளெல்லாம் அழைப்பின் பேரில் வந்து ஆடிக் காட்டினார்களென்றால், பார்த்துக்கொள்ளுங்களேன்!

தமிழிலும் சமஸ்கிருதத்திலும் பல நாடகங்களில் நடித்தவர் தீரர் சத்தியமூர்த்தி.

ஆனால் - தெய்வ வேடங்களைத் தாங்கி நடிக்க அவருக்குப் பிடிக்காது, அப்படி நடிப்பதானது தெய்வங்களை அவமதிப்பதாகும் என்பார். ஆனால் இதிகாச புராண் நாடகங்களை அவர் வெறுக்கவில்லை.

"நாடகங்களானாலும் சமுதாயத்தில் உள்ள பிரச்சினைகளை எடுத்துக்காட்டுபவைகளாக அவை தயாரிக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட சமூக நாடகங்களுக்குக் கலைஞர்கள் தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்" என்றார், அவர்!

பிற்காலத்தில் (1967) பொதுத்தேர்தல் நடைபெற்ற காலத்தில் காங்கிரஸ் கட்சியை எதிர்த்துத் திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிட்டது.

நாடகத் துறையிலும் திரைப்படத் துறையிலும் பெரிதும் தொடர்பு கொண்டிருந்தவர்கள். ஆகையால், திரு. கு. காமராஜர், காங்கிரஸ் கட்சிப் பிரச்சார மேடைகளில் பேசும்போது தி.மு.க.வினரைக் 'கூத்தாடிகள் கட்சியினர்' என்று குறிப்பிட்டார்.

அறிஞர் அண்ணா, அதற்குப் பதிலளிக்கும் வகையில் மேடைகளில் இவ்வாறு பேசினார் - . "தீரர் சத்தியமூர்த்தியைத் தனது அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டவர் காமராஜர். சத்தியமூர்த்தி பல நாடகங்களில் வேடங்களேற்று நடித்தவர் என்பதும், கலைத்துறையோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர் என்பதும் அவருக்குத் தெரியாதோ என்னவோ - நம்மைக் கூத்தாடிகள் என்கிறார்!" . - அவர் இப்படிப் பேசியதிலிருந்து காமராஜர் 'கூத்தாடிக் கட்சி' என்ற பிரச்சாரத்தை நிறுத்திக்கொண்டார்.

- பி.எல்.ஆர்.




புதுப்பொலிவு மட்டுமல்ல; கருத்துச் செறிவும் இப்போது 'தமிழரசி'ல் கூடிவருவது மகிழ்ச்சி தருகிறது.

எஸ். முத்துச்செல்வன் — அருப்புக்கோட்டை

சமூக நலத்துறை திட்டங்கள் பற்றி வெளியிட்ட கையேடு பயனுள்ளதாக இருந்தது; அதேபோல், ஒவ்வொரு துறை பற்றியும் வெளியிட்டால் நல்லது.

புலவர் இரா. சொக்கலிங்கம் — கும்பகோணம்

கடலில் மூழ்கி முத்தெடுப்பது போல், வேறு சில நூல்களில் தேடிப்பிடித்து வெளியிடும் செய்திகள் அற்புதம்.

பழ. முருகேசன் — திருச்செங்கோடு

'கிராமியக் கலை இயக்கத்தால் வளரும் தமிழ்' கட்டுரை, தமிழ்வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுவதாகும்.

ஜெ. காட்வின் ஜெபநேசா மில்ராய், — திருவனந்தபுரம்

தாங்கள் வெளியிட்டிருந்த 'மரமொழி'களில் - ஒருவரி தவறு; அது 'நிழலின் அருமை வெயிலில் தெரியும்' என்று இருந்திருக்க வேண்டும்.

செ.மா. அரசு — வேலூர்-9

திருநீற்றுப் பச்சிலை மருத்துவக் கட்டுரை பல அரிய செய்திகளின் அறிவிப்பாக இருந்தது.

பி. சூரன் — இடையபட்டி

சட்டமன்றப் பேரவை பவளவிழாக் கட்டுரைகள் - மேதைகள் வாழ்விலே தொகுப்பு ஆகியவை அருமையாக இருந்தன.

இதுகுறித்து ஏராளமான கடிதங்கள் வந்துள்ளன.

மு. செல்வம் — கீரப்பாளையம்

கால்நடைப் பராமரிப்புத் துறை பற்றிய கட்டுரை வெளியிட்டுப் பல விஷயங்களைத் தெரிவித்தமைக்குப் பாராட்டுகள்.

கி. ராமதாஸ் — சென்னை-23

சின்னச் சின்னச் செய்தித் துணுக்குகள் அதிகம் வெளியிடவும்.

கே. கோடீஸ்வரன் — தக்கலூர்

பழங்கால இலக்கியம் முதல் தற்கால இலக்கியம் வரை மதிப்பீடு செய்யச் சில பக்கம் ஒதுக்கலாமே?

எஸ். முத்து — பன்னப்பட்டி, சேலம்

கலைஞரின், அண்ணா மறுமலர்ச்சித் திட்ட உரையினைப் போல அடிக்கடி வெளியிட வேண்டுகிறேன்.

ஆ. வேல்சாமி — மேற்பனைக்காடு

காமராசர் வாழ்க்கைக் குறிப்புகள், மற்றவர்கள் வாழ வழிகாட்டுபவை.

க. குழந்தைவேல் — மேட்டுத் திருக்காம்புலியூர்

"எனக்கு நிகர் யாரோ?
எதிரில் வந்து பாரு!
கணக்காய் வேட்டை யாடி
களித்து வாழ்வேன் நானே" - என்று
பாடிக்கொண்டு சென்றது.

அப்பொழுது தூரத்தில் ஒரு பயங்கரமான உறுமல் ஒலி கேட்டது. அந்தச் சத்தத்தில் காடே கதிகலங்கிப் போனது. காட்டு மிருகங்களெல்லாம் அந்தச் சத்தத்தைக் கேட்டுப் பயந்து ஒடி ஒளிந்துகொண்டன.

முதலில் நாய்க்கு ஒன்றும் புரியவில்லை. பிறகு உறுமல் சத்தம் வந்த திக்கில் நின்று கவனித்துப் பார்த்தது. அங்கு ஒரு புலி வரக்கண்டது.

அது ஒரு வரிப்புலி. பெரியதாக இருந்தது. அதன் கண்கள் தீக்கங்குகள் போல் இருந்தன. அதன் மீசையும், கோரைப் பற்களும் பார்க்கப் பயமாக இருந்தன. அதனிடம் அகப்பட்டால், தன்னைச் சட்டினி ஆக்கிச் சாப்பிட்டு விடுமென்பதை வேட்டை நாய் உணர்ந்து கொண்டது. உடனே நாலுகால் பாய்ச்சலில் ஒடி ஒரு புதருக்குள் ஒளிந்துகொண்டது.

பயத்திலும், பதற்றத்திலும் குளிருக்குள் அகப்பட்டது போல் வேட்டை நாயின் உடல் வெடவெட வென்று நடுங்கியது. கண்ணை மூடிக்கொண்டு, வேட்டை நாய், "கடவுளே, கடவுளே, நான் மறுபடியும் ஆபத்தில் மாட்டிக் கொண்டு முழிக்கின்றேன். என்னைக் காப்பாற்ற வா, ஆபத்பாந்தவா", என்று உள்ளமுருகி அழைத்தது.

இறைவன் மறுபடியும் வேட்டை நாய்க்கு முன் காட்சி அளித்தான். "எதற்காக என்னை அழைத்தாய்?" என்று கேட்டான், அவன் குரலில் சிறிது சலிப்பு இருந்தது.

வேட்டை நாய் மிகவும் பணிவோடு "இறைவா, நாய்க்கு நிகர் இல்லை என்று எண்ணிக் கொண்டிருந்தேன். இன்று ஒரு புலியைப் பார்த்தேன். எனக்கு கிலி வந்துவிட்டது. என்னைப் புலியாக மாற்றிக் காப்பாற்று", என்று முறையிட்டுக்கொண்டது.

இறைவன் இந்த முறை, "போனால் போகிறது" என்று, வேட்டை நாயைப் புலியாக்கிவிட்டுச் சென்றான்.

புலியான வேட்டை நாய் இப்பொழுது மிகவும் குஷியாக இருந்தது. பக்கத்திலிருந்த ஒரு குளத்திற்குச் சென்று நீரில் தனது உருவத்தைப் பார்த்து மிகவும் பெருமைப்பட்டுக் கொண்டது. அதனைக் கண்டு காட்டு மிருகங்கள் ஒடி ஒளிவதைக் காண அதற்குச் சந்தோஷமாக இருந்தது. தன்னைப்பற்றித் தானே கர்வப்பட்டுக் கொண்டது.

ஒரு நாள், காட்டில் உற்சாகமாகப் புலி உலா வந்த பொழுது, எதிரில் ஒரு வேட்டைக்காரன் வரக்கண்டது. அவன் கையில் நீண்ட இரட்டைக் குழாய் துப்பாக்கியிருந்தது. அந்த வேட்டைக்காரன் புலியைப் பார்த்துப் பயப்படவில்லை. அதனைச் சுட்டு வீழ்த்தக் குறி பார்த்தான்.



புலிக்கே இப்பொழுது கிலி வந்துவிட்டது. உயிர் பதைக்க அடர்ந்த காட்டுக்குள் நாலுகால் பாய்ச்சலில் ஒடியது. அங்கு ஒரு குகை இருக்கக் கண்டது. அதற்குள் சென்று மறைந்துகொண்டது.

நீண்டதூரம் ஒடி வந்ததாலும் அச்சத்தாலும் புலிக்கு மூச்சு வாங்கியது. அதன் உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

புலி மிகவும் பரிதாபமான குரலில் இறைவனை மீண்டும் அழைத்தது. இறைவனுக்குத் திரும்பத் திரும்ப வந்து உதவி செய்ததில் மனத்திற்குள் அலுப்பு ஏற்பட்டு விட்டது. இருந்தாலும் புலிக்கு முன்னால் இறைவன் காட்சியளித்தான்.

புலி இறைவனிடம், "பகவானே, என்னால் புலியாக நிம்மதியாக வாழ முடியவில்லை. என்னை ஒரு வேட்டைக்காரனாக மாற்று. என் கையில் ஒரு இரட்டைக்குழாய் துப்பாக்கியும், குறிபார்த்துச் சுடுகின்ற ஆற்றலும் கொடு. நான் கவலையில்லாமலும், பயமில்லாமலும் வாழ்வேன்" என்று கூறியது.

இறைவன் அந்தப் புலியைப் பார்த்துச் சிரித்தான். "புலியே, நீ முதலில் எலியாக இருந்தபோது பூனையைப் பார்த்துப் பயந்தாய். பூனையான பிறகு நாயைப் பார்த்து நடுங்கினாய். நாயாக மாற்றினேன். ஆனால் நீயோ புலியைக் கண்டு கிலி கொண்டாய். புலியாக மாற்றினேன்; இன்னும் பலனில்லை; உன்னிடம் கிலி போகவில்லை, தன்னம்பிக்கையோடு அச்சமில்லாமல் வாழ உனக்குத் தெரியவில்லை. எப்பொழுதும் எனது உதவியையே நாடுகின்றாய். ஆதலால் நீ புலியாக இருப்பதும் ஒன்றுதான்; எலியாக இருப்பதும் ஒன்றுதான், மறுபடியும் எலியாகப் போ" என்று கூறிவிட்டு இறைவன் மறைந்தான்.

புலி மறுபடி சுண்டெலியாகியது. சோகமாகத் தனது பொந்தைத் தேடிப் போனது.

இறைவன் நமக்கு உதவுவான். ஆனால் நம்மிடம் தன்னம்பிக்கையும், துணிச்சலும் வேண்டும். அப்பொழுதுதான் இந்த உலகில் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழமுடியும்.

(வினோபா பாவே கூறிய குட்டிக் கதையின் தழுவல்.)
மதுரை-காந்திய இலக்கியச் சங்கம் வெளியிட்டுள்ள
'காந்தி வழிக் கதைகள்' புத்தகத்திலிருந்து.



# விடுதலைப் போரில் திருப்பங்கள்!

- எஸ். நடராஜன்

நம் நாட்டின் விடுதலைப் போராட்டம் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக் காலமாக நடந்து வந்திருக்கிறது. அடிமைகளாக ஆர்வமிழந்து ஒடுக்கப்பட்ட மக்கள் சுதந்திர உணர்ச்சி பெற்று வீறு கொண்டு எழுந்தது, ஒரு நாளில் நடந்துவிடவில்லை. நாடு சுதந்திரம் பெற வேண்டும் என்பதற்காகப் பல தலைவர்கள் பல முறைகளைக் கையாண்டனர். தம் உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் அளித்து, தியாகிகளாக விளங்கியவர்கள் எண்ணிக்கை கணக்கிலடங்கா.

தீங்கு செய்வதிலும் நன்மையுண்டு என்பது உலகறிந்த உண்மை. பிரிட்டிஷ் ஆட்சியை நீடித்து நிலைக்கச் செய்யச் சிலர் நமக்குக் கொடுமையிழைத்தனர். அதுவும், நாட்டில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டச் செய்த நடவடிக்கைகள் சுதந்திர வெறியையே ஊட்டின.

## முதல் திருப்பம்

பிரிட்டிஷ்க்காரர்கள் நீதிக்கும் நேர்மைக்கும் கட்டுப்பட்டவர்கள். அவர்களிடம் நியாயத்தை எடுத்துக்காட்டியே நாட்டின் விடுதலையைப் பெற்றுவிடலாம் என்று கனவு கண்டவர் தாதாபாய் நவரோஜி. சிங்கத்தின் குகைக்குள்ளேயே சென்று அதனிடம் விளையாடுவதைப்போல, இவர் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திற்குப் (காமன்ஸ் சபை) போட்டியிட்டு மூன்று முறை தோற்று, நான்காவது முறை வெற்றி பெற்று அம்மன்றத்தின் உறுப்பினராகி இந்தியாவிற்கு நியாயம் வழங்கவேண்டும் என்பதைப் புள்ளி விவரங்களுடன் எடுத்து விளக்கினார். வில்லியம் வெட்டர்பான், கெயின் ஹிண்ட்மான் போன்றவர்கள் இந்தியாவின் கோரிக்கைக்கு ஆதரவளிக்க முன்வந்தது தாதாபாயின் பணியின் காரணமாகத் தான். கெ்யின் ஒரு சமயம் குறிப்பிடும்போது "ஆங்கிலேயர்களாகிய நீங்கள் ஏன் இந்தியர்களுக்காகப் பரிந்து பேசுகிறீர்கள்? பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியர்கள் சுகமாகத்தானே இருக்கிறார்கள். அவர்கள் யாரும் எதுவும் கேட்பதாகத் தெரியவில்லையே! என்று என்னிடம் கேட்கிறார்கள். இந்தியர்களாகிய நீங்கள் விடுதலை கோரும் ஆர்வமற்று, பாவம் இந்தக் கிழவரை (தாதாபாய்) தொல்லைக்குள்ளாக்குகிறீர்களே" என்று பேசினார். நம் நாட்டினர் விடுதலை வேண்டும் என்று கேட்கவும் துணிவற்று இருந்த காலம் அது.

## இரண்டாவது திருப்பம்

சிப்பாய்க் கலகம் என்று கூறப்படும் முதல் சுதந்திரப் போரை பிரிட்டிஷார் வெற்றிகரமாக ஒடுக்கிவிட்டனர் என்றாலும் நாட்டில் கொந்தளிப்பு மட்டும் முழுதுமாக அடங்கவில்லை. நீறுபூத்த நெருப்புப்போல் சுதந்திர வேகம் இருந்து கொண்டே இருந்தது. மக்கள் எப்போது மீண்டும் கிளர்ச்சி செய்வார்களோ என்ற பயம் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு இருந்தே வந்தது.

இந்தியர்களின் துயரங்களுக்கு முடிவுகட்ட அவர்களுக்கென்று ஒரு தேசிய ஸ்தாபனம் வேண்டும் என்று எண்ணியவர் ஹியூம் என்பவர். இதற்கான முயற்சிகளையும் அவரே செய்தார். வைஸ்ராய் டப்ரினும் இந்த ஸ்தாபனம் ஏற்பட ஆதரவு அளித்தார். ஆளுபவர்களுக்கு அக்கறை ஏன்?

1857-ஆம் ஆண்டு புரட்சி போல மற்றொரு கிளர்ச்சி கிளம்பலாம் என்ற சூழ்நிலை நாட்டில் இருந்தது. 1870-ல் நாட்டில் பல இரகசிய சங்கங்கள் வேலை செய்வது கண்டுபிடிக்கப்பட்டன. மக்கள் உணர்ச்சி பயங்கர வழியில் பாயாமல் இருக்க ஒரு ஸ்தாபனம் நிறுவ முயற்சி நடந்தது. இதுதான் வைஸ்ராய் ஆதரவின் இரகசியம்.

பம்பாயில் நடைபெற்ற முதல் காங்கிரசுக்கு, பம்பாய் மாநில ஆளுநராக இருந்த 'ரே'யைத்தான் தலைமை வகிக்கச் சொல்வதாக இருந்தது. ஒரு இந்தியர் தலைமை வகிப்பது நல்லது என்று கருதப்பட்டதால் உமேஷ் சந்திர பானர்ஜி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கோபாலகிருஷ்ண கோகலே ஹியூமைப் பாராட்டி லண்டனில் பேசியபோது இந்திய தேசிய காங்கிரஸை இந்தியர் எவரும்

ஆரம்பித்திருக்க முடியாது. இந்தியர்களிடம் பிரிட்டிஷாருக்கு அவ்வளவு அவநம்பிக்கை என்று குறிப்பிட்டார்.

### மூன்றாவது திருப்பம்

விடுதலைப் போரில் மகாத்மா காந்தி தலையிடுமுன் புரட்சியே தலைதூக்கி நின்றது. புரட்சிக்காரர்களைப் பயங்கரவாதிகள் என்று அந்நிய ஆட்சி வருணித்தது. உண்மையில் அவர்கள் பயத்தை இந்தியர் உள்ளத்திலிருந்து விரட்டிய தியாக சீலர்கள்.

புரட்சி நடந்தபோதெல்லாம் இந்து முஸ்லீம் ஒற்றுமையைக் கண்ட ஆங்கிலேயர்கள் தங்கள் ஆதிக்கம் வேரூன்ற பிரித்தாளும் கொள்கையைக் கடைப்பிடிக்கலாயினர். வங்காளத்தின் கீழ்ப்பகுதியில் முஸ்லீம்கள் அதிகம். மேற்குப் பகுதியில் இந்துக்கள் மிகுதி. ஆகவே, கவர்னர் ஜெனரலாக இருந்த கர்ஸான் பிரபு வங்காளத்தைக் கிழக்கு வங்கம் என்றும் மேற்கு வங்கம் என்றும் பிரித்தனர். 1905-ஆம் ஆண்டு ஆகஸ்டு 16-ஆம் நாள் வங்கம் இரு துண்டாயிற்று. மக்கள் கிளர்ச்சிக்குப் பின்னர் வங்காளம் மீண்டும் ஒன்றாகியது. ஆனால் 1947-ல் பாகிஸ்தான் பிரித்தளிக்கப்பட்டபோதுதான் கிழக்கு வங்கம் மறுபடியும் இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டது.

இப்பிரிவினையை எதிர்த்து நாடே கொதித்தெழுந்தது. இக்கிளர்ச்சி சுதேசி இயக்கமாகவும் அந்நியத் துணி பகிஷ்காரமாகவும் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. பங்கிம் சந்தரரின் வந்தே மாதர கீதம் புரட்சி வேகத்தை அதிகரிக்கச் செய்தது. 'வந்தே மாதரம்' என்ற ஒலியைக் கேட்டே ஆங்கிலேயர்கள் நடுங்கினர். இப்புரட்சியின் எதிரொலியால் காங்கிரஸில் மனுப்போட்டுக் கொண்டிருந்த மிதவாதிகளின் செல்வாக்குக் குறைந்தது.

திருநெல்வேலியில் வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா ஆகியோர் சுதந்திர வேகத்தை மக்களிடையே பரப்பினர்.

### நான்காவது திருப்பம்

அன்னிபெசன்ட் அம்மையார் தான் 'ஹோம்ரூல்' (சுயாட்சி) இயக்கத்தின் 'மாதா'. இந்தியாவின் கல்வியும், கலையும் கலாசாரமும் வரவரக் குறைந்துபோவதற்குக்காரணம் பிரிட்டிஷ் ஆட்சியே என்ற உண்மையை இவர் துணிந்து கூறினார். இந்தியாவுக்கு நியாயம் வழங்க வேண்டும் என்று அவர் பாடுபட்டார்.

இதற்காக இவர் பிரச்சாரம் செய்து வந்ததுடன் அங்கங்கே சுயாட்சிச் சங்கங்களையும் நிறுவி வந்தார். இவருடைய ''நியூ இந்தியா' பத்திரிக்கையில் "ராஜத்துவேஷம்' கட்டுரைகள் பிரசுரிக்கப்படுகின்றன என்றும், இனி அம்மாதிரி எழுதப்படாமலிருக்க ரூ.20,000 ஜாமீன் கட்டவேண்டும் என்று சென்னை அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது. அப்போது சென்னை கவர்னராக இருந்த பெண்ட்லண்ட், அன்னிபெசன்ட் அருண்டேல், வாடியா இம்மூவரையும் காவலில் வைத்தார். இந்தியாவெங்கும் பரபரப்பு ஏற்பட்டது. இதனால் நாடு கொதித்தெழச் செய்தவர் பெண்ட்லண்ட்.

### ஐந்தாவது திருப்பம்

நாடு முழுவதும் சுதந்திரக் கனல் பறக்கச் செய்த பெருமை ஜெனரல் டயர் என்ற ஒரு ராணுவ அதிகாரியையே சாரும். *சீக்கியர்களைக்* கொண்ட பஞ்சாப் படை வீரத்திற்குப் பேர் போனது. இங்கு காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் நடைபெறாமல் தடுக்க பஞ்சாப் கவர்னர் டயர் விரும்பினார். அப்போது பஞ்சாப் மக்களின் மனதைக் கவர்ந்த தலைவர்கள் டாக்டர் சத்யபால், டாக்டர் கிச்லு இவர்களைக் கைது செய்து எங்கோ அழைத்துச் சென்றுவிட்டார்கள். இது மக்களிடையே பெரும் கொதிப்பை ஏற்படுத்திவிட்டது.

அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கண்டிக்க 1919 ஏப்ரல் 13-ம் நாள் ஜாலியன்வாலாபாக் மைதானத்தில் சுமார் 20,000 பேர் கொண்ட கூட்டம் நடைபெற்றது. இந்த மைதானத்திற்குக் குறுகலான ஒரே ஒருவழி, கூட்டம் நடந்துகொண்டிருக்கும்போதே திடீரென்று படைகள் வரும் சத்தம் கேட்டது. நூறு இந்தியச் சிப்பாய்களுடனும் ஐம்பது வெள்ளை சோல்ஜர்களுடனும் டயர் என்று ராணுவ அதிகாரி வந்தார். அரை மணிநேர கூட்டத்தினர் மீது சுடச் செய்தார். சுமார் 1600 குண்டுகள் சுட்டுத் தீர்க்கப்பட்டன. 'தோட்டாக்கள் தீர்ந்துவிட்டன; இல்லையேல் மேலும் சுட்டிருப்போம்' என்று கொக்கரித்தார் டயர்.





ஜாலியன் வாலாபாக் படுகொலை

காந்திஜியும் சரோஜினிதேவியும் தங்களுக்கு பிரிட்டிஷார் அளித்த கெய்ஸ்ரி ஹிந்த் மெடல்களைத் திருப்பிவிட்டனர். ரவீந்திரநாத் தாகூர் "சர்' பட்டத்தை உதறித் தள்ளினார். மிதவாதியாக இருந்த மோதிலால் தீவிரவாதியானார்.



### ஆறாவது திருப்பம்

இந்தச்சமயத்தில்தான் காந்தியடிகள் அரசியலில் நுழைந்து அகிம்சை வழியில் போராட்டத்தைத் திருப்பினார். இவருடைய ஒத்துழையாமை இயக்கம், உப்புச் சத்தியாகிரகம், சட்டமறுப்பு இயக்கம் ஆகியன அயல்நாட்டினரைத் திணற வைத்தன.

இந்திய விடுதலைப் போராட்டச் சரித்திரத்திலேயே காந்தியடிகள் நுழைவு ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. உலகத்திற்கே வழிகாட்டும் ஒரு புதுப்பாதையை அடிகள் இந்தியாவிற்கு வகுத்துக் கொடுத்தார்.

தியாகிகள் உயிர்ப் பலியாவதைத் தடுக்க முயற்சி எடுத்தவர் காந்தியடிகள். இவர் இந்திய அரசியலில் தோன்றிச் சத்தியம், அகிம்சை என்ற இரு ஆயுதங்களையும் உபயோகிக்காமல் இருந்திருந்தால் இன்னும் கணக்கில்லாத பேர் நாட்டிற்காக மாண்டு மடிந்து போயிருப்பார்கள்.

நாட்டிற்குச் சுதந்திரம் எதனால்? பிரிட்டிஷாரின் மனம் மாறியதாலா? புரட்சியாளர்களின் கிளர்ச்சியாலா? சுபாஷ் சந்திர போஸ் தனி ராணுவம் அமைத்துப் படையெடுத்ததாலா? சாத்வீகப் போராட்டத்தினாலா? அல்லது 'வெள்ளையனே வெளியேறு' என்ற ஆகஸ்டுப் புரட்சி காரணமாகவா?

இவ்வளவும் ஒரு காரணத்தினால்தான் என்று சொல்ல முடியாது. இவை எல்லாம் ஒவ்வொரு வகையில் சுதந்திரம் கிடைக்க உதவியிருக்கலாம். எது எப்படியானாலும் நாட்டைப் பிரிவினை செய்யாமல் சுதந்திரம் பெற முடியவில்லை. காந்தியடிகள் கடைசி வரை நாட்டின் பிரிவினையை ஆதரிக்கவில்லை. வேறு வழியில்லாமல் நாடு பிரிவினையாகிச் சுதந்திரம் அடைய வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

1947 ஆகஸ்டு 15ஆம் நாள் நாட்டிற்குச் சுதந்திரம் கிடைத்த அன்று காந்தியடிகள் கல்கத்தாவில் உண்ணாநோன்பிருந்துதான் கொண்டாடினார். அவர் வாழ்த்துச் செய்தி இல்லாமலேயே நாட்டின் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது விந்தையல்லவா?

# சுதந்திரப் போராட்ட காலத்தில் மக்கள் தொடர்புச் சாதனங்கள்

இந்த இருபதாம் நூற்றாண்டில் பெருகியுள்ள அறிவியல் சாதனங்கள் அனைத்து வகைச் செய்திகளையும் சுருக்கித் தெரிவிக்கின்றன.



சென்னை மாநகரிலே நடைபெறும் நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகள் சிகாகோ நகருக்கே சில நிமிடங்களில் போய்ச் சேர்ந்துவிடுகின்றன.

அந்தக் காலத்தில், அடிமைப் பட்டுக் கிடந்த இந்திய நாட்டில் சுதந்திரக்கனல் மூண்டிருந்த நேரத்தில், என்ன விலை கொடுத்தேனும் இந்தியாவை மீட்கத் தியாகச் செம்மல்கள் பலர் துணிந்து நின்ற போது - இத்தகைய செய்தித்துறை எதுவும் இருந்திடவில்லை; தனியே இப்போதுள்ள அளவிற்கு அறிவியல் துறையும் உடனுக்குடன் செய்திகளை அனுப்பிடும் வகையில் முழு வளர்ச்சி பெற்றிருக்கவில்லை.

சுதந்திரப் போராட்டக் காலத்தில் களத்தில் நின்ற வீரருக்குச் செய்தித் தாள்கள் சில கை கொடுத்தன; தப்பித்தவறித் தத்தித் தவழ்ந்து வெளியிடப்பட்ட செய்திப்படங்கள் சில தெம்பூட்டின.

### பிரச்சார அதிகாரி

நாம் சுதந்திரமடைவதற்குச் சில காலத்திற்கு முன்பே கூட, செய்திகளைப் பரப்ப பிரிட்டிஷ் அரசு என்ன செய்தது தெரியுமா?

பிரிட்டனின் நியாயத்தை, இட்லரின் ஏதேச்சதிகாரத்தை நம் இந்திய மக்களிடையே பரப்பி - நமது ஒத்துழைப்பைப் பெற்றிட 1942ஆம் ஆண்டு பிப்ரவரி 16ஆம் நாள் போர்ப் பிரச்சார அதிகாரி ஒருவரை நியமித்தது. அப்போது, வட்டாரப் போர் ஆலோசனைக் குழுச் செயலாளராக இருந்த ஹார்வி என்பவரே, அவ்வாறு நியமிக்கப்பட்ட முதலாவது பிரச்சார அதிகாரியாவார். 1946ல் போர் முடிவடைந்த போது தான் அவர் பதவி விலகினார்.

ஆனால், அந்தப் பணி சென்னை மாகாணப் பிரதமராக இருந்த, ஆந்திர கேசரி பிரகாசம் அவர்களால் மீண்டும் புத்துயிர் பெற்றது.



சுதந்திரப் போராட்டக் காலத்தில் - ஏடுகள், நாடகங்கள், சொற்பொழிவுகள் கவிதைகள், மேடைப்பாடல்கள் போன்றவைகளே தலைசிறந்த மக்கள் தொடர்புச் சாதனங்களாக விளங்கின.

இந்த வகையில் மகாகவி பாரதியார், திரு.வி.க.,வ.உ.சி., வ.வே.சு.ஐயர், சுப்பிரமணிய சிவா, தந்தை பெரியார், மூதறிஞர் ராஜாஜி, சத்திய மூர்த்தி, விசுவநாத தாஸ், கிருஷ்ணசாமிப் பாவலர், சங்கரதாஸ் சுவாமிகள், சுந்தரவாத்தியார் - போன்ற சான்றோர் பலரும் மேற்கொண்ட முயற்சிகளை, பட்ட பாடுகளை - அதனால் அடைந்த கேடுகளை நம்மால் மறக்கமுடியாது.

தமிழகத்தில் தமிழ்ப் பத்திரிகை உலகைப் பொறுத்தவரையிலே " ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்களே தமிழ்ப்பத்திரிகை உலகின் தந்தை எனப்படுகிறார். 1882-ல் அவரால் முதன்முதல் தொடங்கப்பட்டது 'சுதேசமித்திரன்' தமிழ் வார ஏடு; அடுத்த ஏழாண்டுகளில் அது தினசரி ஏடாயிற்று. ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்களால் அதற்கு முன்பாக 1878-ல் 'இந்து' நாளிதழ் சென்னை மாநகரிலே, ஆங்கிலத்திலே தொடங்கப்பட்டது.

1885ல், இந்திய தேசியக் காங்கிரசின் தோற்றத்திற்குப் பின், செய்தித் தாள்களின், வளர்ச்சி அதிகமாயிற்று.

பிறகு அடுத்ததாகப் பாரதியார் சொல்லப்படுகிறார். 'இந்தியா' 'சக்கரவர்த்தி', 'கர்மயோகி' 'விஜயா' போன்ற ஏடுகள் அவரால் ஆவேசக் கருத்துகளோடும் இனிய இலக்கிய மணத்தோடும் வெளியிடப்பட்டன.

### பிரிட்டிஷ் இந்தியா



இந்தியாவை நம் இந்தியப் பெருமக்களில் பெரும்பாலானவர்களே 'பிரிட்டிஷ் இந்தியா' என்று குறிப்பிடும் அளவிற்கு மதி மயங்கிக் கிடந்த காலம் அது. 'நெஞ்சில் உரமுமின்றி, நேர்மைத் திறமுமின்றி' அப்படிக் கிடந்தவர்களைக் கண்டு, மகாகவி பாரதியார் பெரிதும் குமுறினார்.



'நாமிருக்கும் நாடு நம தென்பதறிந்தோம்...' என்று அவர்களை உணரச் செய்தார்.

'செந்தமிழ் நாடென்னும் போதினிலே ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே !...'

- என்று பாடி நம்மவர்களை மகிழ்வித்தார்.

'அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே !....'

- என்றெல்லாம் பாடி நம் நாட்டு மக்களிடையே எழுச்சியூட்டினார். அதன் விளைவு ஆங்கில ஏகாதிபத்தியம் அவருக்குக் குறி வைத்தது. 'ஞானக் கிறுக்கன்' என்று தன்னைச் சொல்லிக் கொண்டிருந்த அவரா அதில் சிக்குவார்?

'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம்
அடைந்துவிட்டோமென்று
ஆடுவோமே பள்ளுப்
பாடுவோமே...'

- என்று இந்தியா சுதந்திரம் பெற்றிடு முன்பே பாடிக்களித்த பாரதியார் இங்கிருந்து தப்பி, புதுச்சேரிக்குச் சென்றார்.

அங்கே அந்நிய வெயில் அவர்மீது படாமல் நிழல் கொடுத்தவர்களில், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் குறிப்பிடத் தக்கவராவார். அவர் அந்நாளில் எழுதிய 'ராட்டினப் பாட்டுப்' போன்றவை இந்திய விடுதலைப் போராட்டத் தீயினுக்கு எண்ணெய் வார்ப்பதாக அமைந்தன.



### இரவில் பெற்ற விடுதலை

நம் இந்திய நாடு விடுதலை பெற்றதற்குப் பின்னாலேகூட, நலிவு தீராமல் அவதிப்பட்ட நாட்டு மக்களுக்குப் பெரிதும் கவலைப்பட்டார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்.

'...மக்களுக்குள்ள சிக்கல் அறுக்காமல்

எல்லார்க்கும் எல்லாம் என்னும் உரிமை

சொல்லால் செயலால் தொடவும் எண்ணிடார் !

இரவில் வாங்கும் இந்திய விடுதலை
என்று விடியுமோ யார் அறி குவரே ?...'

- என்கிற பாடலே அதற்குத் தகுந்த சான்றாகும்.

இன்று புதுக்கவிதை எழுதும் பலருக்கு, அந்தக் கவிதையே இப்போதும் கை கொடுப்பதை நாம் பார்க்கிறோம்.



இந்திய விடுதலைக்கு மக்களை ஒன்று திரட்டக் குரல் கொடுத்த அந்நாளைய கவிஞர்கள் என்று பார்த்தால் - பாரதியும் பாரதி தாசனும் மட்டுமல்ல; கவியோகி சுத்தானந்த பாரதியார், மாயூரம் வேதநாயகம்பிள்ளை, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர் போன்றோரையும் இங்கே நாம் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

### திரு.வி.க.வின் தேச பக்தன்

1917ல், திரு.வி.க.வை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'தேசபக்தன்' பிறகு அவரே தொடங்கிய 'நவசக்தி' ஆந்திரத்தைச் சேர்ந்த டி.பிரகாசம் ஆங்கிலத்திலே நடத்திய 'சுயராஜ்யா' நாளிதழ் - சுப்பிரமணிய சிவாவின் 'ஞானபாநு', 'பிரபஞ்சமித்திரன்', 'இந்திய தேசாந்திரி' வ.வே.சு. ஐயர் நடத்திய 'பாலபாரதி' போன்ற ஏடுகளெல்லாம் அந்நாளில் ஊட்டிய எழுச்சி அளவிடற்கரியது.

'தென்னாட்டுத் திலகர்' என்ற பெருமைக்குரிய டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு தொடங்கிய 'தமிழ்நாடு' நாளேடு, 1930ல் தொடங்கப் பெற்ற 'இந்தியா' நாளிதழ், 1934ல் வெளிவந்த 'எக்ஸ்பிரஸ்' ஆங்கில நாளிதழ் 'தினமணி', 1933ல் வெளியிடப் பட்ட 'ஜெயபாரதி' என்று பார்த்துக்கொண்டே போனால் - 1935ல் ஈரோட்டில் தந்தை பெரியார் அவர்கள் தொடங்கிய 'குடியரசு', 1942ல் திருவாரூரில் கையெழுத்தேடாகத் தலைவர் கலைஞர் அவர்கள் தொடங்கிய 'முரசொலி', அதே 1942ல் தேசிய ஏடாகவே சி.பா. ஆதித்தனார் தொடங்கிய 'தந்தி' வரை பார்ப்போமானால், இந்திய மக்கள் எதற்கும் அஞ்சாமல் நெஞ்சுறுதியுடன், பாடுபட அந்த ஏடுகள் யாவுமே ஒவ்வொரு வகையில் பெரிதும் பணியாற்றியுள்ளன என்பது விளங்கும்.

அதன் காரணமாகவே - மக்கள் தொடர்புச் சாதனமாகப் பயன்பட்ட பத்திரிகைகளை அடக்க 'அச்சகச் சட்டம்' (PRESS ACT) என்ற பெயரால், பிரிட்டிஷ் வைஸ்ராய் அடக்குமுறைச் சட்டம் ஒன்றைக் கொண்டுவந்தார். 1870ல் அதற்குத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. பிறகு 1878ல் இந்திய மொழி பத்திரிகைச் சட்டம் **(VERNACULAR ACT)** என்றெல்லாம் ஏதேதோ சட்டமெல்லாம் போடப்பட்டன.

அடக்குமுறைச் சட்டம் அப்போது மட்டும் தானா? இந்தியா சுதந்திரம் பெற்றதற்குப் பின்னாலேயும் அதன் வேகத்தை நாம் அனுபவித்திருக்கிறோம். 1975ல் தமிழகத்தில் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்ட போது - படங்களையும் செய்திகளையும் கூட மத்தியத் தணிக்கை அதிகாரிகளிடம் காட்டி அனுமதி பெற்ற பிறகுதான் பத்திரிகைகளில் வெளியிட வேண்டும் என்றொரு நிலை இருந்தது நமக்குத் தெரியும்.

# நீலன் சிலையகற்றும் போராட்டம்

டாக்டர் ந.க. மங்களமுருகேசன்

இந்திய விடுதலைப் போரில், தமிழகம் தலையாய பங்கினை ஆற்றியிருக்கிறது. 1857ஆம் ஆண்டு வடபுலத்தில் நடைபெற்ற பெருங்கிளர்ச்சியின் தாக்கம் தென்னகத்தில் இல்லை என்று கூடத் தவறாகக் கணித்தனர். நீறுபூத்த நெருப்பாக வெடி மருந்து கெட்டிக்கப்பட்ட பீரங்கியாகத் தமிழ்மண் வெடிக்கத் தயாராய் விளங்கி வந்தது.

1857ல் இந்திய மக்களைக் கொன்று குவித்த நீல் என்னும் ஆங்கிலேயன் சிலை அகற்றப்படவேண்டும் என்று எண்பது ஆண்டுகள் கழித்து ஒரு மாபெரும் அறப்போரினைச் சென்னையில் நிகழ்த்தினர் என்றால், சிந்தையில் அந்த 1857ஆம் ஆண்டு போர் எவ்வளவு ஆழமாகப் பதிந்திருந்தது என்னும் உண்மை விளங்கும்.

நீலன் என்னும் நீல் யார்? 1857ல் முதல் இந்திய விடுதலைப் போர் என்றும், முதல் மாபெரும் கலகம் என்றும், சிப்பாய்க்கலகம் என்றும் பல்வகையாகக் கூறப்பட்ட அந்த மாபெரும் நிகழ்ச்சியில் பங்கேற்ற ஆங்கிலேயத் தளபதிகளில் ஒருவனே நீல். அப் பெருங்கலகத்தை ஒடுக்க டெல்லிக்கு இந்தியா முழுமையிருந்தும், அன்று ஆண்ட ஆங்கிலேயர் தங்கள் படைகளைத் திரட்டியே பாரதப் போராளிகளை ஒடுக்க முயன்றனர். அவ்வாறு சென்னையிலிருந்து துப்பாக்கிப் படையொன்று நீல் தலைமையில் வடபுலம் சென்றது. அங்கு நம்மவர்களுக்கு எதிராக இயங்கியது.

துப்பாக்கிப் படைக்குத் தலைமையேற்ற நீல், அவன் கடமையைத்தானே செய்திருப்பான் என்று



கூறலாம். ஆனால் நீல் என்னும் நீலன் இந்திய வீரர்களை ஒடுக்குவதில், அடக்குவதில் எல்லை மீறிச் செயல்பட்டான். வீரசவர்க்கார் 'எரிமலை' என்னும் தலைப்பில் இப்பெரும் புரட்சி குறித்து நூல் ஒன்று தீட்டினார்.



அந்நூலில் 1857ஆம் ஆண்டுப் போரில் நீல் செய்த கொடுங்கோன்மைகள் குறித்து நெஞ்சம் பதைக்கத் தீட்டியிருந்தார்.

அந்த நீலனுக்கு அன்றைய ஆங்கிலேய அரசு 1857ல் பணியாற்றிய திறனுக்குப் பரிசாகச் சிலை ஒன்றைச் சென்னையில், ஸ்பென்சர் நிறுவனம் அருகில் அமைத்திருந்தது. நீல் யார்? என்பது தெரியாமலேயே அச்சிலை நீண்ட நாட்களாக அங்கே இருந்து வந்தது.

வீரசவர்க்காரின் 'எரிமலை' நூலைப் படித்த தமிழக இளைஞர்கள் விழித்துக்கொண்டனர். சென்னையில் உள்ள சிலை கொடுங்கோலன் நீல் சிலை என்று உணர்ந்தனர். போராட்ட உணர்வு, அந்நிய ஆதிக்கத்தின் ஒவ்வோர் எச்சத்தையும் எதிர்த்துத் தூளாக்கும் உணர்வு கொண்ட இளைஞர் கூட்டம் நீல் சிலை அகற்றப்படவேண்டும் என்ற அவாவினை நெஞ்சத்தில் ஏந்தினர்.

இதற்கு முன்னோடியாக விளங்கியவர் என்.கே.திருமலாச்சாரியார். 'இந்து' இதழில் நீல், கொடுங்கோலன், சென்னையில் சிலை இருப்பது அவமானம், அச்சிலை அகற்றப்படவேண்டும் என்று அறிக்கை ஒன்று வெளியிட்டார். இதனைப் படித்த இளைஞர்களின் தேசிய உணர்வு பட்டை தீட்டப்பெற்ற கூர்வாளாயிற்று.

1927 ஆகஸ்டு 11ஆம் நாள் காலை முகம்மது சாலியா, சுப்பராயலு என்னும் விடுதலைப்போர் வீரர்கள், சிலையின் ஏணியில் ஏறி நீல் சிலையினைச் சிதைக்கத்தொடங்கினர். நீல் சிலையின் கையிலிருந்த வாள் முனையினை ஒன்றரைஅடி சிதைத்தனர். வெண்கலச் சிலையாயிற்றே. அவ்வளவு எளிதாக நீக்கிட இயலுமா?



அவ்வழியே பலரும் சென்றனர். இன்று போல் அன்றைய 'மவுண்ட் சாலை' அவ்வளவு மக்கள் கூட்டம் செல்லும் சாலை இல்லை-என்றாலும், பலரும் அவ்வழியே சென்றனர். சென்றவர் எவருக்கும் சிலை அழிப்புப் போர் நடைபெறுகிறது, சிலை சிதைப்பு வேலை நடைபெறுகிறது என்ற எண்ணமில்லை. சிலையைத் தூய்மைப்படுத்துகிறார்கள் என்றே பலரும் எண்ணிச் சென்றனர்.

ஆனால் அவ்வழியாகச் சென்றவர்களில் ஒருவரான 'மெட்ராஸ் மெயில்' பத்திரிகை ஆசிரியர் 'வெல்பி' என்ற ஆங்கிலேயர் மட்டும், சிலையில் நடப்பது துடைப்புப்பணியல்ல, உடைப்புப்பணி என்று உணர்ந்து தெளிந்துகொண்டார். அலுவலகம் சென்றவர் காவல் துறைக்குத் தகவல் அளிக்கவும் தயங்கவில்லை. காவலர்கள் வந்தனர், கைது செய்தனர் அவர்கள் இருவரையும். ஆறு மாதச் சிறைத்தண்டனை ஏற்றனர் அவ்விருவரும்!



இதனைப் பொதுமக்களுக்கு அறிவித்து அவர்களுடைய உணர்ச்சிகளைத் தூண்டிடப் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. சிலையை அகற்றும் போராட்டம் குறித்துப் பொதுக்கூட்டம் நடத்தியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் குடியாத்தம் சாமிநாதன், சேலம் சுப்பிரமணியம், டி.ஜி. இலட்சுமணசாமி, பண்ருட்டி தேவநாகய்யா முதலியவர்கள்.

விடுதலைப் போராட்ட வீரர் எஸ்.என்.சோமையாஜுலு நீல் சிலையகற்றும் போராட்டம் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தியதற்காக ஐந்து மாதக் கடுங்காவல் தண்டனை பெற்றார்.

அதன்பின் புலுசு சாம்பமூர்த்தி சிலையகற்றும் போராட்டத்தைத் தொடர்ந்தார். இப்போராட்டம் ஆடவர்கள் மட்டுமே பங்கேற்ற போராட்டமல்ல. விடுதலை வேள்வியில் பெண்களும் பங்கேற்ற வீரப்போராட்டம் என்றும் கூறலாம். இப்போராட்டத்தில் பங்கேற்ற வீரப்பெண்மணி கடலூர் அஞ்சலையம்மாளின் பங்கு குறிப்பிடத்தக்கது.

அஞ்சலையம்மாளின் குடும்பமே சிலையகற்றும் சீரிய போராட்டத்தில் பங்கேற்றது. கைக்குழந்தையோடு காராக்கிரகம் சென்றார் அஞ்சலையம்மாள். அன்றைய நாளில் கைக்குழந்தையோடு சிறைசென்ற நிகழ்ச்சி இல்லம்தோறும் பரபரப்பாகப் பேசப்பட்ட நிகழ்ச்சி.

இப்போராட்டத்தில் பங்கேற்றவர்களில் குறிப்பிடத்தகுந்த வேறுசிலர், திருமங்கலம் நித்தியானந்தம் அடிகள், டி.செ.சொக்கலிங்கம், செ. வெங்கட்டராமன், மதுரை சிதம்பர பாரதி, சேலம் சுப்பிரமணியம், விருதுநகர் முத்துசாமி, டி.ஜி.இலட்சுமணிசாமி ஆகியோர்.

நீல் சிலையகற்றும் இப்போராட்டம் காந்தியண்ணலின் வாழ்த்தைப் பெற்ற போராட்டங்களில் ஒன்று

இராஜாஜி முதலமைச்சராகப் பதவியேற்றதும் இந்தக் கொடுங்கோலனின் சிலையகற்றப்பெற்றுச் சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டது.

இன்றும் அச்சிலை விடுதலைப்போரின் ஒருபெரும் உணர்ச்சிப் போராட்டத்திற்கு மௌன சாட்சியாக அங்கே இருக்கிறது.

ஒருநாள் 'முரசொலி'க்கான எந்தச் செய்தியையுமே அவர்கள் அனுமதிக்காத நிலை வந்தபோது - 'வெண்டைக்காய் விலை குறைவு விளக்கெண்ணெய் உடம்புக்கு நல்லது' என முதல் பக்கமே வேடிக்கையாக ஒரு 'பேனர்' செய்தியையே முரசொலியில் வெளியிட்ட வேதனையான வேடிக்கையையும் இந்த நாடு கண்டிருக்கிறது.

எனினும், அவ்வாறான கெடுபிடிகளையெல்லாம் தாண்டி - நெருப்பில் பூத்த மலராக உருவான மகத்தான மக்கள் தொடர்புச் சாதனங்களான பத்திரிகைகளின் பணி துப்பாக்கித் தோட்டாக் களைவிட எழுத்தின் வலிவே இணையற்றது என்பதை உலகுக்கு உணர்த்திவிட்டது.

**இன்னல்கள் தீர்ந்தன!**



இந்தியா சுதந்திரம் பெற்று விட்டது; நம் இன்னல்கள் யாவும் தீர்ந்து பொய்யாகிவிட்டன!

'செய்தி' என்கிற சொல்லுக்கு நமது தலைவர் முதல்வர் கலைஞர் அவர்கள் ஒருமுறை வேடிக்கையாகச் சொன்ன விளக்கம் இங்கே குறிப்பிடத்தக்கது:

"செய்யப்படுகிற காரியங்கள், தீப்போலப் பரவுவதால் 'செய்தீ' என்கிற சொல் உண்டாகி யிருக்கலாம் போலும்!"

- அவர் இப்படிச் சொன்னது உண்மைதானே? செய்திகள்தான் எத்தனை வேகமாகப் பரவு கின்றன! வேகம் சரிதான், ஆனால் விவேகம் தேவையில்லையா? உங்கள் சிந்தனைக்கே விட்டு விடுகிறேன்.

- பி.எல். ராஜேந்திரன்

---





சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக பண்டித ஜவஹர்லால் நேரு 15.8.1947 அன்று பதவி ஏற்கிறார்.



# மருத்துவம்: இரத்தக் கொதிப்பு

டாக்டர் என்.சுவாமிநாதன்

பொதுவாகவே, மக்களுக்கெல்லாம் வரவரத் தேவைகள் அதிகமாகிவிட்டன; இதனால், தேவையில்லாத பரபரப்புக்கு அவரவரும் ஆளாகிவிடுகின்றனர்.

பணம், பணம், பணம் - இதுதான் எல்லோருடைய வேகத்திற்கும் அவசரத்திற்கும் அடிப்படைக் காரணமாக இருக்கிறது. பிள்ளைகளை மேல்படிப்பு படிக்கவைக்க, ஊரே மெச்சும்படி திருமணம் நடத்த, மாடிமேல் மாடி வைத்து என்று கூட அல்ல; ஒரே ஒரு மாடியுடனாவது வீடுகட்ட, வண்டி - வாகன வசதியை உண்டாக்கிக் கொள்ள, பார்ப்பவர்கள் வியக்கும்படியான பரவச வாழ்க்கை வாழ, எப்பாடுபட்டாவது - நகை நட்டுகளை, நிலபுலன்களைப் பெருக்கிக் கொள்ள என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான ஆசைகளுக்கு உள்ளாகி, அதையும் அவசரமாகச் சாதித்துவிட வேண்டும் என்கிற பரபரப்போடு பம்பரம்போல இயந்திர கதியில் வாழ்க்கை நடத்த ஆரம்பித்து விட்டனர்.

வீணான இந்த வேகம்தான் பலவகையான நோய்களுக்கும் மூலகாரணமாகி விடுகிறது. குறிப்பாக - சாதாரணமாக அவரவருக்கும் உள்ள இரத்த அழுத்தமானது - உயர் இரத்த அழுத்தமாக, இரத்தக் கொதிப்பாக மாற இவ்வாறான பரபரப்பும், படபடப்பும் முக்கியக் காரணங்களில் ஒன்றாக அமைகிறது.

## இரத்த அழுத்தம்

நம் உடலில், இரத்தம் இதயத்திலிருந்து வெளியேறி, இரத்தநாளங்கள் வழியாக உடலின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று, திரும்பவும் இதயத்திற்கு வருவதற்கு ஒரு குறிப்பிட்ட அழுத்தம் (Pressure) இரத்த நாளங்களில் தேவைப்படுகிறது. இதையே இரத்த அழுத்தம் என்கிறோம்.

உதாரணத்திற்கு நம் வீட்டில் உள்ள தண்ணீர்க் குழாய்களில் தண்ணீர் சீராக வரவேண்டுமென்றால் அதற்கு ஒரு குறிப்பிட்ட அழுத்தம் (Pressure Head) தேவைப்படும் அல்லவா? அதைப் போல்தான் இதுவும். தோராயமாக நார்மல் இரத்த அழுத்தம் என்பது 120/80 இருக்க வேண்டும். நார்மல் இரத்த அழுத்தத்தின் வரையறை வயதிற்கேற்ப மாறுபடும்.

இதில் 120 என்பது சிஸ்டாலிக் (Systolic BP) எனவும் (இதயம் சுருங்கும்போது ஏற்படும் அழுத்தம்), 80 என்பது 'டயஸ்டாலிக்' (diastolic BP) எனவும் (அதாவது இதயம் விரியும் போது டயஸ்டாலிக் உள்ள அழுத்தம்) அழைக்கப்படுகிறது. இரத்த அழுத்தம் ஒரு சராசரி மனிதனுக்கு 140/90 என்பதற்குமேல் இருக்குமானால், அது உயர்இரத்த அழுத்தம் என்று அழைக்கப்படுகிறது. இதையே பேச்சு வழக்கில் 'ஹை/பிபி' (High BP) எனவும், இரத்தக் கொதிப்பு எனவும் குறிப்பிடுகிறோம்.



## இரத்தக் கொதிப்பினால் ஏற்படும் விளைவுகள்

இயல்பிலேயே, ஒருவருக்கு வயது ஏறஏற இரத்தக் குழாய்களில் அவர்களின் வயதிற்கேற்பக் கொழுப்பு (Cholesterol) படியும் அவ்வாறு கொழுப்புப் படிவதனால் இரத்தக் குழாயின் விட்டத்தின் அளவு குறைந்துவிடும். இதுமட்டுமன்றி, அதனுடைய விரிவடையும் தன்மையும் குறைந்துவிடும். உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு, இந்தக் கொழுப்பு படிவதானது மிகவும் விரைவில் நடைபெறும்.

அளவுக்கு அதிகமாகவும், விரைவாகவும் இக்கொழுப்பு படியும்போது, இரத்தக் குழாயின் விட்டம் மேலும் குறைந்து, இக் காரணத்தால் அதனூடே செல்லும் இரத்த ஓட்டத்தின் வேகம், மட்டுமன்றி அளவும் குறைந்துவிடுகிறது. மேலும் இரத்த ஓட்டத்தின் வேகக் குறைவு இரத்தம் நாளங்களுக்குள் உறைவதற்கும் (clotting) ஏதுவாகிறது.

அதுமட்டுமல்ல; இரத்த அழுத்தம் மிகவும் அதிகமாகும்போது இரத்த நாளங்கள் வெடித்து, இரத்தக் கசிவு உண்டாவதற்கும் வாய்ப்பாகிவிடுகிறது.

இவ்வாறு ஏற்படும் இரத்த ஓட்டக்குறைவு, உறைதல், இரத்தம் கசிதல் காரணமாகப் பல்வேறு உடற்பகுதிகளின் இயக்கம் மிகவும் பாதிக்கப்படுகிறது. மாரடைப்பு, பக்கவாதம் போன்றவை அதற்கு உதாரணங்களாகும்.

மேலும், புகைபிடித்தல், சர்க்கரை வியாதி, பருமனாயிருப்பவர்கள் மற்றும் உணவில் அதிக அளவு கொழுப்புச் சத்து சேர்த்துக் கொள்பவர்களுக்கு மேற்கண்ட பாதிப்புகள் - குறைந்த வயதிலும்கூட மிகவும் தீவிரமாகவும் ஏற்பட வாய்ப்புகள் அதிகம் உள்ளது.

இதயத்திற்குச் செல்லும் இரத்த நாளங்களில் இரத்த ஓட்டம் தடைபடுவதால் மாரடைப்பு நோய் ஏற்படுகிறது. (Heart attack). இது, உயிருக்கே ஆபத்தை உண்டாக்கும் மிகவும் கொடிய நோயாகும். ஏறத்தாழ இந்நோய்கண்ட 50 சதவிகிதத்தினர் மருத்துவமனையை அடையுமுன்னரே இறந்துவிடுகிறார்கள்.

மூளைக்குச் செல்லும் இரத்தக் குழாய்கள் அடைபடுவதால் பக்கவாதம் (Paralysis) மற்றும் இரத்தக் கசிவு ஏற்படுவதால் மயக்கநிலை (coma) ஆகியவை ஏற்படலாம். கண்களுக்குச் செல்லும் இரத்தநாளங்கள் உயர் இரத்தம் காரணமாகப் பாதிக்கப்படுவதால் கண்பார்வை குறையலாம் (Hypertensive Retinopathy); மேலும் சிறுநீரகத்தின் இயக்கமும் இதனால் பாதிக்கப்படக்கூடும் (Renal Failure).

**காரணங்கள்**

ஏறத்தாழ 95 சதவிகிதம் பேர்களைப் பரிசோதித்தோமானால் -



இந்நோய்கான குறிப்பிட்ட காரணம் எதுவும் இருப்பதில்லை. இதனை 'எசன்ஸியல் ஹைபர்டென்ஷன்' (Essential Hypertension) என்று குறிப்பிடுகிறோம்.

மீதமுள்ள 5 சதவிகிதம் பேர்களில், உயர் இரத்த அழுத்தமானது கீழ்க்கண்ட ஏதாவது ஒரு காரணத்தினால் இருக்கலாம்.

1. சிறுநீரக நோய்கள்
2. கட்டிகள் - அட்ரினலின் சுரப்பி கட்டிகள் (Phaeochromocytoma, Conn's Syndrome)
3. பிறவி இதயவியாதிகள் முக்கிய இரத்தக் குழாய் சுருங்கி இருத்தல் (Coarctation Aorta)
4. நீண்ட நாட்களுக்குக் கருத்தடை மாத்திரைகள் உட்கொள்ளுதல்
5. கர்ப்பத்தினால் ஏற்படும் உயர் இரத்த அழுத்தம் (Pregnancy Induced Hypertension)

**நோய் அறிகுறிகள்**

உயர் இரத்த அழுத்தத்திற்கென்று குறிப்பிட்ட அறிகுறிகள் என்று தனிப்பட ஏதும் கிடையாது. பெரும்பாலானவர்களுக்கு உயர்இரத்த அழுத்தத்தினால் ஏற்படும். பின்விளைவுகள் (complications) தான் அவர்களை மருத்துவக் கவனிப்பின் கீழ் கொண்டுவரும்.

உதாரணம் மாரடைப்பு, பக்கவாதம் ஆகியவை ஏற்பட்ட பின்பே மருத்துவக் கவனிப்பின்கீழ் அவர்கள் வருகின்றனர்.

தலைவலி, தலைசுற்றல், மூக்கிலிருந்து இரத்தம் வடிதல் ஆகியவை உயர்இரத்த அழுத்தத்தின் அறிகுறிகளாகக் கருதப்பட்டாலும், பெரும்பாலான இரத்தக்கொதிப்பு நோயாளிகளுக்கு அறிகுறிகள் ஏதும் இருப்பதில்லை. இதையே வேறுவிதமாகக் கூறினால் சமுதாயத்தில் உள்ள இரத்தக்கொதிப்பு நோயாளிகளில் 50 சதவிகிதத்தினரே இனம் கண்டுபிடிக்கப்படுகின்றனர். அவர்களில் 50 சதவிகிதத்தினரே தொடர்ந்து முறையாக மருத்துவரிடம் பரிசோதித்துக் கொண்டு மருந்துகள் உட்கொள்கின்றனர். அவர்களிலும்கூட 50 சதவிகிதத்தினர்க்கே இரத்த அழுத்தம் மருந்துகளுக்கு முழுமையாகக் கட்டுப்படுகின்றது.

ஆனால், மக்களிடையே உள்ள இது குறித்த விழிப்புணர்வு காரணமாக மேற்கூறிய புள்ளிவிவரத்தில் இப்போது மெச்சத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று சொல்லலாம். இப்போதுள்ள உடல்நலம் பற்றிய விழிப்புணர்வு காரணமாகவும், அறிவியல் முன்னேற்றம் காரணமாகவும் பெரும்பாலான இரத்தக் கொதிப்பு நோயாளிகள் ஆரம்ப நிலையிலேயே கண்டு பிடிக்கப்பட்டு, தற்போதைய மிகச்சிறந்த பயனளிக்கும் மருந்துகளால் இரத்த அழுத்தம் கட்டுப்படுத்தப்படுகின்றனர்.

ஆயினும், இன்னமும் சிலர் தமக்கு இரத்தக்கொதிப்பு நோய் என்று கண்டுபிடிக்கப்பட்ட பிறகும், அதன் காரணமாகத் துவக்க காலத்தில் எந்த ஒரு சங்கடமும் (Symptoms) இல்லாததால், மிகவும் அலட்சியமாக இருந்துவிடுகின்றனர்; மருத்துவர் அறிவுரைகளையும் பின்பற்றுவதில்லை.

இதனால் பிற்காலத்தில் இவர்கள் இரத்தக் கொதிப்பின் மோசமான பின்விளைவுகளால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்; மாரடைப்பு, பக்கவாதம், சிறுநீரகக் கோளாறு (Heart attack, Paralysis, Renal failure) போன்றவற்றுக்கு ஆளாகிறார்கள்.

**மருத்துவ அறிவுரைகள்**

35 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தங்களது இரத்த அழுத்தத்தைக் கட்டாயமாகப் பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

உயர் இரத்த அழுத்தம் கண்டுபிடிக்கப்பட்டால், தக்க மருத்துவரின் ஆலோசனையை தவறாது பின்பற்ற வேண்டும். குறிப்பாக உணவில் உப்பின் அளவை மட்டுப்படுத்தவேண்டும்.

1. உடல் பருமன் அதிகமாக இருந்தால் குறைக்க வேண்டும்.
2. புகைபிடித்தல், மது அருந்துதலைத் தவிர்க்கவேண்டும்.
3. சர்க்கரை வியாதி இருந்தால், அதற்கான மருத்துவம் செய்துகொள்ள வேண்டும்.
4. கொழுப்பு மிகுந்த உணவுப் பொருட்களைத் தவிர்க்க வேண்டும்.
5. மருத்துவரின் ஆலோசனைப்படி உடற்பயிற்சி, யோக முறைகள், தியான முறைகள் ஆகியவற்றையும் கடைப்பிடிக்கலாம்.
6. முடிந்தவரையில் வாழ்க்கைப் பிரச்சினைகளை நிதானமாகவும், படபடப்பில்லாமலும் எதிர்கொள்ளப் பழக வேண்டும்.
7. இதனுடன் இரத்தக்கொதிப்பைக் கட்டுப்படுத்தும் மாத்திரைகளையும் மருத்துவர் பரிந்துரைப்படி உட்கொள்ள வேண்டும்.
8. மேலும் இதற்கான மாத்திரைகளைப் பெரும்பாலானவர்கள் வாழ்நாள் முழுவதும் உட்கொள்ள வேண்டியிருக்கும். மாத்திரை போட்டதும் 'இரத்த அழுத்தம் சீராக (Normal) வந்துவிட்டது, ஆகையால் இனி மாத்திரை தேவையில்லை' என்று விட்டுவிடுதல் கூடாது.
9. குறைந்தபட்சம் மூன்று மாதத்திற்கு ஒரு முறையாவது மருத்துவப் பரிசோதனையும், ஆண்டிற்கு ஒரு முறை இரத்தப் பரிசோதனை, எக்ஸ்-ரே, ஈ.சி.ஜி. சோதனை ஆகியவையும் செய்துகொள்ள வேண்டும்.
10. மருத்துவரின் ஆலோசனைகளைத் தவறாது அப்படியே பின்பற்றவேண்டும்.

மேற்கூறிய அறிவுரைகளைப் பின்பற்றி, இரத்தக்கொதிப்பை மட்டுப்படுத்தி, நோயற்ற வாழ்வாகிய குறைவற்ற செல்வத்தைப் பெற மக்கள் முயலவேண்டும்.

இதைப் பற்றி ஒரு தனிப் புத்தகமே எழுதும் அளவுக்குச் செய்திகள் உண்டென்றாலும், சுருக்கித் தரப்பட்டிருக்கிறது; இரத்தக் கொதிப்பு பற்றி மேலும் விவரம் அறிய விரும்பினால், தக்க மருத்துவரிடமே ஆலோசனை கேட்கலாம். ●

## பெரியாரின் பிரிவாற்றாமை !

பெண்களுக்கு எதிலும் சமத்துவம் தரவேண்டும் என்று பாடுபட்டவர் தந்தை பெரியார். போராட்டங்களிலே கூட, ஆண்களோடு பெண்களும் இணைந்து போராட வேண்டும் என்று வலியுறுத்திவந்தார். தனது மனைவி

நாகம்மையாரையும், தம்மோடு போராட்டங்களிலே ஈடுபடுத்தி அவர் சிறைபுகுந்ததும் உண்டு.



நாகம்மையார் மறைந்தபோது, பெரியார் அந்தத் துயரம் ஆற்றொணாது எழுதிய வரிகள் நம் கண்ணிலும் கண்ணீர் வரவழைத்துவிடும்.

இதோ, தம் மனைவியின் பிரிவாற்றாமல் பெரியார் எழுதியதைத்தான் பாருங்களேன்.

"நான் சுயநல வாழ்வில் 'மைனாராய்' 'காலியாய்' 'சீமானாய்' இருந்த காலத்திலும், எனக்கு வாழ்வின் ஒவ்வொரு துறையின் முற்போக்குக்கும் நாகம்மாள் எவ்வளவோ ஆதாரமாய் இருந்தார் என்பது மறக்க முடியாத காரியம்!"

"நாகம்மாள் உயிர் வாழ்ந்ததும், வாழ ஆசைப்பட்டதும் எனக்காகவே ஒழிய தனக்காக அல்ல என்பதை ஒவ்வொரு விநாடியும் நான் நன்றாய் உணர்ந்து வந்தேன்.

நாகம்மாள் மறைந்தது எனக்கு ஒரு
அடிமை போயிற்றென்று சொல்லட்டுமா?
ஆதரவு போயிற்றென்று சொல்லட்டுமா?
இன்பம் போயிற்றென்று சொல்லட்டுமா?
உணர்ச்சி போயிற்றென்று சொல்லட்டுமா?
ஊக்கம் போயிற்றென்று சொல்லட்டுமா?
எல்லாம் போயிற்றென்று சொல்லட்டுமா?

எதுவும் விளங்கவில்லையே!"

- அடடா, எவ்வளவு மனக்கிரக்கம் இருந்தால் இவ்வாறெல்லாம் எழுதியிருப்பார் பெரியார்?

-செய்தி : ந. தியாகராசன்

ஆசியாவிலே முதன் முதலில் கலர் பட்டாசுகளை
பொட்டாசியம் குளோரைடு இல்லாமல்
தயார்செய்து அறிமுகப்படுத்தியவர்கள்

Telex : 0448-245 CORO IN

Office : 72043
24346

☆☆☆☆
☆☆☆
☆☆
☆

**SRI CORNATION FIRE WORKS**

☆
☆☆
☆☆☆
☆☆☆☆

Post Box No.278,
Sivakasi - 626 123.
Tamil Nadu.
Grams : STORK



50

# தமிழகத்தின் முதல் கல்வியமைச்சர்

அண்ணல் காந்தியடிகள் சிறப்பான விஷயங்களைப் பற்றியே சிந்தித்தார்; அந்தச் சிந்தனைகளைச் செயல்படுத்தவே கண்துஞ்சாமல், பசி நோக்காமல் பாடுபட்டார்; தன்னலத்தைவிடப் பொது நலத்தையே அவர் பெரிதும் கருதினார்; வீட்டுப் பிரச்சினைகளைவிட, நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலேயே நாட்டம் செலுத்தினார்; மற்றவர்களின் துயர்துடைக்கும் பணியில் ஈடுபடும்போது, அதன் காரணமாகத் தனக்கு வரும் துன்பங்களைக் கண்டு அஞ்சினாரில்லை; தெய்வபக்தி கொடுத்த தெம்போடு தியாகத் தழும்புகளை ஏற்றார்; தன்னை இம்சைக்குள்ளாக்க முயன்றவர்கள் முன்பும் அகிம்சையே வலிமை மிக்கதென வாதாடினார்; அவரது தலைமையை நம்பி ஏற்றவர்கள் கெட்டதில்லை; நம்பாதவர்கள் மனநிம்மதியோடு வாழ்ந்ததில்லை.

இத்தகைய இணையற்ற தன்மைகளாலும், பண்புகளாலும்தான், காந்தி - மகாத்மா காந்தியானார் என்பதே உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை!

## காந்தி வழி நடந்தவர்

அந்தத் 'தேசப் பிதா'வின் கொள்கைக் கோட்பாடுகளிலே பெரிதும் நம்பிக்கை வைத்து, அன்னாரின் அடியொற்றி நடந்தவர்கள் தமிழ்நாட்டில் பலர் உண்டு; அவர்களில் குறிப்பிடத்தக்க ஒரு பெருந்தகையாளரே திரு. தி.சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களாவார்.

மகாத்மா காந்தியடிகளாரைத் 'தலைவர்' என்றழைத்துத் தம் இதயம் பூரிக்கும் அவர், தமது அணுக்கத் தொண்டர்களாலே "ஐயா" என்றே அன்புடன் அழைக்கப்பட்டார்.

இருபது வயது இளமைக் காலத்திலேயே - ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், சுவாமி விவேகானந்தர், மஹாபுருஷ்ஜி மஹாராஜ் என்றழைக்கப்படும் சுவாமி சிவானந்தா ஆகியோரின் பக்தி மார்க்கமே சக்தி மார்க்கம் என்ற எண்ணம் அவர் நெஞ்சில் ஆழப் பதிந்திருந்தது. நாளடைவில் மகாத்மா காந்தியடிகளாரின் பெரு முயற்சியால் இந்தியாவில் மூண்ட விடுதலை எழுச்சி அவரை முழுவதுமாக ஆட்கொண்டுவிட்டது.

அரசியல் ஈடுபாடு கொள்ளும் தம் விருப்பத்தை அவர் மிகுந்த பணிவோடு சுவாமி சிவானந்தாவிடம் தெரிவித்து அனுமதி வேண்டினார். மக்களுக்குத் தொண்டாற்றுவதும், இறைவனுக்குத் தொண்டு புரிவதும் வெவ்வேறல்ல என்ற கருத்தில் சுவாமிகள் அவரை ஆசீர்வதித்தார்.



"அச்சத்தை விடு, அன்புமகனே! நீண்ட நெடுங்காலம் நலமுற நம்மோடு வாழ்ந்திருக்கப் போகிற உனக்கு, எமது இதய அன்பும் நல்வாழ்த்தும் எப்போதும் உண்டு.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரை என்றும் எண்ணிச் செயல்படு; அவரிலிருந்து உன்னையோ உன்னிலிருந்து அவரையோ பிரிக்க முடியாதிருக்கையில் உனது செயல்கள் யாவும் வெற்றி பெறும். அவர் அருளாசியால் உன் கொள்கைகளுக்கு உறுதி சேரும்; வெற்றிப் பாதையில் சுவாமிகள் உன்னை வழி நடத்துவார்..." என்றெல்லாம் வாழ்த்தி வழியனுப்பி வைக்கப்பட்டார் அவர்.

மற்றவர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளுவதற்கல்ல; மற்றவர்களுக்குக் கொடுத்து மகிழ்வதற்கே வாழ்க்கை என்கிற உயரிய நெறிப்படி வாழ்ந்துவந்தார். இந்த ஒப்பற்ற மனிதர் உன்னத சேவைகள், நல்லிதயங்களால் பெரிதும் மதிக்கப்பட்டதுண்டு. 1920ல், முதன்முதல் சந்தித்தபோதே அண்ணல் காந்தியடிகள் [illegible] மனந்திறந்து [illegible]

### நான்கு முறை சிறைவாசம்

நாடு நலம் பெறுவதற்காகவும், அடிமையிருள் விலகி நாமெல்லாம் சுதந்திர ஒளி பெறுவதற்காகவும் எழுச்சிமயமாக மூண்ட விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டதனாலே 1930, 1932, 1941, 1942 ஆகிய ஆண்டுகளில் அவர் நான்கு முறை சிறைவாசம் சென்றதுண்டு. அப்போதெல்லாம் கிடைத்த ஒய்வில் கம்பராமாயணத்திலும், திருக்குறளிலும் அவர் மனம் லயித்தது.

துவளாத தொண்டுள்ளத்திற்குச் சொந்தக்காரரான அவர், 1934ல் மத்திய சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; 1951ல் லோக் சபை உறுப்பினராகத் தேர்வு பெற்றார். 1957ல் ராஜ்ய சபை உறுப்பினராகிப் பெருமை பெற்றார். 1964ல் மீண்டும் லோக் சபைக்கும் சிபாரிசு செய்யப்பட்டார்.

1946ல் அவர் கல்வியமைச்சராக இருந்த காலம், தமிழ்நாட்டின் பொற்காலம் என்றே குறிப்பிடப்படும் அளவுக்குப் பெருமை பல பெற்றதாகும். ஆம்; அப்போதுதான், தமிழகத்தில் அடிப்படைக் கல்வித்திட்டம் - கொண்டுவரப்பட்டது. திருத்தியமைக்கப்பட்ட மேநிலைக் கல்விமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

பண்டிதர்கள் மட்டுமே படித்துப் பரவசப்பட்டுக் கொண்டிருந்த திருக்குறளை இன்றைக்குப் பாமரரும் கற்றுக் களித்திடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறதே? அதற்கு முழுமுதல் காரணகர்த்தாவே அவர்தான்!

ஆம்; அவர் கல்வியமைச்சராக இருந்த காலத்திலேதான், ஆறாம் வகுப்புப் பாடத் திட்டத்தில் திருக்குறள் சேர்க்கப்பட வேண்டும் என்ற சட்டம் வகுக்கப்பட்டது.

தமிழை முதன்முதலில் நம் பாடமொழியாக்கிய புகழுக்குரியவரும் அவர் தான். மகாகவி பாரதியாரின் கவிதைகளையும், அவரது படைப்புக்களையும் நாட்டுடைமை ஆக்கி அரசுப் பதிப்பாக முதன்முதல் வெளியிட்ட பெருமையாளரும் அவர்தான்.

### கலைக்களஞ்சியம்

தாயாம் தமிழில் உள்ள நம்மைத் தலை சுற்ற வைக்கும் சொற்களுக்கு விளக்கம்பெற 'கலைக் களஞ்சியத்'தைப் புரட்டுகிறோமே? 'குழந்தைகள் கலைக் களஞ்சியத்'தைக் கண்டு குதூகலிக்கிறோமே? அவைகளெல்லாம் உருவாக முதல் விதை ஊன்றியவரே திரு.தி.சு. அவினாசிலிங்கம்.

தமிழ்நாட்டில் உள்ள குக்கிராமங்களிலே கூட இன்று நூலக இயக்கம் காலூன்றிக் கிளர் பெற்றிருக்கிறதல்லவா? அவர் அரும்பாடுபட்டு வகுத்த நூலகச் சட்டதிட்டங்களே அதற்கெல்லாம் அடிப்படைக் காரணம்.

தன்னுடைய தந்தையார் பெயரிலும், தாயார் பெயரிலும் இரண்டு பாடசாலைகளை நிறுவ அவர் மேற்கொண்ட முதல் முயற்சி - இன்னும் பல்வேறு கல்விச் சாலைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

தீண்டாமையின் வேரறுக்கப் பாடுபட்ட மகாத்மா காந்தியடிகள் அடிக்கல் நாட்ட, அவர் உருவாக்கிய ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயம், கோவை மாவட்டத்தில் உள்ள பெரியநாயக்கன் பாளையத்தில் இப்போதும் ஒப்பற்ற ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது.

அதைத் தொடர்ந்து உருவான கலைக் கல்லூரி, அறிவியல் கல்லூரி, உடற்பயிற்சிக் கல்லூரி, தொழில்பயிற்சிக் கல்லூரி, வேளாண்மைக் கழகம் - ஆகிய பலவும் அவர் புகழைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' என்ற தேசிய கவி பாரதியின் வாக்கை மெய்ப்பிக்க அவர் எடுத்துக்கொண்ட முயற்சி மகத்தானது. கோவையில் உள்ள மகளிர் மனையியல் கல்லூரி அதற்கு மிகச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு.

கிராமப்புற வளர்ச்சி கருதி அவர் தோற்றுவித்த விவேகானந்தாபுரம் மையம் நூற்றுக்கணக்கான கிராமங்களை அரவணைத்து ஆக்கம் பெறச் செய்து வருவது, உலகறிந்த உண்மையாகும்.

இப்படிப்பட்ட - இன்னும் ஏராளமான இணையற்ற சேவைகளுக்காக, புகழ்தகுந்த புனிதத் தொண்டுகளுக்காக இந்திய அரசு அவருக்குப் 'பத்மபூஷன்' விருது வழங்கிப் பாராட்டியது. தமிழ் நாடு அரசு 'செந்தமிழ்ச் செல்வர்', 'தமிழ்ச் செம்மல்' விருதுகளை வழங்கிச் சிறப்பித்தது. தமிழ்ப் பல்கலைக் கழகம் 'டாக்டர்' பட்டம் அளித்துப் பெருமை கொண்டது. 'ஜம்னாலால் பஜாஜ் விருது'ம் அந்த சரித்திர புருஷருக்குத் தந்து சிறப்பிக்கப்பட்டது.

இவ்வளவு அரிய சிறப்புகளுக்கெல்லாம் உரியவரே திரு. தி.சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களாவார்.

- ராஜீ



# தென்னாட்டுத் திலகர்

- ஆர்.ஆர்.தளவாய்,
- டாக்டர் எம்.அசோகமித்திரன்

தென்னாட்டுத் திலகர் என்கிற அளவுக்குச் சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட்டு அரியது செய்த பெருமையாளர் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்கள்.

சேலம் மாவட்டத்தில் உள்ள ராசிபுரத்தில் 4.6.1887-ல் பெருமாள் நாயுடுவுக்கும் குப்பம்மாளுக்கும் மகனாகப் பிறந்தவர் அவர். எளிய குடும்பத்தில் பிறந்து வீர வாழ்வு வாழ்ந்தவர். தனது எட்டாவது வயதில் தந்தையையும் பனிரண்டாம் வயதில் தாயாரையும் இழந்தவர்; பிறகு கோவையில் உள்ள தன் தாயாரின் சகோதரியின் ஆதரவில் தான் அவர் கல்வி பயின்றார்.

இளைய வயதிலேயே வங்கப் பிரிவினை இயக்கம் வரதராஜுலுவைக் கவர்ந்தது. "வந்தே மாதரம் என்போம்; எங்கள் மாநிலத் தாயை வணங்குதும் என்போம்!" என்ற முழக்கத்தோடு வந்தேமாதர இயக்கத்தில் இணைந்தார். தனது உயர்நிலைக் கல்வியைத் தொடராமல் தேசப்பற்று மிக்கவராய், நாட்டுப் பணியில் முழுக்க முழுக்கத் தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்டார்.

பின்பு, கல்கத்தா தேசிய கல்லூரியில் சேர்ந்து இரண்டாண்டுகள் சித்த வைத்தியத்தை முறையே பயின்று தேர்ந்தார். தொடர்ந்து பர்மா மருத்துவக் கல்வித் துறையில் சேர்ந்து, தன்னை வளப்படுத்திக்கொண்டார். பிறகு திருப்பூரில் மருத்துவத் தொழில் தொடங்கி அங்கேயே வசித்துவந்தார். ஆண்டுக்கு ரூ.24,000 வருமானத்துடன் சிறந்து விளங்கி, சேலத்திலும் மருத்துவப் பணியை மேற்கொண்டார்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில், தொழிலாளர் இயக்கமும் பங்கு கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்பட்ட நேரம் அது. எனவே 1918-ல் மதுரை ஹார்வி மில்லில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் தாமும் கலந்துகொண்டு பல பொதுக்கூட்டங்கள் நடத்தி, மிகப்பெரிய வெற்றியும் கண்டார். இவரது பேச்சு தீவிரமுடையதாக இருப்பதைக் கண்ட இந்திய அரசு, இவரைக் கைது செய்து சிறையிலடைத்தது. அவ்வமயம் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் இவருக்காக வழக்கை நடத்தினார்கள்.

இவ்வழக்கின் விசாரணை அகில இந்திய அளவில் பத்திரிகைகளில் வெளியிடப்பெற்று ராஜாஜியின் வாதத் திறமையை வெளிப்படுத்தியது. ஆயினும் டாக்டர் நாயுடு 18 மாதங்கள் கடுங்காவலில் இருந்தார். இதனை எதிர்த்து "சுதேசமித்திரன்' பத்திரிகை ஆசிரியர் தலைமையில் எஸ்.சத்தியமூர்த்தி டி.வி. வெங்கட்ராமய்யர் முதலியோர் எதிர்ப்புக் குரல் கொடுத்தனர்.

திருச்சியில் டாக்டர் நாயுடுவின் அஞ்சா நெஞ்சத்தைப் போற்றிப்புகழ்ந்து மாபெரும் கூட்டம் ஒன்று ராஜாஜி



தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் 'தமிழ்த்தென்றல்' திரு.வி.கல்யாணசுந்தரனார் அவர்கள் கலந்துகொண்டு நாயுடுவின் வீரத்தை வானளாவப் புகழ்ந்துரைத்தார்கள். மராட்டியத்தில் திலகர் அவர்கள் தனது 'கேசரி' நாளிதழில், டாக்டர் நாயுடுவிற்கு வீர வணக்கம் செலுத்துவதாக எழுதினார்.

அவரது தண்டனையை எதிர்த்து, சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. அப்போது ராஜாஜியுடன் கே.சீனிவாச ஐயங்கார், 'அல்லாடி' கிருஷ்ணசாமி ஐயர் ஆகியோரும் நாயுடுவுக்காக வாதாடினார். ராஜாஜியின் சட்ட நுணுக்கத்தில் டாக்டர் நாயுடு விடுதலை பெற்றார்.

டாக்டர் நாயுடு தமிழ்நாடெங்கும் காங்கிரஸ் இயக்கத்தை மிகவும் முனைப்போடு பிரச்சாரம் செய்து வளர்த்த பெருமைக்கு உடையவராவார். 1917-ல் 'சென்னை மாகாணச் சங்கம்' என்று காங்கிரஸ் நோக்கத்திற்கேற்ப தென்னாட்டில் உள்ள பிராமணர் அல்லாதவர் நலனுக்காகத் திவான் பகதூர், குத்தி கேசவப்பிள்ளையைத் தலைவராகக் கொண்டு, ஈ.வெ.ராமசாமி நாயக்கர், தஞ்சை சீனிவாசபிள்ளை, தி.வி.கோபாலசாமி முதலியார், டாக்டர் குருசாமிநாயுடு, டாக்டர் வரதராஜுலு நாயுடு, சர்க்கரை செட்டியார், திரு.வி.க. இவர்களால் ஏற்படுத்தப்பட்டது.

இச் சென்னை மாகாணச் சங்கத்தின் கொள்கையை அனைவரும் அறிந்திட வேண்டி, டாக்டர் வரதராஜுலு நாயுடு பிரச்சாரம் செய்தார்.

தென்னிந்தியாவில் பிராமணர், பிராமணர் அல்லாதார் தகராறு தீவிரமாக இருந்தபோது டாக்டர் நாயுடு அந்த வகுப்புக் கலவரங்களில் கலந்துகொள்ளாமல் ஒரு தேசியவாதியாகவே விளங்கினார்.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கில ஏட்டை முதலில் தொடங்கியவர் டாக்டர் நாயுடு அவர்களே ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது. டாக்டர் நாயுடு தமிழ்நாடு, தினசரி, ஆந்திரபிரஜா, இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற மூன்று பத்திரிகைகளின் ஸ்தாபகராவார். அரசியல், தொழிற்சங்கம், மருத்துவ




காந்தியடிகளின் கையெழுத்து



வரலாற்றுச் சிறப்புமிக்க 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானம் கொண்டுவரப்பட்ட பம்பாய் கூட்டத்தில் காந்தியடிகள் (1942).

மாநாடு, விவசாய முன்னேற்றம் சாதி ஒழிப்புக் கூட்டங்களிலும் தொடர்ந்து அவர் பங்காற்றினார்.

டாக்டர் வரதராஜுலு நாயுடுவின் வாழ்க்கைத் தொகுப்பை மையமாக வைத்துப் பல்கலைக்கழகத்தில் (Ph.D) பட்டம் பெற்ற மூவரில் தற்போது போக்குவரத்துத்துறை அமைச்சராக இருக்கும் டாக்டர் பொன்முடி அவர்களும் ஒருவராவார்.

தமிழ்நாடு அரசு, 9.8.1988 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடியது. அப்போது அரசு சார்பில் ''தேசிய சங்கநாதம்'' டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு வாழ்க்கைச் சுருக்கம் என்ற புத்தகமும், டாக்டர் நாயுடு நூற்றாண்டு விழா மலரும் வெளியிடப்பட்டன.

டாக்டர் நாயுடு அவர்கள் தேசியப் புகழ் வாய்ந்தவர் என்பதற்கு எடுத்துக்காட்டாக அவர் மறைந்த அன்று அரசுப் பணிகள் நிறுத்தப்பட, அன்றைய முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராசர் அவர்கள் ஆணை பிறப்பித்தார்.

இறுதிச் சடங்கிற்கு வேண்டிய ஏற்பாட்டை அவரே முன்னின்று செய்தார். இறுதி ஊர்வலத்தில் மூதறிஞர் ராஜாஜி, தந்தை பெரியார், ஈ.வெ.ரா., இஸ்மாயில் சாகிப் ஆகிய பெருந்தலைவர்கள் கலந்துகொண்டு இரங்கல் கூட்டத்திலும் பேசினார்கள். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் நாங்கள் தீவிரமாகச் செயல்படவும், அரசியலில் எங்கள் செயல்பாடு வேகமடையவும் காரணமாக இருந்தவர் தியாகி டாக்டர் நாயுடு அவர்கள் தான் எனவும் சமூக சீர்திருத்தத்திற்கு அரும்பாடு பட்ட மாமனிதர் அவர் என்றும் அக்கூட்டத்தில் அனைவரும் புகழ்ந்துரைத்தனர்.

1920 ஆகஸ்ட்டில் மகாத்மா காந்தியடிகள் திருப்பூர் வந்தபோது டாக்டர் வரதராஜுலு வீட்டில் தான் தங்கினார். தொடர்ந்து செப்டம்பரில் காந்தியடிகள் சேலம் சென்ற போதும் டாக்டர் நாயுடுவின் வீட்டில் தங்கினார். அவர் தங்கியதால் அந்தத் தெருவுக்குக் 'காந்திரோடு' என்று பெயர் இடப்பெற்றது.

டாக்டர் நாயுடு 'தமிழ்நாடு' என்ற வார இதழைத் தொடங்கி, பின்பு நாளேடாக நடத்தினார். 1922-ல் காந்தியடிகள் சிறை வைக்கப்பட்டபோது நாயுடு அவர்கள் அரசாங்கத்திற்குக் கட்ட வேண்டிய ரூ.3000 வருமான வரியைக் கட்ட மறுத்து, ஒருபுது முறையைக் கையாண்டார்.

அந்த வரியைக் காந்தியடிகள் விடுதலைக்குப் பிறகே கட்டமுடியும் எனவும் கூறிவிட்டார். அதனால், அவரது மோட்டார் காரையும், நிலத்தையும் அரசாங்கம் ஜப்தி செய்ய உத்தரவிட்டது.

நாயுடுவின் இச்செயலைக் காந்தியடிகளின் இளைய இந்தியா (Young India), திலகரின் 'மராட்டா' இதழ்கள் மிகவும் பாராட்டின.

டாக்டர் நாயுடு தமிழ்நாடு மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். இந்திய அளவில் செயற்குழு உறுப்பினராகவும் 1925, 1926ல் பணியாற்றினார்.

1951-ல் சென்னை மாநிலச் சட்டமன்றத்தில் மேலவை உறுப்பினராக சேலத்தில் இருந்து போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1952-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் சேலம் நகரத்தில் கம்யூனிஸ்ட் வேட்பாளர் மோகன் குமாரமங்கலத்தை நாயுடு எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெற்று, சட்டமன்றம் சென்றார்.

மக்கள் நலனைப் பெரிதும் போற்றி உரை நிகழ்த்தினார்.

அரசியலில் ஈடுபடுவதற்கு முன்பே டாக்டர் நாயுடு சமூக சீர்திருத்தப் பணியில் ஈடுபாடு கொண்டிருந்தார். அரிசன மக்கள் மேம்பாட்டுக்காகத் தொண்டாற்றினார். தீண்டாமையைக் குறித்து திருப்பூரில் மேல் சாதியினருடன் பேசி சமமாகப் பழகும் படி செய்தார். தன் வீட்டில் ஒரு அரிசனனையே சமையல் வேலைக்கு அமர்த்திக்கொண்டு மற்றவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார் அவர்.

1926-ல் நடந்த 3-வது ஆந்திர சமூக மாநாட்டில் ஆற்றிய தலைமையுரையில் டாக்டர் நாயுடு தீண்டாமையை ஒழிக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்திப் பேசினார். 1941-ல் கடலூரில் அரிசன ஆலயப்பிரவேசத்தை நிகழ்த்தினார் என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

சுதந்திரத் திருநாள் பொன்விழாக் கொண்டாடும் இந்நாளில், டாக்டர் நாயுடு அவர்கள் தன்நலம் கருதாமல் தேச விடுதலைக்காக ஆற்றிய அரும்பணியை யாரும் மறக்கமுடியாது! ★



சிறுகதை:

# வள்ளி திருமணம்

- அறிஞர் அண்ணா

வள்ளியின் 'ஆலோலம்' அந்தக் காட்டுக்கே ஓர் கீதம்; பறவைகள் அதைக்கேட்டு இன்புறவே தினைப்புனம் வரும், கதிர்களைக் கொத்துவதுபோலப் பாசாங்கு செய்யும், வள்ளி கவணை வீசிச் 'சோ! சோ!' என்று பாட்டிசைத்ததும், பறவைகள் தம்மை மறந்து மரக்கிளையில் அமர்ந்து இன்புறும். கீதம் நின்றால் ஒன்ஸ்மோர் கேட்பதுபோல், மீண்டும் தினையைத் தின்ன வரும்! மீண்டும் வள்ளியின் சங்கீத வாய்மொழி ஆரம்பமாகும். வேட்டையாடச்செல்லும் வீரர்கள், கொஞ்ச நேரம் வள்ளியின் விருந்தை அனுபவித்து விட்டுத் தான் போவார்கள்.

வரகவி சோமசுந்தரர், வள்ளி கலியாண காலட்சேபத்திலே மகா திறமைசாலி! வள்ளி, அன்று எண்ணாதனவெல்லாம் இவர் கூறுவார். வேலன் அன்று பேசாததை இவர் செப்புவார். பாட்டும் சுவையாக இருக்கும். மக்கள் அவருடைய காலாட்சேபத்தைக் கேட்டு மிக மகிழ்வர். அன்று அவர் ஆறுமுகம் பிள்ளையின் வீட்டிலே நடந்த திருமணத்திலே, வள்ளி கலியாணத்தை விமரிசையாக நடத்திக்கொண்டிருக்கையிலே, வள்ளி என்னும் ஓர் வனிதை, - குறக் குலப் பெண்ணல்ல, பிள்ளைவாள் வீட்டுப் பந்து... கேட்டு இன்புற்றாள். பிறகு தாகவிடாய் தீர்ந்ததடி தத்தையே! என் மோகவிடாய் தீர்க்காயோ தத்தையே! என்று விருத்த வேலர் கேட்ட பகுதியும், அவர் ஆணை வைத்த பகுதியும், பின்னர் மணந்ததுமாகிய பகுதிகளைக் காலட்சேபக்காரர் மிக ரசமாகக் கூறினார். வள்ளி அதனைக் கேட்டுக் களித்தாள். விடியற் காலை மூன்று மணி வரையிலே தூக்கம் வராமல் வீட்டின் மூன்றாவது கட்டிலே படுத்துப் புரண்டு கொண்டிருந்தாள். காலட்சேபக்காரரின் குறட்டை சங்கீதமாகவும், கொசுவை விரட்ட அவர் தட்டிக்கொண்டிருந்த சத்தம் தாளமாகவும் இருந்தது. மற்றவர்களும் உறங்கிக் கொண்டிருந்தனர். வள்ளியின் கண் மூடவில்லை. கருத்தும் தூங்க மறுத்தது.

'வள்ளிக் கணவன் பேரை
வழிப்போக்கன் சொன்னாலும்'

என்ற கிளிக்கண்ணியை எவ்வளவு அருமையாகப் பாடினார். தள்ளாடித் தள்ளாடி நடந்து காட்டினார் என்று காலட்சேபக்காரரின் திறமைகளை வியந்த வண்ணம் வள்ளி புரண்டுகொண்டிருந்தாள். காலடி சத்தம் கேட்டு, திடுக்கிட்டு யார் என்று பார்க்க - காலையிலே மணமான மாப்பிள்ளை நிற்கக் கண்டு, கண்களை இறுக மூடிக்கொண்டு தூங்குவதுபோல் பாசாங்கு செய்தாள். மாப்பிள்ளை 'வள்ளித்திருமணம்' நடக்கும் போதே வள்ளியைத்தான் பார்த்துக்கொண்டே இருந்தான். நெடுநாட்களாகவே வள்ளியை அவன் உள்ளத்திலே வைத்துக் கொண்டிருந்தான். அவனுக்குத் தான் இந்த வள்ளியைக் கட்டுவதாக, ஆறுமுகம் பிள்ளை முதலிலே நினைத்தார்.

ஆனால் வள்ளி, ஏழை வீட்டுப் பெண் மூன்றாவது கட்டு. பெரிய இடமாகக் கிடைக்கவே மாப்பிள்ளையின் தகப்பனார், வள்ளி திருமணத்திற்கு ஒப்ப வில்லை. சாவித்திரி கலியாணம் நடந்தது. சகல சம்பத்துகளுடனும், சாவித்திரி அன்று காலையில், சிங்காரவேலனைத் திருமணம் செய்துகொண்டாள். அன்று இரவே வேலன், வள்ளியைத் தேடிக் கொண்டு மூன்றாவது கட்டுக்கு வந்து நின்றான். அங்கு படுத்திருந்தவர்களைச் சாடையாகப் பார்த்தாள். வள்ளி தெரிந்தாள்.

மெள்ளக் கால்மாட்டுப் பக்கமாக நின்று, சுற்று முற்றும் பார்த்துக்கொண்டே, கால் விரலை மிதித்தான். வள்ளிக்கு உடல் ஜில்லென்றாகிவிட்டது. பயத்தால் காலை இழுத்துக் கொண்டாள். அந்த வேகத்திலே வேலன் கீழே இடறினான். சத்தம் கேட்டுப் படுத்துக்கொண்டிருந்த வர்களிலே யாரோ... விழித்துக்கொண்டு "என்ன சத்தம்?" என்று கேட்க, சமையற்கட்டுக்குள்சந்தடியின்றிச் சென்றுவிட்டான் மாப்பிள்ளை. வள்ளிக்கு அடக்க முடியாத சிரிப்பு! "எதுவோ பூனை வந்தது துரத்தினேன்" என்று கூறி விட்டாள்.

விழித்தவர் மீண்டும் குறட்டை விட்டார். ''இவ்வளவு ஆசை என்மீது வைத்திருப்பவன், எவனோ பணத்தோடு வரவே, அவளைப் பந்தலிலே பத்துப்பேர் முன்னிலையில் தாலிகட்டிவிட்டு, விடியற் காலை என்காலை மிதித்து வாடி என்று அழைக்கின்றான். எவ்வளவு சூது. அக்ரமம் என்று வள்ளிக்குக் கோபம். வாயைத் திறக்க முடியுமா, பாபம்! காலையிலே கலியாண மானவன். இந்தக் கதியிலே காணப்பட்டால், கலியாணத்திற்கு வந்தவர் கைக்கடிகாரம் சிரித்து ஊர் கூட்டிச் சொல்லி விட மாட்டார்களா!

நம்மால் அவருக்கு ஏன் தொல்லைதரவேண்டும் என்று அம்மங்கையின் தூய உள்ள நினைத்து உள்ளே நுழைந் மாப்பிள்ளையின் மனம் துடித்தது வெளியே வருவதும் தூங்குபவ கைச்சத்தமோ, கால் சத்தமே கேட்டால், உள்ளேபோய் பதுங்குவதுமாக இருந்தான். என்ன முட்டாள்தனமாகச் செய் விட்டோம் என்று துக்கித்தான்.

வள்ளி அதே நேரத்தில் தும்மினாள், அவள் விழித்துக் கொண்டிருக்கிறாள் என்று தெரிந்ததும் பயம் போய்விட்டது 'அந்த எண்ணம்' மேலிட்டது. 'வள்ளி' என்று மெல்ல அழைத்தான். அவளருகே சென்று, படுத்திருந்தவள் எழுந்து "ஏன்? யார்?" என்று கொஞ்சம் உரத்தகுரலிலே கேட்டாள். "மெதுவாகப் பேசு வள்ளி, வேலன் பின் தொடர, தோட்டத்தருகே வந்ததும்-

"இதோ பாருங்க! யாராவது விழித்துக்கொண்டால், என் கதி என்ன ஆவது? கன்னி கழியாத பெண்ணுக்கு இந்த நேரத்திலே ஆண் பிள்ளையுடன், அதிலும் காலையிலே கலியாணமானவுடன் என்னடி பேச்சு, என்று என்னை ஏசுவார்கள். போய்ப் பேசாமல் தூரமா நில்லுங்க. நான் கூவி வீட்டை கலக்கிடுவேன்".

'ஒரு பெண்ணுக்காக, ஆண் எத்தனைப் பொய் சத்தியமும் வைப்பான் என்று பாகவதர் இராத்திரி சொன்னாரே, நான் கேட்டேன்'.

மீண்டுமோர் காலடிச்சத்தம் கேட்டது. வள்ளி கைகளைப் பிசைந்து கொண்டு "என் மானம்



ஒன்றுமில்லை ஒன்றுமில்லை, ஒரு விஷயம்.தனியே இப்படி வாயேன்".

"ஊஹூம். இதென்ன அக்ரமம்? நான் மாட்டேன்".

"சீ! நான் என்ன உன்னை ஏதாவது செய்துவிடுவேன் என்று பயமா? அதெல்லாம் இல்லை இங்கே வாயேன்".

பேச்சை வளர்த்திக்கொண்டே இருந்தால், தூங்குபவர் விழித்துக் கொண்டு தன்னைத் திட்டு வார்கள் என்று அந்த ஏழைப்பெண் பயந்தாள். மெள்ள எழுந்து, தோட்டத்துப் பக்கம் சென்றாள் படுத்துத் தூங்குங்கள், இவ்வளவு ஆசை என்மீது இருக்கிறவர்தானா அந்தத் தேய்ந்து போன சிறுக்கியைத் தேடிக் கட்டிக்கிட்டீர். ஏன்- மனை ஏற அவள், மஞ்சத்துக்கு நானா? நாங்கள் ஏழைகளானாலும், மானத்துக்கு அஞ்சினவங்கோ, மகராஜா! நாம் குழந்தைகளா இருந்ததிலிருந்து விளையாடினோம், போதும் போங்கள், நானல்ல மசிபவள்".

"வள்ளி! நான் கெட்ட நினைப்புடன் வந்தேனென்றா எண்ணுகிறாய்?"

"தொட்டுகிட்டுப் பேசாதீங்க. போகுமே! நீ போயேன் எங்காவது தொலைந்து, யாரோ வருகிறார்களே" என்றாள்.

வேலன், பாய்ந்து சென்று, அங்கிருந்த பெரிய மரத்தின் பின்புறம் மறைந்துகொண்டான்.

வந்தது, வள்ளியின் அத்தை. மகா கைகாரி, வள்ளியும் வேலனும் தோட்டத்துப் பக்கம் புகுந்ததைத் தெரிந்துகொண்டே வந்தாள், அவளுக்கு ஓர் மகன். அவனைக் கலியாணம் செய்து கொள்ள மாட்டேன்னு வள்ளி ஒரே பிடிவதமாக இருந்தாள். அதனால் வள்ளிமீது வேதத்துக்குக் கோபம். பழிதீர்க்கச் சமயம் கிடைத்தது என்று எண்ணி தொலைவில் வரும்போதே, "ஏண்டியம்மா வள்ளி! பத்தினி! உன் யோக்யதை இதுதானா" என்று அடித்துப்பேசினாள்.

"என்ன அத்தை என்னென்னமோ பேசறீங்க, வயித்தை வலிச்சுதுன்னு தோட்டத்துக்கு வந்தேன். விபரீதமா அர்த்தம் செய்து கொண்டு பேசறீங்க".

"துணைக்கு வந்தானா வேலன்!"

"அவரு எங்கே வந்தாரு?"

"ஐயோ! அத்தை சத்தியமா சொல்கிறேன் - நான் வரச்சொல்லலே, இவரே வந்தாரு. காலை மெதிச்சாரு. இந்தக் கோலத்துக்கு என்னைக் கொண்டுவந்தாரு".

"இல்லை, நான் கேக்கறேன், இந்த நேரத்திலே, உங்க ரெண்டு பேரையும் தனியாக இங்க கண்டா என்ன எண்ணுவாங்க, ஏண்டி வள்ளி! விலையாகிற பண்டமாச்சே நீ. விஷயம் தெரிஞ்சா, எவண்டி உன்னைக் கட்டிக்கொள்வான்? இதோ போய், வீட்டிலே எல்லோரையும் எழுப்பி இங்கே கொண்டுவந்து உங்க ரெண்டுபேர் மானத்தையும் வாங்குகிறேன்".

"அத்தே உன் காலைக் கும்பிடுகிறேன். எங்க பாட்டி வந்தா என்னைப் பிணமாக்கிடுவாங்க. காரி உமிழ்வார்களே நான் ஒரு பாபமும் அறியேன், அட பாவி உன்னாலே இந்த தீங்கு வந்ததே!"

"அவனை ஏண்டி சபிக்கிறே! உனக்கு எங்க போச்சு புத்தி?"

"என்னைக் காப்பாத்துங்க அத்தை! உங்க காலிலே விழறேன்".

"சரி! நான் சொல்றபடி கேட்பதாகச் சத்தியம் செய். கை போட்டுக்கொடு!"

"சத்தியமா, உங்க பேச்சைக் கேட்டு நடக்கிறேன். மாரியாயி சாட்சியா!"

'சரி! நான் இங்கே கண்டதை ஒரிவரிடமும் சொல்லவில்லை. என் மகனைக் கட்டிக்கொள்ள வேண்டும்'.

"பழனியையா? நான் மாட்டேன்".

"சத்தியத்தை மறந்தா சாப்பிட மண்கூடக் கிடைக்காது! மாரிமேல் சத்தியம் செய்ததை மறந்துடாதே!"

"ஐயோ! இது என்ன கஷ்ட காலம், நான் என்ன செய்வேன்?"

"சத்தியத்தின்படி நடக்கிறாயா, இல்லையானா வீட்டிலே இருப்பவர்களைக் கூப்பிடவா!"

'கூப்பிடாதீங்க. பழனியைக் கட்டிக்கொள்கிறேன், சத்தியமாகத்தான்!'

"இப்ப சரி! வேலா! இன்னம் எவ்வளவு நாழிதாண்டா, மரத்தின் பின்னாலே இருக்கப்போறே?"

வள்ளியை மிரட்டி தனக்கு இணங்க வைத்த அத்தை மரத்தின் மறைவிலே போய்ப்பார்க்க, அங்கு, வேலன் இல்லாதது கண்டு திடுக்கிட்டாள்.

'வள்ளி! இதென்னடி மாயம்! மரத்துக்குப் பின்னாலே போனவனைக் காணோமே' என்று அத்தை கேட்க, வள்ளியும் தேடிப் பார்த்துத் திகைத்தாள். இவர்கள் பேசிக்கொண்டிருப்பதற்குள், மரத்தின் கிளையிலே ஏறி, பக்கத்துத் தெருபக்கமாகக் குதித்து, அந்தத் தெருவைத் தாண்டி, பாகவதரின் பக்கத்திலே பரம சாதுபோல் படுத்துக்கொண்டான்.

"எங்கே போய்விட்டான், கிடக்கட்டும். போய்ப்படு உள்ளே. சத்தியத்தின்படி அடுத்த மாசம் பழனிக்கும் உனக்கும் கலியாணம் தெரிஞ்சுதா, பாட்டி வேண்டான்னு சொன்னாக்கூட நான் பழனியைத் தான் கட்டிக் கொள்வேனென்று சொல்லணும் தெரியுமா? போ உள்ளே, படுத்துத்தூங்கு".

"அத்தே! அவரு கூத்தாடுகிற வேலையை விட்டுட்டாப் போதும். அதிலேயும் பொம்பளை வேஷம் போடுகிறாரே அதுதான் கூடாது".

"ஆகட்டும், சொல்கிறேன். ஆனால், அவன் பொம்பளை வேஷம் போட்டா, பேச்சு, நடை அவ்வளவும் அசல் பொம்பளை போலவே இருக்கும்".

வள்ளி, சிரித்துவிட்டு, வீட்டுக்குள் போய், பழையபடி படுத்துக்கொண்டாள். ஆனையைக் காட்டி அவன் கலியாணத்தை முடித்துக் கொண்டான். அத்தை நமது அசட்டுத்தனத்தைக் கண்டு நம்மை மருமகளாக்கிக் கொண்டாள் என்று எண்ணினாள்; வள்ளிக்குச் சிரிப்பும் வந்தது; தூங்கும்போதுகூட புன்னகை தவழ்ந்தது.

தோட்டத்திலே, அத்தை, டோப்பா, சேலை முதலிய வேஷங்களைக் கலைத்து, பழனியானான். "ஸ்திரீ பார்ட்டிலே திறமை இல்லையானால், நமது தாயாராகவே நடித்து வள்ளியிடம் சத்தியம் வாங்கியிருக்க முடியுமா?" என்று பூரித்தான். உள்ளே தூங்கிய வள்ளி மட்டும், விளக்கெடுத்துக் கொண்டு படுத்திருந்தவர்களை பார்த்திருந்தால், உண்மையான அத்தை உறங்கிக்கொண்டிருப்பதைக் கண்டிருக்கலாம்! அவள் சத்தியம் செய்தாகி விட்டது; இனி பழனியே கணவன் என்று தூங்கிக் கொண்டிருந்தாள்.

பொழுது விடிந்ததும், மாப்பிள்ளை வள்ளியின் முகத்தைக்கண்டு வள்ளி நாண மடைந்தாள். அந்தப் பந்தலிலேயே வள்ளி திருமணத்துக்கு நிச்சய தாம்பூலம் மாற்றிக் கொள்ளப் பட்டது. பழனி தன் தாயாரிடம் நாடகம் பலித்ததைக் கூறினான். மறு மாதம் வள்ளி கலியாணம் நடந்தது!

-"அண்ணாவின் ஆறு சிறுகதைகள்" தொகுப்பிலிருந்து.

வெளியீடு:

திராவிடப் பண்ணை,

திருச்சி-2.

*

# The Arasan Match Industries

*We two fireworks industries*

**THE ARASAN ALUMINIUM INDUSTRIES PVT. LTD.**
**VIJAYARAJAN TEXTILES LIMITED**
**SARASWATHI GANESAN FINANCE COMPANY LIMITED**

*Regd. Office:*
**ARASAN SARASWATHI GANESAN COMPLEX**
**18, CHAIRMAN A SHUNMUGAM ROAD,**
**SIVAKASI 626 123 (INDIA)**

*Phone:*
Off : 23101 (4 lines)
Resi : 72179 & 20117

*Telex:*
0448-201 TAMI IN
Fax : 04562-72105

Cable : "TAMI" & "WETWO"


# எங்கள் ஊர் பிரச்சினை

**பிரச்சினை**

எங்கள் ஊர் நெல்லை மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், வாகைக்குளம் பஞ்சாயத்துக்குட்பட்ட இராமசந்திராபுரம் ஆகும். இங்குள்ள மக்கள் அனைவரும் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்கள். இங்குள்ள மக்களின் அன்றாட பிரச்சினையாக மின்விளக்கு உள்ளது. அனைவரும் கூலிவேலை, சிறு விவசாயம் செய்கின்றவர்கள். இப் பஞ்சாயத்தின் வருமானம் எதுவும் இல்லை. இங்குள்ள மக்கள் இதுவரை பல ஆண்டுகளாக முயற்சி செய்தும் இதுவரை மின்விளக்கு வசதி செய்து தரப்படவில்லை. இதனால் இங்குள்ள மக்கள் இரவு நேரங்களில் வெளியே சென்றுவர முடியவில்லை. இதுநாள் வரை இக்கிராமத்தில் இருள் சூழ்ந்தே உள்ளது. எனவே, இங்குள்ள மக்களின் முக்கியப் பிரச்சினையான மின்விளக்கு அமைத்துக்கொடுக்க வகை செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

-பி. காளிமுத்து
தலைவர், ஊராட்சி மன்றம்,
வாகைக்குளம்.

**தீர்வு**

குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம் வாகைக்குளம் ஊராட்சி இராமச்சந்திராபுரம் கிராமத்தில், புதிதாக நான்கு தெருவிளக்குகள் அமைக்க, கலிங்கப்பட்டி தமிழ்நாடு மின்சார வாரியம் உதவி செயற்பொறியாளர்க்கு 12.3.97 அன்றே உரிய ஆவணங்களுடன் முறையான விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- செ. ராமையா
ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம், குருவிகுளம்.

**பிரச்சினை**

சேலம் மாவட்டம் எடப்பாடி வட்டம் குரும்பட்டி கிராமம் தலைவாய்ப்பட்டியில் இருக்கும் மக்கள், எடப்பாடிக்குத்தான் அன்றாடப் பிழைப்புக்காகச் சென்று வேலைபார்த்துச் சம்பாதித்து வருகிறார்கள். அது சுமார் 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. எடப்பாடி - தாரமங்கலம் டவுன் பஸ் செல்லுகிறது. அதன் நேரம் காலை 4.30 க்குப் போய் 6 மணிக்கு அவ்வழியே வருகிறது. அடுத்து மதியம் 12.30க்குப் போய், 2.30க்கு வருகிறது. பின்பு 5.30க்குப் போய் 6 மணிக்கு வருகிறது. இந்த நேரத்தைக் கொண்டு கூலி வேலை செய்யப் போய்வர முடியவில்லை. இந்த நேரத்திற்கு இடையில் இன்னும் ஒரு டவுன் பஸ், அத்துடன் எடப்பாடி - சேலம் செல்லும் சர்வீஸ் பஸ் ஒன்றும் விட ஏற்பாடு செய்து கொடுக்கவும்.

- பெ.கந்தன்
தலவாய்ப்பட்டி காலனி
குரும்பப்பட்டி.

**தீர்வு**

மனுவில் குறிப்பிட்டது போல் தற்போது தளவாய்ப்பட்டி வழியாக இடைப்பாடி முதல் தாரமங்கலம் வரை இயக்கப்படும் ஆறு நடைகளில் பயணிகள் விகிதாச்சாரம் மிகவும் குறைவாகவே உள்ளது (45% மட்டுமே). எனவே தற்போது அளிக்கப்பட்டு வரும் பேருந்து வசதியே பயணிகளின் தேவையை நிறைவு செய்து வருவதாகக் கருதப்படுகிறது.

இதே மனுவில் கேட்கப்பட்டிருந்தபடி சேலம் முதல் இடைப்பாடி வரை நேர்வழியில் இயக்கப்படும் நடைகளைத் தளவாய்ப்பட்டி வழியாக மாற்றி இயக்கினால் தூரம் 30 கி.மீ. அதிகமாகிறது என்பதால், பயணிகளுக்குக் கூடுதல் பயணக்கட்டணம், கூடுதல்



பயண நேரம் முதலான அசௌகரியங்கள் ஏற்படும்.

மேற்கூறிய 'காரணங்களின் அடிப்படையில் தலவாய்ப்பட்டிக்குக் கூடுதல் பேருந்து வசதி அளிக்கத் தற்போது தேவை நிலவவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- மேலாண் இயக்குநர்
அண்ணா போக்குவரத்து கழகம்
சேலம்.

**பிரச்சினை**

எங்கள் ஊர் பழூவூர். பழூவூர் ஊராட்சியில் இரண்டு குக்கிராமங்கள் உள்ளன. அவை பழூவூர், கே.சி. பழூவூர். எங்களது மாவட்டம் திருநெல்வேலி, வள்ளியூர் ஒன்றியம் ஆகும். எங்களது ஊராட்சியில் பழூவூர் கஸ்பாவில், அரசால், சுமார் இரண்டு இலட்சம் மதிப்பீட்டில் அரசு கிளை நூலகம் கட்டப்பட்டுள்ளது. இருந்தும் நூலக நிர்வாகமானது கடந்த சில ஆண்டுகளாகச் சரிவர இயக்கப்படாமல் உள்ளது. பொது மக்களாகிய நாங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு பலமுறை புகார் செய்தும், எவ்வித நடவடிக்கையும் இதுநாள்வரை எடுக்கப்படவில்லை. இந்தக்கிளை நூலகத்தில், இரண்டு அலுவலர்கள் பணிபுரிந்தார்கள். ஆனால், தற்சமயம், ஒரு பணியாளர் மட்டுமே உள்ளார். அவர் தற்போது பணிக்கு வராமல் வாரத்தில் ஒருசில நாட்கள்-அதுவும் மாலைப் பொழுதில் 4 மணி அல்லது 5 மணிக்கு வந்து நூலகத்தைத் திறந்து வராத நாட்களுக்கும் வருகைப் பதிவேட்டில் கையெழுத்துப் போட்டுவிட்டு, நூலகத்தை பூட்டிச் சென்றுவிடுகிறார். நூலகத்தில் சுமார்

ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் உள்ளன. இருந்தும் அவை பொதுமக்களுக்குப் பயன்தராத வகையில் முடங்கிக் கிடக்கின்றன. ஆகவே தாங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு, இனியாவது எங்கள் கிராமத்தில் கிளைநூலகம் சரிவர இயங்க ஆவண செய்யவேண்டும் என்பது இந்தக் கிராமப் பொதுமக்களின் அன்பான வேண்டுகோள்.

- கிராமப்பொதுமக்கள்
பழுவூர்.

தீர்வு

*பழுவூர் கிளை நூலகத்தில், திரு.கே.வீரபாகு மூன்றாம் நிலை நூலகர் மற்றும் அலுவலக உதவியாளர் திரு.ஜெ.கபிரியேல்மெல் ஆகிய இருவர் பணியாற்றி வந்தனர். பணியாளர் பற்றாக்குறைவினால் திரு.கே.வீரபாகு என்பவர் கரைச்சுத்துத்தும்புத்தூர் கிளை நூலகத்தில் மாற்றுப்பணியில் ஈடுபடுத்தப் பட்டபோது, பழுவூர் கிளை நூலகர் திரு.ஜெ.கபிரி யேல்மெல் அலுவலக உதவியாளர் ஒருவர் மட்டுமே பணியாற்ற நியமிக்கப்பட்டார். இவ்வூழியர் நூலகப் பணிக்கு ஒழுங்காக வராமல் நூலகத்தைச் சரிவர செயல்படுத்துவதில்லையென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு மனுநீதி நாளில் பொதுமக்கள் புகார் கொடுத்ததின் அடிப்படையில், திரு.ஜெ.கபிரி யல்மெல் அலுவலக உதவியாளர் பாளையங்கோட்டை மாவட்ட மையநூலகப் பணிக்கு மாற்றப்பட்டுள்ளார். பழுவூர் கிளைநூலகம் செவ்வனே செயல்படும் பொருட்டு, திரு.கே. வீரபாகு என்பவர் மீண்டும் பழுவூர் கிளைநூலகத்தில் பணியாற்ற உத்தரவிடப்பட்டுள்ளார்.*

*எனவே, இனி பழுவூர் கிளைநூலகம் சிறப்பாகச் செயல்படுமெனத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

- இரா.கண்ணன்,
பொது நூலக இயக்குநர்
அண்ணாசாலை, சென்னை-2.

பிரச்சினை

எங்கள் ஊர் புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் குளத்தூர் ஊராட்சியைச் சேர்ந்த மொட்டையாண்டி கிராமமாகும். எங்கள் ஊருக்குத் தமிழக அரசால் கொடுக்கப்படும் தொலைக்காட்சிப் பெட்டி, பொதுத் தொலைபேசி, வானொலிப்பெட்டி போன்றவைகள் வைத்து இயக்க ஊரில் ஒரு பொதுவான கட்டிடம் இல்லாத நிலையில், மேற்கண்ட நலன்கள் யாவும் பாதிக்கப்படுகிறது. எனவே எங்கள் ஊரில் அரசின் நிதி உதவியால் தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப்பெட்டி, பொதுத்தொலைபேசி போன்றவைகள் வைத்து இயக்க ஊரின் மாரியம்மன் கோவில் அருகாமையில் ஒரு நிரந்தரமான கட்டிடம் கட்டித் தர வழிவகை செய்து தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

- மா.மு.கருப்பையா
(முன்னாள் குளத்தூர் ஊராட்சி துணைத்தலைவர்)
மொட்டையாண்டி.

தீர்வு

*நடப்பு நிதியாண்டில் (1997-98ஆம்) ஆண்டு முன்னுரிமை அடிப்படையில் புதிதாகக் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

- ஆ.பழனியாண்டி
கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்
ஊராட்சி ஒன்றியம், அறந்தாங்கி.

பிரச்சினை

நாங்கள் புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா, கறம்பக்குடி ஒன்றியம், தீத்தான்விடுதி ஊராட்சியில் உள்ள ஊரணிபுரம் சந்தைப்பகுதியில் காலங்காலமாக வியாபாரம் செய்துவருகிறோம். அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு இடத்தில், தடைசெய்யப்பட்ட சந்தை அமைந்துள்ளது. மேற்கண்ட இடம் தற்சமயம் தனியார் ஆக்கிரமிப்பில் சிக்கிச்சீரழிந்து உள்ளது. குப்பைகளும், கழிவுகளும், நிறைந்து சுகாதாரக் கேடுகளால் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள். சந்தைக்குள் சட்டத்திற்குப் புறம்பான பாலியல் வன்முறை, சூதாட்டம், கள்ளச்சாராய விற்பனை போன்ற சில மோசமான சமூக விரோத செயல்கள் நடைபெறுகின்றன. சமூக விரோத செயல் நடைபெறுவதால், சமூக விரோதிகளால் தினந்தோறும் அச்சுறுத்தப்படுகிறோம். எங்களால் வியாபாரமும் செய்யமுடியவில்லை. இதை யாரும் தட்டிக்கேட்க முன்வந்தால், அவர்களின் உயிர் உடைமைக்கு எந்தப் பாதுகாப்பும் கிடையாது என்ற நிலை உள்ளது; எனவே தாங்கள் தான் சந்தையில் உள்ள தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்றிவிட்டுப் புதிய கடைகள் அமைத்துத்தரவும், சுகாதார மேம்பாடு செய்யவும், சமூக விரோத செயல்களைத் தடுத்து நிறுத்தியும், சந்தைப்பகுதியிலுள்ள குளத்தைத் தூர்த்துவிட்டுச் சந்தையினை விரிவுபடுத்தித்தரவும் தகுந்த நடவடிக்கையினை மேற்கொண்டு, எங்கள் நீண்ட நாள் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

- பொதுமக்கள்
ஊரணிபுரம் சந்தைப்பகுதி
கறம்பக்குடி.

தீர்வு

*புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா, ஊரணிபுரம் கிராமம், சந்தைப்பேட்டையில் உள்ள தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்றியும், மேற்படி சந்தையையொட்டியுள்ள குட்டையைத் தூர்த்தும், புதிய ஷெட்டுகள் அமைத்துச் சந்தையினை நன்கு பராமரிக்கவும், தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன் முதல் கட்டமாகச் சந்தையில் உள்ள 52 ஆக்கிரமிப்பாளர்களுடன், கலந்துபேசி அதன் அடிப்படையில் அவர்கள் ஆக்கிரமிப்புகளை அகற்றிக்கொள்ளத் தாமாக முன்வந்து சம்மதம் தெரிவித்தனர். ஆனால் மேற்படி சந்தைக்கு ஊரணிபுரம் சாலையிலிருந்து வண்டி, வாகனங்கள் செல்ல இயலாத நிலையில், அச்சந்தையை ஒட்டியுள்ள நெடுஞ்சாலைத்துறையில் 15 ஆக்கிரமிப்புகள் இருந்துவருகின்றன. இவைகளையும் அகற்றுவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இச்சந்தைப் புறம்போக்கு ஆக்கிர மணங்களை அகற்றித் தூய்மையாகவும், சுகாதாரமிக்கதாகவும் மாற்ற, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரைப்படி தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

- எஸ்.மூக்கையா
வட்டாட்சியர், ஆலங்குடி
புதுக்கோட்டை மாவட்டம்.

பிரச்சினை

கடலூர் மாவட்டத்தில் உள்ள மேல் புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சின்ன நெற்குணம் கிராமத்தில், பல ஆண்டுகளாக நீர்த்தேக்கத்தொட்டி இயங்காமல் இருந்தது, பாழடைந்துவிட்டது என்று புதிதாக நீர்தேக்கத்தொட்டி கட்டினார்கள். அதுவும் இயங்கவில்லை. 1947-1997 வரை எங்கள் ஊர்ச் சாலை முள்செடிகளாலும் குறுகிய பாதையிலும் தான் உள்ளது. எங்கள் ஊரில் இருந்து 300 மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், பொதுமக்கள் அனைவரும் அதன் வழியாகத்தான் செல்கின்றனர். சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் ரோடுகள் அதிகமாக அரிக்கப்பட்டுள்ளது. அதை இதுவரை சரி செய்யவில்லை. நமது ஆட்சியிலாவது இந்த நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

- க.தாமஸ்
சின்ன நெற்குணம்

தீர்வு

மேல்புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சின்னநெற்குணம் கிராமச் சாலையை, வெள்ள நிவாரணத்திட்டத்தின் கீழ் ரூ.20,000 மதிப்பீட்டில் சீர்செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாண்டு வேலைவாய்ப்பு உறுதியளிப்புத்திட்டத்தின் கீழ், எறும்பூர் சின்னநெற்குணம் சாலை 2.8 கி.மீ. ரூ.6.24 இலட்சம் மதிப்பீட்டில் 3 மீட்டர் அகலத் தார்ச்சாலையாக அமைக்கப்பட, அனுமதி அளிக்கப்பட்டு, இவ்வேலையின் முதல் கட்டப்பணியாகச் சரளைக்கல் பரப்பி முடிக்கப்பட்டுள்ளது. இப்பணியில் சாலை சரியானதும், இன்னும் ஒருமாத காலத்தில் இச்சாலையில் தார் வேயப்பட்டு முழு அளவிலான தார்ச்சாலையாக அமைக்கப்பட உள்ளது. இவ்வேலை முடிவுற்றதும் இச்சாலை பேருந்து செல்லத்தக்க வகையில் பயன்படும்.

இக்கிராமத்தில் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி சீர்செய்து, தற்போது நல்லமுறையில் இயங்கிவருகிறது. மேலும் இக்கிராமத்தில் மார்க் 2 ஆழ்துளைக் கைபம்புகள் 5ம், நல்ல முறையில் இயங்கிவருவதால் குடிநீர்ப்பற்றாக்குறை இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

- ஒட்டெம் டாய், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கடலூர் மாவட்டம்.

பிரச்சினை

எங்கள் ஊரான தானிப்பாடி செங்கம் வட்டத்திலேயே மிகப் பெரிய ஊராட்சி. இங்குள்ள மக்கள் குடிநீருக்காக வெகுதூரம் செல்லக்கூடியநிலை உள்ளது. ஊரில் உள்ள குழாய்களில் எப்போதோ ஒரு தடவைதான் நீர் வரும். மூன்றாம் வார்டு மற்றும் இரண்டு, ஒன்று வார்டு மக்கள் நீருக்கு மிகுந்த சிரமப்படுகிறார்கள். எனவே மேற்கண்ட வார்டுகளில் பொதுக்குழாய் அமைத்துக்கொடுத்தால், நீர் வரும்போதாவது பிடிப்பார்கள். இல்லையெனில் ஆழ்துளைக்கிணறுகள் அமைத்து, எங்களின் குடிநீர்ப்பிரச்சனையைப் போர்க்கால அடிப்படையில் தீர்த்துவைக்குமாறு தங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

- ஊர்ப் பொதுமக்கள்
தாணிப்பாடி கிராமம்.

தீர்வு

*திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம், தானிப்பாடி கிராமம் வார்டு எண்.1,2 மற்றும் 3ல் புதியதாகக் குழாய் இணைப்புகள் ஊராட்சி மூலம் செய்து முடித்து, குடிநீர் வழங்கப்பட்டுவருகிறது. ஊத்தங்கரை தெருப்பகுதிக்குப் புதியதாகக் கைப்பம்பு அமைக்கத் திட்டம் ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

- சிவ.சூரியன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருவண்ணாமலை மாவட்டம்.

பிரச்சினை

கம்பம் நகராட்சியில் 31, 32வது வார்டில் உள்ள வீடுகளுக்குச் சீரான மின்சாரம் கிடைக்காத காரணத்தால், பலமுறை மனுக்கள் செய்து, கடந்த 5 மாதங்களுக்கு முன்பாக நகராட்சி சமீபம் நகராட்சிப் புறம்போக்கு இடத்தில், ஒரு டிரான்ஸ்பார்ம் நிறுவினர். டிரான்பார்ம் வேலைகள் முடிக்கும் தருவாயில், அதன் அருகில் உள்ள வீட்டுக்காரர், ஏற்கெனவே, தான் 10 செண்டுக்கு மேல் நகராட்சிப் புரம்போக்கு நிலத்தைக் கையகப் படுத்தியுள்ளது போதாது என்று, இந்த டிரான்ஸ்பார்ம் அவரது ஆக்கிரமிப்புப்பகுதியில், ஒரு கோடியில் வருவது பொறுக்கமாட்டாமல் வாய்மொழியாகத் தனது மறுப்பினைத் தெரிவித்து, கம்பம் டவுன் இளநிலைப் பொறியாளர் அவர்களின் யோசனையின் பேரில் டிரான்ஸ்பார்ம் ஷிப்டிங்காகப் பணம் கட்டி, மேற்கொண்டு வேலை செய்யாமல் நிறுத்திவிட்டார். பொதுமக்களாகிய நாங்கள் மின்சாரம் சீராகக் கிடைக்காமல் மிகவும் அல்லல் படுகின்றோம். எங்கள் பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு தங்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.



-31,32வது வார்டு பொதுமக்கள்,
கம்பம்.

# STANDARD GRANITES

Registered Off :
**5-2-15C, SATTUR ROAD,**
**SIVAKASI - 626 123.**
**PHONE : 21142, 20952**
**FAX : (04562) 72378**

*WE PRODUCE SIVAKASI YELLOW AND TROPICAL GREEN GRANITE BLOCKS*


**தீர்வு**

கம்பம் நகராட்சிப் பகுதியில் குறைவழுத்த மின்சாரத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு, புதிய மின் மாற்றி 3.5.97 அன்று இயக்கிவைக்கப்பட்டு, குறைவழுத்த மின்சாரம் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

- பொறியாளர் ச. மாணிக்கம்
மேற்பார்வை பொறியாளர்
தேனி மின் பகிர்மான வட்டம், தேனி.

**பிரச்சினை**

எங்கள் பஞ்சாயத்தில் நெடுங்காலமாக உள்ள ஒரே பிரச்சினை, கள்ளச்சாராயம். இன்றும் எட்டு இடங்களில் சாராயம் விற்கப்படுகிறது. காவல் துறை இதைக்கண்டும் காணாமலுமாக உள்ளது. சில காவலர்கள்தான் சாராய அரக்கர்களின் கூட்டாளிகள். இந்தப் பிரச்சினையை அரசு தீர்த்துவைக்குமா? தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்குமா?



- பொதுமக்கள்,
எடக்குடி வடபாதி.

**தீர்வு**

எடக்குடி வடபாதி கிராமத்தில் 1996 மற்றும் 1997ஆம் ஆண்டுகளில் மதுவிலக்கு "ரைடு" செய்து சாராயம் வைத்திருந்தவர்களையும், விற்றவர்களையும் கைது செய்து, வழக்குப் பதிவு செய்து, தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கிராமத்தில் யாரும் தற்சமயம் சாராயம் விற்கவோ, காய்ச்சவோ இல்லை. இருப்பினும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

- அமரேஷ் புஜாரி, இ.கா.ப.,
காவல் கண்காணிப்பாளர்
நாகப்பட்டினம்.

**பிரச்சினை**

மின்பாறை, அட்டகட்டி, ரொட்டிக்கடை, வால்பாறை, முடீஸ், சிங்கோனா, சோலையார், டேம் ஆகிய இந்த ஊர்களிலெல்லாம் 10ஆம் வகுப்பு வரையுள்ள உயர்நிலைப் பள்ளிகளே உள்ளன.

எட்டு அல்லது ஒன்பது உயர்நிலைப்பள்ளிகளுள்ள இந்தப்பகுதியில், ஒரே ஒரு மேல்நிலைப்பள்ளி மட்டுமே வால்பாறையில் உள்ளது. மேலே குறிப்பிட்ட ஊர்களிலிருந்து 1, 2வது படிக்கும் மாணவ-மாணவிகள் சுமார் 10, 15, 20 கி.மீ. தூரத்திலிருந்து பஸ்ஸிலோ அல்லது நடையாகவோ வால்பாறையிலுள்ள மேல்நிலைப்பள்ளிக்கு வரவேண்டிய இக்கட்டான சூழ்நிலை உள்ளது. தவிரவும், இதனால் இவர்களின் படிப்பும் கெடுவதுடன், கல்வித் தரமும் குறைந்துவருகிறது. ஆதலால், கல்வித்தரம் உயரவேண்டுமானால், அட்டகட்டி, சிங்கோனா, முடீஸ், சோலையார்டேம் ஆகிய இந்த ஊர்களிலுள்ள உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாக மாற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனே நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

-ஆ. மாசிலாமணி,
தலைவர், நுகர்வோர் நலச்சங்கம்,
ஈட்டியார் எஸ்டேட்.

**தீர்வு**

வால்பாறையில் மேலும் ஓர் அரசு மேல்நிலைப்பள்ளி துவங்க, தற்போது வால்பாறையில் உதவிபெறும் பெண்கள் உயர்பள்ளி ஒன்றும், அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி ஒன்றும் உள்ளது. அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியை மட்டுமே மேல்நிலைப் பள்ளியாக மாற்ற இயலும். மேலும் பொதுமக்கள் நன்கொடை ரூ.1 இலட்சம் மற்றும் போதுமான கட்டட இடவசதியும் செய்து தரப்பட வேண்டும் என்று நிபந்தனையின் பேரில், கருத்துக்களைப் பள்ளித் தலைமை ஆசிரியர் மூலம் பணிந்தனுப்பினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

-திருமதி நே.உதயகுமார்
முதன்மைக்கல்வி அலுவலர்-கோவை மற்றும்
மாவட்டக் கல்வி அலுவலர் (பொறுப்பு)
பொள்ளாச்சி.

## எப்போது நியமித்தார்?

ஒருமுறை, அயர்லாந்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகின்ற வாய்ப்பு தீரர் சத்தியமூர்த்திக்குக் கிடைத்தது. இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கையைத் தம் சொற்பொழிவில் ஆணித்தரமாக திறம்பட ஆங்கிலத்தில் எடுத்துச் சொல்லிக் கொண்டு வந்தார் அவர்.

அப்போது, கூட்டத்தின் நடுவே எழுந்து நின்ற ஆங்கிலேயன் ஒருவன் 'இந்தியாவில் சமூகக் கலவரங்களே நடப்பதில்லையோ?' என்றான் கிண்டலாக.

உடனே சிரித்த முகத்தோடு தீரர் சத்தியமூர்த்தி அவனைப் பார்த்து இதுபோலத் திருப்பிக்கேட்டார்:



'ஐயா! இந்தியாவில் சமூகக் கலவரங்கள் நடப்பதாகவே வைத்துக்கொள்வோம்; ஆனால், கடவுள் எப்போது உலகமக்களின் ஸ்பெஷல் போலீஸ்காரனாக ஆங்கிலேயனை நியமித்தான்?'

-அவர் இப்படிக் கேட்டதும், ஆங்கிலேயர்களே அதிகமிருந்த அக்கூட்டத்திலும் பலத்த கைத்தட்டலும் சிரிப்பொலியும் எழுந்தது.



# பெரியாரின் மனிதநேயம்!

**- கயல்விழி ஜோசப் குமார்**

திருச்சிராப்பள்ளி வரகனேரி வேங்கடேச அய்யருக்கு மைந்தராய் பிறந்த வரகனேரி சுப்பிரமணிய அய்யர், பின்னாளில் சுருக்கமாக வ.வே.சு.என்று அழைக்கப்பட்டார்.

சட்டம் பயின்றார்; மேற்படிப்புக்காக இலண்டன் சென்றார். ஆனால் பாரிஸ்டர் பட்டம் பெறுமுன்னரே நாட்டு விடுதலைப் போராட்டத்தில் குதித்தார். தமிழ், ஆங்கிலம், வடமொழி, இலத்தீன் ஆகிய மொழிகளில் புலமை உடையவர். திருக்குறளை ஆழ்ந்து பயின்றவர்; கம்பராமாயணத்தின் சுவை முழுவதையும் துய்த்து உணர்ந்தவர். இவ்விரு நூற்கள் குறித்து இவர் எழுதிய கட்டுரைகள் மிகவும் உன்னதமான இலக்கியத் தரம் வாய்ந்தவை.

சுதந்திரப் போராட்டத்தில் குதித்ததன் விளைவாக, இவர் காந்தியடிகளின் தொண்டரானார். ஆங்கிலேயரின் கல்வி முறைக்கு மாறாக இந்தியப் பண்புகளையும், தமிழ்மண்ணின் ஒழுக்கலாறுகளையும் பேணிப்பாதுகாக்கும் பொருட்டு தம் இறுதிக் காலத்தில் ஒரு 'குருகுலம்' தொடங்க எண்ணினார்.

முதலில் கல்லிடைக்குறிச்சி என்னும் ஊரில், நாட்டு விடுதலையில் ஈடுபாடு கொண்ட காரணத்திற்காக ஆங்கிலேய அரசால் பணிநீக்கம் செய்யப்பட்ட சில ஆசிரியர்களுடன் இணைந்து 'திலகர் குருகுலம்' என்ற பள்ளியைத் துவங்கினார். சில காலம் கழிந்தபின், திருநெல்வேலி அருகே, சேரன்மாதேவி என்னும் ஊர் அருகில் 30 ஏக்கர் நிலம் விற்பனைக்குத் தயாராய் இருந்ததை அறிந்த அவர், அந்நிலத்தை எப்படியேனும் வாங்கிட முனைந்தார்.

வ.வே.சு.வின் இவ்வெண்ணம் ஈடேற, அவருக்கு உதவி செய்ய முன்வந்தார் செட்டிநாடு கானாடுகாத்தானைச் சேர்ந்த சுயமரியாதை செம்மல் வயி.சு.சண்முகனார். அவர் தந்துதவிய 3000 ரூபாயைக் கொடுத்து வ.வே.சு. நிலம் வாங்கினார்.

அப்போது, தமிழ்நாட்டின் காங்கிரசுக் கட்சியின் தலைவராக சேலம் வரதராஜுலு அவர்களும், செயலர்களாக பெரியார், கேசந்தானம் ஆகிய இருவரும் பணியாற்றி வந்தனர். காங்கிரஸ் கட்சியும் வ.வே.சு.அவர்களுக்குக் குருகுலம் நிறுவுவதற்காக 10,000 ரூபாய் நிதி உதவி செய்ய முன்வந்தது. தொடர்ந்து செயலர் என்ற முறையில், பெரியார் முதல் தவணையாக 5,000 ரூபாய்க்கு காசோலை எழுதி அனுப்பினார். கடல் கடந்து வாழும் தமிழர் பலரும் பெரும் பொருளுதவி செய்தனர்.



ஆயினும், தீவிர காந்திய வாதியாக விளங்கிய வ.வே.சு., சாதி வேற்றுமை கூடாது என்ற கருத்தை மேடைதோறும் பேசிவந்த வ.வே.சு., ஆதிதிராவிடர்க்கும் வேதம் பயிற்றுவித்துப் பூணூல் அணிவித்தால் அவரும் அந்தணர் ஆகிவிடுவர் என்ற கருத்தைப் பரப்பி வந்த வ.வே.சு. தன், குருகுலத்தின் அன்றாட நிர்வாகத்தில் ஒரு மாபெரும் தவறைச் செய்தார்.

அதாவது பிராமணச் சிறுவர்களுக்கும், பிராமணர் அல்லாச் சிறுவர்களுக்கும் தனித்தனியே உணவு பரிமாற ஏற்பாடு செய்தார்.

1924. 25 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற இந்நிகழ்வுகளின் போது, ஓமந்தூரார் (இவர் பின்னர் 1948ல் முதல்வராய் பொறுப்பேற்றவர்) அவர்களின் மகனும், வ.வே.சு. அவர்களின் குருகுலத்தில் கல்வி பயின்று வந்தான். குருகுலத்தின் மாணவர்கள் உணவு அருந்தும் முறையில் சாதிவேற்றுமை பாராட்டப்படுகிறது என்பதை அறிந்த ஓமந்தூரார் அவர்கள் மனம் நொந்தார்.

உடனடியாக இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எண்ணி, தன் மகனைப் பெரியாரிடம் அனுப்பினார். பையனிடமிருந்து செய்திகள் அனைத்தையும் அறிந்த பெரியார்-வ.வே.சு. அவர்களைத் தொடர்பு கொண்டு விளக்கம் கோரினார்.

ஆனால் வ.வே.சு. தன் குருகுலத்தில் சாதிவேற்றுமைக் கொடுமையைக் களைவதற்குப் பதில் அதை நியாயப்படுத்த விழைந்தார். ஆகவே, தன் அடுத்த கட்ட நடவடிக்கையாகப் பெரியார் குருகுலத்திற்குக் காங்கிரஸ் கட்சி தருவதாக வாக்களித்திருந்த இரண்டாவது தவணைத்தொகை 5000 ரூபாயைத் தர இயலாது என அறிவிக்க நேர்ந்தது.



ஆயினும், வ.வே.சு., பெரியாருக்குத் தெரியாமல் கட்சியின் இன்னொரு செயலரான கே. சந்தானம் அவர்களிடமிருந்து ரூ.5000 பெற்றுவிட்டார். இதனை அறிந்த பெரியார், மிகவும் சினமுற்று, குருகுலத்தில்

## சுவரும் மனமும்



என்வீட்டுச் சுவர் போலவே
என் மனமும்
இப்போதெல்லாம்
வெறுமையாய் இருப்பதில்லை;

யாராவது
எதையாவது
கிறுக்கிவிட்டுப் போய் விடுகிறார்கள்!

சுவரின் கிறுக்கலை
சுண்ணாம்புகொண்டு
அழித்துவிடுகிறேன்;

மனதின் கிறுக்கலை
எதைக்கொண்டு அழிக்க?

விவரம் தெரியாமலேயே
விரயமாகி வருகிறது
எனது எஞ்சிய காலம்...

**—நந்தன் குமார்**

கடைப்பிடிக்கப்படும் 'தனித்துண்ணல் முறை நிறுத்தப்படாவிட்டால் குருகுலம் உடனடியாகக் கைப்பற்றப்படும் என்று அறிவித்தார்.

காந்தியார் தலையிட்டும் இப்பிரச்சினையில் தீர்வு ஒன்றும் காணமுடியவில்லை.

தமிழ்நாட்டில் சாதி வேற்றுமையைக் களைவதே தனது தலையாய பணி என்று அறிவித்த பெரியார், 1925ல் காங்கிரசில் இருந்து விலகினார்.

இதனைத்தொடர்ந்து, பெரியார் சுயமரியாதைக் கழகம் கண்டதும், சாதி ஒழிப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு முதலியவற்றைத் தமிழகம் எங்கெனும் பரப்பி, விழிப்புணர்வைத் தோற்றுவித்ததும், 1925ல் பெரியார் எடுத்த சபதம் 1967ல் திராவிட முன்னேற்றக்கழகம் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்ததின் மூலமாக நிறைவேறியதும் வரலாற்று நிகழ்வுகள்.

பெரியார் தனிச்சிறப்புடைய குணங்கள் வாய்த்தவர். வாழ்நாள் முழுவதும் சாதி ஒழிப்பு என்ற தன் கொள்கைக்காகப் போராடியவர். மேலும் அஃதன்றி வேறு ஒன்றும் அறியாதவர். போராட்டங்களும், போராட்டக் களங்களும், காயங்களுமே அவரது வாழ்க்கை ஆகிவிட்டபடியால், அவருடைய பேச்சிலும், செயலிலும் எப்போதாவது மென்மையான உணர்வுகள் தோன்றியதாக வரலாறு பதிவுசெய்யவில்லை. பின்னாளில் அவரது தொண்டராகி கொள்கை பரப்புப் பணியை மேற்கொண்ட அறிஞர் அண்ணா அவர்கள், ஆங்கிலத் திரைப்படங்களை விரும்பிப் பார்த்ததைப் போல், பெரியார் திரைப்படங்கள் பார்த்தவர் அல்லர்.

அன்றி . பிறிதொரு தொண்டரான, தமிழகத்தின் இற்றை நாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் விளையாட்டுப் போட்டிகளைத் தொலைக்காட்சி பெட்டியில் ஆர்வத்துடன் பார்ப்பது போல் பெரியார் பார்த்தவர் அல்லர். ஏறக்குறைய 20 ஆண்டுகள் அவர் நடத்தி வந்த குடியரசு பத்திரிக்கையின் இதழ்களை நாம் ஆய்வு செய்தோமானால், அவ்வப்போது அவர் வெளியிட்ட இரங்கற்பாக்கள் மட்டுமே அவர் வலிய மனத்தின் ஒரு மென்மையான கோணத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றன என்ற செய்தியை அறியமுடிகின்றது.

திருவாரூர் ஏ.டி. பன்னீர்செல்வம், பனகல் அரசர், பெரியாரின் துணைவியார் திருமதி நாகம்மையார், அவரது அண்ணன் திரு.கிருஷ்ணசாமி, நண்பர் திரு. தங்கசாமி ஆகியோர் மறைந்தபொழுது அவர் இரங்கற்பாக்கள் வெளியிட்டு இருந்தாலும், அவர் குடியரசு பத்திரிக்கை துவங்கிய ஒருசில வாரங்களுக்குள்ளேயே நிகழ்ந்த வ.வே.சு. அவர்களின் மரணம் குறித்து 21.6.95 தேதியிட்ட இதழில் வெளியிட்ட இரங்கற்பா தான் அனைத்திலும் முதன்மையானது.

அதற்குமுன் சிலநாட்கள் வரை வ.வே.சு. அவர்களுடன் கடுமையான கொள்கைப் போரில் ஈடுபட்டிருந்த பெரியார், தான் கொண்டிருந்த முரண்பாடுகள் அனைத்தையும் மறந்து, சினத்தைத் துறந்து, நாமக்கல் கவிஞர் திரு. இராமலிங்கம் அவர்களால் எழுதப்பெற்ற அற்புதமானதோர் கண்ணீர்க் கவிதையை வெளியிட்ட செயல், அவரது ஆழ்ந்த மனித நேயத்திற்கு ஒரு நல்ல சான்று.

"இந்த 1925ஆம் ஆண்டு துவங்கி, இனிவரும் பல ஆண்டுகளில், தமிழக மாந்தரின் உள்ளங்கள் அனைத்திலும் என் கொள்கைத் தீயை, சீர்திருத்தத் தீயை மூட்டப்போகின்றேன்; ஆனால் நான் தூண்ட நினைக்கும் விழிப்புணர்ச்சி மனிதநேயம் என்ற உறுதியான பாறையின் மீது எழுப்பப்படப் போவதால் அது எக்காலத்திலும் நிலைத்து நிற்கும்; எவ்வெதிர்ப்பையும் வெல்லும்" என்று பெரியார் எழுதாவிடினும் அவரது இச்செயல் நமக்குத் தெரியப்படுத்தும் உண்மையும் செய்தியும் இதுதான். ★

Asia Match Company Limited,
Sivakasi.

Tenzing Match Works,
Sivakasi.

Asia Timber Products Pvt. Ltd.,
Port Blair, Andamans.

Sun Match Company Limited,
Kandy, Sri Lanka.

Sree Ayyanar
Spinning & Weaving Mills Limited,
Mallanginar.

Pioneer Overseas Finance Limited,
Madurai.

Pioneer Miyagi Chemicals Pvt. Ltd.,
Cuddalore.
(In collaboration with Miyagi & Okura Group of Japan)

Pioneer Asia Packaging Pvt. Ltd.,
Karanodai, Madras.

Pioneer Overseas Pvt. Ltd.,
Sivakasi.
(Export Division of Pioneer Asia Group)

Tenzing Transports (P) Ltd.,
Sivakasi.
(Fleet Operators)

Pioneer Press Pvt. Ltd.,
Sivakasi.

**Pioneer Asia Group**

PIONEER ASIA

BOOPATHY BUILDINGS, POST BOX No. 222, SIVAKASI - 626 123. INDIA.
PHONE : 22422. GRAMS : ASIAMATCH. TELEX : 0448-207 ASIA. FAX : (04562)72655.

# "காவல்துறை, மக்கள் நம்பிக்கையைப் பெறவேண்டும் !"

*- முதலமைச்சர் உரை*

சட்டம் - ஒழுங்கு சம்பந்தப்பட்ட குற்றங்கள் நிகழும்போது எந்தவித பாரபட்சமுமின்றி, தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த நடவடிக்கைகள் மற்றவர்களுக்கு ஓர் உதாரணமாக இருக்கவேண்டும். நடவடிக்கை என்ற பெயரால் தவறு செய்யாதவர்களைக் கைது செய்வதைத் தவிர்க்கவேண்டும்.

சட்டம் - ஒழுங்கு சம்பந்தப்பட்ட வழக்குகளை நடத்துவதிலும் தாமதங்கள் இருக்கின்றன. பல வழக்குகள் மாதக் கணக்கிலும், சில வழக்குகள் வருடக் கணக்கிலும் புலன் விசாரணையில் இருந்து வருகின்றன. தவறு செய்தவர்கள் மீது உடனடி நடவடிக்கையைக் காவல்துறை எடுக்கத் தவறினால் பொதுமக்களுக்குக் காவல்துறையின் மீது நம்பிக்கை இராது. காவல்துறை பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறவேண்டுமானால் தவறு செய்தவர்கள்மீது உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த வழக்குகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறேன். இதற்கான வரைமுறைகளைப் பற்றிய ஆலோசனைகளை, நீங்கள் இந்தக் கூட்டத்தில் கூறலாம்.

காவல் நிலையங்களில் ஏற்படும் மரணங்கள் தவிர்க்கப்பட வேண்டுமென்று நான் பலமுறை கூறி வந்திருக்கிறேன். இருப்பினும், இது தொடர் நிகழ்வாக நடந்துவருகிறது. இந்தப் போக்கு மிகவும் வருந்துதற்குரியதாகும். இதனால், அரசிற்குப் பிரச்சினைகள் எழுவதுமட்டுமல்லாது, காவல் துறைக்கும், அரசிற்கும் மிகுந்த அவப்பெயர் ஏற்படுகின்றது. இது முற்றிலுமாகத் தவிர்க்கப்பட வேண்டும். இதைப்பற்றி அனைத்துக் காவல்துறை அதிகாரிகளுக்கும் நீங்கள் எடுத்துக்கூறி, இனியேனும் காவல் நிலைய மரணங்கள் நிகழாவண்ணம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

காவல்துறை மூலம் ஒருவரைக் கைது செய்யும்போது ஒரு சாட்சியின் கையெழுத்தைப் பெறவேண்டும் எனவும், கைது செய்து விசாரிக்கும்போது கைது செய்யப்பட்டவரின் நண்பர் அல்லது உறவினருக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டுமென்றும் தற்போது உத்தரவிடப்பட்டுள்ளது. காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் அடிக்கடி காவல் நிலையங்களைப் பார்வையிட்டு, காவலர்களுக்கு அறிவுரை வழங்கினால், இந்தக் காவல் நிலைய மரணங்கள் தவிர்க்கப்படுமென்று நம்புகிறேன். இனிமேல் இதுபோன்று காவல் நிலைய மரணம் நிகழ்ந்தால், உயர் அதிகாரிகளையும் அதற்குப் பொறுப்பாக்க அரசு முடிவு செய்திருக்கிறது.

கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தடுக்கத் தீவிர நடவடிக்கை எடுக்கும்படி நான் ஏற்கெனவே கேட்டுக் கொண்டுள்ளேன். கள்ளச் சாராயம் காய்ச்சுவது "ஓரளவு குறைந்திருந்தாலும்கூட, இது முழுமையாக ஒழிக்கப்படவில்லை. கள்ளச் - சாராயத்தினால் சாவுகள் ஆங்காங்கே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. காவல் நிலைய ஆய்வாளர்களைப் பொறுப்பாக்கி, இந்தக் கள்ளச் சாராயத்தை அறவே ஒழிக்கத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறை கண்காணிப்பாளர்களுடைய முக்கியப் பொறுப்பு பொது மக்களின் குறைகளைக் களைவதாகும். இன்னும் நமது மக்கள் அவர்களுடைய பல பிரச்சினைகளைத் தீர்க்கக் காவல் துறையை அணுகுகிறார்கள். அவற்றினை மனிதாபிமானத்துடன் அணுகி, பிரச்சினைகளைத் தீர்க்க நீங்கள் அனைவரும் முயற்சி செய்யவேண்டும்.



இதற்காக ஒவ்வொரு காவல் நிலையத்திலும் 'பொது மக்கள் தொண்டு பதிவேடு' என்ற ஒரு பதிவேடு வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுடைய புகார்களையும், குறைகளையும் இந்தப் பதிவேட்டில் பதிவு செய்து இந்தப் புகார்களை உடனடியாக விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே அரசு அறிவுரை வழங்கியுள்ளது. இந்தப் புகார்களின் மீது தக்க நடவடிக்கை உடனுக்குடன் எடுத்தால், பல பிரச்சினைகள் தவிர்க்கப்படும். எனவே, ஒவ்வொரு புகாரின் மீதும் மூன்று நாட்களுக்குள் நடவடிக்கை

எடுக்கவேண்டுமென்று நான் முன்பே ஆணையிட்டுள்ளேன். இந்த ஆணை பின்பற்றப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும், பொதுமக்கள் கொடுக்கின்ற புகார்களுக்கு ஒப்புதல் சீட்டு வழங்கவேண்டுமென அரசு ஆணை வெளியிட்டு மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. ஒரு மாதத்திற்குள் இந்த ஆணையை நிறைவேற்றவேண்டுமென அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. மூன்று மாதங்களாகியும் இன்னும் பல காவல் நிலையங்களில் இந்த ஆணை நிறைவேற்றப்படவில்லையென அறிகிறேன். இது மிகவும் வருந்துதற்குரியது. இந்த ஆணையை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட தாமதத்திற்கு எந்தவிதக் காரணமும் இருக்க முடியாது. இந்த ஆணையை அனைத்துக் காவல் நிலையங்களிலும் உடன் நிறைவேற்றி ஆக வேண்டும்.

அதேபோல், எந்தக் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாலும், அந்தக் காவல் நிலையத்திற்கு அதிகார எல்லைவரம்பு இல்லையென்ற காரணத்தைக் காட்டி, அதனைப் பதிவு செய்ய மறுக்கக் கூடாது என்றும், அந்தப் புகாரைப் பதிவு செய்த பின், சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்குத் தக்க நடவடிக்கைக்காக மாற்ற வேண்டுமென்றும் ஏற்கெனவே அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. சில இடங்களில் இந்த ஆணை சரியாகப் பின்பற்றப்படவில்லையெனப் புகார்கள் வந்துள்ளன. இந்த ஆணையை முழுமையாக நிறைவேற்ற வேண்டும்.

ஒரு மாவட்டத்தில் சட்டம் - ஒழுங்கு சரிவர காக்கப்பட வேண்டுமானால், குற்றங்கள் களையப்பட வேண்டுமானால், அதற்கு முக்கியப் பொறுப்பு அந்த மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளரையே சேர்ந்ததாகும். காவல் துறையில் பணிபுரியும் அனைவருக்கும் ஒரு வழிகாட்டியாக மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் செயல்பட வேண்டும். காவலர்களின் குறைகளைக் கேட்டு அவற்றினைத் தீர்க்க முயலவேண்டும். அனைத்துக் காவலர்களையும் அவர்கள் வழிநடத்திச் சென்று, குற்றங்களைக் குறைக்கப் பாடுபடவேண்டும்.

நீங்கள் அனைவரும் பொதுமக்கள் சேவையில் இருக்கின்றீர்கள் என்பதை உணர்ந்து, காவல் துறை செம்மையாகச் செயல்பட அரசுக்கு உறுதுணையாக இருக்க வேண்டியது உங்கள் கடமையாகும். அதேபோல், சட்டம் - ஒழுங்கைப் பாதுகாக்கின்ற பணியைச் செவ்வனே செய்கின்ற காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கு , அரசு உறுதுணையாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மேலதிகாரிகள் காவல் நிலையம் சென்று ஆய்வு செய்வீர்!**

ஒரு காவல் நிலையத்தில் ஒரு கைதி இறந்துவிட்டான் என்பதற்குப் பிறகு சென்று விசாரிப்பதை விட, அடிக்கடி மாவட்ட மேல் அதிகாரிகளாகிய நீங்கள் அந்தக் காவல் நிலையத்திற்குச் சென்று ஆய்வு செய்வதின் மூலமாக அங்கே அடைக்கப்பட்டிருக்கும் கைதியைப் பார்த்துக்கூட, குற்றஞ்சாட்டப்பட்டவனைப் பார்த்துக் கூட நீங்கள் விசாரிக்கலாம்.

போலீசார் அவர்களிடம் உண்மையை வரவழைப்பதற்காக அடித்தார்கள் என்ற செய்தி உங்களுக்குக் கிடைத்தால் கூட நீங்கள் அந்தப் போலீஸ் அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அடிப்பதே குற்றம் என்பது அவர்களுக்குப் புலப்பட்டால்தான் அதற்கே எச்சரிக்கை உண்டு; நடவடிக்கை உண்டு என்பது அவர்களுக்குத் தெளிவாக்கப்பட்டால்தான் லாக்கப்பில் அடித்துக் கொலை செய்வது எவ்வளவு பெரிய குற்றம் என்பதை அவர்களால் உணர முடியும்.

"உங்கள் நண்பன்" என்ற சினிமாப் படம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே காவல்துறையினருக்காக எடுக்கப்பட்டது. உங்கள் நண்பன் என்பது படத்தின் பெயருக்கு மாத்திரம் என்று இருக்கக்கூடாது. எப்போதும் செயலிலே காட்டப்பட வேண்டும்.

மீண்டும் மீண்டும் சொல்கிறேன். ஒரு குற்றம் விசாரிக்கப்பட்டு, உண்மையே வெளிவராமல் போய் விட்டாலுங்கூட, குற்றஞ்சாட்டப்பட்டவன் கொலை செய்யப்பட்டான் என்ற செய்தி வராமல் பார்த்துக்கொள்ளும் பெரும் பொறுப்பை நீங்கள் ஏற்க வேண்டும் என்று நான் மீண்டும் மீண்டும் மீண்டும் வலியுறுத்த வேண்டியவனாக இருக்கிறேன்.

**ஆற்றவேண்டிய பணிகளை முறைப்படுத்தி செயல்படுத்த வேண்டியது நீங்கள்தான்!**

காலையிலே எழுந்து பத்திரிகையைப் பார்த்தால் காவல் நிலையத்திலே கைதி சாவு என்ற செய்தி வந்தால், நான் எந்த அளவிற்கு வேதனைப்படுகிறேன் என்பது உங்களில் பலருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

நான் ஒன்றைச் சொல்வதற்காக நீங்கள் யாரும் வருத்தப்பட மாட்டீர்கள்; எல்லோரையும் சொல்வதாகவும் எண்ணிக் கொள்ள மாட்டீர்கள். நாம் சரியாக இருந்தால்தான் மற்றவர்கள் சரியாக இருப்பார்கள். உதாரணத்திற்கு நான் சரியாக இருந்தால்தான் என்னுடைய அமைச்சர்கள் சரியாக இருப்பார்கள். அதைப்போல மேல் அதிகாரிகள் சரியாக இருந்தால்தான் உங்களுக்கு அடுத்திருக்கின்ற அதிகாரிகள் சரியாக இருப்பார்கள்.

உங்களை நம்பித்தான் நாட்டின் பாதுகாப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. சமுதாய ஒற்றுமை ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. நாட்டின் நலன்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. எனவே நான் உங்களை நம்புகிறேன்.

நீங்கள் கேட்ட நவீனமயக் கருவிகள், வேறு பல சாதனங்கள், காவல்துறைக்கு வேண்டிய நன்மைகள், நலத்திட்டங்கள்-இவைகளையெல்லாம் குறைக்காமல் நிதிநிலை அறிக்கையிலே அறிவித்ததையெல்லாம் நடைமுறைப்படுத்திக்கொண்டு வருகிறோம்.

மேலும் காவல்துறையினருக்கு வேண்டிய அவர்களுடைய நல்வாழ்விற்கு என்ன என்ன திட்டங்கள் தேவை என்று கருதுகிறோமோ அதையெல்லாம் செய்து கொடுப்பேன் என்ற நம்பிக்கையை என் மீது நீங்கள் வைக்கலாம். நான் அந்த அளவிற்கு உங்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கின்றேன். அந்த நம்பிக்கை வீண் போகாமல் நாட்டுப்பணியாற்ற வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

*- 10.9.97 அன்று நடைபெற்ற காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் முதலமைச்சர் ஆற்றிய உரை.*





தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வளர்ச்சிப் பணிகளை விரைந்து செயல்படுத்திட ரூ.12.95 கோடி செலவில் 384 புதிய ஜீப்புகளை 15.9.97 அன்று சென்னையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி அவர்கள் சாவியைப் பெற்றுக்கொண்டார்.

# மதுரையில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில்...

**அரசு முயற்சிகளுக்குத் துணைநிற்போம்! - திரு. ஜி.கே. மூப்பனார்**

**நல்லெண்ணங்களே நாட்டை நலப்படுத்தும்! - பேராசிரியர் க. அன்பழகன்**

**சாதிபேதம் ஒழிக்கப் பாடுபடும் அரசு இது! - திருமதி சரோஜினி வரதப்பன்**

**ஆண்டு முழுவதும் தீண்டாமை ஒழிப்புக்கூட்டங்கள் - திரு. சோ.பாலகிருஷ்ணன்**

இந்திய நாடு சுதந்திரம் பெற்ற பொன்விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் - மிகச் சிறப்பாக, தமிழகத்திலே நாமும் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அதிலேயும் மிகக் குறிப்பாக, தமிழக அரசு பெரும் பங்கேற்று செயல்பட்டு வருகிறதென்று சொன்னால் அது மிகையாகாது. இதற்காக என்னுடைய நன்றியைத் தமிழக அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டு, தன்னுடைய வாழ்க்கையை முன்மாதிரியானதொரு வாழ்க்கையாக அமைத்துக் கொண்டு வாழ்ந்து காட்டிய மறைந்த அமைச்சர் கக்கன் அவர்களுடைய சிலையைத் திறந்து வைத்து இன்றைய தினம் தீண்டாமை ஒழிப்பு மாநாட்டை முதல்வர் அவர்கள் கூட்டியிருப்பது பொருத்தமான ஒரு நிகழ்ச்சியாகும்.

சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட, இந்தத் தீண்டாமை ஒழிப்பில் இன்னும் நாம் ஈடுபட்டுக் கொண்டிருப்பது மிகுந்த வேதனைக்கும் வெட்கத்திற்கும் உரியதுதான்!

தீண்டாமையை அறவே ஒழிப்பதில் தமிழக அரசு அதிக அக்கறை எடுத்து முழுமையான ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறது. அரசு எடுக்கும் எல்லா முயற்சிக்கும் நாங்கள் நிச்சயமாகத் துணைநிற்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தாழ்த்தப்பட்ட சாதியிலே பிறந்த விஸ்வநாததாசின் தியாகத்தை நினைவுகூர்ந்து, அவருக்குப் பெருமை சேர்த்திடும் வண்ணம் அரசு மேற்கொள்ளும் இந்நடவடிக்கைகளுக்கு எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**- மூப்பனார்**
*தலைவர், தமிழ் மாநில காங்கிரஸ்*

தேச விடுதலைக்கு ஈடுபட்டவர்கள் எல்லோரும் ஓர் குலம் என்பது போல் வாழ்ந்தார்கள். அரிஜனப் பணியாளர்களை தங்கள் வீட்டில் வேலைக்கு அமர்த்தி தீண்டாமை ஒழிப்புக்கு முன்னோடியாக, எடுத்துக்காட்டாகத் தங்கள் பங்கை செலுத்தினார்கள் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

தமிழக அரசு தெருக்களிலே உள்ள சாதிப் பெயர்களை எல்லாம் நீக்கியது. தற்போது தென் மாவட்டங்களில் ஏற்பட்ட சாதிக் கலவரத்திற்குப் பின் போக்குவரத்துக் கழகங்களுக்கும் மாவட்டங்களுக்கும் சூட்டப்பட்டிருந்த தலைவர்களின் பெயர்களை எல்லாம் ஒரு நல்ல எண்ணத்தோடு நீக்கியிருக்கின்றது. மனிதாபிமான அடிப்படையில் ஒரு சாதி மக்கள் மற்றொரு சாதி மக்களை மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

**- சரோஜினி வரதப்பன்**

அனைத்து அரசியல் கட்சிகளும் இந்த ஆண்டு முழுவதும் தீண்டாமை ஒழிப்பு கூட்டங்களை மட்டுமே நடத்தவேண்டும்.

**சோ.பாலகிருஷ்ணன்**
*சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர்*

'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்று திருமூலர் சொன்னார். அது சமுதாய வாழ்க்கையில் ஓங்கி நிற்கவில்லை. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று கணியன் பூங்குன்றன் சொன்னார். சமுதாயம் முழுவதும் இந்த உணர்வு பரவலாக தழைப்பதற்குப் பதில், மாறான எண்ணங்கள் ஜாதி, குலம், கோத்திரம் என்ற இந்தப் பிரிவுகளில் உயர்வு, தாழ்வு என்று கருதி ஜாதியை வைத்து, ஆதிக்கம் செலுத்துகிற எண்ணம் தோன்றிய காரணத்தால், அதை அவன் விடாப்பிடியாகப் பிடித்துக்கொள்ள, அதனால் பாதிக்கப்படுகிறவன் தன்னுடைய வாழ்க்கையைக் காப்பாற்றிக்கொள்ள, அந்தப் பாதிப்பை ஏற்றுக்கொள்கிறவனாக மாறி பல தலைமுறை ஆகிவிட்ட காரணத்தால் அது நிலைத்துப் போய்விட்டது.

ஆனால் ஏறத்தாழ எண்பது ஆண்டுகளாக இந்த இருபதாம் நூற்றாண்டு தொடக்கத்திலிருந்து மெல்ல ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படத் தொடங்கியது. கடந்த காலத்தில்கூட இயக்கத்தை ஏற்படுத்தினார்.

**-பேராசிரியர் க. அன்பழகன்**
*மாண்புமிகு கல்வி அமைச்சர்*

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று சங்கப்பாடல் சொன்னாலும்கூட, நம்மிடம் இன்னும் சமத்துவ நிலை ஏற்படவில்லை. அதன் விளைவுதான் இன்றைக்கு இருபதாம் நூற்றாண்டில் 'தீண்டாமையை ஒழிக்க வேண்டும்' என்று முதல்வர் கலைஞர் அவர்கள் வேறு எப்போதும் ஒழிக்க முடியாது.

ஜாதிகள் உண்மையில் ஒழியவேண்டுமானால் பள்ளிகளில் நீதிபோதனை பாட வகுப்புகள் நடத்தப்படவேண்டும். அப்போது ஒரு இந்து மாணவன் குரான் படிக்கட்டும். பைபிள் படிக்கட்டும். இப்படிச் செய்தால் பிற்கால சந்ததி முன்னேறும்" என்றார்.

சலுகைகள் பெறவே ஜாதி உள்ளது. சுதந்திரம் பெற்று 50

**சாதி ஒழியும்வரை சமத்துவத்தை ஏற்படுத்த முடியாது!**
**- திரு. ஆர். நல்லக்கண்ணு**

**அனைவரும் தீண்டாமை விஷம் நீக்கப் பாடுபடவேண்டும்!**
**- திரு. இராம. வீரப்பன்**

**இந்தச் சூழலில் சாதிகளை ஒழிக்க முடியாதென்றால், வேறெப்போது ஒழிக்கமுடியும்?**
**- திரு. வை. பாலசுந்தரம்**

**பேதங்கள் நீங்கினால் பந்தபாச உறவு தானே வளரும்!**
**- திரு. அ.க.அ. அப்துஸ் சமது**

ஆங்காங்கு சில பெருமக்கள் இந்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார்கள். வைதீகக் குடும்பத்தில் பிறந்த பாரதியார் 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்று பாடினார். ஆக நல்லெண்ணங்கள் பல இடங்களில் அவ்வப்போது முகிழ்த்திருக்கிறது. ஆனால் நிலைக்கவில்லை; சமுதாயம் முழுவதும் பரவலாக இது ஊன்றப்படவில்லை.

இது ஊன்றப்படக்கூடிய நிலைமை 20-ஆம் நூற்றாண்டு தொடக்கத்திலே கல்வி வளர வளரத்தான் ஏற்பட்டது. ஓரளவு இந்த நாட்டில் மிகமிக மேம்பட்ட சமுதாயத்தைச் சாராத மக்கள் சேர்ந்து சில இயக்கங்கள் நடத்தத் தொடங்கியபோது, நமக்கு ஏன் கல்வி, சமத்துவம் கூடாது என்ற எண்ணம் ஏற்பட்டு, அந்த வழியில்தான், இங்கே பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் சொன்னதைப்போல ஒரு பக்கம் [illegible] தீண்டாமை [illegible] அரிஜன இயக்கம் [illegible] நான் [illegible] ஒரு சமுகப் [illegible] என்று [illegible]

சொல்ல நாமெல்லாம் உறுதிமொழி எடுத்துக்கொண்டிருக்கின்றோம். அந்த உறுதி மொழியை நாம் நிறைவேற்ற வேண்டும். சாதி என்று மனதிலே இருக்கக்கூடிய பேதம் ஒழிகின்ற வரை நமது நாட்டில் சமத்துவத்தை ஏற்படுத்த முடியாது.

**ஆர். நல்லகண்ணு**
*- இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர்.*

தீண்டாமை ஒழிப்பை அரசு மாத்திரம் செய்துவிட முடியுமா என்றால் முடியாது. இந்த நாட்டு மக்கள் பெரும்பான்மையாக எதைப் பின்பற்றுகிறார்களோ, யாரை வழிபடுகிறார்களோ அவர்கள் அனைவரும் இந்தக் கொடிய தீண்டாமை என்ற நோயை இந்த விஷத்தை நீக்குவதற்கு முயற்சி எடுத்தாக வேண்டும்.

**- ஆர்.எம். வீரப்பன்**
*எம்.ஜி.ஆர். மன்றக் காப்பாளர்.*

ஜாதி உணர்வுகளைத் [illegible] சமூக விரோத சக்திகள் [illegible]

[illegible] கலைஞர், மூப்பனார் [illegible] ஜாதியை ஒழிக்க முடியாது [illegible]

ஆண்டுகள் ஆகிவிட்டது. சலுகைகளை மெல்ல மெல்லக் குறைத்துக்கொள்ள வேண்டும். சாதியை ஒழிக்க வேண்டும் என்றால் சலுகைகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும். தனிப்பட்ட விரோதங்களை அரசியல் ஜாதி தலைவர்கள் மிகைப்படுத்துகிறார்கள். அரசியல் தலைவர்கள் ஜாதி இல்லை என்ற விதமாகச் செயல்பட வேண்டும்.

**- வை. பாலசுந்தரம்**
*அம்பேத்கர் மக்கள் இயக்கத்தலைவர்*

நான் தமிழ்நாட்டு மக்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த பேதங்கள் எல்லாம் தவிர்க்கப்படுமானால் சிறந்த ஒரு பந்தபாச உறவு வளர உதவும் என்று கூறி, இந்தக் காலகட்டத்தில் கலைஞரைப் போன்ற உயர்ந்த ஒரு [illegible] ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, [illegible] ஒரு [illegible]

[illegible]



காந்தியடிகளும், பெரியாரும் அம்பேத்கரும் இந்தச் சமயத்திலே எதை விரும்பினார்களோ அந்த லட்சியத்தை நிறைவேற்றுவபர்களாக நாம் இருந்திருக்கிறோம். கடந்த ஐம்பது ஆண்டுகளில் சமூகப் பொருளாதார மறுவாழ்வினை இந்த நாட்டு மக்களுக்கு வழங்கிப் பாடுபட்டிருக்கிறோம். தீண்டாமையை ஒழிக்கப் பல்வேறு தலைவர்கள் பாடுபட்டிருந்தாலும் தமிழகத்திலே பெருந்தலைவர் காமராஜர் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் மற்றும் தேசியத்தலைவர்களும், திராவிட இயக்கத் தலைவர்களும், பாடுபட்டு இருக்கிறார்கள். அரசியல் கட்சிகளுக்குள்ளும் சாதி ஒழிக்கப்பட வேண்டும். இந்த விழாவிற்குக் கலைஞர் அவர்கள் தலைமையேற்பது மிகவும் பொருத்தமுடையது என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஏனென்றால் தேசியமும், திராவிடமும் கலந்துகொண்டிருக்கிற மேடை இது. மனரீதியாகச் சமத்துவத்தை ஏற்கும் நாளே சாதி ஒழியும் நாள்.

- கே.வி.தங்கபாலு
தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ்

தலைவர்களெல்லாம் ஒன்றுகூடி ஆதரவளிக்கவேண்டியது அவசியம். தீண்டாமை ஒழிக்கப்படவேண்டுமானால் - வட்ட அளவில் ஒரு கமிட்டி அமைக்கப்பட வேண்டும்; அதில், ஒரு ஆதிதிராவிடரையும் நியமிக்கவேண்டும். அந்தக் கமிட்டியின் ஆலோசனையைப் பரிசீலித்து அரசு செயல்படுத்தவேண்டும்.

- இளையபெருமாள்
தலைவர், மனித உ ாம இயக்கம்.

நம்முடைய தமிழகத்தில் உள்ள சில கிராமங்களில் உள்ள டீக்கடைகளில் இன்னமும் இரண்டு வகை கிளாஸ்கள் வைக்கப்படும் நிலைமை இருக்கிறது. இம்மாதிரியான முறைகளைத் தவிர்க்க நாம் கடுமையான நடவடிக்கை எடுத்தாகவேண்டும். இல்லாவிட்டால் அப்படிப்பட்ட நிலைமை மாறுவதற்காகவே நாமெல்லாம் ஒரு சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தியாகவேண்டும். அவ்வாறெல்லாம் தீவிரமாக முயன்றாலன்றித் தீண்டாமையை அவ்வளவு எளிதில்

---

**தீண்டாமை ஒழிய வட்ட அளவிலே ஒரு கமிட்டி அமைக்கவேண்டும்!**

- திரு. இளையபெருமாள்

---

**கலைஞர் தலைமையேற்பதே பொருத்தம் உடையது!**

- திரு. கே.வி. தங்கபாலு

---

**சாதியை ஒழிப்பதிலே நாமெல்லாம் முதல்வரோடு இருப்போம்!**

- திரு. குமரி அனந்தன்

---

**சுடுகாடு - இடுகாடு அனைவருக்கும் ஒன்றே என்கிற நிலை வரவேண்டும்!**

- திரு. சங்கரய்யா

---

சாதி என்பது ஒழிய வேண்டும். ஆனால் சிலர் அந்தச் சாதிக்குக் கொம்பு சீவி விட்டு, அதை முறுக்கி விடுகிறார்கள். எனவே சாதியானது சா-தீயாக மாறிப் பற்றிக்கொண்டு விடுகிறது. பற்றுதல்கூட இருக்கலாம், பற்றவைத்தல் இருப்பது என்பது எந்த நோக்கத்திற்கும் ஆகாத ஒன்று. சாதியை ஒழிப்போம்; சாதியை ஒழிப்பதிலே நாமெல்லாம் முதல்வரோடு இருப்போம்.

சாதித்துவேஷம் அறவே இல்லாத பஞ்சாயத்துகளுக்கு - ஊராட்சி ஒன்றியங்களுக்கு என்று தனி நிதியே கூட அளித்துச் சிறப்பிக்கலாம்.

- குமரி அனந்தன்
தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவர்

மிக உயர்ந்த உள்ளத்தோடு இந்தத் தீண்டாமை ஒழிப்பு மாநாட்டை நடத்துகின்ற முதலமைச்சர் அவர்களுக்கு - அந்த வகையில் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பிலே நான் மனப்பூர்வமாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தீண்டாமை ஒழிப்பில் இங்குள்ள



விலக்கமுடியாது! சுடுகாடு, இடுகாடு ஆகியவை, எல்லோருக்கும் ஒன்றுதான் என்ற நிலை உருவாக நாமெல்லாம் பாடுபடவேண்டும்!

- சங்கரய்யா
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு செயலாளர்.

நாட்டில் - பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர் என்றெல்லாம் உள்ள நிலைமாற, கலைஞர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். தீண்டாமை ஒழிப்பில் நாம் ஒரு கட்டத்தைத்தான் தாண்டியுள்ளோம். ஆனால், தெருவில் நடக்கக்கூடாது; தனிச் சுடுகாடு என்றெல்லாம் சில இடங்களில் இன்னும் இருப்பதை நாம் மறுக்க முடியாது. தீண்டாமை ஒழியவேண்டுமானால், அதற்கு மூல காரணமான சாதியை நாம் ஒழித்தே ஆகவேண்டும். இதில், அரசியல் கட்சிகள் உறுதியோடு செயல்படவேண்டும்.

- பேராசிரியர் தீரன்
பாட்டாளி மக்கள் கட்சி.



சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னால், ஆந்திர மாநிலத்தில் இதேபோல் தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடைபெற்றது. அதற்குப் பிறகு எனக்குத் தெரிந்து, இப்போதுதான் இங்கே தமிழ்நாட்டில் நடைபெறுகிறது. சரியான நேரத்தில் இந்த மாநாட்டைக் கூட்டியுள்ள முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சாதி ஒழிப்பு என்பதற்கு இளம் வயது முதலே நாம் வித்திடவேண்டும்; பாடசாலைகளில் நீதிபோதனை வகுப்புகள் கட்டாயம் நடைபெறச்செய்து அதன்மூலமே இந்த உணர்வை ஊட்டலாம்.

- கோபாலன்
பாரதீய ஜனதா கட்சி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடத்துகிற இந்தநேரத்தில் - அவர் உருவில் எனக்குப் பெரியாரின் உருவம்தான் ஒளிவீசுகிறது. எல்லாச் சாதி மதத்தினரையும் மதிக்கக்கூடியவர்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். இந்தியா சுதந்திரம் அடைந்து ஐம்பதாண்டுகள் ஆகியும், தீண்டாமை ஒழியவில்லை என்பது வேதனைக்குரிய ஒன்று தான். அதை ஒழிக்க நாமெல்லாம் நம்மை நாமே அர்ப்பணித்துக்கொள்ள முன்வரவேண்டும்; அப்போதுதான் சாதி என்கிற தீமை தீயாக மாறாமல் தடுக்கமுடியும்!

மனிதன் உண்டாக்கிய சாதி மனிதனையே அழிக்கக்கூடாது. திராவிட இயக்கம் தோன்றிய பிறகே குனிந்த சமுதாயம் நிமிர்ந்தது-என்பதையும் மறக்கக்கூடாது.

- அப்துல் லத்தீப்
இந்திய தேசிய லீக்.

இதுவரை அரசு அலுவலகங்களில் மட்டுமே நடைபெற்றுவந்த விழா இப்போதுதான் மக்கள் மத்தியில் கொண்டாடப்படுகிறது; இதற்குக் காரணமான முதலமைச்சருக்கு நாமெல்லாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். கிராமங்களில் எல்லாம் ஒதுக்குப்புறமாக, அல்லது ஒரு ஓரமாகத்தான் ஆதிதிராவிடர்கள் வாழும் நிலை இதுவரை இருந்து வந்தது; மனிதனுக்கு மனிதன் பேதம் பாராட்டும் அந்த இழிநிலை நீங்கிட-சாதிமத பேதமெல்லாம் அழிந்தொழிய "சமத்துவபுரம்' அமைத்து எல்லா மக்களும் இணைந்து இன்புற்று வாழ வகைசெய்திருக்கிற முதலமைச்சர் கலைஞர் அவர்களை வரலாறு வாழ்த்தும் என்பது உறுதி.

- குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

சாதிவேறுபாடுகளைத் தூண்டுகிற அல்லது தீண்டாமையை வலியுறுத்துகிற காரியங்களையும் பிரிவினைப் பேச்சுகளையும் நாங்கள் அடியோடு வெறுக்கிறோம். அவ்வாறான நடவடிக்கைகளையும் நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். சாதிப்பிரிவுகள் எங்கள் கிறிஸ்தவக் கோட்பாடுகளுக்கு எதிரானது. இந்தக் கொடுமையைத் தவிர்ப்பதில், இந்த ஆபத்தான, நோயை நீக்குவதில் நாங்கள் என்றும் அரசுக்குத் துணை நிற்போம். இதைச் சொல்கிற போது-அரசியல் கட்சிகள் சாதிச் சங்கங்களோடு சமரசம் செய்து கொள்ளக் கூடாது என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

பேராயர் ஆரோக்கியசாமி

சுதந்திரம் கிடைத்து 50 ஆண்டுகள் கழித்தும் இந்த தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடத்துவது வேதனைதான். நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்த போது தாழ்த்தப்பட்ட மக்கள் அக்கிரகாரத்தில் நுழையும்போது தோளில் துண்டு, காலில் செருப்பு



தமிழ்நாட்டுப் பிரதிநிதியாக விளங்கியது மட்டுமின்றி பல்வேறு சமூகச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப் பாடுபட்டார்கள். அதே நேரத்தில் இந்திய மாதர் சங்கத்தையும் சென்னையில் சீரும் சிறப்புமாக நடத்தி வந்தார்கள். இந்திய மாதர் சங்கத்தில் என் தாயார் முக்கிய உறுப்பினராக இருந்துவந்த காலங்களில் நான் அவர்களுடன் கூட்டங்களுக்குப் போவது வழக்கம். இது எனக்கு மிகுந்த உற்சாகத்தையும் சமூக நலப்பணி புரிய ஊக்கத்தையும் அளித்தது. சுதந்திரம் பெற்ற 1947ஆம் ஆண்டு சென்னையில் அகில இந்திய மாதர் மாநாடு கூடியது. அப்பொழுது என் தாயார் சற்று சுகவீனமாக இருந்த காரணத்தால் என்னைக் காரியதரிசியாகத் தேர்ந்தெடுத்தார்கள். எனவே எனக்கு டாக்டர் அம்மாவிடம் நெருங்கிப் பழகக்கூடிய வாய்ப்புகள் நிறையக் கிடைத்தன.

டாக்டர் அவர்களிடம் பணிபுரிவது ஒரு பெரும் படிப்பினை. எடுத்த காரியத்தை முடிப்பது, ஓயாது பெண்கள் நலத்திற்கு உழைப்பது, விழிப்புணர்ச்சியுடன் இருந்து உடனடியாக நிவாரணம் செய்ய முற்படுவது போன்ற பல நற்பண்புகள் டாக்டர் அம்மாவிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளலாம். ஏழை, எளியவர், பெரியவர், சிறியவர் என்ற பாகுபாடின்றிப் பழகக்கூடிய தலைவி டாக்டர் அம்மா. அதே நேரத்தில் நம் முதுகைத் தட்டிக் கொடுத்து நம்மிடம் வேலை வாங்குவதிலும் அம்மா கைதேர்ந்தவர்கள். யாரிடம் என்ன திறமை உள்ளது என்பதை நன்றாக ஆராய்ந்து, பக்குவமாக அவர்களை உபயோகப்படுத்திக் கொள்ளும் சாதுர்யம் அம்மாவிடம் பூரணமாக இருந்தது.

அம்மாவினுடைய சகோதரி புற்றுநோயில் மிகவும் கஷ்டப்பட்டதைப் பார்த்த டாக்டர், புற்றுநோய் ஆஸ்பத்திரி ஆரம்பிக்க எண்ணம் கொண்டார். அப்பொழுது மருத்துவர்களில் சிலர் 'புற்றுநோய் தீராத வியாதி, இதற்குச் செலவிடுவது விரயம்' என்று நினைத்தார்கள். ஆனால் டாக்டர் அம்மா ஒரே நோக்குடன், 'துன்புறுபவர்களுக்கு நிவாரணம் அளிப்பதுதான் மனிதாபிமானச் செய்கை' என்பதை ஆணித்தரமாக எடுத்துச் சொன்னார்கள். முழுமூச்சுடன் புற்றுநோய் ஆஸ்பத்திரியை இந்திய மாதர் சங்கத்தின் மூலமாகவே தோற்றுவிக்கப் பிரயத்தனம் செய்தார்கள். அதற்கு அரசு நிலம் தேவைப்பட்டது. பிரம்மப் பியத்தனம் செய்யவேண்டியதாய் இருந்தது. என் தகப்பனார் அமைச்சராக இருந்தமையால் அடிக்கடி எனக்கு டெலிபோன் மூலம் டாக்டர் அம்மா நினைவுபடுத்துவார்கள்.

அவர்களுடைய விடா முயற்சியினால் அரசினர் நிலத்தை ஒதுக்கினார்கள். அப்பொழுது பாரதப் பிரதமராக இருந்த பண்டித ஜவகர்லால் நேரு அடிக்கல் நாட்ட வேண்டும் என டாக்டர் அம்மா விரும்பினார்கள். அப்போது தமிழக முதல் அமைச்சராக அறிஞர் ராஜாஜி இருந்தார். அவர் சம்மதம் அளிக்கவில்லை. டாக்டர் அம்மா விடுவதாக இல்லை. எனக்குப் பலமுறை டெலிபோன் செய்து எப்படியாவது நேருவைச் சம்மதிக்க வைக்க முயலுமாறு கூறினார்கள். அவர்களின் விடாமுயற்சி பயனளித்தது. நேரு அவர்கள் சம்மதம் அளித்தார். ராஜாஜியின் தலைமையிலே புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்த நிகழ்ச்சி மறக்க முடியாதது. மே மாதம் கடும் வெயிலில் பிற்பகல் 11.45 மணிக்கு இந்த விழா எங்களுக்குத் தமிழக அரசால் ஒதுக்கப்பட்டது. கொடுத்த நிலமோ காந்திநகர் கனால் ரோடில் வால்போன்ற சிறிய இடம். அஞ்சா நெஞ்சம் படைத்த டாக்டர் அம்மா, பொட்டல் காடாக இருந்த இடத்தில் ஒரு தட்டுப்பந்தல் போட்டு எளிமையாக விழா ஏற்பாடு செய்துவிட்டு - பாரதப் பிரதமர்கள், ராஜாஜி ஆகியோரின் பாராட்டுகள் பெற்றார்கள். அன்று ஜவகர்லால் அடிக்கல் நாட்டிய புற்றுநோய் ஆஸ்பத்திரி இன்று ஆலமரமாகப் பரந்து ஆசியாக் கண்டத்திலேயே முதன்மையான ஆஸ்பத்திரியாக விளங்கி, பல்லாயிரக்கணக்கான நோயாளிகளின் துயரம் துடைக்கும் சிகரமாக விளங்குகின்றது என்றால், டாக்டர் அம்மாவின் உழைப்பு திருவினையாக்கியது என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

இதே போல அனாதைக் குழந்தைகளுக்கு ஒரு முன்னோடியான இல்லமாக ஔவை இல்லத்தைத் துவக்கினார்கள்.

மேலவையில் இருந்த காலத்தில் உருப்படியான பல சட்டங்களைக் கொண்டு வந்தார்கள். தேவதாசி ஒழிப்புச் சட்டம் உலகப் பிரசித்தமானது. பலதாரச் சட்டம் வந்தபோது பல சட்ட உறுப்பினர்களே அதற்கு விரோதமாக இருந்தமையால் சட்டம் அமலுக்கு வரும் தினம் இந்திய மாதர் சங்கத்தின் அங்கத்தினர்களை எல்லாம் ஒன்று திரட்டி Visitors galloryயில் உட்கார வைத்துப் பெண்களின் பலத்தை அரசுக்கு எடுத்துக்காட்டினார்கள். அன்று நானும் அந்தக் கூட்டத்தில் இருந்தது என்னால் மறக்க முடியாது. இவ்வாறு பெண்களுக்கு எந்தக் கோடியில் ஓர் இடையூறு என்று கேட்டாலும் உடனடியாகச் சீறி எழுந்து, காரசாரமாகத் தன் கருத்துரையைப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தி விடுவார்கள். அதற்குப் பெரும் மதிப்பும் உண்டு.



இப்படிப்பட்ட ஒரு பெரும் தலைவி இம் மாதர் சங்கத்திற்கு இருந்தமையால் அவர்கள் காலம் பொற்காலமாக அமைந்து பல நல்ல பணிகள் புரிய முடிந்தது. எத்தனையோ பெரும் தேசிய தலைவிகள், உலகத் தலைவிகள் எல்லாம் சென்னையில் டாக்டர் அம்மாவின் தலைமையின்கீழ் இயங்கி வந்த இம் மாதர் சங்கத்தின் விழாக்களில் பங்கு கொண்டு பாராட்டிச் சென்றுள்ளார்கள்.

கடைசியாக இந்திய மாதர் சங்கத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்ட டாக்டர் அம்மா விரும்பினார்கள்.



அவர்களுடைய கடைசி ஆவலைப் பூர்த்தி செய்ய அன்றுள்ள அரசு மனமுவந்து கபாலீஸ்வரர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான பத்து கிரௌண்ட் நிலத்தை இம்மாதர் சங்கத்திற்கு வழங்கினார்கள். தள்ளாத நிலையிலும் டாக்டர் அம்மா நேரில் வந்து அடிக்கல் நாட்டு விழாவில் பங்கு பெற்றார்கள். அதுதான் கடைசி நிகழ்ச்சி. கட்டடம் முடிந்த நேரம் டாக்டர் அம்மா மறைந்து விட்டார்கள். ஆனால் அவர்கள் ஆசியுடன் அந்தக் கட்டடத்தில் இன்று வேலைக்குப் போகும் பெண்கள் ஹாஸ்டல் நல்ல முறையில் நடக்கின்றது. அத்துடன் குழந்தைகள் காப்பகங்கள் செவ்வையாக நடந்து வருகின்றன. அவர்கள் கைபட்ட இடம் எல்லாம் வளர்ந்துள்ளது. அன்று ஐந்து கிளைகள் கொண்ட இம்மாதர் சங்கம், இன்று மேலும் பல கிளைகளைப் பெற்று, தமிழகம் முழுவதும் ஏறக்குறைய பல்லாயிரம் பெண்களுக்கு எழுத்தறிவு அளித்துள்ளது என்பதைப் பெருமையுடன் கூறி, அஞ்சலி சமர்ப்பிக்கின்றேன்.

ஸ்தாபனங்களை ஆரம்பித்தால் மட்டும் போதாது. அவை செவ்வையாகச் செயலாற்றத் தகுதியுள்ள தொண்டர்கள் தேவை. அம்மாவிற்கு இரண்டாவது வரிசைத் தலைவர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி அளிப்பதிலும் நல்ல திறமை உண்டு என்பதை நிரூபித்துவிட்டார்கள். இளம் வயதுத் தொண்டர்களிடம் அன்புடன் பேசி அவர்களை ஊக்குவிக்கும் பாங்கு மிகுந்தவர்கள். மேடையில் நம்மைப் பேச வைப்பார்கள். உடனே நம்மை அழைத்து "நீ ரொம்ப நன்றாகப் பேசினாய் அம்மா" என்று உற்சாகப்படுத்தவும் தவறமாட்டார்கள்.

தேசிய உலக அரங்குகளில் நான் பங்கு கொள்ள நேரிடும் போதெல்லாம் டாக்டர் அம்மாவிடம் ஸ்வாதீனமாக ஓடிச்சென்று கருத்துக்கள் கேட்பேன். அவர்களுக்கிருந்த ஞாபகச் சக்தி அபாரமானது. கண்ணை மூடிக்கொண்டு மளமளவென்று கருத்துகளை அள்ளி வீசுவார்கள். அவை அனைத்தும் மிக உயர்ந்த கருத்துக்களாகப் பாராட்டப்படும். இவ்வாறு அவர்களது அடிச்சுவட்டில் பயிற்சி பெற்ற நான், அவர்களுக்குப் பிறகு தமிழ்நாட்டிலிருந்து அனைத்திந்திய மாதர் மாநாட்டில் 1980ல் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, என் தாயாரின் மறைவு எவ்வளவு பாதித்ததோ அதே போல - டாக்டர் அம்மா இல்லையே என்கிற குறை எனக்குத் தலை தூக்கியிருந்தது. ஏனென்றால் என் தாயாரிடம் டாக்டர் அம்மா அடிக்கடி கூறுவார்கள். 'ஞானசுந்தரம்மா! உங்கள் பெண் ரொம்ப சமர்த்து. சரோஜினியை நான் என் பெண்ணாக ஸ்வீகரித்துக் கொண்டேன்' என்று அன்பொழுகக் கூறுவார்கள்.

பல்வேறு துறைகளில் நாட்டின் நலனில் அக்கறை கொண்டு அம்மையார் ஆற்றிய பணிகள் அளவில் அடங்காது.

தமிழக சமூகநல வாரியத்தின் முதல் தலைவியாகவும் பொறுப்பேற்று அரிய சாதனைகள் புரிந்தவர் நம் டாக்டர் அம்மா என்று பார்க்கும்போது சமூக நலத்தில் தொண்டாற்றுபவர்கள். அத்தனைப் பேரும் அவர் காட்டிய வழியில் செல்வோமேயானால் நாடு நலம் பெறும். அவரைப் போன்ற தேசப்பற்றும் நலிந்தவர்களிடம் அன்பு, ஆதரவு காட்டுவது - தைரியமாகப் பெண்களின் உரிமைகளை எடுத்துச் சொல்லுவது, கடமை உணர்ச்சியுடன் அல்லும் பகலும் உழைப்பது போன்ற திறன் பெற்ற நன்முத்துக்களைத் தமிழகம் ஏராளமாக உருவாக்கட்டும்!

---

# சுதந்திரம்

**- அறிஞர் அண்ணா**

இந்தியத் துணைக் கண்டத்தில் 200 ஆண்டுகளுக்கு மேலாகப் பறந்து கொண்டிருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கொடி, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு அரச வட்டாரங்களிலிருந்தும் கீழே இறங்குவதுடன், இரு இடங்களிலும் சுதந்திரக் கொடிகள் பறக்கவிடப்படுகின்றன.



அந்நிய ஆட்சி ஒழிந்து புதுச் சுதந்திர ஆட்சிகள் ஆரம்பமாகும் இந்த நாளில், அந்நியர் ஆட்சியின் விளைவுகளாக இருந்துவரும் தொல்லைகளையும், அல்லல்களையும் நீக்கி, மக்களுக்கு நலன் ஏற்படும்படியான ஆட்சி நடத்தும்படி கேட்கும் உரிமையும், பலமும், வசதியும் மக்களுக்குத் தானாகவே பிறக்கின்றன.

நாட்டு விடுதலைக்காகச் சிறையில் வாடியவர்கள், தீவுகளுக்குத் துரத்தப்பட்டவர்கள், மண்டை பிளக்கப் பட்டவர்கள், குடும்பச் சுகத்தை இழந்தவர்கள், தடியடியால் இறந்த குமரன், தூக்குமேடை ஏறிய பகத்சிங், சொத்தைப் பறிகொடுத்த சிதம்பரம் பிள்ளை போன்ற வீரத் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்த வேண்டும். அவர்கள் சிந்திய இரத்தமும், கண்ணீரும் நமது வீர வணக்கத்துக்கு உரியன. அவர்கள் நமக்கு வழிகாட்டிகள்.

பெரியார், காங்கிரசில் தலைமை வகித்து பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துக் கஷ்ட நஷ்டமடைந்திருக்கிறார். ஆகவே, விடுதலை விழாவைக் கொண்டாடப் பாத்யதை கொண்டவர்களிலே அவர் மிக முக்கியமானவர்.

**அநியாயம் அகன்றது**

நியாயத்தை மட்டுமே கவனித்து எந்த நாட்டிலும் ஆட்சியாளர்கள் நடப்பதில்லை. நியாயத்தை நிலைநாட்ட, பலம் துணையாக இருக்கிறது என்றால் மட்டுமே காரியம் பலிக்கும்.

ஒரு நாட்டை மற்றொரு நாடு ஆளுவது அக்ரமம்.

எந்த நாடும் சுயாட்சி கேட்பது நியாயம். இந்த நியாயத்தை எடுத்துக் கூறிய உடனே - காங்கிரசை மதித்து சுயராஜ்யம் கொடுக்க, எந்த கிரிப்சும், மவுண்ட்பேட்டனும் முன்வரவில்லை. ஏனனம் பேசும் சர்ச்சில்களாகத்தான் சகல பிரிட்டிஷாரும் இருந்தனர். நியாயத்தின் பக்கபலமாகத் தியாகம், கிளர்ச்சி, பணபலம், பத்திரிகை பலம், இவ்வளவுக்கும் மேலாக - உலகச் சூழ்நிலையில் மாறுதல், பிரிட்டிஷ் பலச் சரிவு என்பவை ஏற்பட்டதால்தான் மந்திரிகள் பறந்து வந்தனர், நியாயம் வழங்க!

(10.8.1947ல் எழுதியது)

**தீண்டாமை ஒழிப்பில் அரசியல் கட்சிகள் உறுதியோடு செயல்பட வேண்டும்!**

- பேராசிரியர் தீரன்

**நீதிபோதனை வகுப்புமூலம் தீண்டாமை ஒழிப்பிற்கு வித்திடலாம்!**

- திரு. கோபாலன்

**சாதியை ஒழிக்க நம்மை நாமே அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும்!**

- திரு. அப்துல் லத்தீப்

**'சமத்துவபுரம்' கண்ட கலைஞரை வரலாறு வாழ்த்தும்!**

- குன்றக்குடி அடிகளார்

**அரசியல் கட்சிகள் சாதிச் சங்கங்களோடு சமரசம் செய்துகொள்ளக்கூடியது!**

- பேராசிரியர் ஆரோக்கியசாமி



போட்டுப் போகக்கூடாது என்று இருந்தது. அதை மீறும் தாழ்த்தப்பட்டவர்கள் போலீஸ் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். அந்த சட்டம் நீதிக்கட்சி ஆட்சியில் உடைத்து எறியப்பட்டது. தமிழக முதல் அமைச்சராகக் கலைஞர் இருக்கும் இந்தக் காலத்தில் தீண்டாமையை ஒழிக்க நடவடிக்கை எடுக்க கட்சி வேறுபாடு இன்றி ஒத்துழைப்பு தரவேண்டும்.

- பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன்
சட்டப் பேரவைத் தலைவர்

ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்கிற அறிஞர் அண்ணா அவர்களின் ஒப்பற்ற கொள்கையை இந்த உலகிற்கே உணர்த்தவும், இந்த மண்ணிலிருந்து தீண்டாமைத் தீமை அடியோடு நீங்கவும், தமிழ்நாட்டை அமைதிப்பூங்காவாக மாற்றவும் - கலைஞர் அவர்களால் இம் மாநாடு நமது மதுரை மாநகரிலே நடைபெறுவதானது நமக்கெல்லாம் பெருமையளிப்பதாகும்.

- குழந்தைவேலு - மதுரை மேயர்.

சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகள் கடந்த பின்பு, தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடத்துவது மகிழ்ச்சிக்குரியது அல்ல. வட இந்தியாவில் முன்பு ஜாதிக்கொடுமைகள் அதிகமாக இருந்தன. இன்றும்கூட ஜாதிக் கொடுமைகள் இருக்கின்றன. ஆனால், தமிழகத்தில் நல்ல விழிப்புணர்வு உள்ளது. இது முற்றிலும் முழுமை அடைய வேண்டும்.

- ஜி.ஏ.வடிவேலு
ஜனதா கட்சி.

சிக்கன் சிலை திறந்து இருப்பது நல்ல எடுத்துக்காட்டு, வைத்தியநாதய்யர் மீனாட்சி அம்மன் கோவிலில் ஆதிதிராவிடர்களுடன் ஆலய பிரவேசம் செய்ய உறுதுணையாக இருந்தவர் முத்துராமலிங்கத்தேவர். சாதி உணர்வைத் தூண்டி சிலர் தலைவராக நினைக்கிறார்கள், அவர்கள் எண்ணத்திற்கு இடம் கொடுக்கக்கூடாது.

- அய்யணன் அம்பலம்
பார்வர்டு பிளாக்.

(மதுரையில் 31.8.1997 அன்று மாண்புமிகு செய்தி விளம்பரத்துறைத்துறை அமைச்சர் திரு.வ.முல்லைவேந்தன் அவர்கள் வரவேற்புரையும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் சமயநல்லூர் திரு.எஸ். செல்வராக அவர்கள் நன்றியுரையும் ஆற்றிய தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில் தலைவர்கள் ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகள்.)



# மகளிர்குல மணிவிளக்கு!

- திருமதி சரோஜினி வரதப்பன்

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்ற பொன்மொழிக்கும், 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற வாக்கின்படியும் நம்முன்னே வாழ்ந்துகாட்டியவர் டாக்டர் முத்துலட்சுமிரெட்டி அவர்கள், அவருடன் நெருங்கிப் பழகக்கூடிய வாய்ப்புப் பெற்றதை என் பெரும் பேறாகக் கருதுகின்றேன். நாங்கள் அவர்களை டாக்டர் அம்மா என்றுதான் குறிப்பிடுவது வழக்கம்.

அனாதைகள் மட்டுமின்றி எல்லோருக்குமே தாயாக வாழ்ந்து காட்டினார்கள் டாக்டர் அம்மா. வாழ்க்கை முழுவதும் போராட்டங்களைச் சமாளித்து வெற்றிபெற்ற பெருமையை அவரது வாழ்க்கை வரலாறு கூறும். சிறுவயதிலேயே சமுதாயத்தில் பெண்களுக்கு ஏற்பட்ட அநீதிகளைக் களைய அவர் விரும்பினார். பாரதியாரின் புதுமைப் பெண்ணாகத் திகழ்ந்தார்.

புதுக்கோட்டையில் பிறந்த அவர், பல இடர்ப்பாடுகளைத் தாண்டி, மகாராஜா கல்லூரியில் முதல் பெண் மாணவியாகச் சேர்ந்ததைக் கேட்கும்போது, நாம் வியக்காமல் இருக்க முடியாது. இவ்வாறு வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் விடாமுயற்சி, தன்னம்பிக்கை, தளரா உறுதி, காரியத்தைச் சாதிக்கும் திறமை மூலம் அவர் பல முதல் ஸ்தானத்தைப் பிடித்துள்ளார் என்று பார்க்கும்போது அன்னாருடைய சாதனைகள் நமக்கு உற்சாகம் ஊட்டுகின்றன. முதல் பெண் மருத்துவ மாணாக்கராக, முதல் மேல்சபைப் பெண் அங்கத்தினராக, முதல் பெண் தலைவியாக, பல்வேறு சமூகச் சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டு வரக் காரணமாக இருந்த அம்மையார் அவர்களின் தொண்டு தமிழகப் பெண்களுக்குப் பெருமை தரக்கூடியது.

சிறந்த மருத்துவராக விளங்கிய டாக்டர் அம்மா பணம் ஈட்டுவதுதான் வாழ்க்கையின் இலட்சியம் என்று நினைத்திருந்தால் எவ்வளவோ சம்பாதித்திருக்கலாம். அடையாறில் தன் கணவருடன் மருத்துவத் தொழிலில் ஈடுபட்டிருந்த டாக்டர் அம்மா எங்கள் குடும்பத்தின் மருத்துவர் என்று கூறிக்கொள்ளுவதில் நான் பெருமை அடைகின்றேன்.

நான் பள்ளிச் சிறுமியாக இருந்த காலத்தில் எங்கள் வீட்டிற்கு டாக்டர் வந்துபோனது பசுமையாக எனக்கு நினைவு வருகின்றது. பளபளவென்று மின்னும் பெரிய வைரக் கம்மல், பட்டொளி வீசும் பெரிய கூரைபோட்ட காஞ்சிபுரம் புடவை உடுத்தி மிடுக்காக நடந்து வருவார். மயிலாப்பூரில் வசித்த பல செல்வந்தர் குடும்பங்களுக்கு மருத்துவராக விளங்கினார். ரொம்பக் கண்டிப்பு. அதே டாக்டர் அம்மா தேசியப்பற்று மிகுந்தவராக இருந்தமையால் பெருவாரியாகப் பொருளீட்டக் கூடிய மருத்துவத் தொழிலை விட்டுச் சமுதாயத் தொண்டில் ஈடுபட்டார்.

ஏழை, எளியவர்கள், அனாதைக் குழந்தைகளுக்குப் பணி செய்ய முற்பட்டார். தனக்குக் கிடைத்தபெரும் பதவியையும் உதறித் தள்ளினார். மகாத்மா காந்திஜியின் தேசிய இயக்கத்தில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டார். அதன் பிறகு அவருடைய வாழ்க்கையில் ஒரு புதிய திருப்பம். ஆடம்பர வாழ்க்கை அவருக்கு ஒத்துவரவில்லை. எளிய வாழ்க்கை, தூய கதராடை, ஒரு சன்னியாசி போலத் தன்னுடைய தேவைகளைக் குறைத்து, பெண்கள், குழந்தைகளின் நலத்திற்குத் தன் வாழ்நாள் முழுவதும் செலவிட முடிவு செய்தார்.

டாக்டர் ரெட்டி அவர்களுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் மிக நெருக்கமான உறவு. என் தகப்பனார் புரசைவாக்கத்தில் குடியிருந்து தனது ஆரம்பக் கல்வி பெற்ற நேரத்தில் டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் குடும்பமும் புரசையில் வாழ்ந்ததாகவும் அவர்கள் சேர்ந்து பள்ளிக்குப் போவது குறித்து என் தகப்பனார் சொல்லியிருக்கிறார். அதன் பிறகு தேசிய இயக்கத்தில் ஒன்றாக ஈடுபட்டுள்ளார்கள். பிறகு சட்டசபையிலும் சேர்ந்து பணிபுரிந்துள்ளார்கள். என்னுடைய தகப்பனார் அமைச்சராக இருந்த காலங்களில் பலமுறை அவர்களுடன் சென்று நான் டாக்டர் அம்மாவைச் சந்தித்துள்ளேன்.



டாக்டர் அவர்கள் இந்திய மாதர் சங்கத்தின் ஆரம்ப நாட்கள் முதல் சிறந்த ஈடுபாடு கொண்டவர்கள் என்பது என் தாயார் மூலம் எனக்குத் தெரியும். ஸ்ரீமதி மார்கரட் கஸின்ஸ் அம்மையாருடன் டாக்டர் ரெட்டி இந்திய மாதர் சங்கத்தை உருவாக்கியுள்ளார்கள். அதன் பிறகு 1927ஆம் ஆண்டில் இந்திய மாதர் சங்கம் அகில இந்திய அளவில் வளர வேண்டும் என்று மிகுந்த பிரயாசையுடன் முதல் மாநாடு பூனாவில் கூட்டினார்கள். பெண்கல்வி, பால்ய விவாகத்தைத் தடை செய்வது போன்ற பல முன்னேற்றப் பணிகளில் அகில இந்திய மாதர் சங்கமாகப் பரிணமித்து இதை ஓர் மாபெரும் பெண்கள் இயக்கமாக மாற்றிய பெரும் பணியில் டாக்டர் அம்மா முன்னணியில் நின்றார்கள்.

1931ஆம் ஆண்டு லாகூரில் நடந்த அகில இந்திய மாதர் மாநாட்டின் தலைவியாக டாக்டர் அம்மா, முதல்

# மறுமலர்ச்சிக் கவிஞர் ஜீவா



பாரதி பாதையைப் பின்பற்றி, பாமரர்கள் எழுச்சி பெறச் செய்த பாடல்கள் பலவற்றைப் பாடியவர், தமிழ்நாட்டினரால் 'ஜீவா' என்று செல்லமாக அழைக்கப்பட்ட ப. ஜீவானந்தம். பாரதியார் கவிதைகள் ஆன்மீக அடிப்படையில், புது உலகு காண மக்களை அழைத்தன. ஜீவாவின் பாடல்களில், மனிதனே மையப் பொருள்; மனிதனின் உணர்ச்சிகள் வலுப்பெற்று, இலட்சியப் பிடிப்புகள் மேலோங்கி, சிந்தனையும் செயலும் சமதர்ம நெறியில் நின்று, புதிய உலகைப் படைக்க அறைகூவல் விடுப்பவை ஜீவாவின் பாடல்கள்.

அவர் பாடல்களில் ஓங்கி நிற்பது சமதர்ம உணர்வு, அச் சுரண்டலற்ற சமதர்மச் சமுதாயத்தைச் சமைப்பதற்குச் சுதந்திர வேட்கை ஆதாரமாகவும் அடிப்படையாகவும் அமைந்தது.

1935ஆம் ஆண்டில், கோவையில் ஸ்டேன்ஸ் ஆலையில் வேலை நிறுத்தம் நடந்தபோது, தொழிலாளர் கூட்டம் நடைபெறுவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்பு, ஜீவா வரைந்த 'காலுக்குச் செருப்பும் இல்லை' என்ற பாடல், வேலை நிறுத்தம் செய்த அத் தொழிலாளர்களை வீறு கொண்டு எழச் செய்ததோடு, தேசியக் கூட்டங்களிலும் தொழிலாளர் கூட்டங்களிலும், பல ஆண்டுகள் பாடப்பட்டு, கேட்போரை உணர்ச்சி வசப்படுத்தியது.

*"காலுக்குச் செருப்புமில்லை*
*கால் வயிற்றுக் கூழுமில்லை*
*பாழுக் குழைத்தோ மடா - என் தோழனே*
*பசையற்றுப் போனோ மடா"*

- என்று, பாடுபட்டதன் பலனைப் பறிகொடுத்துப் பரிதவித்த பாட்டாளி மக்களின் பரிதாப நிலையைப் படம் பிடித்துக் காட்டினார் அவர்.

*"பாலின்றிப் பிள்ளை அழும்*
*பட்டினியால் தாயழுவாள்*
*வேலையின்றி நாமழுவோம் - என் தோழனே*
*வீடுமுச் சூடும் அழும்"*

- என்று பாடுகையில், சூழ்ந்திருந்த வறுமையையும் கல்வியிருந்த இருளையும் போக்க, சமதர்ம உணர்வைச் சூடி சமருக்கு முன்வர, அழைக்கின்றார் ஜீவா, 'முச்சூடும் அழும்' என்ற மொழிகளில், மூச்சு விடுகிறது புரட்சி உணர்வு.

*"நானோர் தொழிலாளி - ஒரு*
*நாய்க்குறும் சுகமேனும் வாய்க்கும் வழியில்லை!*
*ஏனோ புவிவாழ்வு" - (நானோர்)*

*எறும்பும் சுதந்திரம் விரும்பி யடையநான்*
*தானோ அடிமை ஐந்து - கொடும்*
*சஞ்சலத்தேன் கொட்டித் துஞ்சுகின்றேன் -*
*அந்தோ! (நானோர்)*

- என்று 1938இல் ஜீவா ஆக்கிய பாடலை, கலைஞர் டி.கே. சண்முகம், 'பதிபக்தி' நாடகத்தில் தேயிலைத் தோட்டக் காட்சியில் பாடியபோது மக்கள் மெய்சிலிர்த்தனர்.

அந்நிய ஏகாதிபத்தியம், ஆதிக்க சமுதாயத்துக்கு ஆதரவாக இருந்ததால், சமதர்மத்தை நிலைநாட்ட முதலில் சுதந்திரம் எய்தவேண்டும் என்று சுட்டிக்காட்டும் தேசிய விடுதலைப் பாடல்கள் பலவற்றைத் தோழர் ஜீவா ஆக்கியுள்ளார்.

*"தேசம் சுதந்திரம் பெறலாகாதா -*
*எங்கள் இந்திய (தேசம்)*

*ஏகாதி பத்தியம் வந்து புகுந்து*
*ஏறி மிதித்திட நொந்தோம்*
*சோகம் தவிர்க்க நாமினி ஒன்று*
*சூழ்ந்து துணிய லாகாதா (தேசம்)"*

- என்ற பாடல் 1937இல், கோவை பாப்ப நாயக்கன்பாளையம் லட்சுமி மில்லில் நடந்த வேலை நிறுத்தப் போராட்டத்தின்போது ஜீவா விடுத்த வீறார்ந்த அறைகூவல்,







*சுதந்திரத்திருநாள் பொன்விழாவை முன்னிட்டு சென்னை மாநகராட்சியின் சார்பில், 19-8-97 அன்று ரிப்பன் மாளிகை வளாகத்தில் வணக்கத்திற்குரிய மாநகர மேயர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி.மணி அவர்கள் முன்னிலையிலும், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், பொன்விழா நினைவுத்தூணுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.30 கோடி மதிப்பீட்டிலான அண்ணா மறுமலர்ச்சித் திட்ட விவரக் கையேட்டை வெளியிட்டார். அதனை மாநகர மேயர் அவர்கள் பெற்றுக்கொண்டார். இவ்விழாவில் துணைமேயர் திருமதி சந்திரவதனா, மாநகராட்சி ஆணையர் திரு. தேவஜோதி ஜெகராஜன் ஆகியோர் பங்கேற்றனர்.*

---

*"பூரண சுயேச்சைநம் தேசம்எய் திடுமாறு*
*போர்முர சடிக்க வேண்டும்,*
*புன்னெறிகொள் ஏகாதிபத்தியமோ டுறவுசெய்*
*போக்கைப் பழிக்க வேண்டும்!*
*சாரமில் வாதபுது அரசிய லெனும் அடிமைச்*
*சாசனம் உடைக்க வேண்டும்;*
*ஜனநாய கத்திற்கு முரணான சட்டங்கள்*
*தம்மைத் தகர்க்க வேண்டும்!".*

- என்று, 1937இல் அவர் முழங்கிய பாடலில், 'ஊறிய நாடறிய உலகறிய நம் கொள்கை உறுதிபெற, ஓர்மையாய் தேசிய முன்னணி படைப்பதில் ஒன்றுபடுவீர் தோழரே' என்று போர்ப்பரணி பாடுகின்றார்.

*"அஷ்ட தரித்திரம் அகன்றிட வேண்டி*
*அடிமைக் கொடும்தனை அறுந்திட வேண்டி*
*துஷ்ட துர்ரைத்தனம் தொலைந்திட வேண்டி*
*காங்கிரஸ் கொடிக்கீழ்*
*பாங்கொடு நீயும்*
*கச்சையை வரிந்து கட்டி நின்றே தோழா"*

- என்ற பாடல், நிமிர்ந்து சண்டைபோட்டு, நீதியை நிலைநாட்ட, முதிர்ந்த தேசப்பற்றுடன் முனைந்து செயல்பட அழைக்கும் முற்போக்குப் பாடல்.

*"என்றைக்குச் சிவகிருபை வருமோ - ஏழை*
*என்மனச் சஞ்சலம் அறுமோ!"*

- என்று அன்று மக்களைக் கவர்ந்திருந்த ஒரு பாடலின் மெட்டிலே,

*"என்றைக்குச் சுதந்திரம் வருமோ - ஏழை*
*இந்தியர் துயரங்கள் அறுமோ?"*

- என்று விடுதலை வேட்கையை மீட்டிய பாடல் அவருடைய பெரும்புகழ் ஈட்டியதொன்று.

அந்நிய ஆதிக்கத்தால் மட்டும் ஏற்பட்டதன்று அடிமைத்தனமென்பதையும், சமயத்தின் பேரால் பல சழக்குகளுக்கும், மதங்களின் பெயரால் பல மாச்சரியங்களுக்கும், மறைகளின் பெயரால் பல மடமைகளுக்கும், மூடநம்பிக்கைகளுக்கும், ஆசாரத்தின் பெயரால் பல அறிவீனங்களுக்கும் மக்கள் அடிமையாகி விட்டனர் என்பதை அம்பலப்படுத்தினார், சமுதாய மறுமலர்ச்சிக் கவிஞராம் தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள்.

*-'தேசியம் வளர்த்த தமிழ்' என்னும் நூலிலிருந்து.*

# சுதந்திரப் போரிலே சுடர்முகம் தூக்கியோர்!



**தமது இன்னுயிரையும் துச்சமென மதித்து, இந்திய சுதந்திரப் போரில் ஈடுபட்டு களச்சாவு கண்டோர் கணக்கற்றவர் ஆவர். அவர்களில் குறிப்பிடத்தக்க சிலரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் இங்கே அணிவகுக்கின்றன.**

## தாதாபாய் நௌரோஜி (1825 - 1917)

இந்தியப் பொது வாழ்வின் கனவான் என்று அழைக்கப்பட்டவர். வர்த்தகத் துறையில் நமது மக்கள் வளர வழி வகுத்தவர். இங்கிலாந்தில் வசித்தபோதே இந்தியாவின் உயர்வுக்குப் பாடுபட்டவர். இங்கிலாந்து பாராளுமன்றத்திற்குத் தேர்ந்து எடுக்கப்பட்ட முதல் இந்தியர். 1893-1906 ஆகிய இரு ஆண்டுகளில் காங்கிரஸ் மகாசபைத் தலைவராக இருந்தார்.



இந்தியர்களும் ஐ.சி.எஸ். ஆகப் படித்துப் பட்டம் பெறலாம் என்ற உரிமையை இங்கிலாந்தில் போராடிப் பெற்றவர். இந்திய விடுதலை என்னும் குறிக்கோளுக்கு வித்திட்டவர்களில் ஒருவர். "நமது நாட்டுத் தாய்மார்களுக்கு நௌரோஜி போல் புதல்வர்கள் பிறக்க வேண்டும்" என்று இவரைப் பற்றி மகாகவி பாரதி பாடுகிறார். 1917 ஜூன் 3ல் மறைந்தார்.

## திலகர் (1856 - 1920)

சுயராஜ்யம் எனது பிறப்புரிமை என்று முதன் முதல் முழங்கி, இந்திய சுதந்திர இயக்கத்துக்கு வேக மூட்டியவர் லோகமான்ய பாலகங்காதர திலகர். 1856ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் தேதி மராட்டியத்தைச் சேர்ந்த ரத்னகிரியில் கங்காதர்பந்த் பார்வதிபாய் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். 1879இல் சட்டப்படிப்பை முடித்தார்.



1880-இல் பூனாவில் பள்ளி ஆசிரியர் ஆனார். 1881-இல் 'மராட்டா' என்ற ஆங்கில வார இதழையும், 'கேசரி' என்ற மராத்தி மொழி வார இதழையும் நடத்தினார். ஒரு வழக்கில் நான்கு மாத சிறைத் தண்டனை பெற்றார். 1889-இல் பம்பாய் காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். தீவிரவாதிகளான லாலா லஜபதிராய், பிபின் சந்திரபால் போன்றோருடன் தொடர்பு கொண்டார். 1907 காங்கிரஸ் மாநாட்டில் மிதவாதிகளுடன் பலப்பரீட்சை; 1897 ஜூலையில் கைதானார். 18 மாத தண்டனை கிடைத்தது. தண்டனைக் காலம் முடியும் முன்பே 1898-ல் விடுதலை பெற்றார்.

தீவிர சுதேசி பிரச்சாரம். முசபர்பூரில் வெள்ளைக்கார நீதிபதி மீது வெடிகுண்டு வீச்சு சம்பவத்தை ஆதரித்து எழுதியதற்காக இவர் மீது ராஜதுவேஷ வழக்கு எழுந்தது. நீதிமன்றத்தில் 21 மணி நேரம் தாமே தமது வழக்கில் வாதாடினார். ஆறு ஆண்டு தண்டனை கிடைத்தது. நாடு கடத்துமாறு தீர்ப்பு விதிக்கப்பட்டது. 1914 வரை பர்மாவில் மாண்டலே சிறைவாசம்.

'கீதா ரகஸ்யம்' என்ற நூலை எழுதினார். 1918 செப்டம்பரில் லண்டன் பயணம். இங்கிலாந்தில் இந்திய சுதந்திரத்துக்கு ஆதரவாக ஓர் ஆண்டு பிரச்சாரம்.

1919இல் நாடு திரும்பினார். 1920ஆம் ஆண்டு காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமை தாங்கினார். அதே ஆண்டு ஜூலை 28-இல் மறைவு. மராட்டியத்தில் விநாயகர் விழா சிவாஜி விழா கொண்டாட வழிவகுத்தவர் இவரே. இந்திய விடுதலை இயக்கத் தீவிரவாதிகளின் 'தியாகம்' என்ற சொல்லுக்கு ஓர் இலக்கணம்' என்று காந்தியடிகளால் புகழப் பெற்றவர்.

## கோகலே (1866 -1915)

மகாத்மா காந்தியால் 'எனது குருநாதர்' என்று வர்ணிக்கப்பட்ட கோபாலகிருஷ்ண கோகலே புதிய இந்தியாவை உருவாக்கியவர்களில் ஒருவர். இரத்தினகிரியில் 1866 மே 9ஆம் தேதி பிறந்தார். பூனாவில் படித்து அதே நகரில் பெர்கூசன் கல்லூரியில் பேராசிரியர் ஆனார்.



பம்பாய் மேலவைக்கு 1899-இல் தேர்ந்து எடுக்கப்பட்டார். மத்திய கவுன்சிலில் 1902-இல் உறுப்பினரானார். கட்டாய இலவசக் கல்விக்காக அப்போதே வாதாடினார்.



1905-இல் காசி காங்கிரஸ் மகா சபைக்குத் தலைமை வகித்தார். வங்கப் பிரிவினையை எதிர்த்தார். தென் ஆப்பிரிக்கா சென்று அங்குள்ள இந்தியர்களின் இன்னலைத் தீர்க்கப் பாடுபட்டார்.

தென் ஆப்பிரிக்காவில் அப்பொழுது இயக்கம் நடத்திய மகாத்மாவுக்கும் தென் ஆப்பிரிக்க அரசுக்கும் இடையே உடன்பாடு ஏற்பட உதவினார். 'ஆக்கப்பூர்வமான தேசியம்' என்பது இவர் கொள்கை.

இந்தியாவை நிர்வாகம் செய்ய மக்கள் பயிற்சி பெற வேண்டும் என்பதற்காக 1905-இல் இந்திய ஊழியர் சங்கத்தை நிறுவினார். கூட்டுறவு இயக்கம், மகளிர் முன்னேற்றம் போன்ற கருத்துக்களைப் பரப்பினார்.

விடுதலைக்காகவும், மக்களைச் சீர்திருத்துவதற்காகவும் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார். அரசியல் கலப்பற்ற சமூக சேவையை, வலியுறுத்தியவர். அதேபோல் வாழ்ந்து காட்டியவர். ஏராளமான நூல்களை எழுதியுள்ளார். 1915ஆம் ஆண்டு பிப்ரவரி 19இல் அமரர் ஆனார்.

## லாலா லஜபதிராய்

பஞ்சாப் மாகாணம் லூதியானா மாவட்டத்தில் ஜகராம்ஸ் கிராமத்தில் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்தவர் லாலா லஜபதிராய். 'லாலாஜி' என மிகச் செல்லமாக அழைக்கப்பட்டார். பள்ளி மற்றும் கல்லூரியில் படிக்கும்போது இவருக்குச் சுதந்திரத்தில் பற்று ஏற்பட்டது. வக்கீலாகப் பட்டம் பெற்ற லாலாஜி நாட்டில் ஏழை மக்களுக்காக இலவசமாகவே ஆஜராகி, வழக்கு நடத்தி வெற்றி கண்டவர்.

மராட்டியச் சிங்கம் எனக்கூறும் லோகமான்ய பாலகங்காதர திலகர், வங்காளப் புரட்சி மன்னன் விபின் சந்திரபால் ஆகியோருடன் நெருங்கிப் பழகியவர். இதன் காரணத்தால் இம்மூவர்களையும் இணைத்து 'பால் லால் பால்' என்று சிறப்புடன் அழைப்பர்.

லாலா லஜபதிராயின் பெயரைக் கேட்டாலேயே ஆட்சியாளர்களுக்கு நடுக்கம்தான்! இவர் மீது ராஜ துரோகக் குற்றங்களையும் சாட்டி, நாடு கடத்தினர். 1928-இல் நாடெங்கும் விடுதலைப் போராட்டம் உச்சக்கட்ட நிலையில் இருந்தது. அச்சமயம் ஆட்சியாளர்களால் ஏற்படுத்தப்பட்ட 'சைமன் கமிஷன் குழு' லாகூருக்கு வந்தபோது தடையையும் மீறி 'லாலாஜி' ஆட்சியாளர்களை எதிர்த்துக் கோஷமிட்டு ஊர்வலம் நடத்தினார். இதனைக் கண்ட ஆங்கிலேயப் போலீஸ் அதிகாரியான 'ஸ்காட்டும்' அவருக்குத் துணையாக 'சாண்டர்ஸூம்' ஊர்வலத்தைத் தடை செய்ததுடன், லாலா லஜபதிராயின் தலையில் பலமாகத் தாக்கினார்கள்.

பலத்த காயங்களுடன், அஞ்சா நெஞ்சத்துடன் 'வந்தே மாதரம்' பாரத் மாதாகீ ஜெய்!' என்ற தாரக மந்திர கோஷத்துடன் உயிரை நாட்டிற்காக அர்ப்பணித்தவர்.

## சத்தியமூர்த்தி

புதுக்கோட்டை வழக்கறிஞர் சுந்தரசாஸ்திரி, சுப்புலட்சுமி தம்பதியருக்கு 19.8.1887இல் மகனாகத் திருமயத்தில் பிறந்தவர் சத்தியமூர்த்தி.

கல்லூரி மாணவராக இருந்தபோதே நாட்டுப்பற்று மிக்கவராக விளங்கிய இவர் காங்கிரஸ் பேரியக்கத்தின் தொண்டர் படையில் 1908ல் சேர்ந்தார். கிராமங்களுக்கெல்லாம் சென்று பிரச்சாரம் செய்தார். சிறந்த வழக்கறிஞராக விளங்கிய இவர் திலகர், லஜபதிராய் ஆகியோரிடம் பற்றுக் கொண்டிருந்தார். காந்தியடிகளின் அறப்போரின் நெறிகள் இவரைக் கவர்ந்தன. அவற்றில் பங்கு பெற்றார்.

1923, 1926 ஆகிய ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியிருக்கிறார். மகாகவி பாரதியின் பாடலை அரசு தடை செய்தபோது, சட்டமன்றத்தில் அவசரத் தீர்மானம் கொண்டு வந்து பாரதியின் பாடலின் பெருமையை எடுத்துரைத்தார் சத்தியமூர்த்தி.

இவரது தீர்மானம் வெற்றியுடன் நிறைவேறியது. 1934ல் மத்திய சட்டமன்ற உறுப்பினரானார். டில்லி மத்திய சட்டசபையில் அவர் இங்கிலீஷ்காரர்களை மடக்கிய ஆற்றல் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் கதை கதையாகப் பேசப்பட்ட காலம் உண்டு. 1939ல் சென்னை மாநகரத்தின் மேயர் ஆனார். 1942ஆம் ஆண்டுப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டார். உடல் நலிவின் காரணமாக விடுதலை பெற்றார்.

"இந்திய விடுதலைக்காக வாதாட ஒரே ஒருவரை நாடாளுமன்றத்துக்கு அனுப்பினால் போதும் என்ற நிலை வந்தால் நான் சத்தியமூர்த்தியைத்தான் அனுப்புவேன்" என்று மகாத்மா கூறினார். அந்த அளவு சட்டமன்ற, நாடாளுமன்ற விவகாரங்களில் புகழும் தேர்ச்சியும் பெற்றவர். அவருக்கிணையாக ஆங்கிலத்திலும் தமிழிலும் பேசக்கூடியவர்கள் மிகவும் அருமை. தமிழ்நாட்டின் பெருமையை உயர்த்திய பெருமகன். 'சுதந்திர இந்தியாவைக் காணாமல் போகிறேனே' என்று புலம்பியவாறு உயிர் நீத்தார்.

## சர்தார் பட்டேல் (1875 1950)

இந்தியாவின் இரும்பு மனிதர் என்று புகழ் பெற்றவர். பெரிய வழக்கறிஞர். காந்தியடிகளின் அழைப்பை ஏற்றுத் தொழிலைத் துறந்தவர். குஜராத் பகுதியில் தேசிய விடுதலை இயக்கத்திற்குச் செல்வாக்குத் தேடினார், இவர்.



புகழ் பெற்ற 'பர்தோலி' இயக்க வெற்றிக்குக் காந்தியடிகளுடன் உழைத்தார். நாடு விடுதலை பெற்ற பிறகு உள்துறை அமைச்சர் ஆனார்.

இந்தியாவுக்கு எதிராக அணி திரண்ட மன்னர்களுக்குப் பாடம் புகட்டிப் பணிய வைத்து, சமஸ்தானங்களை இந்திய அரசின் கீழ் கொண்டு வந்தார். 1950 டிசம்பர் 15-ல் மறைந்தார்.

## மவுலானா அபுல்கலாம் ஆசாத்

'பாரத நாட்டு மக்கள் இனி ஆங்கிலேயருக்கு அடங்கி நடப்பவர்களலல்ல! அந்தக் காலம் மலையேறி விட்டது! இனி சுதந்திரம் பெறுவதுதான் எமது இலட்சியம்!" எனப் பகிரங்கமாகவே குரல் கொடுத்தவர் அபுல்கலாம் ஆசாத்!



இந்திய விடுதலை பற்றி, தாதாபாய் நௌரோஜி, மதன்மோகன் மாளவியா, மோதிலால் நேரு இவர்களின் பிரசங்கங்கள் இவரைச் சுதந்திரப் போராட்டத்தில் குதிக்கச் செய்தன. 1938 ஜனவரியில் மௌலானா அபுல்கலாம் ஆசாத் காங்கிரஸ் கமிட்டிக்கு ஒரு முக்கிய உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், முகமதலி ஜின்னாவுடன் கருத்து வேறுபாடு கொண்டு நேருக்கு நேர் வாதாடியவர். பலமுறை பல போராட்டங்களில் கலந்துகொண்டவர் ஆசாத். மேடைப் பிரசங்கங்களில் இவருடைய பேச்சில் தனித்தன்மை இருக்கும்.

1942 ஆகஸ்டு 9ஆம் தேதி மகாத்மா 'வெள்ளையனே வெளியேறு!' என்று கொண்டு வந்த போராட்டத்தைப் பெரிதும் ஆதரித்து இதனையே நாட்டு மக்களிடம் எதிரொலிக்கச் செய்தவர் ஆசாத். இப் போராட்டத்தின் காரணமாக மகாத்மா காந்தி மற்றும் பலர் கைது செய்யப்பட்டனர். பின்னர் காந்தி சிறையிலிருந்து விடுதலையாகி வெளிவந்ததும் சமரசப் பேச்சு தொடங்கியது. ஆசாத் இதை ஏற்கவில்லை. என்றாலும் காங்கிரசின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார். பல ஆண்டுகள் காங்கிரஸ் தலைவராக இருந்தார். சுதந்திர இந்தியாவில் கல்வி அமைச்சராக விளங்கினார். பாரசீக மொழியில் புலமை பெற்றவர். மிகச் சிறந்த அறிஞர்.

## ஜெயப்பிரகாஷ் நாராயணன் (1902 1979)

'வெள்ளையனே வெளியேறு' என்ற முழக்கத்துடன் தொடங்கிய 1942 ஆகஸ்ட் போராட்டத்தில் தீவிர பங்கு ஏற்றவர் ஜெயப்பிரகாஷ். 1902 அக்டோபர் 11ஆம் தேதி பீகார் மாநிலம் சீதாப் தயரா என்ற கிராமத்தில் பிறந்தார். தொடக்கக் கல்வி முடிந்து பாட்னாவில் படித்தார். ராஜேந்திர பிரசாத் குடும்பத்துடன் தொடர்பு ஏற்பட்டது. படிக்கும்போதே அக்குடும்பத்தைச் சேர்ந்த பிரபாவதியை மணந்தார்.

1919-இல் ஜாலியன் வாலாபாக் படுகொலையின்போது அரசியலில் நுழைந்தார்.

1922-இல் மேல்படிப்புக்காக அமெரிக்கா சென்றார். கலிபோர்னியா சர்வ கலாசாலையில் சேர்ந்தார். சோஷலிசம் பற்றித் தீவிரமாக ஆராய்ந்தார். பழத் தோட்டத்தில் வேலை செய்து அந்த வருவாயில் தன் செலவுகளைச் செய்தார். தீவிர சோஷலிஸ்ட்டாக 1929-இல் இந்தியா திரும்பினார். காந்தியடிகள், நேரு மற்றும் காங்கிரஸ் தலைவர்களுடன் தொடர்பு கொண்டார்.

1931-இல் காங்கிரஸ் தலைவர்கள் கைதான நேரத்தில் தலைமறைவாகத் தேசமுழுவதும் சுற்றிச் செயல்பட்டார். 1931 செப்டம்பரில் கைதானார். நாசிக் சிறையில் அடைக்கப்பட்டார். அங்கு அசோக் மேத்தா அச்சுத பட்டவர்த்தன் போன்றவர்களுடன் தொடர்பு. 1934இல் விடுதலை பெற்றார். அதே ஆண்டு நவம்பரில் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி தோன்றியது.

நரேந்திரதேவ், டாக்டர் லோகியா போன்றவர்களுடன் தொடர்பு. பிரிட்டிஷாருக்கு எதிராகத் தீவிர வர்க்கப் போராட்டத்தை உருவாக்க விரும்பினார். சோசலிஸ்ட் கட்சிக்குள் இருந்த கம்யூனிஸ்ட்டுகள் இரண்டாவது உலகப் போர் காரணமாக எழுந்த தத்துவ மோதலில் வெளியேறினர். 1940இல் கைது செய்யப்பட்டார். 9 மாதம் கழித்து விடுதலை ஆனார்.

மீண்டும் கைது. ஹசாரிபாக் சிறையில் இருந்தபோது 1942 ஆகஸ்ட் கிளர்ச்சி தொடங்கியது. 1942 நவம்பர் 9 தீபாவளி நாளன்று ஜெயப்பிரகாசர் சிறையிலிருந்து தப்பினார்.

ஆகஸ்ட் புரட்சியைத் தலைமை தாங்கி நடத்தினார். 1943 செப்டம்பரில் பிடிபட்டார். பிரிட்டிஷ் அதிகாரிகளின் சொல்லொணாச் சித்ரவதைகளுக்கு ஆளானார். 1946 ஏப்ரலில் விடுதலை ஆனார்.

1948 முதல் சோஷலிஸ்ட் கட்சி தனியாக இயங்கியது. 1954இல் பூதான இயக்கத்தில் சேர்ந்தார். 1975இல் நெருக்கடி நிலை, சிறைவாசம்.

1977-இல் ஜனதா அரசு அமையக் காரணமாக இருந்தார். 1979 அக்டோபரில் பாட்னாவில் மறைந்தார். வெள்ளை ஆட்சியை விரட்டிய ஆகஸ்ட் புரட்சியின் கர்த்தா அவர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 568926, 568927

216441



